# பாரதி

1948–1950

மண்டூரிலிருந்து வெளிவந்த 'பாரதி'
சஞ்சிகைத் தொகுப்பு








மண்டூர் கலை இலக்கிய அவை

# பாரதி

1948 -1950

மண்டூரிலிருந்து வெளிவந்த 'பாரதி' சஞ்சிகைத் தொகுப்பு

# பாரதி

1948 -1950

மண்டூரிலிருந்து வெளிவந்த
'பாரதி' சஞ்சிகைத் தொகுப்பு

தொகுப்பாசிரியர்
கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்

கலை இலக்கிய அவை, மண்டூர்
மட்டக்களப்பு
2016

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பாரதி - மண்டூரிலிருந்து வெளிவந்த 'பாரதி' சஞ்சிகைத் தொகுப்பு |
| தொகுப்பாசிரியர் | : | கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம் |
| பதிப்புரிமை | : | © 2016, கலை இலக்கிய அவை, மண்டூர் |
| வெளியீடு | : | கலை இலக்கிய அவை, மண்டூர் |
| அ.வடிவமைப்பு | : | சுசிமன் நிர்மலவாசன் |
| அச்சு | : | குமரன் அச்சகம்<br>39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு-6<br>தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: *kumbhlk@gmail.com* |

| | | |
|---|---|---|
| Title | : | Bharathy - Collection of "Bharathy" Journal Published from Mandur |
| Edited by | : | Dr. Sinnathamby Santhirasegaram |
| Copyright | : | © 2016, Kalai Ilakkiya Avai, Mandur |
| Published by | : | Kalai Ilakkiya Avai, Mandur |
| Cover design | : | Susiman Nirmalavasan |
| Printed by | : | Kumaran Press Private Limited<br>39, 36th Lane, Colombo - 6<br>Tel.: 113097608, 112364550, E-mail: kumbhlk@gmail.com |
| ISBN | : | 978-955-7202-00-6 |
| விலை | : | 800/= |

கலை இலக்கிய அவையின்
தலைவராகவும், செயலாளராகவும்,
தொண்டராகவும் இருந்து அதனை வழிநடத்தி வந்த
**அமரர் மண்டூர் தேசிகனுக்கு**
இந்நூல் சமர்ப்பணம்

# வெளியீட்டுரை

காலம் மறைத்த கதைகள் ஏராளம். எத்தனையோ ஆளுமைகள், சமூகப் பெறுமதி மிக்க செயற்பாடுகள், காத்திரமான உழைப்புகள்..... இப்படி இன்னும் இன்னும். இந்த ''பாரதி'' சஞ்சிகைகளும் காலம் மறைத்த கதைகளாகி காணாமல் போய்விடாமல், இன்று புதுவெளிச்சம் பாய்ச்ச முடிந்ததையிட்டு கலை இலக்கிய அவை மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது.

இன்றைய தொழில்நுட்ப வசதிகளின் பெருக்கத்துடன் நாம் ஒரு நூலை வெளியிடுவதில் எவ்வளவோ பிரச்சினைகளை எதிர்கொள்கையில், 1948 -1950 காலப்பகுதியில் மண்டூரிலிருந்து மூன்று இளைஞர்கள் சஞ்சிகை வெளியிடத் துணிந்து, பத்து இதழ்கள் வரை வெளியிட்ட சாதனையை இன்று ஆறரைத் தசாப்தங்களின் பின்னர் மிகுந்த வியப்புடன்தான் எங்களால் பார்க்க முடிகிறது - பாரதிக்குப் பின்னர் மண்டூர் பிரதேசத் திலிருந்து இன்னுமொரு இலக்கிய சஞ்சிகை வெளியீடு இடம்பெற வில்லை என்கின்ற கசப்பான உண்மையையும் ஜீரணித்துக்கொண்டு.

யாழ்ப்பாணம் - ''மறுமலர்ச்சி'', கொழும்பு - ''பாரதி'', திருமலை - ''எரிமலை'' இவற்றுடன் ஈழத்தின் ஆரம்பகாலச் சஞ்சிகைகள் என்ற வரலாற்றில் ''மண்டூர் பாரதி'' யும் இடம்பெறுகிறதென்ற மகிழ்ச்சியையும், இதன் ஆசிரியர்களான அமரர் பண்டிதர் ம. நாகலிங்கம், அமரர் கு. தட்சணாமூர்த்தி, இன்றும் ''பாரதி''யின் நினைவுகளைப் பகிர்ந்தபடி எம்முடன் வாழ்ந்து வரும் திரு ந.செபரெத்தினம் ஐயா ஆகியோருக்கு நாம் என்றும் நன்றிக் கடன் பட்டவர்கள் என்ற உணர்வு பூர்வமான பிரகடனத்தையும் இவ்விடத்தில் வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

கலை இலக்கிய அவை 1994 இலிருந்து நூல் வெளியீடுகள், நூல் அறிமுகங்கள், கலைஞர் கௌரவிப்புக்கள், கலைஞர்களை நினைவுகூர்தல் எனப் பல நிகழ்வுகளைச் செய்திருந்தாலும் இந்த ''பாரதி'' தொகுப்பானது அவை எல்லாவற்றிலும்விட மிகப் பெறுமதிமிக்க ஒரு உயர் சமூகக் கடமையாக அமைகிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று கருதுகின்றோம். இம்முயற்சியில் எமக்குத் தோள் கொடுத்த அன்புள் ளங்கள் பல. அவர்களை நன்றியுடன் இவ்விடத்தில் நினைத்தல் பொருத்த மானதாகும்.

- இங்ஙனமானதோர் தொகுப்பின் முக்கியத்துவத்தை எமக்கு உணர்த்தியதுடன் அணிந்துரையையும் வழங்கிய ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி செ. யோகராசா அவர்கள்.
- மனமுவந்து நிதியுதவி புரிந்த திரு தட்சணாமூர்த்தி இளவரசு (பாரதி ஆசிரியர்களில் ஒருவரான அமரர் கு. தட்சணாமூர்த்தி அவர்களின் குடும்பம் சார்பாக)
- மனமுவந்து நிதியுதவி புரிந்த திரு செபரெத்தினம் கலாநிதி (பாரதி ஆசிரியர்களில் ஒருவரான திரு ந.செபரெத்தினம் அவர்களின் குடும்பம் சார்பாக)
- தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கியதுடன் வாழ்த்துரையும் வழங்கிய கலாநிதி கோ.கோணேசபிள்ளை அவர்கள்.
- பாரதி ஆசிரியர்களில் ஒருவரான அமரர் பண்டிதர் ம. நாகலிங்கம் அவர்கள் தொடர்பான விபரங்களைத் தந்து உதவிய டாக்டர் ந. பிரேமதாசன் அவர்கள்.
- பாரதி இதழ்களில் பெரும்பாலானவற்றைப் பாதுகாத்து வைத்திருந்து எமக்குத் தந்துதவிய திருமதி வாசுகி ராகுலன் அவர்கள்.
- அட்டைப்படம், அட்டை வடிவமைப்பு என்பவற்றைச் செய்து உதவிய திரு சுசிமன் நிர்மலவாசன் அவர்கள்.
- அழகுற அச்சிட்டு உதவிய குமரன் அச்சகத்தார்.
- இந்நூல் வெளிவர பல வழிகளிலும் ஒத்துழைத்த கலை இலக்கிய அவை ஆலோசகர்கள், அங்கத்தவர்கள்.
- எமது முயற்சிகள் எல்லாவற்றுக்கும் மனமுவந்து உதவுகின்ற மண்டூர் பிரதேச மக்கள்.
- எல்லாவற்றுக்கும் மேலாக மிகவும் பிரயத்தனம் எடுத்து இந்நூலைத் தொகுத்த தொகுப்பாசிரியர் கலாநிதி சி.சந்திரசேகரம் (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)

எல்லோருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

**எஸ். புஸ்பானந்தன்**
தலைவர்
கலை இலக்கிய அவை

**த. உருத்திரா**
செயலாளர்
கலை இலக்கிய அவை

# வாழ்த்துரை

மண்டூர் கலை இலக்கிய அவையினருக்கு எனது பணிவான வணக்கம். தாங்கள் 1948 இல் இருந்து வெளியிட்ட பாரதி சஞ்சிகைப் பிரதிகளைத் தொகுத்து நூலாகக் கொண்டுவர இருப்பதை அறிந்து பெருமகிழ்வும் பெருமிதமும் கொள்கின்றேன். பாரதி சஞ்சிகையை வெளிப்படுத்துவதில் நீண்டகாலமாக ஈடுபட்டுவரும் பேராசிரியர் செ.யோகராசா, கலை இலக்கிய அவையினர், சஞ்சிகைப் பிரதிகளைப் பாதுகாத்து வைத்திருந்து வழங்கிய பெருமக்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

மண்டூர் பண்டுதொட்டு தமிழ் வளத்தால் சிறப்புற்று விளங்கும் ஊராகும். இங்கு வாழ்ந்த பண்டிதர், கவிஞர், ஆத்மீக ஞானியர், நாட்டார் இலக்கிய வித்தகர் ஆகியோர் அதற்கான பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளனர். எனினும் இங்கிருந்து ஒரு சஞ்சிகையைக் கொண்டுவர எவரும் முன்வராதமை ஒரு குறையாக இருந்தது. எனவே இப்பணியில் ஈடுபடத் துணிந்த எம் மூவரையும் நண்பர், மற்றும் அறிஞர் பலரும் ஊக்குவித்தனர். காலம் கனிந்த நேரத்தில் பாரதி சஞ்சிகை நடை பயில ஆரம்பித்தது இறை அருளன்றி வேறல்ல.

பண்டிதர், ஆசிரியர் திரு. ம. நாகலிங்கம், ஆசிரியர் திரு. கு. தட்சணாமூர்த்தி, திரு. ந. செபரெத்தினம் ஆசிரியர் சஞ்சிகை வெளியீட்டின் பங்குதாரர் ஆனோம். மூத்த பத்திரிகை ஆசிரியர் திரு எஸ்.டி. சிவநாயகம், திரு அ. செ. முருகானந்தன், கௌரவ இந்து கலாசார அமைச்சராகப் பணியாற்றிய திரு செ. இராசதுரை ஆகியோரும் மற்றும் பல முன்னோடி களும் எங்களுக்கு வேண்டியபோது வேண்டிய அறிவுரை பகர்ந்து வளர்ச்சிக்கு உதவினர். மற்றும் பல வியாபாரிகள், தையல் கலைஞர் விளம்பரங்களைத் தந்து உதவினர். அவ்வப்போது வேண்டிய வரவு அபிமானிகளிடமிருந்து கிடைத்தது. அவ்வாறு எங்களை ஊக்குவித்த நண்பர்கள், ஆசிரியப் பெருமக்கள், அச்சகச் சொந்தக்காரர், பணியாளர் யாவருக்கும் விற்பனைக்கு உதவிய விற்பனையாளருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

சஞ்சிகை வெளியீட்டில் சிலர் தூற்றினர். பலர் போற்றினர். எனவே பத்து இதழ்கள் பயணித்த பின்னர் 'பாரதி' இன்னும் இறந்தோ மறைந்தோ விடவில்லை என்ற மகிழ்வில் தங்கள் பணிக்கு நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் காலத்தினது தேவைக்கேற்ப பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவர தமிழ் அறிஞர்களும் கல்விமான்களாக விளங்கும் வாலிபப் பரம்பரையினரும் பெரும் பணிகளைத் தொடரவேண்டி எனது உரையை முடிவு செய்கின்றேன்.

1ஆம் பிரிவு, மண்டூர்

**ந. செபரெத்தினம்**

['பாரதி' சஞ்சிகை ஆசிரியர்களில் ஒருவர்]

# வாழ்த்துரை

1940களில் இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் அரசியல், மொழி, சமூகவியல் போன்றவற்றில் புதிய சிந்தனைகள் தோன்றின. இளைஞர்கள் மத்தியில் சுதந்திர உணர்ச்சி, இலகுவாக சகலரும் விளங்கக்கூடிய வசன நடை, கவிதை நடை பற்றிய ஆர்வம் ஆகியன வளரத் தொடங்கின. இந்தியாவில் ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், கலைக்கதிர் போன்ற சஞ்சிகைகளின் செல்வாக்கு வளர்ந்தது. பேராசிரியர் சேதுப்பிள்ளை, அறிஞர் அண்ணாத்துரை, தோழர் ஜீவானந்தம் ஆகியோரின் பேச்சுகள் மக்களைக் கவர்ந்தன. இலங்கையில் கலாநிதி என்.எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, தோழர் பீற்றர் கெனமன், கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்க ஆகியோரது மாக்ஸிச கருத்துக்களும் இளைஞர் மத்தியில் செல்வாக்கடையத் தொடங்கின. 1942இல் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்டது. 1943இல் சுவாமி விபுலாநந்தர் முதல் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மண்டூரில் தரமான சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் வானொலி கேட்கும் வசதியும் பல சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இளைஞர்கள் அங்கு கூடி இந்த வாய்ப்பு களைப் பயன்படுத்திக்கொண்டார்கள். அப்போது மண்டூரைச் சேர்ந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் கந்தையா ஆகியோர் தமிழ் அறிஞர்களாக பிரகாசித்துக்கொண்டிருந்தார்கள். சனசமூக நிலையத்தில் கூடும் இளைஞர் மத்தியிலும் தமிழ் ஆர்வம் மலரத்தொடங்கியது. நாகலிங்கம், முருகேசு முதலியோர் பண்டிதர்களாகவும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் மலர்ந்தார்கள். தெட்சணாமூர்த்தி பயிற்றப்பட்ட ஆசிரியராகி, தானாகவே கையெழுத்துப் பிரதியாக சஞ்சிகையொன்றை வெளியிட்டார். செபரத்தினம் அரசியல் விமர்சகராக இளைஞரிடையே செல்வாக்குப்பெற்றார்.

இந்தக் காலகட்டத்தில் தட்சணாமூர்த்தியின் கையெழுத்து சஞ்சிகை யைப் போல ஒன்றை அச்சிட்டு வெளியிட்டால் நன்று என்ற கருத்து சனசமூக நிலையத்தில் கூடும் இளைஞரிடம் தோன்றியது. தட்சணா

மூர்த்தியின் சகோதரர் முறையானவர் பண்டிதர் நாகலிங்கம். பண்டிதரின் பக்கத்து வீட்டில் வாழ்ந்தவர் செபரெத்தினம். மூவரும் இணைந்து எண்ணத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்தார்கள். சஞ்சிகையின் முக்கிய முன்னோடியான கு.த. மூர்த்தியே (குமாரசாமி தட்சணாமூர்த்தி) பதிப் பாசிரியராகப் பணியாற்றினார். இத்தருணத்தில் இளைஞர் கலந்துரையாடல் களில் முக்கிய பங்கேற்றவரும் பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்விப் பேராசிரியராக பதவி வகித்தவருமான, சந்திரசேகரம் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு பட்டப்படிப்புக்காக தெரிவு செய்யப்பட்டுச் சென்றார். அவருக்கு அங்கு தமிழ் பேராசிரியராகப் பணியாற்றிய சுவாமி விபுலாநந்தரிடம் தமிழ் கற்க வாய்ப்புக்கிடைத்தது. பின்னர் பிரபல அரசியல்வாதியாக விளங்கிய அமிர்தலிங்கமும் அப்போது கற்றார். சுவாமி விபுலாநந்தர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வித்துவான் கற்கைநெறி ஒன்றையும் ஆரம்பித்து தமிழ் வகுப்புகளில் இலக்கியத் திறனாய்வை அறிமுகம் செய்து வைத்தார். வித்துவான் வகுப்பில், பின்னாளில் இலங்கை வானொலியில் தமிழ்ப் பகுதிக்குப் பணிப்பாளராகப் பணியாற்றிய நாவற்குழி நடராசாவும் கல்விகற்றதுடன் இலக்கியத் திறனாய்விலும் திறமை காட்டினார். 'பாரதி' அச்சேறுவதற்கு ஆக்கங்கள் தேவைப்பட்டன. அப்போது பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற சந்திர சேகரம் அவர்கள் அங்கு கல்வி பயின்ற அ. அமிர்தலிங்கம், நாவற்குழி நடராசா, லண்டனில் மேற்படிப்பில் ஈடுபட்டிருந்த திரு சு.வித்தியானந்தன் ஆகியோரின் ஆக்கங்களைப் பெற உதவினார். தன் கட்டுரையையும் சஞ்சிகைக்கு அனுப்பியுதவினார். தனது கட்டுரை ஏற்கனவே பல்கலைக் கழக வகுப்பிற் சமர்ப்பிக்கப்பட்டமையாற்போலும் தனது பெயரைச் சந்திரநாதன் என்று குறிப்பிட்டிருந்தார். நான் அப்போது யாழ்ப்பாணம் சென்று ஹாட்லிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அங்கு நடை பெற்ற பேச்சுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்கிடைத்தது. அதில் முதற் பரிசாக சிலப்பதிகாரம் என்னும் நூல் கிடைத்தது. ஏற்கனவே சிவாநந்த வித்தியாலயத்தில் படிக்கும்போது பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள் ஏற்படுத்திய அறிவோடும், சுவாமி விபுலாநந்தர் 'கலாநிதி' என்னும் சஞ்சிகையில் 'பழந் தமிழர்களின் இசைக் கருவிகள்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையைப் படித்த அறிவின் பின்னணியிலும், பரிசாகக் கிடைத்த நூலைப் படித்து 'சிலப்பதிகாரத்தின் சிறப்பு' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி சஞ்சிகைக்கு அனுப்பினேன். ஹாட்லி

கல்லூரியை விட்டு யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் உயர்தரப் பள்ளிச் சான்றிதழ் விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தேன். அப்போது அங்கு ஒரு முக்கிய விஞ்ஞானக் கருத்து கற்பிக்கப்பட்டது. டோல்ரன் என்ற விஞ்ஞானி, அற்ரம் (atom) என்ற ஆங்கிலச் சொல் 'என்னை வெட்ட முடியாது' என்னும் பொருள் உடையது என்றும் அது தான் தனிமத்தின் மிக நுண்ணிய பாகம் என்றும் கூறியிருந்தார் (Atom means I cannot be cut. Atom is the smallest part of an element). ஆனால் காலப்போக்கில் விஞ்ஞானிகளின் பரிசோதனைகளால் அணு பற்றிய கருத்து மாற்றம்பெற்று அணுவை உடைத்து பெரும் சக்தியைப்பெற முடியும் என்பது நிரூபிக்கப்பெற்றது. அணுகுண்டும் உருவெடுத்தது. அணுசக்தியால் இயங்கும் மின்உற்பத்தி நிலையங்கள் பல நாடுகளில் நிறுவப்பெற்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'அணு' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி சஞ்சிகைக்கு அனுப்பினேன். இரு கட்டுரைகளும் ஒரே இதழில் வெளிவந்தன. மட்டுநகரில் அந்தக் கால கட்டத்தில் 'சுதேசி மாட்' என்றோர் பிரபல்யமான புடவைக் கடை இருந்தது. இதில் 'பரமஹம்சதாசன்', 'அன்புதாசன்' என்று இரு கவிஞர்கள் பணியாற்றினார்கள். இவர்களுடைய கவிதைகளும் 'பாரதியை' அலங்கரித்தன.

பாரதி வெளியீட்டில் ஈடுபட்டிருந்த முக்கியமான மூவரும் வெவ்வேறு இடங்களில் பணியாற்றவேண்டி இருந்ததால் தொடர்ந்து சஞ்சிகையை வெளியிட முடியாது போயிற்றுப்போலும்.

முக்கியமானதொரு காலகட்டத்திலே மண்டூரிலிருந்து வெளிவந்த ஒரு முற்போக்குச் சஞ்சிகையான இந்த 'பாரதி' சஞ்சிகையானது அழிவடையும் நிலையில் இருந்தபோது அதனைத் தேடிப் பெற்று முழுத் தமிழ் உலகும் அறியும் வண்ணம் சிறப்புறத் தொகுத்தளித்துள்ள மண்டூர் கலை இலக்கிய அவையினரைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை**
B.ED. Mathematics (Colombo), M.A., M.Sc.,
ED.D.(Columbia), Ph.D.(Malborough)

# அணிந்துரை

நவீன இலக்கியத்தின் தோற்றத்திலும் மாற்றத்திலும் வளர்ச்சியிலும் தளர்ச்சியிலும் சஞ்சிகைகளுக்கு முக்கிய இடமுள்ளது. குறுகிய கால ஆயுளில் முடிந்து விடுகின்ற அவ்வாறான சஞ்சிகைகளை தொகுத்து வகுத்து நோக்கும் போதுதான் நவீன இலக்கியத்தின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் குறிப்பிட்ட காலகட்டத்து வளர்ச்சி நிலைமைகளையும் அறியவியலும். இதனாலேயே தமிழ்நாட்டு இலக்கியக்காரர் மணிக்கொடி தொடக்கம் அண்மைக்காலங்களிலே மரணித்துவிட்ட சஞ்சிகைகள் வரை முழுமையாகவோ தேர்ந்தெடுத்த படைப்புக்களை உள்ளடக்கியோ தொகுப்புகளாக வெளியிட்டு வருகின்றனர். இன்றுவரை ஏறத்தாழ இருபது சஞ்சிகைகள் இவ்வாறு தொகுக்கப்பட்டுள்ளன. ஈழத்தில் யானறிந்த வகையில் முழுமையான தொகுப்பாக முதன்முதலாக குமரன் சஞ்சிகையும் மிக அண்மையிலே மறுமலர்ச்சிச் சஞ்சிகையும் வெளிவந்துள்ளன. குமரன் உள்ளடக்கப் பகுப்பு அடிப்படையிலும் மறுமலர்ச்சி இதழ்களின் அடிப்படையிலும் வெளிவந்துள்ளன. மூன்றாவதாக வரும் இந்தப் 'பாரதி' குமரன் வழியைப் பின்பற்றியுள்ளது. (இதன் ஆசிரியர்கள், வெளிவந்த காலம், முகவரி, பக்க அளவு, விலை முதலான விபரங்கள் பற்றி எடுத்துரைப்பது கூறியதுகூறலாகிவிடுமென்பதால் இவ்விடத்தில் தவிர்க்கப்பட்டுள்ளன.)

## 2

ஈழத்து ஆரம்பகாலத்துச் சஞ்சிகைகளைப் பொறுத்தவரையில் அவை தமது பிரதேசப் படைப்பாளர்களுக்கு களமமைத்துக் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்துள்ளன. இவ்விதத்தில் 'பாரதி' மட்டக்களப்புப் பிரதேசம் சார்ந்த எம்.எஸ். பாலு, எம்.எம். சாலிஹ், மூர்த்தி, என்.எஸ், ஏ. சந்திரசேகர், நா. குணரெத்தினம் முதலானோரது சிறுகதைகளைப் பிரசுரித்துள்ளது. இவர்களுள் எம்.எம். சாலிஹ் எழுதிய 'சதிகாரி' என்ற சிறுகதை முதன்மையானது. பொருத்தமில்லாத திருமணத்திற்குட்பட்ட மனைவி தனது கணவனைக் கத்தியால் குத்திக் கொலை செய்கின்ற புரட்சிகரமான இச் சிறுகதை மட்டக்களப்புப் பிரதேச முதல் முஸ்லீம் சிறுகதை முன்னோடி எழுத்தாளரொருவரை இனங்கண்டுகொள்ள உதவியிருக்கின்றது. இச்

சிறுகதைக்குரியவரான எம்.எம். சாலிஹ் எனப்படும் புரட்சிக்கமால் பின்னர் அதிக சிறுகதைகள் எழுதாவிடினும் கவிதையில் தனது புரட்சி கரமான சிந்தனைகளை வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. எம்.எம்.சாலிஹ் அவர்கள் புரட்சிக்கமால் என்ற பெயரை வைப்பதற்கு புரட்சிகரமான சிறுகதை எழுதி அனுப்பும்படி பாரதி தனது வாசகரைக் கேட்டுக் கொண்டது காரணமாதல் கூடும்.

மட்டக்களப்பு நவீன கவிதை முன்னோடி நீலாவணனேயாயினும் அவருக்கு முன்னர் நவீன கவிதை ஊற்றுக்கள் சிலருள்ளனர். 'புலவர்மணி' இவர்களுளொருவர். இவரைவிட நவீன கவிதைத் துறையில் முக்கியமான இளங்கவிஞராக கவி.ஜி.எம். செல்வராஜ் என்பவரைப் பாரதி இனங் காட்டியுள்ளது. இவரது இரு கவிதைகளே வெளிவந்திருப்பினும் இவரது கவித்திறனை மட்டிட அவை போதுமானவை. இவர் பற்றி அதிகம் அறியமுடியாவிடினும் கவிதைகளின் அணுகுமுறை மட்டக்களப்பிற்குரிய வராகவே இவரை இனங்காட்டியுள்ளது. இவ்வாறான அணுகுமுறை கொண்ட பொங்கற் கவிதைகள் ஈழத்து நவீன தமிழ்க் கவிதைப் பரப்பில் இன்றுவரை இடம்பெறவில்லை. தவிர, மூத்த தலைமுறை சார்ந்த புலவர்மணி, மூனா கானா, மு.சோமசுந்தரம்பிள்ளை முதலானோரின் கவிதைகள் சிலவும் பாரதியில் இடம்பெற்றுள்ளன. முற்குறிப்பிட்ட புரட்சிக்கமாலின் கவிதைகள் எவையும் இதில் பிரசுரமாகவில்லை என்பதும் கவனத்திற்குரியது.

மட்டக்களப்புப் பிரதேச கட்டுரை இலக்கியக்காரர் பலரைப் பாரதி அறிமுகப்படுத்தியுள்ளது. அறிவியல் கட்டுரை (கோ.கோணேசபிள்ளை), நவீன கவிதை (சந்திரநாதன்), இலக்கிய ரசனை (கோணேஸ்), கல்வி (ம. சிவநேசராசா), நுண்கலை (கணபதிப்பிள்ளை), சமூகம் (D.T. செல்வ நாயகம்) என்றவாறு பல்துறை சார்ந்த கட்டுரைகள் மட்டக்களப்பு சார்ந்த இளந்தலைமுறையினரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள், நவீன கவிதை வளர்ச்சி தொடர்பாக சந்திரநாதன் எழுதிய கட்டுரைக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் நவீன இலக்கியத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் இலங்கைப் பல்கலைக்கழகம் சார்ந்த பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் தமது பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவற்றைப் போதித்தார். (தமது தமிழ் இலக்கிய வரலாற்று நூலிலும் நவீன இலக்கியத்திற்கு முக்கிய இடம் அளித்திருந்தார்.) இவ்விதத்தில் அவரிடம் அவ்வேளை கற்றவரான சந்திரநாதன் நவீன

கவிதை வளர்ச்சி பற்றி விரிவான கட்டுரை எழுதியிருப்பது குறிப்பிடத் தக்கது. ஈழத்திலிருந்து நவீன இலக்கியம் சார்ந்து வெளிவந்த முக்கியமான முதற்கட்டுரை இதுவென்றே கூறவேண்டும். பாரதியில் அவ்வப்போது வெளிவந்துள்ள செய்திக் குறிப்புகள் சில இன்றைய நோக்கில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவுள்ளன. ஈழத்துத் தமிழ்ச் சூழலில், (i) திராவிட இயக்கத்தின் வளர்ச்சி (ii) இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சி (iii) பெண்கள் அமைப்புகளின் வளர்ச்சி பற்றி எழுதுவோர் பலர் யாழ்ப்பாணப் பிரதேசம் சார்ந்துள்ள விடயங்களை ஓரளவு எழுதுவதுண்டு. மட்டக் களப்புப் பிரதேசம் சார்ந்துள்ள அத்தகைய விடயங்கள் பற்றி எதுவுமே எழுதுவதில்லை. இவ்விதத்தில் முறையே (i) மட்டுநகரில் கருஞ்சட்டை வீரர்கள், (ii) மட்டுநகரில் திரு. ஹரி அபயகுணவர்த்தனா, (iii) மங்கையர் மன்றம் பகுதியில் பெண்கள் எழுதிய சில கட்டுரைகள் ஆகியவை கவனத்திற்குரியன. மட்டக்களப்பின் சமகால சமூக அரசியல் நிலைமைகள் பற்றிய அருமையான புரிதல்களுக்கும் 'பாரதி'யின் 'செய்திகள்' 'கடிதங்கள்' என்பன கணிசமாக பயன்படக்கூடியனவாகவுள்ளன. விரிவு அஞ்சி அவை பற்றி இவ்வேளை எதுவும் குறிப்பிடவில்லை.

## 3

மட்டக்களப்பு பிரதேசம் தவிர்ந்த ஈழத்தின் ஏனைய பிரதேசங்களின் இலக்கிய வளர்ச்சிக்கு- ஒட்டுமொத்தமான ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிக்கு - பாரதி ஆற்றிய பங்களிப்புப் பற்றியும் சுருக்கமாகச் சிலவற்றைக் கூறவேண்டும்.

ஈழத்து எழுத்தாளருள் வாசிப்புத் தாகம் மிக்கவர்கள் சிலரே. இவர்களுள் முக்கியமான ஒருவர் வ.அ.இராசரத்தினம். மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அவர் பயின்ற போது அமரர் இலக்கிய கலாநிதி வ.சிவசுப்பிரமணியத்தின் நூல்கள் தமக்குத் தீனியானவை பற்றி 'வ.அ.இ'யே குறிப்பிட்டுள்ளார். அவரது சிறுகதையும் 'பாரதியில்' பிரசுரமாயுள்ளது. மலையகம் சார்ந்த பரமஹம்சதாசன், அனுராதபுரம் சார்ந்த அன்புதாசன் ஆகியோரது கவிதைகளுக்கும் பாரதி இடமளித்துள்ளது.

'பாரதி'யில் வெளிவந்த கட்டுரைகளுள் சில முக்கியத்துவம் மிகுந் தவை. பாரதியின் கவிதைகள் பற்றி இரசனை நோக்கிலான கட்டுரைகள் வெளிவந்த அன்றைய இலக்கியச் சூழலில் பாரதி கவிதைகளை விமர்சன

நோக்கில் அணுகுகின்ற கட்டுரையொன்று (பாரதியின் திறமை என்ன?) நாவற்குழியூர் நடராஜனால் எழுதப்பட்டுள்ளது.

உலக நாடகமேதை சேக்ஸ்பியர் பற்றி இலண்டனிலிருந்தவாறு கலாநிதி சு.வித்தியானந்தன் எழுதிய 'செகசிற்பியாரும் அவர் பிறப்பிடமும்' என்ற கட்டுரை வழங்கும் புதிய தகவல்கள் கவனிப்பிற்குரியன!

'இலங்கைத் தமிழரின் எதிர்காலம்' என்ற தலைப்பிலே அ. அமிர்த லிங்கம் (B.A) எழுதிய கட்டுரை அன்றைய இந்தியத் தமிழர் (மலையக மக்கள்), இலங்கைத் தமிழர் தொடர்பான முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றைப் பற்றி அலசுவது கவனத்திற்குரியது. பின்நாளில் புகழ்பெற்ற அரசியல் தலைவரொருவரின் ஆளுமைத் திறனை விளங்கிக்கொள்ள விரும்புவோருக்கு பயன்படக்கூடியது.

## 4

சமகாலத்தில் வெளியாகி இன்று கிடைக்கக்கூடிய பாரதி (கொழும்பு), மறுமலர்ச்சி (யாழ்ப்பாணம்) முதலானவற்றுடன் இப்பாரதியை ஒப்பிட்டு முக்கியமான ஒருசில குறிப்புகளை நினைவுகூர்வதும் பயனுடையது. கொழும்பு - பாரதி ஈழத்தின் அச்சில் வந்த முதற் சஞ்சிகை (1946 ஜனவரி) ஈழத்தின் முதல் முற்போக்குச் சஞ்சிகை (முதலாவது முற் போக்குச் சஞ்சிகை தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்தது) ஆதலின் பிரக்ஞை பூர்வமான முறையிலே முற்போக்கு சார்ந்த படைப்புகளை வெளியிட்டது. இவ்விதத்தில் ஈழத்தின் முக்கியமான மூத்த முற்போக்குப் படைப்பாளர் சிலரை அறிமுகப்படுத்தியது. முன்மாதிரி முற்போக்கு மொழிபெயர்ப்புப் படைப்புக்கள் சிலவற்றைப் புதிய தலைமுறையினருக்கு இனங்காட்டி யுள்ளது. சர்வதேச நோக்கிலான படைப்பு உருவாக்கம் தொடர்பான சில சிந்தனையையும் விதைத்துள்ளது. இலக்கியத்தின் மகத்தான சக்தியைப் புலப்படுத்தவும் முயன்றுள்ளது.

மறுமலர்ச்சி ஈழத்தில் தமிழ்ச்சூழலில் நவீனம் (Modern), நவீனத் தன்மை (Modernity) முதலியன தொடர்பான சிந்தனைகள் உருவாக வழிகோலியதனூடாக எழுத்தாளர் மத்தியில் புத்தெழுச்சியை ஊட்டியது. மேலும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் முக்கியமாகக்கூடிய இரண்டாவது காலகட்டம் உருவாக வழிகோலியுள்ளது. முப்பதுகளின் 'ஈழகேசரி' சிறுகதைச் செல்நெறியிலிருந்து விலக முற்பட்ட அதேவேளையிலே ஈழத்தில் ஐம்பதுகளிலே உருவான முற்போக்கு சிறுகதை எழுத்தாளர்களை

அண்மித்துச் செல்ல முனைந்துள்ளது. ஈழத்து நவீன கவிதையின் தோற்றத்திற்கு காத்திரமான முறையில் தடமமைக்கவில்லையென்பதும் ஐம்பதுகளிலிருந்தே முக்கியம் பெறத் தொடங்கிய மஹாகவி குழுவினருக்கு ஆரம்ப நிலையில் பிரசுர களமாக விளங்கியிருந்ததென்பதும் இன்று ஆழமாக நோக்கும்போதுதான் புலப்படுகின்றது. 'நவீன' இலக்கிய உருவாக்கத்துடன் தொடர்புபட்ட ஆங்கில ஆட்சிச் சூழலில் உருவான 'நவீனமயவாக்கம்' என்பதனையும் அதன் பின்னணியில் எழுந்த 'நவீன இலக்கியப் பிரக்ஞையையும் (நவீனம் - புதுமை, புதியது) பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை உட்படப் புலமையாளர் சிலர் ஏன் 'மறுமலர்ச்சி' என்று குறிப்பிடுகின்றனர் என்ற கேள்வி எழுவதற்கும் 'மறுமலர்ச்சிச் சஞ்சிகை' என்ற பெயர் வழிவகுத்திருப்பதையும் இவ்வேளை குறிப் பிட்டாக வேண்டும்.

இப்பாரதி ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியிலே மிக முக்கியமான ஓரிரு கவிஞரை மட்டும் இனங்காட்டியுள்ளது (கவி செல்வராஜ்). அவ்வாறே ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியிலும் ஓரிரு எழுத்தாளரை (புரட்சிக்கமால்) இனங்காட்டியிருந்தது. எனினும் இவற்றை விடவும் குறிப்பிட்ட சஞ்சிகைகளைவிடவும் பிரக்ஞைபூர்வமாக ஈழத்துச் சமகால சமூக, அரசியல் பிரச்சினைகள் பற்றிய விடயங்களை கட்டுரைகள், செய்திகள், கடிதங்களூடாக வெளிப்படுத்தியுள்ளமை இதன் தனித்துவ மாகின்றது.

## 5

'பாரதி'யில் தமிழ்நாட்டு இலக்கிய ஆர்வலர்களை ஈர்க்கக்கூடிய விடயங் களுமுள்ளன. உ-ம்: பேரறிஞன் - பேனாப்புரட்சி வீரன், C.N. அண்ணா துரை M.A என்ற தலைப்பில் (எம்.எஸ். பாலு, வந்தாறுமூலை) எழுதப்பட்ட கட்டுரை. இக்கட்டுரையின் ஓரிடத்தில் அண்ணாதுரை நாஸ்திகன் என்பதற்கு கொடுக்கப்படுகின்ற புதிய விளக்கம் வாசகரை சிந்திக்க வைக்கின்றது. 'தபால்' என்ற பகுதியிலிடம்பெற்றுள்ள மட்டுநகரில் கருஞ்சட்டை வீரர்கள் என்ற தலைப்பிலான 27.03.1949இல் நடந்த கூட்டம் பற்றிய செய்தி விபரிப்பில், தமிழ்நாட்டிலிருந்து வந்த ஏ.பி.ஜனார்த்தனத்தின் பேச்சு சுருக்கமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதுவும் சிந்தனைக்கு விருந்தாகக் கூடியது. முன்னர் குறிப்பிட்ட பாரதியார் பற்றிய கட்டுரை (பாரதியின் திறமை என்ன? - நாவற்குழியூர் நடராஜன்) பாரதியாரின் 'செந்தமிழ்

நாடென்னும் போதினிலே' என்ற கவிதையை கடுமையான விமர்சனத் திற்குட்படுத்துகின்றமை காரணமாக பாரதியியல் ஆர்வலருக்கு ஈர்ப்பை ஏற்படுத்தக்கூடியது.

'பாரதி' பாரதியாருக்கு வெளியிட்ட சிறப்பு மலர், அன்றைய சூழலில் ஈழத்தினருக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டிலுள்ளவருக்கும் பிரமிப்பை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது. 'பாரதி' சஞ்சிகையின் மகுடவாசகமே 'சாதிச் சண்டை போச்சோ உங்கள் சமயச்சண்டை போச்சோ' என்றிருப்பதும் அத்தகைய உணர்வை ஏற்படுத்தக்கூடியது.

'பாரதி' சஞ்சிகையின் அட்டைகளை பாரதியார் தவிர பாரதிதாசன், மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திரபோஸ், ஜவஹர்லால் நேரு முதலானோர் அலங்கரித்திருப்பதும் தமிழ்நாட்டு இலக்கிய ஆர்வலருக்கு பேருவகை ஏற்படுத்த வல்லதே.

## 6

'பாரதி' தொகுப்பினை வாசிக்கின்ற இன்றைய வாசகர்களுக்கு குறிப்பாக பாரதியில் வெளிவந்துள்ள சிறுகதைகள் ஏமாற்றம் தரக்கூடும். 'அன்றைய கால இலக்கியச் சூழல், வாசிப்புச் சூழல், கல்விச் சூழல், கிராமச் சூழல் முதலானவற்றை ஒருகணம் மனத்திலிருத்திக் கொள்ளுங்கள்' என்பதே அத்தகையோருக்கு எனது பணிவான வேண்டுகோளாகின்றது! அது மட்டுமன்று, இதழியல் ஆர்வலர்கள் பின்வரும் விடயங்களை மனங் கொள்ளவேண்டியவர்களாகின்றனர்:

i. பாரதியின் முதல் இதழைத் தேடுதல்

ii. இரண்டாவது இதழ் முழுமையற்று இருப்பதால் அதனையும் தேடுதல்

iii. புனைபெயர்களுள் மறைந்துள்ள சிலர் அறியப்பட்டுள்ளனர். (உ-ம்: சந்திரநாதன் - பேராசிரியர் ப. சந்திரசேகரம், எம்.எம். ஸாலிஹ் - புரட்சிக் கமால், அன்புதாசன் - அனுராதபுரத்தைச் சேர்ந்தவர். இன்றுள்ள கவிஞர் அன்பு ஜவர்ஷாவின் தந்தை, D.T. செல்வநாயகம் - எழுத்தாளர் அருள் செல்வநாயகம், வ. சந்திர சேகரம் - ஆரையம்பதியைச் சேர்ந்தவர். பாடசாலை ஆசிரியர், அதிபர், இன்றைய எழுத்தாளர்கள் திசேரா, மணிசேகரன் ஆகி யோரின் தந்தை. மேலும் அறியப்பட வேண்டிய ஏனையோருள்

முக்கியமானவர்கள். கவி.ஜி.எம்.செல்வராஜ் , செல்வி நாகேஸ்வரி, ராஜூ, எஸ்.கே.ராஜூ, செல்வி.தேவகி, ந.ஜெயமணி முதலானோர்.

iv. பாரதியில் இடம்பெற்றுள்ள சமகாலத்தில் வெளியான பின்வரும் சஞ்சிகை பற்றிய விபரங்களும் இதழியல் ஆர்வலருக்குப் பயன் படக்கூடியன.

1. லங்கா முரசு, ஆசிரியர்: கலாநிதி, துணை ஆசிரியர்: ஷா, லங்கா முரசு காரியாலயம், 22 மெயின் வீதி, மட்டக்களப்பு.
2. சேவைமணி, சேவை மணி காரியாலயம், வெள்ள மணல், சைனாபே.
3. எரிமலை, ஆசிரியர்: அ.செ. முருகானந்தன், திருகோணமலை.
4. விளம்பர சேகரி, ஆசிரியர்: S.S. நாதன், 54 நெசல் வீதி, கண்டி.
5. வெற்றிமணி, ஆசிரியர்: M.K.S. மணியம், நவமணி ஸ்ரோஸ், நாவலப்பிட்டி அல்லது டங்கன் காரியாலயம், வத்துமுல்லை.
6. தமிழ் அபிமானி, ஆசிரியர்: சக்தி மோஹன், 39/45 நெல்சன் வீதி, கொழும்பு-03.

ஆக, மேற்கூறிய விதங்களிலே முக்கியத்துவம் பெற்றுள்ள 'பாரதி' சஞ்சிகையின் (ஒன்று நீங்கலாக) ஒன்பது இதழ்களை பலரது ஒத்துழைப் புடன் இவ் அணிந்துரையாளர் பெற்று வெளிப்படுத்தியிருந்தாலும் அவ்விதழ்களைத் தொகுத்து, வகுத்து செம்மையான முறையில் இவ்வாறான தொகுப்பாக இன்று அனைவரது பார்வைக்கும் தந்துள்ள எமது முன்னாள் மாணவரும் இந்நாள் முதுநிலை விரிவுரையாளருமாகிய கலாநிதி சி. சந்திரசேகரம், மற்றும் கவிஞர் எஸ். புஸ்பானந்தன் உள்ளிட்ட கலை இலக்கிய அவையினரையும் நிதியுதவி வழங்கிப் பேருதவி புரிந்த அன்பர்களையும் இவ்வேளை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்றே கருதுகின்றேன்!

வாழ்த்துக்களுடன்
**கலாநிதி செ.யோகராசா**
(ஓய்வுநிலைப் பேராசிரியர்)

# முன்னுரை

இந்திய, ஈழத்து சமூக, அரசியல் வரலாற்றிலே 1940 கள் முக்கியமான தொரு காலகட்டமாகும். இக்காலம் சமூக, அரசியல் சார்ந்த விடுதலை உணர்வும் சீர்திருத்த, நவீன சிந்தனைகளும் வீறுபெற்றிருந்த காலமாகும். இந்தியாவிலே எழுச்சி பெற்றிருந்த இத்தகைய கருத்துக்கள் ஈழத்த வரையும் பெரிதும் தாக்கின. இந்தச் சிந்தனைகள் இலக்கியத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தின.

அந்தவகையில் ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலும் இக்காலம் முக்கிய மானதொரு காலப்பகுதியாக அமையலாயிற்று. இந்த இலக்கிய வளர்ச்சிக்கு இக்காலத்திலே உருவான மறுமலர்ச்சி (யாழ்ப்பாணம்), பாரதி (கொழும்பு), எரிமலை (திருகோணமலை) முதலான பல கலை இலக்கியச் சஞ்சிகைகள் பெரும் பங்காற்றின. இந்தச் சஞ்சிகைகள் அக்கால நவீன - முற்போக்குச் சிந்தனைகளின் வெளிப்பாட்டுச் சாதனங்களாக விளங்கின.

இந்தப் பின்னணியிலே 1948 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சமூக, சமய மரபுகளை இறுக்கமாகக் கட்டிக் காக்கின்ற மண்டூர் என்ற பாரம்பரிய கிராமத்திலே இருந்து 'பாரதி' என்ற முற்போக்குச் சஞ்சிகை வெளிவந்தது. பாரதியின் கருத்துக்களாலும் நவீன சிந்தனைகளாலும் ஈர்க்கப்பட்ட ஒரு குழுவினர் ஒரு காத்திரமான சஞ்சிகைக்குரிய பண்புகளோடு அதனை வெளியிட்டனர். இச்சஞ்சிகை வெளிவந்து சுமார் அறுபது வருடங்களுக்கு மேலாகியும் அது வெளிவந்தமை பற்றிப் பேசப்படாமையும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அடையாளப்படுத்தப்படாமையும் நமது கலை இலக்கியப் புலத்தின் பலவீனம் என்றே தோன்றுகின்றது. இந்த நீண்ட கால ஓட்டத்திலே அந்தச் சஞ்சிகை வெளிவந்த மண்ணிலே வாழ்ந்த புலமையாளர்களும் ஒரு தகவல் என்றவகையிலாவது அதுபற்றிப் பேச வில்லை. மதவழிப்பட்ட படைப்புகளையே போற்றிவந்த நமது பண்பாட்டுச் சூழலில் 'பாரதி' மறைக்கப்பட்டு விட்டது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

1995 ஆம் ஆண்டு எனது பல்கலைக்கழக இளங்கலைமாணிப்பட்ட ஆய்வின் பொருட்டு 'மண்டூர் பிரதேசப் புலவர்கள்' பற்றித் தகவல்கள் பெறுவதற்காக திரு செபரெத்தினம் ஆசிரியர் (பாரதியின் இணையாசிரியர்

களில் ஒருவர்) அவர்களின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு அவர் எனக்குத் தகவல்கள் தரும் பொருட்டு பழைய புத்தகங்களைப் புரட்டிய போது 'பாரதி' என்ற ஒரு சஞ்சிகையைக் கண்டேன். அவ்விடத்தில் அதுபற்றி அவரிடம் உரையாடிய போது பாரதியின் வெளியீடு பற்றிய சில தகவல்களைக் கூறினார். அப்போது அப்பத்திரிகை எனக்கு உடனடித் தேவையாக இல்லாதபோதும் அதனை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டேன். அதன் பின்னர் மண்டூர் சோமசுந்தரம்பிள்ளைப் புலவரின் வீட்டில் இருந்தும் ஒரு பிரதியைப் பெற்றுக்கொண்டேன்.

பின்னர் எனது பல்கலைக்கழக ஆசிரியர் பேராசிரியர் செ. யோகராசா அவர்களிடம் இது பற்றிக் கதைத்த போது அதன் பெறுமதியை உணர்ந்து கொண்ட அவர் அதனை என்னிடமிருந்து பெற்றுக்கொண்டார். இதன்பின் அவர் இன்னும் ஓரிரு பிரதிகளையும் பெற்று அதுபற்றிச் சில கட்டுரை களை எழுதினார். இது ஈழத்து இலக்கியவாளர்கள் மண்டூர் பாரதி பற்றி அறிந்துகொள்ள ஓரளவு வழி செய்தது. இந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு ஆனி மாதம் மண்டூர் கலை இலக்கிய அவை பாரதி சஞ்சிகை பற்றிய அறிமுக நிகழ்வை (அவுரி - 1) நடாத்தியது. இந்நிகழ்வில் கலந்துரையாடல் இடம்பெற்ற போது மண்டூரைச் சேர்ந்த திருமதி ராகுலன் வாசுகி அவர்கள் தம்மிடம் 6 பிரதிகள் இருப்பதாகக் கூறினார். எதிர்பாராத விதமாக இப்பிரதிகள் கிடைத்தமை பாரதி இதழ்களைத் தொகுக்க வேண்டும் என்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தியது.

முதலாவது பிரதி நீங்கலாக கிடைக்கப்பெற்ற ஒன்பது பிரதிகளே இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. முதலாவது பிரதி கிடைக்கப்பெறாமை இத்தொகுப்பின் போதாமையாகும். எனினும் இத்தொகுதி வெளிவந்து அது பற்றிய தகவல்கள் பரவலடைகின்ற கட்டத்தில் சிலவேளை முதலாவது பிரதி வெளிப்படக் கூடும் என்று நம்புகின்றோம்.

இத்தொகுப்பைச் செய்தபோது அதன் காலம் பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்வது அவசியம் என்று கருதினோம். ஆனால் முதலாவது பிரதி கிடைக்கப்பெறாமை, பல இதழ்களில் ஆண்டு, மாதம் இடம்பெறாமை என்பவற்றால் இப்பதிவினைச் செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டன. எனினும் சில அகத் தகவல்களின் ஊடாக இதனை ஓரளவு பதிவுசெய்ய முடிந்துள்ளது.

பாரதி தேசிய மாத இதழாக வெளிவந்தது. அதன் இரண்டாவது இதழின் ஆண்டு, மாதம் குறிப்பிடப்படாத போதும் முன்பக்க ஆசிரியர்

வாழ்த்துச் செய்தியிலே 'வருக வருக 1949ஆம் ஆண்டே!' என்று ஆசிரியர் வரவேற்பதைக் கொண்டு இந்த இதழ் 1948ஆம் ஆண்டு மார்கழி மாத இறுதியில் அல்லது 1949 ஆம் ஆண்டு தை மாத ஆரம்பத்தில் வந்திருக்க வேண்டும் என்றும் முதலாவது இதழ் 1948ஆம் ஆண்டு கார்த்திகை அல்லது மார்கழி மாதத்தில் வந்திருக்க வேண்டும் என்றும் கருதலாம். மூன்றாமிதழ் மாசி மாதத்திலும் நான்காம், ஐந்தாம் இதழ்கள் நேயர் கடிதத் திகதியின் அடிப்படையில் முறையே பங்குனி, சித்திரை மாதங்களிலும் வெளி வந்துள்ளன. ஆறாவது இதழின் ஆண்டு (1949) மட்டும் இடம் பெற்றுள்ளது. ஏழு தொடக்கம் ஒன்பது வரையான இதழ்களின் ஆண்டு, திகதிகள் தெரியவில்லை. பத்தாவது இதழ் 1950.06.15 இல் அச்சிடப் பட்டுள்ளது. ஒன்பதாவது இதழின் பின்பக்க ஆசிரியர் குறிப்பிலே 'அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து அழகான தாள், அதிக விஷயங்கள், நல்ல படங்கள், புதுப்புது விஷயங்களுடன் பாரதியை வெளியிடத் தீர்மானித்துள்ளோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஒன்பதாவது இதழ் 1949 ஆம் ஆண்டு இறுதியில் வெளிவந்துள்ளது. எனவே இவற்றினூடாகச் சில விடயங்களைத் துணிந்துகொள்ள முடிகின்றது. அதாவது, ஐந்து இதழ்கள் வரை மாதாந்தம் வெளிவந்த பாரதி பின்னர் ஒன்பதாம் இதழ் வரை (4 இதழ்கள்) சுமார் எட்டு மாதங்களினுள் வெளி வந்துள்ளன. அதேவேளை பத்தாவது இதழ் சுமார் ஆறு மாதங்களின் பின் வெளிவந்துள்ளது. அதேவேளை ஆசிரியர் ஒன்பதாவது இதழில் கூறியதற்கு அமைய பத்தாவது இதழை வெளியிடவும் முடியவில்லை. ஏனைய இதழ்களோடு ஒப்பிடுமிடத்து மாற்றங்கள் இல்லாத, மாறாக அது மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய பக்கங்களுடன் (ஒன்பதாவது, பத்தாவது இதழ்கள் 10 பக்கங்களுடன் வெளிவந்துள்ளன) வெளி வந்துள்ளது. இந்த இடத்தில் பாரதி அச்சிடப்பட்ட அச்சகங்கள் பற்றிக் குறிப்பிடுவதும் அவசியம். ஆரம்பத்திலே 'பாரதி' (2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் இதழ்கள்) பதுளை 'காந்தி பிரஸில்' அச்சிடப்பட்டுள்ளது. பின்னர் (6ஆம், 7ஆம், 8ஆம் 9ஆம் இதழ்கள்) கொழும்பு 'சுதந்திரன் பிரஸில்' அச்சிடப்பட்டுள்ளது. இறுதி இதழ் கண்டி கிங் வீதியில் அமைந்திருந்த 'குருநாதன் பிரிண்ட் வேக்ஸ்' இல் அச்சிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் 'பாரதி' சில சிக்கல்களை எதிர்நோக்கி வந்தமையின் வெளிப்பாடுகளே யாகும். ஆசிரியர் 10 வது இதழில் 'சந்தாதாரர்கட்கோர் நல்வார்த்தை' என்ற தலைப்பில் பின்வருமாறு கூறுகிறார்: 'சந்தாதாரர்களே! நமது

பொறுமையைச் சோதித்தது போதும். பாரதி சிறப்பாகத் தொடர்ந்து வருவதற்கு நாங்கள் பொறுப்புதாரர் அல்ல. நீங்கள்தான் பொறுப்புதாரர். நாங்கள் பணமூட்டை கட்டிப் பட்டம் பெறுவதற்காகப் பாரதியைத் தொடங்கவில்லை. நம் அனைவரதும் உயர்வுக்காகத் தொடங்கினோம். நிலையை உணர்ந்து கடமையைச் செய்து எங்களை ஆதரிப்பது உங்கள் பெருந்தொண்டாகும்' (இதழ் 10: 4).

இது பாரதி வெளியீட்டாளர்கள் பண நெருக்கடியை எதிர்நோக்கியிருந் தார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இதனோடு அவர்களது உத்தியோக இடமாற்றமும் பாரதியைத் தொடர்வதில் தடையை ஏற்படுத்தி யதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் பாரதி 1950 நடுப்பகுதியில் தன் ஆயுளை முடித்துக்கொண்டது.

பாரதியின் ஒன்பது இதழ்களிலும் வெளிவந்த விளம்பரங்களைத் தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் எல்லாம் தொகுக்கப்பட்டுள்ளன. இத் தொகுப்பு கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், இளைஞர் பகுதி, மங்கையர் மன்றம், பாலர் பகுதி, ஆசிரியர் கருத்துக்கள்- செய்திகள்- கடிதங்கள் என ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இளைஞர் பகுதி, மங்கையர் மன்றம், பாலர் பகுதி ஆகிய பகுதிகள் சஞ்சிகையில் தனித் தனிப் பிரிவுகளாகவே அமைந்திருந்தன. ஆசிரியர் கருத்துக்கள், செய்திகள், கடிதங்கள் ஆகியவற்றை ஒரே தலைப்பிலேயே தொகுத்துள்ளோம். இப்பகுதிகள் சமகாலச் செய்திகளை வெளிப்படுத்துவன. சில விடயங்கள் ஆசிரியர் தலையங்கம் என்ற வகையிலும் சில விடயங்கள் ஆசிரியரின் செய்திகளாகவும் வருகின்றன. இவற்றில் பாரதி சஞ்சிகை பற்றிய, அதன் அட்டைப்படம் பற்றிய தகவல்களும் அடங்கும். எனவே இவற்றை வெவ்வேறான தலைப்பில் அமைப்பதிலே சிக்கல்கள் ஏற்பட்டன. எனவே இவற்றையெல்லாம் ஆசிரியரின் கருத்துக்கள் என்ற வகையில் எடுத்து அவற்றோடு சமகாலச் செய்திகளையும் இணைத்து ஒரு தலைப்பாக அமைத்துள்ளோம். இந்த விடயங்கள் பெரும்பாலும் சமகால விடயங் களோடு தொடர்புடையவையாக இருப்பதனால் கால வரிசையைக் கடைப்பிடிப்பது முறையெனக் கருதி இதழ் எண் வரிசையின் அடிப் படையில் தொகுக்கப்பட்டுள்ளன.

சஞ்சிகைப் பிரதிகளை அச்சிடுகின்ற போது பல பிரச்சினைகள் ஏற்பட்டன. பிரதிகளின் சில பக்கங்களின் பகுதிகள் கிழிந்திருந்தமை, விளிம்புகளிலே உள்ள எழுத்துக்கள், சொற்கள் சேதமுற்றிருந்தமை, சில

இடங்களில் தண்ணீர், மைக்கறைகளால் எழுத்து, சொற்கள் அழிந்திருந்தமை முதலிய காரணங்களால் அச்சிடுவதில் சிரமங்கள் ஏற்பட்டன. இத்தகைய நிலைகளில் பந்தியின், வசனத்தின் பொருள் பொருத்தத்தைக் கருத்திலே கொண்டு சொற்கள், எழுத்துக்கள் இடப்பட்டுள்ளன. 10வது இதழின் இரு பக்கங்கள் வாசிக்க முடியாதபடி எழுத்துக்கள் மங்கியிருந்தன. எனினும் சேதமுற்ற மற்றொரு 10 வது இதழின் பிரதி கிடைக்கப் பெற்றமையால் இரண்டையும் ஒப்பீடு செய்து சரியான வடிவத்தை அச்சிட முடிந்தது. இரண்டாவது இதழின் முற்பகுதியும் (முதல் மூன்று பக்கங்கள்) பிற்பகுதியும் கிடைக்கப்பெறவில்லை. பிற்பகுதி கிழிந்திருந்தமையால் 'பரிதியும் பார்வேந்தனும்' என்ற கட்டுரையின் பிற்பகுதி தொகுப்பில் இடம்பெறவில்லை. சில ஆக்கங்களை எழுதிய ஆசிரியர்களின் பெயர்களும் இடம் பெற்றிருக்கவில்லை. இத்தொகுப்பின் அட்டை வடிவமைப்பு ''பாரதி'' இதழின் கருத்தியல், அதன் தன்மை, அக்காலச் சூழல் என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இறுதிப் பகுதியாகிய பின்னிணைப்பில் ஆறு இதழ்களின் அட்டைப் பக்கங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏனைய பிரதிகள் அட்டைப் பக்கங்கள் இல்லாமலே கிடைத்தன. பாரதி சஞ்சிகையின் அட்டைப்பக்கங்களும் சஞ்சிகையின் தன்மையினையும் நோக்கத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன என்ற வகையில் அவை பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

பாரதி சஞ்சிகையினைத் தொகுக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த கலை இலக்கிய அவையின் தலைவர் கவிஞர் எஸ். புஸ்பானந்தன் அவர்களுக்கும் அவை உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகள். அத்தோடு அட்டைப் படத்தை அழகாக வடிவமைத்துத் தந்த சுசிமன் நிர்மலவாசன் அவர்களுக்கும் இத்தொகுப்பைச் செவ்வை பார்ப்பதிலே என்னோடு உதவிய அவைச் செயலாளர் கவிஞை த. உருத்திரா, மற்றும் செல்வி க.ஜீவரதி, செல்வி கிருஷ்ணவேணி, திருமதி விஜிதா திவாகரன், கவிஞர் மேரா, திருமதி சந்திராதேவி தயாகாந்தன் ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

**கலாநிதி சி. சந்திரசேகரம்**

# பொருளடக்கம்


வெளியீட்டுரை vii

வாழ்த்துரை ix

வாழ்த்துரை xi

அணிந்துரை xiv

முன்னுரை xxi

**கட்டுரைகள்**

1. புதிய காரியம் 1
   - அ. செ. மு.
2. விதியும் மதியும் - பாரதி 3
   - பண்டிதர் வி.சீ.கந்தையா
3. பாரதியின் திறமை என்ன? 8
   - நாவற்குழியூர் நடராஜன்
4. பரிதியும் பார்வேந்தனும் 14
   - வி.விசுவலிங்கம்
5. தலைவனைத் தொடர்வது தருமந்தானே 16
   - மயிலன்
6. சிலப்பதிகாரத்தின் சிறப்பு 21
   - கோணேஸ்
7. இருபதாம் (20-ம்) நூற்றாண்டுப் புலவர்களும் சமுதாயமும் 25
   - சந்திரநாதன்
8. லளித கலைப்படிப்பு 53
   - S. கணபதிப்பிள்ளை
9. செக சிற்பியாரும் அவர் பிறப்பிடமும் 58
   - சு. வித்தியானந்தன்
10. பட்டு வியாபாரி 62
    - கோல் ஸ்மித் - தமிழாக்கம் மூர்த்தி
11. தீண்டாமை 65
    - சைனாபே ஆ.தம்பிராசா

12. தீண்டாமையின் திருநடனம் 67
- D.T. செல்வநாயகம்

13. இலங்கைக் கல்வியின் இன்றைய நிலை 72
- ம.சிவநேசராசா

14. தமிழா! இன்னுமா தூங்குகிறாய் 75
- செல்வம்

15. இலவசக் கல்வியில் தாய்மொழிக் கொலை 77
- வி.சீ.கந்தையா

16. இலங்கைத் தமிழரின் எதிர்காலம் 82
- அ. அமிர்தலிங்கம்

17. பேரறிஞன்-பேனாப் புரட்சி வீரன் C.N அண்ணாத்துரை M.A 85
- எம்.என்.பாலு

18. சிந்தனைச் சுருள்
- ஜோ. தெரேஸ் ரூபராணி 89

19. பூமியின் உற்பத்தியும் அதன் காலமும் 91
- செ.குணபாலசிங்கம்

20. அணு 96
- கோ. கோணேசபிள்ளை

**சிறுகதைகள்**

1. பிள்ளைப் பாசமா? விதியின் சூழ்ச்சியா? 98
- எம். எஸ். பாலு

2. விதியின் விளையாட்டு 105
- என். எஸ்.

3. பாவ மன்னிப்பு 110
- ராஜூ

4. நல்ல காலம் 115
- மூர்த்தி

5. சதி செய்த விதி 117
- செல்வன்

6. விதி கிழித்த கோடு சமூகம் காட்டிய பாதை 123
- அபலை

7. கோணற் தராசு 132
- வ.அ. ராசரத்தினம்
8. அவள் 139
9. நோட்டுப் பணம் 145
- ரகுநாதன்
10. புது யுகம் 152
- பாஞ்சாலி
11. சதிகாரி 157
- எம். எம். ஸாலிஹ்
12. பாடையிலே காதல்! 159
13. மங்கிய வெளிச்சம் 164
- S.K. ராஜூ
14. நடைப் பிணம் (பரிசுக்கதை) 170
- 'வெண்ணிலா' (ஸ்ரீமான் இரகுநாதன்)
15. வீணில் மாயாதே (போட்டிக்கதை) 176
- N. சாமித்தம்பி
16. மன்னிப்பா! (போட்டிக்கதை) 182
- V. சந்திரசேகரம்
17. இரு உள்ளங்கள் -(போட்டிக்கதை) 188
- கிரிஜா
18. நாகரிக பிச்சைக்காரன் 196
- மூர்த்தி

**குட்டிக்கதைகள்**

1. வறுமையின் கொடுமை 199
- செல்வி இ. தங்கம்மா
2. கொழுத்த கடன் 201
- குட்டி

**கவிதைகள்**

1. தூய அன்னை சாரதா! 203
- பரமஹம்ஸதாஸன்
2. இன்னும் உறங்குவதா? 204
- பரமஹம்ஸதாசன்

3. வெற்றி முழக்கம் 205
- பரமஹம்ஸதாசன்

4. மறைந்த கவிக்குயில்! 206
- பரமஹம்சதாசன்

5. பாரதிச் சுடர் 208
- பரமஹம்சதாசன்

6. ஐக்கியமே இன்பம் (நேரிசை வெண்பா) 210
- வித்துவான் ஏ. பெரியதம்பிப்பிள்ளை

7. ஏழையின் பொங்கல் 211
- கவி ஜி.எம்.செல்வராஜ்

8. இதுவா பொங்கல் 212
- கவி.ஜி.எம்.செல்வராஜ்

9. கடமை செய்ய வாரீர் 213
- 'ஜோஸ்'

10. பவள மணி நாடு 214
- அன்புதாசன்

11. அஹிம்சை ஒன்றே! 215
- அன்புதாசன்

12. வாழிய பாரதி நாமம் 216
- ஏ.சீ.அன்புதாசன்

13. வாழ்க பாரதி 217
- ராஜாராம்

14. பாரதி வாழ்த்து 218
- M. சோமசுந்தரம்பிள்ளை

15. என்து தோழன் 219
- சுபமணி

16. தமிழ் 220
- மூனாக்கானா

17. நீடு வாழ்க கவிக்குயில் வாழ்கவே! 221
- சுவாமி சுத்தானந்த பாரதியார்

18. சக்தி எங்கே? 222
- எஸ். கே. ராஜூ

19. கற்பனைக் காதலிக்குக் கலைக் கடிதம் (வசன கவிதை) 223
- எஸ்.கே.ராஜூ

**இளைஞர் பகுதி**

கட்டுரைகள்

1. பாரதியார் 224
2. பாரதி ஆவோம் 226
- சாவை த. யோகநாதன்
3. தமிழ்த் தாயின் சுயசரிதம் 228
- பு.ஜோ.ஜெயராஜ்
4. காப்பது விரதம் 230
- செல்வி.S.கமலாதேவி
5. பழைமையின் பாசமா புதுமையைப் புறக்கணிப்பது? 233
- மு.முத்தையா

**சிறுகதைகள்**

1. சேகரனின் சேவை 235
- ந. குணரெத்தினம்
2. புத்தி வந்தது! 237
- சியாமளா

**கவிதை**

1. வெண்ணிலாவே! 240
- ந.ஜெயமணி

**மங்கையர் மன்றம்**

கட்டுரைகள்

1. கிராமப் பெண்களே விழித்தெழுங்கள்! 241
- செல்வி தேவகி
2. பெண் பிறவி 243
- செல்வி நாகேஸ்பரி
3. கூறையும் தாலியும் 246
- செல்வி.நாகேஸ்பரி

உரையாடல்

1. தலைமுறை தலைமுறையாய் 249
   - "பாஞ்சாலி"

**பாலர் பகுதி**

கதைகள்

1. உப்புக் கஞ்சி 255
   - ந. குணரெத்தினம்
2. காட்டில் பிரஜா உரிமை 258
   - ராணி
3. பிறந்தது எலி வேட்டை 261
   - சுமாலி

கவிதைகள்

1. பாரதி வாழ்க நீ! 263
   - அன்புதாசன்
2. பாலர் விளையாட்டு 264
   - சிவாஜி

**ஆசிரியர் கருத்துக்கள், செய்திகள், கடிதங்கள்** 265

**பின்னிணைப்பு – பாரதி சஞ்சிகையின் அட்டைப் பக்கங்கள்** 323

# கட்டுரைகள்

## புதிய காரியம்

அ. செ. மு.

புதிய பத்திரிகை ஒன்று தொடங்குவது மிக்க சந்தோஷமான காரியம். பத்திரிகை என்ன - வாழ்க்கையில் எந்த ஒரு காரியமுமே புதிதாகச் செய்வதென்றால் அதில் ஒரு தனி மகிழ்ச்சி உண்டு.

ஒரு வாலிபனுக்கு கல்யாணம் செய்துகொள்ளுவது புதிய காரியம். அது, அவன் முன்பின் அறியாத பெண்ணாகவிருந்து பெற்றோர்கள் பேசி ஒழுங்குபடுத்திய கல்யாணமாக இருக்கவேண்டும். முதலிரவில் படுக்கை அறையில் அவனது புதுமை உணர்ச்சி இவ்வளவென்று சொல்லிக்கொள்ள முடியாது. படுக்கையிலிருந்து ஒதுங்கி ஒரு மூலையில் நாணிக் கோணிக் கொண்டு நிற்கும் பெண்ணை அவன் திரும்பத் திரும்ப ஆயிரம் தடவைக்கு மேல் பார்த்துக்கொண்டேயிருப்பான். புதுமை உணர்ச்சியின் வேகம் அப்படியும் அவனுக்கு அடங்கவே அடங்காது.

பிள்ளையை பத்துமாசம் வயிற்றிலே சுமந்த தாயின் புதுமை உணர்ச்சியை, பத்தாவது மாசம் பிள்ளை நிலத்திலே கிடந்து 'குவா குவா'' என்று கத்தும் போது அவளது முகத்தில் பார்க்க வேண்டும். அதை வர்ணிக்கவியலாது.

ஓர் எழுத்தாளன் ஒரு புதிய பத்திரிகையைத் தொடங்குகிறான். முதலாவது இதழ் வெளியாகிறது. அதை அவன் கையில் வைத்துக் கொண்டு பல தடவை புரட்டிப் புரட்டிப் பார்க்கிறான். அப்போது அவனுக்கு ஏற்படும் புதுமை உணர்ச்சி, புதுமை இன்பம் மேலே குறிப்பிட்டவர்களது உணர்ச்சிக்குக் கொஞ்சமேனும் குறைந்ததல்ல. கல்யாணஞ் செய்து குடும்பத்தை நடத்துவதிலுள்ள கவலை, பிள்ளையைப் பெற்று வளர்த்து ஒப்பேற்றுவதில் தாய்க்குள்ள கவலை - இவைகளைவிடக் கூடிய கவலை பத்திரிகை மீது பத்திரிகையாளனுக்கு இருக்க வேண்டும்.

நமது வாழ்நாள் முழுவதுமே நித்யம் பொழுது விடிந்து கொண்டு தானிருக்கிறது. ஆனால் தினமும் பொழுது விடியும்போது கண்ணை விழித்தால் நமக்கு ஏதோ ஒரு புதுமை உணர்ச்சி உண்டாகத்தான் செய்கிறதல்லவா?

வாழ்வு நமக்குத் தினமும் விடியவேண்டும். புதுப்புதுக் காரியங்கள், புதுப் பத்திரிகைகள் நிறைய வெளிவர வேண்டும். பாரதி சொல்லியது போல தகப்பன் வெட்டிய கிணறு என்று மூடர்கள் உப்பு நீரையே குடித்துக் கொண்டிருக்கக் கூடாது. சமூகம் வளருவதற்குப் புதிய மாறுதல்கள் அவசியம். தென்னைமரம் வளரவேண்டுமானால் காவோலை விழுந்து குருத்தோலை தழைக்க வேண்டுமல்லவா- அது போல!

பத்திரிகையின் ஆயுளைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் - தண்ணீரில் இறங்கிய பாடுமில்லை, குளித்தபாடுமில்லை. பத்திரிகைத் தொண்டு உலகிலே பெரிய தொண்டு, செய்கிற வரையில் வெகு கண்ணியமாக அதை நாம் செய்ய வேண்டும்.

# விதியும் மதியும் - பாரதி

*பண்டிதர் வி.சீ.கந்தையா*

தமிழ்மொழியின் பெருமையைக் குன்றிலிட்ட விளக்காக்கிச் சென்ற பெரியார் வள்ளுவனார் ஒரு பெரிய சந்தேகத்தை நமக்கு வைத்துவிட்டார்.

முயற்சியின் சிறப்பை அழுத்திக்கூற விரும்பி: 'தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்' என்று அறுதியிட்டார். இதன் பொருள் 'தெய்வ அருளால் நமக்கு நியமிக்கப்பெற்ற ஊழ் காரணமாக பெறமுடியாததொன்றாயினும், அதற்காக நாம் முயற்சி செய்தால் நமது முயற்சிக்குக் கூலியாகவாவது நமக்கு அது கிடைக்கும்' என்பது.

ஊழின் சிறப்பைக் கூற விரும்பி 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்று வரையறை செய்தார். இதன் பொருள் 'ஊழைப்' போல் மிகுந்த வலியுடையன யாவை இருக்கின்றன? நாம் எவ்வளவு பிரயத்தனம் செய்தாலும் அந்த ஊழே அவற்றை வென்றுவிடும் என்பது.

இவ்விரண்டு திருக்குறளையும் சேர்த்துப் பார்க்கும்போது, 'உண்மை யாக இவற்றுள் எது வலியது' என நமக்கு ஐயமோ, அன்றி ஆராய்ச்சியோ ஏற்படுவது இயல்புதான். இப்படியான பல விஷயங்கள் மனிதனுடைய அறிவை மயக்கிக்கொண்டு கிடக்கின்றன. இவற்றைத் தீர்த்துவைத்தலும் வள்ளுவர் போன்ற பெருமையோர்களாலேயே முடிகின்றது.

வாழ்க்கையிற் பலவித அநுபவங்களைப் பெற்று அவற்றைக் கையாளுதலும், தம் வருங்கால சந்ததிக்காக அவ்வநுபவங்களை விட்டுச் செல்வதும் பெரியோரியற்கை. 'ஊழ் நமக்கு யாவும் தரும்' என்றால், மனிதன் அந்த விதியையே நம்பிச் சோம்பேறியாய் விடுவான். 'முயற்சியே சகலதும்' என்றால், தெய்வ நம்பிக்கையே கெட்டுவிடுகின்றது. அப்போது 'இயன்றவன் பாடு' என்ற சித்தாந்தம் வந்துவிடும்.

பின்னால் பல ஆயிரம் ஆண்டு காலத்தைத் தீர்க்கதரிசனம் கண்டு சென்ற நமது பெருங்கவி, எளிமைக்கவி, புதுமைக்கவி, வீரக்கவி சுப்பிரமணிய பாரதி, இந்த இடர்பாட்டை நீக்க நமக்காக ஒரு கனவைக் கண்டார்.

'பாரதி அயர்ந்து நித்திரை செய்கிறான்; ஒரு எழில் உருவம் அவனைத் தட்டி எழுப்புகின்றது. ஹு ஹும்! என்று மறுபக்கம் புரண்டு திரும்புகிறான். இளநிலவு; அதனுள் ஒரு பெரு நிலவு போன்று பிரகாசிக்கும் இளவதனம் தெரிகின்றது. அப் பெருநிலவின் மத்தியில், புன்முறுவலாகிய புதுமை வாய்ந்த, மயக்கும் சக்தி நிறைந்த சிறுநிலவு. இத்தனையும் அமைந்த அந்தப் பருவநங்கை, பதினாறு வயது கொண்ட பேரழகி, இயற்கையழ கெல்லாமே திரண்டுவந்த உருவமவள். பாரதியினுள்ளம் அவள்மீது அறிவுக்காதல் கொள்ளுகின்றது'.

'அதனாற் பெரிதுமின்புற்ற அந்த மேதை, சந்தர்ப்பத்தை நழுவவிடாது தனது உள்ளத்திலிருந்த சில சந்தேகங்களை அவளிடம் கேட்டுத் தெளிந்து கொண்டே போகின்றான். அவள் கூறும் பதில்கள் சரியானவையென்றே அவனுக்குப்படுகின்றன'.

சற்றுநேரத்தில் தனது முக்கியமான கட்டத்துக்கு வந்தான். விதியையும் மதியையும் முன்னினான். 'காலத்தின் விதி மதியைக் கடந்திடுமோ' என்று தன் சந்தேகத்தை வெளியிட்டான். 'காலத்தினால் நமக்கு விதிக்கப் பட்டவை நமது புத்தியின் எல்லையை மீறிவிடுமோ? புத்தியினால், முயற்சியினால் அவ்விதியை வெல்ல முடியாதா? என்ற அவனது வினா இப்படிச் சுருக்கமாகக் கேட்கப்பட்டது.

அதற்கு ஆணித்தரமான பதில் உடனே கிடைத்தது.

*''காலமே மதியினுக்கோர் கருவியாம்''*

நமக்கு மதியையும் கொடுத்து நிற்பது அந்த விதியே என்பது இப் பதிலில் அடங்கிக் கிடக்கின்றது.

*உலையா முயற்சிகளை கணா ஊழின்*
*வலி சிந்தும் வன்மையும் உண்டே - உலகறியப்*
*பான் முளையே தின்று மறலி உயிர் குடித்த*
*கான் முளையே சாலும் கரி''*

என்ற நீதி நூற் கருத்தை இங்கே கருதுவோம்.

ஓயாத முயற்சியின் பயனாக என்றென்றும் பதினாறு வயது பெற்ற மார்க்கண்டனை நீதிநூலார் நமக்குக் காட்டி, நாமும் அப்படியே முயற்சி யாற் பெரும் பயனடையலாம் என்கின்றார்கள். உலக வாழ்வில் - அநுபவ ஞானத்தில் முதிர்ந்த ஆன்றோர் வாயிலிருந்து ''விதியையும் மதியால் வெல்லலாம்'' என்ற பழமொழி வடிவில் இவ்வுண்மை உருவெடுத்து

வந்தது. இதில் ''விதியையும்'' என்ற சொல்லில் உள்ள ''உம்'' இடைச் சொல்லினாலோ, விதி வெல்லற்கரியது என்பது தெளியப்படுகின்றது. மேலே நாம் காட்டிய செய்யுளிலும், முயற்சியுடையார்க்கு, ''ஊழின் வலிசிந்தும் வன்மையும் உண்டே'' என்று வருவதில், ''வன்மையும்'' என்பதில் உள்ள 'உம்' இடைச்சொல்லும் அதை வெல்வதின் அருமையைக் காட்டுகின்றது. எதனாலும் வெல்ல முடியாத வித்தையும் வெல்லக்கூடியது முயற்சி, மதியின் சூழ்ச்சி எனும் போது, அவ்விதியின் கீழ்ப்பட்ட வலியுள்ள யாவும் வெல்லப்படல் மிகத் துணிவாகின்றதல்லவா! முயற்சியுடையவனால் இங்கு முடியாததொன்றுமில்லை யென்றறியவும், விதியின்மேற் பாரம்போட்டுச் சும்மா கிடந்து மனிதன் தன்னைத்தானே நொந்து கொள்ளாதிருக்கவும் முயற்சியைப் பற்றிய மேற்போந்த அறிவுரைகள் பயன்படுகின்றன. மனிதன் தன்னம்பிக்கை கெட்டு நாளா வட்டத்தில் நடைப்பிணமாய் விடாமலும் இவைகள் காப்பாற்றுகின்றன வல்லவா?

வேதாந்திகளின் கருத்துப்படி மனிதன் தனது வருங்கால விதியைத் தானே நிரூபிக்கிறான் என்ற முடிவு கிடைக்கின்றது. மனிதன் இம்மையிற் செய்யும் நல்வினை, தீவினைகளானவை மறுமையிலும் இவனைத் தொடர்ந்து அப்படியே ஊட்டுகின்றபடியால் நாம் நம் திட முயற்சியால் நமக்கு நல்ல ஊழை - விதியை நியமித்து விடலாம். ஒன்றை நோக்கி நாம் மேலும் மேலும் முயன்றால், அது கைகூடுமுன் நாம் மரிக்க நேரிட் டாலும், அம்முயற்சியின் பயன் தொடர்ந்து நம்மை நிச்சயமாக மறுமை யிலாவது கூட்டுவிக்கும். இவ்வுடன்பாடு வள்ளுவப் பெருமானுக்கும் உண்டென்பதை,

'ஒருமைக் கட்டாங்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து' என்றும், 'தவமும் தவமுடையார்க்காகும் அவமதனை அஃதிலார் மேற் கொள்வது' என்றும் வரும் திருக்குறள்களால் ஒருவாறு தெளிந்து கொள்ளலாம்.

ஆகையால் நமது பண்டைய முயற்சிகளின் பலன் - நல்வினை, தீவினைப் பயன்கள் -ஊழ் அல்லது விதி எனும் பெயரால் நம்மைச் சேரும் நியதியிற் தவறாமை புலப்படுகின்றது. இந்த விதியினால் நமக்கு ஒன்று நடக்க வேண்டியிருப்பின் அதற்கேற்ற மதி தானே ஏற்பட்டுவரும். விதிக்கு மாறாக இருப்பனவாக நாம் நம் முயற்சிகளாற் சூழும் மதியும் உளவாமாதலாற்தான் நம் எண்ணம் எல்லாம் பலிப்பதும் இல்லை.

''ஞாலத்தில் விரும்பியது நண்ணுமோ'' என்று பின்னால் பாரதி அந்த அமுதத் தெய்வத்திடம் கேட்டதும், ''நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம்'' என்று பதில் பெற்றதும் இவ்வுண்மையை நன்கு விளக்குகின்றன. ஆகவே, ''விதி'' என்று ஒன்று இருக்க, அதை நாம் வெல்ல ''மதி'' என்ற ஒன்றை எடுத்துக் கொள்ளலாம் எனும் கருத்துப் புரைபடுவதாகும். இந்த அரிய உண்மையையே, காலமாகிய அந்த எழில் நங்கை, ''காலமே மதியினுக் கோர் கருவியாம்'' என்று கவிஞனுக்குத் தெளிவு செய்தாள்.

கவி கண் - இந்தக் கற்பனைக் கனவில் இன்னும் எத்தனையோ அரிய விஷயங்கள் 'அழகுத் தெய்வத்'தின் பேரால் விளக்கிக் காட்டப்பட்டிருக் கின்றன. மாலை நேரத்து இயற்கையழகில் மயங்கியிருந்த பாரதி தனது அநுபவம் முழுவதையும் திரட்டி, அவற்றில் ஏற்பட்ட சந்தேகங்களைக் கூட்டி, அநுபவத்தினால் உதித்த உண்மை ஞானத்தினால் அச்சந்தேகங்கள் நீக்கப்பெற்ற முடிவுகளே அவன் கனவிடை வினாவிய வினாக்களும் பெற்ற விடைகளுமாம். சொல்லொணா எழில் வாய்ந்த இயற்கைப் புவனம்-நம் கண்ணுக்கு வெறுமனே கல்லும் கட்டையுமாகத் தோன்றும் இந்த வெளியுலகம்தான்- இவ்வரிய அநுபவம் அனைத்தையும் ஊட்டி அவனைத் தெளிவித்ததாதலால், அவன் கண்களுக்கு இயற்கையன்னை ஒரு பேரெழில் நங்கையாக, அழகுத் தெய்வமாக நின்று சந்தேகந் தீர்த்தாளென்றுபடுதல் பொருத்தமான கற்பனையே. பாரதி கண்ட அழகுத் தெய்வத்தையும், விதியையும் மதியையும் பற்றி அத்தெய்வம் சந்தேகம் தெளிவித்ததையும் பற்றி அவன் எழுதிய கவிதைப் பகுதியை இங்கே தருதும்:

**அழகுத் தெய்வம்**

*''மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்*
*வயது பதினாறிருக்கும் இளவயது மங்கை*
*பொங்கிவரும் இளநிலவு போன்ற ஒளிமுகம்*
*புன்னகையின் புதுநிலவும் போன்ற வருதோற்றம்.*

*துங்கமணி மின்போலும் வடிவந்தாள் வந்து*
*தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்*
*அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ அடடா*
*அழகென்னும் தெய்வம் அதுவென்று கண்டேன்!''*

''காலத்தின் விதிமதியைக் கடந்திடுமோ என்றேன்
காலமே மதியினுக்கோர் கருவியா மென்றாள்.
ஞாலத்தில் விரும்பியது நண்ணுமோ என்றேன்
நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலா மென்றாள்.
ஏலத்தில் விடுவதுண்டோ எண்ணத்தை என்றேன்
எண்ணினாலெண்ணியது நண்ணுங்கா ணென்றாள்
மூலத்தைச் சொல்லவோ வேண்டாமோ என்றேன்
முகத்திலருள் காட்டினாள் மோகமது தீர்ந்தேன்.''

இப்படியாக கற்பனைச் செய்யுட்களில் எல்லாம் அரிய மாணிக்கங்களைப் பாரதி புனைந்துள்ளமை ஊன்றிக் கருதுவோருக்குப் புலனாகாமலிரா.

# பாரதியின் திறமை என்ன?

நாவற்குழியூர் நடராஜன்

*கட்டுரை ஆசிரியர்; நவயுக நக்கீரனாரோ என்று ஐயுறும் வண்ணம் விஷயத்தின் உள்ளும் புறமும் ஆராய்கிறார் - ப - ர்*

சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றித்தான் சொல்லுகிறேன்: இன்று தமிழ்நாட்டில் - இல்லை, தமிழர் வாழும் ஒவ்வொரு நாட்டிலும் - ஒவ்வொரு தமிழருக்கும் அறிமுகமானவர் அவர். அவரை இன்று போற்றாதாரில்லை; புகழாதார் இல்லை. எங்கு பார்த்தாலும் எத்திசையை நோக்கினாலும் பாரதி பாரதி என்று பிரமாதப்படுத்துகிறார்கள். ஆனால் அவ்வளவாக பிரமாதப்படுத்துவதற்குப் பாரதியில் என்ன இருக்கிறது என்று சிலர் கேட்காமலுமில்லை. ஆம், நானுந்தான் கேட்கிறேன், பாரதியில் அப்படிப் பிரமாதமான திறமை என்ன இருக்கிறது?

அவன் சுதந்திரப் பாடல்கள் பாடியிருக்கிறான். அதுதானே! ஆம், அவனது சுதந்திரப் பாடல்களுக்காகத்தான் அவனை இதுவரை நாடெங்கும் கொண்டாடினார்கள்; கொண்டாடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட அவனது சுதந்திரப் பாடல்கள்தான் என்ன திறமையைக் கொண்டிருக்கின்றன? ''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று சொல்லுகிறான். தமிழ்நாடு என்று சொல்லும் போது ஒரு தமிழ் மகனுக்கு அது எவ்வளவாக இனிக்கிறதோ, அவ்வளவாகத்தான் இங்கிலாந்து என்று சொல்லும் போது ஒரு ஆங்கிலேயனுக்குச் சுவைக்கிறது. ஆகவே, செந்தமிழ் நாடு என்று சொல்லும் போது தேனைப்பருகுவது போலச் சுவை பிறக்கிறது என்று சொன்னால் அது தமிழ் நாட்டினையோ அன்றித் தமிழினையோ எவ்வாறு சிறப்பித்ததாக முடிகிறது? எவ்விதத்திலு மில்லை. ''எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'' எங்கள் தந்தையர் நாடென்று நாம் சொல்லும் போது, எங்களுக்கு ஒரு உற்சாகம் உண்டாகலாம். அப்படித்தானே தங்கள் தந்தையர் நாடென்று சொல்லும்போது பிறநாட்டவர்களுக்கும் உற்சாகம் பிறக்கிறது! அப்படியானால், 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலேயே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என்று பாரதியார் சொல்வதில் தமிழ் நாட்டுக்கு என்ன சிறப்பிருக்கிறது? எதையுங் காணோமே?

''வேதம் நிறைந்த தமிழ்நாடு - உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு''

என்று சொல்லுகிறார். அடுத்தபடியாக, வேதம் நிறைந்த தன்மையும், வீரம் செறிந்த தன்மையும் ஒரு நாட்டை உயர்வாகச் சொல்வதற்குச் சாதனங்களாகுமானால், தமிழ்நாட்டு வேதங்களோடு சரிநிகர் சமானமாக நிற்கக்கூடிய பிற நாட்டு வேதங்கள் எத்தனையோ இருக்கின்றனவே! தமிழ்நாட்டு வீரத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக வீரம் படைத்த கிரேக்க நாடு போன்ற நாடுகள் பற்பல இருக்கின்றனவே! ஆகவே, தமிழ்நாடு வேதம் நிறைந்தது என்றும், வீரம் செறிந்தது என்றும் வெறுமனே கூறிவிட்டால், தமிழ்நாடு பிறநாடுகள் எல்லாவற்றையும் விடச் சிறந்தது என்று கொள்வதற்குச் சாதகமாகுமா?

தமிழ்நாட்டின் சிறப்பை இன்னும் சொல்லுகிறார். ''நல்ல காதல் புரியும் அரம்பையர் போல் இளங்கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு என்று இளங்கன்னியர்கள் - அதுவும் காதல் புரியத் தெரிந்த கன்னியர்கள் நிறைந்திருக்கிறார்களாம் தமிழ்நாட்டில். அதுதான் தமிழ் நாட்டுக்குச் சிறப்போ? இளங்கன்னியர்கள்- அரம்பையர் போல் அழகான இளங் கன்னியர்கள் எந்த நாட்டில் இல்லை, எந்த நாட்டுக் கன்னியர்களுக்குத்தான் காதல் புரியத் தெரியாது? எங்கெங்கும் - ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் - அழகான கன்னியர்கள் இருக்கவே இருக்கிறார்கள். அவர்களும் காதல் புரிய நன்றாகத் தெரிந்துதான் இருக்கிறார்கள். காதல் புரியத் தெரியாத கன்னியர்களும் இருக்க முடியுமா எங்காவது? முடியாது. எனவே, காதல் புரியும் அரம்பையர் போல் இளங்கன்னியர் சூழ்ந்த நாடு என்று சொல்லுவதால் தமிழ்நாடு பெருமைப்படுவதற்கு இடமிருக்கிறதா? இல்லையே!

''முத்தமிழ் மாமுனி நீள் வரையே - நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ் நாடு - செல்வம்
எந்தனையுண்டு புவி மீதே - அவை
யாவும் படைத்த தமிழ்நாடு''

என்கிறார்.

மேலும், ''முத்தமிழ் மா முனி''யாகக் கருதப்படும் அகஸ்திய முனிவரது சரித்திரமே ஒரு வெறும் கட்டுக்கதை அன்றி வேறில்லை என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஆதலால், அகஸ்திய முனிவர் பொதிய

மலையிலிருந்து தமிழ்நாட்டைக் காத்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லி நாம் பெருமைப்படுவதற்கும் இல்லை. பூமியில் உள்ள செல்வங்கள் அத்தனையும் தமிழ்நாடு கொண்டிருக்கிறது என்று சொல்லும் போது அதை ஒரு உபசார வார்த்தையாகக் கொள்ளலாமே தவிர, முற்றிலும் உண்மையென்று கருதிவிட முடிகிறதா?

*''சிங்களம் புட்பகம் சாவகம் - ஆகிய*
*தீவு பலவினும் சென்றேகி - அங்கு*
*தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று*
*சால்புறக் கண்டவர் தாய் நாடு''*

சிங்களவர் தீவிலும் - அதாவது இந்த இலங்கையிலும், ஜாவா தேசத்திலும், புட்பக நாட்டிலும் படையெடுத்துச் சென்று அவர்களையெல்லாம் வென்று, அடிமை கொண்டு, தங்கள் கொடிகளை நாட்டி ஆதிக்கம் செய்தவர்கள் நாடல்லவா இந்தத் தமிழ்நாடு என்று தமிழர்களுக்குப் புகழ் கிளப்புகிறான் பாரதி. புகழ்தானா கிளப்புகின்றான்? ஒரு கணம் உற்றுப் பாருங்கள். மேல்நாட்டாரின் ஆதிக்கத்துக்குட்பட்டு, அடிமைத் தளையிற் சிக்குண்டு, அல்லோலகல்லோலப்பட்டுத் துயருற்ற பாரத தேசத்தின் நிலையைக்கண்டு, சகிக்கமாட்டாமல் ஆத்திரங்கொண்டு, வீரக்கனல் பிறக்கும் சுதந்திரப் பாடல்களைப் பாடிய பாரதி, தான் எதற்காக அந்தப் பாடல்களைப் பாடினானோ- எந்தக் கொள்கையைப் பரப்புவதற்காகவும் எந்தக் கொள்கையை எதிர்ப்பதற்காகவும் தன் சுதந்திர கீதங்களை ஆக்கினானோ அதற்கெல்லாம் முற்றும் முரணாக அல்லவா இங்கே சொல்லியிருக்கிறான்? பிற நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்திய தமிழ்நாடு என்றல்லவா பெருமைப்படுகிறார். இவ்விடத்தில் பொருளளவில் - கொள்கையளவில் அவன் பிழைப்பட்டு விடுகிறானில்லையா? ஆம், பிழைப்பட்டு விடுகிறான்.

இது போலவே, பாரதியின் ஏனைய சுதந்திர கீதங்களையும் எடுத்துப் பார்ப்போமேயானால், அங்கங்கேயெல்லாம் என்ன பொருட்சிறப்பையும் காண்கின்றோமில்லை. ஆனாலும் பாரதியின் கீதங்கள் கவர்ச்சியளிக்க வில்லையா? அளிக்கத்தான் செய்கின்றன. பாரதியாரின் பாடல்களைப் போல பொதுமக்களின் உள்ளங்களைத் தொட்ட பாடல்கள் இல்லையென்றே சொல்லிடலாம். அப்படியானால் அந்தப் பாரதியாரின் பாடல்களில் உள்ள கவர்ச்சிதான் என்ன?

ஒரு புலவன் தான் கொண்ட உணர்ச்சியைத் தன் கவிதை மூலம் மற்றவர்களுக்கும் ஏற்படுத்துவானேயானால் அவன் கவிதைகள் அவன் பெற்ற உணர்ச்சியை அப்படியே பிறரிடத்து பிரதிபலிக்கச் செய்யுமேயானால் அவன்தான் சிறந்த கவிஞன்- மகாகவி, அவன் கவிதைகள்தான் சிறந்த கவிதைகள் - உயிர்க் கவிதைகள். பாரதியார் தனது சுதந்திரப் பாடல்கள் மூலம் மக்களிடையே சுதந்திர உணர்ச்சியைத் தூண்டத்தான் முனைகிறார்; தான் கொண்ட சுதந்திர ஆவலைத் தமிழர்களுக்கும் ஏற்படுத்திவிடத்தான் தவிக்கிறார். அவரது சுதந்திரப் பாடல்களை நாம் படிக்கும் பொழுதும் கேட்கும் பொழுதும் எம்மை அறியாமலே எமக்கு ஒரு வீர உணர்ச்சி பிடிக்கத்தான் செய்கிறது; எங்கள் இரத்தம் துடிக்கத்தான் செய்கிறது. அதுதான் உயிர்க் கவிதையின் - உண்மைக் கவிஞனின் - சிறப்பு. பாரதி தனது சுதந்திரப் பாடல்கள் மூலம் எந்த உணர்ச்சியைப் பிறப்பிக்கக் கருதினார், அதை அவை தப்பாமற் செய்கின்றன. அதிலேதான் பாரதியின் திறமை தங்கியிருக்கிறது. வீர உணர்ச்சியைப் பிறப்பிப்பதற்கென்று அவன் ஆக்கிய பாடல்களில் வேறு சுவை எதையுமே அவன் புகுத்தி விடவில்லை. அதனால்தான் அப்பாடல்கள் ஒரே முகமாக- ஒரே குறிக்கோளுடன் வீர உணர்ச்சி ஒன்றையுமே தட்டியெழுப்பி நிற்கின்றன. அதுதான் பாரதியின் சுதந்திரப் பாடல்களில் உள்ள கவர்ச்சி; அதுதான் பாரதியின் திறமை. தன் சுதந்திரப் பாடல்களில், பொருட் சுவைகளையும், வேறு உணர்ச்சி வகை களையும் புகுத்தியிருப்பானேயானால், அப் பாடல்கள், வேண்டிய வீர உணர்ச்சியைப் பிறப்பித்திருக்கக் கூடுமா என்பது கொஞ்சம் சந்தேகந்தான்.

பாரதியார் பெண்கள் விடுதலை, பெண்கள் முன்னேற்றம் என்பன போன்ற பல முன்னேற்றக் கொள்கைகளைப் பரப்பியிருக்கிறார் - பாடியிருக்கிறார். அதற்காகவும் பாரதியாரைப் புகழுகிறார்கள்; போற்று கிறார்கள். பெண்கள் முன்னேற்றங் குறித்து பெண்களின் உயர்வைப் பற்றி பாரதிதானா முதலாகச் சொல்லிவிட்டான்? பாரதிக்கு முன் வாழ்ந்த ராஜாராம் மோஹன்ராய் சொல்லியிருக்கிறாரே. அதைப்பற்றி அழகாக ராஜாராம் மோஹன்ராய்தான் முதன் முதலாகச் சொல்லி விட்டாரா? கம்பன் நூலில் காணுகிறோமே அந்தக் கொள்கையை! கம்பன் தானா? இல்லை. வால்மீகி, பெண்ணின் உயர்வைப் பற்றியும் பெருமையைப் பற்றியும் பரக்கப் பாடியிருக்கிறாரே! அதற்கு முன் ''ரிக்'' வேதகாலத்தில், பெண்ணைப் பெருமைப்படுத்தினார்கள் என்று அக்கால சமூக சரித்திரம் தெரிவிக்கிறதே! இன்னும் அதற்கு முன்னுள்ள மொஹெஞ்செதாரோ

காலத்தில் பெண்களும் ஆண்களும் சரிநிகர் சமமாக வாழ்ந்தார்கள் என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கிறார்களே! இப்படி யெல்லாமிருக்க பாரதிதான் ஏதோ முன்னேற்றக் கொள்கையைப் புதினமாகச் சொல்லி விட்டான் என்று அவனைப் போற்றுவதில் அர்த்த மிருக்கிறதா? இல்லாமலில்லை. எத்தனையோ பேர் எத்தனையோ மேதாவிகள் எடுத்துச் சொல்லி முடித்த முன்னேற்றக் கொள்கையைத்தான் பாரதியும் சொன்னான். ஆனால் மற்றவர்கள் அதையெல்லாம் மறந்து போயிருந்த காலத்தில் அவன் சொன்னான். தெரிந்தவர்கள் அதை எடுத்துச் சொல்லத் தயங்கிய காலத்தில் அவன் தயக்கமின்றிச் சொன்னான். அது தான் அவன் சிறப்பு; அவன் திறமை.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி, பாரத தேசம் முழுவதிலுமே, கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில், இந்த முன்னேற்றக் கொள்கைகள் பரவியிருந்தன. பின்னர், சமண சமயம் நாடெங்கும் ஓங்கியபோது அந்தக் கொள்கைகள் தளர்வுற்றன. இன்பத்தை வெறுத்தார்கள் சமணர்கள். இன்பந்தரும் ஒவ்வொரு பொருளையும் வெறுக்கும்படி கற்பித்தார்கள் அவர்கள். அவர்களது அத்தகைய செயல்களால் சமூகத்தில் பெண்கள் நிலை தாழ்வுற்றது; பாழ்பட்டது. பல காலமாகப் பாழ்பட்டுக் கொண்டே வந்தது. அப்பொழுது அதையெல்லாம் எடுத்துச் சொல்லவோ, மறுத்துப் பேசவோ எவரும் துணியவில்லை. அந்த நிலைமையில் பாரதி துணிந்தான். துணிந்து அழகாக எடுத்துச் சொன்னான்; சொல்லி "பெண்ணுக்கு ஞானத்தை மூட்டினான். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தி எரித்தான்"; அது அவன் திறமையல்லவா?

பாரதி எளிய நடையைக் கையாண்டான். இலகுவான தமிழில் பேசினான். இனிமையான சந்தப் பாடல்களில் விஷயத்தைச் சொன்னான். அது அவன் தனிச்சிறப்பு என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள், பாரதி பக்தர்கள். பாரதியாருக்கு முன்னிருந்த எத்தனையோ கவிஞர்கள் எளிய நடையைக் கையாண்டிருக்கிறார்கள். இனிய சந்தப் பாடல்கள் பாடியிருக் கிறார்கள். இலகுவான தமிழ்ப் பதங்களை உபயோகித்திருக்கிறார்கள். நந்தனார் கீர்த்தனை எவ்வளவு இனிய நடையில், இலகுவான சந்தப் பாடல்களால் ஆக்கப்பட்டிருக்கிறது! அரிச்சந்திர நாடகம் என்ன, அல்லியரசாணிமாலை என்ன, பவளக்கொடி மாலை என்ன, எல்லாம் எளிமைக்கும் இனிமைக்கும் எடுத்துக்காட்டானவைதானே. இது இவ்வாறாக, பாரதி மட்டுந்தான் எளிமைக்கும் இனிமைக்கும் தனிச்சிறப்புப் பெறுவது எதற்காக?

'புலவன் புலவனாகப் பிறக்கிறான். அவன் புலவனாக ஆக்கப்படு கிறான் அல்ல', என்று அநேகம் பேர் கருதுகிறார்கள். புலவன் புலவனாகவே பிறக்கிறான் என்றால் சித்திரக் கலைஞனும் சித்திரக் கலைஞனாகவே பிறக்கிறான். இசை வல்லுநரும் இசை வல்லுநராகவே பிறக்கிறார். அவ்வவ்வாறு ஆக்கப்படுகிறார்களில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் சங்கீதப் புலமையும் சித்திரத் திறமையும் ஆக்கப்பட்டுத்தான் உண்டாவதை நாம் காணுகிறோம். அதுபோலவே, புலவனும் ஆக்கப் படுகிறானேயன்றி வேறில்லை. சூழ்நிலையே ஒவ்வொருவரையும் அவ்வவர் கோலத்தில் ஆக்கி வைக்கிறது. அவ்விதமே புலவனையும் சூழ்நிலைதான் ஆக்குகிறது. புலவன் புலவனாகவே பிறக்கிறான் என்பது புலமையைக் கண்டு அஞ்சி ஒடுங்குபவர்களது வார்த்தை. பாரதியையும் சூழ்நிலைதான் புலவனாக்கிற்று. அவன் அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற அச்சுற்றாடலுக்கு வேண்டிய புலவனானான். அதனால், அவன் கையாண்ட எளிய நடையும் இனிய சந்தங்களும் சிறப்பெய்தின.

பாரதி பாடல்களில் பொருட் சிறப்பும் இல்லாமலில்லை. அதை யெல்லாம் அவனது இலக்கியப் பாடல்களாய் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயிற் பாட்டு ஆகியவற்றிலே நிறையப் பெய்திருக்கிறான்.

பாரதியார் கவிதை மட்டுமல்ல, வசனங் கூடத்தான் எழுதியிருக்கிறார். ''வசன நடையிலே ஒரு புதுமையை ஆக்கி வைத்தவர் அவர். தமிழின் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் அவர்'' என்றெல்லாம் சொல்கிறார்கள். அவரைப் பின்பற்றித்தான் இன்றைய மறுமலர்ச்சி எழுத்தாளர்களும் கவிஞர்களும் எழுதுகிறார்கள்; பாடுகிறார்கள். ஏன் அது தவறாகாது. இந்த மறுமலர்ச்சி எழுத்தாளர்களை அநேகர் கண்டிருக்கிறார்கள். எழுவாய், பயனிலை இல்லாமல் வசனங்களை ஆக்கிவிடுகிறார்கள் என்று பண்டிதர்கள் கண்டிக்கிறார்கள். அப்படியானால் அந்தக் கண்டனங்களுக்கெல்லாம் முதலில் ஆளாகவேண்டியவன் பாரதி.

'ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல்', 'உடனே பாட்டு' இவை பாரதியின் வசனங்கள். இங்கேயும் இவைபோன்ற பயனிலைகளைக் காணோம். ஆனால், பாரதி கண்டிக்கப்பட வேண்டியவனா அதற்காக? ''நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றங் குற்றந்தான்'' என்று சாதிக்கலாம். ஆனால், அவனது வார்த்தைகளில் உயிர் துடிக்கிறதே! உணர்ச்சி பிறக்கிறதே! அதைவிட வேறென்ன வேண்டியிருக்கிறது? அது அவன் திறமை. அவன் புலவன்.

# பரிதியும் பார்வேந்தனும்

வி. விசுவலிங்கம்

மக்களைத் தொழிலில் விடுவதாற் சூரியன் என்றும், விரிந்த கிரணங்கள் உடைமையால் பாற்கரன் என்றும், இருளை அகற்றலால் இரவி என்றும் பல பெயர்களைப் பெற்று, உலகிற் கண்கண்ட தெய்வமாய்க் காட்சியளிப்பவன் கதிரவன். வானமழை பொழிவதும், மக்கள் வாழ்வதும், தானம், தவம் முதலியன தழைத்தலும் அவனாலன்றோ? இவ்வித சிறப்பு வாய்ந்த பரிதியிலும் மிக்கவராய்ப் பண்டைக் காலத் தமிழ் மன்னர் பலர் வாழ்ந்தனர்.

சேரமான் கடுங்கோ வாழியாதன் என்பவன் ஒரு தமிழ் மன்னன். இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்கட்கு முன் தமிழகத்தில் வீறுற்று விளங்கினான். 'தோன்றிற் புகழோடு தோன்றுக' எனும் நாயனார் வாக்கை நன்கு உணர்ந்திருந்தான். குறுகிய எண்ணங்கட்கு இடங்கொடாது விரிந்த மனப்பான்மையும், உயர்ந்த இலட்சியங்களுங்கொண்டு வாழ்ந்தான். வாழ்க்கையில் ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் தம்மால் முன்னேற முடியுமோ, அவ்வளவு தூரம் பிரயாசை எடுத்தல் வேண்டுமென்பதை அவன் மூலம் குடிமக்கள் கண்டனர். மேலும் மேலும் அரும் பெருஞ் செயல்கள் செய்யும் ஆற்றல்கொண்ட அவனை உலகத்து அரசர் பலரும் வழிபட்டு அடங்கி, நடந்தனர். அவன் நம்மவரைப் போல், குறிப்பிட்ட ஒரு கிராமத்துள்ளோ, தேசத்துள்ளோ இருந்து ஒடுங்கிய வாழ்க்கை நடாத்த எண்ணவில்லை. பிற இடங்களில் மடமை, வறுமை, துன்பம் முதலியன இருந்தால், நமக்கு என்ன என்று கிணற்றுத்தவளையாய் வாழவுமில்லை. பிறரால் இன்னற்படும் நாடுகளில் தர்மயுத்தஞ்செய்து பகைவரை வென்று அவை எங்குந் தன் ஆட்சியைச் செலுத்தினான். எட்டுத்திக்கும் வெற்றி முரசு கொட்டி ஜயத்தம்பம் நட்டான். பொருளைச் சம்பாதிக்கக் கற்று, சீரிய வழியில் அதைச் செலவு செய்யத் தெரியாது கட்டிவைத்திருப்பவரைப் போல் அவன் கையிறுக்கமாய் வாழவுமில்லை. அரைப் பட்டினியாய் வாழும் ஏழைகளுக்குக் கொடாது, தான் மாத்திரம் விலாப்புடைக்க உண்டு அஜீரணத்துக்கு மருந்து தேடி அலையவுமில்லை. மேகத்துக்கு மழை பெய்யுந்தன்மை எவ்வாறு இயற்கையோ, அதே போல் அவனுக்குக் கொடைக் குணமும் இயல்பாய் அமைந்திருந்தது.

மறைந்திருந்து கோழைத்தனமாய்ப் பகைவரை வெல்லக் கருதாது எதிர்நின்று பொருதும் வீரமுடையவன்.

இத்தகைய அருந்திறல் வாய்ந்த மன்னனையும் வானவெளியில் நின்று உலகினைப் புரக்கும் பரிதியையும் கபிலர் எனும் புலவர் பெருமான், தமது உள்ளத்தராசில் எடைபோட்டுப் பார்க்கிறார். முடிவில் இத்தமிழ் மன்னனுக்குச் சூரியன் ஒப்பாகான் எனக் காண்கின்றார். கண்டு, சூரியனையே முன்னிலைப்படுத்தித் தம்முடிவை உலகிற்குக் காட்டி விடுகிறார்:

ஒளிமிகுந்து செல்லும் சூரிய மண்டலமே! எம் மன்னனை நீ எவ்வாறு ஒப்பாய்? நீயோ பகற்காலம் மாத்திரந்தான் எனக்கு உரியதென ஒரு வரையறை கொண்டு விளங்குகின்றாய். பின் மாலைக் காலத்தில் சந்திரன் வரவைக் கண்டு புறமுதுகிட்டோடி மறைந்துவிடுகின்றாய். அன்றியும், உறுதியான நிலையில் நில்லாது, இடம்பெயர்ந்து மாறி மாறி வருகின்றாய். மாலை நேரத்தில் மலைச் சந்துகளில் உன் கதிர்களைச் சுருட்டிக் கொண்டு மறைந்து ஒழித்துக் கொள்கிறாய். எவ்வளவுதான் கம்பீரமாக அகண்ட வான வீதியில் நீ விளங்கினும் என்ன? பகற்காலம் மாத்திரந்தானே உனது கதிர்களைப் பரப்புகின்றாய், இராக்காலத்தில் இல்லையே. இத்தனை காரணங்களால் எமது சேரலாத மன்னனுக்கு நீ எவ்வாறு ஒப்பாக முடியும். ஒரு நாளும் முடியாது. இதுவே புலவர் மனத் தீர்ப்பு.

> *''வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்*
> *போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறா அது*
> *இடஞ்சிறி தென்னும் ஊக்கந் துரப்ப*
> *ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்*
> *கடந்து அடுதானைச் சேரலாதனை*
> *யாங்கனம் ஒத்தியோ வீங்கு செலல் மண்டிலம்?*
> *பொழுதென வரைதி; புறங்கொடுத்து இறத்தி;*
> *மாறிவருதி; மலைமறைந் தொழித்தி*
> *அகலிரு விசும்பி னானும்,*
> *பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே''* - புறநானூறு

இத்தகைய ஆற்றல் படைத்த குலமன்றோ நம் தமிழ்க்குலம். இவற்றை யறிந்து நாம் பெருமிதங் கொள்வதால் மாத்திரம் திருப்திப்படலாமா? (கட்டுரையின் பிற்பகுதி கிடைக்கப்பெறவில்லை).

# தலைவனைத் தொடர்வது தருமந்தானே

மயிலன்

குறுநடை நடந்தும், குதலை மொழி பேசியும், உள்ளத்தைக் கவர்ந்த சின்னக் குழந்தை செவிலித் தாயினால் சீரும், சிறப்புமாக வளர்க்கப்பட்டு வந்தாள். சிறுவயதிருந்தே செவிலித்தாயின் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணமாகத் திகழ்ந்தாள். என்றும் குழந்தையாக இருக்க முடியுமா? பருவ பக்குவமும் அடைந்து விட்டாள்.

கூம்பியிருக்கும் போதே அழகுடன் பொழியும் அம்புஜம் மலர்ந்தும் விட்டால் கேட்க வேண்டுமா? அத்தனை அழகுகளுடன் மிளிர்ந்தாள் அரிவை. அவளின் இயற்கையான அழகுக்கும், பூரணமடைந்து பொலிந்த அங்கங்கள் வேறும் புத்தெழிலைக் கொடுத்தன. ஆனால் ஒன்று, பழைய படி தனியாக எங்கும் செல்லவோ, விளையாடவோ இனிமேலும் அவளால் முடியாத காரியமாகப் போய் விட்டது. நாளின் பெரும் பொழுது வீட்டிலேயே கழிய வேண்டி ஏற்பட்டது. ''இற்செறிப்பு'' என்ற நிலையை அவள் அடைந்திருந்தாள்.

மங்கைப் பருவமடைந்த பின்னும் அவளால் தனியாக வாழ முடியுமா? குழந்தை போல் விளையாட முடியுமா? செவிலித்தாயிடந்தான் ஏதும் இன்பத்தைக் காணமுடியுமா? முல்லைக்கொடி மற்றுமோர் முல்லைக் கொடியைப் பற்றி வளர்தல் எங்ஙனம்? தனக்கேற்ற கொழுகொம்பை, தக்க துணையை நாடுவது இயற்கைதானே. விதி வசத்தினால் யாரோ ஒருவன் இவளைக் கண்டு அலையத் தொடங்கி விட்டான். தன்னையே பொருளாக மதித்துவரும் தலைவனை, அவள் மனமும் காந்தம் போல் நாடியது. அவனோ காடு, மலை, நதி முதலிய எத்தனையோ இயற்கை அரண்களைத் தாண்டி வந்து சேர வேண்டும். அவளும் செவிலித்தாய், பெற்ற தாய், தோழிகள், ஊரார் ஆகிய இத்தனை காவலாளர் கண்களிலும் மண்ணைத்தூவி மறைவாக வந்து அவனை அடைய வேண்டும். இலகுவான காரியமா? இரவில் என்றால் மேலதிகமாக காவலாளர், நிலா, நாய் முதலிய பகைகளை எதிர்த்து வெற்றி காண வேண்டும்.

இப்படியாக ஒரு நாள், இரு நாள் என்று சில நாட்களும் சென்று விட்டன. ஊரிலும் சில அடாத பேச்சுகள் எழத்தொடங்கிவிட்டன.

ஒன்றைப் பத்தாகத் திரிக்கும் சமூகத்திடமிருந்து தப்புவது சாதாரணமான காரியமா? மறைவாக விசயத்தை மூடிக்கொண்டிருப்பதும் அடாத காரியம். பருவத்தே பயிர் செய்ய அறியாத பெற்றாரும் ஒன்றும் யோசிப்பதாகத் தோன்றவில்லை. அமைதியாக ஆராய்ந்தாள். பலமுறை சிந்தித்தாள். முடிவில் துணிந்தாள். துணிந்தபடி செய்துவிட்டாள்.

அன்று காலை வழக்கம் போல் செவிலித்தாய் மங்கையைத் துயி லெழுப்ப வந்திருந்தாள். கதவு திறக்கப்பட்டிருந்தது. உள்ளே அவளில்லை. கூப்பிட்டாள், பதிலில்லை. விளையாடுமிடத்திற்கு ஓடினாள் இல்லை. நீராடுமிடத்திற்கு ஓடினாள் இல்லை. மனம் பயத்தினால் படாதபாடு அத்தனையும் படத் தொடங்கியது. எங்கெங்கு தேடமுடியுமோ அங்கெல்லாம் தேடினாள் காணவில்லை. ஒன்றுந்தெரியாத சிறு குழந்தை யல்லவா? எங்கே போயிருப்பாள். ஒன்றுந் தோன்றுதில்லையே ''யாரோ ஒருவரோடு நமது மகள் நேசம் பாராட்டுகின்றாள் என்று ஒரு கதையும் அடிபட்டதே. ஒரு வேளை அது உண்மையாயிருக்குமோ? அவனுடன்தான் சென்றுவிட்டாளோ? ''கற்புக் கடன்'' தெரியாத நமது மகளா! இவ்விதம் செய்யக்கூடியவள். தாய் கோபிக்கப் போகிறாளே! என்ன செய்வேன்! இனியும் இங்கிருக்க முடியாது. மகளையும் அந்தத் தலைவனையும் கண்டு மீள்வேன்'' என்று எண்ணியவளாய் வழி வழியே ஓடத் தொடங்கினாள்.

காடும், நதியும், மலையும் கடந்துவிட்டாள். இனிக் காண்பது பாலை நிலம். கமண்டலத்தை உறியில் தூக்கிய ஒரு பிராமணர் வருகின்றார். தோளில் ''முக்கோல்'' இருக்கின்றது. வெயிலைத் தடுப்பதற்கென்று குடையும் பிடித்திருக்கிறார். அவரைக் கண்டதும் செவிலித்தாயின் மனம் சற்று நிம்மதி அடைந்தது. அவரை அணுகி ஐயா, வேதியரே! எப்போதும் இவ்வழியே பிரயாணம் செய்பவர்கள்தானே அப்படியானால் எனது மகள் ஒருத்தி யாரோ ஒருத்தியின் மகனோடு கூடிப் போவதைக் கண்டீர்களா? கண்டால் சொல்லுங்கள், உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு என்றாள். வேதியன் அநாயாசமான தொனியுடன் காணாமல் என்னம்மா; வழியிலே கண்டுகொண்டுதான் வருகிறோம். தனக்குரிய தலைவனை வழிபட்டு, அவனைத் தொடர்ந்து பின்போகும் அந்தக் கற்பாஸ்திரி உங்கள் பிள்ளைதானா? அதற்காக ஏன் கவலைப்படுகிறீர்கள் என்றான். செவிலித்தாய்க்கு எப்படி இருக்கும். கவி இக்காட்சியை கலித்தொகையில்:

*''எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்*
*உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்*
*நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்*
*குறிப்பேவல் செயன்மாலைக் கொளை நடை - அந்தணீர்*
*வெவ்விடைச் செலன் மாலை யொழுக்கத்தீர் - இவ்விடை*
*என்மகள் ஒருத்தியும் பிறன்மக னொருவனும்*
*தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய*
*ரன்னாரிருவரைக் காணீரோ பெரும!*
*காணேமல்லேங் கண்டனங் கடத்திடை*
*யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய*
*மாணிழை வடவர றாயிர் நீர் போறீர்''*

என்று வர்ணிக்கின்றார்.

''என்ன ஐயா! பிராமணரே அப்படிக் கூறுகிறீர்கள். சமூகம் நாளைக்கு எங்களைத் திட்டப் போகிறதே, இல்லை அவனைத்தான் விடப் போகிறதா? அருமையாக வளர்த்த எங்கள் இளங்குழந்தையல்லவா? யாரோ ஒருவனோடு சென்று விட்டதென்றால் மனம் பொறுத்திருக்குமா? அவளை எப்படிப் பிரிந்திருப்போம். பாலூட்டி வளர்த்த கிளி பறந்த மாதிரியாகவல்லவோ இருக்கிறது'' என்று உரையாடினாள்.

வேதியர் இவளின் அறியாமையையிட்டு மனத்துட் சிரித்துக்கொண்ட வராய் ''அம்மா! நான் சொல்பவைகளைச் சற்று அமைதியாகக் கேளுங்கள். அப்புறம் நீங்களாகவே செய்யவேண்டியதை யோசித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறத் தொடங்கினார்.

''மலைகளிலே அதிகமான சந்தன மரங்கள் உண்டு. அந்த மரங் களினால் மலைக்கு ஏதாவது பிரயோசனம் உண்டா? சந்தனத்தை அரைத்துப் பூசுகிறதா அல்லது வேறேதும் வாசனையைப் பெறுகிறதா? இல்லையே. அந்தச் சந்தனத்தை, அரைத்துப் பூசுபவர்கட்குத்தான் அதனாலே பிரயோசனமுண்டு. அதுபோலவேதான் உமது மகளும் உன் வீட்டிலே பிறந்து வளர்ந்தாலும் சந்தனம் பூசுவோர்க்கு உரிமையாவது போல, அவளை அனுபவிக்கக் கூடிய தலைவனுக்கே உரியவளாவாள்.

அது மாத்திரமின்றி அழகானதும், பிரகாசமானதுமான வெள்ளிய முத்துக்களெல்லாம் எங்கே பிறக்கின்றன. கடலிலேயல்லவா? அந்தக் கடலுக்கு இந்த முத்துக்களால் ஏதும் பிரயோசனம் உண்டாகின்றதா? போட்டு அழகு பார்க்கிறதா? இல்லையே. அம்முத்தை அணிந்து அழகு

பார்க்கக்கூடிய மனிதருக்குத்தான் பிரயோசனப்படுகிறது. அதுபோல வேதான் உமது மகளும் கடலில் பிறந்த முத்து எவ்வாறு அணிபவர்க்கு உரிமையாகிறதோ அதுபோல அவளை அணியக்கூடிய (பெறக்கூடிய) தலைவனுக்கு உரிமையானவள் ஆவாள்.

இன்னும் கேள், பல நரம்புகளையுடைய சகோட யாழ், மகா யாழ் என்பனவெல்லாம் இருக்கிறதல்லவா, எவ்வளவு இனிமையான ஓசையை எழுப்புகின்றன. உண்மைதான். அந்த இனிமையான ஓசையைக் கேட்டு ரசிக்கும் பேறு அந்த யாழ்கட்கு உண்டா? இல்லை, ராகத்தைப் பிறப்பிக்கக் கூடிய சக்திதான் உண்டா? கிடையாது. அந்த நரம்புகளைத் தடவிப் பாடுவோனுக்குத்தானே இன்பத்தைக் கொடுக்கும். அதுபோலவேதான் நமது மகளும், யாழிற் பிறந்த இசை போல், அவள் உங்கள் வீட்டில் பிறந்தாலும் இசையால் யாழுக்குப் பிரயோசனம் இல்லாதிருப்பது போல் உங்களுக்கும் அவள் பிரயோசனம் இல்லாதவளாக இருக்கிறாள். இசை, அதை நுகர்பவனுக்கு உரியதாமாறு போல அவளும் அவளை நுகரும் தலைவனுக்கு உரியவளாகப் போகிறாள். இதில் விபரீதம் ஒன்றுமில்லை தாயே.

வீணே கற்பினையுடைய அந்தப் பெண்ணுக்காக மனம் வருந்தாதே. அவள் தந்தை தாயாரிலும் சிறந்த கணவனைப் பின் தொடர்ந்து போயிருக்கிறாள். அதுதான் உண்மையான கற்பு. தலையான தருமமும் அதுதான். மறுமையில் இவ்விருவரும் சுவர்க்கமடைவதிலும் தவறில்லை. ஆகையால் இனிமேலும் பின்தொடர்ந்து போகாதே. திரும்பி வீட்டிற்குப் போவதே புத்தியாகும்'' என்றார்.

இதற்குமேல் செவிலித்தாயால் ஒன்றும் கூறத் தோன்றவில்லை. தனது செய்கையையிட்டு ஒரு புறம் வெட்கமும் மகளை எண்ணி ஒரு புறம் சந்தோஷமும் கொண்டவளாய் வீட்டுக்கு மீண்டாள். கவிகள் கலித் தொகையில் இக்கட்டத்தை அழகாக வர்ணிக்கிறார்.

*''பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை*
*மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யும்*
*நினையுங்கால் நும் மகள் நுமக்குமாங் கனையளே;*

*சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை*
*நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்*
*தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;*

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென் செய்யுஞ்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்கனையளே; எனவாங்கு

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன் மின்
சிறந்தாளை வழிபட இச்சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே,''

# சிலப்பதிகாரத்தின் சிறப்பு

கோணேஸ்

அமிழ்தினுமினிய தமிழ் மொழியில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் முதல் இடம்பெற்றதும் சங்ககாலத் தமிழ்ப் பனுவல்கள் என்று வகுத்துள்ள நாற்பதனுள் ஒன்றுமாகிய சேர முனி, இளங்கோவடிகள் இயற்றிய சிலப் பதிகாரம் கடைச் சங்க காலத்துக்குச் சற்றே பின் இயற்றப்பட்டதெனினும் சங்ககாலப் பனுவல்களையொப்ப இருந்தமையால், சங்ககாலப் பனுவல் களுட் சேர்த்துளர் தமிழ்ப் பெரியோர்கள். இதில் இருந்தே இதன் சிறப்பு நன்கு புலனாகின்றது.

பாட்டுக்கொரு புலவன் பாரதி இச்சிலம்புச் செல்வத்தை நன்கனு பவித்து இன்பம் நுகர்ந்து, உள்ளத்தைப் பறிகொடுத்து ''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு'' என்று போற்றினார். சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் இதைக் கற்கவேண்டிய உண்மையை உணர்ந்து, ''சேரமான் செய்த சிலப்பதிகாரத்தைச் சாரமாய் நா வே தரி'' என்று மொழிந்தார். இன்னும் அணிசால் இலங்கையிலே சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர் புகழும், ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவைத் தீங் கன்னலொடு, தெங்கி னிளநீருந் தீம்பலவி எள்ளமிர்தும், எங்குங் குறையா இயலுடைய நன்னாடு மட்டக்களப் பென்னும் மா நாடந் நாட்டினிடைப் பிறந்த, பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகள், ''பொய்யில் காட்சிப் புலமையினோராகிய இளங்கோவடிகள் தமிழ்த் தெய்வத்தின் திருவடிகளுக்கு அணியாகப் புனைந்தளித்த தெய்வமாக் கவியாகிய சிலப்பதிகாரம்'' என்று போற்றினார்.

சேரமுனியாகிய இளங்கோவடிகள் இல்வாழ்வைத் துறந்தவரெனினும் கவி புனையுங்காலை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஆக்கியுள்ளது மெச்சத் தக்கது. கோவலன் தீராக் காதலில் மூழ்கி இன்பம் நுகர்ந்து தன் காதற் துணைவியின் சந்திரனைப் பழித்த அழகிய திருவதனத்தைப் பார்த்துச் சொல்வதைப் புலவர் திலகர் அழகு சொட்டப் பாடியுள்ளார். இத்தூக்கைப் பார்ப்போம்.

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே,
காசறு விரையே கரும்பே தேனே,
அரும் பெறற்பாவாய் ஆருயிர் மருந்தே,
பெருங்குடி வாணிகன் பெரு மடமகளே,
மலையிடைப் பிறவா மணியே யென்கோ,
அலையிடப் பிறவா அமுதே யென்கோ,
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!''

காதலன் தன் கண்ணான காதலியை வாழ்த்துகின்றான். உலகத்தில் உள்ள உயர்ந்த பொருள்கள் எல்லாவற்றிலும் சிறந்தவள் காதலியல்லாது வேறு யார்? அப்படிப்பட்ட அருமைக் காதலிக்கு உவமையாக எடுத்துக்காட்டு உலகில் இவைகளைவிட வேறென்ன உண்டு!

கோவலன் மாதவியுடன் மகிழ்வுற்றிருக்குங்காலை, கணவனைப் பிரிந்த காரிகை நல்லாளான கண்ணகி கலக்கமுற்று தன்னில் ஓர் பெரும் வேறுபாடை உண்டுபண்ணுகிறாள். இதைக் கவிஞர் கற்பவர் மனம் கசியும் வண்ணம் இயற்றியுள்ளார்.

''அஞ்செஞ் சீரடி அணிசில் பொழிய,
மென்றுகில் அல்குல் மேகலை நீங்க,
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்,
மங்கள அணியில் பிறிதனி மகிழாள்,
கொடுங்குலை துறந்து விடிந்து வீழ்கதினள்,
திங்கள் வான்முகம் சிறுவியர் பிரியச்,
செங்கயல் நெடுங்கண் அஞ்சன மறப்ப,
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப,
கையறு நெஞ்சத்துக் கண்ணாகி..''

ஆடை அலங்காரமும் அணிகல அழகும் ஆடவனை அடைவதற் கன்றோ. அவனை அடையும் பாக்கியம் இல்லாமற் போனபோது, இந்த அலங்காரங்களெல்லாம் வேண்டற்பாலன அன்று என்னும் உண்மையை உணர்ந்த கண்ணகி அழகுபடுத்துவதில் ஈடுபடவில்லை. கொண்ட கொழுநன் கொலை செய்யப்பட்டுக் கிடந்த காட்சியைக் கண்டு, களங்கமற்ற கற்பரசியான கண்ணகி காவலனின் கடிமனை செல்வதை,

''மெய்யிற் பொடியும் விரிந்த கருங் குழலும்
கையிற் தனிச் சிலம்பும் கண்ணீரும்- வையக்கோன்

*கண்டளவே தோற்றான் அக்காரிகையின் செல்செவியில்*
*உண்டளவே தோற்றான் உயிர்''* என்றார்.

இங்கே கண்ணகியின் உடம்பு எப்படி இருந்ததென்றும் அழகாக வகுத்து முன்கட்டிய பூங்குழல் எப்படி இருந்ததென்றும் கையில் என்ன எடுத்துக் கொண்டு சென்றனள் என்றும் சொல்லி, பின் அக்கொடிய தோற்றத்துடன் ஆண்டு வந்த அரிவை நல்லாளைக் கண்டவுடன் அந்நாட்டு வேந்தன் அடைந்த மாறுதலையும் கற்பவர் மனம் கசியும் படி எடுத்துரைக்கின்றார் புலவர்.

இன்னும் இப்பெரும் பனுவலில் பண்டைக்கால இசைக்கலையைப் பற்றியும் நாடகக் கலையைப் பற்றியும் பலவிடங்களில் காணலாம். பழைய காவிரிப்பூம்பட்டினத்திலே, கடற்கரையில் வெண்மணலின் மீது கோவலனும் மாதவியும் வீற்றிருக்கின்றனர். அருகில் நின்ற வயந்தமாலை கையிலிருந்த யாழை மாதவி தொழுது வாங்குகின்றாள், இதை

*''சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து*
*மைத்தடங்கண் மண மகளிர் கோலம் போல் வனப்பெய்திப்*
*பத்தருங்கோடும் ஆணியும் நரம்பும் என்று*
*இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்''* என்றார்.

இதிலிருந்து யாழானது, பத்தரும், கோடும், ஆணியும், நரம்பும் என்னும் உறுப்புக்களைக் கொண்டிருந்ததென்பதும் அது மை தீட்டிய கரிய கண்களை யுடைய மணப் பெண் போல அழகு வாய்ந்திருந்ததென்பதும் அதனுடைய கோட்டிலே மலர்மாலை கட்டப்பட்டிருந்ததென்பதும் வெளிப்படை. இனி இன்னோர் இடம் செல்வோம். இடையர் சேரி தோன்றுகிறது. நுண் இடையை உடைய ஆய அரிவையர் எழுவர் கைகோர்த்து நின்று குரவைக் கூத்து ஆடுகிறார்கள். அவர்கள் பாடி ஆடுகிற பாடலைக் கேட்போமாக:

*''கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்*
*இன்றுநம் மானுள் வருமேலவன் வாயிற்*
*கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ*
*பாம்பு கயிறாக கடல் கடைந்த மாயவன்*
*ஈங்குநம் மானுள் வருமே லவன் வாயில்*
*ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ*
*கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்*
*எல்லி நாமானுள் வருமேலவன் வாயில்*
*முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!''*

இப்பாடலிலே கொன்றைக் குழல், ஆம்பற்குழல், முல்லைக் குழல் என மூன்று குழல்கள் கூறப்பட்டிருக்கின்றன. இப்படியான பாட்டுகளை ஆராய்ந்தே கிழக்கிலங்கையில் உதித்த முத்தமிழ்ப் புலவரான பேராசிரியர் விபுலானந்த அடிகள் யாழ்நூல் என்னும் பயன்மிகு பனுவலை இயற்றினார். மேலும் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில், யாழாசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாகவே யாழ் நூலை பேராசிரியர் ஆக்கியுள்ளார்.

இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், தமிழரும், தமிழ்நாடும் தமிழ் மொழியும் அடைந்திருந்த மேம்பாடுகளை எடுத் துரைக்கும் ஒப்புயர்விலா இலக்கியப் பனுவலே சிலப்பதிகாரம். ஆங்கில மகாகவியும் நாடகாசிரியனுமான செகசிற்பியாரின் நாடகத் திறனையும், காளிதாசனது காவியத் திறனையும், ஹோமரின் வீரச் சுவையையும் ஒருங்கே அமைந்து, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தன்னுட்கொண்டு தமிழ்த்தாயின் சிலம்பாக அமைந்து, பண்டைத் தமிழ் மக்களின் இணையிலா அற வாழ்க்கையையும், வீரத்தையும், தொழிற் தகைமையையும், பல்கலைத் திறனையும், அரிவையரின் அறிவாற்ற லையும், அரச திறனையும், காரிகை நல்லாரின் களங்கமற்ற கற்பினையும், தற்காலத் தமிழ் மக்களுக்கு மாத்திரமின்றி ஆர்கலிசூழ் ஞாலத்துள் அனைவருக்கும் கேட்கும் வண்ணம் ஆர்த்துக் கொண்டிருக்கிறது.

# இருபதாம் (20ஆம்) நூற்றாண்டுப் புலவர்களும் சமுதாயமும்

சந்திரநாதன்

*கொந்தளித்துக் கொண்டிருந்த தேசிய இயக்கம் புலவர்களின் போக்கையே முற்றிலும் மாற்றிப் புதியதோர் பாதையில் கிறுக்கி வைத்தது. மன்னர் களையும், கடவுளர்களையும் பாடிப்பாடிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த புலவர்களை மதித்துக்கொண்டிருந்த சமுதாயம், தேசியக் கனல் பறக்கும் கவிதைகளை எளிய நடையிற் பாடி மக்கள் மனதில் உணர்ச்சித் தீயைப் பரப்பிய பாவலர்களையே பெரிதும் மதிக்கத் தொடங்கியது. தங்களுக்குத் தேவையானவற்றை அளிக்கக்கூடிய கவிகள் இவைகளேதான் என்பதை முற்றிலும் உணரத்தொடங்கியது மக்கட்குலம். இத்தகைய கவிகளில் சிலரையிட்டுத்தான் திரு. சந்திரநாதன் அவர்கள் தமது கட்டுரையில் இனிதுற ஆராய்கிறார்கள். அவரது ஆராய்ச்சி புதிய தோர் முறையில் அமைந்திருப்பதை நேயர்கள் இலகுவில் அறிந்து இன்புற முடியும். - ப-ர்.*

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்றியதால் சமுதாய உணர்ச்சியும், ஒற்றுமை உணர்ச்சியும், தேச பக்தியும் நாட்டில் பரவின. தங்கள் பண்டைக்கால நாகரிகத்தின் சிறப்பையும் கலைகளின் வளத்தையும் பாரத நாட்டின் புதல்வர்கள் அறிய அவர்களிடம் நாட்டன்பும் சுதந்திர உணர்ச்சியும் வலுப்பெற்றன. சொந்த நாட்டின் நாகரிகம், கலைகள் இவைமீதுள்ள ஆர்வமும், மெய்யன்பும் அரசியல் துறையில் முற்றான சுதந்திரம் அடையவேண்டுமென்ற அவாவும் மக்களிடம் பொங்கிப் பெருகவே நாடெங்கும் பெரும் ஆற்றல் வாய்ந்த ஓரியக்கம் வேரூன்றித் தளிர்த்து வளர்ந்தது. அதன் பயனாகப் பல புதுக்கவிகள் தமிழ்மொழியில் தோன்றினார்கள். அவர்களில் இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் சுப்பிரமணியபாரதி, பாரதிதாசன், தேசிக விநாயகம்பிள்ளை ஆகிய மூவருமே. பொதுமக்களின் உள்ளத்தில் தம்முடைய கருத்துக்கள் சுருக்கென அமைய வேண்டும் என்ற நோக்கம் உடையவராதலினால் இவர்கள் பொதுமக்கள் பேசும் எளிய இயற்கையான

சொற்களையே தமது சொற்களாக மேற்கொண்டனர். ஆகவே இவர்களுடைய பாட்டுக்கள் எளிய நடையில் பாடப்பட்டன. முன்பெல்லாம் கவிதைகள் எழுதுவதென்றால் அகராதி, நிகண்டு இவற்றிலிருந்து புரியாத சொற்களைப் பொறுக்கி எடுத்துச் சந்தம் என்னும் போர்வை போர்த்து மோனை என்னும் முத்துக்கட்டி எதுகை என்னும் அணி வகுத்து எழுத்துக்கூட்டங்களை இழுத்துக்கட்டி ''இதோ பார்! இவைதான் கவிதைகள், எப்படி இருக்கின்றன என்று கேட்பார்கள். படித்தவர்கள் எல்லோரும் இவற்றை வான்கிழியப் புகழும் போது பொதுமகன் ''ஆமாம்'' போடுவதன்றி வேறொன்றும் செய்ய அறியமாட்டான். புரியாத மொழியில் நான்கு நான்கு வரியாகச் சுக்கு, மிளகு, திப்பிலி என்று செப்பிடு வித்தை செய்வதுதான் கவிதையாம். இவற்றிற்கும் நமக்கும் ஒத்துவரா எனப் பொதுமக்களைக் கலங்க வைத்தன அக்கவிதைகள். துணிந்து இதற்கு முற்றுப்புள்ளி வைத்தவர் பாரதியார். எழுத்துக் கூட்டமும் வெறும் இன்னிசையும் கவிதை அல்ல. எண்ண எழுச்சியும் எளிமையும் எவருக்கும் விளங்கும் வகையிலுள்ள உணர்ச்சிகள் செய்யுட்களில் உந்திவந்து, கூத்தாடப் பொதுமக்களும் படித்துப் பரவசப்படுவதுதான், கவிதை என்று வழிகாட்டி நின்றார் பாரதி. பின்னர் பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பாரதிதாசன் பண்நிறைந்த பாடல்களைப் பாடினார். இதேவிதம்தான் தேசிகவிநாயகம்பிள்ளையும் யாவருக்கும் விளங்கக்கூடிய முறையிற் பல பாட்டுக்களைப் பொழிந்துள்ளார். இதனால் இலக்கணப் போர்வையை விட்டு வெளியே வர மறுத்த கவிஞர்களும் இன்று வெளியே வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. படித்துப் பட்டம் பெற்றவர்கள்தான் கவிதைகளைச் சுவைக்க முடியும் என்ற எண்ணம் காற்றில் கலந்து மறைந்தது. இக்கவிகளின் எளிமையையும் இனிமையையும் கண்ட பொதுமக்களும் கவிதைச் சுவையைக் கனிவோடு பருக ஆரம்பித்தனர்.

> *''பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா*
> *பேசும் பொற்சித்திரமே*
> *அள்ளியணைத்திடவே - என்முன்*
> *ஆடிவருந்தேனே''*

என்ற பாரதியார் பாட்டும்

> *''தமிழரின் சீர்தனைக் குறைத்துத்*
> *தனியொரு சொல் சொன்னாலும்*

*பார்ப்பான் தன்னை*
*உமிழ்ந்திடுக மானத்தை*
*ஒரு சிறிதும் இழக்காதீர்''*

என்ற பாரதிதாசன் பாட்டும்

*''மண்ணை ஒரு நாள் ஒரு குயவன்*
*மயக்கிப் பிசையும் வேளையிலே*
*திண்ணை யருகு சென்றிருந்தேன்*
*செய்யும் தொழிலும் கண்டிருந்தேன்*
*''அண்ணா! மெல்ல! மெல்ல'' என*
*அமைந்த அழுகைக் குரல் கேட்டேன்*
*கண்ணிற் காணா நா வாலே*
*களிமண் கரைவதென வுணர்ந்தேன்''*

என்ற தேசிகவிநாயகம்பிள்ளையின் பாட்டும் இவர்களின் எளிய நடைக்குத் தக்க சான்றாகும்.

எக்காலமும் வானையும் மீனையும் மலரையும் மலையையும் வனத்தையும் மனத்தையும் காலைக் கதிரவன் திறத்தையும் மாலைச் செவ்வானத்தின் நிறத்தையும் அந்திப் பொழுதையும், அதன் பின் தோன்றும் நிலவையும் அதன் ஒளியையும் அவ்வொளியில் காயும் பெண்ணையும் அவள் துகிலைக் கலைக்கும் காற்றையும் அத்துகிலுள் காணும் உடல் வனப்பையும் அவ்வுடலுள் ஆடும் உள்ளத்தையும், அதன் நினைப்பையும் பற்றியே கவிவாணர் கவிதைகள் புனைந்துகொண்டிருக்க வேண்டுமெனக் கருதுவது தப்பாகும் என்பதை இப்புலவர்கள் உலகிற்குக் காட்டினார்கள். மாடத்தின் முற்றத்திலே நிலவொளியிலே காதற்கதைகள் பேசும் கணவனும் அவன் தன் காதற்கிழத்தியும் கவிதையின் பாத்திரங் களாய் அமைந்தால் மட்டும் போதாது. அதே மாடியின் கீழே தெருவோரத் திண்ணையிலே நாளெல்லாம் நாய் போல அலைந்து திரிந்தும் ஈன வயிற்றை நிரப்ப முடியாமல் மெய் சோர்ந்து கண்கள் இருண்டு காதுகள் பஞ்சடைந்து நெஞ்சம் புழுங்கிக் கொண்டிருக்கும் ஏழையும், அவன் ஏக்கமும் அவன்பால் சமூகம் காட்டும் கொடுமையும் சமூக அமைப்பின் அநீதியும் கவியின் உள்ளத்திலிருந்து கவிதைகளாகப் புறப்பட்டு ஆகவேண்டும் என்பதை இவர்கள் தங்கள் பாக்கள் மூலம் தெரிவித்தனர்.

சமுதாயச் சூழ்நிலைக்குக் கவியானவர் தனது உள்ளத்தையும் உணர்ச்சியையும் பறிகொடாதிருக்க முடியாது. சமுதாயம் மடமையில்

ஆழ்ந்திருக்கும் சமுதாயத்தில் கொடுமைகள் சூழ்ந்திருக்கும் சமுதாயம் கூக்குரல் கிளப்பாது பிணம் போல் உறங்கிக்கிடக்கும் இந்நிலையில் சமுதாயத்தைத் தட்டி எழுப்ப வேண்டிய கடமை கவிஞனுடையதாகின்றது. கவிஞனின் உள்ளமும் உணர்வும் சமுதாயச் சூழ்நிலைகளால் மாறு தலடைந்தே தீரும். அம்மாறுதலின் விளைவால் அம்மாறுதலுக்கு ஏற்ற முறையில் கவியின் உள்ளத்தில் கவிகள் பிறக்கும். இது மேலே குறிப்பிட்ட புலவர்க்கு முற்றாகப் பொருந்தும். கருத்துக்களிலும் கையாளும் பொருள்களிலும் இப்புலவர்கள் தமது காலத்து மக்களின் உண்மையான பிரதிநிதிகளாகவே விளங்குகின்றார்கள். தற்கால மக்கள் கருத்திற்குத் தக்க அவர் தம் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக உதவும் வகையிற் கவி இயற்றுபவர்களில் இவர்கள் தலைசிறந்து விளங்குகின்றார்கள். சமுதாயத்தில் தற்போதைய நிலையின் பிரதிபலிப்புத்தான் இவர்களின் கவிதைகள் என்று கூறுவது முற்றும் பொருந்தும். சமூகத்தில் நிலவியுள்ள மூடப்பழக்கவழக்கங்களையும் பொருளற்ற கொள்கைகளையும் களைந் தெறியும் கருவிகளாக இவர்கள் கவிதைகளைக் கொள்ளவேண்டும். சமுதாயமின்றி இலக்கியமோ கவிதைகளோ இல்லை. வாழ்க்கையும் கவிதையும் நெருங்கிய தொடர்பு கொண்டவை. மனிதர்களின் மேன்மை, அவர்களின் தற்கால நிலை, சமூகத்திலுள்ள பலவகை ஊழல்கள் முதலியவற்றைப் பற்றி இவர்கள் பாடியிருப்பதிலிருந்து இவர்கள் அக்கால மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக விளங்குகின்றார்களென்பது தெளிவாகும்.

ஒரு இனத்தவர் வேறெந்த இனத்தவருக்கும் தாழ்ந்தவரல்லர் என்று அழுத்தமாகப் பாடி மனித இனத்திற்கு அளவற்ற பெருமையைத் தந்திருக்கிறார்கள் இப்புலவர்கள். மாந்தர் என்னும் உணர்ச்சி நாடு எங்கும் குன்றிவிட்டது. அவர்கள் சீர்குலைந்து விட்டனர். அவர்களைக் கவிஞர்கள் தட்டி எழுப்புகின்றார்கள். அவர்கள் வீழ்ச்சியுற்ற காரணத்தையும் அவ்வீழ்ச்சி இன்று மீட்சி பெறும் அவசியத்தையும் வழியையும் தமிழ் உள்ளத்தில் நின்று பாயும் உயர்ந்த கவிதைகளால் எடுத்து ஓதுகிறார்கள். பாரதியார் இந்தியாவின் பண்டைப் பெருமையையும் அவர் நாட்டின் புராதனப் புகழையும் மனதில் நினைந்து நினைந்து அதிலிருந்து பேரார்வம் பெற்று இந்தியரின் தற்கால நிலையை எண்ணி நெஞ்சம் கசிந்து மனம் உருகி அவர்கள் எல்லாத்துறைகளிலும் ஓங்கி நிமிர வேண்டுமென்று நினைந்து நம்பிக்கை கொண்டு வீராவேசம் பெற்றுத் தமிழரின் கீர்த்தியைப்

போற்றியும் வருங்கால வெற்றியை வேண்டியும் பல பாடல்கள் பாடியுள்ளார். அவர்களின் கலைவளத்தின் சிறப்புக்களையும் சரித்திரத்தின் மாண்பினையும் ஒரே சித்திரத்தில் ''செந்தமிழ் நாடு'' என்ற பாட்டில் அமைத்திருக்கின்றார். இந்தியரின் பழங்கீர்த்தியையும் இக்கால நிலையையும் எண்ணி நாட்டன்பு கொண்டு ''எந்தையும் தாயும்'', ''மன்னும் இமய மலை'', ''நளிர் மணி நீரும் நயம்படு கனிகளும்'' என்ற முதலடிகளை உடைய பாட்டுக்களிலும் ''பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி'', ''பாரத தேவியின் திருத்த சாங்கம்'' என்ற மகுடங்களைப் பெற்ற பாட்டுக்களிலும் வேறு பாட்டுக்களிலும் பாடியுள்ளார்.

*''எந்தையும் தாயு மகிழ்ந்து குலாவி*
*யிருந்தது மிந்நாடே - அதன்*
*முந்தையராயிர மாண்டுகள் வாழ்ந்து*
*முடிந்ததுமிந் நாடே - அவர்*
*சிந்தையிலாயிரமெண்ணம் வளர்ந்து*
*சிறந்தது மிந்நாடே''.*

இது போன்ற பாட்டுக்களில் இவருடைய இத்தகைய கருத்துக்களைக் காணலாம்.

''தெள்ளு தமிழில் இசைத் தேனைப் பிழிந்து எடுத்துத் தின்னும் தமிழ் மறவர் யாம்'', ''புவி ஆளப் பிறந்தவன் தமிழன்'', ''நம்மை வென்ற நாட்டினர் இல்லை'' என்பன பாரதிதாசன் கவிதைகள். ''இன்பம் எனப்படுதல் தமிழ் இன்பம் எனத் தமிழ் நாட்டினர் எண்ணுக'' என்றார். ''வெள்ளம் போலத் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம். அன்னார் உள்ளத்தால் ஒருவரே மற்று உடலினாற் பலராய்க் காண்பார். கள்ளத்தால் நெருங்கொணாதே, என வையங் கலங்கக் கண்டு துள்ளும் நாள் எந்நாள்? உள்ளம் சொக்கும் நாள் எந்நாளோ?'' என்று கேட்கின்றார் புரட்சிக்கவிஞர். ''செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்'', ''பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால் சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு'', ''தமிழனை இகழ்ந் தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்'' போன்ற வீர உரைகளை அழகாக வழங்கியுள்ளார். பாரதிதாசன் தமிழர் வீழ்ச்சியுற்ற காரணத்தையும் அவ்வீழ்ச்சி இன்று மீட்சி பெறும் அவசியத்தையும் வழியையும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

''வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்த பின் தமிழையே பழித்தார்
நம் செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோம் இந்நாள் அவரஞ்சிவிழித்தார்
தமிழனே இது கேளாய்!''

என்று உறங்குந் தமிழனைத் தட்டியெழுப்பிக் கூறுகின்றார். தமிழ்க்கவி உள்ளம், தமிழரின் கவி உள்ளம் அவ்வாறு கூவுகின்றது.

''நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல் இன்றி அவர் நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்''

என்னும் மொழிகள் தமிழரின் நெஞ்சில் ஏறாமற் போகுமா!

''தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய் தடுத்தாலும் விடேன்
எமை நத்துவாயென எதிரிகள் கோடி
இட்டரைத்தாலும் தொடேன்''

என்ற கவியின் வீரமும் உறுதியும் கலந்த சொற்கள் சாவை எதிர்பார்த்து நிற்கும் கிழத்தமிழனையும் வாலிபனாக்கிவிடும்.

மனிதன் அடிமையாகி விட்டான், ஆண்மை குன்றிவிட்டான், மடமையில் ஆழ்ந்து இருண்ட வீட்டில் முட்டிக்கொள்கிறான். உழைப்பவர்க்கு உணவில்லை. வாழ்வினில் சுகமில்லை. சிலர் சுரண்டுகிறார்கள். பலர் சுரண்டப்படுகிறார்கள். அந்நியர் இந்தியர் மீது ஏறிச் சவாரி செய்கிறார்கள். சாதி, சமயம், சுயநலம், உயர்வு தாழ்வு, மூடப்பழக்கவழக்கங்கள், தப்பான எண்ணங்கள் என்று பல நோய்கள் மனிதர்களைத் துன்புறுத்துகின்றன. நாயும் வாழ நானும் சேரியிலே, ஓட்டைக் குடிசையிலே உடலை மறைக்கத் துணியும் குடலை நிறைக்கச் சோறுமின்றிச் செல்வந்தரால் சுமத்தப்படும் உழைப்புக்கும் அவமதிப்புக்கும் யாதொரு குறைவுமின்றி உயிரைக் கையாற் பிடித்துக்கொண்டு உணர்வு இழந்து, உடல் மெலிந்து, ஒளியிழந்து மதியும் மானமும் அறவே இழந்து, பொருளும் நலனும் யாதென அறியாமல் வறுமையின் வித்தாய் துன்பத்தின் உருவாய் பிணியின் களஞ்சியமாய்த் தவிக்கும் மாந்தரை உயர்த்த வேண்டுமென இக் கவிஞர்கள் உள்ளங்கள் துடிக்கின்றன.

மக்களுக்கிடையே சாதி வேற்றுமை யாது? யாவரும் ஒரே குலத்தவரே. உயர்ந்த சாதியென்றும், இழிந்த சாதியென்றும் வேறுபாடு இல்லை என்கின்றார், புதுமைக் கவி பாரதியார்.

''பறையருக்கு மிங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கு
மறவருக்கும் விடுதலை'' என்றும்,

''ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப
ரிந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு ஒரு நிகர்
சமானமாக வாழ்வமே'' என்றும்,

''எல்லோருமோர்குலம் எல்லோருமோரினம்
எல்லாரு மிந்தியமக்கள்''

என்றும் அமைந்துள்ள பாக்கள் இவர் கருத்தைப் புலப்படுத்துகின்றன.

சாதியினால் உயர்வு, தாழ்வு கற்பித்து, உண்டு கொழுத்து உறங்கித் திரியும் கூட்டத்தையும் அவர்களுக்கு உழைத்து, உழைத்துப் போட்டு உடம்பு இளைத்திளைத்து, எலும்பும் தோலுமாய் நடமாடும் பிணமாய்த் திரியும் இந்நாட்டு மக்களினத்துள் மற்றொரு பிரிவினரையும் கண்டு வருந்திய உயிர்க்கவி பாரதிதாசன்,

''முழங்காற் சேற்றினில் முக்கிவிளைத்தவன்
மூடச் சகோதரன் பள்ளப்பயல் - அதை
மூக்குக்கும் நாக்குக்கும் தண்ணீர்காட்டித்தின்னும்
மோசக்காரன் மேலா தோழர்களே''

எனக் கொதித்த உள்ளத்தோடு நம்மைக் கூவி வினாவுகின்றார். வலியோர் சிலர் எளியோர் தமை வதை புரிந்து வருதலைக் கண்ட உயிர்க்கவி பாரதிதாசன் அச்செயலைக் கண்டு பொறுக்கமுடியாது,

''கொலை வாளினை எடடா
மிகு கொடியோர் செயலறவே

குகைவார் ஒரு புலியே
உயர் குண மேவிய தமிழர்''

எனக் கொடுமை அகற்றுவதற்கு வாளேந்திப் போர் புரிய அறிவுறுத்து கின்றார். ''பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை - இந்தப் பிழை நீங்குவதே உயிருள்ளாரின் கடமை'' என்றும்,

''சாதி மத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டையுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம் பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்''

என்றும், தமிழர் சாதிபேதங்களை ஒழித்து முன்னேற வேண்டுமென்று கவிஞர் இயம்புகின்றார்.

பெண்கள் விடுதலைக்கும் பெண்கள் முன்னேற்றத்துக்கும் உரிய வகையில் இவர்கள் பாடலுட்பல அமைந்துள்ளன. பாரதியார் ஆண் களுக்கு ஆண்மை ஈந்தார். பெண்களுக்கு விடுதலை விழிப்பு ஈந்தார். பெண்களுக்கு நல்ல கல்வி தரவேண்டும். விவரம் தெரிந்து விவாகம் செய்ய வேண்டும். விருப்பமில்லாத கணவனை மணக்கும்படி வற்புறுத்தக் கூடாது. பிடிக்காவிட்டால் விவாகத்தைத் தள்ளிக்கொள்ள உரிமை உண்டு. கணவனை இழந்த இளம்பெண் மீண்டும் விவாகம் செய்துகொள்ளத் தடை இல்லை. விவாகம் வேண்டாம் என்று தனித்திருந்து நல்ல முயற்சி செய்யும் பெண்களைத் தடுக்கக் கூடாது. பயத்தாலும் பொறாமையாலும் வேறு ஆண்களுடன் பெண்கள் பேசக்கூடாது என்கின்றனர். அந்தச் சந்தேகம் ஒழியவேண்டும். ஆண்களைப் போலவே பெண்களும் தலை நிமிர்ந்து உலாவ வேண்டும். இத்தகைய உரிமைகளையெல்லாம் பாரதியார் பெண்களினத்திற்குப் பட்டயம் செய்து வைத்திருக்கிறார்.

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த
வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வ மிந்த நாட்டிலே''

ஆணும் பெண்ணும் சேர்ந்ததே மானிடம். பெண்களினால் ஆண்மைக்கு வீரமும், வலிமையும், இன்பமும், வெற்றியும் உண்டாகும். ஆதிகாலத்தில் ஒரு பெண்ணை மணக்க வீரர் தமது வீரமெல்லாம் காட்டினர். தமிழர் நாகரிகம் எப்போதும் பெண்களை நன்கு மதித்து வந்தது.

*''நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்*
*நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே*
*காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்*
*காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே''.*

இந்த வாக்குகள் ஆண்மையின் ஆண்மையைக் கனல் பெறத் தூண்டு கின்றன. பெண்கள் படும் துயரை கவி ஒருநொடியும் தாங்கமாட்டார். பீஜித் தீவுக் கரும்புத் தோட்டத்தில் பெண்கள் படுந்துயரைப் பாரதியார் உருகிப் பாடிய பாட்டு, கல்லையும் கணக்கும். ஒரு கண்ணற்ற தீவில், தனிக்காட்டில் பெண்கள் புழுங்கிக் கண்ணீர் விடுகின்றனர்.

*''நாட்டை நினைப்பாரோ? எந்த*
*நாளினிற் போயதைக் காண்பதென்றேயன்னை*
*வீட்டை நினைப்பாரோ? அவர்*
*விம்மி விம்மி விம்மி விம்மி அழுங் குரல்*
*கேட்டிருப்பாய் காற்றே - துன்பக்*
*கேணியிலே எங்கள் பெண்களழுத சொல்*
*மீட்டு முரையாயோ - அவர்*
*விம்மியழவுந் திறங்கெட்டுப் போயினர்''.*

பாரதிதாசன் அரிவையர் அறிவிலர் என்பதை மறுத்தெறிய ''வீரத் தாய்'' என்பதில் வரும் விசயராணி வரலாறு ஒன்றே போதும்,

*''அரிவையர் கூட்டமெல்லாம்*
*அறிவிலாக் கூட்டமென்பாய்*
*புரிவரோ விசய ராணி புரிந்த இச்*
*செயல்கள் மற்றோர்?''*

பெண்ணுலகம் அன்னையும் ஆசானும் ஆருயிர்க்காப்பாருமாக வேண்டு மென்று கவிஞர் விளைகின்றார். கஞ்சியும் பறித்துக் காதலும் பறித்தாரே ஆடவர் கலங்குகின்றார். ''ஆடை அணிகலன் ஆசைக்கு வாசமலர் தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும் அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப் போல் கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம் மானிடர்

கூட்டத்தில் வலியற்ற ஒரு பகுதி'' என இரங்குகின்றார். ''மாதர் தம் உரிமை மறப்பது மாண்பா? மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா? ஆராய்ந்து பார்'' என்கின்றார். கல்வி இல்லாத பெண் குடும்பத்திற்கு பெரும் இடும்பை என்பதை ''இருண்ட வீட்டிலும்'' கல்வி உடையவர் பேரின்பம் நல்குவள் என்பதைக் ''குடும்ப விளக்கிலும்'' நயம்பட எடுத்துக்காட்டியுள்ளார்.

காதலில் ஆடவருக்கும் பெண்களுக்கும் மாறுதல் உண்டோ? மனைவி செத்தால் பெருங் கிழவனும் மறுமணம் செய்துகொள்ளப் பார்க்கிறான். பெண்கள் மாத்திரம் கணவன் இறந்த பின் மணத்தல் தீதோ? என்று ஒரு செய்யுளில் நியாயத்தைக் காட்டுகின்றார் பாரதிதாசன்.

*''ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்*
*அடைகின்ற காதலுக்கும் மாற்றமுண்டோ*
*பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்*
*பெருங் கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்றான்*
*வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்*
*மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?''*

காதலைச் சமுதாயம் இழிவுபடுத்தி வருவதைக் கண்டு இவர் ஒரு கதாபாத்திரத்தின் வாயிலாகக் கூறுவது இது:

*''காதலிருவர்களும் நம்*
*கருத்தொருமித்த பின்*
*வாதுகள் வம்புகள் ஏன் - இதில்*
*மற்றவர்க்கென்ன உண்டு*
*சூதுநிறை உலகே - ஏ! துட்ட இருட்டறையே''*

இப்போது பொதுவாக உலகின் மனத்தைக் கவர்ந்து வரும் பொது உடைமை இயக்கம் பாரதியார் காலத்தில்தான் முளை கிளம்பியது. இம் என்றால் சிறை வாசம், ஏன் என்றால் வனவாசம் என்னும் கொடுங் கோலாட்சி புகையாகி ஏழைத்தொழிலாளருக்கு விமோசனம் ஏற்பட்டுப் பொதுஉடைமைச் செங்கொடி உயர்ந்தது உரிசியாவில். ஏழைத் தொழிலாளரின் வீராவேசப் புயலால் அதர்மக்காடு விழுந்து அழிந்தது. எரிந்து சாம்பராக மண்ணானது. இந்நிகழ்ச்சி பாரதியாரின் கருத்தை மிகவும் உயர்த்தியது.

''இடிபட்ட சுவர்போலே கலி விழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ'' என்கின்றார் கவி.

''முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொதுவுடமை''

''மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ''

''தனியொருவனுக்குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்''

''எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''

என இவ்வாறு பொது உடைமையைப் பாராட்டிக் கூறுகின்றார் பாரதியார்.

இந்தவிதம் பாரதிதாசனும் பொது உடைமை நிலவும் புத்துலகத்தைப் பற்றிப் பல பாக்கள் இயற்றித் தமது கவிதைகளுக்குத் தனிப்பண்பு ஏற்படுத்திக்கொண்டார். புரட்சிக் கவிஞர் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார்.

''ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்''

''வாழ்வதிலும் நலம்சூழ்வதிலும் புவி
மக்களெலாம் ஒப்புடையார்''

''புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்''

''பொதுவுடைமைக் கொள்கை திசை
யெட்டும் சேர்ப்போம்''

என்பன போன்ற அடிகளில் பொது உடைமைக் கொள்கை மிளிர்வதைக் காணலாம். தமிழ்மொழியின் தற்கால நிலைமையை நினைந்து அதன் வளர்ச்சியின் பொருட்டு இவர்கள் பாடிய பாக்கள் சிறந்தன.

''தே மதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்றும்,

''சேமமுறவேண்டுமெனில் தெருவெலாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'' என்றும்,

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்''

என்றும் பாடுகிறார் புதுமைக் கவி.

''எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்
உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவச நூற்கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பல கழித்தோம்; குறை களைந்தோமில்லை
தகத் தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்''

இதுவரை கூறியதிலிருந்து இப்புலவர்கள் தமிழுக்குப் புத்தொளி அளித்துள்ளார்கள் என்பது புலனாகும். தெளிந்த தமிழில் தெளிவுற மொழிதல்; அறிந்தோர்க்கு இனிமை அழகின் அமுதம்! உயர்ந்த கருத்து! உலகிற்கு அரும் பயன் - இவை இப்புலவர்கள் மணிவாக்கின் இயல்பு. மேலும் கருத்துக்களிலும் கையாளும் பொருள்களிலும் இவர்கள் தங்கள் காலத்து மக்களின் பிரதிநிதிகளாக விளங்குகின்றார்கள்.

**சுப்பிரமணிய பாரதி**

தமிழ் செத்துப் பிழைத்த நோயாளி. பாரதியின் பரிகாரத்தால் குணமடைந்து வருகிறது. வெளியில் உலாவவும் தொடங்கிவிட்டது. தன்னுடைய அழகையும் பலத்தையும் மருத்துவனுதவியால் அறிந்துவிட்டது. தன்னுடைய நாட்டைப் பற்றிக் கேட்கும்போதே தமிழனது காதில் ''தேன் வந்து பாய்கிறது'' குணமடையும் நோயாளிக்கு.

*''தந்தையர் நாடென்ற பேச்சினிலே*
*சக்தி பிறக்குது மூச்சினிலே''*

தமிழன் எழுந்து விட்டான்! பாரதி சுட்டிக்காட்டும் காவிரி தென்பெண்ணை பாலாறு முதலியவைகளைக் கண்டு மகிழ்ச்சி எய்துகிறான்.

கம்பன் பிறந்த தமிழ் நாடென்றும் வள்ளுவனை உலகத்துக்குத் தந்து வான் புகழ் பெற்ற தமிழ் நாடென்றும் பெருமிதம் அடைகின்றான். நீலத் திரைக்கடலுக்கும் வடமாலவன் குன்றத்திற்கும் நடுவில் புகழ் மண்டிக்கிடப்பதைப் பார்த்துக் கனிவெறி கொள்கின்றான். பல தீவுகளிலும் சஞ்சரித்துக் கலை ஞானத்தைப் பரப்பியதோடல்லாமல் புலிக்கொடியும் மீன்கொடியும் பறந்ததை நினைத்துக் கூத்தாடுகின்றான். விண்ணையேயிடித்துவிடும் இமயத்தையே பொடியாக்கிவிடும் திறமை படைத்தவர் தமிழ் நாட்டில்தான் என்று அறை கூவுகின்றான். செந்தமிழ் நாட்டைப் பாடும் பாரதியின் கம்பீர இன்னிசையை மீண்டும் மீண்டும் படிக்கின்றான். தமிழனுடைய வாழ்க்கையில் இவ்வித உணர்ச்சிப் பெருக்கு இதுவரை என்றும் தோன்றியதில்லை. இதற்குக் காரணம் யார்? எந்த மகாகவி மரணப்படுக்கையிலிருந்த நோயாளிக்கு இந்த அற்புத மருந்தையளித்தார்? விடை கூறவேண்டியதேயில்லை.

தமிழ் நாட்டின் மறுமலர்ச்சிக்கு அரும்பணி புரிந்த வீரருள் பாரதியார் முன்னணியில் நிற்கிறார். தமிழ் நாட்டின் வீரத் தியாகிகள் கட்டிய விடுதலைக் கோயில்கள் பொன்மணிக் கோபுரமாக விளங்குகிறது பாரதி வாக்கு. தெள்ளமுதத்தமிழ் ஊற்று, சக்திக் கனலன்பு, வீர விடுதலைக் காதல், தேவ ஆவேசப் புயல் - இவையே பாரதியார் 1906ஆம் ஆண்டு தொடங்கி 1947ஆம் ஆண்டு வரை இந்திய சுயராட்சியக் கற்பகம் வானோங்கி வளர்ந்து வந்தது. புயல், இடி, தடியடி எல்லாவற்றையும் தனது உறுதிக்கு உரமாகக் கொண்டு வளர்ந்து வந்தது கண்ணீரல்ல, தண்ணீரல்ல. உயிர் நீரூற்றி இக்கற்பகத்தை வளர்த்த வீரர் முன்னணியில்

பாரதியார் நிற்கிறார். வந்தே மாதரம் என்றால் வாய்பூட்டும் அக்காலத்தில் பாரதியார் போன்றவர்கள் முழு விடுதலையும் கறந்து வாங்க முயன்று பல துன்பங்களை அனுபவித்தார்கள்.

''அடிமைப்பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்- புன்மை- போக்கினாய்''

''எங்குமிந்த ஸ்வராஜ விருப்பத்தை
ஏவினாய் - விதை - தூவினாய்''

இந்த இரண்டு காவியங்களைப் பாரதியார் வாக்குவல்லமையாற் செய்தார்.

''வந்தேமாதரம் என்றுயிர்போம் வரை வாழ்த்துவோம்''
''பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு!''
''எங்கள் - பாரத தேசமென்றே தோள்கொட்டுவோம்!''

என்று உறங்கிக் கிடந்த தமிழர் உரம் உற்று எழுந்தனர். பாரதியார் வீர சுதந்திரம் வேண்டினார். ''கட்டெனப்தனை வெட்டென்போம்! அண்டம் சிதறினாலும் அஞ்சமாட்டோம். வஞ்சக் கவலைக்கிடங்கொடேல் யான் எதற்கும் அஞ்சுகிலேன்! குன்றெனத் தலை நிமிர்! கொடுமையை எதிர்த்து நில்! வெற்றியுண்டு பயமில்லை! ஓம் சக்தி!'' என்ற மின்வெட்டுகள் அவர் வாக்கில் ஒளி வீசும்.

''ஓரஞ் செய்திடாமே - தருமத்
துறுதி கொண்டிடாமே
சோரஞ் செய்திடாமே - பிறரைத்
துயரில் வீழ்த்திடாமே
ஊரையாளும் முறைமை''

யே அவர் வேண்டியது. பாஞ்சாலிசபதத்தில் இந்த அரச நீதியை நன்கு விளக்குகின்றார்.

''நாட்டுமாந்தரெல்லாம் - தம்போல்
நரர்களென்று கருதான்
ஆட்டு மந்தையாமென் - றுலகை
அரசனெண்ணி விட்டான்
தேயம் வைத்திழந்தான் - சீச்சீ
சிறிய செய்கை செய்தான்''

நாடு முழுதும் ஒரே சாதி! ஒரே குடும்பம்! சாதி, மத, நிறக் கொடுமைகள் கூடாது. அன்பு, அறிவு, ஒற்றுமை, பெண், பெருமை - இவையே

சுதந்திர தத்துவம், சுதந்திர நாட்டிற்கு இதந்தரும் தொழில்கள் கோடிக் கணக்காக வேண்டுமென்கின்றார்.

அரும்பும் வேர்வை உதிர்த்துப்புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே''

என்று தொழிலாக்கம் தருகின்றார் கவி. தற்காலத்தில் புதிதாக வந்த பௌதிக அற்புதங்களை மேற்கொள்ள வேண்டுமென்று பாடியுள்ளார்.

''வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்
வேலைத் திரைமுழுதுங் கப்பல் விடுவோம்''

''காசி நகர்ப் புலவர் பேசுமுறைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்''

''உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்''

இவ்வாறு தமிழ்நாட்டிற் பல தொழில்களும் செய்வதற்கு ஊக்கமளிக்கிறார் கவி.

பாரதியாரின் தேசிய கீதங்களைவிட அதிகம் ஆர்வத்தையும் கருத்துச் செல்வத்தையும், கவிச்சுவையையும் மட்டு இல்லாத பக்திப்பான்மை யையும் பெற்றவை அவரின் தோத்திரப் பாட்டுக்கள். கண்ணன், முருகன், காளி, சரசுவதி, இலக்குமி முதலிய தெய்வங்களைப் பற்றிப் பல புது முறைகளில் விதம் விதமாகப் பாரதி அன்புடனும், ஆற்றலுடனும் பாடி யிருக்கும் கீதங்கள் மனத்தை உருக்கும் வன்மை உடையன. இவைகளில் கண்ணன்பாட்டு, அருட்சுவையும் அளவற்ற கவிதை நிலையும் நிரம்பி மிளிர்கின்றது. கண்ணனைத் தந்தையாகவும், தாயாகவும், தோழனாகவும், சீடனாகவும், அரசனாகவும் பாவித்துப் புனைந்திருக்கும் பாக்களில் கவிதையும் கருத்துப் பொலிவும் அதிகமாக இருக்கின்றன. அப்பரம் பொருளைக் குழந்தையாகவும், காதலனாகவும், காதலியாகவும் பாவித் திருக்கும் பாக்களில் ஐந்தாறு பாரதியின் கவிதை ஆற்றலின் உச்சத்தைக் காட்டக் கூடியன. ''கண்ணம்மா -என் குழந்தை'' என்ற பாட்டு மிக எளிய நடையில் எவர் மனத்தையும் கொள்ளைகொள்ளக்கூடிய இன்னிசைக் கவிதையுள்ள ஒரு பாட்டு.

''கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா

உன்மத்த மாகுதடீ
இன்பக்கதை களெல்லாம் - உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே - உனை நேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?''

முதலிய பாடல்கள் பாடப்பாடத் தெவிட்டாத இன்பம் தரவல்லன. கண்ணனைக் காதலன் நிலையிற் கொண்டே ''ஆசை முகம் மறந்து போச்சே'' என்ற நெஞ்சை உருக்கும் பாட்டில் காணப்படும்:

''கண்கள் புரிந்து விட்டபாவம் - உயிர்க்
கண்ணனுரு மறக்கலாச்சு
பெண்களினத்திலிதுபோலே - ஒரு
பேதையை முன்பு கண்டதுண்டோ?
தேனை மறந்திருக்கும்வண்டும் -ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் - இந்த
வையமுழுது மில்லை தோழி''

என்ற வரிகள் அருட்சக்தியில் தோன்றிய அமுதக் கவிதை. பாரதி, தமது அளவற்ற கற்பனை ஆற்றலைப் பறக்கவிட்டுக் காவிய அமைப்பில் சில அழகான சித்திரங்களைச் சமைத்திருக்கிறார். இவைகளிற் சிறந்தது குயிற்பாட்டு. இப்பாட்டில் அவருடைய கனிந்த கவிதை ஆற்றலும் கம்பீரமான கற்பனைத்திறனும் நெஞ்சை அள்ளும் கான ஆற்றலும் ஒருங்கே சேர்ந்து வற்றாத ஊற்றிலிருந்து பொங்கும் அமுத வெள்ளமாய்ப் பெருக்கெடுத்திருக்கின்றன. கவி திடீரென்று தம்மை மறந்து கற்பனைச் சிறகுகள் பெற்று எழுந்து இன்பக் கனவுலகு எய்தி அங்கிருந்த ஒரு குயிலைக் கண்டு மயங்கிக் காதல் கொண்டு அதன் பாட்டைக் கேட்டுப் பின் நேர்ந்ததை அடிமுதல் கடைசிவரை தட்டுத்தடையின்றி மெல்லோசை வளத்துடனே வருணித்திருக்கும் கவிதை போல் பாரதியின் இலக்கியங் களிலே சிற்சில இடங்களிலேதான் பார்க்கலாம்.

குயில்பாட்டு பாரதியின் சிறந்த நூல்களில் ஒன்று என்று ஒப்புக் கொள்ளப்படுகின்றது. ஒருசிலர் அவருடைய கவிதைக் கற்பனையில் மிகச் சிறந்தது இதுவே என்றும் கருதுகிறார்கள். குயில்பாட்டு அருமையான காதல் காவியம். இக்காலத்தில் எழுதப்பெறும் காதல் பாட்டுக்கள் அகத்துறை முறைகளைப் பின்பற்றாது தற்காலப் பண்புடன் இருக்க

வேண்டியது அவசியம். குயில் பாட்டின் மிக முக்கியமான உறுப்பு அதன் எளிய தடையில்லாத கவிதை செறிந்த அகவல் போன்ற நடை, பாட்டு முழுவதும் ஒரே இனிமையான வாக்கு, ஒரே கவிதை வெள்ளம் வேகமும் நயமும் எந்த இடத்திலும் குறையவில்லை. பாட்டு கம்பீரமான கவிதை நிலையுடன் தொடங்கப்பட்டிருக்கின்றது. குயிலின் பாட்டின் முதலடி,

*''காதல், காதல், காதல்*
*காதல் போயிற் காதல் போயிற்*
*சாதல், சாதல், சாதல்''*

உலகம் தோன்றிய நாள்முதல் பல கவிஞர் அநேக நூல்களிலும் காவியங் களிலும் பாடியிருக்கும் உணர்ச்சித் தத்துவத்தை மூன்று எளிய சொற்களில் காட்டுகிறது. இறுதியில் குயில் மறைந்து ஒரு ஒளிப் பெண்ணாகியதைக் கவிஞன் கண்ட காட்சி இது:

*''ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின்*
*தேசமடா! பெண்மைதான்*
*தெய்விகமாங் காட்சியடா*
*பெண் ணொருத்தி அங்கு நின்றாள்*
*பேருவகை கொண்டுதான்*
*கண்ணெடுக் காதென்னைக்*
*கணப்பொழுது நோக்கினாள்*
*சற்றே தலை குனிந்தாள். சாமீ! இவளழகை*
*எற்றே தமிழிசைத்திடுவேன் கண்ணிரண்டும்*
*ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ*
*மீள விழியில் மிகுந்த கவிதையெல்லாம்*
*சொல்லில் அகப்படுமோ?*
*தூய சுடர் முத்தை யொப்பாம்*
*பல்லில் கனியி தழில் பாய்ந்த நில வினையான்*
*என்றும் மறுத்தல் இயலுமோ?''*

பாரதத்தில் துரியோதனன் முதலான கௌரவர்கள் பாண்டவர்களை வஞ்ச கமாகச் சூதுக்கிழுத்து அவர்களை அவமானப்படுத்திய பாகத்தை எளிய நடையில் கவிதைச் சுவையுடனும் நாடகச் சுவையுடனும் புதிய கருத்துக் களுடனும் பாரதியார் ஒரு சிறந்த தமிழ்க் காவியமாக அமைத்துள்ளார். அதுதான் ''பாஞ்சாலி சபதம்'', இதில் பாரதி பெண் சக்தியைப் போற்றுகிறார். அன்னை பாஞ்சாலி பாண்டவரின் காதலி, துரியோதனனால் அவமதிக்கப்

பட்ட பொழுது பெண்ணாக மட்டுமல்ல, அடிமைத்தனத்தில் அவமதிக்கப் படும் பாரத தேவியைப் போலவே காணப்படுகிறாள். இறுதியில் அவளது பெண்மை வெற்றி கொண்ட வேகத்தில் சபதம் செய்யும் பொழுது பரா சக்தியின் உருவமாகிறாள். இக்காவியப் பொருளைப் பொறுக்கினதிலேயே பாரதியின் சுவைத்தன்மையும் நுட்பமான ஆராய்ச்சி ஆற்றலும் நன்கு வெளியாகிறது. தன் கொள்கைக்கேற்ற ஒரு கதையை எடுத்துப் பட்டை போட்டுப் புது வயிரமாக்கியிருக்கிறார். முதல் முதலாகப் பாஞ்சாலி சபதத்தில் பாரதி புராணப் பொருளை நீண்ட காவியமாகக் கையாண்டார். மகாபாரதத்தில் மிக உருக்கமான பகுதியாகிய துகிலுரியும் கதையை அதன் முடிவாகிய திரௌபதியின் சபதத்துடன் முடித்து வெகு அழகாக எழுதி இருக்கிறார்.

பாஞ்சாலி சூதில் வசமான பிறகு துரியோதனனுடைய சபைக்குக் கொண்டுவரப்படுகிறாள். அப்பொழுது தருமம் அழிவுறுவதைக் கவி ஆவேசத்துடன் கூறுகின்றார். துரியோதனின் உத்தரவுப்படி துச்சாதனன் துகிலை உரிகிறான்.

''ஆடை குலைவுற்று நிற்கிறாள் - அவள்
ஆ வென்றழுது துடிக்கிறாள் - வெறும்
மாடு நிர்த்ததுற்சாதனன் - அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கிறான்
திரௌபதியின் துகிலை உரிகையிலே
அச்சோ தேவர்களே - என்
றலறியவ் விதுரனுந் தலை சாய்ந்தான்
உட்சோதியில் கலந்தாள் - அன்னை
உலகத்தை மறந்தாள் ஒருமையுற்றாள்
ஹரி ஹரி ஹரி என்றாள்''

அப்பொழுது பாஞ்சாலியின் புடவை வளர்கிறது.

''..........................................அவை
வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே!
தேவர்கள் பூச்சொரிந்தார் ஓம்
ஜெய ஜெய பாரத சக்தி யென்றே
ஆவலோடெழுந்து நின்று - முன்னை
ஆரிய வீட்டுமன் கைதொழுதான்
சாவடி மறவரெல்லாம் ஓம்
சக்தி சக்தி சக்தி என்று கரங்குவித்தார்''

பெண்மையின் இந்த மகத்தான வெற்றியால் கட்டுண்டு கிடந்த ஆண்மையின் ஆவேசம் பொங்குகிறது. பீமன் சபதம் கூறுகிறான்.

*''நாய் மகனாந் துரியோதனன் தன்னை*
*மாணற் மன்னர் கண்முன்னே - என்றன்*
*வன்மையினால் யுத்தரங்கத்தின் கண்ணே*
*தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்*
*..............................................இது''*
*சாதனை செய்க பராசக்தி யென்றான்.*

ஆழ்ந்த பொருத்தத்துடன் கூடிய பாஞ்சாலியின் ஆவேச சபதத்தோடு காவியம் முடிவடைகிறது.

*''........................................ம்*
*தேவி பராசக்தி யாணையுரைத்தேன்*
*பாவிதுற்சாதனன் செந்நீர் - அந்தப்*
*பாழ்த்துரியோதனன் ஆக்கை இரத்தம்*
*மேவி இரண்டுங் கலந்து - குழல்*
*மீதினிற் பூசி நறுநெய்குளித்தே*
*சீவிக்குழல் முடிப்பேன்யான் - இது*
*செய்யுமுன்னே முடியேனென்றுரைத்தாள்''*

கதையின் வேகத்தையும் உருக்கத்தையும் கொஞ்சமேனும் குறைக்காமல் புதிய நடையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆனால் ஊக்கத்துடனும் உணர்ச்சியுடனும் இலகுவான மெட்டுக்களில் இலக்கியத் தேர்ச்சியற்ற பொதுமக்களும் படித்துப் புத்துணர்வு பெறும்படியாகக் கவி அமைத்திருக்கிறார்.

பொதுவாகக் கருதும் இடத்துத் தமிழ் இலக்கிய உலகிற்குச் சுப்பிரமணிய பாரதி ஒரு புதிய ஒளியையும், ஆற்றலையும், தற்காலச் சுவையையும் தேடி அளித்தார். ஒரு புதிய கவி பரம்பரையையும் தொடங்கியிருக்கிறார். புதிய நாகரிகத்தின் கலைப்போக்கையும் கருத்துப் போக்கையும் சுவையுறக் கலந்து பாமாலைகள் சூடித் தமிழ்த் தாயைப் பாரதியார் வணங்கினார். தமிழ்க் கவிதையின் நறுமணம் வாடிப்போய் செய்யுள்களை இயற்றுவதைச் செப்பிடு வித்தையைச் செய்வது போல் பயின்று ஏட்டுக் கற்பனையை வைத்துச் சத்தும் தற்காலப் பண்புமற்ற தமிழ்ப்புலவர் திண்டாடிக்கொண்டிருக்கும் சமயம் பாரதி உண்மைக் கவியின் ஒளியைத் தமிழகமெல்லாம் வீசி எழுந்தார்.

பாரதி எளிய நடையே சிறந்த கவிதைக்கு அழகு என்பதின் உண்மையை நிலைநாட்டினார். தற்காலக் கவிகள் தம் காலத்து வாழ்க்கையையும் கவிதைப் பொருளாய் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று காட்டினார். பழைமையிலிருந்து புதுமைக்கு மாறிக்கொண்டிருக்கும் தமிழரின் அறிவின் ஒளிக்கு உருவமும் இதயத்தின் ஒலிக்கு இசையும் அளித்துப் பாரதி கவிதை பூனைந்தார். தமிழ் நாட்டின் தற்கால வாழ்க்கையைச் சார்ந்த பல உறுப்புக்களைப் பற்றியும் சமுதாய வாழ்வின் குறைகள், அவைகளை நீக்கும் முறைகள் முதலியன பற்றியும் அவர் பல பாட்டுக்கள் பாடியிருக்கிறார்.

**தேசிக விநாயகம்பிள்ளை**

நடை, சந்தம், கற்பனை முதலிய உறுப்புக்களில் பாரதியைப் பின்பற்றியவருள் தேசிகவிநாயகம்பிள்ளையும் ஒருவராவர். இவர் எழுதியிருக்கும் பெரிய பாட்டுகளில் ''கருணைக் கடல்'', ''பாரசீகக் கவியமுதம்'' ஆகிய இரண்டும் சிறந்தவை. அன்பின் வெற்றி, தன் மகனை இழந்த தாய்க்குப் புத்தர் உபதேசித்தல் இவை அவ்வளவு சிறந்தன அல்ல. முதலிரண்டும் ஆங்கிலக் கவிகளைத் தழுவி ஆக்கப்பட்டிருந்த போதும் கவிதைப் போக்கில் கனிந்த தமிழ்ப் பண்பையும், சுவையையும் பெற்றிருக்கின்றன. செய்யுள் நடை இனிமையுடனும், எளிமையுடனும் மெருகிடப்பட்டிருக்கிறது. புத்தர் பிரான் பிம்பிசார மன்னன் யாக சாலைக்குப் போகும் ஆடுகளைப் பின்தொடர்ந்து போய் வேள்வியில் நடைபெற இருக்கும் ஆட்டுப் பலியை நிறுத்தி அவைகளுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த உலகம் போற்றும் கதை, அழகுடனும், ஆற்றலுடனும் ஆக்கப்பட்டிருக்கிறது. ''உமர்கயாம்'' முதலிய பாரசீகக் கவிகளின் சுவை ததும்பும் இன்னிசைப் பாடல்களைத் தமிழ்க் கவிதையாக்கியிருப்பது, தேசிகவிநாயகம்பிள்ளை தமிழுக்குச் செய்த ஒரு தனித்தொண்டாகும். பாரசீகப் பாடல்களின் இசையும் கருத்துக்களும் தத்துவமும் இவர் பாட்டுக்களில் நன்றாய் பிரதிபலிக்கின்றன. வாழ்க்கை நிலையற்றது. உயிரெல்லாம் ஒன்று என்ற தத்துவத்தை இவர் பாக்களிற் காணலாம்.

''உண்டவெறியில் முன்னொருநாள்
உண்ட கலத்தை உடைத்தெறிந்தேன்
துண்டு துண்டாய்ப் போனகலம்
துணிந்து மெல்ல எனை நோக்கிப்

*''பண்டுயானும் உன்வாழ்வைப்*
*பாரில் அடைந்தேன் நீயுமெனக்கு*
*அண்டும் இந்த வாழ்வை இனி*
*அடைவாய் உண்மை என்றதடா''*

என்பது அத்தகைய பாக்களில் ஒன்று. தேசிகவிநாயகம்பிள்ளையின் சிறுபாட்டுக்களில் சில முதல் தரமானவை. ''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா'' என்ற உணர்ச்சி ததும்பும் பாட்டில் பாரதியின் கவிதையின் பெருமையையும் வெற்றியையும் எடுத்து இயம்புகின்றார். ''கிளி'', ''மலர்கள்'', ''குழந்தை'', ''ஆறு'' முதலியவை சிறந்த நயமுடையவை. ''ஆறு'' ஆங்கிலக்கவி குட்டிச் என்பவரின் ஒரு பாட்டின் நிலையையும் கருத்தையும் பின்பற்றி இருக்கிறது. ஒரு நதி பேசும் திறமை பெற்று தன் வாழ்க்கையின் சலிப்பு இல்லாத நடையையும் உலகத்திற்கு உயிரும், உணவும், பசுமையும் கொடுக்கும் பாக்கியத்தை இறைவன் தனக்கு அளித்திருப்பதில் பெருமை கொண்ட பான்மையையும் மனிதனை ஏளனம் செய்வது போல் தோன்றும்படியாகச் சொல்லும் இந்தப் பாட்டு கற்றோர்க்கு இன்பம் தரவல்லது.

*''கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்*
*காடும் செடியும் கடந்து வந்தேன்*
*எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்*
*இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்*
*அல்லும் பகலும் அலைந்து வந்தேன் - எங்கள்*
*ஆழி இறைவனைக் காணவந்தேன்*
*நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்*
*நீண்ட வழிபோக வேண்டும் அம்மா''*

''மலரும் மாலையும்'' என்ற தொகுதியில் சமூக சீர்திருத்தத்தை முன்னிட்டு ''சமூகம்'' என்ற தலைப்பில் சில பாட்டுக்கள் பாடியுள்ளார். இவருக்கு அழியாப் புகழை அளிப்பது 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்னும் நூல். நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி வேளாளர் குலத்திற் பிறந்த ஒரு பெண் தன் வாழ்க்கையில் அனுபவித்த துன்பங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி வருந்துகின்றாள். இவள் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். பதினாறாவது வயதில் ஒரு பிரபுவுக்கு ஐந்தாம் மனைவி யானாள். கணவன் வீட்டில் மாமி, சக்களத்திகள், மதினி முதலியோரால் இவள் அடைந்த துன்பத்திற்கு அளவில்லை. சிறிது நாளில் இவள்

கணவனுக்கும் அவன் மருமகனுக்கும் குடும்பக் காரியங்களை முன்னிட்டு மனச்சச்சரவு உண்டாயிற்று. மனவில்லங்கம் முற்றி வழக்காய் முடிந்தது. வழக்கு முடியுமுன் கணவன் வியாதியால் விழுந்தான். அச்சமயம் அவனுடைய அவகாசிகள் செய்த துன்பங்களைச் சொல்ல முடியாது. மரணத் தறுவாயில் கணவன் தன் மகளைக் காப்பாற்றும்படி மருமகனிடம் ஒப்புவித்தான். ஆனால் அவன் இறந்தவுடன் மனைவி, மக்கள் யாவரும் வீட்டிலிருந்து வெளிப்படுத்தப்பட்டனர். அப்பொழுது தங்களுக்குள் வழங்கும் மருமக்கள் வழி அவகாச அக்கிரமத்தை அப்பெண் பழித் துரைக்கிறாள்.

இக்கதையின் நாயகி துன்பத்திற்கும் வறுமைக்கும் தாயகமாயுள்ள ஒரு குடும்பத்தில் தோன்றினாள். அநாதை, ஐந்து கலியாணம் செய்த பிள்ளைக்கு மனைவியாய் இவள் வாழ்க்கைப்பட்டாள். புகுந்தகத்தில் செல்வமிருந்தது, ஆனால் துன்பத்துக்குக் குறைவில்லை. இவளது கணவனை மருமகனாகிய அவகாசி பழித்து வைகிறான் இங்கே.

*''ஆரைக்கேட்டுநீர் ஐந்து கலியாணம்*
*அடுக்கடுக்காய்ச் செய்தீர் ஐயா?*
*பட்டப்பெயரும் பஞ்சகலியாணிப்*
*பிள்ளையென்றுநீர் பெற்றுவிட்டீரே''*

என்று மருமகன் கூறுவது நகைச்சுவையின் பேரெல்லையைத் தொட்டு விடுகிறது. பின் குடும்பச் சண்டை முற்றிக் 'கோர்ட்டு'ச் சண்டையாக மாறிவிடுகிறது. முதலில் இருந்த வீறாப்புகள் வர வரக் குறைகின்றன. குடும்பச் சொத்துக் கரைந்து போய் விடுகிறது. கவலையும் நோயும் பிடிக்கின்றன முடிவில்.

*''படிப்படியாய் இப்படியவர் பாடு*
*குறைந்து குறைந்து கொண்டேவந்தது*
*அண்டைவீடாகி அறைப்புரையாகி*
*படிப்புரையாகிப் பாயிலுமானார்*
*எழுந்து நடக்க இயலாதானார்*
*நடந்தவர் கீழே கிடந்தார் அம்மா''*

நோயும் பாயுமாய்க் கிடந்த கணவனுக்கு இரண்டு மனைவியர்களே கடைசிக் காலத்தில் உதவியவர்கள். கடைசிக்காலமும் அமைதியாய்க் கழிந்த பாடில்லை. அவரது தங்கையும் மருமகனும் இருக்கிற பொருள் களைக் காவல் செய்து வைப்பதற்கு வந்து சேர்ந்தார்கள். மருமகனிடத்தில்

நல்ல சொல் சொல்லித் தன் மனைவி மக்களை காப்பாற்றும்படி சொல்கிறார். தங்கை இதைக் கண்டு மிகவும் கோபித்து வைப்புத் திட்டங்களெல்லாம் பூட்டி முத்திரையிடச் செய்கிறாள். கதையைச் சொல்லி வரும் ஐந்தாம் மனைவி,

*''கணவர்க் கந்திய காலம் தண்ணீர்*
*குடிக்கும் பாத்திரம் குடுக்கையானதும்*
*பரந்த சட்டி படிக்க மானதும்*
*பாலும் அன்னப் பாலே யானதும்''*

எண்ணி எண்ணி நெஞ்சம் குமுறுகின்றார். கணவர் முடிவு வந்தது.

*''ஏங்கியழுத எங்களை நோக்கினர்*
*வாடி யழுத மக்களை நோக்கினர்*
*கடவுளை எண்ணிக் கையை எடுத்தனர்*
*கண்ணை மூடினர் கயிலை போய்ச் சேர்ந்தனர்''*

கதாநாயகியின் துக்கம் நிரம்பிவிட்டது. அவர்கள் கண்களிலும் மனதிலும் உதிரம் கொட்டுகிறது. அவள் வயிறு எரிகிறது, அனல்ப்பிழம்பு பெருக் கெடுத்தோடுவது போல் அவள் சொற்கள் புறப்படுகின்றன.

*மருமக்கள் வழி*
*மனிதரைப் பேயாய் மாற்றும் பாழ் வழி*
.......................................................
*அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று*
*அவ்வை சொல் மொழி அறியாமட வழி*
.......................................................
*கற்றவர் உளரோ கற்றவர் உளரோ*
*வறுமைக்கிரையாய் மக்களைவிட்டிடும்*
*அறிஞரும் உளரோ அறிஞரும் உளரோ*

என்று கதறி ஓலமிடுகிறாள் கதாநாயகி.

**பாரதிதாசன்**

வெறி கொண்ட மன எழுச்சியை சித்தரிப்பதிலும், சொற்களைக் கொட்டும் ஆவேசத்திலும் வாழ்க்கையைச் சார்ந்த பல பொருள்களைக் கவிதைப் பொருளாக அமைத்துக் கொள்வதிலும், கருத்து வன்மையிலும் அனல் தன்மை பெற்ற தற்காலச் சுவையிலும் ''பாரதிதாசன்'' சிறப்புற்று விளங்கு கின்றார். பாரதிதாசன் தனித்தமிழ்க் கவிஞராவார். அவர் நூல்களைக்

காலவரிசைப்படுத்தி வாசிப்பவர், அவற்றின் கவிதைத் தன்மையின் வளர்ச்சியோடு தனித்தமிழ் நடையிலும் வளர்ச்சியிருப்பதைக் காணலாம். தனித்தமிழ்ச் சொற்களிலெல்லாம் தமிழர் இலக்கிய மாண்பு செறிந் திருத்தல் கண்டு அவர் வரவர மிகுதியான ஆர்வத்துடன் அவற்றை வழங்கி வருகின்றார். அதோடு தனித்தமிழார்வம் மொழித்துறையில் தமிழன் விடுதலை வேண்டுவதைக் குறிக்குமென்றும், அதனைப் போற்று வது தமிழர் இயல்பு என்றும் அவர் கொள்ளுகிறார். அழகின் சிரிப்பில் ''தமிழராவோர் தனித்தமிழ்ச் சொல்லை அழியாது காக்கும் மரபினரே'' என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ்ச் சொற்களென்றால் கடவுளுக்குப் பிடியாதா? தமிழை உரைத்தால் கடவுள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டாரா? கடவுளை வாழ்த்து தற்கும் கடவுளிடத்துக் குறைகளை எடுத்துக் கூறுவதற்கும் சங்கதச் சொற்கள்தானா உதவும் என்று கேட்கிறார் கவி.

*''உயிர்போன்ற உங்கள் தமிழ்*
*கடவுளுக்கே உவப்பாதல்*
*இல்லை போலும்!*
*உயிர் போன்ற உங்கள் தமிழ்*
*உரைத்தக்கால் கடவுளதை*
*ஒப்பார் போலும்!*
*பயிரழிக்கும் விட்டிலெனத்*
*தமிழ் மொழியைப்படுத்த வந்த*
*வடமறைதான்*
*செயர்தீர் வாழ்த்துதற்கும்*
*தேவையினைச் சொல்லுதற்கும்*
*உதவும் போலும்''*

போதாக் குறைச்சலுக்கு ஆரியப் பூசாரியைத் தேரின் மேல் வைத்து இழுத்துத் தமிழ் மக்கள் வருந்துகின்றாரே எனப் பாரதிதாசன் தமிழர்மேல் இரக்கம் கொள்ளுகிறார்.

*''பல்லிசைகள் நேர்முழக்கப்*
*பகல் போலும் விளக்கெடுப்பக்*
*குதிரை யானை*
*நல்ல சிறப்பளித்துவர*
*நடுவிலொரு தேவடியாள்*

ஆட மக்கள்
எல்லாரும் கயிறிழுக்க
இயல்குமொரு தேர்மீதில்
ஆரியத்தைச்
சொல்லிடுமோர் சொரிபிடித்த
பார்பானைக் குந்தவைத்தல்
தூய்மைதானோ!''

மண வீடுகளில் மணமக்களைத் தமிழில் வாழ்த்திக் கூறினால் அவ்வாழ்த்து காதுக்கு இனிமையாய் இராதா? திருமணச் சடங்குகளை தமிழால் நடத்தினால் இன்பம் மல்காதா? என்று கேட்கின்றார் கவி.

''மணமக்கள் தமைத் தமிழர்
வாழ்க என வாழ்த்துமொரு
வண் தமிழ்க்கே
இணையாகப் பார்ப்பான் சொல்
வடமொழியா தமிழர் செவிக்
கின்பம் ஊட்டும்?
பணமிக்க தலைவர்களே
பழியேற்க வேண்டாம் நீர்
திருமணத்தில்
மணமக்கள் இல்லறத்தை
மாத்தழிலால் தொடங்கிடுக
மல்கும் இன்பம்''

தமிழன் பேரைச் சொல்லி தமிழரிடைத் தமிழ் நாட்டிலே வாழ்ந்து தமிழை அழித்து தமிழர் தமைத் தலைதூக்க விடாது தமிழரின் சீரினைக் குறைத்து ஒரு சொல் சொன்னாலும் பிராமணனை உமிழ்ந்திடுவீர் என்று கதறுகிறார்.

''தமிழரின் சீர்தன்னைக் குறைத்து
தனியொரு சொல்ச் சொன்னாலும்
பார்ப்பான் தன்னை
உமிழ்ந்திடுக மானத்தை
ஒரு சிறிதும் இழக்காதீர்
தமிழைக் காக்க
இமையளவும் சோம்பின்றி
எவனுக்கும் அஞ்சாது
தொண்டு செய்வீர்

*சுமை உங்கள் தலைமீதில்*
*துயர் போக்கல் உங்கள் கடன்!*
*தூய்தின் வாழ்க''*

பாரதிதாசன் போர் முரசு கொட்டும் புதுக்கவி. 'கொலைவாளினை எடடா மிகு - கொடியோர் செயல் அறவே' என முரசடிக்கின்றார். சமூகக் கொடுமை யெல்லாம் தகர்த்தெறிய வேண்டுமென்பதே இவர் கொள்கை.

*''செல்வங்கள் யார்க்கும்*
*என்றே சொல்லி பேரிகை*
*திக்கில் முழக்கிடுவாய்.''*

மூடக்கொள்கை, சமயக் கட்டுப்பாடு, அடிமைத் தன்மை இவைகளிலிருந்து விடுபட்டு அறிவின் இன்பம் பெறச் செய்வதே இவரின் நோக்கம்.

*''இக்கால நால் வருணம் அன்றிருந்தால்*
*இருட்டுக்கு முன்னேற்றம் ஆவதன்றிப்*
*புக்கபயன் உண்டாமோ''*

*''ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்*
*உதையப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள்*
*ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி*
*ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பா நீ!''*

ஒருவனும் ஒருத்தியும் மனம் உவந்திடில் அதுவே காதல், உண்மைக் காதலுக்கிடையூறாக, பேடி வழக்கங்கள் மூடத்தனம் இந்த;

*''பீடைகளே யிங்குச் சாத்திரங்கள்*
*காதலடைதல் உயரியற்கை - அது*
*கட்டில் அகப்படும் தன்மையதோ? அடி*
*சாதல் அடைவதும் காதலிலே''*

தாலாட்டுப் பாடல்களிற்கூட இவருடைய தத்துவங்களும் வயிற்றெரிச் சலும் கலந்து வருகின்றன. எல்லாம் அவன் செயலே என்று பிறர் பொருளை வெல்லம் போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும் காப்பார் கடவுள் உமைக் கட்டையில் நீர் போகுமட்டும் வேர்ப்பீர், உடைப்பீர் என உரைக்கும் வீணருக்கும்,

*''மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த*
*தேனின் பெருக்கே என் செந்தமிழே கண்ணுறங்கு*
*பெண் குழந்தைக்கு ஒரு தாலாட்டு!*

*''மூடத்தனத்தின் மூடை நாற்றம் வீசுகின்ற*
*காடுமணக்க வரும் கற்பூரப் பெட்டகமே!*
*புண்ணிற்சரம் விடுக்கும் பொய்மதத்தின் கூட்டத்தை*
*கண்ணிற் கனல் சிந்திக் கட்டளிக்க வந்தவளே!*
*எல்லாம் கடவுள் செயல் என்றுதுடை நடுங்கும்*
*பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய்ய வந்தவளே''*

பொறுமை என்பது வேண்டியதுதான், ஆனால் அப் பொறுமையினால் பயன் ஏற்பட வேண்டும். நாட்டிற்குக் கேடுவரும் நேரத்தில் பொறுமை வேண்டுமென்று சும்மா இருத்தல் பொறுமை ஆகாது என்ற ஓர் அரிய கருத்தை செய்யுளில் அமைத்துள்ளார்.

*''பலமுறை பொறுப்பாய்வேறு*
*பழுது நேருமெனில் சீறு!*
*நிலைமை மிஞ்சுகையில் பகைவனை*
*நீறாக்கலே பொறுமையின் பயன்''*

பெண்கள் நாணம் உடையவர்கள், தங்கள் ஆடை விலகினால் உடனே திருத்திக்கொள்வார்கள். பிறர் விலக்கிவிட்டால் உடனே கோபம் வந்து விடும். ஆனால் தென்றல் வந்து விலக்கினால் அதை விலக்காமல் இன்பம் நுகர்வர் என்ற பொருள்பட,

*''பெண்கள்*
*விலக்காத உடையை நீ போய்*
*விலக்கினும் விலக்கார் உன்னை''*

என்று தென்றலை நோக்கிப் பாடுகிறார் கவிஞர்.

பத்திரிகை, யாத்திரை, புத்தகசாலை முதலிய தலைப்புகளில் அமைந்த கருத்துக்கள் சிறந்தன. பத்திரிகைப் பெண்ணானவள் ஓவியம் தருகிறாள். காவியம் தருகிறாள், மேவிடும் விகடம் பேசுகிறாள், கூவுகிறாள், வீரப் பேச்சு கொட்டுகிறாள்.

*''ஓவியம் தருவாய்! சிற்பம்*
*உணர்விப்பாய்! கவிதையூட்டக்*
*காவியம் தருவாய்! மக்கள்*
*கலகலவெனச் சிரிப்பு*
*மேவிடும் விகடம் சொல்வாய்*
*மின்னிடும் காதல் தந்து*
*கூவுவாய்! வீரப்பேச்சுக்*
*கொட்டுவாய் கோலத்தாளே!''*

புத்தகசாலையில் இனித்த உலகம் இயற்கை எழில் எல்லாம் காணலாம். இசை கேட்கலாம்! மணம் முகரலாம்! சுவை உண்ணலாம். ஆதலால்,

*''புதுமையுற்றுமக்கள் புதுவாழ்வுவேண்டில்*
*புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்*
*சுமைசுமை யாச்சேகரித்துப்பல்கலைசேர்*
*துறைதுறையாய்ப் பிரித்திடுகவைத்தல்வேண்டும்''*

எனப் பகர்கின்றார் பாரதிதாசன். தமிழ்நாட்டிற் சினிமா வந்ததைப் பற்றிப் பாடிய பாக்களிற் சில வருமாறு:

''வடநாட்டார் போன்ற உடை! வடநாட்டார் மெட்டு
மாந்தமிழர் நடுவினிலே தெலுங்கு கீர்த்தனங்கள்
வடமொழியில் ஸ்லோகங்கள்! ஆங்கிலப்பிரசங்கம்
வாய்க்குவரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்
அடையும் இவை அத்தனையும் கழித்துப் பார்க்கும்கால்
அத்திம்பேர் அம்மாமி எனும் தமிழ்தான் மீதம்
கடவுளர்கள்! அட்டைமுடி! காகிதப் பூஞ்சோலை
கண்ணாடி முத்துவடம் கண் கொள்ளாக் காட்சி!
பரமசிவன் அருள் புரிய வந்து வந்து போவார்
பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடி தீரும்
சிரமமொருதாளமெண்ணிப் போட்டியிலே பட்டுச்
சிலபாடிமிருதங்கம் ஆவர்த்தம் தந்து
வரும் காதல்! அவ்விதமே துன்பம் வரும்! போகும்!
மகரிஷிகள் கோயில்குளம் - இவைகள் கதாசாரம்
இரக்கமற்ற பட முதலாளிக் கெல்லாமிதனால்
ஏழைகளின் ரத்தத்தை உறுஞ்சிய துலாபம்!''

விளையாட்டாகவும் எவ்வளவோ பாடல்கள் பாடியுள்ளார். ''எமனை எலி விழுங்கிற்று'' போன்றவை அவை. பாரதிதாசன் புரட்சிக்கவிகளைப் புனையாதிருப்பாராயின், சமூக சீர்திருத்தப் பாடல்களைப் பாடாதிருப்பாராயின், ஏனையோரைப் போல எளிமையில் புகழை விரும்பி, மக்கள் நலன் நாடாது ஒதுங்கி வாழ்ந்திருப்பாராயின் இன்று தமிழகத்தில் அவர் சிறந்த புலவராக வைதீகப் புலவர்களால் மதிக்கப்பட்டிருப்பார். பிற்போக்கையுடைய பத்திரிகைகள் அத்தனையும் அவரை ஒருசேரப் புகழ்ந்திருக்கும்.

# லளித கலைப்படிப்பு

S. கணபதிப்பிள்ளை
*ஆசிரியர், மத்திய கல்லூரி, மட்டக்களப்பு*

உலகத்தின் குழந்தைப்பருவத்திலே தமிழர்கள் மிக்க புராதனத்தையும், தனிச் சிறப்பையுடைய ஒப்பற்ற நாகரிகத்தையுடையவர்களாகவிருந்தனர் என்பதை நாம் சரித்திர ஒற்றைகளைப் புரட்டும்போது காணலாம். சுதந்திர வாழ்வினால் இன்பம் கண்ட அவர்கள், கலைகளைப் பேணி கலையுலகில் ஒப்பற்ற ஸ்தானத்தை வகித்தனர். கற்பனை வீச்சினால் கலைக்குப் புதுவேகத்தையளித்தனர். அப்போது நாடெங்கும் கலை பரிமளித்தது. இவ்விதம் உயர்ச்சியுற்றிருந்த தமிழ்நாட்டு அருங்கலைகளெல்லாம், நாளடைவில் அந்நியரின் படையெடுப்புக்களினாலும், நீண்டகால அடிமை யாட்சியினாலும் மாண்பிழந்து நின்றன. கலைப் பொக்கிஷங்களெல்லாம் போற்றுவாரும் ஆற்றுவாருமின்றி மங்கிக்கிடந்தன. இவ்விதம் பல வருடங்கள் மறைந்தன. நாடு அடிமையினின்றும் நீங்கி சுதந்திர வாழ்வு பெற்றது. நூற்றைம்பது ஆண்டுகளாக ஒண்டி வாழ்ந்து, மனிதனென்று கருதப்பட்ட வண்ணமிருந்த இந்தியர், வாழ்க்கைப் புயலின் வேகத் தினாலும் அடிமையாட்சியிலேற்பட்ட அரசியல் கொந்தளிப்பினாலும் புதியதோர் உணர்ச்சி பெற்றனர். மொழி வளர வேண்டும். கலையின் உணர்ச்சி மனித சமூகத்தின் சுக வாழ்க்கையின் ஒவ்வொரு காரியாம் சத்திலும் பிரதிபலிக்க வேண்டும். நாடு வளம்பட வேண்டும் என்ற எண்ணங்கள் தீவிரமாகப் பரவிவருவதைக் காண்கிறோம். எனவே, கலைப்படிப்பைப் பற்றி நாமும் அறியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படத்தான் செய்கின்றது.

சமூகத்தோடும் குடும்பத்தோடும் மனிதனுக்குள்ள உறவுகளை ஒழுங்குபடுத்தவும், பொருள் பொதிந்த வகையில் பண்ணுற வாழவும், வாழ்விலேற்படும் பிரச்சினைகளை புத்திசாலித்தனமாகத் தீர்த்து அகத் தினில் ஆனந்தமும் அடைவதற்கும் போதிக்கப்பட வேண்டும் என்பதே புதிய கலைப்படிப்பின் நோக்கமென அறிஞர்கள் பலர் கருதுகின்றார்கள். மனிதனிடம் இயல்பாக உள்ளத்தெழுகின்ற உணர்ச்சிகளுக்கு நிலையான

உருக்கொடுக்கவும், வாழ்வில் அமைதியையும் இன்பத்தையும் காண பதற்கும் கலைதான் பெரிதும் உதவுகிறது என்பதை நாம் அறிவோம். நளின கலைகளான ஓவியம், சிற்பம், இசை, நடனம் என்பன சிந்தனைக்கு இன்பமளித்து அழகுணர்ச்சியை (Aesthetic feeling) வளர்ப்பன.

நாம் சாதாரணமாகக் கல்யாண காலங்களிலும் விசேட கோயில் உற்சவ காலங்களிலும் கலையுணர்ச்சியின் மேலீட்டைக் காணலாம். மாப்பிள்ளை, மணமகளின் உடையணிவையும், இருவரின் ஏற்ற பருவத் தையும், அவர்களுடைய கண்வீச்சுக்களையும் கலையுள்ளங்கள் கவனித்து ரசிக்கின்றன. மற்றவர்கள் தங்களைச் சிங்காரித்துக் கொண்டு கல்யாண வீட்டுக்கு வருதல், வீதியில் வரும்போது ஆரத்தியெடுத்தல் என்பன வற்றையும் நோக்குமிடத்து கலைக்குரிய நாட்களாகவே தோற்றமளிக் கின்றன. இன்னும் நாளாந்த வாழ்வில்கூட கலையின் ஸ்தானம் வலியுறுத் தப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். பெண்மணிகள் எப்பொழுதும் ஏற்ற கரைகளமைந்த சீலைகளையும், சித்திர ரூபமான நகைகளையும் அணிவதை காண்கிறோம். தேர்ந்தெடுக்கும் உடை, அணியும் முறை என்பன அவர்களுடைய வாழ்க்கை முறையையும், மன எண்ணங்களையும் வெளியிடுகின்றன. ஆரோக்கியமும் அழகும் வாய்ந்த சூழ்நிலையை யுடைய வீட்டில் வசிப்பது, சுவையானதும் பெலந்தருவதுமான உணவை சுத்தமான முறையிலுண்பது இவைகளெல்லாம் வாழ்வில் முக்கியமான விஷயங்கள்தான். இவற்றைச் செவ்வையாக வாழ்க்கையில் கையாளப் பெரிதும் உதவுவது கலைதான். இக்கலை முறையில் பாடசாலைகளில் மாணவர் கல்வி கற்கும் போது போதிக்கப்பட வேண்டும். பாடத்திட்டம் இக்கலைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

கலைஞனின் உள்ளப்போக்கே தனிகரமானது. அவன் காணும் பொருள் பொதிந்த கற்பனா உலகம் நம் உள்ளத்தோடு ஒன்றுவதில்லை. நாம் பார்க்கும் பொருட்களை நோக்கும் கலைஞன் பார்ப்பவை, நம் எண்ணத் துக்கு அப்பாற்பட்டுத்தான் நிற்கிறது. நம் பார்வையும், கலைஞனின் பார்வையும் ஒன்றுபட வேண்டுமானால் கலையின் நுண்ணிய கருத்துக் களில் ஈடுபடும் ஆற்றல் வேண்டும். நம் பார்வையில் ஏற்படும் அறிவு மறைந்து விடுகிறது. ஆனால் ஓவியனின் பார்வையிலேற்பட்ட அந்த அற்ப அறிவின் மூலம் எதிர்ப்பட்டதை நிர்மானித்து விடுகிறான். இதுதான் கலைக் கண்ணுக்கும் சாதாரணமான கண்ணுக்குமுள்ள பேதம். இந்திய சிற்ப, சித்திரங்கள் உயர்ந்த லட்சியங்களையுடையனவாயிருக்கின்றன.

வெளிநாட்டார் இவற்றைப் பெரிதும் வரவேற்கின்றார்கள். நாம் கலைக்கண் கொண்டு நோக்கினால், அவற்றின் பெருமையைக் காணலாம். சதாகாலமும் புகைப்படங்களையும், போலிச் சித்திரங்களையும் கண்டு அவற்றில் திளைத்த நம் கண்களுக்கு அவற்றினுயர்வு தோன்றாமலிருப்பதில் ஆச்சரியமில்லை. கலைப்பொருளை ஆக்குவதைப்போலவே அவற்றையறிந்து போற்றவும் வேண்டும். பொருட்களின் தரமறிந்தோ அன்றேல் தன்மையையுணர்ந்தோ, தேவைக்கும் தகுதிக்குமேற்ப ஏற்கவோ, தள்ளவோ அவற்றைப் பற்றிய பூரண அறிவு வேண்டுமன்றோ! எனவே கலைப் படிப்பினவசியம் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பது பெறப்படுகின்றது.

பாலைவன வாழ்வை பசுமையாக்குவது கலைதான். ஆயினும், இதேநேரத்தில் கலையின் ஜீவநாடி ரசிப்புத்தான் என்பதையுமறிய வேண்டும். ரசித்தல்கூட பெருங்கலைதான் என்று அறிஞர்கள் கூறுவர். மனிதனுடைய சுபாவ குணங்களாகிய அறிதல், உணர்தல், செய்தல் என்னும் மூன்றினுள்ளும் ரசிகஞானம் உணர்தலுடன் பெரிதும் தொடர்புடையது. எனவே சிறுபராயத்தில் இது காணப்படுவது நூதனமல்ல. இச்சுவையானது எண்ணத்தைப் பார்க்கிலும் தாக்க அம்சத்தையுடையது. இவ்விதமான ரசிக ஞானத்தைத் திட்டமாக மதித்துக் கூறவியலாது என்றும், ஒன்றின் சிறப்பை மதிப்பது சிக்கலான மானதக் கிருத்தயம் என்றும் அகநூலார் கூறுவர். இவ்விசார விஷயத்துள் ஆழ்ந்தோர் தத்தம் மனப் போக்கிற்கிசைந்து நோக்கும் நிர்ணயமுடையராயிருப்பர். மனிதனின் விவேகம், ஆற்றல், போக்கு, நாட்டம், சாதி, ஊர், நாகரிகம், பழக்க வழக்கங்கள் என்பனவற்றிற்கேற்ப ரசிகஞானம் வித்தியாசப்படும். எனவே ஆழ்ந்து நோக்கினால் மனிதனுடைய தனித்தனி வித்தியாசங்களே (individual differences) காரணமெனப் புலப்படும். நமக்குள்ளே ரசித்தலில் பலதரப்பார் இருப்பதால், நம்மெல்லோரையும் ஒரேயளவில் திருப்தி செய்ய முடியாதென்பது புலப்படும். நம்மால் விளங்க முடியாதவற்றைக் கண்டு கலைஞனின் சிருஷ்டிகளின்மேல் பழிசுமத்தல் தவறாகும். எனவே, முற்கூறிய ரசிகஞானம் பள்ளிக்கூடத்தில் மாணவனாயிருக்கும் காலத்திலிருந்தே கவனமாக வளர்க்கப்பட வேண்டும்.

கல்வியின் நோக்கம் சமூகத்தில் யாவரோடும் சேர்ந்து வெற்றிகரமாக வாழவும், சாமர்த்தியத்துடன் நடந்து கொள்ளவும் அதாவது ஒரு லட்சிய பிரஜையாக ஆக்குவது எனலாம். இது கலைகளினுதவியால்தான் முடியும்.

இந்திய சிற்ப சித்திரங்களில் ஒரு பெரிய தத்துவத்தைக் காணலாம். வர்ணக்கோல் கொண்ட ஓவியன், ஒரேயிடத்தில் ஜீவராசிகளின் சேர்க்கையைப் படைத்து விடுகிறான். இது இந்திய கலைகளின் தனி மரபாம். மனிதகுலம் மட்டுமன்றி, மற்றெல்லா ஜீவராசிகளும் ஒன்றாய் வாழும் நிலையை இலட்சியமாகக் கொண்டு கலைக் கோயில்களிலுள்ள சிற்பங்கள் சித்திரங்களாக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இன்னும் லௌகீக வாழ்க்கைக்கு இவ் லளித கலைகளெல்லாம் உண்மையின் மெய்ப் பொருளைக் காட்டுகின்றனவல்லவா? ஆனால் மேனாட்டு ஓவியங்கள் வேண்டிய அளவு இடைவெளியையுடையனவாய், அவர்களுடைய தனிப்பட்ட குறுகிய மனப்பான்மையையுடைய வாழ்க்கைத் தத்துவத்தையே புகட்டுகின்றன. பொதுவாகச் சிற்பம் மனித உருவத்தையே கொண்டு ஆக்கப்படுவதாகலின், மனத்தில் ஆழ்ந்து கிடக்கும், ''குறிக்கோள் தன்மையை'' (Iedal self) வெளியிட உதவுகிறது. இசையில் இக்குறிக்கோட் பகுதி இன்னும் முக்கியத்துவம் பெறுகிறது. ஓவியமும் அப்படியே, இவ்வித அரிய கொள்கைகளெல்லாம் பரவ நாம் கலைகளைத்தான் கற்க வேண்டும்.

எனவே, மேற்கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவகையில் கல்வித்திட்டம் அமைய வேண்டும். நாம் இன்று காண்பதென்ன? பாடசாலையில் சித்திரமோ, கைப்பணியோ, சங்கீதமோ, நாட்டியமோ பொதுவாகப் பரீட்சையில் தேறிவிட வேண்டும் என்பதற்கே. ஆத்திரத்துக்கு ஆதரவு கொடுக்கிறதே தவிர உண்மையான கலைகளின் அடிப்படைக் கல்வியாக இருக்கவில்லை. இதனைக் கல்வி விசாரணைச் சபையாரே தாம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். பாடத்திட்டத்திலும் குறிப்பிட்டுள்ளார்கள். பாடத்திட்டத்திலும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டே தீர வேண்டும். மனிதனிடத்திலமைந்துள்ள அழகுணர்ச்சியைத் தட்டி எழுப்பி விடுவதோடமையாது ரசிகஞானத்தை வளர்க்கவும் உதவ வேண்டும். கல்வியில் கலை பரிமளிக்க வேண்டும். இலங்கையின் குடிசைக் கைத்தொழிற் பொருட்களெல்லாம் வளம் பெறவேண்டும். களிமண் வேலைகளும் மற்றும் கை வேலைகளும் துரிதமாக வரவேற்கப்பட வேண்டும். இன்னும் உள்ளூரில் செய்யப்படும் பீங்கான்கோப்பை, பானை, சட்டி முதலிய மட்பாண்டங்களும் மற்றும் உலோக வேலைகளுக்கும் பாடசாலையில் ஆதரவு தரவேண்டும்! போட்டோக்கள், இயந்திரதொழில் முறையை விளக்கும் படங்கள், விஞ்ஞான வளர்ச்சியை விபரிக்கும்

காட்சிப் பொருட்கள், உணவு, உடைத்தொழில் சம்பந்தமான படங்கள்- இவை போன்றவற்றை பள்ளிக்கூடக் கலைக் காட்சிகளில் வைக்கலாம். கலைக் காட்சிகளினால் புஸ்தக படிப்புக்கவசியமான அறிவைப் பெறுவர். லளித கலைகளொவ்வொன்றுக்கும் தனித்தனி கல்லூரிகளும், கலாபவனங் களும் நிறுவப்பட வேண்டும். முன்னமேயமைந்துள்ள கழகங்களுக்கு ஆதரவளித்து ஊக்குவித்தல் வேண்டும். அதனைப் பற்றியும் போதிக்கவும் அழகியலை விருத்தி செய்யவும் சங்கங்கள் தோன்றி சலியாது கடமை யாற்ற வேண்டும்.

இவ்விதம் கலை புதுவேகத்துடன் காட்சியளிக்கும்போது பிற்காலத்தில் சமூகத்தில் அங்கத்துவம் வகிக்கப்போகும் மாணவன் பாடசாலையில் தக்க பயிற்சியடைவான். வீடு, பாடசாலை, சமூகம் என்பன அவன் பெற்ற கலையுணர்ச்சியை ஊக்குவித்து, கலைகளின் நுண்ணிய கருத்துக்களிலீடு படச் செய்யவேண்டும். நாளடைவில் மாணவர்களது உள்ளங்களில் அவை சமூகத் தொழில் வாழ்வையொட்டிய கருத்துக்களை ஏற்படுத்து வதோடு, அவரவர்க்குப் பிடித்த துறைகளிலும் ஈடுபடச் செய்யும். மாணவரிடம் ஏற்பட்டிருக்கும் இயற்கையான தனிப்பட்ட வல்லபத்துக் கேற்ப, அவர்களைப் பொருத்தமான துறையில் விட்டு முழுத்திறமையை வெளிப்படுத்தக் கல்வித்திட்டம் உதவவேண்டும் என்பது அப்போது சாலப் பொருத்தமாகுமன்றோ!

# செக சிற்பியாரும் அவர் பிறப்பிடமும்

சு. வித்தியானந்தன்
இலண்டன் (இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர்)

இவரது பிறப்பிடம் 'ஸ்ரிறற் வோட் ஒன் ஏவன்' (shrarford-on-Avon) என்னும் நாட்டுப்பகுதி. ஆங்கிலேயரின் அடிப்படையான பண்பாட்டுக்கு அறிகுறியாய் காலக் கழிவினாலும் போரின் விளைவினாலும் மாற்ற மடையாது பழம் மரபும் பண்டைக்காலக் கட்டடங்களும் அழிவுறாது விளங்குகின்றது இப்பகுதி. உலகத்தின் பல பாகங்களிலிருந்து ஆண்டு தோறும் சித்திரை மாதந்தொடங்கி, அடுத்த ஆறு மாதங்களுக்கு இந் நாட்டில் நிகழும் செகசிற்பியார் விழாவிற்கு மக்கள் திரள்திரளாக வந்து குவிகின்றனர். இவ்வாண்டு நடந்த விழாவிற்கு நானும் சென்று அங்கு சிலநாட்கள் தங்கினேன்.

ஆங்கில ஆறு ஒன்றிற்குத் தக்க எடுத்துக் காட்டாக உள்ளது 'ஏவன்' என்னும் ஆறு. இதன் தோற்றம் கவர்ச்சியுள்ளதாகவோ பொலிவு பெற்றதாகவோ அமையவில்லை. எனினும், அவரிச்செடி, புன்னை முதலியவற்றினாற் பக்கங்களிற் சூழப்பெற்று வனப்புவாய்ந்த பகுதிகள் பலவற்றிற் கூடாகப் பாய்கின்றது. புலவர் நாடு அவர் காலத்தில் இப் பாதையிலும் பார்க்கக் காடடர்ந்த பகுதியாக இருந்த போது, அதற்குரிய தனிச்சிறப்பும் அழகும் இன்றும் நிலவுகின்றன.

இவர் பிறந்த இல்லிற்கு ஆண்டுதோறும் நூறாயிரம் மக்கள் வரையிற் செல்வார்கள். குசினி அறையிலிருந்து பூஞ்சோலைக்குப் போவதற்கமைத்த படித்தட்டுகள் இப்பொழுதும் பழம்மாதிரியே இருக்கின்றன. அறைகளுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது நூதனப்பொருள் உள்ளதே. இவ்வறை செகசிற்பியார் காலத்தில், தொடக்கத்தில் கம்பிளிக் கடையாகவும் பின்பு மடமாகவும் வழங்கியதெனக் கூறுகின்றனர். 'இறிச்சேட் குவினேய்' (Richard Quiney) என்பவர் செகசிற்பியாருக்கு எழுதிய கடிதத்தை அறையின் நடுப்பகுதியில், கண்ணாடிப் பெட்டியில் வைத்திருக்கிறார்கள். செகசிற்பியாருக்கு அக்காலப் பெரியார் எழுதிய கடிதங்களுள் இப் பொழுது கிடைத்துள்ளது இதுவே. சிறிய வாள், பக்கரை முதலிய பண்டைக் காலப் பொருள்களும் இங்குண்டு. நூல் நிலையமாக வழங்கும் அறையில்

ஓவியப் படங்களைச் சுவரில் தூக்கியுள்ளார்கள். செகசிற்பியார் கற்ற அரிய நூல்கள் பல போற்றி வைக்கப்பட்டுள்ளன. கவிவாணரைப் பற்றி அக்காலத்திற் பலர் சஞ்சிகைகளில் எழுதிய வரலாற்றையும் அங்கு காணலாம். அவர் அணிந்த மோதிரம் கண்ணாடிப் பெட்டியொன்றினுள் மின்னுகின்றது. புலவர் பெருந்தகை பள்ளியிற் கற்ற காலத்தில் பாவித்த மேசைகூட ஒரு மூலையில் இருக்கின்றது.

தெருவைப் பார்த்தாற் போலுள்ளது செகசிற்பியார் பிறந்த அறை. சில நூதனப் பொருள்களைத் தவிர, இங்கு குறிப்பிடக்கூடிய பொருள்கள் வேறில்லை. ஆனால் சீலிங் பலகைகளிலும் சாளரங்களிலும் சுவர்களிலும் அவ்வீட்டுக்குச் சென்ற பெரியோர் தமது பெயர்களைப் பொறித்துள்ளார்கள். வால்டர் ஸ்கொற் (walter Scott), தொமாசு காளையில் (Thomas Carlyle) ஆகியோரின் பெயர்கள் தெளிவாகத் தோன்றுகின்றன. பயிறன் (Byron), தக்கரேய் (Thackeray), இடிக்கின்ஸ் (Dickens) முதலியோரின் பெயர்கள் அழிந்து போய்விட்டன. ஆயினும் எங்கள் வழிகாட்டி அப்பெயர்கள் பொறிக்கப்பட்ட இடங்களை எமக்குக் காண்பித்தார். பிறவுனிங் (Browning) புலவரின் கையெழுத்தின் ஒரு பகுதியைக் குறுக்குவளையில் இப் பொழுதும் காணலாம்.

செகசிற்பியார் வீட்டிற்குச் சிறிது அப்பாலுள்ளது அவர் மனைவி இல்லம். பன்னிரண்டு அறை கொண்ட வீடு இது. வீட்டுக் குசினியில், பாண் சுடுவதற்குரிய போறணையும், தோலினால் ஆக்கப்பட்ட போத்த லொன்றும் இருக்கின்றன நடறையில். அடுப்படிக்கு அண்மையில் பழங்கால நீட்டுக்கதிரையொன்றுண்டு. செகசிற்பியார் மணம் முடிப்பதற்கு முன் தன் காதற் கிழத்தியோடு இக்கதிரையில் அமர்ந்து காதலுரையாடின ரெனக் கூறுவர். பெற்றோர் பார்வைக்குட்பட அமைந்துள்து இந்நாற்காலி. ஆனால் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள ஆற்றோரங்களும் ஒழுங்கைகளும், முடுக்குகளும், வயல்களுமே இவர்கள் காதல் விளையாட்டிற்கு ஏற்ற களமாக அமைந்திருக்குமென நாம் கொள்ளல் வேண்டும். செகசிற்பியார் மனைவி பெற்றோர் படுத்துறங்கிய கட்டில்களின் கீழ்ப்பாகங்களும், கோரைப் புல்லினால் ஆக்கப்பட்ட மெத்தையும், இப்பொழுதும் பழம் மாதிரியே இருக்கின்றன.

இவ்விடம் சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய கட்டிடம் செகசிற்பியார் நினைவு காரணமாகக் கட்டப்பட்ட நாடகசாலையே. இப்பொழுது 'ஏவன்'

ஆற்றிற்கு அண்மையில் உள்ளது இது. இந்நாடகசாலையின் முகப்பில் அழகிய சோலையொன்றுண்டு. இதில் செகசிற்பியார், யூலியசீசர் (Julius Caesar), மகமதிப்பிரியை (Lady Macbeth) முதலியோரின் உருவங்களைக் கல்லிற் செதுக்கி நட்டிருக்கின்றார்கள். 1827ஆம் ஆண்டில் கவிவாணரின் நாடகங்களை நடிப்பதற்கு நாடகசாலையொன்று கட்டும் நோக்கத்துடன் அத்திவாரம் போட்டார்கள். அவ்வாண்டில் வேனிற் காதை (As you Lake it) நாடகத்தை நடித்தனர். ஆனாற் பணமோ போதியளவு சேரவில்லை. 1864ஆம் ஆண்டில் பன்னிரண்டு நாட்களாகச் செகசிற்பியார் விழாவைக் கொண்டாடினர். அவ்விழாக் காலத்தில் ஆறு நாடகங்கள் அரங்கேற்றப் பட்டன. பண வரும்படியும் தேவையில்லை. 1876ஆம் ஆண்டில் நாடக சாலைக் கட்டிடம் முற்றுப் பெற்றுச் சில கிழமைகளாக விழாவுங் கொண்டாடினர்.

ஆனால், 1926ஆம் ஆண்டில் இக்கட்டிடம் தீக்கிரையாயிற்று. இச் செய்தி பேனாட் ஷா (Bernard Shawa) காதுக்கெட்டியபோது அவர் கூறியதாவது - இச்செய்தியைக் கேள்வியுற்று நான் மகிழ்ந்தேன். செக சிற்பியார் ஓர் உலக கவி. அவர் நினைவு காரணமாக இக்காலத் தேவை களுக்கேற்ற முறையில் தகுந்த கட்டிடமொன்று அமைப்பதற்குக் கடவுள் காட்டிய வழியிது. இவர் கூற்று உண்மை மொழியாயிற்று. ஏழாண்டுக் கிடையில், பலர் பண உதவியாற் புதுக்கட்டிடமொன்று அமைத்தார்கள். 1933ஆம் ஆண்டு தொடங்கிச் செகசிற்பியார் விழாவைச் சித்திரை மாதத்திலிருந்து புரட்டாதிவரை கொண்டாடினர். இப்பொழுதும் அப்படியே நடந்து வருகின்றது. பேர்போன நடிகர் உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து இங்கு வந்து நடிக்கின்றார்கள். நான் சென்ற நாட்களில் அச்சமுணர்த்தும் மகபதி (Macbeth) சரிதையை அரங்கேற்றினர். பன்னீராயிரம் மக்கள் வசதியாக இருந்து பார்க்கக்கூடிய முறையில் நாடகசாலையைக் கட்டியுள்ளார்கள். சுழலும் மேடைகள் இரண்டுண்டு. நேரதாமதமின்றிக் களம் மாற்றுவதற்கு இவை மிகவும் உதவியாக இருக் கின்றன. சிறந்த மரபிற் கட்டப்பட்ட இந்நாடக சாலையின் தோற்றமும் கவர்ச்சியுள்ளதாகவே அமைந் திருக்கின்றது.

இவ்வாறு ஆண்டுதோறும் செகசிற்பியார் விழாவைக் கொண்டாடு கின்றனர் ஆங்கிலேயர். தமிழ்நாட்டிற் செகசிற்பியார் போற் சிறந்த நாடகக் கவிகள் இல்லாதது பெருங்குறையே. பல இயல் இசைக் கவிஞர் புகழுடன் தோன்றி மறைந்தார்களாயினும் அத்தகைய நாடகக் கவிஞர் தொகை

மிக்க குறைவென்பது யாவருக்கும் உடன்பாடே. அன்றியும் தமிழ்நாட்டில் மேனாடுகளிற் போல் நாடகங்கள் நடிப்பதும் மிகக் குறைவு. நாடகக் கவிஞரைப் போற்றி ஆதரிப்போர் மிக அருமை. பொதுவாகப் புலவர் களுக்கு எம் நாட்டில் இக்காலத்தில் நன்மதிப்பு இல்லையென்றே கூறவேண்டும். பண்டைக் காலத்திற் சங்கங்களும், அரசர் குழாங்களும் மடங்களும் புலவரைப் பேணி ஆதரித்தன. இந்நாட்களிலே தமிழ்ப் புலவர் ஆதரிப்பார் இல்லாது, பசிப் பிணியாற் பீடிக்கப்பட்டு தம் தலை விதியையும் கல்வியையும் நொந்து, காலத்தைக் கழிக்கின்றனர். அவர்கள் பெருமை வெளிநாட்டினர்க்குப் புலப்படாது, பெருமை மங்கித் தலை குனிந்து வாழ்கின்றனர். ஆனால் மேனாட்டிலுள்ள நிலையோ அதற்கு முற்றிலும் மாறானது. கவிஞரைப் பொதுமக்களும் ஆதரிக்கின்றனர். குட்டிப் புலவரைக்கூட யாவரும் நன்கறிவர். மேலும், கவிஞர் புலமையை உலகறிய வைப்பதில் பெரிதும் முயல்கின்றார்கள். கவிஞர் விழாக்களை ஆண்டுதோறும் சிறந்த முறையிற் கொண்டாடுகின்றனர். நாம் புலவர் விழாக்களை எவ்வாறு கொண்டாடுகின்றோம்? கம்பர் விழா, பாரதி விழா என்று ஆண்டுக்கொருநாள் தமிழ்நாட்டின் சில பகுதிகளிற் சிலர்கூடி, இரண்டொரு சொற்பொழிவுகளாற்றி, இசைப்பாக்கள் பாடக்கேட்டு ஏதோ ஒரு பெருஞ்சுமை நீங்கியதெனப் பெருமூச்சு விடுகின்றோம். அதற்குமேல், புலவரின் பெருமை என்றும் நிலவ அவரின் புலமைத் திறனை உலகறிய, நாம் முயல்கின்றோமா? இல்லை. எமக்கேன் அவற்றைப் பற்றிய கவலை யென்று ஊக்கமற்றிருக்கின்றோம். ஆங்கிலேயர் செகசிற்பியார் விழாவைக் கொண்டாடுவது போல் நாமும் தமிழ்க் கவிஞர் விழாக் கொண்டாடுவது எக்காலமோ?

# பட்டு வியாபாரி

கோல் ஸ்மித்

*தமிழாக்கம்: மூர்த்தி*

இரவில் அணியும் தொப்பிக்கான பட்டு வாங்க இன்று காலை சென்றேன். பட்டு வியாபாரியின் கடையில் நுழைந்ததுதான் தாமதம் அக்கடைச் சொந்தக்காரனும் இன்னும் இரு கடைச்சிப்பந்திகளும் எனது உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் உண்மையில் கண்ணியமும் சுறுசுறுப்புமுள்ளவர்கள். கடையில் யான் எத்திசையை நோக்குகிறேனோ அத்திசைக்கு விரைந்து செல்வார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் மன அலைகளும் அந்தக் கடை பூராவும் அவர்களைச் சுற்றச் செய்தது. நல்லரகத் துணிதான் எனக்கு வேண்டுமென்று விஷயத்தை அவர்களிடம் சொன்னேன். எனவே அவர்கள் ஏறக்குறைய நாற்பது ரகத் துணிகளை எனக்குக் காட்டினர். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொன்றைவிட அழகாகவும், நல்ல ரகமாகவும் இரவில் அணியும் தொப்பிக்கு உகந்த பட்டாகவும் இருந்தன.

''அருமை நண்பர்களே! பட்டுத் துணிகளையிட்டு எனக்குப் பிடிப்பது போல் பாவனை பண்ண வேண்டாம், இப்பட்டுகளில் மிகமிக மெல்லிய ரகங்களையெல்லாம் எனக்குத் தெரியும்'' என்றேன் நான்.

''அப்படி இருக்கலாம் ஐயா, நான் ஒன்றும் பிடிப்பிப்பது போல் பாவனை பண்ணவில்லை. ஆனால் உறுதியாகச் சொல்லுகிறேன்; ''கறயில்'' எனும் சீமாட்டி இன்று காலையில்தான் சட்டைக்காக இதே ரகத்தில் வாங்கினார்'' என்றான் மனிதனை ஒன்றும் தடுத்துப் பேசாத அந்த வியாபாரி.

''ஆனால், அன்பரே அந்தச் சீமாட்டி சட்டைக்காக இத்துணியைத் தெரிந்தெடுத்திருந்தால் நானும் தொப்பிக்காக இதே ரகத்தை ஏன் தெரிய வேண்டும்'' என்றேன்.

''சரி; ஆனால், ஒரு அழகான பெண் எந்த நேரத்திலும் ஓர் அழகான ஆடவனைப் பார்த்தால் என்ன நேரிடலாம்'' என்று திருப்பிப் பதிலளித்தான் அவன்.

அந்தப் பட்டுச் சீலையை நான் விரும்பாமலிருந்த போதிலும்கூட, அவன் கூறிய இவ்வசைமொழிகள் எனது விகாரமான முகத்திற்குப் பொருத்தமாயிருந்தது. தொப்பிக்காக, மாதிரிக்கு அப்பட்டில் வெட்டும்படி கூறினேன்.

அவனது உதவியாள் அதை வெட்டிக் கொண்டிருக்கையில், அவன் (முதலாளி) இன்னும் சில, பட்டுச் சீலைகளை எடுத்தான். முன்பு நான் பார்த்தவற்றிலும் இவை விசேட துணிகளாயிருந்தன. அவற்றை என் முன்னே பரப்பிக் கொண்டே, ''இங்கே இருக்கிறது அழகு ''சினேஸ்கின்'' எனும் பிரபு அவரின் பிறந்த நாள் இரவுக்காக, இன்று காலையில் இதே தினுசில்தான் வாங்கினார். அது யார் மனதையும் கவரக்கூடிய மார்புச் சட்டை'' என்றான்.

''ஆனால், பிறந்த நாள் இரவுக்கு அணியும் மார்புச் சட்டை வேண்டியதில்லையா? அப்படியானால் ஒன்று வாங்கும்படி உங்களுக்குப் புத்தி கூறுகிறேன். தேவைக்கு முன் வாங்கி விடுங்கள்'' என்று பதிலளித்தான். அவனது புத்திமதியில் பல நியாயங் களிருந்தபடியால், அதையும் வாங்குவதற்கு மறுக்கமுடியவில்லை. நல்ல அழகாகவும், என் ஆசையைக் கூட்டிக்கொண்டுமிருந்ததால் அத்துணியையும் வெட்டும்படி சொன்னேன்.

அவர்கள் சீலையை அளந்து கிழிக்கும் மட்டும் காத்துக்கொண்டிருந்தேன். மெல்ல மெல்ல வேகமின்றி அவ்வலுவல்களைச் செய்து கொண்டிருந்தனர். இடைவேளையில், முதலாளி என்னுடன் பேசத் தொடங்கினான். காலையிலணியும் அங்கியுடன் நாகரிக முறையில் நண்பர்களைச் சந்திக்கும் முறையையிட்டு அவன் விபரித்தான்.

''ஐயா முக்கியமான உடைக்கு எந்த ரகப்பட்டு வேண்டுமென்று பாருங்கள்'' என்றான் அவன். எனது மறுமொழிக்குக் காத்திராமலே இன்னொரு தினுசான பட்டுச்சீலையை என் முன்னே பரப்பிக்கொண்டே, ''உண்மையும் கௌரவமுமுள்ள எவருக்காயினும் நான் வியாபாரஞ் செய்வதைப் பிரபுக்கள் அறிந்தால், அவர்களின் கொடுக்கல் வாங்கலை உண்மையாக இழக்கநேரிடும். பாருங்கள் பிரபு இது கூடிய விலையும் முதல் ரகமுமான சீலை'' என்றான். ''நான் ஒரு பிரபு அல்ல'' என்று இடைமறித்தேன்.

''மன்னித்துக் கொள்ளுங்கள்; எப்பொழுதாவது காலையில் அணியும் அங்கி வாங்க நினைத்தால் ஆலோசனைப்படியே உங்கள் பணத்தைச்

செலவிடும்படி ஞாபகப்படுத்துகிறேன். மனச்சாட்சிதான் என் வியாபார முறை. இப்பொழுதே காலையிலணியும் கோட்டுக்கான துணி வாங்குவதாயினும் வாங்குங்கள், அல்லது புது (பாஷன்) நாகரிகம் வருமளவும் காத்திருந்து வாங்குவதாயினும் வாங்குங்கள். ஆனால் புத்திமதி சொல்வது என் வேலையல்ல''.

இதனால் காலையிலணியும் சட்டைக்கும் பட்டு வாங்கும்படி அவன் என்னை வசப்படுத்திவிட்டான். என்னிடம் போதுமான பணமிருந்து, இன்னும் அங்கு தாமதித்திருப்பேனாகில், அவன், தன் கடையிலுள்ள அரைவாசிச் சாமான்களையாவது வாங்க வைத்திருப்பான்.

# தீண்டாமை

சைனாவே M. தம்பிராசா

எத்தனை ஆயிரம் கட்டுரைகளை, கவிதைகளை - பிரசங்கங்களைக் கண்டும் கேட்டும் இருக்கலாம். ஆனதென்ன? அப்போதைக்கு ஆமா என்று தலையை அசைப்பார்கள். பின்னர் அவன் வண்ணான், பாத்திரத்தில் சோறு போடாதே; இவன் வாபர், குவளையில் தண்ணீர் கொடாதே; அவன் பறையன், வீட்டுக்குள் வரவிடாதீர்கள் என்ற பல்லவிதான் எல்லாருடைய வீட்டிலும் கோரத் தாண்டவமாடும்.

நான்முகன் படைப்பில் வேறுபாடு கற்பிக்கும் இந்தத் தீய சமூகம் என்றுதான் திருத்தமடையப் போகிறதோ நாம் அறியோம். காந்தி மகானுக்கு, வரகவி பாரதியாருக்கு எல்லாம் பெரிய ஆர்ப்பாட்டத்துடன் கண்ணீர் விட்டுக் கதறிக் கூட்டங்கள் கூடிச் சிரார்த்ததினம் கொண்டாடு வார்கள். ஆனால் அம்மகான்கள் காட்டிய சமத்துவ வழிதான் ஒருவருக்கும் பிடிப்பதாகத் தோன்றவில்லை. பிடித்திருந்தால் இதுவரைக்கும் இத்தீய தீண்டாமை ஓரளவாவது குறைந்திருக்கமாட்டாதா?

ஆபிரிக்காவில் இந்தியர்களை அடித்துத் துரத்துகிறார்கள் என்பதைக் கேட்டதும் ஐயோ! என்று அங்கலாய்க்கிறார்கள். நிறத்துவேஷம் கூடாது என்று கோஷமிடுகிறார்கள். ஆனால் தங்களுக்குள் நிலவும் தீண்டாமை என்னும் இனத்துவேசத்திற்கு உரமிட்டுப் பாலூட்டி வளர்க்கிறார்கள். என்ன மடமை, தொழில் வேற்றுமை கொண்டு மாந்தரை இழிவுபடுத்துவது எத்தனை அயோக்கியம், அத்தொழிலை அவர்கள் நிராகரிப்பார்களேயாகில் எமது கதி என்னவாகும் என்பதைச் சற்று நிர்த்தாட்சண்ணியமாகக் கற்பனை செய்து பாருங்கள்.

கேவலம் நாகரிகப் படியை நோக்கி முன்னேறும் ஒரு சுதந்திர நாட்டிலா இன்னுமிக் கோரத் துவேஷம் நிலவ வேண்டும், தீண்டாமை காரணமாக ஒதுக்கப்பட்ட எத்தனையோ மக்கள் சமநிலை தேடி மதமாற்றம் செய்து கொள்வதைப் புத்திக் கூர்மையுள்ள எவரும் அறியாமலிருக்க முடியாது. அப்படி அவர்கள் செய்வதற்கு முழுக்காரணமும் ''உயர்ந்தவர்கள் தாங்கள்'' என்று கூறிக் கொள்ளும் இந்தப் பொல்லாத சமூகமேதான்.

*''ஜாதிச் சண்டை போச்சா?''*

என்று பாரதியார், நம்மை நோக்கி எச்சரித்தார். அந்த எச்சரிப்பின் எக்காளம் நமது இரு செவிகளிலும் இன்றும் ஒலித்துக்கொண்டுதானிருக்கிறது. ஆனால் ''ஆம்'' என்ற பதிலைத்தான் அவரின் ஆவியின் முன்னாவது கூற முடியவில்லை.

ஒவ்வொரு வீரத்தியாகியும் முதலில் தனது வீட்டில் தீண்டாமையை விலக்க முற்பட வேண்டும். ஆயிரம் ஆயிரமாகக் குவிந்து வரும் எதிர்ப்புகளை அஞ்சா நெஞ்சத்துடன் அகற்ற வேண்டும். வெற்றி நிச்சயம் கிட்டிவிடும். பின்னர் சுற்றிலும் உள்ள வீடுகளில் பின்னர் தனது பகுதியில் (கிராமத்தில்) பின்னர் அடுத்த பகுதியில்- இவ்விதமாக நாளாவட்டத்தில் எங்குமே தீண்டாமை நோயை அகற்ற முற்படலாம்.

தீண்டாமையை அகற்ற வேண்டும் என்ற பணியில் உண்மையான பற்றுள்ளவரால்தான் இயக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்போதைக்காக தங்கள் இலட்சியங்களின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு போலி வேஷம் போடும் சில போலித் தியாகிகளால் இயக்கம் ஆரம்பிக்கப் படுமாகில், இருந்ததும் போய்- இயக்கமும் கேலியாக முடிந்துவிடக் கூடும். ஆகையால் உண்மையான தியாகிகள் முற்பட்டு இறுதிவரை போராடி வெற்றி காண வேண்டும்.

# தீண்டாமையின் திருநடனம்

D.T. செல்வநாயகம்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் இரத்தினமாகச் சுடர்விட்டு பிரகாசிக்கும் ஈழ நாட்டிலே சுதந்திரம் கிட்டியதாக ஆண்டுதோறும் பறைசாற்றும் புண்ணிய நாட்டிலே, இயற்கை எழில் ததும்பும் இன்னிசை நாட்டிலே ஆலயங்கள் கோபுரங்களுடன் தலை நிமிர்ந்து நிற்கும் அழகிய நாட்டிலே ஆணும் பெண்ணும் சமமென அறைகூவும் சமத்துவ நாட்டிலே தீண்டாமை திருநடனம் புரிவதென்றால் சொல்லவும் வேண்டுமா?

இன்று யாழ்ப்பாண நகரம் அல்லோலகல்லோலப்படுகின்றது. சைவ மக்களே விழித்தெழுங்கள். தில்லைச் சிதம்பரம் திறந்த பின்புமா உறங்கு கிறீர்கள் என்ற வாக்கியங்களைத் தாங்கிய சுவரொட்டி விளம்பரங்கள் தெருவிலே காட்சியளிக்கின்றன. உண்மைதான். சைவ சமயத்திலே தீண்டா தார் என்று ஒரு பிரிவு இருக்கிறதாகக் காணப்படவில்லை. இதையொட்டி நாடோடியாக ''பார்ப்பார் சாதியிலும் பறச்சாதி என்று ஒன்று உண்டா? கேட்பாரின்றிக் கீழ் சாதியாயிற்று'' என்று ஓர் பழமொழி வழங்குகின்றது. ஆம் பிராமணர்கள், புலையர்கள் எல்லாரும் ஒரே இனந்தான். ஒரே சாதி மக்கள்தான். ஆனால் கால வித்தியாசத்தால் ஓர் சாரார் உயர்ந்தவராகவும் ஓர் சாரார் தாழ்ந்தவராகவும் கருதப்பட்டார்கள். அவ்வழக்கமே இன்றும் நடைமுறையில் இருக்கின்றது.

ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்து வயிற்றை வளர்க் கிறார்கள். பிராமணர்கள் பூஜை செய்கிறார்கள். தீண்டாதார் என்று ஒதுக்கப் பட்டவர்கள் மரமேறிக் கள் இறக்குகிறார்கள். இப்படியாக அவரவர் தம் கடமையைச் செய்தால் அவர்கள் குறைவானவர்களா? உயர்ந்தவராகக் கருதப்படும் மக்கள் தாழ்ந்தவராகக் கருதப்படுபவர்கள் இல்லாது போனால் எவ்வாறு சுகமாக வாழமுடியும். ஆண்டவன் சந்நிதியில் எல்லாரும் ஒரே மக்களாவர். இன்னும் ஆண்டவன் சந்நிதியில் இவன் பிராமணன், இவன் புலையன் என்று எழுதியா ஒட்டியிருக்கிறது? கேவலம், ஒருசாரார் மட்டும் கோயிலுக்குள் சென்று ஆண்டவனை வழிபடலாம். ஒருசாரார் மட்டும் போகக் கூடாது. எப்படி உலகம். புராதன காலத்தில் ஒரு சாரார் ஏதோ காரணத்தால் தாழ்த்தப்பட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் எந்த

நேரமும் ஒரே கொள்கையை உடையவர்களாக இருப்பார்களா? அவர் களுக்கும் உணர்ச்சியிருக்கிறதுதானே. உலகம் போற்றும் உத்தமன் காந்தி அஹிம்சையை நிலைநாட்டித் தீண்டாமைக்குச் சாவுமணியடித்தார். தில்லைச் சிதம்பரம் ஹரிஜனங்களுக்காகத் திறந்துவிடப்பட்டபோது அவர்கள் எவ்வளவோ குதூகலத்துடன் சென்று ஆண்டவனைப் பக்திரசம் தோன்றப் போற்றினார்கள். அவர்கள் உள்ளே சென்று சேவித்ததனால் கோயில் தீட்டுப்பட்டுவிட்டதா? இல்லையே.

தீண்டாதார் உள்ளே போகமுடியாது. ஆனால் அவர்கள் நைவேத்தி யத்திற்காகக் கொடுக்கும் பொருட்களை மட்டும் பூசாரியார் ஏற்றுக் கொள்ளலாமோ? தீண்டாதாரால் கொடுக்கப்பட்டதென்று அப்பொருட்களை நீரில் அலம்பி எடுக்கிறார். ஆனால் அவற்றுடன் இருக்கும் பணத்தை மட்டும் நீரில் அலம்புவதில்லையே! ஏன்? கடதாசி நோட்டுக் கரைந்து விடும் என்ற கொள்கை போலும். என்னே குருட்டுப் பக்தி. தீண்டாதார் உள்ளேபோய் ஆண்டவனைச் செவிக்க முடியாது. ஆனால் அவர்கள் கொடுக்கும் நைவேத்தியப் பொருட்களை மட்டும் ஏற்றுக்கொள்ளலாமோ?

தீண்டாதார் ஒதுக்கப்பட்டவர்கள். அவர்களிடம் முன்னேற்றம் இல்லையென்று சொல்ல முடியுமா? வடமாகாணமெங்கும் பரவியுள்ள இவர்களிடம் கல்வி அறிவு இல்லையென்று யார் சொல்ல முடியும். சிறந்த கல்விமான்கள் இன்று தீண்டாதவர்களில் இருக்கிறார்கள். யாழ்ப் பாண நகரத்திலே பெரிய மாடிவீடுகள் கட்டிக்கொண்டு ஆடம்பரமாய் வாழ்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் முன்னேற்றம் இல்லையென்று நாம் எவ்வாறு சொல்ல முடியும்.

இன்று சைவசமயத்தை எடுத்துப் பார்த்தால் மிருகபலி நடை பெறுகிறது. ஆண்டவன் தனக்குப் பலிவேண்டுமென்று கேட்கிறாரா? இல்லவேயில்லை. அப்படி மிருகபலி கொடுக்க வேண்டுமென்று புராணங் கள்கூட எடுத்துக் கூறவில்லையே. ஆட்டுக்கடாக்களைப் பலியிடுவதற்கு அதன் மேனியிலே சந்தன மை தடவி, கழுத்தில் மாலை அணிவித்துக் கொலை செய்யலாம். இது முறையான செயலா? பாவத்தைத் தொலைக்கப் பலியிடுகிறோம் என்கிறார்கள். பார்க்கப்போனால் பாவம் இன்றும் கூடுகிறதேயொழியக் குறைந்ததாகக் காணப்படவில்லையே. அம்மட்டா? பலியாகக் கொடுக்கப்பட்ட கால்நடைகளை விலைகூறி விற்றுப் பண மாக்கிக் கொள்கிறார்கள் எதற்காக? வருவாயைக் காக்கத்தானே! அப்படியானால் பணத்துக்காகவா சைவசமயம். இன்னும், மதுவருந்திக்

கொண்டு கோயிலினுள் சென்று சந்நிதியைத் தீட்டுப்படுத்துகிறார்கள். ஆனால் உண்மையான இருதயத்துடன் தீண்டாதார் உள்ளே போக முடியாது. எப்படி நியாயம்.

காலக்கொடுமை; உண்மைதான். தீண்டாதார் உள்ளே புகுந்தால் கோயில் தீட்டுப்பட்டு விடும். மிருகபலி, மதுவுண்ணல், சூதாடல் ஆகிய செய்கைகளையுடையவர்கள் உள்ளே செல்லலாம். அது தீட்டு இல்லையா? பணக்கார ஆதிக்கத்தினால் ஒரு சாரார் தாம் விரும்பியதைச் செய்தால் சைவம் எப்படித் தழைக்க முடியும்.

தீண்டாதார் என்று ஒதுக்கப்பட்டவர்கட்குக் கடவுள் இல்லையா? ஏகபராபரன் எல்லாருக்கும் பொதுவாகவன்றோ இருக்கிறார். அப்படி யானால் நந்தனாரைச் சிவன் எவ்வாறு ஆட்கொண்டான். சாதி வேற்றுமை, இந்தச் சாதிவேற்றுமையாலன்றோ நாம் ஏனைய மக்களுடன் ஒத்துப்போகா வண்ணம் இருக்கின்றோம். சாதித்துவேஷம். இன்றைய சுதந்திர இலங்கை யில் தீண்டாதவர் ஒருவர் பிரதம மந்திரியாக வந்துவிட்டார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவர் கோயிலுள் சென்று தரிசிக்க வந்தால் உள்ளே போக முடியாது என்று நிறுத்தி வைக்க முடியுமா? முடியவே முடியாது. ஏன்? சிந்தித்துப் பாருங்கள். தீண்டாதார், தீண்டாதார் என்று ஒதுக்கும் பெருமக்களே சிந்தியுங்கள். ஆண்டவன் சந்நிதியில் தீண்டாதார் பிரவேசிக்கக் கூடாதென்று எழுதி ஒட்டி வைத்திருக்கிறதா? இல்லையே. அன்பு நெறிகொடுக்கும் சைவத்தில் எழுத்தாணியால் குறிக்கப்பட்டா இருக்கிறது. திருவாசகத்தில்தான் இருக்கிறதா? அல்லது தேவாரத்தில்தான் இருக்கிறதா? அல்லது திருக்குறளில் இருக்கிறதா? என்னே உலகம். சைவம் தழைக்க வேண்டும், மக்கள் சுகமாக வாழவேண்டும், எல்லோரும் ஓரினம் என்று அறைகூவ வேண்டும். பாரதிதான் என்ன அழகாகச் சொல்லுகிறார்.

"பார்ப்பாரை ஐயரென்ற காலமும் போச்சே" என்கிறார். உண்மைதான். பாரதி அன்று கண்ட கனவை எழுதி வைத்தார். அவை இன்று நனவாகின்றன. ஆகா! பாரதியின் மணிவாக்குகளின் மகிமையே மகிமை. கலியுகப் புலவன் பாரதியைத்தான் எவன் மறக்க முடியும். அவர் சொன்ன ஒவ்வொரு சொல்லும் செய்கையில் இன்று நிறைவேறி வருகின்றது. பாரதி பாடல்களின் புகழ் வானமண்டலமெங்கும் ஒலிக்கிறது. அம்மகான் வாக்குப் பலித்தேவிட்டது இந்தியாவில். ஆனால் இலங்கையில் என்ன வென்றால் தீண்டாதார் உள்ளே புகமுடியாதாம். இந்நிலைமை மாற

வேண்டும். கட்டாயம் மாற வேண்டும்.

சைவ ஆலயங்களுள் தாழ்த்தப்பட்டோர் செல்தல் கூடாதென்றால் பெரிய புராணத்தில் போற்றிப் பாடப்பட்ட தெய்வ ஸ்தலங்கள் திறந்து விட்டபோது தெய்வங்கள் வெகுண்டெழவில்லையே. தீண்டாதார் புகுந்து விட்டாரென்று கோயிலின் சிறப்பு அழிந்து விட்டதா? சாதி வேற்றுமை எதற்காக, தொழிலுக்காகத்தானே. இந்தக் குறையைக் கொண்டு கோயிலுக்குள் பிரவேசிக்க முடியாதென்றால் சமூகம் எவ்வாறு முன்னேற இடமுண்டு. இன்று சாதித்தொழில் கைவிடப்பட்டுக்கொண்டே வருகிறது. இப்படியாக வளர்ந்து கொண்டு வந்தால் உயர்ந்தவர்கள் எவ்வாறு உல்லாசமாக வாழமுடியும். காலம் மாறுகிறது. தீண்டாத பெண்களைத் தீண்டக் கூடியவர்கள் காதலிக்கிறார்கள். கல்யாணம் செய்கிறார்கள். இதனால் உயர்ந்தவர்களின் சமூகம் இவர்களை ஏற்க மறுத்தாலும் தாழ்ந் தவர்களின் சமூகம் கைகொடுத்து வரவேற்கிறதுதானே. கேவலம், மனிதனை மனிதன் ஒதுக்குவதென்றால் அதைவிட அவமானம், உலகில் உண்டா? இலங்கையின் கிழக்கிலும், தெற்கிலும் இப்பிரச்சினை கிடையாது. ஏன் வடக்கில் மட்டும் ஆலயப் பிரவேசம் அவசியமென்று அறைகூவுகிறார்கள். அங்கே இந்தப் பிரச்சினை அவ்வளவு கெட்டியாகப் பிடித்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுள் செல்ல அனுமதிக்கப் படாதது மட்டுமல்ல, தேநீர்க் கடைகளினுள்ளும் புக விடுகிறார்களில்லை. அவர்கட்குப் புறம்பான பாத்திரங்கள் வெளியிலே வைக்கப்பட்டிருக்கின்றன. சொல்லவே வெட்கம். எழுதவே துக்கம். நாகரிகம் மேலோங்குகிறது. தீண்டாதார், தீண்டாதார் என்று அவர்களை ஒதுக்க, ஒதுக்க அவர்களே முன்னேற்றமடைகிறார்கள். எவ்வளவு தூரம் ஒதுக்கப்பட்டால் அவ்வளவு தூரம் முன்னேற இடமுண்டுதானே. இன்று அவர்கள் தனவந்தர்களாகவும், வியாபாரிகளாகவும் திகழ்கிறார்கள். என்றாலும் அவர்களின் முகங்களிலே அந்த ஏக்கம் பிரதிபலிக்கிறது. பட்டணத்தில் தாழ்த்தப்பட்டோர்கள் மிகவும் சந்தோஷமாக வாழ்கிறார்கள். ஆனால் கிராமங்களில் அவர்கள் படும் துயரம் மிகவும் பாதகமானது. நானும் இரண்டு வருடமாக குடாநாட்டி லுள்ள கிராமங்கட்கெல்லாம் சென்று கண்டதென்ன? தீண்டாதார் படும் துயரம்தான். நான்கூட ஏன் ஒரு தீண்டாதவனாகப் பிறவாது விட்டே னென்றுகூடத் துக்கப்பட்டேன். சாதி வித்தியாசம் தொழிலுக்காகத்தானே. வாழ்க்கைக்கில்லையே. நான் தீண்டாத பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் செய்தால் என்னைச் சமூகம் ஒதுக்கிவிடுமா? அப்படி

ஒதுக்கினாலும் நான் பயப்படவில்லை. தீண்டாதவர்கட்காக நான் பாடுபட முன்வருகிறேன். ஏன்? அவர்கள் படும் துயருக்காகவேதான்.

ஆண்டவன் சந்நிதியில் வேளாளன், பள்ளன் என்ற பேதமில்லை தானே. மனிதனே தனக்குதவியாகத்தானே வகுத்துக்கொண்டான். அந்த வகுப்பைப் பரம்பரையாகக் கையாள்வதா? முடியாது. ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம். பாரதியின் கனவு இலங்கையிலும் நனவாக வேண்டும். உலகத்திற்கு முழுமுதலாய் விளங்கும் ஆண்டவன் சந்நிதியில் எல்லாரும் சமமென்று அறைகூவவேண்டும். அப்போதுதான் நம் பாரதியின் மணிவாக்கியமான ஒன்றே குலம், ஒன்றே தெய்வம் என்ற வாக்குப் பலிக்கும். எல்லோரும் ஒன்றுகூடி இனிது வாழ முடியும்.

# இலங்கைக் கல்வியின் இன்றைய நிலை

*ம. சிவநேசராசா*

இன்றைய சிறுவர்களே நம் நாட்டின் நாளைய தலைவர்களாவர். இச் சிறுவர்களுக்கு இன்று என்னவிதமான கல்வியும், பயிற்சியும் அளிக்கப் படுகிறதோ? அதற்கேற்பவே நாளைய அரசாங்கமும் ஆட்சியும் அமையும். ஆகவே எதிர்கால இலங்கையின் சுபீட்சத்தைக் கருதியாவது கல்வியிற் கவனஞ்செலுத்த வேண்டியது நமது கடைமையாகும்.

இலங்கை அந்நிய ஆட்சியில் இருந்த போது கல்வி ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்கு வேண்டிய இலிகிதர் கூட்டத்தைத் தயாரிப்பதற் காகவே கற்பிக்கப்பட்டது. ஆனால் அந்த நோக்கத்துடன் இன்னும் கல்வி கற்பித்தலினால் தீமையேயன்றி நன்மை விளையாது.

உண்மையில் இலவசக் கல்வித் திட்டம் இலங்கைக் கொள்கையில் ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. இதுவரை பணம் படைத்தவர்களின் ஏகபோக உரிமையாக இருக்கக் கல்வியை இலங்கையிலுள்ள எல்லா மாணவ மாணவிகளும் அனுபவிக்க ஒரு வழியைக் காட்டியது. இதனால் நாட்டின் பல பகுதிகளிலும், கிராமங்கள் தோறும் பாடசாலைகள் திறக்கப் பட்டன. இன்னும் அதிகமான மாணவர்கள் கல்வி பயில ஆரம்பித்தனர்.

கல்வி இலவசமாக்கப்பட்டது மிகப் புரட்சிகரமான மாறுதலேயாயிலும் ஒரு சுதந்திர நாட்டிற்கு ஏற்றதாக ''கல்விக் கொள்கை'' மாற்றியமைக்கப் படவில்லை. தன்னம்பிக்கையும், தேசப் பற்றுமுள்ள பிரஜைகளை ஆக் குதற்குப் பதிலாக பழையபடி ஏகாதிபத்திய தாசர்கள் உற்பத்திசெய்யப் படுகிறார்கள். நாட்டின் எதிர்காலத் தேவையையும், மாணவர்களின் ஆற்றலையும் கவனியாது கல்வி புகட்டப்படுகின்றது. பழைய பாடத் திட்டங்கள்கூட எதுவித திருத்தமுமின்றி இருந்து வருகிறன. கல்வி தன் தேசத்தின் தேவையைக் கருதாது பிற தேசப் புகழைப் பாடுவதிலேயே கழிந்து வருகின்றது.

ஆம், நாம் இன்னும் இந்த உழுத்த கல்வித் திட்டத்தைக் கட்டியெழுப்பு வதைவிட வேறு வழியில்லையா? உண்டு. இன்று படித்தவர்களாயுள்ள அனைவரும் இதன் அவசியத்தையிட்டு அரசாங்கத்திற்கு இடித்துரைக்க வேண்டும். அல்லாமலும் நாம் அளிக்கிற கல்வியானது வேலையில்லாது

திண்டாடக்கூடிய ஒரு கூட்டத்தை உண்டாக்காது நாட்டின் இயற்கைச் செல்வங்களை விருத்தி செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அல்லாமல் நமது கலைகளை வளர்க்கக்கூடிய கலாவல்லுநர்களை ஆக்கு வதாயும் அமையவேண்டும்.

இன்றைய சர்வகலாசாலையை நோக்கினால் இலங்கை மாணவர்கள் ஏதாவது திறமான சிருஷ்டிகளைச் செய்வார்கள் என எதிர்பார்ப்பதற்கிட மில்லை. இதற்கு முதற்காரணம் டாக்டர்.ஐ. ஜென்னிங்ஸ் போன்ற ஏகாதி பத்திய தாசரின் தலைமையில் இவ்விஸ்தாபனம் நடத்தப்படுவதேயாகும். அடுத்த காரணம் பிரவேசப் பரீட்சை முதல் கடைசிப் பரீட்சை வரையுள்ள பலவிதப் பரீட்சைகளினால் மாணவர்களின் ஆற்றல் முழுவதும் விரைய மாக்கப்படுவதாகும். இவ்விரு குறைகளையும் நன்குணர்ந்த இந்தியச் சர்வகலாசாலைகள் வெகு காலத்திற்கு முன்பே இக்குறைகளைத் தீர்த்து விட்டன.

தொழிற் கல்லூரிகளும், விவசாயக் கல்லூரிகளும் நாட்டில் போதியளவு ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றில் எதிர்காலத்துக்கு ஏற்றவகையில் மாணவர்களைப் பயிற்றுதல் மிக அவசியமாகும்.

இவையெல்லாவற்றையும்விட எமக்குக் கிடைத்த இலவசக் கல்வித் திட்டம் அற்ப ஆயுளில் அழிந்துவிடாது காப்பாற்ற வேண்டியது நம் கடமையாகும். அன்று இலவசக் கல்வித்திட்டத்தை எதிர்த்தவர்களின் கை இன்று ஓங்கி நிற்கிறது. இவர்கள் தங்கள் முதல் வெற்றியை மத்துகமைத் தேர்தலிற் கண்டார்கள். இன்று இலவசக் கல்வித் திட்டத்தைப் பூரணமாகத் தோற்கடிக்க முயற்சிக்கின்றார்கள். இவர்கள் பிரதம வகுப்புகள் வரை இலவசக்கல்வி இருந்தாற் போதுமென்றும் அதற்கு மேல் படிப்பவர் களுக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் வழங்கலாம் எனவும் புத்தி கூறுகிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சியின் போதே பிரதம வகுப்புகள் வரை கல்வி இலவசமாக இருந்தது. அதே பழைய இடத்துக்குத்தான் நம்மை இன்னும் திரும்பிப் போகும்படி புத்தி சொல்லுகிறார்கள் இந்த மேதாவிகள். இன்று நடக்கும் கைக்கூலி விசாரணைகளைத் தினப் பத்திரிகையில் படிக்கும் வாசகர்களே? இவர்கள் கூறும் உபகாரச் சம்பளங்கட்கு என்ன நேருமெனச் சற்றே யோசித்துப் பாருங்கள். ஆனால் இவர்கள், வருமான வரி இருப்போரது பிள்ளைகளிடம் பணம் அறவிடலாம் என்ற யோசனையைக் கூறவில்லை.

இன்றைய இலங்கை அராங்கத்தின் எதிர்காலக் கல்விக் கொள்கையை நிர்ணயிக்க தற்போது ஒரு கொள்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. இது வெளியாகி இலவசக் கல்வித் திட்டத்தைப் பதம் பார்க்கும் முன் அதனைக் காப்பாற்றுதற்கான வழிகளை எடுத்துக்காட்டவேண்டியது நமது கடமையாகும். அடுத்து சர்வகலாசாலையின் அத்தியட்சரையே சீமைக்கு அனுப்புவதோடு சர்வகலாசாலையில் வேண்டிய மாற்றங்களையும் செய்ய வேண்டும்.

''கல்வி'' நாட்டின் எதிர்கால நிலையை நிர்ணயிக்கும் விஷயமாதலின் நாடனைத்துமுள்ள முன்னேற்றவாதிகள் கூடி இவ்விஷயத்தைத் தீர்க்கமாக ஆராய்ந்து அரசாங்கத்துக்கும், அவர்களது பிரதிநிதிகளுக்கும் ஏற்ற புத்திமதி களைக் கூறவேண்டியது மிக முக்கியமான கடமையாகும்.

*''குஞ்சியழகுங் கொடுந்தானைக்  கோட்டழகு*
*மஞ்ச ளழகு மழகல்ல - நெஞ்சத்து*
*நில்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்*
*கல்வி யழகே யழகு.''*

# தமிழா! இன்னுமா தூங்குகிறாய்

செல்வம்

தமிழ் நாட்டிலே பிறந்தோம். தமிழ் நாட்டிலே வளர்ந்தோம். தமிழ்நாடு அளித்த உணவையே உண்டோம். தமிழ் நாடு தந்த உடையை உடுத்தோம். ஆனால் பலன் என்ன! தமிழ்மொழியைக் கொலை செய்கிறோம். தமிழனாகப் பிறந்து தமிழ்மொழியைக் கொலை செய்வதென்றால் இதை விட அவமானம் இன்னுமுண்டா! தமிழன் என்ற உணர்ச்சியே இல்லாது மரக்கட்டை போல் உலவும் மனிதர்களைத்தான் என்னென்றுரைப்பது. நம் வயிறு வளர்ப்பிற்கு ஓர் தொழில் அத்தியாவசியம். அதற்காகப் பிற மொழியைப் படித்தோம். ஆனால் அதையே நடைமுறையில் கொண்டுவருவதா! தமிழனுடன் ஆங்கிலத்திலா பேச வேண்டும். கேவலம், அப்படியின்றித் தமிழ்தான் பேசத் தொடங்கினால் தமிழ் மொழியே தலைகீழாய்ப் போய்விடுகிறது. ஐயோ! தமிழ்மொழி இனிமையான மொழி, தூய்மையான மொழி, மாசு மறுவற்ற மொழி கொலை செய்யப் படுகிறது.

இன்று யார் நான் தமிழ் அபிமானி என்று கூறிக்கொண்டு முன்வரு வாரும் உளரோ! ஆங்கிலம் கற்றவர் தமிழன் என்று சொல்லுவதற்கே வெட்கப்படுகிறார். ஐயோ! பரிதாபம். அன்னிய மொழியைப் படித்து அன்னியனுக்கு அடிமையாய் வாழ்ந்தோம். அன்னியனே! தெய்வம் என்றும் வணங்கினோம். இன்று அவை நம்மிலங்கையில் மலையேறி விட்டன. சுதந்திரமடைந்து விட்டோம். ஆனால் உண்மையான சுதந்திரமா கிட்டியிருக்கிறது. அப்படியாயின் நம் தாய்மொழியாகிய தமிழுக்கு அரசாங்கத்தில் இவ்வளவு சௌரகம் ஏற்பட்டிருக்குமா? சிங்களத்தில் பேசலாம். ஆனால் தமிழில்? ஏன் உண்மையான தமிழபிமானி, தாய் மொழியிலே பற்றுக்கொண்டவன் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் இக்குறையை இனியாதல் போக்குவோம் என்பதை வடக்கிலும் கிழக்கிலு மிருந்து சென்ற பிரதிநிதிகள் ஆலோசிக்கட்டும்.

இன்று தாய்மொழி ஆங்கிலத்திலும் கீழ்நிலையிலே இருக்கிறது. ஒன்றில் இந்நிலைமை மாற வேண்டும். அல்லது தாய்மொழி அழிய வேண்டும். முடியாது! அழியவே கூடாது!! என்று அலறும் தேசாபிமானி

கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உணர்ச்சி பேச்சள விலேதான். செய்கை அளவில் இல்லை. ஏன்? தலைமுறை தலைமுறையாக அடிமை வாழ்வில் உழன்றுவந்தோம். ஆனால் இன்று சுதந்திர இலங்கை என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

தமிழ்மொழி அழியக் கூடாதென்று கூக்குரல் போடுபவர்கள் யார்? துர்ப்பாக்கியரும், வறியவரும், துன்பத்திலே உழல்பவருமாகிய தமிழ் சிரேஷ்ட தராதரப் பத்திரம் பெற்றவர்கள்தான். முடிந்தால் ஆசிரிய கலா சாலை. இன்றேல் கலப்பை. அதுவும் கிட்டாது போனால் தெருவுலாத்தல். இதுதான் தமிழன், அதிலும் தமிழ் அபிமானி, படித்துப் பெற்ற பலன். இத்தகைய துன்ப சாகரத்தில் மூழ்கித்திரிகிறார்கள். தமிழனாய்ப் பிறந்ததன் பலனை அனுபவிக்கிறார்கள். என்னே! உலகம். தமிழ்மொழி இவ்வாறே போய்க்கொண்டிருந்தால் தமிழ் சாகியம் உயர முடியுமா? தமிழ் அபிமானி (S.S.O. சித்தியடைந்தவன்) இவ்வாறு கண்ணீர் வடிக்கிறான். அவன் பிற்கால வாழ்வு என்ன! மண்ணோடு மண்ணாகப் போகத்தானா! தமிழனாகப் பிறந்தான். இன்னிலைமை ஏற்படக் காரணம் யார்? நாமேதான் நம்மைத் தாழ்த்திக் கொண்டோம். தாழ்த்திக் கொண்டதன் பலனை இன்று பிரத்தியட்சமாய்க் காண்கின்றோம். இனியாதல் தமிழ்மக்கள் தமிழன் என்ற சாகியத்தை தாழ்த்தாமல் இருப்பானேயாகில்தான் உய்ய வழி உண்டு. தமிழா! இன்னுமா தூங்குகிறாய். உன் சாகியத்தை ஒன்றுகூட்டு. தமிழுக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும், தொண்டாற்று. அப்போதுதான் தமிழ்மொழி போற்றப்படும். தமிழர் கௌரவம் பெருகும்.

''கடவுள் பூமியைப் படைத்தார், வானத்தைப் படைத்தார், விரிந்து கிடக்கும் கடலைப் படைத்தார். ஆனால் அடிமையை மட்டும் படைக்க வில்லை.'' - ஜார்ஜ் வாஷிங்டன்.

''இனிப்பாயிருப்பது சர்க்கரையின் இயற்கை. புளிப்பாயிருப்பது புளியின் இயற்கை. அதுபோலச் சுதந்திரமாயிருப்பது மனிதனுடைய இயற்கை.'' - விக்டர் ஹ்யுகோ

# இலவசக் கல்வியில் தாய்மொழிக் கொலை

*வி.சீ. கந்தையா*

இலவசக் கல்வித் திட்டத்தை நம்நாடு இன்று நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கின்றது. வியாபார ரீதியில் கலாசாலைகளை நடத்தினோரும், மதஸ்தாபனங்களின் தலைவர்களானோர் சிலரும் ஆரம்ப காலத்தில் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். ஆயினும், நாட்டின் விழிப்புக்கும் நன்மைக்கும் ஆசை கொண்ட பல்லோர் ஆதரித்தனர். ஆகவே பெரும் பாலான பாடசாலைகள் காலவரையில் இதை மேற்கொண்டன.

நாளடைவில் நாம் சுதந்திரம் அடைந்துவிட்டோம். ''நமது தாய்மொழி களும் சுதந்திரமடைந்துவிட்டன'' என்று நம் தலைவர்கள் கூறினார்கள். நாமும் அதை எதிர்பார்த்தோம்; நம்பினோம்.

இலவசக் கல்வியை நாட்டுக்குக் கொண்டுவந்த பெருமை கடைசியாக இருந்த அரசாங்க சபைக்குரியது. தாய்மொழிகளை அரசியல் மொழி களாக்கவும் அச்சபை தீர்மானம் செய்திருந்தது. ஆனால் சுதந்திர பாராளு மன்ற ஆட்சியினருக்கு இவை பெரிதும் தொல்லையான விஷயங்களாக இருக்கின்றன. புகுத்தப்பட்ட இலவசக் கல்வியை நீக்கிவிடுவதில் உள்ள எதிர்ப்புக்களை நினைந்து இன்றைய அரசாங்கம் அவ்வாறு செய்திலது. ஆயினும் அரசியல் மொழி பற்றிய தீர்மானத்தையும் சேர்த்து இன்னும் நடத்தவில்லை.

''இலவசக் கல்வி'' - எந்தக் கல்விக்கு இலவசம்? ஆங்கிலக் கல்விக்கு. பணம் கட்டிப் படிக்கவேண்டியதாக ஆங்கிலப் பகுதி இருந்ததால், அதை எல்லோராலும் கற்க முடியாமற் போயிற்று. எனவே, ஏழைகளும் அதைப் பெறுவதற்காக இலவசமாக்கினார்கள். இதனை அந்நியராட்சிக் காலத்தில் - ஆங்கிலேயர் காலத்தில்- செய்திருப்பார்களானால் எத்தனை நீதிபதிகள், ''டாக்டர்''கள், ''என்ஜினியர்''கள், மாகாணாதிபதிகள், கல்வித் தலைவர்கள் எல்லாம் நம் நாட்டவர்களாக அப்போது இருந்திருக்க முடியும். அவ்வுத்தி யோகங்களால் நம் நாட்டை விட்டு வெளியேறிய எவ்வளவோ பணம் இங்கேயே தங்கி நம்மை வளப்படுத்தியிருக்கும்!

ஆங்கில ஆட்சி நீங்கியது. ஆனால், அவர்கள் நம்மை நீங்கிப் போக நினைத்தாலும் ''விடமாட்டோம்'' என்று அவர்கள் ''புனித பாதங்''களைக்

கட்டிப்பிடிக்கச் செய்கின்றது நமக்குள்ள ஆங்கில மோகம். இந்த நேரத்தில் ஆங்கிலக் கல்வி இலவசமாகக் கிடைக்க ஒழுங்கும் செய்யப்பெற்றது.

''ஏழைகளும் செலவின்றிப் படிக்கத்தக்கதாக நாட்டுப் புறங்களி லெல்லாம் ஆங்கிலப் பாடசாலைகள் உண்டா? ஏழை மாணவ மக்களுக்கு இலவச உணவு, உடை, கல்வித் தளபாடங்கள் கிடைக்கின்றனவா? இல்லையென்றால் இது எப்படி அவர்களுக்கு இலவசக் கல்வியாகும்? ''இலவசக் கல்வி'' என்ற பெயரால் பணக்கார வர்க்கத்தார்க்குக் கல்வியில் காட்டும் ஒரு சலுகை என்று இதை ஏன் சொல்லக்கூடாது?'' என்று பலவாறாக இன்று இதனை எதிர்க்கும் கட்சியினர் கேட்கின்றார்கள். இவர்கள் கூற்றில் உள்ள உண்மை ஒருபாலாக, நம் நாட்டில் நம் சொந்த மொழிகளைக் குறைவுபடுத்தும் தீங்கொன்றும் இதனால் அமுல் நடத்தப் படுவதை நாம் காணவேண்டும்.

தாய்மொழி படித்தவனுக்குக் கிடைக்கக்கூடிய உயர்ந்த வேலை ''வாத்தி'' வேலை ஒன்றுதான். இலவசக் கல்வி வந்ததும் சுயதொழிற் பாடசாலைகளில் வரவுச் சராசரி குறையத்தொடங்கிற்று. பெற்றோரெல்லாம் ஆங்கில மோகத்தாலும், ஆங்கிலத்துக்கு நம் அரசாங்கம் கொடுக்கும் முக்கியத்துவத்தினாலும் தூண்டப்பட்டு ஆங்கிலப் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றார்கள். இதற்காக நாம் அவர்களைக் குறைகூற இடமேயில்லை. ஐந்தாம் வகுப்புக்கு மேல் தமிழ், சிங்களப் பாடசாலை களில் மாணவர்கள் இருப்பது குறைவு. எனவே சுய பாஷைகளில் ஆசிரியராகப் பயிற்சி பெற்றோர் அநேகர் வேலையற்றோர் குழுவில் வேலைக்கமர்கின்றார்கள்.

இலவசக் கல்வித்திட்டத்தின் கொள்கையின்படி ஆங்கிலப் பாடசாலை களில் ஆங்கிலப்பகுதி என்பது Form I (ஆறாம் வகுப்பு)க்கு மேற்பட்ட மாணவர்களையே கொண்டிருக்கும். அந்த Form I வகுப்புக்குக் கீழ்ப்பட் டோரெல்லாம் பிரதம வகுப்பினரே. பிரதம வகுப்பினருக்கு தாய்மொழி மூலமே கல்வி புகட்டப்பெறல் வேண்டும். அவர்களுக்கு ஆங்கிலமும் ஒரு பாடமாக இருக்கும். பிரதம வகுப்பு மாணவர்களுடைய வரவுச் சராசரியெல்லாம் பெரும்பாலும் சுயபாஷா ஆசிரியர்களுடைய நியமனத் துக்கே உரியது. இதனாலேயே எல்லாச் சுயபாஷா பாடசாலைகளையும் பிரதம பாடசாலைகளாக இத்திட்டம் வகுக்கின்றது. ஆங்கிலம் Form I (ஆறாம்) வகுப்பில் மாணவர் சேரக்கூடிய தகுதியைச் சுயபாஷா பாடசாலைகளில் ஆக்க வேண்டும்.

இதன்படி எல்லாச் சுயபாஷா பாடசாலைகளிலும் ஆங்கிலம் கற்பிக்கப் பட, தகுதியான ஆசிரியர்கள் அப்பாடசாலைகளில் இல்லாதிருக்கின் றார்கள். ஏனெனில், ஆங்கில சிரேஷ்ட (S.S.C) வகுப்பிற் தேறினோர் மட்டுமே ஆங்கில உதவியாசிரியர்களாக அங்கு பதியப்படக்கூடியவர் களாக இருக்கின்றனர். நன்முறையில் ஆங்கில அத்திவாரம் போடக்கூடிய பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் சுயபாஷா பாடசாலைகளில் சம்பளம் பெற நீதிச் சட்டம் இடங்கொடாது. ஆங்கில சிரேஷ்ட வகுப்பு முடித்த இளைஞர்கள் ஆங்கில உதவி ஆசிரியர்களாக அங்கிருந்து பெறும் அறுபது ரூபாயுடன் தம் வாழ்வை மண்ணாக்க விரும்பாது வேறு தொழிலுக்குச் செல்வதும் நியாயமே. எனவே பிரதம பாடசாலையிலிருந்து ஆங்கிலப் பாடசாலையொன்றிற் கல்விக்காகச் செல்லும் மாணவன் புதுத்திட்டத்தின் படிதான் 5ஆம் வகுப்பிற் தேறினாலும்கூட அங்கு Form I வகுப்பில் இடம்பெற்று ஆங்கிலத்தினை மொழியாகக் கொண்டு கல்வி பயிலத் தகுதியற்றவனாகிறான். எனவே ஆயத்தம் செய்யப்படுவதில் அவன் இரண்டு மூன்று வருடங்கள் செலவழிக்க வேண்டியிருக்கின்றது. பழைய முறையில் ஒரு மாணவன் ஆங்கிலம் 6ஆம் வகுப்பை அடைய (1st Year, IInd Year, Vth Std, 6th Std. என்ற ஒழுங்கில்) மூன்று வருடம் பிடித் திருக்கிறது. இன்றும் பெரும்பாலும் அப்படியேயாகின்றதெனினும் வகுப்பு களின் பெயர்கள் மட்டும் இலவசத் திட்டத்திற்கு மாறாகாது. 6C, 6B, 6A என்றோ; 5A, 6B, 6A என்றோ அமைந்து அப்பால் Form I என்று தொடங்கு கின்றது.

Form Iஐ, அதாவது உண்மையான ஆறாம் வகுப்பை அடையுமுன் மாணவர்கள் உயர்தர வகுப்பினர் அல்லாத போதிலும், இவர்களுடைய வரவுச் சராசரி மட்டும் ஆங்கில ஆசிரியர்களுடைய நியமனத்துக்கே பயன்படுகின்றது. இப்படி ஆங்கிலப் பாடசாலைகளில் எல்லாம் வரவு உயர ஆங்கில ஆசிரியர்களின் தேவையும் உயர்கின்றது. எங்கு பார்த்தாலும் ''ஆங்கில ஆசிரியர்கள் தேவை'' ஆகின்றார்கள். இந்நிலையில் சுயபாஷா ஆசிரிய பயிற்சிச் சாலைகளைக் குறைத்தாலென்ன என்று அரசாங்கம் யோசிக்கின்றது. ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கழகங்கள் மேலும் கட்டப்பட யோசனை கிளம்புகின்றது!

ஆங்கிலக் கல்வியை வெறுத்து நான் இப்படிக்கூறவில்லை. நீண்டகால ஆங்கில ஆட்சி காரணமாக நம் நாட்டின் சகல துறைகளிலும் ஆங்கிலம் நிறைந்திருக்கின்றது. சுயாட்சி பெற்றதும் திடீரென அது மாறமுடியாது,

அம்மணம் காலரீதியில் மாறும்வரை நாம் ஆங்கிலம் தெரிந்தவர்களாக இராதுபோனால் நம் நாட்டை நாம் ஆள முடியாமற் போய்விடும். ஆங்கிலத்தை முற்றாக நீக்கிவிட்டாலும் உலக அரங்கில் நாம் வேறு மக்களுடன் இப்போ சந்திக்க முடியாதவர்களாவோம்.ஆகையால், நான் இங்கு குறிப்பிட விரும்புவது ஆங்கிலம் ஊட்டப்படுவதின் பேரால் நம் தாய்மொழிகள் கொலை செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதுதான்.

ஆங்கிலக் கல்லூரிகளிலே உயர் வகுப்புகளில் எல்லாப் பாடங்களும் தாய்மொழி மூலம் புகட்டப்பெறல் வேண்டும் என்பது ஒரு வருங்கால விதி. ஆனால் அதற்காக இன்னும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. நல்ல மொழிபெயர்ப்பாளர்களைத் தெரிவு செய்து, மொழி பெயர்ப்பு வேலைகளுக்காக ஒரு தனி நிர்வாகப் பகுதியை (Department) ஏற்படுத்தி சட்டம், வைத்தியம், விஞ்ஞானம், கலாசாரம் முதலிய வேறு வேறு பிரிவுகளாக வகுத்து, அவற்றில் தேர்ந்தவர்களையும் வகைப்படுத்தி வைத்து, மொழிபெயர்ப்பு வேலைகளை அரசாங்கமே ஏற்றுத் துரிதப்படுத்தி நடத்தினால் இவ்விஷயத்தில் நாம் வெற்றியை நன்கு காணலாம். அது தான் இல்லையென்று சும்மா இராமல், கல்விப் பகுதியார் வைத்திருந்த மொழிபெயர்ப்புப் பகுதியையும் மூடிவிட அரசாங்கம் தீர்மானித்து விட்டது. கல்விப் பகுதி அதிகாரிகளின் மூலம் திட்டவட்டமான ஒழுங்கு களில் மொழிபெயர்ப்பு வேலைகளைக் கொடுத்து செய்விக்காத குற்றம் அரசாங்கத்தினுடையதல்லவாம்; அது பெயர்ப்பாளர்களுடைய குற்றமே தானாம்!

எனவே, தாய்மொழியை மக்கள் அவசியம் கற்கத்தான் வேண்டுமா என்று தோன்றக்கூடியதாக இருக்கின்றது. சிங்களம், தமிழ் இரண்டையுமா, அன்றி, சிங்களத்தையா இலங்கையின் அரசாங்க மொழியாக்குவது என்ற திட முடிவில் அரசினருக்கு இருக்கும் தயக்கம், இவ்வாறு இன்னும் பிறமொழியே முதலிடம் பெற்று நிற்கச் சந்தர்ப்பத்தை ஆக்கிவிடுகின்றது. கூடிய விரைவில் அரசியலார் இதில் தீர்ப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நம் நாட்டு கலாசாரமும் பண்பாடும் வளர்ச்சி பெற, நம் தாய் மொழிகளான தமிழும், சிங்களமும் வளர்ந்தோங்க மேல் நாட்டுக் கல்வி நிபுணர்களை நமது சுதந்திர அரசியல் இறக்குமதி செய்கின்றது. இப்படி யான விஷயங்களில் நம் நாட்டுப் பேரறிஞர்களின் மனக்கருத்துக்களையோ புத்திமதிகளையோ ஏற்பதற்கு நம் தேசத் தலைவர்கள் மறுத்து நிற்பதும்,

பிடிவாதமாகத் தமது காரியங்களை அவர்கள் சாதித்து நிற்பதும் நாம் செய்த பெரும் பாக்கியந்தான்!

ஆட்சியில் அவர்கள் எதனையும் செய்யட்டும். நம் சொந்த மொழிகளை - சுதந்திர அன்னையின் சொந்த மொழிகளை - போற்றிப் பேணும் விஷயத்தில் எந்தப் பிடிவாதத்துக்கும் நாம் மசியக்கூடாது. தாய்மொழி வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக ஒவ்வொருவரும் நிமிர்ந்து நிற்கவேண்டும்.

தமிழ், சிங்கள சிரேஷ்ட (S.S.C) வகுப்புகட்கு ஆங்கிலமும் ஒரு பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றது. அப்பரீட்சைகளிற் கொடுக்கப்படும் ஆங்கிலப் பாட வினாப்பத்திரம் ஆங்கில பாடசாலை S.S.C மாணவர்களின் தரத்துக்கிருக்கின்றது. அதில் இம்மாணவர்கள் சித்திபெறக்கூடிய அளவு ஆங்கிலம் சுய பாடசாலைகளிலும் கற்பிக்கப்பெற ஒழுங்குகள் செய்ய வேண்டும். பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களை இதற்காக நியமிக்க ஏற்பாடு செய்வது நன்று. அப்போது மாணவர்கள் ஆங்கில பாடசாலை களுக்குப்போய் அங்கு ஆங்கில வகுப்புகளிற் படிக்க முடியாமற் போகவும் மாட்டார்கள்; பட்டினங்களுக்கு இப்படி மாணவர்களை அனுப்பிப் படிப் பிப்பதில் உள்ள நீண்டகாலத்துக்கான பொருட்செலவும் பெற்றோர்க்குக் குறைவாகின்றது. தமிழுடன், ஆங்கிலத்தையும் மாணவர்கள் சரிவரக் கற்றுக்கொள்கின்றார்கள். தமிழ் ஆசிரியர்களுக்கும் தீங்கிழைக்கப்படுவ தில்லை. விசேட சம்பளங்களுடன் ஆங்கில ஆசிரியர்கள் இடம்பெற இவர்களுடைய வரவு முறையீனமாய்த் துணை செய்து ஆங்கில மொழிக் கல்வியையே வளர்க்கப் பயன்படுவதும் ஆகாது. தாய்மொழிப் புறக் கணிப்பு நீங்கி, மாணவர்கள் இருமொழியிலும் தேர்ந்து, சீக்கிரமே காலத்துக்கேற்ற சந்ததிகளாகவும் வருவார்கள்.

குறைகளுக்காக ஒன்றைத் திட்டிக்கொண்டிருப்பதிலும், அதனைத் திருத்த முயல்வதே ஆக்கப்பாடான நன்மைகளைத் தரும். ஆதலால் இலவசக் கல்வியில் உள்ள குறைகளுக்காக அதைப் பழித்துத் திடீரெனக் குழிதோண்டிப் புதைக்க முயலாமல் குறைகளைத் திருத்த நம்மாலான வற்றுக்கு முயலவேண்டும். ஆசிரிய சங்கங்களும், தாய்மொழிப் பத்திரிகைகளும் இவற்றை ஆணித்தரமாக அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்ட வேண்டும். நம் அரசியற் தலைவர்களுக்கும், இப்படியான நல்ல விஷயங்களில் மனம் செல்வதற்கு இறைவனது திருவருளும் வேண்டும்!

# இலங்கைத் தமிழரின் எதிர்காலம்

அ. அமிர்தலிங்கம் B.A.

''பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக்கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்''

- பாரதியார்.

இலங்கையில் தமிழரின் எதிர்காலத்தைப் பற்றி எழுதப்புகும்போது என் மனக் கண்முன் தோற்றுவது தமிழருடைய இன்றைய சீர்கெட்ட நிலையே யாகும். அந்நிலையை வர்ணிக்க என் பேனாவின் சக்தி போதாது. அதனால் தமிழ்த் தாய்க்கு புத்துயிர் அளித்த தவப்புதல்வர் பாரதியார் முப்பது வருடங்களுக்கு முன் தமிழரின் நிலையை வர்ணித்த அதே அடிகளையே நானும் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. அதையே இக்கட்டுரையின் தலைப்பில் குறித்திருக்கிறேன்.

நம் நாடும், மக்களும் விடுதலை பெற்றுவிட்டதாக விளம்பரப்படுத்தி அதி விமரிசையாக விழாக்கள் கொண்டாடிச் சில மாதங்கள் செல்லுமுன் நாம் அடிமைகளாயே இருக்கின்றோம் என்ற பழைய பல்லவியைப் பாடுவது பலருக்கும் வியப்பை அளிக்கக்கூடும். ஆனால் ஒவ்வொரு தமிழனையும் கேட்கின்றேன். மனச்சாட்சியின்படி பதில் கூறுங்கள். இலங்கை பெற்றதாகச் சொல்லப்படும் இந்தச் சுதந்திரத்தில் நமக்குப் பங்குண்டா? நம் பிரதிநிதிகள் சிலர் காட்சிப் பொருட்களாக, கைப் பொம்மைகளாக, மந்திரி பதவிகளையும், உதவி மந்திரிப் பதவிகளையும் வகிக்கலாம். அதுதான் சுதந்திரமா? சுதந்திர இலங்கை அரசாங்கம் செய்த முதல் அலுவல் என்ன? இலங்கைவாழ் தமிழரில் கிட்டத்தட்ட அரைப் பங்கினரை அரசியல் அகதிகளாக்கும் உரிமையற்ற அடிமைகளாக்கும் சட்டம் ஒன்றை ''இலங்கை இந்தியர் பிரஜா உரிமை மசோதா'' என்ற பேரில் நிறைவேற்றியதேயாகும். இம்மசோதா இந்தியருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருப்பது அவர்கள் தமிழ் சாகியத்தைச் சேர்ந்தவர்கள் ஆனபடியாலேயே. இதை நான் சொல்லவில்லை. இம்மசோதாவை ஆதரித்து வாக்களித்த ஒரு தமிழ்ப் பிரதிநிதியே கூறுகிறார். ''நானும் காங்கேசந்துறைப் பிரதிநிதியும் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களோ, அதே சமூகத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பதால்தான் இன்று இந்தியர் இன்னற்படுகின்றனர்'' (பாராளுமன்ற விவாதப் புத்தகம், தொகுதி- 05, பக்கம்-500).

அடுத்தபடியாகக் கொடி விஷயத்தில் நம் பெரும்பான்மைச் சகோதரர்கள் நடந்துகொண்ட, நடந்து வருகின்ற விதத்தைப் பார்ப்போம். இவ்விஷயத்தைத் தீர்ப்பதற்கு நிறுவப்பட்ட குழுவோ துயில் போய் விட்டது. அதிகாரத்திலுள்ளவர்கள் சிங்களவருடைய கொடியே இலங்கையின் கொடி என்று முத்திரைகளிற்கூடப் பொறித்துவிட்டார்கள். இடது சாரிகளால் நமக்கு நன்மை வரும் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்குக்கூட சென்ற ஆண்டு இலங்கை சமாஜக்கட்சி அங்கத்தவர்கள் சிங்கக்கொடிக்கு எதிராக வாக்களியாது நடுநிலைமை வகித்தது ஓர் நல்ல படிப்பினை ஆகும்.

அடுத்துத் தீர்க்கப்பட வேண்டிய விஷயம் அரசியல் மொழிப் பிரச் சினையேயாகும். சிங்களத்தையும் தமிழையும் அரசாங்க மொழிகளாக்க வேண்டுமென்று சென்ற அரசாங்க சபை தீர்மானித்தது. அத்தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு நியமிக்கப்பட்ட குழுவினர் தம் அறிக்கையில் வட மாகாணத்திலும், கீழ் மாகாணத்திலும் தமிழும், மற்ற ஏழு மாகாணங்களிலும் சிங்களமும் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தனர். ஊவா மாகாணத்திலும், மத்திய மாகாணத் திலும் ஐம்பது வீதம் மக்கள் தமிழ் பேசுவோராய் இருந்தும் அங்கு எல்லா அலுவல்களும் சிங்களத்திலேயே நடக்க வேண்டுமென்று தீர்மானித்தனர். அங்கு இரு தமிழர்களுக்கிடையில், தமிழ் நீதிபதி முன்னிலையில் ஒரு வழக்கு நடந்தாலும் அது சிங்களத்திலேயே நடைபெறவேண்டும். இதைவிட இழிவு தமிழுக்கும், தமிழனுக்கும் வேண்டுமா? வட, கீழ் மாகாணங்களைப் பொறுத்தவரையிலாவது தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து உண்டா? இல்லை. மட்டக்களப்பில் உள்ள கந்தோரில் எல்லா அலுவல்களும் தமிழில் நடக்கும். ஆனால் கொழும்பிலுள்ள மத்திய கந்தோருக்கு வரும்போது எல்லாம் சிங்களத்தில் இருக்கவேண்டும். ஏனெனில் கொழும்பு சிங்களப் பகுதிக்குள்ளேயே அடங்குகிறது. கொழும்பில் இருக்கும் தலைமைக் காரியாலயங்களில் எல்லா அலுவல் களும் சிங்களத்திலேயே நடக்கும். உண்மையில் இலங்கையின் அரசியல் மொழியாகச் சிங்களமே வரப்போகின்றது. சிங்களத்தை அரசாங்க மொழி யாக்க வேண்டுமென்பதில் அரசாங்கக் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் உள்ள சிங்களப் பிரதிநிதிகளிற் பெரும்பாலாரிடையே அபிப்பிராய வேற்றுமை இல்லை. மந்திரிகளான டட்லி சேனநாயக்கா, டாக்டர் ராஜபக்ஷ, ஜே.ஆர். ஜயவர்த்தனா, ஈ.ஏ. நுகவெல முதலிய அரசாங்கக் கட்சியினர்

சிங்களமே அரசியல் மொழியாக வரவேண்டுமென்று பகிரங்கமாகக் கூறியிருக்கின்றனர். எதிர்க்கட்சியிலுள்ள திரு.ஸ்ரீநிசங்கா, சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த சோம வீர சந்திரசிறீ முதலியோர் சிங்களம் மாத்திரமே இலங்கையின் அரசியல் மொழியாக வேண்டுமென்று கொழும்பு நகர மண்டபத்தில் நடந்த மாபெரும் கூட்டத்திற் கூறியதைப் பத்திரிகை படிக்கும் எவரும் அறிவர்.

இந்நிலையில் தமிழ் மொழியினதும், தமிழ் பேசும் மக்களினதும் நிலை என்ன? அரசாங்க சேவையே தமிழனின் கதி மோட்சம் என்று எண்ணும் அடிமையிற் திளைத்த அரசியல்வாதிகள் சிலர் இப்போதே தமிழர் எல்லோரும் சிங்களம் படிக்கவேண்டுமென்று உபதேசம் செய்யத் தொடங்கிவிட்டனர். இரு மொழிகளையும் அரசாங்க மொழிகளாக்குவோம் என்று கூறும் சிங்களத் தலைவர்கள்கூட சிங்களவரைத் தமிழ் படிக்கும்படி கூறவேயில்லை. ஆங்கிலேயன் அரசாண்டான். ஆங்கிலம் கற்றுச் சேவை புரிந்தோம். இப்பொழுது சிங்களவர் ஆட்சி வந்திருக்கிறது. சிங்களம் கற்றுச் சிறுமைப்படுவோம் என்று உபதேசம் செய்யும் மேதாவிகளை நான் ஒன்று கேட்க விரும்புகின்றேன். தமிழன்தான் என்றென்றும் அடிமையாக இருந்து அந்நியருக்குச் சேவை செய்யப் பிறந்தவனா? அவனுக்கு மானம் என்பதே இல்லையா? ''மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமான் அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்'' என்று கூறும் குறள் தமிழனுடைய மறையல்லவா? - என்று கேட்கிறேன்.

இந்நிலைக்கு விமோசனம் என்ன? முதலாவது இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒன்று சேரவேண்டும். தமிழையே தாய்மொழியாகக் கொண்ட மக்கள் (முஸ்லிம்களுட்பட) பத்தொன்பது லட்சம் பேர் உள்ளனர். இவர்கள் இந்துவென்றும் முஸ்லிமென்றும், கிறிஸ்தவனென்றும், இலங்கைத் தமிழன், இந்தியத்தமிழனென்றும், யாழ்ப் பாணத் தமிழன், மட்டக்களப்புத் தமிழனென்றும், மேல் சாதியான், கீழ் சாதியானென்றும் வேற்றுமை பாராட்டுவதை ஒழிக்க வேண்டும். ஒன்று சேர்ந்து தமிழர் பெரும்பான்மையாக வசிக்கும் பிராந்தியங்களைத் தனி அங்கமாக உள்ள- சம அந்தஸ்துள்ள சிங்களமும், தமிழ் ஈழமும் சேர்ந்த- ஓர் கூட்டரசாங்கம் நிறுவப்பட வேண்டுமென்று கிளர்ச்சி செய்ய வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் இலங்கையிற் தமிழரென்ற இனமே இல்லாது ஒழியும். சந்தர்ப்பம் கிடைத்தால் இத்திட்டத்தை விளக்கி அடுத்த இதழில் எழுதுகின்றேன்.

# பேரறிஞன் - பேனாப் புரட்சி வீரன் C.N அண்ணாத்துரை M.A

எம்.என். பாலு
வந்தாறுமூலை

உலகத்தில் முக்கியத்துவம் வாய்ந்து, இன்று முன்னணி வகிப்பது, ஆத்மீகப் புரட்சி, ஆயுதப் புரட்சி, பேனாப்புரட்சி. ஆத்மீகப் புரட்சி யோகிகளிடத்திலும், ஆயுதப் புரட்சி யுத்த வீரர்களிடத்திலும் பேனாப் புரட்சி எழுத்தாளர்களிடத்திலும் உதிக்கிறது. முதலாவது ஆத்மீகப் புரட்சி, அதற்கும் நமக்கும் தூரமதிகமாகையால், ஆயுதப் புரட்சிக்கும் அணி கோலும், பேனாப் புரட்சியையும், அதன் வீரர்களையும், அதன் பலனையும் இங்கு எடுத்துக்கொள்வோம். பேனாப் புரட்சி, ஆயுதப்புரட்சியைப் பார்க்கிலும், மிக வேகமுடையதும் வெற்றி கொள்ளக் கூடியதும் என்பது, அன்று புரட்சி நாடுகளாயிருந்து மீட்சிகண்டு சுதந்திரமாக வாழும் நாடு களின் சரித்திரங்காட்டுகின்றது; அப்புரட்சித் தலைவர்களின் வரலாறு நிரூபிக்கின்றது. தன் தாய்நாட்டின் விடுதலைக்காக, சர்வாதிகாரத்தின் அஸ்திவாரத்தைப் பிடுங்குவதற்காக, சமூகத்தில் மண்டிக்கிடந்த ஊழல் களைப் பொசுக்குவதற்காக புரட்சி செய்ய, மக்களின் தன்மான உணர்ச் சியை, சுதந்திர தாகத்தை, உண்மைக்குயிர் கொடுக்கும் தியாக வழியை, இந்தத் தியாகத் தீயில் குதிக்கும் வீரத்தை, இவ்வீரத்தால் வெற்றி காண அவர்கள் பற்றும் ஆயுதத்தை, அதே ஆயுதத்தால் அவர்கள் காணும் வீர வெற்றியைப் பேனா முனையின் வேகத்தால் ஆக்க முடியுமென்பதை நிரூபித்தவர்கள்தான், சரித்திரங் கூறும், வோல்டேர், ரூஸ்ஸோ, கார்ல்மாக்ஸ், சண்யாண்ட்ஸென், வாஷிங்டன், லெனின் போன்ற மேல்நாட்டுப் புரட்சி வீரர்கள். இவர்கள் தங்கள் பேனா முனையாலும், பேச்சுத் திறமையாலும், எவ்வளவோ விதமான புரட்சிகளைச் செய்து சமூகத்தை விழிப்படையச் செய்திருக்கிறார்களென்பதையே அச்சரித்திரங் காட்டுகிறது. இந்த மாதிரியான பேனாப் புரட்சி வீரர்கள், நம் தாய்நாடான பாரத நாட்டிலும் இருந்திருக்கிறார்கள். இன்றுமிருந்து கொண்டிருக்கிறார்கள். முன் இருந்தவர் களில் நாமறிய முக்கியமானவர்கள் அமரகவி சுப்ரமணிய பாரதியார்,

கவிக்குயில் சரோஜினி அம்மையார் ஆகியவர்கள். இப்போதிருப்பவர்களில் முக்கியமான பேனாப் புரட்சியாளர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாஸன், புதுமைப் புரட்சி எழுத்தாளன் C.N. அண்ணாத்துரை (M.A) ஆகியவர் களென்பது, இன்று அவர்களின் எழுத்துக்கும், பேச்சுக்கும் இருக்கும் மதிப்பே உதாரணமாக விளங்குகிறது. (இன்னுமநேகர் இருக்கலாம். ஆனால் இவர்களைத்தான் நாம் இன்று இங்கு எடுத்துக் கூறவிருக்கிறது.) இவர்களிருவரிலும் பாரதிதாஸன் பட்டவர்த்தனமான உண்மைகளைத் தன் புதுமைக் கருத்துக்களைப், புரட்சிக் கனல் பறக்கும் புத்துயிர்க் கவிகளால் அள்ளி வீசுகிறார்.

அடுத்தவர் நம் அண்ணாத்துரை. இவர் தனது அபூர்வ ஆராய்ச்சியின் பயனாலும், அனுபவம் என்னும் அளவுக் கோலாலும், சமூகத்தில், நாட்டில் மறைந்து கிடக்கும் ஊழல்களையும், சர்வாதிகாரப் பேயர்களின் சதிச்செயல் களையும் திரை மறைவில் நடத்தும், திருவாளர்களின் திருட்டுத் தனத்தையும் உத்வேகமும், உணர்ச்சிப் பொறியும் கக்கும் எழுத்துக்களால், மிக ஆதார பூர்வத்தோடும் அழகான, உண்மையான தத்துவார்த்தங்களோடும் பாமரரும் படித்தறியக்கூடிய மிக நல்ல எளிய நடைகளால் விளக்கு கின்றார். அண்ணாத்துரையின் நூல்களைப் படிக்கும் ஒவ்வொருத்தருக்கும், தன்மான உணர்ச்சி தட்டியெழும் என்றால் மிகையல்ல. அவர் எழுதியி ருக்கும் "ஆரியமாயை, திராவிடர் நிலை, ஏ! தாழ்ந்த தமிழகமே, கம்பரசம், குமரிக்கோட்டம், தீ பரவட்டும், உலகப் பெரியோர் காந்தி" முதலிய நூல்கள், அவருடைய அபூர்வ ஆராய்ச்சியால் கடைந்தெடுக்கப்பட்ட அறிவுக் களஞ்சியங்களென்பது எமது அபிப்பிராயம். இதை யாரும் ஆட்சேபிக்கலாம். ஆனால், நான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை. ஏனெனில்! இது எமது உள்ளத்திலிருந்து கிளம்பிய சந்தேகமற்ற அபிப் பிராயம், அண்ணாத்துரையை "ஓர் நாஸ்திகன்!" என்று ஒரு சில பிரம்ம புத்திரர்களும், சாது போல் நடிக்கும் சண்டாளர்களும், அவர்களின் சகாக்களும் கூறுவதாகக் கேள்விப்படுகிறோம். ஆம், அவர்கள் அப்படிக் கூறுவதிலும் உண்மையிருக்கிறது. எப்படியெனில்! பழைய உளுத்துப் போன சம்பிரதாயங்களையும், அர்த்தம் விளங்காத சடங்குகளையும் கட்டியழுது வருவதே தேவ கட்டளை, ஆண்டவன் வாக்கு என்று கூறி மக்களை மாக்களாக்கும், ஒரு சில சுயநலக் கும்பல்களின் முட்டாள்தனமான போக்குகளுக்கோர் "நாஸ்திகன்தான்", எதிரிதான். "அறியாமை துயரத்தின் தாய்" என்று கூறி அறியாமையில் உழன்று அடிமைப்பட்டுக் கிடந்த

சமுதாயத்தைத் தன் பேனா முனையால் விழிப்படையச் செய்த மேல் நாட்டுப் பேரறிஞன், ''ராபர்-க்ரீன் இங்கர்ஸாலை'' நாஸ்திகன் என்று வாய்கூசாது சொன்ன இந்த உலகம், நமது இந்திய பேனா புரட்சி வீரன் பேரறிஞன் அண்ணாத்துரையைச் சொல்வதில் பின்வாங்குமா? அறியாமையைப் போக்க அவதரித்த யேசு பெருமானையும், காந்தி மகானையும் படுகொலை செய்த பாழாய்ப்போன இந்த வஞ்சக உலகம், சாதாரண மனிதனான, அண்ணாவை, நாஸ்திகன் என்று திட்டுவதில் மட்டும் நிறுத்தியிருக்கிறதே! அதற்காக, இந்த உலகத்துக்கோர் நன்றி கூறாமல் என்ன செய்வது? சமூகத்தின் ஊழல்களை, சந்தேகமற விளங்குந் தன்மையும், சுயமாகச் சிந்தித்துத் தன் உள்ளத்தில் கிளம்பும் அபிப்பிராயங் களைத் தைரியமாக வெளியிடும் சக்தியும், தனக்கு உண்மையென்று ஆராய்ச்சிகளின் பயனாய் தான் கண்ட உண்மைகளை உலகத்திற்கு உறுதியுடன் உதவும் ஆற்றலும் படைத்தவர் நம் அண்ணாத்துரையென்பது, அவரின் நூலைப் படிக்கும் ஒவ்வொரு சுயநலமற்ற மனிதனும் தயக்க மின்றி ஒப்புக்கொள்ளும் ஓர் உண்மை. தென்னிந்திய எழுத்தாளர்களில், இன்று முதலிடம் வகிப்பவர்களில் ஒருவரான ''கல்கி'' ஆசிரியர், நம் அண்ணாத்துரையை ''இப்சனுக்கும், பெர்னாட்ஸாவுக்கும், கால்ஸ்வர்த் திக்கும்'' ஒப்பிட்டுக் கூறியிருக்கிறாராம். இப்படியான, அண்ணாத்துரை போன்ற எழுத்தாளர்களை - பேனாப் புரட்சியாளர்களை, ஒரு சில கும்பல் தவிர, மறுமலர்ச்சிக் கொள்கையும், புதுமை வேகமும் கொண்ட மக்கள் இன்று வரவேற்பார்கள்; வரவேற்கிறார்கள் என்பது நாம் இன்று காணும் பேருண்மை. உதாரணம், அண்ணாவின் நூல்களென்றால், நம் இலங்கையில் கூட தனி மதிப்பிருப்பதே. அண்ணாத்துரை போன்ற புரட்சி எழுத்தாளர் களை ஆதரிப்பதோடும், அறிமுகப்படுத்துவதோடும், புகழ்வதோடும் நின்று விடாது, அவர்களைப் பின்பற்றி, நம் நாட்டிலும் அதே மாதிரியான புதுமைக் கொள்கையுடைய எழுத்தாளர்கள் தோன்ற வேண்டும். அப்படி யான புத்துணர்ச்சி தரும் எழுத்தாளர்களை பத்திரிகைகள் ஆதரித்து, அவர்களின் கொள்கைகளைப் பரப்ப உற்சாகமூட்டி வழிகாட்டவேண்டும் என்பதே எமது வேண்டுகோள். காரணமில்லாமல், பழமையில் ஊறிப் போய், மடமையைக் கைவிடாமல், மயங்கி வாழும் மக்களுக்குத் தங்கள் பேனா முனையின் மூலமும் பேச்சு மூலமும் புதுமைக் கருத்துக்களைத் தகுந்த ஆதாரத்தோடு, சமூக ஊழல்களுக்குச் சவுக்கடி கொடுக்கும் புரட்சி எழுத்தாளர்களைப், புரட்சிப் பேச்சாளர்களை ''நாஸ்திகர்!'' என்று ஒரு

சில ஆசாட பூதிகள், காந்தி மகானின் போர்வையான கதருடைக்குள் மறைந்து கொண்டு கொலைசெய்ய எத்தனிக்கும் கோட்ஸேக்கள், மதத்தின் பெயரால், பல விதம்விதமான கடவுள்களின் பெயரால் வயிறுவீங்க உண்டு, மக்களைச் சுரண்டிவரும் மகானுபாவர்கள், கடவுளின் பிரதிநிதிகள் கூறலாம். எதிர்காலம், மேடைகளிலேறிக் கூச்சலிடலாம். ஏன்? இக் கட்டுரையையே ஏளனஞ் செய்யலாம். ஆனால், பழைமைக்குப் படுகுழி தோண்டி, புதுமைக்குப் புத்துயிரளிக்கத் துடித்துக்கொண்டிருக்கும், எதிர்கால இளம் மக்களின் வீர உள்ளம் இவர்களின் இந்தக் கூச்சலுக்கோ, மறுப்புக்கோ, வாய்வீச்சுக்கோ, பயமுறுத்தலுக்கோ அஞ்சப் போவதில்லை என்பதை நிரூபிக்கும் என்று நாம் உறுதியாகக் கூறுவோம். வாழ்க! பேனாப் புரட்சி வீரன் பேரறிஞர் அண்ணாத்துரை.

# சிந்தனைச் சுருள்

ஜோ. தெரேஸ் ரூபராணி
மட்டுநகர்

தூங்கும் குழந்தையின் கரத்தில் இருந்து நழுவி விழும் பொம்மைகளைப் போல் வண்ண மலர்கள் உதிர்கின்றன. .....நந்தவனம்! அது பார்க்கத் தகுந்தது! மீண்டும் அதையே பார்!! அங்குள்ள மலர்களைக் கண்டு பாடும் பறவைகளைப் பார்.....

மலர்களுக்கிடையே நான் என் இலட்சியப் பாதையில் செல்கிறேன். கீதமிசைக்கும் புட்களிடமிருந்து சோகக் குரலைக் கற்றுக்கொள்கிறேன்.... இயற்கை தனிமை என்னும் மூலையில் சோம்பிக் கிடப்பதாக நான் நினைத்தேன். இதைக் கண்ட இயற்கை என்னை ஏளனஞ்செய்தது!...... நானும் மலர்வனப் பறவையும் ஒரே கதையைக் கூறுகிறோம்! நானும் வாயற்ற மலர்களின் குரலாகத்தான் விளங்குகின்றேன். மலர்களைச் சுற்றி வருவதே என் வேலையின் ஓர் பகுதி! அது சிந்தனைக்கு எழுச்சி தருகிறது!... வாடும் மலரே! பூங்கொத்தே! உன்னைக் கொய்வது என் பழக்கமல்ல. உன் சிருஷ்டிப்பில் இறைவனின் படைப்புத் தன்மை எத்தனை அழகாய்ப் பதுங்கிக் கிடக்கிறது! நான் மலருக்குக் கூடத் தீங்கிழைக்க விரும்பவில்லை. இயற்கையன்னையின் படைப்பை நான் சிதையேன். வானம்பாடியின் கண்கொண்டு நான் மலர்களை நோக்குகிறேன்.... ஒரு மலர் இதழையாவது தென்றல் அசைத்தால் அதற்கு ஏற்படும் அதிர்ச்சி என்னுள்ளத்திலே எதிரொலித்து கண்ணீர்த் துளியாக வெளிப்படுகிறது! ஏனெனில்.... பிரிவின் துயரம் எங்கும் பரவிப் பாய்கிறது!..... சமுதாயத்தின் இந்திர ஜாலத்திலே மலரும் சிறைப்பட்டே கிடக்கிறது. அதன் இதழ்களின் நாவுக்கு இறைவன் ....பேசும் சக்தியைத் தந்தானில்லை. அவ்விதம் தந்திருந்தால் ....அதன் உடைந்த இதயத்தின் குரல் எழும்பியிருக்குமே!..... மேற்கே அறிவுத்திறனே வாழ்க்கை ஊற்றாக விளங்குகிறது. கிழக்கிலோ அன்பே வாழ்க்கையின் அடிப்படையாக உள்ளது.... நீ இந்தியாவைக் கண்டதில்லையா? இதயமுள்ள யாரும் போற்றும் நாடல்லவா அது?.... அதன் ஒவ்வொரு அணுவும் உலகின் மேல் ஒளி வீசினாலும்! அந்தோ.... அது புழுதியிலும் குருதியிலும் கிடந்து தத்தளிக்கிறது!!!

வான்வெடித்து ஓர் வனப்புமிக்க வனிதைக்கு வழிவிட்டது. அவள் தன் முகத்திரையைச் சற்றே விலக்கினாள். அவள் நெற்றியில் தெய்வீக ஒளி சுடர்விட்டது. அவள் கண்களில் தெய்வீக அன்பு வெறியோடு கூடித் தேங்கி நின்றது. அவள் ஆடை மேகம் போன்றிருந்தது. அதில் ரோஜா இதழ்களையொத்த புள்ளிகள் நெடுகிலும் நெளிந்தன. அவள் விலங்கு அகற்றப்பட்டிருந்தது. அவள் தொண்டையில் இருந்து இதயம் உருகும் இன்னிசைக் கானம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. பார்! அதுதான் இந்தியாவின் ஆத்மா! அவள் கானத்தின் வேகம் யார் மனதையும் இரங்கச் செய்யும் இதயத்தொட்டியல்லவா?

# பூமியின் உற்பத்தியும் அதன் காலமும்

செ. குணபாலசிங்கம்

[இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க வெளியீட்டிலிருந்து எடுக்கப்பட்டது]

சூரிய குடும்பத்திலுள்ள கிரகங்கள் ஒன்பது. இவற்றையே நாம் 'நவக் கிரகங்கள்' என்கிறோம். இவற்றுள் பூமியும் ஒன்று. இப்பூமியின் உற்பத்தியையும் காலத்தையும் பற்றிப் பல கொள்கைகள் உள.

பூமியின் உற்பத்தியைப் பற்றி ஜேர்மானிய தத்துவப் பேராசிரியர் கான்ற் (Kant) என்பவரின் கொள்கை பின்வருமாறு: ஆகாயத்தில் எவ்விதம் தோன்றின எனத் தெரியாத சில மூலப்பொருள்கள் உள. அவை மையகக் கவர்ச்சியினாலே ஒன்றோடொன்று மோதப்பட்டுத் தாம் தாமே தம்மைச் சுற்றிக்கொள்ளுந் தன்மை அடைகின்றன. இங்ஙனம் ஆதியில் அசைவற்றிருந்த பொருள்கள் ஒன்றோடொன்று மோதியமையால் சூடுண்டாகி, உருளுந் தன்மையுள்ள சூக்கும நட்சத்திரக் கூட்டமாக (Gaseous Nebula) மாறின. சுற்றுந்தன்மை அதிகரிப்பதனால் மையத்திலிருந்து விலகுந்தன்மையும் அதிகரிக்கும். இதனாலே, மேற்கூறிய சூக்கும நட்சத்திரக் கூட்டத்திலுள்ள பொருள்களுட் சில, மத்தியிலிருந்து விலகுந்தன்மையால் எறியப்பட, அவை வட்டவடிவமாகின்றன. அங்ஙனம் எறியப்பட்டு எஞ்சியுள்ள மத்திய பகுதியே சூரியன் எனப்படும். அவ்வாறு எறியப்பட்ட பகுதிகள் குளிர்ந்துகொண்டே போகும்போது உருவத்தில் சிறுக்கின்றன. காலகதியில் அவை கிரகங்களாக உருப்பெறுகின்றன. சக்தி சாஸ்திரத்தின்படி (Dynamics) இக்கொள்கை வரவேற்கக்கூடியதொன்றன்று. சுழலும் வேகம் எப்பொழுதும் ஒரே அளவாய்த்தான் இருக்கும். ஆரம்பத்தில் குறைந்தும் பின் கூடியும் இருப்பதில்லை. எனவே இக்கொள்கை இத்தால் நிராகரிக்கப்படுகின்றது.

கி.பி.1796இல் இலப்லேசு (Laplace) என்னும் அறிஞர் புதியதோர் கொள்கையை எடுத்துக்காட்டினார். அஃதாவது மேற்கூறிய மூலப் பொருள்கள் ஆரம்பத்திலேயே வெப்பமும் சுற்றுந்தன்மையும் உடைய சூக்கும நட்சத்திரக் கூட்டமாக இருந்தன. பின்பு அவை குளிர்ந்தமையால்,

உருவத்தில் சிறுத்தும் வேகத்தில் கூடியும் வெவ்வேறு பொருள்களாக வட்டவடிவமாக அப்பாற் சென்றன. பின் அவையே கிரகங்கள் ஆகின.

இக்கொள்கையும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றன்று. வட்டவடிவமான பொருள்கள் சூக்கும நட்சத்திரக் கூட்டத்திலிருந்து விலகுவதற்குப் போதிய சக்தி வேண்டும். ஆயின் சூக்கும நட்சத்திரக் கூட்டத்தில் தொடக்கத்திலே உள்ள சக்தி இவ்வட்டங்களை வெளியே எறிவதற்குப் போதியதன்று எனச் சில விஞ்ஞானிகள் கண்டனர். மேலும் இலப்லேசு அவ்வட்ட வடிவமான பொருள்கள் எவ்விதம் தனித்தனிக் கிரகங்களாயின என்பதையும் காட்டினார் அல்லர். மூன்றாவதாக, சக்தி சாத்திரத்தின்படி, சூக்கும நட்சத்திரக் கூட்டத்திலிருந்து பிரியும் வட்டவடிவமான பொருள்கள் ஒன்றோடொன்று இணைந்தே இருக்கும். அவை தனித்தனி வட்டங்களாக இருக்கமாட்டா. எனவே, இக்கொள்கையும் தவிர்க்கப்படுகின்றது.

1904இல் சேம்பர்லின் (Chamberlain), மோல்ரன் (Moulron) என்னும் இரு பேரறிவாளர்கள் இன்னொரு கொள்கையை நிலைநாட்டியுள்ளார்கள். சூரியனுக்கும் அதற்கியைந்த ஒரு நட்சத்திரத்துக்குமிடையே உண்டாய சேர்க்கையின் பயனாகப் பூமி தோன்றியதென்பர்.

சூரியனது மேற்படலம் பிரிந்து போகும் தன்மை கொண்டுள்ளது. மேற்கூறிய நட்சத்திரம் சூரியனை அணுகும் பொழுது மையக்கவர்ச்சியினால் சூரியனது மேற்படலத்திலிருந்து சிறு சிறு பகுதிகள் வெளிக்கிளம்புகின்றன. அங்ஙனம் வெளிக்கிளம்பிய பகுதிகள் பின்பு குளிர்ச்சியடையும் பொழுது சூரியனை விட்டு விலகுகின்றன. காலகதியில் அவைகள் கிரகங்களாகின்றன.

இக்கொள்கையில் இயீன்சு (Jeans), செபரிசு (Jeff reys) என்னும் இரு அறிஞர்கள் சில திருத்தங்கள் செய்துள்ளனர். இவர்கள் கொள்கைப்படி, வெளிக்கிளம்பிய அப்பகுதிகள் வெவ்வேறாகச் சூரியனை விட்டு பிரியவில்லை; அவைகள் ஒன்றுசேர்ந்து, ''மனிலா'' சுருட்டின் வடிவமுள்ள தனித்த ஒரு பிண்டமாக வெளிக்கிளம்பின. பின் மையக் கவர்ச்சியினால் அத்தனித்த பிண்டம் வட்டவடிவமான உருவங்களாக மாறுகின்றது. இவை பின்பு கிரகங்களாக உருப்பெறுகின்றன.

எனவே, சூரியனதும் அதற்கியைந்த ஒரு நட்சத்திரத்தினதும் சேர்க்கையின் பயனாகப் பூமி உண்டாகியதென்ற இக்கொள்கையே இன்று பலராலும் மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**பூமியின் காலம்**

சிசரோ (Cicero) என்பவர் 2,000,000 ஆண்டுகளுக்கு முன் பூமி உண்டாகியது என்பர். பபிலோனிய சோதிடர்கள் 500,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதென்பர். பாரசீக ஞானியாகிய சொராசிட்டர் (Zoroaster) என்பவர் 12,000 ஆண்டுகள் என்பர். யூதருடைய இதிகாசம் (Hebrew Chronicle) பூமி கி.மு 4004ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ஆம் திகதி காலை 9 மணிக்கு உற்பத்தியானதெனக் கூறுகின்றது. இந்திய சோதிடரில் சிலர் பூமியின் உற்பத்தியைக் கணித்தல் அசாத்தியம் என்றனர்.

ஆனால், பல இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன் பூமி தோன்றியதெனப் பிற்காலத் தரை நூல் விற்பன்னர்கள் (Geologisys) அபிப்பிராயப்படுகின்றார்கள். பூமியின் காலத்தைக் கணக்கிடுவதற்குப் பல வழிகள் உள்ளன.

தரையின் மேல் பரந்திருக்கின்ற கற்பாறைகளைக் கொண்டு பூமியின் காலத்தைக் கணக்கிடுவது ஒரு வகையாகும். பூமியிலுள்ள கற்பாறைகள், வெயில், மழை முதலாய ஏதுக்களினால் உடைக்கப்படுகின்றன. அங்ஙனம் உடைந்த பொடிகள், ஆறு, காற்று முதலியவற்றினால் எடுத்துச் செல்லப்பட்டு, வேறு இடங்களில் இடப்படுகின்றன. இங்ஙனம் வண்டல்கள் மேலும், மேலும் இடப்படுவதினாலே, பாறைகள் உண்டாகின்றன. ஆறு களினால் கொண்டுவரப்பட்ட வண்டல் தொகுதியின் விகிதத்தைப் பாறை களின் அடர்த்தியுடன் (Thickness) ஒப்பிட்டுக் கணக்கிடுங்கால், அப்பாறை கள் எத்தனை வருடங்களில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்பது புலனாகும். பாறைகளின் காலத்தைக் கணக்கிட்ட பின், பூமியின் காலத்தையும் அனுமானித்தல் சாலும்.

கெயிலி (Halley) என்னும் வானசாஸ்திரி இன்னொரு வழியைக் கண்டுபிடித்தார். மலைகளிலிருந்து ஆறுகள் பாயும் போது, அவைகள் மலையிலுள்ள உப்பையும் கரைக்கின்றன. இங்ஙனம் கரைக்கப்பட்ட உப்பு கடலைச் சேருகின்றது. இதனாலே கடல் உப்புத் தன்மை உடையதாகின்றது. சமுத்திரத்திலுள்ள உப்புத்தன்மையின் அளவையும் காலத்துக்குக் காலம் கூடிச்செல்லும் உப்புத்தன்மையின் அளவையும் நாம் ஒப்பிட்டுக் கணக்கிடும் போது அச்சமுத்திரத்தின் காலம் இன்னதென்று அறியலாம். இதன் வாயிலாகப் பூமியின் காலத்தையும் அறியமுடிகின்றது.

இவ்விரு வழிகளும் பூமியின் காலம் 300,000,000 வருடங்கள் என நமக்குக் காட்டுகின்றன. ஆயின், இது திட்டமானதன்று. ஆறுகளினால்

கொண்டுவரப்படும் வண்டல் தொகுதி எப்பொழுதும் ஒரே அளவாய் இருப்பதில்லை. இப்பொழுது குவிக்கப்படும் விகிதம் கடந்த வருடங்களின் விகிதத்திலும் கூடியதெனக் கணக்கிட்டுள்ளார்கள். இதுபோலவே சமுத்திரத்தின் உப்புத்தன்மையும் என்ன விகிதத்தில் கூடிக்கொண்டு வருகின்றது என்பதும் கணக்கிட முடியாது. அவ்விகிதம் கூடியும் குறைந்தும் வரும் தவிர ஒரு காலத்திலே தரையின் மேலிருந்த கற்பாறைகள் பின் சமுத்திரத்தினுள்ளே தாழ்ந்திருக்கக்கூடும். அங்ஙனம் தாழ்ந்து அடிப்படையில் இருக்கும் கற்பாறைகளிலிருந்தும் கடல் உப்புத் தன்மை அடைந்திருக்கலாம். இக்காரணங்களினால் இவ்வகைகளைக் கொண்டு பூமியின் காலத்தைத் திட்டமாகக் கணிக்கமுடியாது.

அழிந்து ஒழிந்து பூவகத்தே கிடக்கும் விலங்கு விருட்சங்களைக் (Tossils) கொண்டும் பூமியின் காலத்தை அறியலாம். இடார்வினின் வளர்ச்சிக் கிராமக் கொள்கைப்படி (Theory of Evolution) காலந்தோறும் பிராணிகள் உருவத்தில் மாறிச் செல்கின்றன. இம்மாற்றத்தைக் கொண்டு பாறைகளில் படிந்திருக்கும் அழிந்தொழிந்த பிராணிகள் எக்காலத்துக் குரியன என்பதை அறியலாம். இதைக்கொண்டு பாறைகளின் காலத்தையும் அதன் மூலமாகப் பூமியின் காலத்தையும் கணக்கிடலாம். ஆனால் மேற்கூறிய மூன்று முறைகளைக் கொண்டும் பூமியின் காலத்தைத் திட்டமாகக் கணக்கிட முடியாது.

கெல்வின் பிரபு, சூரியனிடத்திலிருந்து பூமி பெறுகின்ற சூட்டினது விகிதத்தையும் பின் பூமி குளிரடையும் விகிதத்தையுங் கொண்டு பூமியின் காலத்தைக் கணக்கிட முயன்றார். பூமி குளிர்ச்சியடையத் தொடங்கும் பொழுது அதன் வெப்பம் 7000 of பின் குளிர்ச்சியடைந்த விகிதத்தைக் கொண்டு, பூமி 40,000,000 வருடங்களுக்கு முன் தோன்றியதெனக் கணக்கிட்டுள்ளார். ஆனால் பூமியிலுள்ள சில பொருள்கள் கொடுக்கும் வெப்பத்தை அக்காலத்து அறியாதமையால் அவர் தமது ஆராய்ச்சியுள்ளே புகுத்தாமையின், அவரது முடிபும் திட்டமானதன்று.

பாறைகளில் இருடியம் (Radium) என்னும் பொருள் இருப்பதாகவும் அது சூட்டை வெளிவிடுவதாகவும் கியுரி (Curie) என்னும் பிரான்ஸிய அம்மையாரும், அவர் கணவனும் கண்டனர். எனவே, பூமி குளிர்ச்சியடையும் பொழுது வெப்பத்தையும் பெற்றுக்கொண்டிருக்கின்றமையால் கெல்வினுடைய ஆராய்ச்சி சரியானதெனக் கொள்ளமுடியாது. யுரேனியம், தோறியம் என்னும் இரு உலோகங்களும் கூறுகுலைதலின் பயனாக

இருடியம் உண்டாகின்றது. இந்த இருடியம் பின்பு ஈயமாக மாறுகின்றது. 7400,000,000 அவுன்சு நிறையுள்ள யுரேனியம் ஒரு அவுன்சு ஈயத்தை ஒரு வருடத்துக்குக் கொடுக்கின்றது என்பது அறிஞர் முடிபு. ஆரம்பத்தில் ஈயம் இல்லாதிருந்து, இப்பொழுது X அவுன்சு ஈயம் காணப்படின், அத் தொகை எவ்வளவு காலத்தில் சேர்ந்திருக்கக்கூடும் என்பதை அறியலாம்.

ஒரு வருடத்தில் 7400,000,000 அவுன்சு யுரேனியம்
கொடுக்கும் ஈயம் = 1 அவுன்சு
1 வருடத்தில் 1 அவுன்சு யுரேனியம் கொடுக்கும் ஈயம்

$$\frac{1 \text{ அவுன்சு}}{7400,000,000}$$

1 அவுன்சு ஈயம் உண்டாவதற்கு செல்லும் காலம் 7400,000,000 வருடம்
X அவுன்சு ஈயம் உண்டாவதற்கு செல்லும் காலம் 7400,000,000 X வருடம்

தோறியம் கூறுகுலைதலின் பயனாகவும் ஈயம் உண்டாவதென மேலே கூறப்பட்டுள்ளது. எனவே, ஆரம்பத்தில் ஈயம் காணப்படாத உலோகத்தில், இப்பொழுது இருக்கும் ஈயத்தின் அளவை அறிவோமானால், அத் தொகையைக் கொண்டும், யுரேனியம், தோறியம் என்பவற்றின் அளவைக் கொண்டும் அவ்வுலோகத்தின் காலத்தைக் கணக்கிடுவதற்கு உலோசன் (Lowson), கோம்சு (Holmes) என்னும் இருவர் பின்வரும் வாய்ப்பாட்டைக் கையாண்டனர்.

$$\text{காலம்} = \frac{\text{ஈயம்} \times 7400,000,000}{\text{யுரேனியம்} \times 38 \text{ தோறியம்}} \text{ வருடங்கள்}$$

இதன் மூலமாக அவ்வுலோகங்கள் காணப்படும் எரிபாறைகளின் (Igneous Rocks) காலத்தைக் கணக்கிடலாம். எரிபாறைகளுள் மிகப்பழைய பாறையின் காலம், ஏறக்குறைய 1500,000,000 வருடங்களாகும். எனவே, பூமியின் காலம் இப்பாறையின் காலத்தில் சற்றே கூடியிருக்க வேண்டும். இம்முறையைக் கொண்டு, பூமியின் காலம் ஏறக்குறைய 2000,000,000 வருடங்களென தற்கால விஞ்ஞானிகள் முடிவுக்கு வந்துள்ளார்கள்.

# அணு

கோ. கோணேசபிள்ளை

''அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' என்ற குறட்பா ஔவையாரால் இற்றைக்கு இரண்டாயிரமாண்டுகளுக்கு முன் திருக்குறள் அரங்கேற்றிய போது கூறப்பட்டதென வழங்குகிறது. ஆனால் இப்பாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் அணுவும் இப்போது அறிவியற் பெரியார்கள் குறிப்பிடும் அணுவும் ஒரே அளவின என்று சொல்ல முடியா தெனினும் ஒரு பொருளின் நுண்ணிய பாகத்தையே அணுவென்றழைத் தனர் பண்டையோர் என்பது வெளிப்படை. ''அவனன்றி அணுவு மசை யாது'' என்ற பழமொழியிலும் அணு மேலே குறிப்பிட்ட பொருளையே கொண்டுள்ளது.

இது இவ்வாறிருக்க அறிவியற் பெரியார்களின் கருத்தை நோக்குவோம். ''அற்ரம்'' (atom) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதையே தமிழில் அணு என்று வைத்துக் கொள்வோம். சென்னைப் பல்கலைக்கழகத்தாராலும் திருவாங்கூர் பல்கலைக்கழகத்தாராலும் வெளியிடப்பட்ட கலைச்சொல் அகராதியும் இப் பொருளையே கூறுகிறது. அற்ரம் (atom) என்னும் சொல் கிரேக்க மொழியில் (Lteuvw) வெட்ட முடியாதது அல்லது பிரிக்க முடியாதது என்ற பொருள் உள்ள சொல்லை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் தற்போதைய ஆராய்ச்சியாளரின் ஆராய்ச்சித் துணிபால் இச்சொல் பொருத்தமற்றுவிட்டது. பிரிக்கப்படாத பொருள் என்றழைக்கப்பட்டது பிரிக்கக்கூடியதென அறிவியற் பெரியார்கள் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்தனர்.

1802ஆம் ஆண்டு அறிவியற் பெரியார் டோல்ரன் (Dalron) தனிமம் (element) மிகவும் நுண்ணிய பாகங்களால் ஆக்கப்பட்டுள்ளதென்றும் அவையெல்லாம் ஒரே தன்மையினவென்றும் குறிப்பிட்டார். இவையே அணுக்களென்றும் அவை பிரிக்க முடியாதனவென்றும் ஆக்கவோ அழிக்கவோ முடியாதனவென்றும் கூறியுள்ளார். இவரின் ஆராய்ச்சித் துணிபு இப்படியிருக்க, பலர் இதையிட்டு ஆராயத் தொடங்கினர். அறிவியற் பெரியார் ஜே.ஜே.தொம்ஜன் (J.J.Thomson) அணு பிரிக்க முடியாதது என்பது பொருந்தாதென்றும் மின்னணு (Electron = எலக்ரன்)

என்னும் மின்சாரம் ஏற்ற பொருளைப் பிரித்தெடுக்கலாம் என்றும் குறிப் பிட்டார். இப்படி அணுவிலிருந்து பிரித்தெடுக்கக்கூடிய மின்சாரமேற்ற பொருளை இவர் ''கோப்ப சல்'' என்று அழைத்தார். ஆனால் இப்போது ஆங்கிலத்தில் எலக்ரன் (Electron) என்றழைக்கப்படுகிறது. தமிழில் மின்னணு என்று அழைக்கப்படுகிறது. இந்த மின்னணுவைப் பற்றி தோம்ஸன் 1897ஆம் ஆண்டு றோயல் இன்ஸ்ரிரியுடிவ் (Royal Institute) குறிப்பிட்டார்.

மின்னணு கண்டுபிடிக்கப்பட்டதால் அறிவியற் கொள்கை மாற்றம் ஏற்பட்டது. மிகவும் நுண்ணியதும், பிரிக்க முடியாததும் மனித சக்திக்கு அமையாதது என்றும் எண்ணப்பட்ட அணு இன்று பிரிக்கப்பட்டு உபயோகத்துக்கு வந்துவிட்டது. மின்னணுக்கள் எல்லா அணுக்களிலும் உண்டு. இவை ஒரே நிறையுடையன. ஏற்றுச் செல்லும் மின்சாரமும் ஒரேயளவுடையதே.

அணுவின் அளவு மிகவும் சிறிது. ஏறக்குறைய 80 000 000 அணுக் களை ஒன்றின்பின் ஒன்றாய் அடுக்கினாற்றான் ஒரு அங்குல நீளமாகு மென்று திரு.பி.ஷி.எல்.கெம்ப் (B.C.L.Kemp, M A F R S A) கூறியுள்ளார். மேலும் இவர் ஒரு சீரெடை (Gramme - கிராம்) நிறைக்கு 6 000 000 000 000 000 000 000 000 நீரக (Hrdrogen= ஹைறிஜின்) அணுக்கள் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலே குறிப்பிட்டவைகள் அணு வின் நுண்ணிய தன்மையைக் காட்டுகின்றன. இந்நுண்ணிய அணுவின் அமைப்போ ஆச்சரியமானது. ஒரு அணுவில் மின்னணுக்கள் மாத்திரமல்ல பறோடோன் (Porton), நியுறன் (Neutron), பொசிறோன் (Positron) முதலியவைகளும் உண்டு. சூரியனைக் கோள்கள் சுற்றுவது போல் மின்னணுக்கள் நியுகிளியஸை (Nucleus) சுற்றுகின்றன.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக அணுவைப் பற்றிய ஆராய்ச்சி மிகவும் தீவிரமாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சியின் பயனால் அணுவைப் பிளந்தால் அதிக சக்தி உண்டாகின்றது என அறிந்தனர் அறிவியற் பெரியார். இதை அடிப்படையாகக் கொண்டே 1945ஆம் ஆண்டு உலகத்தை ஆட்டிவைத்த அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே, அறிவியற் பெரியார்கள் அணுசக்தியால் இயந்திரங்களை இயக்க முயல்கின்றனர். அணுசக்தி மனித உபயோகத்திற்கு வந்தவுடன் எமது வாழ்க்கையில் எவ்வளவோ அதிசயங்களைக் கண்டுகளிக்கலா மென்பதில் ஐயமில்லை.

# சிறுகதைகள்

## பிள்ளைப் பாசமா? விதியின் சூழ்ச்சியா?

எம். எஸ். பாலு
வந்தாறுமூலை

மாலை சுமார் ஆறு மணியிருக்கும். கதிரவன் தனது வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். காலையில் மேய்க்கக் கொண்டு சென்றிருந்த பசுக்கூட்டங்களையும் எருமைகளையும் அவற்றின் மேய்ப்பாளர்களான சிறுவர்கள் சாய்த்து வந்துகொண்டிருந்தார்கள். நீர்க்காக்கைகளும் ஊர்க்காக்கைகளும் கதிரவனின் அஸ்தமனத்தால் மனங்கசந்தன போல உப்போடை எனும் சிறு குளத்தைத் தாண்டிப் பறந்து கொண்டிருந்தன. வேளாண்மைக் காவலுக்குப் போகின்றவர்களும் கையில் பன்றி வெருட்டிகளையும் ஓலைச்சுருள்களையும் எடுத்துக்கொண்டு வயல்களை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். அந்த வேளையில்தான் முத்துலிங்கமும் கிரான் புல்லு வேலை ஸ்தலத்திலிருந்து வீடு நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் கையில் சில மரக்கறிகளும், வரால் முதலிய குளத்து மீன்களும் இருந்தன. வேலை செய்து களைத்த உடலையும், வேலைஸ்தல அதிகாரியாயிருக்கும் ஒரு வரண்ட பிரமச்சரியனான மகானுபாலனின் சகிக்க முடியாத தூஷணைகளால் தாக்குண்டு நொந்து போன உள்ளத்தையும் சுமந்து கொண்டுவந்தான். தன் கணவன் வரும் நாளென்று முன்னமேயே தெரிந்திருந்த நாகம்மாள் அவனுக்குக் குளிக்க வெந்நீரும், பருகத் தேநீரும் வைத்துக் காத்துக்கொண்டிருந்தாள். களைப்போடு வந்த முத்துலிங்கம், குளித்துவிட்டுத் தேநீரும் பருகித்தான் களைப்பை ஆற்றிக்கொண்டான்.

சிறிது நேரத்துக்குப் பின் இருவரும் இராப்போசனத்தையும் முடித்துக் கொண்டு ஆறுதலாய்ப் படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள். படுத்துக் கொண்டே முத்துலிங்கம் தன் மனைவியிடம் அதிகாரிகளின் அட்டூழியங்களை விபரித்துக்கொண்டு ''எல்லாம் என் ஒரு மகனுக்குத்தானே.

ஆண்டவனே இம்முறை எப்படியாவது என் பிள்ளை பரீட்சையில் தேறி விட வேண்டும் முருகா'' என்று வேண்டிக்கொண்டே கண் அயர்ந்து விட்டான். தேகக்களைப்பால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த முத்துலிங் கத்துக்கு, வாசலில் சைக்கிள் மணி அடித்தது கனவில் கிருஷ்ணன் கோயிலில் மணி அடிப்பது போலிருந்தது. இந்த மணிச் சத்தத்துக்குக் காது கொடுத்துக்கொண்டிருந்த நாகம்மாள் ''இந்தாருங்க கடப்பில் சைக்கிள் மணியடித்துக் கேட்குது. அது என்ன கொஞ்சம் பாருங்க'' என முத்துலிங்கத்தை அரட்டினாள். அதற்குள் சைக்கிள் மணி ஓசையோடு கலந்து வந்த ''அண்ணே தந்தி ஒன்று.'' என்ற சத்தத்தைக் கேட்டதும் ''வாறன் தம்பி'' என்றே சொல்லிக்கொண்டே விளக்கேற்ற நெருப்புப் பெட்டியைத் தேடினான். அதுவும் அந்த அவசர நேரத்தில் அவன் கண் களுக்கும் கைகளுக்கும் அகப்படாமல் எங்கோ போய் ஒழிந்து கொண்டது. அவனுக்கு வந்த ஆத்திரத்தில் நாகம்மாளையும் கடிந்து விட்டு, கதவைத் திறந்துகொண்டு வாசலை நோக்கி ஓடினான். தந்திக்காரன் ''உங்களுக்குப் புளியந்தீவில் இருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது'' என்று தந்தியை நீட்ட, முத்துலிங்கம் ''அதை நீதான் வாசித்துக் காட்டு தம்பி'' என்று சொன்னான். சைக்கிள் விளக்கு வெளிச்சத்தில் அதில் ''உன் மகனைக் காணவில்லை. பாடசாலை அதிபர்'' என்று இருந்ததைத் தந்திக்காரன் படித்ததும், நெருப்புப் பெட்டியைத் தடவியெடுத்து விளக்கேற்றிக் கொண்டிருந்த நாகம்மாள் ''ஐயோ! என்மகனே'' என்ற சத்தத்தோடு விழுந்து மூர்ச்சையாகி விட்டாள். தந்திக்காரனையும் அனுப்பிவிட்டுக் கலங்கிய மனத்தோடு, பீறிட்டுக் கொண்டு வரும் திகிலையும், துக்கத்தையும் அடக்கிக்கொண்டு உள்ளே போன முத்துலிங்கம் இந்தக் காட்சியைக் கண்டதும், பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு வந்துவிட்டான். இந்த அதிர்ச்சிகளால் தாக்கப்பட்ட முத்துலிங்கம் பேயாட்டக்காரன் கத்துவது போல் என்னவெல்லாமோ உளறி, அழுது கர்ஜித்துவிட்டான். இந்தக் கோர சத்தம் அயல் வீட்டுக்காரரையும் திடுக்கிட வைத்து நித்திரைக்கும் கல்தா கொடுக்கச் செய்துவிட்டது. அடுத்த வீட்டு ஐயாத்துரையும், மனைவி அழகம்மாவும், இன்னும் சிலரும் ஓடி வந்தவர்கள், முத்துலிங்கத்தின் பயங்கர அழுகையையும், மூர்ச்சையாகிக் கிடக்கும் நாகம்மாளின் உடலையும் கண்டு திகைத்துப்போனார்கள். இவர்களோடு கூடப் பயந்த அழகம்மா தனது பயத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அவசர அவசரமாக ஓடிப்போய், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொஞ்சம் கொண்டுவந்து ஏதோ வாயில் முணுமுணுத்துக்

கொண்டே முத்துலிங்கத்துக்கும், மனைவிக்கும் மாறி, மாறி முகத்தில் பலமாகத் தெளித்தாள். அந்தத் தண்ணீரின் ஸ்பரிசம் பட்டதும் முத்துலிங்கத்தின் அழுகையும் ஓய்ந்து, ஒருவித களைப்புள்ளவனாகப் பக்கத்திலுள்ளவர்களில் யாரையோ தேடுவது போல் திருதிருவென்று விழித்துப் பார்த்தான். இந்தப் பார்வையைக் கண்டு அருகிலிருந்தவர்கள் பயந்தார்களென்றாலும், அவனுக்குத் தேறுதல் சொல்ல முனைந்துவிட்டார்கள். இந்தச் சிஷ்ருட்சைகளால் ஒருவாறு தெளிவடைந்த முத்துலிங்கம் நாகம்மாளை வினவினான். ''நாகம்மாளுக்கு அந்த விஷ்ணு மூர்த்தி கருணையால் ஒன்றுமில்லை, நீ சும்மா படுத்துக்கொள்'' என்று ஐயாத்துரை சொல்லி முத்துலிங்கத்தின் கவலையைச் சிறிது தளர்த்திவிட்டான். தண்ணீர் தெளித்தும் பிரக்ஞையில்லாத நாகம்மாளுக்கு, அழகம்மா குழையடித்து விபூதி பூசி, சில மந்திரங்களைச் சொல்லிச் சிகிச்சை செய்தும் பயனில்லாமையால், கூலிக்குக் கார் பிடித்து நாகம்மாளைப் பட்டின வைத்திய சாலைக்கு கொண்டு போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. உடனே அழகம்மா, ஐயாத்துரையிடம் கார் ஒன்று பிடித்துக் கொண்டு சீக்கிரம் வாருங்களென்று சொல்ல, ஐயாத்துரை அடுத்த வீட்டுக்காரன் பாவிலுப்பிள்ளையிடம் சைக்கிளையும் வாங்கி, அவனையும் அழைத்துக் கொண்டு கூலிக்குக் கார் பிடிக்க அடுத்த ஊருக்கு கிளம்பி விட்டான். இவர்களின் இந்த அர்த்தராத்திரி வருகையைக் கண்ட கொள்ளை லாபத்தில் பெயர் போன வாடகைக்காரர் முதலாளி முப்பது ரூபா தந்தால் இந்த வேளை பட்டினத்துக்குக் கார் விடலாம். ஆனால் பணம் முழுவதையும் இப்போதே தந்துவிட வேண்டும்'' என்று கண்டிப்பாகக் கூறியதைக் கேட்ட ஐயாத்துரையும், பாவிலுவும் கையில் காசு கொண்டுபோகாதவர்களாதலால் ஐயாத்துரையின் கையிலிருந்த மோதிரத்தையும், பாவிலுவின் கடுக்கனையும் (மின்னியையும்) கழற்றி நம்பிக்கையாக வைத்து விட்டுக் காரைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். இவர்களின் வரவையே ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த அழகம்மாவும், மற்றும் பெண்களும் காரைக் கண்டதும் உடனே நாகம்மாளையும் ஏற்றிக்கொண்டு, முத்துலிங்கத்துக்கு ஆறுதல் சொல்லிவிட்டு அவனுக்குத் துணையாக அழகம்மாவின் மகனையும், மனைவியையும், இன்னும் சிலரையும் வைத்துவிட்டு அழகம்மாவும், ஐயாத்துரையும் பாவிலுப்பிள்ளையுமாகப் பட்டின வைத்தியசாலைக்குப் போய்ச்சேர இரவு சுமார் இரண்டு மணியாகிவிட்டது. வைத்தியசாலையில் எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. யாரிடம் போவது, யாரைக் காண்பது

என்று சிந்தித்துக்கொண்டே அந்தத் திண்ணையின் ஓர் மூலையில் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்த ஒரு பணி ஆளை எழுப்பினார்கள். இவர்களின் அரட்டலால் துன்புறுத்தப்பட்டிருந்த அந்தப் பணியாள், இவர்களுக்கு எவ்வளவு திட்டமுடியுமோ அவ்வளவுக்கும் திட்டியே விட்டான். அதையும் பொருட்படுத்தாது பாவிலுப்பிள்ளை மிகத் தாழ்ந்த குரலில் ''ஐயா கடுமையான வருத்தமுள்ள ஒரு பெண்ணைக் கொண்டு வந்திருக்கிறோம். தயவு செய்து கொஞ்சம் டாக்டரிடம் சொல்லுங்கள்'' என்று கூறினான். இவர்களின் இந்தப் பரிதாப வேண்டுகோளிற்கிசைந்த அந்தப் பணியாள், தான் போக மறுத்துவிட்டு டாக்டரின் வீட்டைக் காட்டி விட்டு மறைந்து போனான். டாக்டரின் வீட்டை நோக்கிக் கிளம்பிய பாவிலுப்பிள்ளை வீட்டின் படலை (Gate) பூட்டியிருப்பதைக் கண்டு சற்று யோசித்து விட்டு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல் படலையையும் ஏறிக் கடந்து சென்று மண்டபக் கதவை மெல்லத் தட்டினான். ஒரு பதிலும் இல்லை. பின் சிறிது பலமாகத் தட்டியதும் டாக்டரின் மெய்க்காப்பாளனான ''ஜிமி'' என்னும் பெரிய நாய் பாய்ந்து வந்து பாவிலுப்பிள்ளையின் கையையும், காலையும் பலமாகக் கடித்து விட்டது. இந்த எதிர்பாராத தாக்குதலுக்ககப் பட்டு வேதனையைப் பொறுக்க முடியாமல் பாவிலுப்பிள்ளை போட்ட கூச்சலாலும், நாயின் வீர கர்ஜனையாலும் நித்திரை கலைக்கப்பட்ட ''டாக்டர்'' பெருமான் கோபாவேசத்தோடு தடார் என்று கதவைத் திறந்து கொண்டு நாயைக் கூப்பிட்டு அறைக்குள் தள்ளிவிட்டுத் தனக்குத் தெரிந்த தமிழில் என்னா ஓய் றாவிலே வந்து தாச்சல் பண்றது. என்னா பயித்தியமா? இதி என்னா காலிலே? என்று காலைப்பார்த்து மிகக் கடுமையான குரலில் கேட்டார். நாய் கடிந்த வேதனையையும் தாங்கிக்கொண்டு, நோயாளியின் பரிதாபத்தை ''ஐயா ஒரு பெண்ணுக்கு அவஸ்தையான வருத்தம். மூச்சில்லை, வெகு தூரத்திலிருந்து கூலிக்குக் கார் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறோம். இதைச் சொல்லித் தங்களை அழைத்துப் போகலாமென்று தான் வந்தேன். தங்கள் நாய் இந்த அநியாயத்தைச் செய்துவிட்டது.'' என்று அழுதுகொண்டே கூறினான். தன் நாயின் மீது பழி சுமத்துவதை விரும்பாத டாக்டர், ''மிச்சம் பேசாதே ஓய். பேய் மாதிரி'' என்று அவனை அதட்டி விட்டுத் தனது பரிசோதனைக் குழாயையும் கையில் எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு வந்து காரில் மூச்சற்றுக் கிடந்த நாகம்மாளைப் பரிசோதித்து விட்டுப் பாவிலுப்பிள்ளையின் காயங்களுக்கும் ஏதோ மருந்தைப் பூசிவிட்டும், ஊசிமூலம் ஏற்றி விட்டும் பாவிலுப்பிள்ளையின்

காதிலே நாகம்மாள் இறந்துவிட்டதாகக் கூறி விட்டார். இந்தச் சேதியைக் கேட்டதும் தனக்கு வந்த துக்கத்தையும் அடக்கிக்கொண்டு பாவிலு போய்க் காருக்குள்ளிருந்த ஐயாத்துரையிடமும், அழகம்மாவிடமும் கூறியதும் அழகம்மா தலையில் கையை வைத்துக்கொண்டே 'கோ'வென்று அழத்தொடங்கிவிட்டாள். ஐயாத்துரையின் கண்களும் கலங்கிவிட்டன. டாக்டரும் பிரேதத்தை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து விட்டுத் ''திடீரென அடைந்த இருதய அதிர்ச்சியால் ஏற்பட்ட மரணம்'' என்று தன் குறிப்புப் புத்தகமொன்றில் பதிந்து கொண்டு அவர்களுக்குப் போக உத்தரவுச் சீட்டும் வழங்கியனுப்பிவிட்டார். இவர்கள் நாகம்மாளின் பிரேதத்தை இரவு சுமார், நான்கு மணியளவில் வீட்டுக்குக் கொண்டுவந்தார்கள். இவர்களின் செய்தியறிய ஆவலோடு துடித்துக் கொண்டிருந்து கலங்கிய மனத்தினனான முத்துலிங்கமும், மற்றும் ஐயாத்துரையின் மகனும், மருமகளும், மற்றவர்களும் அழகம்மாவின் அழுகையைக் கேட்டதும் படபடத்த நெஞ்சுடன் படலையை நோக்கி ஓடினார்கள். அங்கு காருக்குள் நாகம்மாள் பிரேதமாகக் கிடப்பதைக் கண்டதும் எல்லோரும் அழத் தொடங்கிவிட்டார்கள். ஆரம்பத்திலேயே மனதைப் பீதிக்குப் பலி கொடுத்த முத்துலிங்கம், இந்த இயற்கையின் விபரீதத்தைக் கண்டு தாழ மாட்டாதவனாய் அங்குள்ள தூண் ஒன்றில் தன் தலையைப் பலமாக மோதிக்கொண்டான். திடீரென அவன் செய்த அந்த வேலையால் அவனுடைய மண்டை உடைந்து தலையிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்ததோடு உயிரும் எமலோகம் சென்று விட்டது. இந்தப் பரிதாபகரமான கோரக் காட்சியைக் கண்டு சகிக்க முடியாத மக்கள் எல்லோரும் பிரேதங்களுக்குச் செய்ய வேண்டிய சுகாதார வேலைகளை முடித்து ஒரே இடத்தில் இருவரையும் வளர்த்தி வைத்துக் கொண்டு கதிரவனின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். விடிந்ததும் கிராம விதானை யின் விசாரணையின் பின், அவரின் உத்தியோக பூர்வமான அழைப்பைக் கண்டுவந்த மரண விசாரணை அதிகாரி முத்துலிங்கத்தின் பிரேதத்தைப் பரிசோதித்து இறுதியில் ''தூணில் பலமாக மோதப்பட்டு மண்டை உடைந்ததால் மரணமெய்தினார்'' என்று தனது தீர்ப்பைப் பதிவு செய்து கொண்டு சென்று விட்டார்கள். பிற்பகல் ஐந்து மணியளவில் பிள்ளையின் பாசத்தால் உயிர்நீத்த சதிபதிகளான நாகம்மாளையும், முத்துலிங்கத்தையும் அடுத்த இடுகாட்டில் அடக்கம் செய்தாகிவிட்டது. இவை நடந்து சுமார் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகியும் முத்துலிங்கத்தின் மகன் பேரின்ப

நாயகத்தைப் பற்றி எதுவித தகவலும் எட்டவில்லை. ஒரு நாள் காலை முத்துலிங்கத்தின் விலாசமிடப்பட்ட ஒரு தபாலைக் கொண்டு, ஆள் தெரியாமல் திண்டாடிக் கொண்டு வந்த தபால்காரன் ஜனங்கள் கூடியிருக்கும் சந்திக்கு வந்து அந்தத் தபாலைக் காட்டி வினாவினான் அதிலிருந்தவர்கள்கூட, முத்துலிங்கத்தை மறந்துவிட்டார்கள். அதில் ஒருவர் ''எங்கிருந்து வருகின்றது'' என்று வினவ அவன், இந்தியா விலிருந்து வருகிறது. ஓர் கலியாணக் கடிதம் போல் தென்படுகிறது என்று சொன்னான். இந்தச் செய்தி அவர்களை இன்னும் ஆராய்ச்சியிலிறக்கி விட்டது. சடுதியாக அவ்விடத்துக்குக் கிராம விதானை வந்ததும் இந்தப் பிரச்சினையை அவ்விடத்திலிருந்தவர்கள் கிளப்ப, அதற்கு விதானை ''ஒரு வேளை இறந்து போன முத்துலிங்கமாயிருக்கலாம் என்று கூறிக் கொண்டே என்ன முத்துலிங்கமென்று வந்திருக்கிறது? என்று கேட்க அவன் அ.முத்துலிங்கம் என்று வந்திருக்கின்றது என்று, பதில் சொல்ல ''அப்போ சரிதான் இறந்த முத்துலிங்கந்தான்'' என்று தபாலை வாங்கிக் கொண்டு, ஐயாத்துரைக்கு அழைப்பனுப்பி அவனைக் கொண்டே தபாலைப் பிரித்துப் பார்த்தால் தபால்காரன் கூறியது போல் கலியாணப் பத்திரந்தான் ஒன்றிருந்தது. அதன் முகப்பில் மகாத்மா காந்தியின் திரு உருவப்படமும், இரு மருங்கிலும் இந்திய தேசிய மூவர்ணக் கொடிகளும் பொறிக்கப்பட்டிருந்தன. கீழே ''ஜெய் ஹிந்த்! வந்தே மாதரம், மகாத்மா காந்திக்கு சாந்தி'' என்ற வாசகத் தொடரோடு இசைராஜ் திருநிறைச் செல்வன் மு.பேரின்பநாயகத்திற்கும், இசையரசி திருநிறைச் செல்வி ச.பாக்கியவதிக்கும் திருமணம் நடக்கவிருப்பதாகக் கண்டிருந்தது. இப் பத்திரத்தைக் கண்ட அக்கிராமத்து மக்கள் எல்லாரும் தங்கள், தங்கள் கற்பனைக் கெட்டியவாறு பேரின்பத்தையும் அவன் வாழ்க்கையின் மாறுதலையும், கலை ஆர்வத்தையும், அதனால் அவனடைந்த வெற்றியை யும், அந்த வெற்றியைக் கண்டு மகிழக் கொடுத்துவையாத துர்ப்பாக்கிய சாலிகளான பெற்றோரின் அகால மரணத்தையும் பற்றிப் பலவாறு பேசிக்கொண்டார்கள். ஒரு வாரத்தின் பின் இந்தியாவிலிருந்து வெளி யாகும் ஒரு வாரப் பதிப்பின் இதழொன்றில் இந்தப் புதுத் தம்பதிகளின் படமொன்று பிரசுரிக்கப்பட்டுக் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது. ''இசை ராஜ் திருநிறைச் செல்வன் மு.பேரின்பநாயகமவர்கள் இலங்கையில் பிறந்து, இந்தியாவில் சர்வ கலாசாலையொன்றில் இசைக்கலை பயின்று இசைராஜ் பட்டம் பெற்றவர். இவர் தன்னுடன் படித்த மாணவி இசையரசி

திருநிறைச் செல்வி ச. பாக்கியவதி யென்னும் ஹரிஜனப் பெண்ணை மணந்திருக்கிறார். இவருடைய இந்தத் தியாகத்துக்காக, புனித போக்குக்காகப் புகழ்ந்து இந்திய காங்கிரஸ் தலைவர்களும், பெரிய பிரமுகர்களும் வாழ்த்துச் செய்திகளை யனுப்பியதோடு, அநேகர் திருமணச் சடங்கிலும் பங்குபற்றி இப்புதுத் தம்பதிகளை ஆசீர்வதித்தேகினர். இவர்களுடைய கலாசாலை சக மாணவ, மாணவிகளின் இசை விருந்துகளும் இனிது நடந்தேறின. ஆயிரத்துக்கதிகமான மாணவர்கள் விவாகச் சடங்கில் பங்குபற்றி இவர்களை மகிழ்வித்தனர். இலங்கையின் வீரத்தமிழர் மரபிற் பிறந்து வாலிப உலகத்தில் வானளாவப் பிரகாசித்து, மற்றோருக்கு வழிகாட்டும் மறையாத ஜோதி, தீண்டாமை அரக்கனுக்குத் தீரமுடன் தீ மூட்டிய திடசித்தன், மகாமகான் மகாத்மாஜீயின் ஆசீர்வாதத்தை யேந்திய சாந்தன், திருநிறைச் செல்வன் மு.பேரின்பநாயகத்தை வாயார வாழ்த்துகிறோம். ஹரிஜனப் பெண்ணாகப் பிறந்தும், அகில உலகத்தையும் ஆகர்சிக்கக் கூடிய இசைக்கலையில் தேர்ச்சி பெற்றுத் தனக்குவந்த மணாளனைப் பெற்றுக்கொண்ட திருநிறைச்செல்வி ச.பாக்கியவதியின் பாக்கியத்தைக் கண்டு பரவசமடைகின்றோம். எல்லாம் வல்ல இறைவன் தம்பதிகளை ஆசீர்வதிப்பாராக, வாழ்க பேரின்பநாயகம் பாக்கியவதி'' என்று குறிப்பிடப் பட்டிருந்ததைக் கண்ட பேரின்பநாயகத்தின் உற்றார் உறவினர்களும் மற்றும் பேர்களும் ''இதுதான் விதியின் சூழ்ச்சி'' என்று கூறிக்கொண்டனர்.

# விதியின் விளையாட்டு

என்.எஸ்.

மாலை மணி நான்கிருக்கும். மரங்களடர்ந்த ஒரு நதிக்கரையருகே தினசரியொன்றை வாசித்துக் கொண்டிருந்தேன். ஆற்று நீரின் வழியே மெல்லெனத் தவழ்ந்து கொண்டிருந்த இளந்தென்றல் என் மனதைப் பரவசமடையச் செய்தது. கிளைக்குக் கிளை தத்தித் தத்தி விளையாடிக் கொண்டிருந்த பறவைகளின் இனிய கானமும் என்னை இன்புறுத்திற்று. இதனிடையே தினசரியிலிருந்த ஒரு கட்டுரையின் தலைப்பெயர் என் மனதைக் கவர்ந்தது. முடிவுவரை வாசித்தேன். சலனமற்றிருந்த என் மனதை அக்கட்டுரை சிதறடித்துவிட்டது. என்னுடைய வாழ்க்கையிலேற் பட்ட பழைய சம்பவங்களையெல்லாம் கிளறிவிடுவதாக இருந்தது அது.

நானும் ராஜமும் இணை பிரியாத உறவினர்கள். தாயார் எனக்குச் சிறுவயதாயிருக்கும் போதே இறந்து விட்டாள். குழந்தைகள் நானும் கமலாவும்தான். என் தங்கையாக்கும் அவள். அம்மா இறந்தது ஏதோ கனவு போலத் தெரிகிறது எனக்கு. அம்மா இறந்த பின்னர் அப்பாவின் தங்கையாகிய எங்கள் அத்தையின் வீடே சொந்த வீடாகிவிட்டது எங்களுக்கு. எனக்கு அத்தையின் வீட்டில் விளையாடுவதென்றால் ஓர் அலாதியான இன்பம். அதன் காரணம் எனக்கு அப்போது விளங்க வில்லை. அத்தான் தியாகு எங்களூர் தமிழ்ப் பாடசாலையிலிருந்து விலகிச் சங்கீதம் கற்பதன் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றது எனக்கு இப்போதும் நன்றாக ஞாபகத்திலிருக்கிறது. அப்போது நான் நான்காவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன்.

நாட்களும் மாதங்களும் போய் வருடங்கள் பல மின்னலைப் போல் மறைந்து சென்றன. காலமும் செல்லச் செல்ல உலகமும் மாறிக்கொண்டு தானே போகின்றது. கமலாவும் ராஜமும் கன்னிப் பருவத்தை அடைந்தனர். எனக்கு அப்பொழுது வயது இருபதுக்கு மேலிராது. அத்தான் தியாகு எங்களூர் தமிழ்ப் பாடசாலையில் சங்கீத ஆசிரியராக நியமனம் பெற்று விட்டான். பாடசாலை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களிலுங்கூட நாங்கள் சங்கீதம் பயின்று வந்தோம். இப்படியாக வருடங்கள் இரண்டு மறைந்தன. இடைவிடா பயிற்சியின் காரணமாக எங்களது சங்கீத

ஞானமும் வளர்ந்து கொண்டே போயிற்று. என் தங்கை கமலா பிடில் வாசிப்பதில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தாள். ராஜமும் அவளைப் பார்க்கிலும் குறைந்த நிலையிலில்லை. நானும் ஓரளவு பாடுவேன். லய வாத்தியமாகிய மிருதங்கம் வாசிப்பதில் எனக்கு ஆர்வமதிகம். எனினும் நான் கற்றது கைமண்ணளவும் இல்லையே என்ற எண்ணம் என் மனதை வருத்திற்று. இதனால் வேறெங்கேயாயினும் போய் இன்னும் கலை பயில வேண்டுமென எண்ணினேன். அத்தான் "அதெல்லாம் வேண்டியதில்லை கூடிய சாதனையினாலேயே எல்லாம் திருந்தி விடும்" எனக் கூறினான். இதனால் ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டேன், எனினும் எங்களூரில் சங்கீத ஞானத்தில் எங்களைவிடச் சிறந்தவர்கள் இல்லை என்பதில் எங்களுக்குப் பெருமை இராதா என்ன?

எங்கள் தேகமும், கலையும் எவ்வாறு விருத்தி அடைந்து வந்தனவோ, அவ்வாறே எங்களிடையே அதாவது நாங்கள் ஒருவர் பேரில் ஒருவர் கொண்டிருந்த அன்பும் விருத்தியடைந்து கொண்டுதான் வந்தது. நான் ராஜத்திடம் கொண்டிருந்த அன்பு, காதல் என்னும் அடுத்த படியில் கால் வைத்துவிட்டதென்பது எனக்குத் தெரியாமலில்லை. எதிர்பாராத விதமாக அத்தானும், என் தங்கை கமலாவும் கந்தர்வ முறைப்படி திருமணம் செய்துகொண்டனர். இது விஷயமாக எனக்கு எவர் பேரிலாவது கோபமோ, மனவருத்தமோ கிடையாது. ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயப் படுத்திக்கொள்ள எவ்வளவோ உதவியாக இருந்தது அந்தச் சந்தர்ப்பம் எனக்கு. அது எனது ராஜம் என்றும் எனக்கே உரியவள் என்பதுதான். அதற்கான காலத்தினை நான் எவ்வளவோ பொறுமையுடனும், ஆசை யுடனும் எதிர்பார்த்திருந்தேன். அத்தான் தியாகுவுக்கு நான் ராஜத்தை மணந்து கொள்வதென்பது கொஞ்சங்கூடப் பிடிக்காத விஷயம் என்பது எனக்கு அப்போது எவ்வாறு விளங்கும்? ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்துக் குவியல் குவியலாகப் பணமூட்டைகளைக் குவித்து வைத்திருக்கும் அசகாய சூரனான தனவந்தனொருவனுக்கோ, அன்றேல் பண்பட்ட தனது தாய்மொழியையும், சொந்த நாகரிகத்தையும் மறந்து அந்நிய நாகரிகத்தின் அதிமட்டரகமான கொள்கைகளைக் கண்ணை மூடிக்கொண்டு கடைப்பிடித்துத் தெருவோரங்களிலும், மூலைமுடுக்கு களிலும் கண்ட பெண்களுக்கெல்லாம் கண் சிமிட்டிப் பல்லிளித்து திரியும் வாலிபனொருவனுக்கோ அவளைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினானாக்கும் அவன்.

எத்தனையோ தருணங்களில் நானும் ராஜமும் ஒன்றாக சினிமாவுக்கும், கோயில் உற்சவங்களுக்கும், வேறு விஷேட வைபவங்களுக்கும் சென்றிருக்கிறோம். இரா வேளைகளில் படுக்கைக்குப் போக நடுநிசி ஆகிவிடும். அதுவரையும் எங்கள் பிற்கால வாழ்க்கையையிட்டு ஆகாயக் கோட்டைகள் கட்டிக்கொண்டிருப்போம். அவளை விட்டுப் பிரிவதென்றால் எனக்கு எதையோ பறிகொடுத்துவிட்டுப் போவது போன்றிருக்கும். அன்று எங்களூர் படமாளிகையில் ''மோஹினி'' என்ற பிரபல்யமான படம் காட்டப்படுவதாக இருந்தது. ஊர் முழுவதும் ஒரே குதூகலம். இதற்குத் தவறாமல் அவளையும் அழைத்துப் போக வேண்டுமென்ற விருப்பத்துடன், அவள் வீட்டை நோக்கி நடந்தேன். அவளை சந்தித்ததும் நேரடியாக என் எண்ணத்தைத் தெரிவித்தேன். ராஜத்தை என் விருப்பத்திற் கிணங்கச் செய்யப் பெரிதும் முயன்றும், என் முயற்சி அன்று பயனளிக் காமற் போனது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. என்றுமில்லாத முரட்டுப் பிடிவாதத்துடன் காட்சியளித்தாள் அவள். ஏதேதோ வீண் நியாயங்களை யெல்லாம் அடுக்கிக் கொண்டே போனாள். அன்று அவள் பேச்சு உயிர் உணர்ச்சியற்று இருந்தது. எல்லையற்ற ஏமாற்றத்துடன் இவள் வீட்டை விட்டு வெளியேறினேன். அன்று இரவு முழுவதும் எனக்கு நித்திரையே இல்லை. அதன் பின்னர் அவள் வீட்டுப் பக்கம் அடியெடுத்துக்கூட வைக்கவில்லை.

பொழுது மறைவதற்கு இரண்டு மணி நேரமிருக்கும். மந்தமாருதம் இலேசாக வீசும் பகற்காலத்திலேற்பட்ட உஷ்ணத்தைச் சாந்தி பண்ணிக் கொண்டிருந்தது. நானும் வழக்கப்படி எனது மிருதங்கத்தை எடுத்துக் கொண்டு எங்கள் வீட்டுக்குப் பின்கோடியிலுள்ள மாந்தோப்பிற்குச் சென்று அதனை அப்பியாசித்துக் கொண்டிருந்தேன். கால் மணிநேரம் கூடச் சென்றிருக்காது. ''யாரது ? அத்தானாக்கும்'' என்று ஒரு குரல் எங்கிருந்தோ ஒலித்தது. திரும்பிச் சத்தம் வந்த திக்கை நோக்கினேன். ரதி தேவியோ என ஐயுறும் வண்ணம் வந்துகொண்டிருந்தாள் ராஜம் அழகுசொட்ட. ''ஆம் உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்று கூறியவாறு என்னையும் மறந்து ஏதோ ஒரு பாட்டை ஆரம்பித்தேன். இதற்குள் என் பக்கத்திலேயே வந்து உட்கார்ந்து விட்டாள் அவள். நான் பாடி முடிவதற்குள் ராஜம் ஒரு பாட்டை ஆரம்பித்தாள். நானும் அவளுடன் சேர்ந்து பாடினேன். இப்படி அளவளாவிக் கொண்டிருந்ததில் எவ்வளவு நேரம் சென்றதென்பது எனக்குத் தெரியாது. உணர்ச்சிவசப்பட்டு

அத்தருணத்தில் எப்படி இருந்தோம் என்பது ஞாபகத்தில் இல்லை. ஆனால் இரு இளங்காதலர்கள் எவ்வாறு சல்லாபித்துக் கொண்டிருக்க முடியுமோ அப்படித்தான் இருந்திருப்போம் என்பதை மட்டும் நிச்சயமாகக் கூறுவேன். எதிர்பாராத விதமாக யாரோ விசையாக நடந்து வரும் சத்தம் கேட்டுத் திரும்பினேன். அத்தான் தியாகு எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனது முகத் தோற்றம் பார்ப்பதற்குக் கோரமாக இருந்தது. அவனைப் பார்க்கவும் என் கண்கள் மறுத்தன. அவன் என் பக்கத்துக்கே நெருங்கி விட்டான். ".., நம் குலத்துக்கே என்றும் அழியாத அவமானத்தை உண்டாக்கத் துணிந்து விட்டாயா துரோகி? உனக்கு எங்கிருந்து இவ்வளவு துணிச்சலேற்பட்டது? உண்ட வீட்டிற்கிரண்டகம் செய்த நயவஞ்சகப் பதரே! உனது ஆகாயக் கோட்டைகளெல்லாம் எவ்வாறு நாசமாகின்றன பார்" என்று வாயில் வந்தபடியெல்லாம் திட்டிக்கொண்டே போனான். "அண்ணா அவர் நிரபராதி" என்றாள் ராஜம். அவள் இதைக் கூறி முடிப்பதற்குள் தியாகு என் உயிருக்கே சமானமான எனது மிருதங்கத்தைப் பற்றி இழுத்தெடுத்துப் பலமாக பக்கத்திலிருந்த மரத்தின் மேல் இடித்தான். மரத்தில் மோதுண்ட வேகத்தில் சின்னாபின்னமாகிவிட்டது அது. என்னையும் அறியாமல் என் கண் களிலிருந்தும் நீர் தாரை தாரையாக வெளிப்படலாயிற்று. எனது மனக் கோட்டைகளும் இவ்வாறே சிதறுண்டு போனால் என்ற ஓர் எண்ணம் என் மனதை வருத்தியது. வருவது வரட்டும் என எண்ணியவாறு பக்கத்திற் கிடந்த ஓர் தடியை எடுத்து "நீ இனிப் பிணம் என்று கூறியவாறு அவன் தலையை நோக்கி அடித்தேன்" அத்தான் என்று கத்தினாள் ராஜம். திடீரெனத் தியாகு விழுந்தான் கீழே, மறுமுறையும் அடிப்பதற்காகத் தடியை ஓங்கினேன். அதனிடையே "உன் தங்கையின் வாழ்க்கை நலனைக் குறித்தாவது அவனைத் தாக்காதே" என்றது என் மனம். நான் பித்தனைப் போலாகிவிட்டேன். பிடித்தேன் ஓட்டம், அன்றைய இராப்பொழுதை ஓர் தேநீர்க் கடையின் பின்கோடியிலுள்ள திண்ணையில் எவருக்கும் தெரியாமல் போக்கினேன். ஆனால் அதிகாலையில் கடையில் நிம்மதி யாகத் தேநீர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது இரண்டு போலீஸ் காரர்கள் என்னைக் கைது செய்தனர். விஷயத்தை மிஞ்சவிடாமற் செய்ய என் உறவினர்கள் பெரிதும் முயன்றும் ஒரு பயனும் கிட்டவில்லை. சிறைச்சாலைக் கதவு எனக்காகத் திறந்திருந்தது. உள் நுழைந்தேன். ஆறு மாத காலத்தை அதற்குள்ளே கழித்து வெளியேறினேன். அத்தான் தியாகு

வைத்தியசாலையிலிருந்து வெளியேற இரண்டு மாதங்கள் பிடித்ததாகக் கேள்வி.

இப்போது அத்தானும் நானும் பழையபடி உறவினராய் விட்டோம். நான் புதியதோர் வாத்தியத்தை வாங்கிக்கொண்டேன். முன்னர் போல் இருவரும் ஒருமித்துச் சங்கீதக் கச்சேரிகட்குச் சென்றுதான் வந்தோம். ஆயினும் என்ன? எனது வாத்திய நாதத்தில் ஜீவனே இல்லை. மனம் ஒன்று நினைத்தால் கை ஒன்று செய்து கொண்டிருக்கும். மன நிம்மதியின்றி எதைத்தான் சரிவரச் சாதிக்க முடியும். சமூகத்திற்குப் பயந்து ராஜத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஆனால் அவள் தினமும் எங்கள் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டுதானிருந்தாள். என்னைக் காணும்போது அவள் வதனத்தில் ஓர் புன்முறுவல் மாத்திரம் தோன்றும். ஆனால் அப்புன்னகையில் உணர்ச்சியில்லை. ஏதோ ஒன்று அவள் மனதை மிகவும் வருத்துகிறதென்றுதான் அவள் முகத்தோற்றத்திலிருந்து நான் புதிதாக அறிந்து கொண்டது.

# பாவ மன்னிப்பு

*ராஜு*

அந்தி சிவந்து அழகைக் கக்கிக் கொண்டிருந்தது. அங்கும் இங்கும் மலர்கள் விரிவதும், குவிவதும் இயற்கை அன்னையின் விசித்திரத்தை நினைவூட்டியது. ரீங்காரம் செய்துகொண்டே வண்டுகள், மலருக்கு மலர் தாவி மதுவைப் பருகிப் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. ''சுசீலா'' மடியிலிருந்த அவளின் ஆறுமாதக் குழந்தை அவ்வண்டுகளைத் தன்னுடன் விளையாட வரும்படி அழைப்பது போல் கைகளை அசைத்து மழலை பேசியது. அடிக்கடி உன்னி அன்னையின் அரவணைப்பை மீறிக்கொண்டி ருந்தது. அழகில் லயித்துக்கொண்டிருந்த சுசீலாவின் மனம் திடீர் என்று ஏதோ பலவற்றையிட்டு எண்ணி எண்ணி ஏங்கத்தொடங்கியது. மனத்திரை யில் அவளின் பழைய நினைவுகளெல்லாம் தோன்றி மடிந்து கொண்டிருந்தன.

டாண்! டாண்! என்ற மணி ஒலி எழுந்ததும், சுசீலா புத்தகக்கட்டு களுடன் கல்லூரியிலிருந்து வெளியேறித் தனக்கென்று காத்துக்கொண்டிருந்த ஒற்றை மாட்டுவண்டியில் ஏறிக்கொண்டாள். ஆம் அவள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலந்தான். வண்டி நகரத்தொடங்கியதும் வழக்கம் போல் சுசீலா புத்தகப் பூங்காவுள் நுழைந்து விட்டாள்.

பழக்கமான காரியம் ஆகையால் எவ்வித சலனமும் சுசீலாவின் படிப்புக்கு இடைஞ்சலாக இருக்கவில்லை. ''கல்வி என்பது புத்தகத்திலே தான் தங்கியுள்ளது'' என்னும் கொள்கையின் வயப்பட்ட ஏனைச் சகோதரி களைப் போல் சுசீலாவும் நடந்துகொண்டதில் வியப்பு எதுவுமில்லை. ''பரீட்சை'' என்னும் கோரத் தீ, அவர்களை அக்கொள்கைக்கும் அச் செய்கைக்கும் இருப்பிடமாக்கியது.

கால்மணி சென்றிருக்கும், ஓடிக்கொண்டிருந்த மாடு எதிரே விகார ரூபத்துடன் உறுமிக்கொண்டு வந்த லொறி ஒன்றைக் கண்டு ஒரே பாய்ச் சலாகப் பாய்ந்தது. அவ்வளவுதான் வண்டியில் கவலையீனமாக இருந்த சுசீலா தவறி விழுந்து விட்டாள். வண்டியும் பாதையை விட்டு இறங்கி விட்டது. வண்டிக்காரன் செய்வதின்னதென்று அறியாதவனாய் திக்குமுக் காடினான். கையும், காலும் படபடத்து நடுங்கிக்கொண்டிருந்தன. இதே நேரத்தில் கால் நடையாக அவ்வழியே வந்த கோபாலன் இந்த ஆபத்தான

காட்சியைக் காணலுற்றான். கண்டதும் ஓடி வந்து சுசீலாவைத் தூக்கி அவளுக்கு ஒத்தாசை செய்தான். நல்ல வேளையாக அவ்வளவு காயங்கள் ஏற்படவில்லை. ஏனெனில் வண்டிப் பிடியைச் சுசீலா துப்பரவாக விட்டு விடாததால். சிதறிக் கிடந்த புத்தகங்களையெல்லாம் கோபால் மீண்டும் வண்டியுள் போட்டான். சுசீலாவையும் வண்டியில் ஏற்றிவிட்டான். இத்தனைக்கும் சுசீலா விழுந்ததனால் ஏற்பட்ட நோவைவிட, ஒரு வாலிபன் தன்னைத் தொட்டு ஒத்தாசை செய்ய நேர்ந்ததையிட்டு வெட்கப்பட்டுக்கொண்டாள். கடைசியாகக் கோபாலனுக்கு ஒரு ''தாங்ஸ்'' சொன்னாள். பதிலாக ஏதோ சொல்வதற்குக் கோபாலன் உன்னினான். அதற்குப் பதிலாக அவர்களிருவரதும் மோகனப் புன்னகை இடையில் ஏதோ பலவற்றையிட்டுப் பேசிவிட்டது.

ஆண்டுகள் சில நகர்ந்து விட்டன. கோபாலனுக்கும் சுசீலாவுக்கும் இடையில் ஏற்பட்ட புன்னகை பல நாடகங்களை உண்டாக்கிப் பின் காதலாக மாறிவிட்டது. சுசீலாவும் படிப்பை முடித்துவிட்டாள். கோபாலனும் கல்லூரிப் படிப்பை முடித்து ஏற்கனவே குமாஸ்தாவாக வேலை செய்து கொண்டிருந்தான். குமாஸ்தா வேலுப்பிள்ளையின் மகள் சுசீலாவை மணந்து கொள்வதில் தனக்கு எவ்வித ஈனமும், குறைவும் வரப் போகாத தால் அவளின் காதலை உயிர்க் காதலாகவே, ஏற்றுக் கொண்டிருந்தான். காலாகாலத்தில் ஏற்படும் சந்திப்புகளினாலும், கடிதங்களினாலும் அவர் களின் காதல் செடி கந்து கவருடன் செழித்து வளர்ந்து கொண்டே வந்தது.

கோபாலன் கடமையாற்றிக் கொண்டிருந்த காரியாலயத்தில் தலை வராக ஒருவர் இருந்தார். தலைவரென்றால் தலைவரேதான். அத்தனை சர்வாதிகாரமும் காட்டிக் கொண்டிருந்த தலைவரின் பெயர் ராமநாதன். குமாஸ்தாக்கள் அவரை ஹிட்லரின் அவதாரமென்று கூறியதில் கற்பனை எதுவுமிருக்கவில்லை. ஆனால் ஒன்று, ராமநாதனை ஹிட்லரின் அவதாரம் என்று கூறுவதிலும், ஹிட்லரின் அவதாரமாக மாறிவிட்டார் என்று கூறுவது தான் பொருத்தமானதாகும்.

கோபாலனுடன் அன்னியோன்யமான முறையில் கடமைகளை நடத்திக்கொண்டும், நல்லவர் என்று பெயர் எடுத்துக் கொண்டுமிருந்த ராமநாதன் நாளா வட்டத்தில் ஏதோ மனமாறுதல் கொண்டவன் போல் தோற்றலானார். கோபாலனிடம் எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழத் தொடங்கினார். கடமைகளில் விசித்திரமான பிழைகளையெல்லாம் கற்பிக்கத் தொடங்கினார். துரும்பான தவறுகளையெல்லாம் தூணாகச்

சித்தரித்தார். காரணம் தெரியாத கோபாலனும் சற்றுத் தயங்கிக் கொண்டே கடமைகளில் கண்ணுங் கருத்துமாக நடக்கத் தொடங்கினான்.

ஒரு நாள் மணி பத்து இருக்கும். குமாஸ்தாக்கள் தத்தம் கடமைகளில் கவனத்தை ஓட்டிக்கொண்டிருந்தனர். அந்த நேரம் தடார் என்ற ஒரு சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தார்கள். கணக்கை ஒப்புவித்துக் கொண்டி ருந்த கோபாலனின் முகத்தில் கணக்குப் புத்தகம் முத்தம் கொடுத்து விழுந்து கொண்டிருந்தது. என்ன! அத்தனை கோபம், ராமநாதனுக்கு ஏற்பட்டதா? அப்படி ஏற்படத்தான் நடந்த கோளாறு யாது? பூனையைப் போலிருந்து புலிபோல் பாய்கிறாரே என்றெல்லாம் பல கேள்விகளைத் தங்களுக்குள்ளே கேட்டுக் கொண்டார்கள். கோபாலன் முகவாட்டத் துடனும் பொறுமையுடனும் தனது மேசைக்கு மீண்டுவிட்டான். ராமநாதன் அவர்களுக்கு இந்த அதிகாரப் பித்து ஏறியதையிட்டு குமாஸ்தாக்கள், ஆராய்ச்சி நடத்துவதில் தாமதம் செய்யவில்லை. ஆராய்ச்சியின் பயனும் விரைவில் வெளியாயிற்று.

பாவம்! அதற்காக கோபாலனை நெருக்கி என்ன பயன். சுசீலாவின் தந்தையாருக்கும் அதே காரியாலயத்தில்தான் குமாஸ்தா வேலை. ராமனாதனுடன் அவருக்கு நல்ல பரிச்சயமுண்டு. தாரமிழந்து போயிருக்கும் தனது தலைவன் ராமநாதனுடைய வேண்டுகோட்படி தனது மகளைக் கொடுப்பதாக வாக்குப் பண்ணியிருந்தார். ஆகையால் ராமநாதனவர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருந்த எண்ணம் அத்தனைக்கும், கோபாலன் முட்டுக்கட்டையாக இருந்ததில் ஆச்சரியமில்லைதானே. கோபாலன் - சுசீலா தொடர்பை, ராமநாதன் அவர்கள் அறிந்து கொண்டார்கள். இதை அறிந்த நாள் தொட்டுத்தான், ராமநாதனவர்களுக்கு, கோபாலன் கண்ணிலிட்ட கந்தலாக மாறினான். நாளடைவில் விசயம் எங்கும் பரந்து விட்டது. கோபாலன் - ராமநாதன் பகையும் வளரத் தொடங்கிவிட்டது. பொருளாசையாலும், உத்தியோக மோகத்தாலும் பிணைக்கப்பட்ட சுசீலா வின் தந்தை, ராமநாதனையே சரணடைந்திருந்தார். சுசீலாவுக்கு இவ் விசயம் எரியும் நெருப்பில் நெய்யை ஊற்றியது போலாயிற்று.

ராமநாதனுக்கு எத்தனை எத்தனையோ எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. அப்படிச் செய்யலாமா? இப்படிச் செய்யலாமா? என்றெல்லாம் பல மானதக் கோட்டைகளைச் சிருட்டி செய்தார். கடைசியாக கோபாலனை இன்னும், இங்கு வைத்துக் கொண்டிருந்தால் புத்தியாகாது என்ற முடிவை அடைந்தார். அவ்வளவுதான். பல மைல்களுக்கு அப்

பாலுள்ள மற்றுமோர் காரியாலயத்திற்கு மாறும்படி உத்தரவு பிறந்து விட்டது. வேறு வழியற்ற கோபாலனும் புறப்படச் சித்தமாகிவிட்டான்.

ராமநாதன் கட்டிய கற்பனைக் கோட்டைகளெல்லாம் இப்படிச் சிதையுமென்று யாரும் எண்ணியிருக்கவில்லை. காலையானதும் கோபாலன் போய்விட்ட செய்தி ஊரெங்கும் பரவியது மாத்திரமல்லாமல் அப்படியே குலுக்கியும் விட்டது. ராமநாதன் அவர்களை, உன்மத்தனாகச் செய்தது மாத்திரமல்ல உயிரையே திணறும்படி செய்தது. அதுதான் சுசீலாவைக் காணவில்லை என்னும் செய்தி.

துள்ளிக் குதித்துக்கொண்டே குமாஸ்தா வேலுப்பிள்ளையவர்கள் அங்கும் இங்கும் தந்தியடித்தும் ஆள்விட்டும் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தார், ''ஆத்திரக் காரனுக்குப் புத்தி மத்திமம்'' என்பது போல குமாஸ்தா அவர்கள், மேசையின் மேல், பெரிய எழுத்தில் விலாச மிடப்பட்டிருந்த கடிதமொன்றைக் கண்டுகொள்ளும் சக்தியற்றவரானார். சகல அலுவல்களும் ஏற்பாடான பின்னர்தான் கடிதத்தைக் காணும் பாக்கியம் பெற்றார். அந்தக் கடிதம் அவரை ஒரு குலுக்கு குலுக்கி, இனிமேல் சுசீலாவைத் தேடுவதில் பயனில்லை என்றும் எடுத்துக் காட்டியது. கோபாலனுடன் சுசீலா புறப்பட்டுச் சென்றால், அவளைத் தடுக்க யாராலும் முடியாதுதானே. தகப்பனாரின் பேரம் பேசும் பொருளா சுசீலா, அவளின் உணர்ச்சி வேகத்தைத் தந்தையாரின் அறியாமைக்கு அடகு வைக்க முடியுமா? உத்தியோகங்களின் உயர்வையும், பணத்தின் வீக்கத்தையும் கண்டு காதலிக்கும் காதல் உண்மைக் காதலாகாது என்பதை நிரூபித்துவிட்டாள். சுசீலா தன் தலைவனைப் பின்தொடர்ந்துவிட்டாள். யார்தான் என்ன செய்யமுடியும். நடந்தது நடந்ததுதானே! என்று பெருமூச்சு ஒன்று விட்டுக் கொண்டார். வேலுப்பிள்ளை, ராமநாதன் அவர்களின் முகத்தைப் பார்ப்பதற்குக்கூட வெட்கப்பட்டுக் கொண்டார். ராமநாதனும் அணிலை ஏற விட்ட பூனைபோல் ஏமாந்து ஏங்கலானார்.

கர்ப்பவதியான சுசீலாவைத் தாய் வீட்டிற்குக் கொண்டு வந்து விடுவதற்காக அன்றுதான் திரும்பி முதல் முதல் வந்திருந்தான் கோபாலன். பெற்ற குடலல்லவா? பிள்ளையைக் கண்டவுடன் குமாஸ்தா வேலுப் பிள்ளையோ யாரோ கோபங்கொள்ளவில்லை. அன்புடன் வரவேற்று ஆதரவளித்தனர். ஆனால் கோபால் நெடு நாளைக்கு நிற்க முடியவில்லை. ராமநாதனின் அக்கினி அங்கேயும் வீசிக்கொண்டிருந்தது. எடுத்த விடுதலை வருவதற்கும் போவதற்குந்தான் போதுமாகையால் கோபால்

உடனே திரும்பி விட்டான். மாதங்கள் பல சுழன்றோடிவிட்டன. பிள்ளையும் பிரசவித்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் அன்று போன கோபாலன் இதுவரை மீண்டபாடில்லை. விடுதலை என்பது ராமநாதன் கடாட்சத்தால் முயற்கொம்பாகிக்கொண்டே வந்தது.

எப்போ வருவார்? நாம் செய்த பாவங்கட்கு மன்னிப்பு இல்லையா? என்றுதான், அன்று அந்திப் பொழுதில் அவளின் சிந்தனை அறுதியிட்டுக் கொண்டிருந்தது. கண்கள் கலங்கி நீரைத் துளித்தன. இதே நேரத்தில் ஒருவித கலகலப்பு அவளின் சிந்தனையைச் சிதைத்தது. ஏதோ கனவு லோகத்திலிருந்து திரும்பியவள் போல் கண்களை அகல விரித்துக் குழந்தையை நோக்கினாள். குழந்தையின் கையில் ஒரு ''கிலுக்கி'' தென்பட்டது. அதிபயமும், அச்சமும் கொண்டவளாய்த் திடீரென்று திரும்பினாள். அவளின் கண்களையே நம்பமுடியவில்லை. கோபாலன் பலவித பொருளுடன் நின்றுகொண்டிருந்தான். என்ன செய்வதென்றே அவளுக்குத் தோன்றவில்லை. இன்பத்தால் பூரித்த அவர்கள் உடலங்கள் ஒன்றையொன்று அரவணைத்துக் கொண்டன. சுகமா? என்று கோபாலன் கேட்ட கேள்விக்கு, எப்படி விடுதலை பெற்றீர்கள் என்று, மற்றுமோர் கேள்வியைப் போட்டாள் சுசீலா - குழந்தையின் உச்சியை மோந்து அணைத்த மாதிரியே -இனி நமக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது; இதோ பார் என்று ஒரு கடிதத்தை நீட்டினான் கோபாலன். அவசரம் அவசரமாகப் பிரித்து வாசித்தாள்.

அன்புள்ள கோபால்,

நான் செய்த பிழை அத்தனையையும் மன்னித்துக்கொள். நீ போன நாள் தொட்டு என் காரியாலய வேலைகளெல்லாம் தலைகீழாய்விட்டது. உன்னுடைய இடத்திற்கு இத்துடன் பத்துப்பேர் வந்து கடமையாற்றிவிட்டார்கள். ஆனால் நிலைத்தவர் எவருமில்லை. என்ன செய்யலாம், என் அதிர்ஷடத்திற்கு உன்னைப் பகைத்து யாது பயன், பழைய செய்திகள் யாவற்றையும் மறந்து விடு. மீண்டும் உம்மை இந்த மாதம் 1ஆம் திகதியுடன் இங்கு மாற்றியிருக்கிறேன். கடமையை ஏற்றுக்கொள்ளத் தவறமாட்டாய் என நம்புகிறேன்.

இப்படிக்கு
ராமநாதன்,
தலைவர்.

பாவங்கட்கு மன்னிப்பு இல்லையா? என்று ஏங்கிக் கொண்டிருந்த சுசீலா வின் காலடியில் தானாகவே ''மன்னிப்பு'' வந்து சேர்ந்ததென்றால் எப்படி யிருக்கும். உள்ளப் பூரிப்பினால் குழந்தையை ஒரு கிள்ளு கிள்ளிவிட்டாள்.

# நல்ல காலம்

மூர்த்தி

எழுபது ரூபா சம்பளத்தில் குடும்பத்தை நடத்துவது எனக்கு என்னமோ முடியாத காரியமாயிருந்தது. குடிக்கும் தண்ணீருக்கு முதல், எரிக்கும் விறகுக்கு ஈறாக, கையிலிருந்து தம்படி செலவாகிக்கொண்டே வந்தது, அப்பட்டண சீவியத்தில்.

சம்பள உயர்ச்சிக்காக ஆபீஸ் மனேஜரைப் பேட்டிகண்டும், ஆயிரம் சலாம் போட்டும் அலுத்துப் போயிற்று. போதாததிற்கு ''ஹெட் - கிளாக்'' குக்கு பந்தம் பிடித்த செலவு வேறு. இவற்றினால் ஒரு பலனையும் காணாத எனக்கு வேலையை ராஜினாமா செய்வதே உசிதம் போல் தோன்றிற்று. அன்று ஆபீஸில் நடந்த ஓர் சம்பவமும் இதற்குத் துணைக் காரியமாயிருந்தது.

எங்கள் ஆபீஸில் இரண்டாவது ''கிளாக்'' காக கடமையாற்றி வந்த ஆசாமி வேறு ஊருக்கு மாற்றப்பட்டான். எனவே, அந்த இடத்தை எதிர்பார்த்திருந்தேன். பத்துவருடமாக சம்பள உயர்வு, பதவி உயர்வு இன்றி மூன்றாம் கிளாக்காக வேலை பார்க்கும் நான், ஆனால் ''ஹெட் கிளாக்'' கோ, மனேஜரைப் பந்தம் பிடித்து, மிலிட்டேரியிலிருந்து வந்து ''லாட்டரி'' அடித்துத் திரிந்த தன் மருகனை அந்த இடத்தில் அமர்த்தி விட்டான். எனவே மனேஜருக்கு ராஜினாமா கடிதத்தை அன்றே அனுப்பி விட்டுத்தான் மறு காரியம் பார்த்தேன்.

அன்று காலை பத்து மணியிருக்கும், கடைக்கணக்குக் கொப்பியை எடுத்துக் கணக்குக் கூட்டிக்கொண்டிருந்தேன். ஆமாம், எவ்வளவு பாக்கி என்று அறிவதற்குத்தான். ஐயோ ''பால்காசு'' என்று கொண்டே எதிரே நின்றான் நாலைந்து மாத பால் காசை எதிர்பார்க்கும் பாற்காரச் சின்னத் தம்பி. ''இப்போ என்ன அவசரம். மாதம் முடியட்டும் வா'' என்று சாக்குச் சொல்லி அவனை அனுப்பிவிட்டேன். கடைக்காரனின் பாக்கித் தொகை யுடன் பாற்காரனின் பாக்கித் தொகையையும் சேர்த்துக் கூட்டினேன். மொத்தம் நூற்றி இருபத்தொரு ரூபா அறுபத்தேழு சதம் கடன். சம்பளமோ ரூபா 70 கிடைக்கும். வேறு புதிய வேலை தேடும் வரையும் அதுதான் கிடைக்கும் கடைசிச் சம்பளம். போதாததிற்கு ''பள்ளிக்கூடக் காசு ரூபா

50 இம்மாதத்தில் கட்டியாக வேண்டும்'' என்ற என் பையனின் கடிதமும், புதிய பாஷனில் செய்யவிருக்கும் காப்புக் கூட்டத்திற்குப் பணமனுப்பவும் என்ற என் சகதர்மிணியின் கடிதமும் சேர்ந்து என்னைப் பைத்திய காரனாக்கப் பார்த்தன. ஆமாம்- எலிக்கு மரணம் பூனைக்கு விளையாட்டுத் தானே. எந்தச் செலவுக்கு சாக்குப்போக்கு சொல்வதென்றே புரியவில்லை. உத்தியோகமாகுதல் இருந்தால் ஒரு இடமில்லாவிட்டால் ஒரு இடமென்று கடனைக்கட்டை வாங்கலாம், வாலறுந்த பட்டம் போல இருந்தது என் நிலைமை. ''ஏனடா வேலையை ராஜினாமா செய்தோம்'' என்று பச்சாதாபப் பட்டேன். மனேஜருக்குக் கடிதம் கிடைத்து பதிலும் வந்துவிடும். செய்தது செய்ததுதானே. வருவதெல்லாம் நன்மைக்கே என்று என்னையே யான் தேற்றிக் கொண்டேன். அசட்டுத் தைரியம் பிறந்துவிட்டது.

வாசலில் கணகணவென்று மணியடித்தது. தபாற்காரன் இரண்டு கடிதங்களைக் கொடுத்தான். ஒன்று ஆபீஸிலிருந்து வந்திருந்தது. மற்றது என் நண்பனிடமிருந்து வந்தது, ஆபீஸ் கடிதம் - ஆமாம். பார்ப்போமே ஆறுதலாய். ''உனது ராஜினாமாவை ஏற்றுக்கொண்டோம்'' என்று தானே இருக்கும் என்று எண்ணிக்கொண்டே நண்பனின் கடிதத்தைத் திறந்தேன். என்ன ஆச்சரியம் - மனேஜருக்கு நான் எழுதிய ராஜினாமாக் கடிதம் அதனுள்ளிருந்தது. ஆபீஸ் விலாசத்துக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை தவறுதலாக நண்பனின் விலாசமிட்ட கவரில் அடைத்து அனுப்பிவிட்டே னென அப்பொழுதுதான் அறிந்தேன். என் நண்பன் அதைப் பார்த்துவிட்டு உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என எழுதியிருந்தான்.

ஆபீஸ் கடிதத்தைத் திறந்தேன். என் கண்களையே நம்பமுடியவில்லை. ''நமது கம்பெனியின் கிளை ஆபீஸ் ஒன்று கல்முனையில் அடுத்த மாதம் திறக்கப்படும். முதலாந்தேதி தொடக்கம் உம்மை அதன் ஹெட்- கிளாக்காக நியமித்திருக்கிறோம்'' என்றிருந்தது அக்கடிதத்தில்.

# சதி செய்த விதி

செல்வன்

அந்தி வேளை காலையில் இரைதேடச் சென்ற பறவையினங்கள் யாவும் களிப்புடன் தத்தம் இல்லம் நோக்குகின்றன. கன்றுகளை நினைந்த ஆவினங்கள் கதறி ஓடுகின்றன. வான வெளியிலே சூரியனின் இரத்தக் கறை மாறுகிறது. இடைக்கிடை வெள்ளிகள் முளைக்கின்றன. சுத்தக் காற்று வாங்கச் சுற்றித்திரிந்த மக்கள், சுயவுணர்வற்று வீட்டை நாடு கின்றனர். ஆனால் இரண்டு உருவங்கள் பரந்த வெண்மணலிற், கவிந்த உருவங்களுடன் காட்சியளிக்கின்றன.

நிமலா-சேகரன் இவர்களிருவருமே அங்கு காணப்பட்டவர்கள். சேகரன் நிமலாவின் அத்தை மகன். இளமை தொட்டே இருவரும் ஒரே கலாசாலையிற் கல்வி பயின்று வந்தனர். நிமலாவின் தந்தை ஒரு பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர். கூடிய வருமானமுடைய ஆஸ்திகட்கு உடைமையானவர். சுருங்கக் கூறின், ஒரு ஜமீந்தார் என்று சொல்லலாம். நிமலா இவருக்கு ஏக புத்திரி, எனவே அவருடைய சொத்துகள் யாவும் அவளையே எதிர்நோக்கிக் கொண்டிருந்தன. நிமலா, உத்தியோகத்தை நாடிக் கல்வி கற்கச் சென்றவளல்ல. எனவே, அவள் எட்டாம் வகுப்பைக் கிட்டியவுடன் பாடசாலை செல்வதினின்றுந் தடுக்கப்பட்டாள். சேகரனோ, இளமையிலேயே தாயைப் பறிகொடுத்த ஏழை, சேயைக் காப்பாற்றும் நோக்கத்தோடு சேகரனின் தந்தை மறுமணம் செய்து கொண்டார். சேயைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சிற்றன்னை நாளடைவில், சேய்க்குக் கூற்றனானாள். இவ்விதமான இடுக்கண்களுக்கிடையிலும் சேகரன், கல்வியில் பெருமுயற்சியுடையவனாயிருந்ததினால் அரசினர் ஸ்கொலசிப் கிடைத்தது. மேற்படிப்பிற்காகச் சீமை செல்ல ஆயத்தமானான்.

சிற்றன்னையின் கொடுமையினின்றும் விடுதலை பெறுவது அவனுக்கு ஓரளவில் சந்தோசத்தை அளித்தது. ஆயினும் சிற்றன்னையின் கொடுமையை மறக்கச்செய்த அவ்வின்முகத்தை, ஆம் நிமலாவைத்தான் பிரிந்து செல்வதென்றால் அவனுக்குக் கஷ்டமாகவே பட்டது. ஆம் சிற்றன்னை தனக்குச் செய்து வந்த கொடுமைகளுக்கெல்லாம் பரிகாரம் போன்ற இன்மொழிகளும், இன் முகமுங்காட்டியவள் நிமலா ஒருத்திதான்.

அவளின் முயற்சியாலேயே அவன் இந்நிலையையடைந்தானென்று கூறின் மிகையாகாது. இந்தக் கட்டத்திலேதான் இருவரின் சந்திப்புமேற் பட்டது.

நிமலா பேசலுற்றாள். "அத்தான்! தாங்கள் கட்டாயம் சீமைக்குச் செல்ல வேண்டும், தங்களைப் பிரிவது எனக்கு மாத்திரம் கஷ்டமில்லை யென்று நினைத்தீர்களா? ஆயினும் உங்கள் நன்மையை - ஆம் - என் நன்மையையுந்தான் நாடியே நான் சொல்கின்றேன், தாங்கள் போயே தீரவேண்டும். தாங்கள் என் மன உறுதியைக்கண்டு திடுக்கிடவேண்டாம். இம்மன உறுதிக்குக் காரணமில்லாமலும் இல்லை. எந்தந்தை எனக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் எனக்கு ஒரு பட்ட தாரியையே வரனாக வரைய வேண்டுமென்று எண்ணங்கொண்டுள்ளார். இதற்கிடையில் என் மனதில் தாங்கள் இடம்பெற்றுவிட்டீர்கள். தங்களின் புனிதமான ஸ்தானத்தில் நான் வேறொருவனுக்கு இடங்கொடுக்க முடியாது. நான் இப்போ எனக்குக் கலியாணம் அவசரமில்லை எனவும், இரண்டு வருடங்களின் பின்பே நான் கலியாணஞ்செய்வதாக உறுதிபூண்டிருப்ப தாகவும் கூறியுள்ளேன். அஃதேன் என்பது தங்களுக்குத் தெரியும். இரண்டு வருடங்களாற்றானே தங்களின் படிப்பு முடிகிறது. அத்தான்! தங்கட்கு என்மேல் உண்மையிலேயே அன்புண்டானால், என் காதலைத் தாங்கள் உண்மையிலேயே ஏற்றுக் கொண்டீர்களானால், நிச்சயமாகச் சீமை செல்ல வேண்டும்" என்று ஒரு நீண்ட பெருமூச்சுடன் கூறி முடித்தாள்.

சேகரன் என்ன செய்வதென்றறியாது ஒருகணம் திகைத்தானாயினும், நிமலாவின் வேண்டுகோளை அவனால் நிராகரிக்க முடியவில்லை. மனதைத் திடப்படுத்திக் கொண்டு, போவதென்றே தீர்மானித்துவிட்டான்.

கப்பல் அலைக்கலை அசைந்தசைந்து ஆடிக்கொண்டே சென்றது. சேகரனின் மனமும் நிலைகொள்ளாமல் ஊசலாடிக் கொண்டே இருந்தது. "நிலை ஓரிடம் நினைவோரிடம்" என்ற மாதிரி சேகரன் கப்பலிலிருந் தானாயினும், நிமலாவின் உறுதியையும், தான் இனிமேல் நடத்தப் போகுஞ் சீமை வாழ்க்கையையும் மாறிமாறி நினைந்து கொண்டே சென்றான்.

கப்பலில் சேகரனின் நண்பன் ராகவனும் பிரயாணஞ் செய்தான். ஆம் அவனும் மேற்படிப்பிற்காகச் சீமை செல்கின்றவனாயினும் அரசினர் "ஸ்கொலசிப்" இன்றி பணத்தினுதவியால் பணத்தைக் கட்டிப் படிக்கச் செல்லுபவன். ராகவனின் துணை சேகரனுக்கு ஒருவாறு ஆறுதல

ளித்தது. ராகவன் முன்பு பலதடவைகளில் சீமை சென்றுள்ளவனாதலால், சீமையில் பழகுவது சேகரனுக்கு மிக இலகுவாயிற்று. இருவருமொரே இடத்திலேயே ஜாகை வசதி ஏற்படுத்திக் கொண்டனர். மாதாமாதம் தவறாமல் சேகரனுக்கு அரசாங்கத்திடமிருந்து பண உதவி கிடைத்தது. அதைக்கொண்டு சேகரன் தன் நிலைமையைச் சமாளித்து வந்தான். வெளி ஆடம்பரங்களில் அதிகம் ஈடுபடாத சேகரன், தன் கல்வித் திறமையினால் ஆசிரியர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரனானான்.

முதலாவது வருடப் பரீட்சை முடிந்தது. அப்பரீட்சையில் சேகரன் எல்லாரிலும் முதலாவதாகச் சித்தியடைந்ததினால் ஆசிரியர்களின் புகழுக்கிலக்காகினதுமல்லாமல், அரசினரின் நன்கொடைப் பணமும் உயர்ந்தது.

சீமை சென்ற சேகரனை நினைந்து நிமலா வருந்தினாளாயினும், உள்ளுள் சந்தோஷமுறவே செய்தாள். தனக்கு வரனாகக் கிடைக்கப் போகுஞ் சேகரன் ஒரு B.A பட்டதாரியாய் வரும் நன்னாளை எண்ணி உளம் பூரிப்பாள். சேகரனைத் தான் மணப்பது தன் தந்தைக்கு விருப்ப மில்லையாயினும், நாளடைவில் அவரின் மனதைத் திருப்பி விடலாமென நினைத்தாள். அவளின் நினைவு கனவாகப் போகுமென அவள் அப்போது நினைக்கவில்லை.

நிமலாவின் தந்தையின் காரியாலயத்திற்குச் சீமைப் பட்டதாரி வரதராஜன் M.A. அவர்கள் மார்ச் முதலாம் தேதி, உத்தியோகம் பார்க்க வருவதாகக் கட்டளை வந்திருந்தது. சில நாட்களாய் எல்லாரும் வரதராஜன் அவர்களைப் பற்றியே வம்பளக்க ஆரம்பித்துவிட்டனர். மார்ச் முதலாம் திகதியும் வந்தது. புதிய ஆபீசரும் வந்து சேர்ந்தார். சுமார் ஐந்தரை அடி உயரம் இருக்கலாம். புது நிறம், அலைகளின் மடிப்புப் போன்று சுருண்ட கேசம், வசீகரமான தோற்றம். இவைகள் யாவும் நிமலாவின் தந்தையை சுபளீகரம் செய்தன. உத்தியோக விடயமாக புது ஆபீசரும், சுப்பிரமணியரும் - ஆம் அவர்தான், நிமலாவின் தந்தை சந்திப்பதுண்டு. அத்தருணங்களில் அவர்களிடை உண்டாகும் பேச்சுக்களின் மூலம் வரதராஜன் மணம் முடியாத பிரமச்சாரி என்றும், ஒரு நல்ல குடும்பத்திலே பிறந்தவரென்றும் சுப்பிரமணியர் அறிந்தார். ''அவனைத் தான் மருமகனாக அடைந்தாலோ'' என்று அவர் மனம் நினைக்கலாயிற்று.

காலம் வேகமாகச் சுழன்றது. வரதராஜனும், சுப்பிரமணியரின் வீட்டுக்கு வந்து போகத் தலைப்பட்டான். அத்தருணங்களில், நிமலா,

அவனின் கண்களில் படாமலில்லை. தந்தையின் நட்பினால், சகோதரப் பான்மையுடன் கலகலப்பாய் நடக்கத் தலைப்பட்டாள் நிமலா. அவளின் வசீகரமான பார்வை, கபடமற்ற பேச்சு, ஒளி வீசும் முகம் என்பன வரதராஜனையே ஆட்கொண்டன என்று கூறின் மிகையாகாது.

ராகவனின் நட்பிற்குடன்பட்ட சேகரன் காலஞ்சுழலச் சுழல, வெறும் வேடிக்கைகளிலும், கேளிக்கைகளிலும் ஈடுபடலானான். ராகவன் செல்லாத களியாட்டங்களை விரல்விட்டு எண்ணிவிடலாமென்றால், சேகரன், செல்லாதவைகளும் அவ்வாறுதான். ராகவனைவிடப் படிப்பிலே மேம்பட்ட சேகரன், ராகவன் நட்பினால், பெரிதும் பாதிக்கப்பட்டான். படிப்பில் குறையத் தலைப்பட்டான். ஆசிரியர்களின் நற்புத்தியும் நல்ல பலன் அளித்தில. அதனால் சேகரன், தனது 2ஆம் வருடப் பரீட்சையில் தவற வேண்டி ஏற்பட்டது.

சேகரனின் தோல்வியும், வரதராஜனின் தொடர்பும் நிமலாவைத் திடுக்கிடச் செய்தன. இரண்டு வருடங்களின் பின், மீண்டும், நிமலாவிற்கு வரன் தேடும் முயற்சியிலீடுபட்டார் சுப்பிரமணியர். இப்போது நிமலா வினால் ஒரு சமாதானமும் கூறமுடியாது போய் விட்டது. சேகரனிட மிருந்து அவளால் ஒன்றுமறியமுடியவில்லை. இறுதியில் தகப்பனின் வேண்டுதலுக்குச் செவிசாய்க்கவே வேண்டியிருந்தது. நிமலாவின் முடிவைப் பெற்ற சுப்பிரமணியரின் முயற்சியில் வரதராஜனே வெற்றி பெற்றான். முடிவில் ஸ்ரீமான் வரதராஜன், M.A. அவர்களுக்கும், ஸ்ரீமதி நிமலா அவர்கட்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும், பணத்தினுதவியால் ''பாஸ்'' பண்ணிய ராகவன், இரண்டு வருடங்களின் பின்னால் தாய்நாடு திரும் பினான். தனிமையில் விடப்பட்ட சேகரனுக்கு அப்போதான் நிமலாவின் உறுதி உதயமாயிற்று. நிமலாவை நினைத்த சேகரன் மீண்டும் ஊன்றிப் படிக்க விரும்பினான். விரும்பியவாறு படித்து ஆறுமாதத்தால் நடந்த ''ஸ்பெஷல்'' பரீட்சையில் சித்தியடைந்தான். பரீட்சையில் தேறியவன் பட்டம் பெற்று வீடுவந்தான்.

அப்போதுதான் அவனுக்கு நிமலாவின் நிலைமை புரிந்தது. தந்தையின் வற்புறுத்தலின் பேரிலும், சேகரனின் ஏமாற்றத்தின் பேரிலும், வரதராஜன், M.A. அவர்களை மணந்து கொண்டு உத்தியோக மாற்றத்தின் பேரில் அயலூர் சென்றுவிட்டாள் என்ற செய்தியை அவன் நண்பர்கள் மூலம்

அறியலானான். அவனுக்கு அஃது பெரிய ஏமாற்றமாயும், பேரிடி போன்று மிருந்தது.

அரசாங்கத்தினுதவியுடன் அயலூர் சென்று படித்த சேகரனுக்கு, அரசாங்கம் உத்தியோகமுமளித்தது. உத்தியோகத்திற்கூட விருப்பமில்லாத சேகரன் வெறும் பொம்மையாகவே இருந்து வந்தான். பட்டின சீவியத்தில் வெறுப்புற்ற சேகரன், தானாகவே வேறோரூருக்கு, மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டான். அம்மாற்றமே அவனின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியை வைத்தது.

சேகரன் மாற்றங்கேட்டுக் கொண்டது, ஒரு கிராமம். அங்கு ஒரு சிறிய ஆபீஸ் உண்டு. அங்குள்ள தலைமை ஆபீஸருக்கு உதவியாகவே சேகரனை மாற்றியிருந்தனர். கட்டளையைக் கையிலெடுத்த சேகரன் கிராமத்தை நோக்கிச் சென்றான். அன்று சனிக்கிழமை முன்பின் அறியாத கிராமத்தில் உத்தியோகத் தொடர்பால் தலைமையாபீஸரின் வீட்டிற்கே நேரிற் சென்றான். ஆபீசரின் வீடு மூடப்பட்டிருந்தது. ஒரு சந்தடியுமின்றி அமைதியாய்க் காட்சியளித்தது. அவனின் மனமும் அமைதியை நாடித் தானே அங்கு சென்றது.

கதவில் சேகரன் தட்டிய சப்தம், அமைதியை மீறிக் கேட்டது. வீட்டினுள்ளிருந்து ''யார்?'' என்று ஒரு குரல் கேட்டது. அக்குரல் ஒரு கணம் திடுக்கிட வைத்ததாயினும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ''நான்தான்'' என்று கூறினான், சேகரன். படாரென்று திறக்கப்பட்டது. அதே சமயத்தில் சேகரனின் முகமும் பேயறைந்தது போற் காணப்பட்டது. ஆம் - அவனெதிரில் நின்றவள் நிமலாதான். சேகரன் ஏன் வந்தேனென்று நினைத்துத் திரும்ப எத்தனித்தான். ஆனால், நிமலாவின் ஆகர்ணசக்தி அவனைத் திரும்ப விடவில்லை.

அவ்விடத்திலே எவ்வளவு நேரம் நின்றனரென்பது ஒருவருக்குந் தெரியாது. சுயவுணர்வற்ற சேகரன் தான் ஒரு நாற்காலியில் உட்கார்ந் திருப்பதாயும், பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த காப்பி ஆறிக்குளிர்ந்து போயிருப்பதையும், தன்னெதிரில் நிமலா கலங்கிய கண்களுடன் நிற்ப தாயுங் கண்டான். யார் யாருக்காக அங்கு வந்தாரென்பது ஒருவருக்கும் புலப்படவில்லை. நிமலாவின் சோகப்பார்வை, ''அத்தான்! என்னை மன்னிக்க மாட்டீர்களா?'' என்று மன்றாடுவது போற் காணப்பட்டது.

சேகரன் சீமைக்குச் செல்லப் புறப்படும் பொழுது தைரியத்துடன் பேசிய அதே நிமலாதான் இப்போதுந் தைரியத்துடன் பேசலுற்றாள். அவன் சீமைக்குச் சென்ற பின் புது ஆபீஸரின் வரவையும், அவரின் வருகையினால் தனது தந்தையிடமேற்பட்ட மாறுதலையும் கடைசியில், தங்களிடமிருந்து தானொரு தகவலுமறியாத படியால் தன் வாழ்விலேற் பட்ட அதிர்ச்சியையும் உணர்ச்சியுடன் கொட்டி முடித்தாள். தற்போது உத்தியோக விடயமாகத் தன் கணவன் அயலூர் சென்றிருப்பதாயும், இன்றிரவு வரமாட்டாரென்றுங் கூறினாள். இவைகளைக் கற்பதுமைபோற் கேட்டுக்கொண்டிருந்த சேகரன் ஏதும் பேசச் சக்தியற்றவனாய் "நிமலா! என்னை- ஆம் இப்பாவியை- மன்னித்துவிடு" என்ற ஒரு வாக்கியத்துடன் நடையைத் திருப்பினான்.

அடுத்த நாள் வெளியான தினசரியில் ஸ்ரீமான் சேகரன் M.A. அவர் களின் பிரேதம் ஐராவதி ஆற்றில் மிதந்ததாயும், ஆற்றைக் கடக்கும் பொழுது அலையினால் இழுப்புண்டதினால் ஏற்பட்ட மரணமென்றுங் கண்டிருந்தது. அவனிறந்ததின் உண்மைக் காரணம், நிமலாவொருத்திக்குத் தானே தெரியும்.

# விதி கிழித்த கோடு... சமூகம் காட்டிய பாதை

அபலை

நான் ஒரு உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல. ஒரு நீதிபதிக்கோ, அல்லது வேறொரு அரசாங்க உத்தியோகஸ்தனுக்கோ அன்றேல் ஏராள மான ஏக்கர் பொன் கொழிக்கும் வயல் நிலங்களை வைத்துக்கொண்டு ஏழைக் குடியானவர்களை வாட்டிப் பிழிந்து சுகபோக வைபவத்தில் வாழும் நிலச் சுவான்தார் ஒருவருக்கோ, கறுப்பு மார்க்கெட்டில் வியாபாரம் செய்து கொழுத்த பணமூட்டை ஒருவருக்கோ மகளாகப் பிறக்கவில்லை. ஒரு சாதாரண ஏழைத் தொழிலாளியின் மகளாகத்தான் பிறந்தேன். ஆனால் கண்டோர் மயங்கும் அழகியாகப் படைத்துவிட்டான் இறைவன் என்னை. இப்படியின்றி என்னை ஒரு குரூபியாகப் படைத்திருந்தால் நான் வறுமை யையும் எதிர்த்துப் போராடி இன்று ஒரு நிம்மதியான, கண்ணியமான வாழ்க்கையிலீடுபட்டிருப்பேன். நாம் வேண்டுவது போல ஆகிவிடுகிறது தானில்லையே இந்த உலகில். அப்பாவின் கூலி வேலை மூலமாகத்தான் எங்கள் சீவியம் கழிந்தது. நாங்கள் அப்பாவுக்கு நான்கு பெண்கள். அம்மா சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் இறந்துவிட்டாள். நானும் எனது மூத்த சகோதரியும் விவாகமாகும் வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருந்தோம். அப்பா அதைப்பற்றிக் கவலைப்பட்டவராகத் தெரிய வில்லை. ஆனால் நாங்கள் எதிர்பாராத விதமாக எங்கிருந்தோ ஒரு பெண்ணைக் கொண்டுவந்து தனக்கு இரண்டாவது மனைவியாக்கிக் கொண்டார். எங்கள் உடற்பசி அவருக்கெங்கே தெரியப்போகிறது.

என் மூத்த சகோதரி அதிகமாக எங்களுடன் வீட்டில் இருப்பதில்லை. இடையிடையேதான் வந்து போவாள். அவள் இளமையிலிருந்தே பட்டணத்தில் ஒரு கௌரவம் வாய்ந்த நடுத்தரக் குடும்பத்தினரோடு ஒட்டிக்கொண்டிருந்தாள். நானும் எனது இளைய சகோதரிகளிருவரும் வீட்டில்தானிருந்தோம். எனது வயதுக்குத் தக்கவாறு அங்கங்கள் வளர்ச்சி யடைந்து கொண்டிருந்தன. அழகான உடைகள் அணிந்து கொண்டு எல்லாரையும் போல் இலட்சணமாக இருக்க எனக்கு ஆசைதான். ஆனால் அதற்கெல்லாம் தகப்பனாரின் வருவாய் போதவில்லை. கந்தைத் துணியணிந்தே காலத்தைப் போக்கவேண்டியிருந்தது. கந்தையானாலும்

கசக்கிக் கட்டு என்று முன்னர் படித்ததற்கிணங்க ஓரளவு சுத்தமான உடையில் இருக்கப் பார்த்துக்கொண்டேன். இருவேளை உணவாவது திருப்தியாக உட்கொள்ளவேண்டுமென்று கூறியது வயிற்றுப் பசி. ஆனால் ஒரு வேளைகூடத் திருப்தியாகச் சாப்பிட முடியாது எங்கள் வீட்டில். என் தகுதிக்குத் தக்கவாறு ஒரு கண்ணியமான கண் நிறைந்த கணவனோடு கூடி இன்ப வாழ்க்கை நடத்தவேண்டுமென்று வற்புறுத்தியது என் உடற்பசி. அதற்கும் வழிபிறப்பதாக இல்லை இலகுவில். இந்த நிலையில் அப்பாவுடன் தொழில் முறையாகச் சம்பந்தம் வைத்துக்கொண்டார் ஒரு புது மனிதர். அவருக்கு வயது முப்பதுக்கு மேலிராது. விவாகமாகி ஒரு குழந்தையும் உண்டு அவருக்கு. ஊரில் விவாகமாகுமுன்னரே எத்தனையோ... உண்டு என்று கேள்வி. அவரை நான் நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை. அவர் அடக்கமுடியாத காமப்பசியுடன் என்னை அரைக் கண்ணால் நோக்கும் பொழுதெல்லாம் அவரை அப்படியே எரித்து விட்டாலும் பாதகமில்லை என்றிருந்தது எனக்கு. ஆனால் அவர் வரவைத் தடுத்து வைக்கக்கூடிய திறமை எனக்கு அப்போது இல்லை. இவர் போன்ற கசடர்களால்தான் இன்றைய உலகம் பாழ் போகிறது. இப்படிப்பட்டவர் களும் வாழ்வதனால்தான் அநேக பெண்கள் தங்கள் கற்பைக் காற்றில் பறக்கவிட்டு, ஆண்களின் மிருகத்தனமான உடற்பசியை ஆற்றும் இயந்திரங்களாக மாறிவிடுகின்றனர். மானமிழந்த பெண்கள் வாழவும், வயிற்றுப் பசியைப் போக்கவும் வகை தெரியாது இரவாயினும் சரி, பகலாயினும் சரி உணர்ச்சியின்றி உலுத்தர்களின் சுகபோக மெஷின்களாக மாறிவிடுகின்றனர். இதுதானே இன்றும் நடப்பது.

நாட்கள் பல கடந்தன. அந்தப் புதிய மனிதருடன் தினமும் இன்னொரு வாலிபர் வந்து போய்க்கொண்டிருந்ததை என்னால் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அந்த இளைஞர் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பது எனக்குத் தெரிந்திருந்தும் அவரை அடிக்கடி காணவேண்டுமென்று என் கண்கள் துடித்துக்கொண்டிருந்தன. அவரது கட்டுக் குலையாத தேகமும், அளவான சுருள்களுடன் கூடிய கேசங்களும், வசீகரமான நடையும் என்னைத் திணற அடித்தன. அவரைப்பற்றி எனக்கு எவ்வளவெல்லாமோ தெரியும். அப்படியிருந்தும் அவரைப் புறக்கணிக்க முடியவில்லை. அவராகவே வலிய வந்து என்னைச் சுற்றிக்கொண்டிருக்கும் போது, அதுவும் இடையில் ஒருவன் எங்களுக்குச் சாதகமாக நிற்கும் போது நான் அசைவற்று மோன நிலையிலிருக்க நான் என்ன தபசியா? தபசி

களும் வேளாவேளைகளில்... நான் அவர் அழகாகப் பின்னிய வலையில் விழுந்தேன். சிலந்தியின் வலையில் விழுந்த சிறு பூச்சி போல. நாங்கள் இருவரும் அறிமுகமான பின்னர் மூன்றாம் மனிதர் சற்று விலகியிருந்து தான் எங்களைக் கவனித்து வந்தார்.

நான் புதிய இளைஞருடன் இலகுவில் உடற்சம்பந்தம் வைத்துக் கொள்ளவில்லை. அவர் என்னையே மணந்து கொள்வதாகச் சத்தியம் செய்தார். நான், ''கேவலம் உங்கள் தகுதிக்குத் தக்கவளல்ல'' என்றேன். அவர் ''நீ, சேற்றில் முளைத்த செந்தாமரை, சிப்பியில் விளைந்த முத்து, குப்பையிலே மலர் கொஞ்சும் குருக்குத்தி'' என்றெல்லாம் என்னைப் புகழ்ந்தார். இல்லை முகஸ்துதி செய்தார். அன்றிலிருந்து என் மன உறுதி கலைந்தது. அப்புறம் அவரிடம் நன்றாக நெருங்கிப் பழக ஆரம்பித்து விட்டேன். நாள் தவறினாலும் அவர் என்னிடம் வந்து போகத் தவற மாட்டார். ஆரம்பத்தில் சிலகாலம் எனக்கு உடைக்கோ, உணவுக்கோ நவநாகரிக வஸ்துகளுக்கோ பஞ்சமே கிடையாது. அதெல்லாம் கிடைத்தன அவரிடமிருந்து. அவர் அடக்கமுடியாத உடற்பசியினால் என்னைச் சுற்றிக் கொண்டேயிருந்தார். அவர் என்மீது கொண்டுள்ள அன்பின் மிகுதியினால் தான் அப்படியிருக்கிறார் என எண்ணினேன். ஒருநாள் ''நீங்கள் என் ராஜா'' என்றேன். ''நீ என் ராணி'' என்றார். ''நிச்சயமாகவா?'' என்றேன். ''சத்தியமாக'' என்றார். ''யார் இதற்குச் சாட்சி'' என்றேன். ''இதோ நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனவே இந்தச் சந்திரனும், நட்சத்திரங் களும் போதாதா என்ன?'' என்றார். இப்படி மாதங்கள் சில கடந்தன. நானும் எங்கள் சேர்க்கையின் பலனை அடைந்துவிட்டேன். அவருக்கு அப்போதும் உடற்பசி தீர்ந்தபாடில்லை. நான் அவர் போக்கைக்கண்டு ஆச்சரியப்பட்டவளாய்

''இப்படி நீங்கள் இனிமேல் என்னைத் தொந்தரவு செய்துகொண்டி ருக்கக் கூடாது.'' அவர் இடைமறித்தார்.

''அப்படியென்றால் இதற்கென்ன அர்த்தம்?''

''இன்னுமா தெரியவில்லை உங்களுக்கு?''

''என்ன என்ன'' என்று ஆத்திரப்பட்டார் அவர்.

''எனக்கு இப்போது நான்காவது மாதம்''

அவர் முகத்தோற்றம் மாறுபட்டதைக் கண்டு நான் திடுக்கிட்டேன். ''இதை ஏன் இவ்வளவு காலமும் மறைத்து வைத்திருந்தாய்'' என்றார் மிகவும் கடுகடுத்த குரலில். ''இதில் என்ன மறைத்துவைக்க இருக்கிறது.

ஆண், பெண் சேர்க்கையே இனவிருத்திக்காகத்தானே ஆக்கப்பட்டது இறைவனால். நாம் ஈருடல் ஒருடலாக வாழ்ந்தோம் கடந்த ஆறுமாத காலமாக, அதன் பேறுதான் இது''.

''நான் இவ்வளவு விரைவில் இப்படி நேருமென்று எதிர்பார்த்திருக்க வில்லை. இதைக் கூடிய கெதியில் இல்லாமற் செய்ய வேண்டும்''. நான் 'ஹா' என்று துடித்தேன்.

அவர் சிரித்தார் ஒரு பேய்ச்சிரிப்பு. அன்றிலிருந்து அவர் என்னை நெருங்குவதே கிடையாது. ஆனால் என் வயிற்றிலிருந்த கருவைச் சிதைக்கத் தீவிர முயற்சியெடுக்கத் தொடங்கிவிட்டார். அடிக்கடி மருந்துப் பொட்டலங்களுடன் வந்து சேர்வார். அப்போதும்கூட நான் அவர் வஞ்சகத்தை உணரவில்லை. ஆரம்பத்தில் அவர் தந்த மருந்துகளை யெல்லாம் உட்கொண்டுவிட்டேன், அவர்பேரில் நான் வைத்திருந்த அன்பின் மிகுதியால். அதனால் எவ்வித பிரயோஜனமும் கிட்டவில்லை. என் வயிற்றிலிருந்த சிசு வளர்ந்துகொண்டுதான் வந்தது. அன்றொரு நாள் ஒரு மருந்துடன் வந்து சேர்ந்தார். ''இப்போது எனக்கு எட்டாவது மாதம். இனி மருந்தினால் எவ்வித பயனும் ஏற்பட்டுவிடாது. அப்படி யானால் நான்தான் இறக்க நேரிடும். நான் போன பின்னர் உங்கள் பாடு..'' என்றேன்.

அவர் மிகவும் சாந்தமான குரலில் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசினார். ''இது கருவைச் சிதைக்கக்கூடிய மருந்தல்ல. முன்னர் அருந்திய மருந்துகளினால் உனக்கு ஏதாவது வந்துவிடாமலிருக்க வேண்டுமே அதற்குத்தான் இது'' என்றார். நான் மருந்தை வாங்கிக் கொண்டு சென்றேன். ஆனால் அதை எந்த நியாயத்தைக் கொண்டும் உட்கொள்ளக்கூடாதென்ற ஒரு பிடிவாதம் என்மனதில் உதித்தது, வயது போன ஒரு பாட்டியிடம் கொடுத்தேன். அவர் தந்த மருந்தை, வஞ்சனையின் முடிப்பை,

அவள் ''இது நஞ்சு, எட்டாவது மாதக் கருவை இதனால் சிதைக்க முடியாது. உன் உயிருக்கே உலை வைக்கும் ஏற்பாடுதான் இது'' என்றாள்.

நான் திடுக்கிட்டேன், விஷப்பூண்டின் மீது மிதித்தவள் போல. நான் இதை நம்பமுடியவில்லையே என்றேன். ''நம்புவதற்கும் நம்பாமலிருப் பதற்கும் என்ன இருக்கிறது இதில்'' என்று கூறியவாறு கொஞ்சம் மருந்தை எடுத்து ஒருபிடி சோற்றில் புரட்டி வெளியே போட்டாள். எங்கிருந்தோ பறந்து வந்த இரண்டு காக்கைகள் ஒன்றையொன்று முந்திக்கொண்டு

சாப்பிட்டன அந்தச் சோற்றை. ஆனால் அவை இரண்டும் சில நிமிஷங்களில் சீவனற்று விழுந்தன நிலத்தில். அன்று நான் அந்த மருந்தை மறைத்து வைத்து உட்கொண்டிருந்தால் என் கதை ஒருவாறு மறைந்திருக்கும். இச் சோக நாடகம், புரையோடிப்போயிருக்கும் சமூக ஊழல்கள் உங்கள் கற்பனைக்கும் எட்டாததாகிவிடும்.

அன்று போனவர் போனவர்தான். நான் அதன் பின்னர் அடைந்த கஷ்டங்களுக்கோ அளவில்லை. அவரிடமிருந்து எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. நான் உரிய காலம் வந்ததும் ஒரு குழந்தைக்குத் தாயானேன். ஒரு வேளை உணவுக்கே திண்டாடும் எனக்கு குழந்தை வேறு பிறந்துவிட்டது. நான் உணவு விஷயத்தில் எவ்வித பத்தியத்துடனும் இருக்கவில்லை. பழையபடி கிடைத்ததை உண்டு வந்தேன். இறந்தாவது போய்விடுவோமென்றால் பிள்ளைப்பாசம் குறுக்கே நின்றது. எனக்கே உடல் முழுவதையும் மூடுவதற்குப் போதுமான துணியில்லை. அப்போது குழந்தைக்கு எங்கிருந்து கிடைக்கும் கம்பளி உடைகள். இப்படியாக நாட்கள் போய் மாதங்கள் சில கடந்தன. நான் இவ்வித நிலைமைக்கு வந்தது எவரால் என்பது ஊர் முழுக்கத் தெரிந்தே விட்டது. ஒருநாள் குழந்தையையும் தூக்கிக்கொண்டு எப்படியும் அவரை நேருக்கு நேர் சந்தித்து விடுவதென்ற நோக்கத்துடன் நடந்தேன் அவர் வீட்டை நோக்கி. ஆனால் இடைவழியில் ஒரு மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார் அவர் எதையோ யோசித்தவாறு.

அவர் பக்கத்தில் போனதும் ''ராஜா'' என்றேன். நான் வழக்கமான குரலில். அவர் நெருப்பை மிதித்தவர் போல் பதறி எழுந்தார்.

''இதோ உங்கள் குழந்தை'' என்றேன்.

''இதுவா? என் குழந்தையா?''

''வேறு யார் குழந்தையாம்?''

''ஓகோ எனக்குத் தெரியாதென்றா நினைத்து விட்டாய் அந்த....க்குப் பிறந்த குழந்தையல்லா இது''.

நான் மின்சார அதிர்ச்சிக்குட்பட்டாற் போலப் பின்வாங்கினேன். ''கடவுளே. நீதான் இதற்குப் பதில் கூறமாட்டாயா?'' என்று கூறியவாறு இருகாதுகளையும் இறுகப் பொத்திக் கொண்டேன்.

''கள்ளி, ஜாலமா பண்ணுகிறாய். இதெல்லாம் என்னிடமா பலிக்கும்?''. எனக்கு மீண்டுமோர் தாக்குதல். என் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. ''இந்த அவச் சொற்கள் உங்கள் வாயிலிருந்தா வெளிவந்தன. உயிர்

பிரிவதனாலும் நம் சம்பந்தம் அற்றுப் போகாது. நாம் அழிவற்ற அமர தம்பதிகள். இதோ வானத்தில் நம்மைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு அழகாகப் பவனி வருகின்றதே இந்தச் சந்திரன். அவனுக்குத் துணையாகப் பக்கத்தில் செல்கின்றனவே தாரகைகள் சாட்சியாக என்று, அன்று அந்த ஆற்றங்கரையில் பரந்த வெண்மணலிலே நிலவொளியில் என் உடலைச் சக்கையாகப் பிழிந்து இன்பத்தின் சாற்றை அள்ளி அள்ளிக் குடித்துக் கொண்டிருந்தீர்கள். அதே உணர்ச்சியுள்ள இதய அஸ்திவாரத்திலிருந்து உருவாகி வெளிவந்த வார்த்தைகள் தானா இது'' என்றேன்.

''நீ என்னை எப்படியோ மயக்கிவிட்டாய். எனக்கு முன்னரேயே நீ அவனைப் பழக்கம் செய்து கொண்டாய். பின்னர் பெயருக்கு வந்து சேர்ந்தேன் நான்''

என்னாற் பொறுக்கமுடியவில்லை. என்னை அறியாமலே என் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன. ''இதுவரை நான் உங்களைக் கண்கண்ட தெய்வமென்று மதித்தேன், கற்பின் கனியே என்று என் மார்பகத்தில் உங்கள் கரங்களை வைத்தீர்கள். நீங்கள் வயிற்றுப் பசியறியாத உயர்வகுப்பு என்றேன். எல்லாப் பசியையும் ஒருங்கே போக்கடிக்கவல்ல தெய்வீகப் பெண் நீ என்று கூறியவாறு என் உடல் இன்பத்தில் திளைத்துக் கிடந்தீர்கள். நான் உங்கள் காலில் படிந்த தூசிக்கும் பெறாதவள் என்றேன். மதிப்பிடற்கரிய மாணிக்கம் நீ என்று உங்கள் மடியிற் சாய்ந்திருந்த என் முகத்தைப் பின்னால் வளைத்து முத்தமாரிகள் பொழிந்தீர்கள் உங்கள் ஆசை தீரும்வரை. நான் உங்கள் பேச்சையும் செயலையும் முற்றாக நம்பினேன். உங்களையே என் இதய பீடத்தில் வைத்துப் பூஜித்தேன். நான் கருத்தரித்ததும் நீங்கள் என்னைவிட்டுப் பிரிந்தீர்கள். அன்றிலிருந்து என் சுகதுக்கங்களைப் பற்றி அக்கறையில்லாமற் போயிற்று உங்களுக்கு. பின்னர் என் வயிற்றிலிருந்த கருவைச் சிதைக்க மூலிகைகள் தேடிக் காடு கரம் எல்லாம் சுற்றினீர்கள். மூங்கிற் சோலைகளெல்லாம் அலைந்தீர்கள். உங்கள் பேரில் கொண்ட அன்பின் மிகுதியால் நீங்கள் தந்த மருந்துகளை யெல்லாம் உட்கொண்டேன். ஆனால் கடைசி மருந்து இது உன் சுகத்துக்காக என்று கூறி விஷம் கொடுத்தீர்கள். நான் அவ்வளவுக்குப் பொல்லாதவளாகிவிட்டேன் உங்களுக்கு. நான் இவற்றையெல்லாம் நன்குணர்ந்த பின்னரும் உங்களைப் புறக்கணிக்கவில்லை. எப்போதாவது என்னை வந்து ஏற்றுக்கொள்வீர்கள், எனக்கும் உங்கள் குழந்தைக்கும் வாழ்வளிப்பீர்கள் என்றெல்லாம் எண்ணினேன். இன்றுதான் என்

எண்ணத்தில் மண்விழுந்தது. அன்று என்னைப் போற்றிய வாயால் இன்று தூற்றுகிறீர்கள். உங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததாக, என்மேற் குற்றம் சாட்டுகிறீர்கள். ஆனால் உங்கள் மனச்சாட்சி என்னை நிரபராதி என்று தீர்ப்பளிக்கும். நான் உடுக்கப் போதுமான துணியின்றி உண்ண உணவின்றி வயிற்றில் குழந்தையுடன் பட்டினி கிடந்தேன். நீங்கள் வயிறு நிரம்பும் வரையும் அறுசுவை உண்டி அருந்திவிட்டு அவ்வுணவு ஜீரண மாகவேண்டி உயர்ந்த விலையுள்ள அயல்நாட்டு மருந்துப்புட்டிகளைக் காலி செய்து கொண்டிருந்தீர்கள். நான் குழந்தையைப் பெற்ற பின்னரும் குளிரில் போர்த்த சாதாரண கந்தைத் துணியாவது இல்லாமல் தவித்தேன். நீங்கள் இலவம்பஞ்சு மெத்தையில் கூட ''ஸ்வெற்றர்'' போட்டுக்கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட உரோமக் கம்பளி மேற்போர்வையுடன் நித்திரை செய்தீர்கள். நான் உங்களை எண்ணி எண்ணித் தவித்துக்கொண்டிருந்தேன். நீங்கள் போதையேறிய சுழற்றும் கண்களுடன் ஊரில் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றித் திரிந்த எத்தனையோ கற்பரசிகளைப் பலாத்கார மாகக் கற்பழித்துத் திரிந்தீர்கள். யாராவது அறிந்தவர்கள் கண்ணிற்பட்டதும் வயிற்றுவலிக்கு மருந்து தேடிப்போனேன். நாளை வயல் விதைப்புக்குக் கூலியாட்களை ஒழுங்கு செய்ய வந்தேன் என்று இல்லாததையும் பொல்லாததையும் கூறி உங்கள் குற்றத்தை மறைக்க முயன்றீர்கள். இவ்வளவுக்கும் நான் இறந்துபோயிருக்க வேண்டும். நான் உங்கள் வஞ்சனையை அறிந்திருக்கவில்லை. உங்கள் அன்பு திரும்பவும் கிடைக்கு மென்றிருந்து ஏமாந்து போனேன். விவாகமின்றியே நான் உங்களால் ஒரு குழந்தைக்குத் தாயாகியதால் என் மூத்த சகோதரிக்குப் பேசியிருந்த விவாகமும் தடைப்பட்டுப் பின்னர் வேறொருவரை முடித்து வைக்க வேண்டியதாயிற்று. இப்படியெல்லாமிருந்தும் நான் இப்போது விபச்சாரி, கணிகை, கற்பு நெறிதவறியவள், சமூகத்துக்கே உபயோகமற்றவள் அப்படித்தானே. நீங்கள் உயர்வகுப்பு, அதனால் உங்கள் பேரில் எவ்வித குற்றமுமில்லையென்று பேசுகிறீர்கள்.''

''சீ நாயே மூடு உன் வாயை''என்றார் அவர். ''ஆம் இன்று நான் நாய். அன்று சிங்கக்குட்டி, யானைக்குட்டி, நீங்கள் தனம் படைத்தவர்கள். எண்ணிறகடங்காத ஏழை எளியவர்களை அடக்கி ஒடுக்கி அவர்கள் உழைப்பைக் கொண்டு வயிறு வளர்க்கும் பெருச்சாளிகள். நீங்கள் எதுவும் செய்யலாம். யாரையும் ஏமாற்றலாம். பொய்யையும் மெய்யாக்கலாம். மெய்யையும் பொய்யாக்கலாம். பொழுது விடியும் வரை தெருத்தெரு

வாகப் பெண் வேட்டையாடித் திரிந்து விட்டுப் பின்னர் கண்ணியமான வெள்ளை உடையில் மற்றவர்கள் கண்ணில் மண்ணைத்தூவலாம். நீங்களும் உங்களைப் போன்றவர்களும்தான் வாழப்பிறந்தவர்கள். என்னைப் போன்ற ஏழை எளியவர்களுக்கு வாழ்வே கிடையாது இந்த உலகத்தில். அதுவும் என் போன்ற அழகியாகப் பிறந்துவிட்டால் அவர்கள் பாடு அதோ கதிதான். உங்களைப் போன்றவர்கள் காலடியில் கிடந்து கசங்குண்டு நாசமாக வேண்டியதுதான். இதுதானே உங்கள் எண்ணம். ஆனால் ஒரு அபலைப் பெண்ணின் வாழ்வைச் சீர்குலையச் செய்த பாவம் உங்களைச் சும்மா விட்டுவைக்காது. சும்மா இருந்த என்னை ஒரு குழந்தைக்குத் தாயாக்கி அலையவிட்டு விட்டீர்கள். இனி நான் எவ்வளவு கேவலமான வாழ்க்கையையும் நடத்தக்கூடியவாறு சந்தர்ப்பங்கள் சதிசெய்தாலும் அதற்குப் பொறுப்பாளி நீங்கள்தான். நீங்கள் ஒரு உயர்ந்த குடும்பத்தில் விவாகம் செய்துகொண்டு ஆரம்பத்தில் சுகபோக வாழ்க்கை நடத்தலாம். ஏழை எளியவர்களை அடக்கி ஆளலாம். ஆனால் என்றோ ஒரு நாளைக்கு உங்கள் பொருள் பண்டங்கள் எல்லாம் உங்கள் சொந்தத் துர்க்கிரியைகளினால் அழிந்து போகும். உங்கள் உடல் வலிமை சிதைந்து போகும். இன்று உங்கள் காலடியிற்கிடந்து கசங்கும் தொழிலாளரிடம் நீங்கள் உதவி கேட்பீர்கள். ஒரு "கப் ரீ"க்கு உங்கள் மானத்தைக் காற்றில் விட்டு வாயைத் திறப்பீர்கள். அவர்கள் நீங்கள் முன்னர் செய்த அநியாயங் களைக், கொடுமைகளை மறந்து விட்டு உங்களை உள்ளன்புடன் ஆதரிப் பார்கள். அவர்கள் குடிக்கும் கஞ்சியிற் பாதியை உங்களுக்குத் தருவார்கள். தாங்கள் தலைக்கு அணையாக வைத்துப்படுக்கும் வைக்கோல் சாக்கையும், படுக்கைக்கு உபயோகிக்கும் கிழிந்த ஓலைப்பாயையும் தருவார்கள். அப்போதுதான் நீங்கள் உங்கள் அற்பத்தனத்தைக் கண்டு அருவருப்பீர்கள். அவர்களது பண்பட்ட மனிதத்தன்மையைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். உங்கள் மனச்சாட்சி உங்கள் உடலையும், உள்ளத்தையும் அரித்து அரித்துத் தின்றுகொண்டிருக்கும். அப்போதுதான் நீங்கள் எனக்குச் செய்த துரோகச் செயலை நினைந்து பச்சாதாபப்படுவீர்கள். மனிதரிடம் மட்டுமல்ல, இறைவனிடமும் மன்னிப்புக் கேட்டு நிற்பீர்கள். இனி உங்களிடம் பேசு வதற்கு எதுவுமேயில்லை நான் போகிறேன்".

அவர் அசைவற்றுச் சிலைபோலிருந்தார். நான் வந்த வழியே திரும்பி னேன். காலம் கடந்தது. நான் விபச்சாரி என்பதாக எனக்குச் சமூகம் பெயர் சூட்டிற்று. எந்தத் துணிவுள்ள, சமூக முன்னேற்றத்தில் அதிகம்

கவலை கொண்டுள்ள வாலிபனாவது என்னை மணந்து கொள்ள முன்வரவில்லை. ஏன்? நான் விபச்சாரியாம். இனிச் சும்மா இருப்பதில் காசுக்குப் பயனில்லை. மீண்டும் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டேன். அது அப்பாவுடன் வேலை செய்து வந்த குடும்பஸ்தருக்குத்தான். ஆசை தீர்ந்த பின்னர் அவரும் என்னைக் கைவிடவேண்டியதாயிற்று. பின்னர் எனது மைத்துனர் (மூத்த சகோதரியின் கணவரின் சகோதரன்) ''அழகுராணி'' என்பதற்காக என்னை மனைவியாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். இவரும் எவ்வளவு காலம் என்னுடன் நிலைத்திருப்பார் என்று திட்டமாகக் கூறமுடியாது. என்றைக்கோ ஒரு நாள் அவர் ஆசை தீர்ந்த பின்னர், அழகற்றவளாகத் தென்படுவேன் நான் அவர் கண்களுக்கு. அவர் வேறொரு பெண்ணைத் தேடிப்போவார். இனி நான் ஆண்களின் அற்ப சுகத்திற்காக என் முந்தானையை விரிக்க வேண்டியது தான். அப்போதுதான் என் சீவியம் ஒருவாறு கழியும். இதுதான் நான் எதிர்பார்த்திருப்பது. ஏன்? விதி கிழித்த கோடு. சமூகம் காட்டிய பாதை எல்லாம் அது ஒன்றுதான்.

இன்று எத்தனையோ பெண்கள் என்னைப்போல, நான் எதிர்பார்த்திருப்பது போல் வாழ்விழந்து, மானமிழந்து 'வேசிகள்' என்ற பெயருடன் வாழ்வதற்கு யார் பொறுப்பாளி? இன்றைய சமூகம் தானே. ஏழைக் குடும்பங்களிடையே ஆண்டவன் அழகான பெண்களைப் படைப்பது உயர் வகுப்பினரின் உபயோகத்திற்குத்தானா? இல்லவேயில்லை. வருங்காலத்தில் இந்த அநாகரிகமான, தர்மமற்ற, முறைகேடான வழக்கம் ஒழிய வேண்டும். நம் சமூகத்திடையேயிருந்து வருங்காலத்தில் படித்த பெண்களும் ஆடவரும் புரட்சிகரமான ஒரு நேர்மையான பாதையிற்போய் நம்நாடு சிறந்து விளங்கப் பாடுபட வேண்டும். அடிமைத்தனம் அகல வேண்டும். சுரண்டும் அதிகார வர்க்கத்தினரை அடியோடு தொலைக்க வேண்டும். ஏழைப் பெண்களும் சுகமாக, மானமாக வாழவேண்டும் என்ற விரிந்த பண்பட்ட மனப்பான்மையுடன் தொண்டு புரிய வேண்டும். வையகமும் வானகமாய் மாறவேண்டும். இதுவே எனது உடைந்த உள்ளத்திலிருந்தும் வெளிவரும் வேண்டுகோள். இனி உங்கள் பாடு.

# கோணற் தராசு

வ.அ. ராசரத்தினம்

*ஆசிரியர்களும் ஆசிரியைகளும் மிகுந்த இன்றைய நாட்டிலே, ஒருவரை ஒருவர் மணந்து கொள்வது ஏற்றதாகுமா? என்ற ஓர் புரட்சிகரமான சிந்தனையைத் தூண்டி விடுகிறார் கதாசிரியர். படிப்பித்த ஆயாச மேலீட்டால் ''கொஞ்சம் தண்ணீர் தா'' என்பீர்கள் அவளை. அவளும் அலுப்படைந்து வந்தவள்தானே! அந்த அலுப்பினால் ''போய் எடுத்துக் குடியுங்கள்'' என்பாள் அவள். கரும்பாயிருந்த மனைவி வேம்பாகி விடுகிறாள். பாவம் இருவரிலும் பிழை இல்லை.*

*உங்கள் படித்த மனைவி தாகூரின் ''புயலி''ல் ரசமான கட்டத்தை வாசித்துக்கொண்டிருக்க, உங்கள் மூத்த மகன் மடியிலேறி வீழ்ந்து அவள் வாசிப்பை குழப்ப, அவள் அவன் முதுகில் இரண்டு போட அதைச் சகித்துக்கொள்ள வேண்டியது உங்கள் இன்ப வாழ்க்கை என்று ஆசிரியையின் தந்தை, பெண் கேட்க வந்த ஆசிரியரிடம் கூறுகின்றார்.*

*தீர்ப்பை அளிப்பது நேயர் கடமை.*

அது வாழ்க்கையின் சிக்கலான பிரச்சினைகளைச் சிந்தனைத் திரைகள் மறைத்துக் கொண்டிருந்த ஆசிரிய கலாசாலை வாழ்க்கை. நான் வெளியேறும் வருடம்.... அவள் முதலாம் வருடம்.....

எல்லாக் காதலர்களையும் போல நாங்களும் கல்யாணஞ் செய்து கொள்வது, முடியாமற் போனால் உயிரை மாய்த்துக்கொள்வது எனத் தீர்மானித்துக்கொண்டோம். எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு இதைவிட வேறு முடிவுக்கு வருவது ஏனோ சாத்தியமில்லை!

அன்று ஓர் சனிக்கிழமை. சாரமற்ற- சாரமற்றதான விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தோம் இருவரும். பேச்சுவாக்கில் ''இந்த விவகாரத்திற்கு அப்பா சம்மதிப்பாரா?'' என்ற பிரச்சினையைக் கிளப்பினாள் அவள்.

இதுவரை எனக்காகவே அவள் இவ்வுலகில் அவதாரம் எடுத்திருக்கிறாள் என எண்ணிக்கொண்டிருந்த எனக்கு அக்கேள்வி எனக்கும் அவளுக்கும் ''ஸ்னானப் பிராப்தி'' கூட இல்லை என்பதை வெட்டொன்று துண்டு இரண்டாக எடுத்துக்காட்டியது. நானும் காதலனாக இல்லாமல்

''நான்'' ஆனேன். ஒரு நிமிஷம் ''சும்மா'' நின்றிருப்பேன். பின்,

''ஏன் அவர் சம்மதிக்கமாட்டாரா? என்றேன் நான். குரல் கொஞ்சம் மாறுபட்டிருந்தது.

''அப்படித்தான் தெரிகின்றது'' என்றாள் அவள். ''ஏன்....?'' ''ஏன் என்றுதானே எனக்குந் தெரியவில்லை....'' என்றிழுத்தாள் அவள்.

அதற்கு மேல் அவளோடு நான் பேச விரும்பவில்லை. சிறிது யோசித்து எதற்கும் அவள் அப்பாவையே கேட்டு விடுவது எனத் தீர்மானித்துக் கொண்டு ''போய் வருகிறேன்'' என்று அவளிடம் விடை பெற்றுக்கொண்டு என் விடுதியை வந்தடைந்தேன்.

மறுநாளே சிரமப்பட்டு இரண்டு நாள் லீவு எடுத்துக்கொண்டு அவள் கிராமத்திற்கு - அவள் வீட்டிற்குத்தான் - வந்தேன்.

அது சாதாரணமான வீடுதான். இரண்டு அறைகள். முன் மண்டபம் ......ஓரிரண்டு மேசைகள்..... நாலைந்து கதிரைகள் சுவரில் அங்குமிங்குமாகச் சில படங்கள்..... அவ்வளவு தான்.

அந்தக் கதிரையிற் சாய்ந்து கிடந்தவர் அவள் அப்பா தானா.....? என்னால் நம்பவே முடியவில்லை அப்படி. பயந்த, துவண்ட கொடி போன்ற சரஸ்வதி எங்கே? திருகிய உடலும், முறுக்கிய மீசையுமாய்க் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இவர் எங்கே?

நான் வந்ததை அவருக்கு அறிவிக்கும் முகமாகக் காலைத் தரையிற் பலமாகத் தட்டினேன். எதிர்பார்த்தபடி அவரும் என்னைப் பார்த்தார் ஏறிட்டு. இரண்டு நிமிஷங்கள் அப்படியே நின்றேன். பின் ஒருவாறு தைரியமாக ''நான்தான் சிவானந்தம்'' என்றேன் நான்.

''ஓ. வாருங்கள்'' என்றே கதிரையைக் காட்டினார் அவர். மறுபடியும் மௌனம். மௌனத்தைக் கலைக்க அவர் விரும்பவில்லை. அகம்பாவக் காரர்!

இப்படியெல்லாம் பேச வேண்டும் என ராத்திரி முழுதாக ஒத்திகை நடத்தி வந்திருந்த எனக்குக்கூட எப்படி பேச்சை ஆரம்பிப்பது? என்பது தெரியவில்லை. தைரியத்தை வலிந்தழைத்துக் கொண்டு ஏதோ வாயசைத் தேன். ''சரஸ்வதி எழுதியிருப்பாள்'' என்பதாகச் சொற்கள் உதிர்ந்தன. வியர்த்துக் கொட்டியது எனக்கு.

''நானும் எழுதியிருந்தேன்'' என்றார் அவர் வெடுக்கென்று. எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என்றாலும் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. ஆள் கொஞ்சம் காரசாரமானவர். அதற்குத் தக்கதாகப் பேசிக்கொள்ள

வேண்டும் என மனதில் தீர்மானித்துக்கொண்டேன். காதல் வேண்டாம் என்பவர்களின் வாதம் எனக்கும் சிறிது தெரியும்!

சாதாரணமாக இருந்துகொண்டு "எங்கள் நட்பு...." என நான் தொடங்க. "எனக்குப் பிடிக்கவில்லை" என்று முடித்துவிட்டார் அவர். அதன்பின் நடந்த எங்கள் சம்பாஷனையை ஏன் நான் உங்களுக்கு மறைக்கவேண்டும். இதோ வருகிறது, அது.

"பிடிக்கவில்லை என்றால்".... இது நான்.

"விருப்பமாக வில்லை" இது அவர்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்"

"வேறு ஒரு மாதிரியும் சொல்ல முடியாமையால்"

"ஏன் எங்கள் நடப்பில்"

"அர்த்தமில்லை."

"நாங்கள் அப்படி நினைக்கவில்லை"

"நீங்கள் நினைப்பது பற்றி எனக்குக் கவலையில்லை."

"............................................................"

"............................................................"

"நீங்கள் என்னைச் சந்தேகிக்கிறீர்கள்?" இது என் கேள்வி.

"சந்தேகிக்கும் வழக்கமே எனக்கில்லை"

"அப்படியானால் ஏன் எங்கள் நட்பை எதிர்க்கிறீர்கள்"

"உங்கள் இருவருடைய நன்மைக்காகவுந்தான்"

நான் வேண்டுமென்றே சிரித்துக் கொண்டு "மனமொத்த இருவரைப் பிரித்து வைப்பதில் என்ன நன்மையைக் காணப்போகின்றீர்களோ?" என்றேன். அவர் கொஞ்சம் ஆத்திரமாகக் "காணப்போகிறேன் என்ற நம்பிக்கை இருப்பதனாற்றான் பிரிக்கவும் போகின்றேன்" என்றார்.

"எங்களிருவர் கூட்டுறவினால் ஏன் நன்மை ஏற்படாது"

"ஏற்படும் என்றுதானா எண்ணுகிறீர்கள்" என்று இகழ்ச்சி தோன்றக் கேட்டார் அவர்.

"நிச்சயமாக ஏற்படும், அந்த நம்பிக்கையினாற்தான் இந்த முடிவுக்கு...."

"அதிகமாக ஏன் பேச வேண்டும். அந்த முடிவுதான் சரியில்லை என்கிறேன் நான்" என்றார் அவர்.

நான் சிறிது தாமதித்தேன்! தலையடி எப்படி அடிக்கலாம் என்ற சிந்தனையில், அவர் சிந்தனையைக் கலைத்தார்.

''அது சரி. நீங்கள் ஏன் சரஸ்வதியை விரும்புகிறீர்கள்''

எனக்கு இந்தக் கேள்விக்குப் பதில் தெரியும். ஆனால் வெளியிடத்தான் முடியவில்லை. சிரமப்பட்டு ''ஏனோ என் மனம் அவளை விரும்பு கின்றது'' என்று சொல்லி வைத்தேன்.

அவர் குறும்பாகச் சிரித்துக் கொண்டே ''அதுதான் கேட்கிறேன். மனம் ஏன் அவளை விரும்புகிறதென்று'' என்றார்.

எனக்கு அக்கேள்விக்கு விடை தெரியவில்லை. சிலை போல நின்றேன். அவர் மறுபடியும் பேசத் தொடங்கினார்.

''சரஸ்வதிக்கு ஓர் தங்கை இருக்கிறாள். சரஸ்வதியைவிட அழகி. ஆனால் அவளைப் போல ஆசிரியை அல்ல. ஆறாம் வகுப்புத்தான் படித்திருக்கிறாள் அவளை.....''

அவர் முடிக்க முன்னமே ''சரஸ்வதியைவிட என் மனதில் வேறெ வருக்கும் இடமில்லை'' என்று பலமாகச் சொன்னேன்.

அவரும் பலமாகச் சிரித்துக் கொண்டே ''எனக்குத் தெரியும் நீங்கள் அப்படிச் சொல்வீர்கள் என்று, நீங்கள் இதுவரை சரஸ்வதியைக் காணவே யில்லை என எண்ணிக்கொள்ளுங்கள். அப்படியிருந்தாற்கூட அவள் தங்கையை விரும்புவீர்களா? அதுதான் வேண்டாம். உங்கள் ஊரிலேயே நீங்கள் ஒருத்தியை ஏன் விரும்பவில்லை. சிந்தித்துப் பார்த்தாற் ''சரஸ்வதி ஓர் ஆசிரியை. உழைக்கக் கூடியவள். என்ற எண்ணம் தானே! ஆம் சரஸ்வதியையல்ல சரஸ்வதியின் சம்பளத்தைத் தானே நீங்கள் காதலிக் கிறீர்கள். அதனாற்றான் சொன்னேன். உங்கள் நட்பு எனக்குப் பிடிக்க வில்லை என்று. பணத்தைத் தள்ளிப் பார்த்தால் உங்களிருவரிடையில் ஏதாவது பாசம் இருக்கிறதா. நெஞ்சிற் கையை வைத்துச் சொல்லுங்கள்'' என்று நிறுத்தினார் அவர்.

கல்லூரியிற் ''கட்டற்ற காதல்'' வேண்டும் என்று சண்டப் பிரசண்டம் பண்ணும் எனக்கு, அக்கேள்விகளுக்கு விடை வரவேயில்லை. திரும்பவும் மௌனியானேன்.

பின் இந்தக் கேள்வியில் அவர் வாய் அடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் ''நீங்கள் சரஸ்வதிக்குக் கல்யாணமே செய்து வைக்கப் போவதில்லையா?'' என்று பெருமிதத்துடன் கேட்டேன்.

''ஏனில்லை. நிச்சயமாகக் கல்யாணஞ் செய்து வைக்கத்தான் போகின்றேன். ஆனால் உங்களைப் போன்ற பணமோகங் கொண்ட, சுயநலமிகட்கு இல்லை''.

எனக்கு ஆத்திரம் பிய்த்துக்கொண்டு வந்தது. ''பணத்தாசை என்கிறீர்களே. தங்களுக்கு இல்லாமலா அவளை ஆசிரியையாக்குறீர்கள்'' என்றேன் பதட்டமாக.

அவர் சாந்தமாக ''இல்லை, இல்லை. நீங்கள் எண்ணுவது பிழை, வயதிருக்கிறது கொஞ்சம் படிக்கட்டுமே, அந்தப் படிப்பினால் அவள் தன் பிள்ளைகளைச் சரியாக வளர்க்கவும், வாழ்க்கையை இன்பமுள்ள தாகவும் போக்கலாமே என்ற எண்ணந்தான். அதல்லாமல் உங்களைப் போல அவள் ஊதியத்தை விரும்பவில்லை நான்'' என்றார்.

''உங்கள் பேச்சைப் பார்த்தால் முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே. இன்பமாக வாழ்க்கை நடத்த அவளைப் படிப்பிக்கிறேன் என்கிறீர்கள். ஆனாற் பணம் வேண்டாம் என்கிறீர்கள். பணம் இல்லாமல் இன்பம் வந்துவிடுமா என்ன?''

''அப்படியாயின் பணத்தினாற் இன்பம் உண்டாகின்றதென்பது உங்கள் எண்ணமா?''

''இல்லை, இல்லை; இன்பமாய் இருக்கப் பணமும் தேவை''

''பணத்தால் வரும் இன்பத்திற்காகத்தானே சரஸ்வதி உங்களுக்குத் தேவை''

எனக்கு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமற் போய் விட்டது. அவர் கேட்ட கேள்விக்கு ''ஆம்'' என்று சொல்வதைத் தவிர, வேறு பதிலே இல்லை. ஆனாலும் என் வாயிலிருந்து ''ஆம்'' என்ற பதிலும் வரவில்லை.

அவர் இதழ்க் கடைகளில் நகை தவழ மறுபடியும் தொடர்ந்தார். ''பணம் வேண்டுமா பணம் நீங்கள் இருவரும் துரும்பாக உழைத்து நூற்றைம்பது ரூபா சம்பாதிக்க மாட்டீர்கள். மாதம் ஐந்நூறு, ஆயிரம் எனச் சம்பளம் பெறுபவர்கள் சந்தோஷமாகவா இருக்கிறார்கள்?''

நான் பேச வாயெடுத்தேன். அவர் விடாமற் தொடர்ந்தார். ''உங்கள் இஷ்டப்படியே நீங்கள் இருவரும் இணைந்து விடுகிறீர்கள் என வைத்துக் கொள்வோம், உங்கள் இருவருக்கும் வேறு, வேறு இடங்களில் உத்தியோக மாகிவிட்டால் ......உங்களை நினைந்து அவள் உருக. அவளை நினைந்து நீங்கள் கசிய ..... அப்பாடா வேண்டாம், வேண்டாம்...... அது போகட்டுமே. அவள் போகுமிடமெல்லாம் அல்லிராட்சியமாகவா இருக்கும். ஆசிரியத் தொழிலிலே எத்தனையோ ஆடவரோடு அண்டிப்பழக வேண்டிவரும். அப்படி இருக்கையில் உங்களிடையே சிறிது சந்தேகம் தோன்றிவிட்டால்....

நான் சொல்லவில்லை நீங்கள் சந்தேகிப்பீர்கள் என்று.... அப்போ பார்க்க வேண்டுமே.....?

''போதும் போதும்; இருவருக்கும் வேறு வேறு பாடசாலைதானா கிடைக்கவேண்டும்'' இது ஆக்ரோஷத்தோடு இடைமறித்து நான் கேட்டேன் கேள்வி. அவர் மறுபடியும் தொடர்ந்தார்.

''ஒன்றாகத்தான் கிடைக்கிறது என்றிருக்கட்டும். பாடசாலை முடிந்ததும் இருவரும் அலுத்துக் களைத்து வீட்டுக்கு வருகிறீர்கள். ஆயாசம் மேலிட நீர் ''கொஞ்சந் தண்ணிதா'' என்பீர் அவளை, அவளும் அலுப்படைந்து வந்தவள்தானே, அந்த அலுப்பினால் ''போய் எடுத்துக் குடியுங்கள்'' என்பாள். முதலில் ''மனைவி எனக்கு அமைச்சலாயில்லையே என்ற ஓர் மனக்குறை உங்களுக்கு. அது வளர்ந்து ஓர் மனக்கசப்பு.... அதுவும் வளர்ந்தால்.... ஆம். கரும்பாயிருந்த மனைவி வேம்பாகி விடுவாள். பாவம்! இருவரிலும் பிழையில்லை.

நீங்கள் மனைவியிடமிருந்து அன்பு, ஆதரவு, பொறுமை, கீழ்ப்படிவு இவைகளை எதிர்பார்ப்பீர்கள். நீங்கள் மட்டுமல்ல, ஆண்கள் எல்லோரும் எதிர்பார்ப்பது இவைகளைத்தான், அவள்... உங்களோடு சரிநிகர் சமான மானவள்.... நான் எந்தவிதத்திலும் இவருக்கு குறைவில்லையே என எண்ணுவாள். உங்கள் இருவர் மனோபாவமும் இரு எதிர்த்த முனைகளை நோக்கியிருக்கும். இந்த மனோபாவம் வளர வளர நீங்கள் ஒன்று சொன்னால் அவள் ஒன்பது சொல்வாள். ''தடிக்கழுதை'', ''முட்டாள்'', ''எருமை'' என்பீர்கள். நீங்கள் ஆசிரியரல்லவா? அகராதி தெரியுமல்லவா உங்களுக்கு? ''இந்த எருமைக்கு நீங்கள் ஒன்றும் உழைத்துப்போடத் தேவையில்லை என்பாள்'' அவள். ''வாயைப் பாரு..'' என்பீர்கள் நீங்கள். ''வாய்க்கென்ன'' என்பாள் அவள். இப்படியாகத் தொடர்ந்தால்... எண்ணிப் பாருங்கள் உங்கள் இன்ப வாழ்க்கை...

எனக்கு அவர் அதிகப் பிரசங்கித்தனத்தைக் கேட்கப் பிடிக்கவில்லை. வேண்டாவெறுப்புடன் கேட்டேன் நான். அவரும் விடாப்பிடியாகத் தொடர்ந்தார்.

''உங்கள் படித்த மனைவி தாகூரின் ''புயலில்'' ரசமான கட்டத்தை வாசித்துக் கொண்டிருக்க, உங்கள் மூத்த மகன் மடியிலேறி வீழ்ந்து அவள் வாசிப்பைக் குழப்ப, அவள் அவன் முதுகில் இரண்டு போட அதைச் சகித்துக் கொள்ள வேண்டியது உங்கள் இன்ப வாழ்க்கை. அம்மாவை நன்றாகத் தெரியாத இளைய மகனை நீங்கள் வேலைக்காரியிடமிருந்து

ஆவலுடன் வாங்க, வீட்டினுள் தைத்துக்கொண்டிருந்த உம் சகதர்மிணி சன்னல் வழியாக அதைக் கண்டு ''வேலைக்காரியுடன் என்ன பேச்சு? என்று விபரீதமாக விளங்கிக் கோபிக்க, அவள் கோபத்தை சகித்துக்கொள்ள வேண்டியது உங்கள் இன்ப வாழ்க்கை. அவள் வசவுகளை வாங்கிக் கொண்ட நீங்கள் அடுத்த நாள் பாடசாலைக்குப் போனதும் ''பாடக்குறிப்பு எழுதவில்லையா? என அதிகாரத் தொனியோடு அவளைக் கேட்க, குறிப்பு எழுதாமற் படிப்பிக்க முடியாதா? என அவள் பதிலுக்கு உங்களைக் கேட்க, இந்த அலங்கோலத்தைக் கண்டு மற்ற ஆசிரியர்கள் சிரிக்க, அதைப் பொறுத்துக் கொள்ளவேண்டியதுதான் தங்கள் இன்பவாழ்க்கை, சரஸ்வதியை இத்தகைய வாழ்க்கைக்குப் பங்காக்கத்தானா நீங்கள் இவ்வளவு தூரம் வந்துவிட்டீர்கள்? பணம் என்கிற கோணற் தராசில் வாழ்க்கையை அளவிட்டு மணம் செய்துகொள்ள அனுமதியா கேட்கிறீர் கள்? தயவுசெய்து சிறிது சிந்தியுங்கள், நான் சொல்வது சரியா பிழையா, என்று சிந்தனையின் பின் சொல்லுங்கள் ''சரஸ்வதி வேணுமா என்று? இப்படிச்சொல்லி நிறுத்தினார் அவர்.

எனக்கு அங்கு நிற்கவே பிடிக்கவில்லை. ''யோசித்துச் சொல்லுகி றேன்'' எனச் சொல்லிவிட்டு வந்தேன். என்ன யோசித்தும் என்ன? என் மனத்தராசுதான் கோணிக்கொண்டு சரஸ்வதி பக்கமே இழுக்கிறது. நீங்கள் சொல்லுங்கள். எனக்கு சரஸ்வதி வேண்டுமா, வேண்டாமா என்று.

# அவள்

*சமூகமென்னும் நாகம் அவள் வாழ்வில் விதவையென்ற விஷத்தைச் செலுத்தியது. அதை அமிர்தம் என்னும் சஞ்சீவி கரைக்கத் தொடங்கியதும் அவள் எழுந்து நடக்கத் தொடங்கினால். ஆனால் மீண்டும் அவள் வாழ்வை...?*

வானத்திலே நிலவு ஊர்வதுபோல் அவள் நடந்தாள்.

வெண்ணிலாவைச் சுருள் பிரித்துச் சுற்றியதுபோல அவள் உடம்பில் வெள்ளைச் சீலை!

அந்த மோன இரவிலே அவள் பின்னுக்கு நாதஸ்வரக் கத்தலும் தவுலின் பரிதாபக் கூக்குரலும்தான் வந்தன!

அவள் நடந்த பாதை முன்னுக்கு நீண்டு சென்று தொலைவில் வானத்துடன் கலக்கிறது! அந்த நிலவின் வெண்மையிலே அந்த வெள்ளிப் பாதை ஸ்வர்க்கத்திற்குப் போக கந்தர்வர்கள் விரித்த வெண்விரிப்புப் போன்று நீண்டு கிடக்கிறது!

அவள் நடந்தாள்; பின்னால் திரும்பிப் பாராமலேயே நடந்தாள்.

அவள் உடம்பில் வெண்ணிலவைப் பிரித்தது போல வெண்சீலை.

அவள் விதவை.

அவள் விதவையாகப் பிறக்கவில்லை!

காலம் அவளைக் கன்னியாக்கிற்று!!

எழில் மிக்க குமரியாக்கிற்று!!!

கர்வமுள்ள மனைவியாக்கிற்று!!

ஆனால், சமூகம் அவளை விதவையாக்கி வேடிக்கை பார்த்தது!!.. சமூகம் அவளுக்கு வெள்ளைச் சீலை உடுத்திப் பாழ் நெற்றியாக்கி அந்த ஆளை விழுங்கும் கண்களிலே ஏக்கத்தைப் புகுத்தி அழகு பார்த்தது!

என்றோ ஒருநாள் அவளுக்கு விவாகம்.

என்றோ ஒருநாள் அவள் மனைவி.

அன்று சமூகம் அவள் அழகுக்கு அடிமை.

இன்று அவள் விதவை,

சமூகத்தின் வாயில் அவள் ''முண்டச்சி''.

அவள் விவாகத்துக்கு முன்னால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாதே என்று ஏங்கியவர்களுள் ராமசாமியும் ஒருவன்.

அவள் ஆண்டிச்சி,

இவன் முதலியார்.

ராமசாமிக்குப் பொறுப்பான வேலை ஒன்றும் இருந்தது இல்லை. வேளாவேளைக்குச் சாப்பிட்டு விட்டு நிம்மதியாக சுற்றிக்கொண்டு ஊர்ச் சண்டையை விலைக்கு வாங்குவதும் கள்ளுக்கடையில் காலத்தைக் கழிப்பதும்தான் அவன் தொழிலாக இருந்தது. அவள் விதவையான பின்பு தன் வயிற்றுக்குத் தானே சம்பாதிக்க வேண்டிய நிலைக்கு வந்து விட்டாள்.

அவளுக்குத் தெரிந்த அடுப்பங்கரைத் தொழில்தான் அவள் ஜீவனத் திற்கும் வழி காண்பித்தது. கள்ளுக்கடையில் கார வடையும் மற்ற சாமான் களும் விற்கும் வியாபாரத்தை ஆரம்பித்தாள்.

நாளடைவில் ராமசாமியும் கள் விற்பனைக்காரனாகவே மாறி விட்டான்.

ஆக இவளுக்கு அவன் துணை, அவனுக்கு இவள் கண்ணுக்கு விருந்து. வெறும் பேச்சு முற்றி அன்புப் பேச்சாக மாறிற்று.

சும்மா ஒரு வடை, அப்படி கொஞ்சம் சுண்டல் என்பது போய் இப்போது ராமசாமிக்கு சாப்பாடு சின்னம்மா வீட்டிலிருந்துதான்.

கடையில் ஆரம்பித்த காதல் வீட்டில் வந்துதானே நிற்கவேண்டும்! ஊரில் தனி வீடு வாங்கி ராமசாமியும் சின்னம்மாளும் விவாகமாகாத தம்பதிகளாக வாழ்க்கை ஆரம்பித்தார்கள்! அவள் இப்போது வெறுங் கழுத்துக்காரிதான். ஆனால் உடம்பில் சாயப்புடவை ஏறத்துவங்கி விட்டது.

ராமசாமியின் ''வைப்பு'' என்று பேரும் வாங்கிவிட்டாள்.

ஆனால் சமூகம் தூங்கிக்கொண்டிருக்கவில்லை. ஒரு நாள் முதலி யார்கள் எல்லாம் தரியைவிட்டு எழுந்தார்கள். துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டார்கள். நேராக மாரியம்மன் கோவிலுக்குள் வந்து சப்பணம் கட்டி உட்கார்ந்து கொண்டார்கள். பேசினார்கள், கத்தினார்கள், முடிவிற்கு வந்தார்கள்.

ராமசாமி முதலி ஆண்டிச்சியை வைத்துக் கொண்டிருப்பதால் ஜாதியை விட்டுத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறான் என்று தீர்ப்புச் சொன்னார்கள்.

நாட்டாமைக்கார நாராயண முதலியார் சலவை செய்பவனுக்கும் நாவிதனுக்கும் ஆள் விட்டார். ராமசாமி முதலியின் வேஷ்டி துண்டு, சட்டை முதலியவைகள் அழுக்காகவே இருக்க வேண்டுமென்பதும் அவன் தலையிலும் முகத்திலும் மயிர்களாக வளர்ந்துகிடக்க வேண்டு

மென்பதும் தங்கள் ஜாதியின் ஆசையென்றார். அதனால் நீங்கள் அவனுக்கு வெளுக்கக் கூடாது, சிரைக்கக் கூடாது என்று சட்டம் போட்டார். வீட்டுக் காரக் கவுண்டரிடம் தானே சென்றார். ''ராமசாமி முதலி செய்யும் அக்கிர மத்தை பார்த்தீங்களா?'' என்று ஒரு குரல் கதறினார். ''அவனை ஊரில் வைத்திருப்பது உங்களுக்கெல்லாம் அழகா'' என்று குத்திக்காட்டினார்.

கவுண்டரும் அவனை ஊரைவிட்டு விரட்டும் கைங்கரியத்தில் தமது பங்கை உடனே ஒத்துக்கொண்டார்.

இப்படியாகத்தானே ஸ்ரீமான் ராமசாமி முதலியார் பழையபடி ராம சாமியாக மாறி மாஜி விதவை சின்னம்மாளுடன் அடுத்த ஊரின் கோடி யிலே தனிக்குடிசை கட்டிக் குடித்தனம் போட்டார். அவன் ஜாதியைப் பற்றி வருந்தவில்லை. தலைமயிரைப் பற்றிக் கவலைப்படவில்லை. சின்னம்மா துவைத்துப்போட்ட சன்லைட்டால் வெளுக்கப்பட்ட தூயதான ஆடைகளை அணிந்து கொண்டு என்றும் போலவே நிமிர்ந்த தலையுடன் தன் வியாபாரத்தைக் கவனித்து வந்தான்.

எல்லாம் இப்படியே அழகாக நடந்துவந்திருக்கலாம். அதற்குள் யுத்தம் வந்து தொலைத்தது. ஜனங்கள் கையில் காசு அதிகமாக கள்ளுக் கடையில் பணம் விளையாடிற்று. குத்தகைக்காரக் கவுண்டருக்குக் கொடுக்க வேண்டியது போக ராமசாமிக்கு நல்ல தொகை கையில் மிச்சமாயிற்று. இது நம் நாட்டாண்மைக்கார நாராயண முதலியாரின் கவனத்தையும் கவர்ந்து வந்தது.

கொஞ்ச நாள் சென்றது. கள்ளுக்கடை ராமசாமி முதலி நாட்டாண்மைக் கார நாராயண முதலியாரின் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள சப் ரெஜிட்டார் ஆபீஸில் நின்றுகொண்டிருக்கிறான். கூட பக்கத்தூர் பண்ணாடிக் கவுண்டரும் வேறொரு கவுண்டரும் இருக்கிறார்கள். விஷயம் என்ன வேறொன்றுமில்லை. ராமசாமி முதலி அடுத்த ஊரில் விலைக்கு வந்த ஒரு தோட்டத்தை வாங்கிவிட்டான். அவ்வளவுதான் கிரயம் இன்று. நாட்டாண்மைக்கார நாராயண முதலியார் நடுங்கினார்? ''அட நம்ம ராமசாமி தோட்டம் வாங்கிப் போட்டானா! அவ ஏதாவது புள்ளை குட்டி பெத்து வச்சா அதுக்கில்ல போயிரும் இது''. நாராயண முதலியாரின் கவலை தீவிரமாக வேலை செய்தது. நழுவிய மீனை மறுபடியும் வலையில பிடிக்கவேண்டும். யோசனையுடன் மீசையைத் தடவி விட்டுக்கொண்டே நடந்தார்.

அந்தரங்க ஆலோசனையில் தம் தம்பி மகளை ராமசாமி முதலிக்கு கட்டிவைத்து தமக்குள் இழுத்துக்கொள்வது என்னும் முடிவுக்கு வந்தார். ஆமாம்; ஜாதி?

அடடா ஜாதிக்கென்ன; ஒரு கூட்டத்தைப் போட்டு பட்டக்காரரைக் கூப்பிட்டு தண்ணி தெளிச்சா தீர்ந்தது!

ஜாதியை விட்டு விரட்டுவதும் மறுபடி ஜாதியைக் கொடுப்பதும் பட்டக்காரர் நாட்டாமைக்காரர் இவர்களின் சிருஷ்டி அழிவு கைங்கரி யங்கள்தானே!

மனதிலே உருவாகிய இந்த யோசனை நடைமுறைக்கு வரவேண்டும். ராமசாமி அழுத்தக்காரன். லேசில் வழிக்கு வரமாட்டான். இதற்கு என்ன செய்வது? அவனுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டன.

கருப்ப நாவிதன் ஒருநாள் காலையிலே ராமசாமி முதலியின் வீட்டுக்கு விஷயம் செய்து அவனுக்கு குனிந்து கும்பிடு போட்டுக் கவுரவித்தான்.

அத்துடன் இவ்வளவு நாட்களாக தன்னை ஏமாற்றியதற்காக அன்று ராமசாமியின் முகத்தையும் தலையையும் தோலையும் மட்டும் விட்டு விட்டு மழுங்க அடித்தான்.

"ஒங்க பீடை போச்சுன்னு போயி முழுக்குப் போடுங்க சாமி" என்று உபதேசித்தான்.

சலவை செய்பவன் வந்தான். சலவை மடிப்பும் வந்தது. தோட்டு செல்வன் கைத்தடியை கக்கத்தில் இடுக்கிக்கொண்டு இடுப்பு வளய "சாமி" என்று குழைந்து கும்பிட்டான்.

அவன் கொஞ்சம் கொஞ்சமாக முதலியாராக மாறி வந்தான்.

எங்கெல்லாமோ நடந்த கல்யாணம் காச்சிக்கெல்லாம் அழைப்பு வந்தது. போன பக்கத்தில் இவனுக்கு ஒரு தோட்ட முதலாளி என்னும் தோரணையில் மரியாதையும் உபசரிப்பும் கிடைத்தன.

ராமசாமியின் தலை சுழன்றது.

இதெல்லாம் எதன் ஆரம்பம் என்று அவனுக்கு விளங்கவில்லை. அதை விளங்க வைக்கும் திருப்பணியை மேற்கொண்டு நாராயண முதலியார் ஒருநாள் கள்ளுக்கடைக்கே பிரசன்னமானார்.

"என்னாங்க மாப்பிள்ளை சவுக்கியங்களா" என்ற குரல் கேட்டு நிமிர்ந்த ராமசாமிக்கு தூக்கிவாரிப் போட்டது. என்ன? நாராயண

முதலியாரா? நம்மை ஜாதியை விட்டு ஊரைவிட்டுத் துரத்திய அதே மகானுபாவனா ''மாப்பிள்ளை'' என்று வாய்நிறைய அழைக்கிறார். அவனுக்கு நிலைகொள்ளவில்லை:

நாத்தடுமாற ''வாங்க மாமா உட்காருங்க'' என்றான்,

நாராயண முதலியார் தமது கம்பீரமான பாணியில் ''பரவால்லிங்க மாப்பிள்ளை'' என்று சொல்லிக் கொண்டே கல்லாப்பெட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.

தமது பிரயோகங்களை ஒவ்வொன்றாக ஆரம்பித்தார்.

அவன் ஜாதியைவிட்டு நீங்கி இருப்பதால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், அவன் நிலையில் ஏற்பட்டுள்ள அகௌரவம், அவன் ஜாதியாருக்கு வந்துள்ள தலைகுனிவு இவற்றையெல்லாம் ஒருவிதமாக எடுத்தோதி விட்டுக் கடைசியாக ''என்னங்க மாப்பிள்ளை, நாஞ்சொல்றதெல்லாம் இதானுங்க, அந்த முண்டச்சி சாவகாசம் ஒங்களுக்கு வாண்டாம். அவளை அடிச்சு தொறத்திப்பிடுங்க. பழயபடியும் நம்ம ஊட்டோட வாசலோட நீங்க வந்திருக்கணும். அப்புறம் நம்ப புள்ளையையே உங்களுக்கு கட்டிக் குடுக்கிறேன். நல்லா யோசிச்சுப் பாருங்கள்'' என்று சொல்லிவிட்டு நடந்தார். நாள் கணக்காக யோசிக்கும் வேலை ஏற்படவில்லை. இவ்வளவு நாள் விட்டுப்பிரிந்திருக்க இந்த சுகங்களை மீண்டும் இழக்க மனமில்லை ராமசாமிக்கு. தவிரவும் சின்னம்மாளும் பழகிய பாலாகிவிட்டாள்.

புளிக்க தொடங்கியது, எட்ட இருந்த புதுப் பழத்தைக் கண்ட உடனே தின்ன தீர்மானித்துவிட்டான்! மீண்டும் ஜாதிக் கூட்டுக்குள் புகுந்து பத்திரமாக இருந்து கொள்ள முடிவுக்கு வந்தான்! ஆனால் சின்னம்மாளை துரத்திவிடுவது என்பது மட்டும் அவ்வளவு சுலபமாக அவனுக்கு தோன்ற வில்லை. அது முடியவும் முடியாது என்று எண்ணினான். இதே முடிவை நாட்டாண்மைக்காரருக்கும் தெரிவித்துவிட்டான்.

அவரும் ''அட சரி'' அப்படியே எலைமறவு காய் மறவா இருந்தா ஆரு வேண்டாங்கருங்க ஊரிலே ஆருதான் பத்தினி; அதுக்காகக் கழுத் திலே கோத்திட்டுத் திரிய வேண்டாமுன்னுதான் நாஞ்சொல்லுகிறேன்'' என்றார். இப்படியாகயெல்லாம் சுலபமாக நடக்க ஏற்பாடுகள் மும்முரமாகச் செய்யப்பட்டன.

ஊர் வதந்திகளால் ஒருவாறாக சின்னம்மாளும் விஷயத்தைத் தெரிந்து வைத்திருந்தாள். தானே கேட்பதால் பிடிப்பு நழுவிடும் என்று அவளுக்குத் தெரிந்து அவளே சொல்லட்டும் என்று காத்திருந்தான். அவள் துக்கம்

உதட்டை விட்டு வெளிவரவில்லை. கலகலப்பாகப் பேசிப்பழகும் ராம சாமியும் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுவிட்டு உடனே வீட்டை விட்டுப் போய்விடுவது வழக்கமாகிவிட்டது. எப்படியோ மென்று விழுங்கிக்கொண்டு ஒருநாள் சொல்லியே விட்டான்.

அவளுக்கு அடக்கி வைத்திருந்த துக்கம் அவ்வளவும் ஆறாப் பெருகிற்று. ''எப்படியோ நீ நல்லாயிருந்தாச் சரி'' என்று பெண்மையின் பெருமிதத்துடன் கூறிவிட்டாள்.

''அட, ஏன் குடிமுழுகிப் போயிட்டாப்பலே அழுகறெ? நானென்ன உன்னை உட்டறப்போறனா நீயும் அவகூட இருந்திட்டாப் போச்சு!'' என்று சப்பைக் கட்டு கட்டினான் அவன்.

அவள் ஒன்றும் பேசவில்லை. முந்தானையால் வாயை மூடிக்கொண்டு தண்ணீருக்குப் போய் விட்டாள். அடுத்த நாள் காலை முகூர்த்தம். ராமசாமி முதலி கல்யாண ஜவுளி எல்லாம் டவுணிலிருந்து வாங்கி வந்து சேர்த்து விட்டான். சின்னம்மா அவைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். மணப்பெண்ணுக்குப் பட்டுச்சேலை அவனுக்குப் பட்டு வேஸ்டி துண்டு.

ஆமாம் அவளுக்கு? எல்லாத் துணிகளுக்கும் கீழே இருந்தது அவளுக்கு அழகான மேட்டூர் மல் சேலை ஒன்று! சின்னம்மா தலையில் ஆயிரம் இடிகள் சேர்ந்து இடித்தது போல் நிலைகுலைந்து உட்கார்ந்தாள்.

அவள் கரங்களில் அந்த வெண் சீலை. அதையும் கொடியில் கிடக்கும் அவனது பழைய அன்புப் பரிசுகளான சாயச்சேலைகளையும் கண்கள் மாறி மாறிப் பார்த்தன. ஆமாம் அவள் பழைய கருப்பியே கருப்பிதான். புதிதாக ஒரு சுமங்கலி வருகிறாள்.

இவள் மீண்டும் விதவையேதான். இதை ராமசாமி இந்த விதமாக நிர்ணயித்துவிட்டதைக் காணக் காண சின்னம்மாளுக்கு நெஞ்சு வெடித்தது.

விம்மி விம்மி அழுதாள். நிதானமாக எல்லாவற்றையும் மூட்டை கட்டினாள். அந்த மல் சீலையைப் பிரித்து உடுத்துக்கொண்டாள். வீட்டை விட்டு வெளிவந்து நாதாங்கியைப் போட்டு விட்டு அந்த நீண்ட பாதையில் தன் நடையை எட்டிப்போட்டாள்.

மாப்பிள்ளை அழைப்புக்கு நாதஸ்வரமும் தவிலும் அங்கிருந்து வந்துகொண்டிருக்கும் சப்தம் மட்டும் கேட்கிறது. அவள் போய்க் கொண்டிருந்தாள். அவள் உடம்பில் நிலவைப் பிரித்துச் சுற்றியது போல் வெண்சீலை. அவள் மீண்டும் விதவை!

# நோட்டுப் பணம்

ரகுநாதன்

''டங்.....டங்.......டங்.......''

உறங்கிக் கிடந்த அந்த மௌன இரவின் அமைதியைக் கிழித்துப் பயங்கர ஓசை அலைகளை சிதறிக் கொண்டு வெகு தூரத்திற்கப்பாலுள்ள மாதா கோவில் மணிக்கூண்டு மணி 10 அடித்து ஓய்ந்தது.

டாக்டர் ஜீவரட்சகனுக்கு இன்னும் தூக்கம் வரவில்லை. பஞ்சணை அவருக்குப் பலனளிக்கவில்லை. நித்திரா தேவி அவரை வஞ்சித்து விட்டாள் போலும்!.

அவர் இன்னும் படுக்கையில் புரண்டு கொண்டேயிருக்கிறார். அன்று பகல் நடந்த ஒரு சம்பவத்திற்கு விளக்கம் தேடி அவர் மனம் அலைந்தது. அந்தப் ''புரியாத புதிர்'' அவர் சிந்தனையைக் குழப்பியடித்ததோடு மட்டுமல்லாமல் பயத்தையும் ஊட்டியது.

திடீரென்று அவர் மனக்கண் முன்னே அந்த மனுஷ்யரின் உருவம் தெரிகிறது. பட்டு ஜிப்பா மணிக்கட்டுக் கைவரை புரள பெரிய மடிப்புக் கரை மேலுத்தரியம் மார்பிலே தவழுகிறது. வண்டியும் தொந்தியுமாக ஆசாமி பெரிய மனுஷர்தான்! ஆனால்....? வாடிவதங்கிய முகம். அவர் கண்களிலிருந்து இரண்டு நீர் வீழ்ச்சிகள். நாத் தடுமாறுகிறது, குரல் கம்முகிறது. விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே அவர் பேசிய வார்த்தைகள் கேட்கிறது.

ஸார்! இது என் ஒரே பொண்ணுங்க. அதிர்ஷ்டமில்லாக் குழந்தை! நாலு வயசாயிருக்கும் போதே அவ அம்மா போயிட்டா ....இத்தனை காலமும் எவ்வளவு அன்பாய் வளர்த்து நாளும் நட்சத்திரமுமாய்ப் பார்த்து ஒரு ஆம்படையான் கையிலே கொடுத்தேன்.....அது இப்போது கர்ப்பிணி ஸார்! பத்தாவது மாதம்!.... பிறக்கிற குழந்தை தாய்க்கு எமனாம், ஸார்! குழந்தை உயிரோடே இருந்தால் தாய் சாவுமாம். என் பொண்ணை நீங்கதான் காப்பாத்தனும் ஸார்.

..........................

சிந்தனை கலைந்து ஒரு காட்சி தெரிகிறது. நின்று கொண்டிருக்கும் ஒரு ''பியூக்'' மோட்டாருக்குள் ஆயாசத்துடன் ஒரு பெண் சாய்ந்து

கிடக்கிறாள். அவள் முகம் வெளிறிக் கிடக்கிறது. துக்கச்சாயல் நர்த்தனம் புரிகிறது.

காட்சி மறைகிறது. டாக்டர் தன் சிந்தனையைத் திருப்பிக் கொள்கிறார். அது சுழல்கிறது.

''பாவம், பொண்ணு மேலே அவருக்கு உயிர் போலயிருக்கு, இல்லா விட்டால் இப்படி எண்ணுவாரா.....? குழந்தையைக் கொன்று விட்டால் பொண்ணு தப்பிவிடுவாளாம்..... யாராவது அறிந்தால்....?

அவர் உடல் பயத்தால் வியர்த்தது. விளக்கம் தேடியலைந்த அவர் மனத்திரையில் ஒரு ராச்சச கேள்வியடையாளம் குத்திட்டு நின்றது.....?

எழுந்து லைட்டைப் பொருத்திவிட்டு மேசையருகில் வந்து உட்கார்ந்தார். விரிந்து கிடந்த ஒரு ஆங்கிலக் கவி நூலில் அவர் பார்வை வட்டமிட்டது. மிகச் சிறிய எழுத்து லைட்டும் ''டிம்'' பண்ணியது. எழுத்து ஓடவில்லை. புத்தகத்தைத் தூக்கி முகத்துக்கருகே பிடித்துப் பார்த்தார்... ஊ ஹு ம்!

எழுந்து ''கோட் ஸ்டாண்ட்'' இருக்குமிடத்துக்குப் போனார். கோட் பைக்குள் கையை வைத்து எதையோ துளாவினார். அவர் தேடிய ''ஸெஸ் பிரேம் கண்ணாடி'' அதற்குள் இல்லை, கையோடு ஒரு கரகரப்பான காகிதத் துண்டு வெளியேறியது. வெறும் கடதாசியல்ல அந்தப் பொருள் நூறு ரூபா நோட்டு!

நடக்கப்போகும் ஒரு சதிச் செயலுக்கு அந்த ஆசாமி தந்த ''அட்வான்சு''. இப்போது அவருக்குக் கண்ணாடி தேவைப்படவில்லை. அதை மறக்கடித்து விட்டது இந்த நோட்டுப் பணம்! கைக்குள்ளடங்கியதாலேற்பட்ட சுருக்கங்களை அழுத்திக்கொண்டு மேசையடிக்குத் திரும்பினார்.

அந்த நோட்டுப்பணத்தை மேசை மீது வைத்து அதைக் காற்றடித்துக் கொண்டு போகாமல் ஒரு ''பேப்பர் வெயிட்''டை அதன்மேல் வைத்தார். பளிங்கினாற் செய்யப்பட்டது அந்தப் ''பேப்பர் வெயிட்''.

அவருக்கு இப்போது வேண்டிக் கிடந்தது ஒரு வெள்ளைச் சுருட்டு! எங்கெல்லாமோ தேடி ஒரு ''சாம்பியன்'' சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார்.

சிகரெட்டிலிருந்து வெளிப்பட்டுச் சுருள் சுருளாக கிளம்பி மேலே செல்லும் சிறு சிறு மேகமண்டலங்களுடன் அவர் உள்ளமும் உயர்ந்து கொண்டே போயிற்று. திடீரென்று அவர் அந்த நோட்டுப் பணத்தை நோக்கினார். அடாஹ்! என்ன ஆச்சரியம்!

அந்த நோட்டுப் பணத்தின் மேலிருந்த பளிங்கினூடே ஒரு காட்சி தெரிந்தது. நோட்டிலுள்ள வர்ணக் கோடுகள் சித்திரங்கள், பளிங்கின் உதவியால் ஒருங்கு சேரும்போது ஏற்பட்ட காட்சி அது! திரையில் சுழலும் படம்போல நகருகிறது ஒரு சித்திரம். வானளாவி வளர்ந்த ஒரு தென்னந் தோப்பின் மேற்பாகம் காட்டப்படுகிறது. தொடர்ந்து மனதை ஈர்க்கும் இளநீர்க் குரும்பைகள், தென்றலில் சலசலக்கும் ஓலைகள் - வரண்டு காட்சியளிக்கும் பனைகள், அதன் மட்டைகளுக்கிடையே மண்டிக்கிடக்கும் நுங்குகள் சுற்றிச் சுழல்கின்றன.

தனியே ஒரு பனை மரம்!.... அதன் பாளைகளில் முட்டிகள் கட்டப் பட்டிருக்கின்றன. காட்சி கீழே இலங்குகின்றது. அதே பனையிலிருந்து ஒரு மரமேறும் தொழிலாளி இறங்கிக் கொண்டிருக்கிறான். அவன் பின்பக்கத்தில் ஒரு முட்டி தொங்கிக் கொண்டிருக்கின்றது.

கீழே ஒரு பெண். அவள் முகத்தில் இன்ப நிலவு வழிகிறது. கையிலே ஒரு டம்ளர். ''ஏய் ராமு! நேற்று தந்தாயே பதநீர் என்ன அருமையாக இருந்தது'' குழைந்தது அவள் குரல்.

''உன் குரலின் இனிமையை விடவா?'' அரும்பு மீசை வாலிபன் இப்படி ''காதல் விளக்கம்'' செய்தான்.

குழிந்தது அவள் கண்ணாடிக் கன்னம்.

அவன் தொடர்ந்தான்.

''வேண்டுமானால் எப்போதுமே தருவேனே''

அவள் சிரித்தாள்.

''அதற்குப் பெறுமானம்''?

இது போதாதா?

அவள் தலை குனிகிறது.

அவள் கையிலிருந்த டம்ளரை வாங்கி முட்டியிலிருந்து ஊற்றுகிறான் அவன். காட்சியை இருள் கௌவுகிறது.

திரையிலே ஒரு கலண்டர் காணப்படுகிறது. கடகட வென்று சில திகதி தாள்கள் உதிர்ந்து போகின்றன. நாட்கள் பல ஓடிவிட்டன என்பதைக் குறித்தது போலும் அக்காட்சி!.

தொடர்ந்து காமிராவின் மாயா ஜாலங்களில் காதலர் - ராமு - கமலா - சந்திப்புக் காட்சிகளில் அழகான பகுதிகள் அகப்பட்டு அசைந்தோடு கின்றன. அழகான ஒரு பூஞ்சோலை. அதன் நடுவே ஒரு கள்ளறையில்

ராமு உட்கார்ந்திருக்கிறான். அவன் முகம் எதையோ ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் காட்டுகிறது.

அவன் பின்னே அவள் வருகிறாள். அடிமேலடி வைத்து அன்ன நடை! சிரிப்பு அவள் முகத்தில் பொருமுகிறது. அவள் கண்களைப் பொத்துகிறாள். திடுக்கிட்ட ராமு அவசரமாக அவள் கைகளை விடுவித்துக் கொண்டு திரும்பிப் பார்க்கிறான். 'கல கல' என்று அவள் சிரிப்பொலியில் பூஞ்சோலை அதிர்கிறது. 'டபக்' கென்று காட்சி கர்ணமிடுகிறது. அனல் கக்கும் கண்கள், துடிக்கும் மீசை இவற்றுடன் ஒருவர் காட்சியளிக்கிறார். அவர் அருகே அந்தப் பெண் கமலா பயபக்தியுடன் தலையைக் குனிந்தபடி நின்று கொண்டிருக்கிறாள். அவர் உறுமல் காதைக் குடைகிறது.

''நமது ஜாதி என்ன, அந்தஸ்தென்ன எல்லாவற்றையும் மறந்து ஒரு மரமேறியுடன் சல்லாபமா?..........''

''பாவம்! தாயில்லாக் குழந்தை என்று எண்ணி உன் விருப்பம்போல விட்டபடியால் இப்படி நடந்து கொண்டாயா?

..............................................

எதையுமே கண்டிக்காமல் விட்டுக்கொடுத்தது என்மேல்தான் தப்பு ஆமா!''

..............................................

''அட அதுதான் ஒசந்த வீட்டுப் பிள்ளை. தெரிந்தோ தெரியாமலோ நடந்து கொண்டால் இந்த எளியவனுக்குத்தான் என்னமதி? நம்மவீட்டு முத்தத்திலே மிதிக்க அருகதையில்லா நாய்.

..............................................

இவ ரொம்பப் படித்திட்டாவாம். எனக்குப் படிப்பிக்கிறா. சாதியில் லியாம். சாத்திரம் ஏமாத்தாம்!

''ஏடி கமலா! போடி உள்ளே இனிமேல் அடக்களைப் பிப்புறம் தலையை நீட்டினாயோ அது பிறகு தெரியும் ஆமா''. கமலா உள்ளே போகிறாள்.

அவர் மேலும் பேசுவது கேட்கிறது. ''நெருப்புடன் விளையாடுகிறது இந்தப் பஞ்சு, பார்த்துக் கொள்கிறேன் இந்தப் பதரை!''

மறுபடியும் அந்தப் பெரிய மனுஷர் பரமானந்தம் பிள்ளையின் வெற்றிச் சிரிப்போடு காட்சி திடீரெனத் திரும்புகிறது.

''தொலைந்தது அந்தத் தொல்லை! இனி மறுகாரியம் பார்க்க வேண்டியது தான்!'' மேள வாத்தியங்களுடன் ஒரு கலியாணக் காட்சியைப் பார்க்கிறார்

டாக்டர் ஜீவரட்சகன். வாழைகள், கமுகுகள், தோரணங்கள், வர்ணக் கடதாசிகள் அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன.

பிராமணர் ஓமம் வளர்த்துக் கொண்டிருக்கிறார். மனையில் கமலாவும் ஒரு வாலிபனும் இருக்கிறார்கள். கமலாவின் தந்தை பரமானந்தம்பிள்ளை கம்பீரமாக வீற்றிருக்கிறார்.... தூரத்தில் நடைபெறும் காட்சி ஒன்றும் இடையே வந்து புகுந்து மறைகிறது.

ஒரு வழக்கு மன்றம்! குற்றவாளிக் கூண்டுலே ராமு வாடி வதங்கிய முகத்துடன் நிற்கிறான். ஒரு வழக்கறிஞர் எழுந்து நின்று கேள்விப் பாணங்களையடுக்குகிறார். அவர் முகத்தில் வெற்றிப் புன்னகை முகாம் இடுகிறது.

இந்தக் காட்சிதான் அது!

திடீரென்று வாத்திய குழாம் காதைத் துளைக்கிறது. பிராமணர் எழுந்து பலமாக ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார்.

கமலாவின் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறுகிறது. திரையின் மேலே ஒரு வட்டத்தில் ராமுவின் கரங்களில் விலங்கு மாட்டப்படுகிறது.

காட்சி மாறுகிறது.

வீதியில் இருவர் பேசிக்கொண்டு போகிறார்கள் ''திருட்டுப் பயல்! தின்ற வீட்டுக்கே இரண்டகம் செய்தால்?

பட்டணத்திலே அவன் ஒரு பாக்டரியில் வேலை செய்தானாம். திடீரென்று ஒரு வேலை நிறுத்தம் நடந்ததாம் அங்கே! காரணம் விசாரித்தால் ராமு என்று தெரிந்ததாம். விடுவாரா அந்த பாக்டரி முதலாளி. வேலையிலிருந்து நீக்கிவிட்டார்''

''ஊம் பிறகு''

''வேலை கிடைக்காமல் அலைஞ்சுதாம் இந்த நாய்! வழியிலே எங்கேயோ கண்ட பரமானந்தம் பிள்ளை வா அப்பா! நான் வேலை தாரேன் என்று கூட்டிக்கொண்டு வந்து பிழைக்க வைச்சார்''

''அதுக்கு திருட்டிலேதான் மனம் போச்சு!''

''எப்படியென்றாலும் அது சாதிப் புத்தி பாருங்க''

தெருவின் மூலை வரையில்தான் அவர்களைத் தெரிகிறது.

மீண்டும் பரமானந்தம் பிள்ளை வீடு. கலியாணக் காட்சியின் அரைகுறைச் சோடனைகள் இன்னும் அப்படியே இருக்கின்றன. அவர் பங்களாவின் முன் ஒரு புத்தம் புதிய கார் நின்று கொண்டிருக்கிறது. மாப்பிள்ளைக்குக் கொடுத்த ஸ்ரீதனம் போலும்! பரமானந்தம் பிள்ளையின்

மாப்பிள்ளை அதில் வந்து ஏறிக் கொள்கிறார். கமலா வெளியே நிற்கிறாள். அவள் முகம் சோபையற்றுக் கிடக்கிறது.

''கமலா! கவலைப்படாதே கெதியில் வந்து அழைத்துக் கொண்டு போகிறேன்''

''...............................''

''எங்கே! ஒரு முறை உன் சிரிப்பு''

''...............................''

''கிர் கிர்''

கார் புழுதியை கிளப்பிக் கொண்டு போகிறது. அது மறையும் வரை பார்த்துக் கொண்டு நிற்கிறாள். புழுதி மண்டலம் திரையை மறைக்கிறது. மீண்டும் திரையிலே ஒரு மாதக் கலண்டர்! 8 இதழ்கள் கிழிக்கப்படுகின்றன.

அமைதி நிலவும் ஒரு அறை தெரிகிறது. அங்கே கட்டிலில் கமலா படுத்துக்கொண்டிருக்கிறாள். அவள் முகம் வெளிறிக் காணப்படுகிறது. இடையிடையே பெருமூச்சு அமைதியைக் குலைக்கிறது.

காட்சி உருண்டு இன்னொரு அறையைப் படம் பிடிக்கிறது.

பரமானந்தம் பிள்ளை ஆழ்ந்த யோசனையிலிருக்கிறார். அவர் அருகில் ஒரு கிழவி - அவர் தாய்! அவள் பேசுகிறாள்.

''யாராவது அறிந்தால் ..?''

''...............................''

''கல்யாணமாகி 8 மாதம் முடியவில்லை. அதற்கிடையில் நான் சொன்னேன்டாப்பா, படிக்க வைச்ச பலன் இது - அறிந்து கொள்''

''அம்மா! எனக்கொரு யோசனை வருத்றது''.

அவர் புருவம் சுருங்குகிறது.

''டாக்டரிடம் போய்..............''

வார்த்தை முடிவதற்குள் மோட்டாரின் சத்தம் கேட்கிறது. பரமானந்தம் பிள்ளை தம் மகளுடன் காரில் உட்கார்ந்திருக்கிறார். வெயிலின் வேகம் மோட்டாரில் பளிச்சிட அது உறுமிக் கொண்டு ஓடுகிறது......

கிணிங்.... கிணிங்.... கிணிங்....

டாக்டர் ஜீவரட்சகன் வீட்டு டெலிபோன் மணி ஒலிக்கிறது. அவர் பிரமை- நோட்டுப் பணத்தில் தெரிந்த காட்சி - எல்லாம் கலைகிறது. எழுந்து டெலிபோன் ரிஸீவரை காதில் வைக்கிறார்.

''கலோ! யார் பேசறது?!

''நான் தான் ஸார்! நேர்ஸ் லீலா''

''என்ன விசேடம் அர்த்த ராத்திரியில்?''

''நேற்று வந்தாளே ஒரு பெண் 12ஆம் நம்பர் வார்ட்டுக்கு. அவள் பிரசவித்து விட்டாள். பெயர் கமலாவாம்.......''

''கமலாவா? பரமானந்தம் பிள்ளையின்......''

''ஆமாம் அவர் மகள்தான். ஆனால்.....''

''என்ன லீலா! ஆனால்......''

''ஒன்றுமில்லை ஸார்! அந்தக் குழந்தை செத்துப் பிறந்திருக்கு''

''ஆ! அப்படியா?

''பொண்ணுக்கு ஒன்றுமில்லையே?''

''இல்லை ஸார்! அது நல்ல சுகமாயிருக்கு''

''ம்..... சரி.....''

நாலைந்து நாட்கள் ஓடிவிட்டன. கமலா இன்னும் வார்ட்டிலேயே இருக்கிறாள். டாக்டர் ஜீவரட்சகன் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறார். அவரைப் பார்ப்பதற்காக ஒரு வாலிபன் வந்தான்.

டாக்டர் நிமிர்ந்து பார்த்தார்.

''அடே சுந்தர்! நீ இங்கே ஏன் வந்தாய்?''

''நம்ம ''வைப்'' இங்கே இருக்காள் பாருங்கோ கமலா! மாமா தந்தியடித்திருந்தார். இன்று காலைதான் வந்தேன்.

டாக்டர் திகைத்துப் போனார். சுந்தர் அவர் தூரத்து இனம்!

''கமலாவா, அவள் உன் மனைவியா? பாவம் குழந்தை!''

''எல்லாம் விதி பாருங்கோ....''

இன்னும் அந்த ஊரிலே ஒரு கதை! பரமானந்தம் பிள்ளையின் பெண் சுந்தரின் மனைவி கமலா ''குறை மாதத்தின் பிள்ளையைப்பெற்று அது இறந்துவிட்டது'' என்று.

# புது யுகம்

பாஞ்சாலி

*''எங்கும் ஏழைப் பாட்டாளி மக்களின் நிலை பரிதாபமாகவே இருக்கிறது. சுதந்திரம் கிடைத்தும் சுரண்டுதல் ஒழியவில்லை. வியர்வை சிந்தி வீணருக் குழைத்து மாய்கின்ற ஏழை மக்கள் எதிர்பார்க்கும் புதிய யுகம் எப்படியி ருக்கிறது என்பதுடன், இன்று அது எங்கேயிருக்கிறது என்பதையும் கதையில் காணுங்கள்''*

''ஜல்'' ''ஜல்'' என்ற சதங்கைச் சத்தம் கந்தனின் காதுகளிலும் நுழையத்தான் நுழைந்தது. ஆனாலும், ஆழ்ந்த தூக்கத்திலிருந்து அவனைத் தட்டியெழுப்பும் சக்தி உயிரற்ற அந்த வெறும் ஓசைக்கு இல்லையோ என்னவோ? ''கந்தா'' ''ஏய் கந்தா'' என்று வெடித்த கடுமை தொனிக்கும் மனிதக் குரலோசைதான் அவனை உலுக்கிவிட்டது. துடித்துப் பதைத்து எழுந்தான். வாசலிலே கம்பீரமாகத் தலைதூக்கி நின்ற காளைகளையும் பெட்டி வண்டியையும் பார்த்ததுமே கந்தனுக்கு நாடி தளர்ந்துவிட்டது. பின்னே விடியற் காலையிலேயே வயலுக்குப் போய் உழவுக் காரியத்தைப் பார்க்கவேண்டியவன் இத்தனை நாழி தூங்கிக் கொண்டிருந்தால்? போடி யாரே வந்துவிட்டார் கந்தனைத்தேடி. ''வேறே ஆள் அமர்த்திவிட்டேன் என்பதைச் சொல்லத்தான் அவராகவே வந்திருக்கிறாரோ? இல்லை யென்றால் யாரையாவது அனுப்பியிருக்கமாட்டாரா? போடியாரின் சுபாவம் கந்தனுக்குத் தெரியாதா? அவனுக்குப் பேசவே நா எழவில்லை. ஓசை வெளிவராமல் ஏதோ குழறினான். ''சரி, சரி, சீக்கிரமா வயலுக்குப் போய்ச் சேரு. பொழுது ஏறிப்போகுது. இன்னும் நேரத்தைப் போக்கிக் கொண்டு நிற்காதே'' என்று சொல்லி, காளைகளைத் தட்டிவிட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டார் போடியார். கந்தன் பிரமித்துப் போனான். கண்டிப்புக்கும் கடுமைக்கும் பெயர்போன போடியார் காலத்தோடு வேலைக்கு வரவில்லையென்பதற்காகக் கடிந்துகொள்ளாமல் வீடுதேடி வந்து சொல்லிவிட்டுப் போகிறார்? ஆச்சரியந்தான்! ஆனாலும், இதில் அதிசயப்பட ஒன்றுமேயில்லை என்பதுபோல புறம் நடந்த சம்பவங்கள் கந்தனைத் திக்குமுக்காடச் செய்தன.

எவ்வளவோ உற்சாகமாகத்தான் உழவு மாடுகளைத் துரத்திக் கலப்பையை ஓட்டினான். ஆனால், ஏனோ வெயில் ஏற ஏற அவன் கால்கள் துவண்டன. அதனால் நிழலிலேயே போய் நின்றுவிட முடியுமா? அப்படி ஏதாவது செய்தால் போடியாருக்குப் பொல்லாத கோபம் வருமே! அதோ, அவரும் வந்து விட்டார். ''தா....வடி'' என்று மாடுகளைத் தட்டிவிட்டான் கந்தன். வரப்பில் நின்ற படியே வயலைப் பார்த்துக் கொண்டு நின்ற போடியார் சட்டென்று கந்தனைக் கவனித்தார். அவன் ஏரைச் செலுத்த முடியாது இடறுவதைப் பார்த்ததும் அவருக்கு விசயம் புரிந்தது. ''அட பாவி, நீ அப்போதே சொல்லியிருக்கப்படாதாடா? நீ இன்னும் வரவில்லையே என்று சொல்லும் போதே நினைச்சேன். மாடுகளை உருவிவிட்டு வீட்டுக்குப் போய்ச் சேருடா'' என்றார். இதற்குமுன் எத்தனையோ தடவை அவன் உடல் சோர வயலில் வேலை செய்யவில்லையா? அப்பொழு தெல்லாம் அவனோடு உழைத்த மாடுகள் மீது உண்டான இரக்கம்கூட போடியாருக்கு கந்தனிடம் ஏற்படுவதில்லை. ''என்னடா, மாடுகள் களைத்துப் போச்சுப் போல இருக்கே? போதும் அவுத்து விடு என்பார். பாவம், கந்தன் கண்களில் படுவதில்லை! ஆனால் இன்று அவனிடம் எப்படி இரக்கம் பிறந்தது? இதையெல்லாம் எண்ணிப் பார்க்க முடியவில்லை. தலை அப்படிக் கனத்தது. கண்கள் இருண்டு ஒரே மயக்கமாக வந்தது.

கந்தன் வீட்டில் நுழையும்போதே அவனுடைய நிலைமையைப் பார்த்த அவன் வள்ளி, ஓடிவந்து அவனைத் தாங்கிக் கொண்டாள். ''ஐயையோ, உடம்பு நெருப்பாகிறதே'' என்று பதறிப்போய் பாயில் படுக்கவைத்தாள். கந்தன் விழுந்தவன் நாலு நாட்களாக சுய நினைவு இல்லாமலே கிடந்தான். வள்ளியும் ஏதோ கையிலுள்ளதைக் கொண்டு வைத்தியம் பார்த்தாள். ஒருநாள் கந்தனைப் பார்ப்பதற்கென்று போடியார் வந்தார். அவரைக் கண்டதும் கந்தன் எழுந்திருக்க முயன்றான். ''உடம்பை அலட்டாமல் சும்மா படுத்திரடா'' இப்போ எப்படியிருக்குது? என்று கேட்டுக்கொண்டே போடியார் அவன் பக்கத்தில வந்தார். ''இதற்குள்ளாக நல்லாய் வசக்கெட்டுப் போனானே. டாக்டரை அழைச்சு வந்து காட்டவில்லையா?'' என்று வள்ளியைக் கேட்டார். ''இங்கே வந்து பார்க்கிறதானால் காசு கொடுக்க வேணும். அதனாலே நான் போய்ச் சொல்லி மருந்து வாங்கிவந்தேன்'' என்றாள் வள்ளி. போடியார் தம் மடியிலிருந்து ஒரு பத்து ரூபா நோட்டை எடுத்து வள்ளியிடம் கொடுத்து, ''இந்தா இதை வைத்துக்கொள். டாக்டரைக் கூட்டி வந்து காட்டு'' என்று

சொல்லிவிட்டுப் போனார். வள்ளி திகைத்து நின்றாள். கஷ்டமான இரண்டொரு சமயங்களில் போடியாரிடம் கடனாகப் பணம் கேட்டிருக்கிறாள் வள்ளி. அப்பொழுது அலட்சியமாக நடந்து கொண்ட போடியாரா இப்படி தானாக வந்து தாராள மனசுடன் பணங் கொடுத்துவிட்டுப் போகிறார்? போடியார் பொல்லாத மனுஷன் என்றுதான் இத்தனை நாளாக அவள் எண்ணியிருந்தாள். இப்பொழுதே அவர் மனசு தங்கம் என்று தெரிந்து கொண்டாள். கந்தனோ அன்று வயலில் நடந்து கொண்ட சம்பவத்திலிருந்தே தன் அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டிருந்தான். ஏழைகளை ஒட்ட உலர வேலை வாங்கி விட்டு வயிறார உண்பதற்கே கூலி கொடாத உலுத்தர் என்ற எண்ணந்தான் போடியாரைப் பற்றி அவன் மனதில் பதிந்திருந்தது. இப்போதாவது அவர் மனம் இளகியிருக்கிறதல்லவா? என்னவானாலும் அவரை ஈவு இரக்கமற்ற கல் மனத்தவரென்று சொல்லி விட முடியாதுதான்!

எப்படியோ கந்தன் டபிள் நிமோனியாவின் பிடியிலிருந்து தப்பி விட்டான். இப்பொழுது அவனால் எழுந்து நடமாட முடிந்தது. போடியாரும் அடிக்கடி வந்து விசாரித்துவிட்டுப் போனார். எப்பொழுது வயலுக்குப் போய் போடியார் மனங்குளிர வேலை செய்யப் போகிறோமென்று இருந்தது கந்தனுக்கு. சும்மா பார்த்து வருவோமே என்று ஒருநாள் வயல் பக்கம் போனான். வழியிலே போடியாரின் இரட்டை மாட்டுவண்டி வந்து கொண்டிருந்தது. கந்தனைக் கண்டதும் போடியார் வண்டியை நிறுத்தி விசாரித்தார். உடம்பு நன்றாக குணமாவதற்குள் இவ்வளவு தூரம் நடந்ததற்கு அவனைக் கடிந்து கொண்டு தம்முடன்கூட வண்டியிலேயே அவனையும் அழைத்துப்போய் வீட்டில் விட்டார். போடியாரின் போக்கு கந்தனுக்குப் பெரிய புதிராகவேயிருந்தது. பரம்பரையான பணச் செருக்கும் குலத்தடிப்பும் நெஞ்சத்தில் ஊறி உறைந்துவிட்ட ஒருவர் திடீரென இப்படி மாறிவிடுவதென்றால் சாமானியமா என்ன?

கந்தன் கல்வியறிவில்லாதவன்தான். ஆனாலும் அவனுடைய உள்ளம் எவ்வளவு மேலானது? போடியாரிடம் ஆயுள் முழுவதும் நாயாக உழைக்கவும் தயாராயிருந்தான் அவன். வாடிய பயிர் முகத்தில் மழை பெய்தது போல இருந்தாற் போலிருந்து போடியார் காட்டிய அளவற்ற அநுதாபம் ஏழைக்கந்தனின் கபடமற்ற மனதை அவ்வளவாகக் கவர்ந்து விட்டது. இந்த அன்பு ஒன்றுக்காகத்தான் எண்ணற்ற ஏழை மக்கள் ஏங்கித் தவிக்கிறார்களோ என்னவோ? கை நிறையக் காசு பணத்தை அள்ளிக்

கொடுத்தாலும் உள்ளத்தைத் தொடும் ஒரு துளி அன்புக்கு அது எப்படியும் ஈடாகாதுதான்!.

நோய்வாய்ப்பட்டதனால் வேலைக்குப் போக முடியவில்லையே என்று கந்தன் கவலைப்பட இடமில்லாமல் அவ்வவ்போது செலவுக்குப் பணம் கொடுத்து வந்தார் போடியார். அதாவது, கந்தனுக்கு சம்பளத்துடன் லீவு. அவனுக்கானால் வீட்டில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. சும்மா வாவது வயலை எட்டிப்பார்த்துவிட்டு வருவான். பசுமை படர்ந்த வயல் வெளியைப் பார்க்க அவனுக்கு வசமுண்டாகும். தளதளவென்று கதிர்மின்ன தலை சாய்ந்து நின்ற பயிர்கள் கவிகளின் நெஞ்சில்தான் கற்பனையைக் கிளறி விடக்கூடும். நித்தமும் பார்த்துச் சலித்துப் போனதினாலோ என்னவோ, ஏழைக் கந்தனுடைய உள்ளத்தில் ஒரு இன்பத்தையும் அவை கொடுத்ததில்லை. கதிர்கள் காற்றில் அலைவதனாலுண்டாகும் கலகலப்புக் கூட ஏனோ அவனை ஏளனம் செய்வது போலத்தான் இத்தனை காலமும் அவனுக்குப் பட்டது. ஒருவனுடைய உழைப்பை உறிஞ்சி வளர்ந்து இன்னொருவனுக்குப் பயன்தரப் போகிற அவற்றைப் பார்த்து எப்படி அவன் மகிழக்கூடும்? இவையெல்லாம் பழங்கதைகள். இப்பொழுதே என்றுமில்லாது உற்சாகத்துடன் வயல்களைக் கவனித்து வந்தான் கந்தன்.

அறுவடைக்கு இரண்டொரு தினங்களிருந்தன. அன்று போடியார் வீட்டில் வேலை செய்கைக்காரர் எல்லோரும் கூடியிருந்தார்கள். கந்தனும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். போடியார் வந்தார், யாரையும் எழுந்திருக்கவிடாது தாமும் அவர்களோடு வெகு சகஜமாக உட்கார்ந்து கொண்டார். பின்பு பண்ணையாட்களைப் பார்த்துச் சொன்னார். "இன்றைக்கு உங்களுக்கெல்லாம் ஒரு நல்ல சமாச்சாரம் சொல்லப் போகிறேன். நம்ம நாட்டிலேயே உங்கள் மாதிரி பாடுபடுகிற பண்ணையாட்களெல்லாரும் ஏழைகளாகயிருக்கிறதற்கு எங்களைப்போலப் போடிமார் தான் காரணமென்பது உங்களுக்குத் தெரியாமலிராது. முன் காலம் மாதிரி இப்போ பூமி விளைகிறதில்லை யென்று சொல்கிறார்களே, அதுக்குக் காரணம் என்ன தெரியுமா? உங்கள் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கிறதில்லை. அதனாலே, நீங்கள் உற்சாகமாக உழைக்கிறதில்லை. இப்போ நமக்கு சுயராச்சியம் கிடைச்சிருக்க இனி நாடு செழிக்கவேணும், விளைவு பெருகவேணும். அப்போதான் பஞ்சமும் பசியும் ஒழியும். இது உங்களாலேதான் ஆகும். முதலிலே உங்கள் குறையெல்லாம் தீரவேணும். நீங்கள் ஏகப்பேர் உழைக்க, அதனால் இரண்டொருவர் சுகப்படுவது

கூடாது, வாடக்கூடாது. வயல்களில் விளைகிறதையெல்லாம் போடி மாருக்கு அளந்துவிட்டு வயிற்றுக்கில்லாமல் நீங்கள் வாடக்கூடாது. வயல்களை உங்களிடமே ஒப்படைச்சுவிட்டால் இந்தக் குறையொன்றும் இல்லாமற் போய்விடும். ஆனால், அதை அரசாட்சியார்தான் செய்ய வேணும். என்னைப்போல போடிமார் வேறே எவ்வளவோ செய்யலாம். இந்த வருஷம் விளைவிலே முதல் தள்ளி மீதம் முழுவதையும் உங் களுக்கே தரப் போகிறேன்''. ''ஏய் கந்தா, எழும்புடா'' என்று யாரோ முதுகில் தட்டியதும் கந்தன் விழித்துக் கொண்டான். எதிரில் நின்ற பொன்னன், ''ஏண்டா விடிஞ்சு இவ்வளவு நேரம் படுத்திருக்கிறாயே, அங்கே போடியார் முணுமுணுத்துவிட்டு வந்துட்டார்'' என்றான். முதல் நாள் இரவு கோழி கூவும் வரை வயலில் உழுத சோர்வினால் கந்தன் நன்றாகத் தூங்கி விட்டான். அவ்வளவும் தூக்கத்தில் கண்ட கனவுதான்! ''இப்பதானே விடியச்சாமம் வந்து படுத்தாரு அதுக்குள்ளே'' என்று வாயெடுத்தாள் வள்ளி. ''என்ன செய்யலாம்'' போகாட்டி தெரியாதா போடியார் சேதி என்று சலிப்புடன் வயலுக்குப் புறப்பட்டான் கந்தன்.

# சதிகாரி?

எம்.எம். ஸாலிஹ்

சூரியோதயத்திற்கு, இன்னும் இரண்டொரு மணித்தியாலங்களேயிருந்தன. ஆனால் நஸீமாவை மட்டும் தூக்கம் அணைந்து கொள்ளவில்லை. படுக்கையிற் கிடந்த அவளுடைய இதயம், குமுறிக்கொண்டிருந்தது. மெல்லத் தனது தலையையுயர்த்திக் கட்டிலைப் பார்த்தாள். நஸீமாவின் கணவன், சமாதி நிலையிலே தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய குறட்டைத் தொனியைத் தவிர, எங்கும் நிசப்தம் நிலவியது. நஸீமா சந்தடியில்லாமல் வாரிச் சுருட்டிக்கொண்டெழுந்தாள். அவளுடைய தோற்றம் பயங்கரத்தின் பிம்பமாகயிருந்தது. மங்கிக் கொண்டிருந்த விளக்கொளியைத் தூண்டினாள். இது அவளுடைய வாழ்க்கையொளியைத் தூண்டுவதாகவேயிருந்தது. விளக்கொளியின் தெளிவிலே, கணவனின் முகத்தைக் கவனித்தாள். வயோதிபத்தைக் காட்டும் நெற்றிக் கீறல்களையும், கன்னங்களின் சொடிவையும் அவளாற் சகிக்கமுடியவில்லை. தன் கண்களை இறுக மூடிக் கொண்டாள். இதய ஆழியிலிருந்து பீறிட்ட பெருமூச்சு ''மரக்கட்டையில் செய்த பொம்மை'' என்ற கருத்தையுள்ளடக்கியதாயிருந்தது. நஸீமா மீண்டும் தன் கணவனைப் பார்த்தாள். கட்டிலுக்குப் பக்கத்திலிருந்து தண்ணீர் கோப்பையைப் பார்த்தாள். நீரின் மோன நிலை அவளைப் பார்த்து எக்காளமிடுவது போலிருந்தது. ''இன்ப இரவு! இரண்டு உள்ளங்களின் நீடிய அபிலாசைகளும் சங்கமமாகும், மகத்தான இரவு, கற்பனையிற் சஞ்சரித்துக் கொண்டிருந்த பருவ நிலைகள், பரஸ்பரம் கொண்டாடும் குதூகல இரவு. இல்வாழ்க்கை என்ற கட்டுரையின் தலையங்கமாய் விளங்கும் முதலிரவு. நஸீமா பேதைப் பெண்ணே! இழந்தால் மீளமுடியாத இன்ப இரவை, அனுபவிக்கும் தகுதியற்றவளாகி விட்டாயடி. பன்றியின் முன் முத்துக்களைத் தூவும் சமூகத்தில் உங்கள் நிலையே இப்படித்தான்!'' நஸீமா திகைத்தாள். தண்ணீர் பேசுவதாகவே அவள் கருதினாள். ஆனால் கொதிப்பின் தாக்குதலினால், நீராக மாறியிருக்கும் தனது இதயத்தின் கேள்வியென்பதை அவளால் யூகிக்கமுடியவில்லை. ஏக்கம் தோய்ந்த உள்ளம், பன்னாடையாக மாறி, கெட்ட நினைவுகள், கொடிய செயல்கள் என்ற கந்தல்களையே இறுகப்பிடித்துக்

கொள்கின்றன. நஸீமாவின் இதயம், இதற்கு விதிவிலக்காகிட முடிய வில்லை! ....கத்தியைச் சுண்டியிழுத்ததால், இரத்தம் பீறிட்டடித்தது! அவளுடைய உள்ளம் தள்ளாடியது. கத்தியிலிருந்து சொட்டிக் கொண்டி ருக்கும் இரத்தத் துளிகளைக் கவனித்தாள். ஒவ்வொரு துளியிலும் ஒவ் வோர் காட்சிகள் நடனமாடின. முதல் துளியைப் பார்த்தாள். கோவலனின் அழகு மார்பிலே, கண்ணகி இறுமாந்து கிடக்கின்றாள்! இரண்டாவது துளியைப் பார்த்தாள். அமராவதியின் கற்கண்டுக் கன்னத்தை அம்பிகாபதி யின் தளிர்க்கரம் வருடிக் கொண்டிருக்கின்றது.

மூன்றாவது துளியைப் பார்த்தாள். லைலாவின் நுதலிலே மஜ்னுவின் அதரங்கள் இன்ப முத்திரையிடுகின்றன. நான்காவது துளியைப் பார்த்தாள். சாஜகானின் இதயத்திற்குள், மும்தாஜ் கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருக் கிறாள்! ஐந்தாவது துளியை நஸீமா நன்றாகக் கவனிக்கவில்லை. ஒரு மரக்கட்டையில் அழகு யுவதி சாய்ந்து கொண்டிருக்கிறாள்!

நஸீமா சிறிதும் தாமதிக்கவில்லை. கத்தி முனையைத் தன் மார்புக்குத் திருப்பிக் கொண்டாள். அவளுடைய இன்ப மார்பிலே, இரத்தக்கேணி முளைத்தது. சாட்சிக் கூண்டிலேறாமல், எந்த நீதிபதிக்கும் தொந்தரவு கொடுக்காமல் தன் வாழ்க்கையைத் தானே முடிவு செய்துவிட்டாள். தனது இன்ப இரவை மகத்தான சமாதியில் புதைத்து விட்டாள்! அதில் அவளுக்கு எவ்வளவோ ஆனந்தம்.

''நஸீமா சதிகாரி. கொண்டவனைக் கொன்ற பாதகி'' என்றெல்லாம் சமூகம் பேசுகிறது. உண்மையில் இந்த வசவுக்கெல்லாம் காரணம் நஸீமாவா அல்லது நஸீமாவின் பணக்கார உலகமா என்பதை யார் சிந்திக்கப் போகின்றனர்.

(யாவும் கற்பனை)

# பாடையிலே காதல்!

என்ன உலகம், என்ன வாழ்வு, என்ன சமூகம் சீச்சீ! சாதிமதப் பேய் பிடித்த சண்டாளர்களும், ஏழை, பணக்காரன் என்னும் இறுமாப்புப் பேய் பிடித்த ஈனர்களும், ஒட்டும் இரண்டுள்ளத்தை வெட்டிப் பிரிக்கும் வீணர்களும் "எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர் இனம்" என்று மேடையில் நின்று வாய்கிழிய, தொண்டை வறள அலறி விட்டு திரைமறைவில் ஆயிரத் தெட்டுச் சாதிப் பிரிவினைகளுக்குச் சாகாவரம் கொடுக்கும் "சன்மார்க்க" வேஷதாரிகளும் நிறைந்த உலகம்".

இந்தப் பேய்க் கூட்டங்களிடையே, என்போன்ற ஏழைகளுக்கும், அவளைப்போன்ற அபலைகளுக்கும் இடமேது? இல்லை; நிச்சயமாக இல்லை! அப்படி இருக்குமேயானால் நான் இன்று இந்த நிலைமைக்கு - இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்திருக்க மாட்டேன்!

கடலரசியே! அபயமென்று அண்டி வந்தோர்க்கு ஆத்ம சாந்தியளிக்கும் அணங்கே! உன் ஆழ்ந்தகன்ற அடிவயிற்றில் இடமளித்து ஆதரிப்பாயாக! உனது அலைக்கரங்களால் கட்டித்தழுவி ஆறுதலளிப்பாயாக!...... நீ ஏன் இன்று உற்சாகமிழந்து காணப்படுகிறாய்?....... ஓகோ! உன் காதலன் வரவில்லையே என்ற ஏக்கமோ? அப்படியானால் சரி; காதலை இழந்து கருத்தழிந்து உன்னைச் சரணடைய வந்தேன். நீயோ நிறைவேறாக் காதலால் நிலையழிந்து நிற்கிறாய். இருவர் வாழ்வும் பொருத்தமாயிருப் பதால், உன்னிடம் என் துயரக் கதையைச் சொல்லி அழுவதில் குற்றமொன்று மில்லை. எனக்கும் ஆறுதல், உனக்கும் என் சோகக் கதையைக் கேட்டபின் என்னிலும் நீ எவ்வளவோ பாக்கியசாலி என்று உற்சாகமடைவாய்! பின்பு உன்னைச் சரணடைகிறேன்.

எங்கள் காதல், கல்லூரியிலோ, பூந்தோட்டத்திலோ, கண் காட்சி சாலையிலோ, ஆடம்பரமான நாகரிக மேடையிலோ உண்டாகவில்லை. சாதாரணமாக என்போன்ற ஏழைகளுக்கு இருப்பிடமான வயல் வெளி களிலே, ஆற்றோரத்திலேதான் உண்டாயிற்று!

நான் வயலில் கூலிக்கு உழுதேன். அவள் தந்தையின் சொந்த நிலத்துக்கு வருவாள். அங்குதான் எனக்கும் கூலிவேலை.

அவளோர் பெரும் பண்ணைக்காரரின் மகள்!

நானோர் துரும்பேனும் சொத்தில்லா வெறும் பரதேசியின் மகன். அதிலும் தாய் தந்தையற்ற அநாதை!

அவள் உயர்ந்த குலம் என்று உலுத்தர்கள் கூறும் மரபினள்.

நானோ நெஞ்செல்லாம் நஞ்சுமிழும் வஞ்சகர்களால் ''தீண்டத் தகாதவன்'' என்று பட்டம் சூட்டப்பட்ட மரபினன்.

இயற்கையின் முன்னிலையில் அவள் பெண்; நான் ஆண்!

நான் அவளைக் கண்டேன் வயல் வெளிகளிலே; பச்சைப் பசேலென்ற பயிர்களிடையே; அவள் நிற்கும்போது தானிய லெட்சுமி; கற்பனை யுலகம் விட்டு காணும் உலகிற்கு வந்தனளோ என்றெண்ணினேன்!.

சலசலவென்று கண்ணாடிபோல் ஓடும் ஓடைக்கரையிலே உல்லாசமாக உலவி வரும்போது வனமங்கைபோலத் தோன்றினாள்!

அவள் வண்டு விழிகண்டு வசமிழந்தேன். மேகம் நுகர் கூந்தல் மோகமூட்டியது. முல்லைப் பற்கள், முறுவலின்போது முத்துமுத்தாகத் தெரிந்து என்னைப் பித்தனாக்கியது! அவள் கண்ணாடிக் கன்னம் என் உள்ளத்தைப் புண்ணாக்கியது. இளநகை பொங்கும் எழிலுடம்பு என் இதயத்தைக் கொள்ளை கொண்டது! எனினும் அவள் மேடு! நான் பள்ளம்! இதை நினைத்து என் மனம் துணுக்குற்றது. உள்ள கூலியிலும் மண்விழும். வேண்டாம் இந்த வீணாசையென்று மனதிற்குச் சொன்னேன்.

அவள் என்னில் என்ன அழகு கண்டாளோ; எனக்குத் தெரியாது! இருந்தும் கருணை ததும்பும் விழியால் பார்க்கிறாள்; அன்பு முறுவல் பூக்கிறாள்; அகத்தில் ஆனந்தம் கொள்கிறாள். அது முகத்தில் தெரிகிறது! என் மனம் கட்டவிழ்த்துக் கொண்டது! என் நிலையறியவில்லை; பின் நிகழ்வது எதையும் சிந்திக்கவில்லை!

துணிந்தேன்; சந்தித்தேன்; பேசினேன்; காதல் சாதி பார்க்கவில்லை, சமயம் பார்க்கவில்லை. உயர்வு, தாழ்வு எதுவும் பார்க்கவில்லை!

உள்ளமிரண்டும் ஒன்றுபட்டது!

கருத்திரண்டும் கலந்துகொண்டன!

காதல் வெள்ளம் மேடு பள்ளம் பாராமல், சமமாகவே ஓடியது! நாட்களும் பல சென்றன.

ஒரு நாள் முழுநிலா; தன் மோகனத் திரையால் எங்கள் உள்ளங்களில் கிளர்ச்சி செய்தான் சந்திரன். முன்னேற்பாட்டின்படி இரு மருங்கும்

மரமடர்ந்த சாலை கடந்து ஆற்றங்கரையடைந்தேன். அவள் வரவுக்குக் காத்திருந்தேன். அவளும் வந்தாள்; எதிர்கொண்டழைத்தேன்.

அவள் மெய்மறந்தாள்! அடிசாய்ந்த மரம் நெடிதுயர்ந்த என் தோளில் சாய்ந்தாள்! ''நீ உயர்ந்தவள், நான் தாழ்ந்தவன்'' என்றேன்.

''இதெல்லாம் என்ன பேச்சு? எனக்கு நீங்கள் தான் உயர்வு'' என்று கொஞ்சினாள்.

''அன்பே, மதுவின் மயக்கத்தால் ஒருவன் குற்றமிழைப்பதுபோல, நாம் காதல் மயக்கத்தில் நம் நிலையறியவில்லை. நீயோ போடியாரின் மகள். நான் அவரிடம் கூலி வேலைபார்க்கும் ஏழை. அதிலும் தீண்டத் தகாதவன் என்று ஒதுக்கப்பட்டவன். இப்படியிருக்கும்போது உன்னை எனக்கு மணமுடிக்க ஒப்புவாரா உன் தந்தை? உன் தந்தையே உன் பொருட்டு ஒப்பினாலும் இந்தச் சமூகம் ஒப்புமா?''

''அப்படியானால், இதை முன்னாலே யோசித்திருக்க வேண்டும்.''

''ஆம், முன்யோசனையின்றிச் செய்த தவறை எப்படித் திருத்திக் கொள்ளலாம்?. திருத்திக் கொள்வதென்பது முடியாத காரியம். இந்த உயிர் உடலைவிட்டுப் பிரியும்வரை நான் உங்களடிமை! நீங்கள் என்னவர்! என் தந்தையல்ல, வேறு யாராயினும் இந்தத் தீர்மானத்தை மாற்ற முடியாது! எதிர்த்து நிற்கும் சக்தி தங்களிடம் இல்லாவிடில் தங்களிஷ்டம். மனவலியற்ற உங்களை நம்பிய குற்றத்திற்குப் பிராயச்சித்தம் தேடிக் கொள்கிறேன்!''

''என்ன, நான் அவ்வளவு மனவலியற்றவனா? பின்வரும் இன்னல்களைத் தாங்கும் சக்தி உன்னிடமிருக்கிறதா என்றுதான் பார்த்தேன். என்ன தான் இடர் வந்துற்றபோதும் உன்னைக் கைவிடேன்'' என்றேன்.

அவள் மலரானாள், நான் வண்டானேன்!

நாட்கள் நகர்ந்து மாதங்களாயின. ஊரெல்லாம் குசுகுசுப் பேச்சு எங்கள் நட்பைப் பற்றித்தான்!

இது அவள் தந்தைக்கும் எட்டியது. பதறினார். மானமே போய்விட்டது என்று அலறினார். என் வயிற்றிலும் மண்ணைப் போட்டார். மகளையும் கடும் அடக்குமுறைப் பாணங்களால் கட்டிக் காத்தார். எல்லாம் அறையில் தான். அம்பலத்திலல்ல! பெரிய மனிதரல்லவா? காதும் காதும் கடித்தாற் போல் அவளுக்கு வரனும் தேடினார்.

நான் ஒளியிழந்த கண்ணானேன்; உயிரிழந்த உடலானேன்; பைத்தியம் பிடித்தவன் போல அலைந்தேன்.

என்னைப் பார்த்த ''வம்பர் மகாசபை'' அங்கத்தினர்கள் பலவிதமாகச் சர்ச்சையைத் துவக்கினார்கள்.

இவனுடைய திமிர் என்ன? இவன் எங்கே, பெரிய இடத்துப் பெண் ணெங்கே. தின்ற வீட்டுக்கே தீ வைத்ததுபோல் செய்துவிட்டானே என்றனர் சிலர். அட, அவன் என்னய்யா பண்ணுவான்? இளம் வயசு, அவன் ஏழை என்பதால் அவனுக்கு உணர்ச்சியில்லையா? காதல் சாதி, சமயம் பார்க்காதையா! என்று பேசினர் என்மீது அனுதாபங் கொண்ட சிலர்.

யார் எப்படிப் பேசி என்ன? நான் நடைப்பிணமானேன்!.

ஒருநாள் ஒரு கடிதம் என்னைத் தேடி வந்தது! ஆம், அவள்தான் எழுதியிருந்தாள்! மழை கண்ட பயிர்போல, தனம் கண்ட தரித்திரன் போல என் உள்ளம் உவகைக் கடலாடியது!.

பிரித்தேன்; படித்தேன், ஆ, என்ன இது! கடிதமா காலனா? ஐயோ! என் அன்புக் கிளி என்னை விட்டு, இந்த உலகத்தை விட்டே போய் விட்டது! கடிதம் இதுதான்:

''அன்பரே இந்தக் கடிதம் தங்களை வந்தடையும்போது உங்கள் அரவணைப் பினால் ஆனந்தங் கொண்ட இவ்வுடல் பிணமாகிவிடும்! எத்தனை யோசித்தும் இந்த முடிவைத்தவிர வேறு ஒரு வழியும் புலனாகவில்லை. என் தந்தை எனக்கு வரன் பார்த்துவிட்டார். நாளை விடிந்தால் நான் மணப்பெண்ணாக வேண்டும். தங்களைத் தீண்டிய என் கரங்கள் பிறிதொருவனைத் தீண்டக் கூசுகின்றன. இந்த உடலோடு இருந்தால் எப்படியும் இவர்களுக்குக் கட்டுப்பட்டேயாக வேண்டும்! ஆகவேதான் தங்களுக்கே சொந்தமான எனதுடலை தங்களின் உத்தரவின்றியே தியாகம் செய்யத் துணிந்துவிட்டேன். இந்த ஜென்மத்தில் ஈடேறாத நம் காதல் வாழ்வு....?''

இனி நான் யாருக்காக வாழவேண்டும்? எந்த விழிகளின் வீச்சில் என் வசமிழந்தேனோ அந்த விழிகள் ஒளியிழந்து பஞ்சடைத்துப் போயிருக்கும். எந்தக் கன்னக் கதுப்புகளில் என் எண்ணிலா முத்த மழையைப் பொழிந்து இன்ப வாரிதியில் திளைத்தேனோ அந்த அழகிய வதனம் சில்லிட்டு விறைத்துப் போயிருக்கும். எந்த உடலின் ஸ்பரிசம் எனக்கு இன்ப போதையையளித்ததோ அந்த உடல் சவம் என்ற பட்டம் வாங்கியிருக்கும்! மணமகளாக இருக்க வேண்டிய மங்கை நல்லாள் என் பொருட்டு, பிண மகளாயினாள்! இனி நானிருந்து என்ன பயன்? ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என மனிதருக்குள்ளேயே அநேக பிரிவினைகளையுண்டாக்கி சுயநல சேவை செய்யும் மனிதப் பதர்கள்

வாழும் இந்த உலகில் நிறைவேறா எங்கள் காதல் இறப்புலகிலேனும் நிறைவேறட்டும்! ஆம், அங்கே போட்டியில்லை, பொறாமையில்லை, ஏழையில்லை, பணக்காரனில்லை, எல்லாம் சமம்! எல்லாம் ஒன்று!

அலையெறி கடலே! என் துயரக் கதையைக் கேட்டாயல்லவா? இதை உன்னைச் சுழ்ந்துள்ள மக்களுக்குக் கூறு! இந்தக் குருட்டுச் சமூகத் துக்குக் கூறு! எங்கே! உன் அகன்ற கரங்களை நீட்டு! அதில் தாவிக் குதித்து என் அல்லலைப் போக்கிக் கொள்கிறேன்!

ஆ! அதோ என் கண்மணி புன் முறுவல் பூக்குலை முகத்துடன் என்னை அழைக்கிறாள்! இதோ வந்துவிட்டேன்!

எண்ணற்ற அபலைகளுக்கு இடமளித்த சமுத்ரதேவி! இதோ வருகிறேன் வருகிறேன். எனக்குச் சாந்தியளிப்பாய்!

# மங்கிய வெளிச்சம்

*S.K. ராஜூ*

பொட்டிட்ட நெற்றியுடனும் பூச்சூடிய கூந்தலுடனும் அச்சௌந்தர்ய வடிவைக் காணும் போதெல்லாம் என் உள்ளம் மகிழும். ஆம்! அது என் சுகிருடைய சௌந்தர்ய வடிவம் தான்.

சுகிர்தம் பன்னிரண்டு, பதின்மூன்று வயது மதிக்கக் கூடியவள். அவளது வீடு என் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தது. நான் அப்போது எங்கள் ஊர் பாடசாலையில் எஸ்.எஸ்.சி வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தேன். பாடசாலை இறுதித் தேர்வுப் பரீட்சைக்கு இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள் மாத்திரம் இருந்தன. எப்படியும் பாஸ்பண்ணிவிட வேண்டு மென்று கவனமாகப் படிப்பதில் ஈடுபட்டேன். இடையே இந்நாட்களில் குறுக் கிட்டாள் என் சுகிர்.

நீங்கள் இந்த இரண்டு கணக்கையும் போட்டுக் கொடுங்கள். நான் இரண்டு மூன்று தடைவை போட்டுப் பார்த்தேன் சரியாக வரவில்லை என்று கூறிக்கொண்டே என்னிடம் வருவாள். அண்டைவீடாய் இருந்த படியால் என் வீட்டாரும் அவள் வீட்டாரும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். இதனால் அவள் என் வீட்டிற்கு அடிக்கடி வருவதுண்டு. சில சமயம் நான் படித்துக் கொண்டிருக்கும் போது என் அருகில் வந்து உட்கார்ந்து கொள்வாள். அவளது சடைப்பின்னல் என் மடியில் விழும். நான் படிக்கும் புஸ்தகங்களை வேடிக்கைக்காய்ப் பறிப்பாள். உனக்கு வேறு வேலையே இல்லையா போ என்று அவளது மெல்லிய றோசாக் கன்னங்களில் லேசாகத் தட்டுவேன்.

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் பொழுது முழுவதும் என் படிப் பறையிலே கழிப்பாள். வீட்டாரின் ஒப்புக்கு இரண்டு மூன்று புஸ்தகங் களைக் கொண்டு வருவாள். ஆனால் புஸ்தகங்கள் திறந்தபடியே இருக்கும். அவள் நளினப்பேச்சு மட்டும் நடந்தபடி இருக்கும். உங்கள் கையைக் கொஞ்சம் நீட்டுங்கள் என்பாள். நான் நீட்டுவேன், அதில் அவள் பெயரை வரைந்து விடுவாள். என் எழுத்து எப்படி இருக்கிறது, ஒருகதை சொல்லுங்கள் என்பாள். தினம் காலையில் எழும்புவது, குளிப்பது,

சாப்பிடுவது, பாடசாலை செல்வது, அத்துடன் சுகிருக்குக் கணக்குப் போட்டுக் கொடுப்பது இதுதான் என் நாளாந்த கடமையாய் இருந்தது.

சுகிர் யாரென்று உங்கட்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. அவள் புதிதாக எங்கள் கிராமத்திற்கணித்தாய் உள்ள பட்டணத்திற்கு ஓவசியராய் வந்துள்ளவரது ஏக புதல்வி. பட்டணத்தில் வாடகை வீடு கிடைப்பது தூலபமாய் இருந்தபடியால் அவர் கிராமத்திலே வாடகை வீடு ஒன்றை ஏற்படுத்தி அமர்ந்து கொண்டார். நிரம்பச் சொத்துள்ளவர்கள் என்று கூறினால் மிகையாகாது. தந்தைக்கும் தாய்க்கும் அவள் ஒரே பெண்ணாய் இருந்தபடியால் அவர்களது உயிர்நிலையாகவே காணப்பட்டாள் சுகிர். சுகிர்தம் எனும் அவளது பெயரை அன்பின் நிமித்தம் சுகிர் என்றே அழைத்து வந்தனர். ஆகவே அவளை எல்லோரும் சுகிர் எனவே அழைத்தனர். அப்போது அவள் எங்கள் பகுதியில் இருந்த பெண் பாடசாலையில் ஆறாவது வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தாள்.

காலம் காற்றிலும் கடுவேகமாய்ச் செல்கின்றதல்லவா? நாம் ஒவ்வொருவரும் அதன் இழுப்புத் துடிப்புகட்கு விட்டுக் கொடுத்துத்தானே யாகவேண்டும். காலப்புயல் அடுக்கிய பக்கந்தானே வாழ்க்கைப் படகு திரும்புகின்றது. எனது எஸ்.எஸ்.சி பரீட்சை முடிவுற்றதின் நிமித்தம் என் பெற்றோர் என்னை ஆங்கில பாடசாலையில் சிறிது காலம் படிக்கும்படி வற்புறுத்தினர். நானும் அதை சிரமேற்கொண்டேன். ஆனால் சுகிர் இப்போதெல்லாம் என் பக்கம் வருவதில்லை. பீர்க்கக் கொடியும் பெண் கொடியும் ஒன்றென்பார்கள். பிறைமதி பூரண சந்திரனாயிற்று. முன் பெல்லாம் நிலத்தில் தாவிக்குதித்த அவள் பாதங்கள் தற்போது பூமியை அடிமேல் அடிவைத்து அளந்து செல்கின்றன. மண்வீடு கட்டி உடைத்த அவள் கரங்கள் மலர்மாலை தொடுக்கின்றன. அவள் உலக அனுபவ அறிவில் வளர்ச்சியடைந்தது போல் அவள் அவயவங்களும் வளர்ச்சி யடைந்தன. சுருங்கக்கூறின் அவள் யுவதியானாள்.

முன்பெல்லாம் பாடசாலை சென்று வீட்டிற்கு வந்து கொண்டிருந்த சுகிர் தற்போது சனி ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் தன் வீட்டிற்கு வருவதில்லை. நான் படிக்கும் ஆங்கில பாடசாலையும், அவளது பெண் பாடசாலையும் சமீபத்தில் இருந்தபடியால் நான் அடிக்கடி அவளை சந்திக்க நேரிடும். சந்தித்தாலும் ஒன்றும் வாய் பேசமாட்டாது, ஆனால் அவளது கண்கள் மாத்திரம் மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியாத நயன பாஷையில் ஏதோ எல்லாம் பேசிக்கொள்ளும். பெண்களின் கண்கள்

வாழ்வின் கலைக்கூட்டம். அதில் இருந்து படிக்கும் அறிவினை எந்த ஆசிரியரிடமும் அறிந்து கொள்ள முடியாது என்று ஓர் ஆங்கில ஆசிரியர் கூறுவது போல நான் அவளது கண்களில் இருந்து படித்த பாடங்கள் காவியத்தில் அடங்கா என்றே கூறிவிடலாம்.

அவளைக் கண்டால் முன்பு உலகமே விளங்காத நிலையில் இருந்த என் மனம் தற்போது வருங்காலத்தையிட்டு கற்பனை பண்ணும். அவளது நடையில் உள்ள தாளம் என் நரம்புகட்கு முறுக்கேற்றும். அவளது அலை போல் சுருண்ட முறுக்கிவிடப்பட்ட கூந்தல் காற்றில் அசைந்தால் என் இதயம் பலவாறு வசைந்து சிந்தித்துக் கொண்டேயிருக்கும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை வீட்டில் நிம்மதியாய் இருந்தேன். சுகிர்தத்தின் வீட்டில் இருந்து அழைப்பு வந்திருந்தது. என் பெற்றோரிடம் கூறி விட்டு அவள் வீடு சென்றேன். அவள் தகப்பன் வாருங்கள் தம்பி என்றுகொண்டே என்னை வரவேற்றார். அப்போ சுகிர் சமீபத்தில் நின்றாள். சுகிரின் தகப்பன் என்னை விளித்து ஒரு உதவி செய்ய வேண்டும் என்றார். நான் என்ன என்பதற்கு வாயெடுக்குமுன்பே சுகிர் கடுதாசிகளையும் கலர்ப்பென்சில்களையும் மேசைமீது கொண்டு வந்து வைத்து படம் என்று உதடசையாத பதிலாய்ப் பேசினாள். நான் ஒப்புக் கொண்டேன். நான் படம் கீறி முடிக்கும் முன்னே சுகிர் தன் உளக்கருத்தை ஒருவாறு தெரிவித்தாள். நான் உணர்ந்து கொண்டேன். தற்போது எல்லாம் சுகிரின் மனக்கருத்து எனக்கு ஒருவாறு புலப்பட்டு விட்டது. இடையிடையே சுகிர் வரைந்த சில கடிதங்கள் எனக்கு கிடைக்கும். அக்கடிதங்களில் அவள் மன நிலையை அப்படியே வரைந்திருப்பாள். நான் அவற்றைப் பார்த்து மனம் பூரிப்பேன். சில உதவிகள் செய்து தரும்படியும் கேட்பாள். நானும் மறுக்காது அவற்றையெல்லாம் உடனுக்குடன் செய்து கொடுப்பேன். சனி ஞாயிற்றுக் கிழமைகளில் வீடு வந்து நிற்பாளேயானால் சந்தர்ப்பம் பார்த்து இருவரும் அவள் வீட்டிற்கணித்தாயுள்ள புளியமரத்தடியில் சந்தித்துக்கொள்வோம். எங்கள் சந்திப்பின் போது எங்கள் வருங்காலத் தையிட்டுப் பலவாறு பேசிக்கொள்வோம். நாணம் என்னும் திரைமறைவில் இளமையின் மிதமிஞ்சிய உணர்ச்சியினால் இளம் காதலர்களின் சந்திப் புத்தான் பேரின்பம் என்பார்கள். ஆம் என்னைப் பொறுத்தமட்டிலும் எங்கள் புளியமரத்தடிச் சந்திப்பைப் போன்ற வேறொரு இன்பம் உண்டா என்று கேட்டால் இல்லை என்றே கூறுவேன்.

இப்படியே எங்கள் வாழ்க்கைப் படகு நகர்ந்துகொண்டிருந்தது. நான் பாடசாலை செல்லும் போதும் வரும் போதும் அவள் படிக்கும் பாடசாலை (கொன்வன்ற்) வாசலில் அவளைக் காணாவிடில் எனக்கு உலகம் சூன்யமாய் இருக்கும். அன்பாற்றினில் இன்ப ஓடம் விட்டுக்கொண்டிருந்த எங்கள் வாழ்க்கையில் கொடிய சூறாவளி அடிக்க ஆரம்பித்தது.

அன்று சனிக்கிழமை பிற்பகல் வழக்கம் போல் புளிய மரத்தடியில் சுகிரைச் சந்தித்தேன். முழு நிலாவாக இருந்த அவள் முகத்தில் வேதனை மேலும் படர்ந்திருந்தது. கண்களில் நீர் கலங்கியிருந்தது. எனது மார்பில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மலைத் தொடர்ந்தாள். மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தினேன். சோபை இழந்திருந்த அவள் முகம் வாடித் துவண்ட மலர் போல் காட்சியளித்தது. கன்னங்களின் வழியே வடிந்த கண்ணீர் அவள் அழுவதற்குச் சாட்சி கூறியது. நான் மெல்லிய குரலில் சுகிர் ஏன் அழுகிறாய் என்றேன். என் தகப்பனார்க்கு மாறுதல் என்றுகொண்டே அழுதாள். அதைக் கேட்டதும் எனக்கு உலகமே இருண்டது. நாம் நினைத்தபடி எதுவும் நடந்தால் கடவுள் ஆடிக்காற்று இலவம் பஞ்சு அல்லவா? கவலையை விடு, காலம் மாறும் என்றேன். அவள் அழுகையை விட்டபாடில்லை. என் வாழ்க்கையை மங்கிய வெளிச்சமாக்க மாட்டீர்கள் அல்லவா என்றாள். நான் உன்னை மணந்தால் மணப்பேன் அன்றி எனக்கு விவாகமே வேண்டாம் என்று உறுதி கொடுத்து அவளை வீட்டுக்கனுப்பிவிட்டேன்.

இரண்டொரு தினங்களில் சுகிருடைய குடும்பம் எங்கள் கிராமத்தை விட்டகன்றது. எனக்கு ஒன்றிலும் மனம் ஓடவில்லை. நிர்மலமான ஆகாயத்தில் கார்மேகம் படர்ந்தது போல் என் உள்ளத்திலும் கவலை படிந்தது. இரவில் மென்மலர்ப் படுக்கைகூட எனக்கு முள்ளாகத்தான் தோன்றியது. அந்த நாட்களில் எனது எஸ்.எஸ்.சீ பரீட்சை முடிவு நன் முடிவாக வந்தது. ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை எடுத்து விட்டு வீட்டில் இருந்தேன். கிராமத்தில் பொழுதுபோவது கஷ்டமாய் இருந்த படியால் எனது தமையன் கொழும்பில் தபால் ஆபீஸில் குமாஸ் தாவாக இருந்தார். சிறிது காலம் அங்கே சென்றிருந்தேன். அப்போதெல்லாம் சுகிர் அடிக்கடி தன்மன நிலையை தளிர்க் கரத்தினால் வரைந்து கொண்டே யிருந்தாள்.

இப்படியே தேதிகள் கழிந்தன. நாட்கள் மறைந்தன. மாதங்கள் உருண்டோடின. வருட மலரில் நான்கு இதழ்கள் உதிர்ந்துவிட்டன. நான்

ஆசிரிய கலாசாலை பயிற்சியை முடித்துவிட்டு அரசியல் காட்டிலே உத்தியோக வேட்டையில் ஈடுபட்டிருந்தேன். தற்போதெல்லாம் சுகிரது கடிதங்கள் கிடைப்பதில்லை. அவள் நிலையெப்படி என்பதையும் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. எனது உத்தியோக வேட்டையின் பயனாய் எனக்கு கண்டிப் பகுதியில் ஓர் அரசினர் பாடசாலையில் உத்தியோகம் கிடைத்தது. நான் தற்போது பழைய மாணவனாய் இருந்த ராஜு அல்ல. ஆசிரியர் ராஜு ஆக மாறி விட்டேன். கடமையுண்டு, நான் உண்டு என்று நாட்களைக் கழித்துக் கொண்டே இருந்தேன்.

நான் வசித்த வீட்டிற்கு எதிர்வீட்டில் சிறிது நாட்களில் ஓர் குடும்பம் புதிதாய் வந்திருந்தது. வந்திருந்தவள் ஏதோ தந்தி இலாக்காவில் இன்ஸ் பெக்டர் என்று அடுத்துள்ளவர்கள் பேசியது என் காதிலும் நுழைந்திருந்தது. அவர் புதிதாய் குடியேறியவர். ஆகையால் எனக்கும் அவருக்கும் பேச்சே கிடையாது. ஆனால் சிலசமயம் அவர் மனைவியைக் கண்டுகொள்வேன். அவளைக் கண்டால் என்மனம் சுகிரையிட்டுச் சிந்திக்கும். அவள் பழைய சுகிரையே ஒத்திருந்தாள். முத்துப்பதிந்த மென்முறுவல். அதிலே மயங்கச் செய்யும் காந்த இழைவு, வேல்விழி தளிர்மேனி அதில் பருவ வளர்ச்சியின் பூரித்த அங்கங்கள் இவைகள் யாவும் சேர்ந்து அவள் சுகிரையே ஒத்திருந்தாள். ஆனால் எனக்குச் சந்தேகம்தான். சுகிர் என்றால் என்னை மதித்திருப்பாளே! அல்ல, அவள் சுகிர் அல்ல.... இல்லை அவள்தான், அப்படியே என்மனம் குரங்காட்டம் ஆடிக்கொண்டிருந்தது. என் சந்தேகம் தீர்ந்தது. அவர்கள் வேலைக்காரப் பையனின் உதவியால்.

ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் வழக்கமாக சினிமா பார்க்கப் போவதுண்டு. அன்று படம் பார்க்க என் மனம் நாடவில்லை. மணி ஐந்திற்கெல்லாம் அவள் கணவன் வீட்டைவிட்டு உலாத்தலுக்கு வெளிக் கிட்டார். சுகிர் வாசற்படியில் வந்து நின்று எனக்கு தரிசனம் தந்தாள். அவளைக் கண்டதும் என் மனம் என் உளச்சந்தேகம் அடியோடு மறைந்துவிட்டது. அன்று அவள் ஆடம்பரமற்ற வெண்மைநிறப் புடவை அணிந்திருந்தாள். சிறிது நேரத்தில் அவள் மறைந்தாள். வேலைக்காரப் பையன் என்னை அழைத்தான். என் மனம் பலவாறு சிந்தித்தபடியே சென்றது. வீட்டினுள் சென்றதும் அவள் என்னை வாருங்கள் என்று அழைத்து உபசரித்தாள். நானும் அமர்ந்தேன். என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும் என்றே கதையை ஆரம்பித்தாள். எதற்காக மன்னிப்பு என்றேன். இன்று வரையும் தங்களை அறிந்திருந்தும் வாழா இருந்ததற்காய்

என்றாள். அதையிட்டுப் பரவாய் இல்லை சுகிர் என்றேன். எனக்குப் பழைய ஞாபகங்ள் ஒன்றன் பின் ஒன்றாய் திரைப்படம் போல் ஓடின.

அவள் மீண்டும் தொடர்ந்து தன் வாழ்க்கை சரிதையைக் கூறத் தொடங்கினாள். பேசிக் கொண்டேயிருக்கும் போது அவளது முக கமலம் உலர்ந்து இனிமையற்றுக் காணப்பட்டது. மலர்ந்த பெரிய கண்கள் மங்கிக் காணப்பட்டன. திடீரென்று அவள் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீரைக் கொட்டின. உடல் நடுங்கியது. அவள் பேசிய பேச்சில் இருந்து அவள் கணவன் குடிகாரன் என்பதையும் அவளைக் கஷ்டங் களுக்குட்படுத்துகின்றான் என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

அவள் பேச்சை மீண்டும் கேட்க என் மனம் விரும்பவில்லை. என் செய்யலாம். சுகிர் தடாகத்தில் தாண்டவமாட வேண்டிய செந்தாமரை; "நீ பாலைவனத்தில் பதறிக்கொண்டிருக்கின்றாய். உனது வாழ்க்கை இப்படி மங்கிய வெளிச்சமாகும் என்று நான் எண்ணவில்லை'' யென்றேன். அவள் குமுறிக் கொண்டே ''நான் இனி மங்கிய வெளிச்சம்தான்'' என்றாள். அப்போது வேலைக்காரப் பையன் கொண்டு வைத்த பிரகாசமுள்ள லாம்பு அறையைப் பிரகாசிக்கச் செய்ததேயன்றி, என் உள்ளத்தையோ சுகிர் உள்ளத்தையோ பிரகாசிக்கச் செய்யவில்லை. நான் விடைபெற்றுக் கொண்டு என் வீட்டையடைந்தேன்.

# நடைப் பிணம் (பரிசுக்கதை)

"வெண்ணிலா" (ஸ்ரீமான் இரகுநாதன்)

"உடனே புறப்பட்டு வா" என்று அவசர அழைப்பு வந்திருந்தது. பகல் முழுதும், மழை, வெயில், காடு, மேடு எதையும் பொருட்படுத்தாமல் சுற்றியலைந்து விட்டு சுமார் 4 மணியளவில் வீட்டிற்குள் நுழையும் போது அம்மா இந்தத் தந்தியை என் கையில் கொடுத்தாள். அப்பாதான் தந்தி அனுப்பி இருந்தார்.

கடைசி முறையாக அவர் வீட்டுக்கு வந்து போகும் போது "தம்பி! போனவுடனேயே எங்காவது கொம்பனிகளிலோ, ஸ்டோர்களிலோ ஒரு வேலை தேடி விட்டு தந்தியனுப்புகிறேன், வந்துவிடு! சும்மா ஊர் சுற்றித்திரிந்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. வேலை நிறுத்தங்கள், தொழிலாளர் கூட்டங்கள் இவைகளில் கலந்து கொண்டு திரிவதாகக் கேள்விப்படுகின்றேன். உனக்கே உழைக்க வழி தெரியவில்லை. அப்படி யிருக்க பாட்டாளிகளுக்கு உரிமை வாங்கித்தர புறப்பட்டு விட்டாயா?" என்று என்னவெல்லாமோ விஷயங்களையெல்லாம் அடக்கி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டுப் போனார். அதன் பலன்தான் இந்தத் தந்தி. அப்பாவுக்கு நான் மிகவும் மரியாதையானவன். அதனால் அவர் என்ன பேசினாலும் பதில் சொல்வதில்லை, "ஏனப்பா படித்த வாலிபர்களுக்கு அரசியலார் உடனேயே வேலை கொடுத்தால் அவர்கள் ஏன் தொழிலாளர் கூட்டங்கள், வேலை நிறுத்தங்களில் பங்கெடுக்கப் போகிறார்கள்? பங்கெடுத்துக் கொள்ள நேரங்கிடைக்குமா? அதிகமாக படித்த இளைஞர்கள் தானே இப்படிக் கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள்" என்று சொல்வதற்கு என் மனம் துடித்தது. ஆனாலும் இதயத்தினின்றும் வெளியே சத்தம் கிளம்பவில்லை.

மறுநாள் என் அம்மா, தங்கை எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினேன். அப்பாவிருக்குமிடத்துக்கும், எங்கள் வீட்டிற்கும் அதிக தூரம். ரயில் வண்டியில்தான் பிரயாணம் செய்ய வேண்டும். எங்கள் ஊரிலிருந்து 20மைல் தூரத்தில்தான் புகையிரத நிலையம் இருக்கிறது. அதற்கு பஸ் போக்குவரத்து உண்டு. பஸ், ஸ்டாண்டிலிருந்து புறப்பட்டு

சுமார் இரண்டு மைல்கள் வந்திருக்கும். பஸ்ஸை மறித்து ஒரு வாலிபன் ஏறினான். வாலிபன்தான் ஆனால்..?

கிழிந்து போன ஒரு வேட்டியும், ஷேர்ட்டும் அவன் அங்கங்களை மறைத்திருந்தன. இல்லை! அந்த உடைகள் எவ்வளவோ முயன்றும் இடை இடையே உடல் தெரியத்தான் செய்தது.

ஜடை போல வளர்ந்து போன அவன் தலைமயிர் முகத்தில் விழுந்து கண்களை மறைத்துக் கொண்டிருந்தன. நாடியில் மட்டும் முளைத்துக் கொண்டிருந்த கொஞ்ச உரோமம் ''லெனின் தாடியை'' ஞாபகப்படுத்திற்று. இவையெல்லாம் பஸ் நின்று அவன் ஏறியதற்கிடையில் நான் கண்டு கொண்டேன்.

என் அருகில்தான் கொஞ்ச இடம் இருந்தது. அதில் அந்த இளைஞன் மெதுவாகயிருந்து கொண்டான். உட்காரும் போதே என்னைக் கண்ட அவன் இதழ்கள் ஒரு சிறு புன்னகையை உதிர்க்க முற்பட்டாலும், ஏக்கம், துக்கம் எல்லாம் நிறைந்த ஏக பெரிய பாரம். அந்த இதழ்களை அழுத்தி நசித்து விட்டது, என்னதான் மணிக்கணக்காக மேடை மீது கால் வலிக்க நின்று நா வறள ஏழையின் பரிதாப நிலையைப் பேசினாலும், ஒரு ஏழை அருகில் உட்காரும் போது உடல் சில்லிடத்தான் செய்கிறது. காரணம், அவனோடு சேர்ந்து கிடக்கும் அழகுதான். படித்த களை வீசிய அந்த முகத்தில் எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் ஒரு புன்னகை தோன்றி மறைந்தது. என்னை சிந்தனாலோகத்திற்கு இழுத்துச் சென்றுவிட்டது. ''பார்த்த முகம் போலிருக்கே'' என்று பஸ் முகட்டைப் பார்த்துக்கொண்டே யோசித்துக் கொண்டிருக்கும் போது ''ரகு! என்ன யோசிக்கிறீர்? என்னைத் தெரியவில்லையா?'' என்று அவன் அமைதியாகக் கேட்ட குரல் அவன் பக்கம் திருப்பியது.

''மன்னிக்கவும், மறந்து போய்விட்டேன். அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்''

''ஆமாம்! எப்படி ஞாபகம் வரும், நாங்கள் ஏழைகள் அதிலும் தாழ்த்தப்பட்டவர்கள். மேடை மீது கால் வலிக்க நின்று பேசுவது வேலை யில்லாத் திண்டாட்டம் தானே''

''படித்தவன்'' என்று நான் முன்பே சாடையாக எண்ணியது இப்போது நிரூபணமாயிற்று. ஆனால் அவன் சொன்ன வார்த்தைகள் என் இதயத்தை மொட்டை வாள் கொண்டு இருத்தி இருத்தி அறுப்பது போலிருந்தது.

ஆனாலும் தொடர்ந்தேன். ''நண்பா! உண்மையாகவே, நான் தத்தளிக் கின்றேன். நீர் என்னைக் கிண்டல் செய்கின்றீர்''

''ரகு! தெரிந்துகொள். நான் உன் பாடசாலை நண்பன் கோபாலன்''

அவன் சொல்லி முடிப்பதற்குள் ''கோபு! என்று அவனைக் கட்டிக் கொண்டேன். அவன் நிலை என்னைக் கதிகலங்க வைத்தது. அவனும் நானும் படிக்கும் போதே சமூகத்தின் அழுக்குகளைக் களைவதற்கு ''என்னென்ன செய்ய வேண்டும்'' என்று தீட்டிய திட்டங்கள்..?

கோபாலன் படிப்பிலே மிகவும் சுட்டிப் பேர்வழி. இருவரும் ஐந்தாம் வகுப்பை முடித்துக்கொண்டு பிரிந்தோம் (உடல்தான் பிரிந்தது). நான் பணக்காரன். அவன் ஏழை. நான் ஆங்கிலக் கல்லூரியிலும் அவன் தமிழ்க் கல்லூரியிலுமாகச் சேர்ந்தோம். இங்கிலீஸ் படிக்க அவனிடம் பணமேது? அப்போது ''இலவசக் கல்வி'' இல்லை. 'மளமள'வென்று அவன் பத்தாவது வகுப்பையும் முடித்துக்கொண்டு பயிற்சிக் கலாசாலையிலும் நுழைந்து விட்டான். நான் எஸ்.எஸ்.ஸி யிலிருந்தேன். கடிதப் போக்குவரத்துகள் எம்மிருவருக்குமிடையில் நடந்து கொண்டிருந்த போது இவைகளை நான் அறிந்ததுண்டு. சிலகாலமாக நான் அவனுக்கு எழுதிய கடிதங்களுக்கு பதில் வருவதில்லை. ''மாறி விட்டான் போலிருக்கிறது'' எப்போதாவது ஒரு நாளைக்குச் சந்திக்காமல் விடுவேனா? என்று எண்ணிக்கொண்டிருந்து விட்டேன். நான் எஸ்.எஸ்.ஸி யிலும் தேறிவிட்டு வேலைக்கு அலைந்து கொண்டிருக்கிறேன். இன்னும் அதற்காகத்தான் பிரயாணம்.

என் சிந்தனைகள் கலைந்து சித்தம் தெளிந்து கோபுவைப் பார்த்த போது அவன் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான். நான் அவனை ஆசுவாசப்படுத்தினேன். சில நிமிஷ அமைதிக்குப் பின் ''கோபு ஏன் இந்த நிலை?'' என்று நான் கேட்கும் போது என் குரல் கம்மிற்று.

கோபு!

எனக்கு நீர் ஏன் இப்போது அதிகமாகக் கடிதம் எழுதுவதில்லை. அங்குள்ள ''யாராவது'' உமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார்களோ? அதனால்தான் என்னை மறந்துவிட்டாயோ? என்று எண்ணவேண்டியிருக்கிறது. ''கவனம்! உயர்ந்த ஜாதிகள் விஷ ஜந்துக்கள்'' என்று நீர் எழுதிய கடிதத்துக்குப் பிறகு என்னிடம் உம்முடைய கடிதமோ, உம்மைப் பற்றிய தகவலோ எதுவும் கிடைக்கவில்லை. ''உயர்ந்த ஜாதிகள் விஷ ஜந்துக்கள்'' என்று ஆணித்தரமாக நீர் வற்புறுத்தியது உண்மையாய் விட்டது.

தான் சொல்லப்போகும் கதைக்கு முன்னுரையாக இதை சொல்லி விட்டு நிறுத்தினான். நல்ல நாவலைப் படிக்கும் போது அடுத்த ஒற்றையை புரட்டுவதற்கு விரல்கள் துடிதுடித்துக் கொண்டிருக்குமல்லவா? அது போல அவன் வாயிலிருந்து உதிரப்போகும் ஒரு சோக ரசக் கதையைக் கேட்க என் செவிகள் துடித்தன.

''உம்'' எழுந்த நாதத்தோடு எழுந்த ஒரு பெருமூச்சு விண்ணையும் மண்ணையும் தாவிற்று. அதன் முடிவோடு தொடுத்துக்கொண்டே அவன் தன் சோகக் கதையைத் தொடங்கினான்.

''கலாசாலைக்குள் நான் காலடி எடுத்து வைத்த வருஷந்தான் கனகம் வந்து சேர்ந்தாள். நான் தாழ்த்தப்பட்டவன் என்ற முறையில் எவருடனுமே அதிகமாகத் தொடர்புகளோ, கதைகளோ வைத்துக் கொள்வதில்லை. கனகம் நல்ல அழகி. அவளோடு தொடர்புறுவதற்கு பல இளைஞர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தும் பலன் கிட்டாது வெட்கமுற்றனர். ஆத்திர மடைந்தவர்களுமுண்டுதான்.

என்னோடு அவள் நடந்து கொள்ளும் முறையிலிருந்து அவள் என்னை நேசிக்கிறாள் என்று தெரிந்தது. நான் அவள் எண்ணத்திற்கு இடம்கொடுக்கவில்லை. விலகிக்கொண்டிருந்தேன்.

எப்போதோ ஒரு நாள் இருவரும் தற்செயலாக ஒரு தனி அறையில் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. இரவு நேரம், சதி செய்தது. நெருப்பில் மிதித்தவன் போல திடுதிப்பென்று நடந்தேன். கோபால்! இதோ என்னைப் பார்! என்று சொல்லிக் கொண்டு என் கையைப் பிடித்து நிறுத்தினாள். எவ்வளவோ கெஞ்சினாள், என்னைக் கைவிடாதீர்கள் ''எனது'' உண்மையைச் சொல்கிறேன். ''பெண்கள் விஷயத்தில் நான் மிகவும் கோழை. ஆனாலும் நான் விட்டுக்கொடுக்கவில்லை. ''கனகம்! நான் தாழ்த்தப்பட்டவன். எமது காதல் நிறைவேறாது. கழுகுப் பார்வை யினர் கண்டால் நசித்துவிடுவர்''. ''நீர் தாழ்த்தப்பட்டவரென்றுதான் நான் காதலித்தேன். எமது தூய்மையான காதலுக்கு முன்னே கழுகுப் பார்வை மங்கிவிடும்''. ''தான் விரும்பி ஒரு கணவனுக்கு மாலையிட தமிழ் நங்கை களுக்கு உரிமையில்லை,''

''அதை நான் செயலில் செய்து காட்டுவேன்.'' இதை அவள் சொல்லும் போது மிகவும் உற்சாகத்தோடு சொன்னாள். ஆனால் சமூகம் அதற்கு இடம்கொடுக்குமா? எவ்வளவோ நேரம் வாக்குவாதம் நடந்தும், என் வாயிலிருந்து ''நல்ல ஒரு பதிலை'' அவளால் எதிர்பார்க்க முடியவில்லை.

என்றாலும் கடைசியில் நான் தோற்றுவிட்டேன். அவள் இன்ப வேதனையில் விம்மும் போது, உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டோடும் போது நான் ஒரு மரக்கட்டையாகவல்லவா இருக்க வேண்டும்? அவளுடைய ''இன்ப வேதனை'' நோய்க்கு நான் ''அது தீர்க்கும் டாக்டராக'' மாறிவிட்டேன். அவள் நெஞ்சிலிருந்து கரை புரண்டோடும் அன்பு வெள்ளம், என்னை அடித்துக்கொண்டு ஓடிற்று. கலாசாலை வாழ்க்கை காதல் வாழ்க்கையில் ஆறு மாதங்கள் ஆறு நாட்கள் போல மறைந்து விட்டன. ஒரு நாள் ...அதே நாள்.

நீர் எனக்கு ''உயர்ந்த ஜாதிகள், விஷ ஜந்துக்கள்'' என்று எழுதிய கடிதத்தை, இருவருமாக வாசித்துக் கொண்டிருந்தோம், உம்மைப்பற்றி யெல்லாம் அவள் நன்றாகத் தெரிந்து கொண்டதும் அன்றுதான். ''இங்குள்ள யாராவது உமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார்களோ'' என்று நீர் எழுதியதைப் படித்து விட்டு ''இருவருமே'' மெய்மறந்து போனோம்.

அன்றுதான் எங்கள் காதல் இன்னொருவனுக்குந் தெரிந்தது. வேண்டு மென்றே தேடித் தேடித் திரிந்த அந்தப் பொட்டுப் பூச்சியின் கண்களுக்கு நல்ல விருந்து.

கலாசாலைக் காதல்- அம்பலத்துக்கு வந்தது. அதிபருக்கும் தெரிந்தது. ''ஏன் ஸார்! எளிய சாதிக்கு உங்கள் கலாசாலையிலே இடமும் கொடுத்து காதலிக்கவும் இடங்கொடுக்கிறீர்களாமே'' என்று யாரோ சில காலிகள் கொஞ்சம் காரசாரமாகவும் கிண்டலாகவும் கேட்கத் தொடங்கிவிட்டனர். அப்புறம் விசாரணையில்லாமலே நான் மட்டும் வெளியேற்றப்பட்டேன்.

இதையறிந்த என் தாய்- தகப்பன்தான் எப்பவோ போய்விட்டா ரென்று உமக்குத் தெரியுமே. அதிபரிடம் போனாள், கும்பிட்டாள், மன்றாடினாள், கெஞ்சினாள், அழுதாள்! சீதனமின்றிக் கலியாணம் செய்ய மறுக்கும் வாலிபர்கள் நிறைந்த இந்த உலகிலே என் அரும் மகளைக் கரை சேர்க்க இந்த ஒருவனைத் தானே நம்பியிருந்தேன்'' என்று ஓல மிட்டாள், பலன் கிடைக்கவில்லை.

கல்லும் கரையும், அதிபரின் மனம் கரையுமா? அன்றிலிருந்து நான் கிளம்பிவிட்டேன். ஒரு குமாஸ்தாவாகக்கூட இருக்க முடியாமலா போகப் போகிறது என்று எத்தனையோ படிகள் ஏறி இறங்கினேன். பலன் கிடைக்க வில்லை. இன்றுகூட என்று அவன் முடிப்பதற்குள் ''கதைத்தது போதுங்க எடுங்க காசை! என்று கண்டக்டர் கொஞ்சம் பரிகாசம் கலந்த குரலில்

கேட்டான். இப்போது அவனைப் பரிகாசம் செய்வார்கள்தானே! கிழிந்த சட்டைப் பைக்குள்ளே கையை விட்டுத் துளாவினான் கோபால். ''அது கீழே போய் விட்டது'' என்பதை அவன் முகமாறுதல் எடுத்துக் காட்டிற்று. ''ஏனப்பா விழிக்கிறே எடுப்பா கெதியா'' என்று கொஞ்சம் அதட்டினான் கண்டக்டர். உடனேயே நான் கண்டக்டரைப் பேசிவிட்டு இருவரின் காசையும் விட்டெறிந்தேன். சிறிது தூரம் சென்றதும் தான் இறங்கப் போவதாக கோபாலன் பஸ்ஸை மறித்தான். அவன் இறங்கும் போது என் பார்ஸிலிருந்து ஒரு பத்து ரூபா நோட்டை எடுத்து அவன் கையில் வைக்கும் போதே ''கோபால்! இப்போது நான் வேலைக்குத்தான் போகி றேன், போய் கடிதம் போடுகிறேன் வா. என்னோடேயே அங்கே ஏதாவது வேலை பார்க்கலாம் என்றேன். கையில் விழுந்த பணத்தை உடனேயே என் மடியில் போட்டு ''வேண்டாம் ரகு எனக்கெதற்கு?'' என்று சொல்வ தற்குள் பஸ் கிளம்பிவிட்டது. அவன் உருவம் மறையும் மட்டும் பார்த்துக் கொண்டே வந்தேன்.

நான் போன காரியம் வெற்றி பெறவில்லை. என்னிலும் பார்க்கத் தகுதி கூடிய ஒருவர் அதைத் தட்டிக்கொண்டு போய்விட்டார். படித்தவர் களுக்கு மரியாதை கொடுக்காத ஆளவந்தார்களை திட்டிக்கொண்டு திரும்பினேன். ரயிலிலிருந்து இறங்கிப் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும் கோபுவின் எண்ணம் உண்டாயிற்று. சிந்தனைச் செறிவின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு தத்தளித்த என்னை தெருவில் நின்ற ஒரு கூட்டம் கவர்ந்தது. தெருக் கூட்டம் கவனித்துக் கொண்டிருந்த திக்கை நோக்கி என் கவனத்தைத் திருப்பினேன்.

ஐயோ! என்ன அக்கிரமம்! என் கோபால் உலகப் பற்றுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டு நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். இல்லை! அவன் உடலம் மரக்கிளையொன்றில் தொங்கிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் கழிந்து, அதே இடத்தில் இன்னொரு செயல் இடம்பெறு வதை சினிமாத் திரையில் நாம் கண்டிருக்கிறோம். அதே போல அன்று அவன் ''நடைப்பிணம்'' இன்றைய தினம் இந்தக் காட்சி என் நெஞ்சில் பொறிக்கப்பட்டு விட்டது, என்றும் அழியாது.

# வீணில் மாயாதே (போட்டிக்கதை)

*N. சின்னத்தம்பி*

மாயா என்பது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நதி, திடீரென்று பெருகும். அதேமாதிரி வற்றும். இந்த மர்மத்தைக் கொண்டுதான் அதை மாயா என்றனர் போலும். அந்த மாயா, மணல்களைக் கொண்டு வந்து பரப்பி யிருந்தது அதன் தீரத்தில், உயர்ந்த மரங்களுக்கிடையில் அமைந்திருந்த மணல் வெளியும், 'சல சல'வென்ற தென்றலோடு கூடிய குழுமையும், மாயாவை அழகுபடுத்தின. மாலை நேரமாயிற்று. மரங்களுக்கிடையில் போகிறேனென்று பல்லை இழித்தது பகற்பொழுது.

வெயில் சாந்தமென்று, மந்தமாய்க் கண்ணை மூடிக்கொண்டிருந்தது. அதை இன்பமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஒரு நங்கை. அவள் மாயா நதிக்கரையில் அமைந்துள்ள கற்பாரில் வீற்றிருந்தாள். இளம் வயது. அழகோடு கூடிய உடல், சாந்தமான பார்வை. ஆனால் அவள் அழகுக்கும் அவள் சாயலுக்கும் வெகு தூரத்தை எடுத்துக்காட்டியது, காணப்பட்ட சில மாற்றங்கள். தலையில் சடாமுடி வைத்திருந்தாள். கழுத்தில் உத்திராட்சம், கையில் செபமாலை, நாகரிகத்தை உதறித்தள்ளிய உடை, மாய வாழ்விலே நீயேன் மயங்குகின்றாய், என்பதை எடுத்துரைத்தது அவள் தோற்றம். அவள் வானத்தை நோக்கி ஏதோ காணாததைக் கண்டு கொண்டிருந்தாள். சற்றுத் தூரத்தில் சில வாலிபர்கள் குதூகலமாய்ப் பேசிப் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தனர். ஒரு வாலிபன் அப்பெண் சாதுவை நோக்கி வந்து கொண்டிருந்தான். கம்பீரமான தோற்றம், அழகான உடை, முகவாக்கும் அழகானதுதான். அவனைப் பார்ப்பவரெவரும் அவனை ஒரு பிரபுவின் மகனென்றே கண்ணை மூடிச் சொல்லிவிடலாம்.

பாவம், அப்படிப்பட்டவன் ஏன் அந்த உலகத்தை வெறுத்த, சாதுப் பெண்ணின் காலுக்கு மண்டியிட வேண்டும். சாந்தா! நீ என்னை மன்னித்துக் கொள். சத்தியமாக நீ என்னை மன்னித்துக்கொள். சத்தியமாக நீ என்னை மன்னித்துக்கொள், என்று அவன் கெஞ்சிக்கேட்டுக் கொண்டே அவள் பாதங்களைப் பற்றினான். சாந்தா துடித்தாள். 'சிவசிவா' என்று பலமுறை கூறினாள். சுவாமி என்னைத் தீண்டாதீர்கள் என்று கூறிச் சற்று நகர்ந்து நின்றாள். அவள் மனத்திரையில் எண்ணங்கள் தொடரலாயின. அவள்

வாழ்க்கையின் நிகழ்ச்சியெல்லாம் மனக்காட்சியிற் பிரதிபலித்தன. அன்றொரு நாள் சாந்தாவுக்குக் கிடைத்த கடிதமிது. இதுதான் அவள் எண்ணத்தின் ஆரம்பம்.

எனதாருயிர் அன்பே!

உனதாருயிர் நண்பன் உயிர்க்குயிராக எழுதுகின்றேன். நான் திடீரென்று வியாபார நோக்கமாய்த் தேசாந்திரம் போகவேண்டி ஏற்பட்டுவிட்டது. கடைசி நாளல்லவா? பேச வேண்டியவை அதிகம். என்னை எப்படியும் அந்த இடத்திற் சந்திப்பாய் காத்திருக்கிறேன், உன் அன்பான வரவை எதிர்பார்த்து.

இப்படிக்கு,
உண்மைக் காதலன்
சுந்தரராசன்.

கடிதத்தைக் கண்ட யௌவன மாது தவித்தாள். அழகுக்கழகு செய்யும் அவள் பூரண உடல் துடித்தது. மரமாய்க் காட்சியளித்த அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வேண்டிய வேலைகளைச் செய்தாள். மருந்து முதலானவைகளைப் பக்குவமாய்க் கொடுத்தாள். தந்தையின் உடலை இழுத்து மூடினாள். எலும்புக் கூடாய்க் காட்சியளித்த அவ்வுடல் உயிர் போகுந்தறுவாயில் இயங்கிக் கொண்டிருந்தது. பாவம், ஒருபக்கம் இளம்பருவத்து முற்றிய காதல். மறுபக்கம் உயிர் முற்றாகப் பிரியாத தந்தையின் உடல். மனம் கொந்தளிக்கப் புறப்பட்டாள் அவள்.

ஆ சண்டாளி! பெற்ற தந்தையின் உயிர் உடலைவிட்டுப் பிரியப் போகின்றது. அவள் கணப்பொழுதிற் கண்ட காதலனைக் காணப் புறப்பட்டு விட்டாள், என்று அவள் மனம் உறுத்திக் கூறியது. அலங்கோலமாய்க் கிடந்த ஓலைக் குடிசையைப் பின்வைத்து முன்னடந்தாள் அவள். கால்கள் முன்னும் பின்னும் இழுத்தன. காதல் பொல்லாதது அல்லவா? அதற்குச் சந்திரனுஞ் சலுகை செய்பவன் போல் தன் உதய கரத்தை நீட்டினான்.

மணி பன்னிரண்டு இருக்கும். உலகமே அமைதி அமைதியென்று நிசப்தமளித்தது. பேய்களுமுறங்கும் அந்த அர்த்தசாமத்தில் பூலோக கன்னிகை மாத்திரம் விழித்துக்கொண்டிருந்தாள். அவளை வானலோகச் சந்திரன் காதலித்து நட்சேத்திரப் பூங்காவில் உலவிக்கொண்டிருந்தான். மரஞ்செடி கொடிகளெல்லாம் அமைதியாய் அசைவற்று நின்றன. வானை நோக்கிய கோபுரங்கள் இரண்டு தலையை நீட்டி உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தன. கூரிய இளமுலைகளை நீட்டிய கற்சிலைகளின் மேல்,

வெண்ணிலவை ஊற்றிக்கொண்டிருந்தான் சந்திரன். அவைகளுக்கிடையில் வனதேவதை போல், மெல்ல நடந்துகொண்டிருந்தாள் அந்த நங்கை.

அப்போது விரிந்திருந்த மல்லிகை மலர்கள் ஒன்றுகூடிச் சிரித்தன. அடிபோடி காமப் பைத்தியகாரியென்று ஒரு ஆந்தை அமைதியைக் குலைத்து ஒரு தரம் அலறிற்று. அப்போது அவள் இதயம் நடுங்கி மயிரும் சிலிர்த்தது. ஆந்தை, கோட்டான், பக்கிள் என்பனவெல்லாம் யமதூதர்கள் என்ற ஊரவர்களின் சாதாரண பேச்சு அவள் தந்தையின் உயிரை ஞாபக மூட்டிற்று, அவள் கற்சிலையொன்றிற் சாய்ந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். அப்போது தென்றலும் ஒருதரம் அசைந்து மறைந்தோடிற்று.

காமந்தலைக்கேறிய சுந்தரராசன் கற்சிலையை அந்த நங்கையென்று தழுவி ஏமாந்து பின் அவளை முத்தமிட்டான். அந்த முத்தத்தின் பலன் அவன் வாயிற் கண்ணீர்ச் சுவைதான் பட்டது. அவன், கண்ணே! ஏன்? இந்தக் கோலமென்றான். காதல்! அதைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம். அப்பாவுக்குக் கடுமையான வருத்தம். நான் கெதியாகப் போகவேண்டுமென்று அவள் சுருக்கமாகக் கூறி முடித்தாள். சுந்தரராசன் சிறிது நேரத்துள் அவளை விடுவித்தான். அவள் அவன் திரும்பி வந்து தன்னை விவாகஞ் செய்வானென்று நம்பி விடுபட்ட கைதி போல் நடந்தாள். அப்போது மேகச் சிறையுள் அடைபட்டுக் கிடந்த சந்திரன் ஒய்யாரமாக வெளிவந்தான். அந்த நிலா வெளிச்சத்தில் சுடுபட்ட விட்டிற் பறவைபோற் பறந்து சென்றாள் அப்பாவிப் பெண்.

ஓடிச் சென்ற அவள் தந்தையின் உடலை முதலில் நாடினாள். அது வெறுங் கட்டையாக மாறியிருந்தது. கண் கண்ட காதலின் பலன் பெண்ணைப் பெற்ற பிதாவுக்குச் சதியா என்று கண்ணீர் சொரிந்தாள். நாட்கள் பல துன்பமாகவே கழிந்தன. சுந்தரராசனின் கடிதமாவது, அவனைப் பற்றிய வதந்தியாவது, அவளுக்கு எட்டவில்லை. தாசி, வேசி யென்று ஊரார் அவளை வசை மொழி பேசினர். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், அவள் சுந்தரராசனை நினைந்து உருகிய வண்ண மிருந்தாள்.

ஒருநாள் அவள் சுந்தரராசனுக்காகக் கோயிலில் அர்ச்சனை செய்து விட்டு, அவனைப் பற்றியும், வருங்கால வாழ்க்கையைப் பற்றியும் கற்பனைச் சித்திரம் வரைந்து கொண்டிருந்தாள். அவள் கற்பனையில் வான மண்டலத்துக்கு மேல் கோபுரமொன்றைக் கட்டி, நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையில் மாய வண்டாகப் பறந்து திரிந்தாள். வாழ்க்கைப்

பூங்காவில் மலர் மணமாக மாறி மாறி வீசினாள். பெண்ணுள்ளங்களில் புகுந்து என் வாழ்க்கை புதிய வாசனையடி, என்று கூறி வந்தாள். இப்படி அவள் உள்ளத்தின் அலைகள் பெருகிக் கொண்டேயிருந்தன.

பாவம், அவள் மனம் ஓடிச் சென்ற வேகத்தைக் கலைத்தது அந்த ஊரின் தெற்குக் கோடியில் நடைபெற்ற நாத கீதம். கூர்ந்து கவனித்தாள் அவள். மேளக் கச்சேரிகள், வாணம், வெடி என்பவற்றின் பீறிட்ட ஓசைகள் என்பனவெல்லாம் அவள் மன நிலையைக் குலைத்தன. அவள் என்ன வேடிக்கையென்று பார்ப்பதற்காக விரைந்தோடினாள். கண்டாள், கண்டந் தக்கணமே ஓவென்றலறி வீழ்ந்தாள்.

வேறொன்றுமில்லை, அவள் காதலன் சுந்தரராசன் வேறொரு பெண்ணை மணந்து, ஒய்யாரமாகப் பவனி வந்துகொண்டிருந்தான். கணப்பொழுதில் அந்தக் கோஷ்டி அவளைத் தாண்டிச் சென்றது. தெருவில் போன ஒருத்தி அவளைப் பார்த்து, அடி! நீ தெருவோடு தெருவாய்த் திரியவேண்டியதுதான் என்று வன்மமாகப் பேசிவிட்டாள். என்ன கொடுமை, அவள் மனம் கல்லாக மாறியது. கண் திறந்து பெருகிக் கொண்டிருந்த மாயா நதியை நோக்கி விரைந்து சென்றாள். மாயாவும் அவளை ஏற்கத் தயாராக இருந்தது.

அந்திவானம் அபாயம், அபாயம் என்று எழுதிக்காட்டியது. ஆற்றின் ஓம் ஓம் என்ற இரைச்சல் வா வா என்றழைப்பது போல் இருந்தது. வேகமாய் வீசிய புயல்காற்று அவள் பிடரியைப் பிடித்துத் தள்ளிச்சென்றது. சாந்தா ஆற்றில் பாய்ந்தாள். சாந்தா, சாந்தா.

சாந்தா யாருமில்லை, உயிரை மாய்க்கத் துணிந்த இச்சண்டாளத் துறவிதான். ஆனால் சாந்தா உயிரை மாய்த்திருப்பாள். கணப்பொழுதில் அவள் மனம் மாறி விட்டது. அதை ஏன் என்றுதான் கேட்பீர்கள்.

நினையாப் பிரகாரமாய்க் கேட்கிறது. என்ன அருமையான கீதம். என்ன அருமையான குரல். மாயா நதியோரத்தில், மரக்கிளையொன்றில் அமர்ந்த, சிறுவனொருவன் பாடுகின்றான். அவன் பாட்டின் இனிய நாதம் காற்றில் இரண்டறக்கலப்பதாயிற்று. சிறுவன் மேய்த்த பசுக்கள் கடித்த புல்லுடன் அசையாது நின்றன. கன்றுகள்தானும் விளையாட்டை நிறுத்திக் கொண்டன. காகமும் ஏறப் பழமும் விழுவது போன்ற அந்த நிகழ்ச்சி என்ன புதுமை!

''கனவெனும் வாழ்வினில் கலங்கி விடாதே
காதலால் யாரையும் நம்பி மாளாதே - மனமே
ஈசன் நாமத்தைப் போற்றுவாய் தினம் போற்றுவாய்''

இதுதான் அவன் பாட்டின் சில அடிகள். சிறுவனைப் பார்த்த அளவில் அவன் செவியேறலிற் பொறுக்கியெடுத்த அடிகள் எனலாம். இந்த அடிகள் சாந்தாவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன போலும். அவள் சுய உணர்வு வரப் பெற்றவளானாள். யார் பாடுவது, மாடு மேய்க்கும் இடையனா? ஆம். இல்லை. மாடு மேய்க்கும் மடையனுக்கு ஏது இந்த மதிநுட்பம். ஆகா சாட்சாத் பரமேஸ்பரன்தான் என்னை நல்வழிக்குத் திருப்பியிருக்கிறார் போலும்.

சுவாமி நான் என்னை மறந்து வாழ்ந்துவிட்டேன். இன்பமே உலகமென்று அதிலே சுகிர்த்துவிட்டேன். காதலே பெரிதென்று அதைக் கங்கணமாகக் கொண்டேன். கடைசியாய் அதற்காக உயிரை விடவும் துணிந்தேன். என்ன மதியீனம். என்னை மன்னியுங்கள். இந்த அபலை உங்கள் அடிமை என்றென்றும் உங்கள் நாமத்தை உச்சரித்து, உயிர் வாழும் பாக்கியம் பெற்றேன். இதுதான் அவளின் துறவுக்கோலத்துக்கு ஆரம்ப முண்டாக்கிற்று. 'சிவசிவா' என்று கூறி அவள் வெளிக்கிளம்பினாள். இப்படியே அவள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், எண்ண அலை களாகத் தோன்றிக்கொண்டிருந்தன.

இதற்கிடையில் என்னை மன்னித்துக்கொள் என்று கேட்டுக்கொண்டு நின்ற சுந்தரராசன், சாந்தா! சத்தியமாக உன்னைக் கைவிடமாட்டேன். திரண்ட செல்வத்துடன் அரண்மனையில் வாழும் இன்ப வாழ்க்கையை அவமதிக்காதே என்று கெஞ்சிக்கொண்டே அவள் கையைப் பற்றினான். அவள் சிவசிவா என்று கூறிக்கொண்டே சுவாமி! தயவுசெய்து என்னை மன்னியுங்கள். எல்லாவற்றையும் வெறுத்துத் துறவு பூண்ட அடிமைக்கு அரண்மனை வாழ்வும் சுகபோகமும் நீக்கப்பட்டன. அந்த நாளையில் காதலைப் பெரிதாக மதித்தேன். உங்கள் செல்வத்தை மேலாக எண்ணினேன். அந்த ஆசையெல்லாம் எனக்கு மறைந்துவிட்டது சுவாமி. நான் அப்போது சாந்தாவாக இருந்தேன். இப்போது இந்தச் சாந்தா என்னுடையதல்ல. இது ஈசனுக்குடையது. என்னைப் போகவிடுங்கள் சுவாமி.

சாந்தா நீ என்னை வீணே வெறுக்காதே. நான் உன்னை உண்மை யாகவே காதலித்தேன். விதி என்னை வேறொருத்தியிடம் மாட்டிவிட்டது.

அவள் இப்போது இறந்தொழிந்தாள். நாம் உண்மை வாழ்வு வாழலாம் மறுக்காதே வா.

சுவாமி! விதியென்பதெல்லாம் நியாயம் கூறமுடியாதவிடத்து, எடுத்துரைக்கும் சாட்டு என்பதை நம்புங்கள். நீங்கள் விரும்பாமல் எதுவும் நடக்கமுடியுமா? பணம் பணத்தைத்தான் விரும்புகின்றது. நான் ஏழையாக இருந்தேன். நீங்கள் பணப் பேழையாக இருந்தீர்கள். உலகத்தில் செல்வர்கள் கெடுத்து வைத்த ஏழைக் கன்னிப்பெண்களின் வாழ்க்கை அதிகம் சுவாமி. ஏழைப்பெண்கள் பணத்தை விரும்பி, வாழ்க்கையைப் பிணமாக்கிக்கொள்கிறார்கள். இதைக் கண்டும் கேட்டும் அறிந்துமிருக் கிறேன் சுவாமி. ஆனால் இந்த ஏழை உங்கள் பணத்தை நம்பிக் காதல் கொண்டவளில்லை. காதல் தெய்வீகமானது, அது அழிக்க முடியாதது, பிரிக்க முடியாதது, தெய்வத் தன்மை பொருந்தியது, உண்மை வாழ்வுக்கு வழித்துணையாவது, பரலோக வாழ்க்கைக்கு வழிகாட்டுவது. சுவாமி! நீங்கள் மேற்கொண்ட காதலை நான் கைக்கொண்டவளல்ல. காதல், காதலின்றேல் சாதல். என் காதல் இறந்து விட்டது. சுவாமி அந்த மனம் இப்போது இல்லை. அது மடிந்து விட்டது. அது எப்படி உயிர் பெறும். இறந்த உயிர் மீண்டும் வருவதில்லை. அதுபோல் இழந்த காதல் மீண்டும் காதலாவதில்லை. என் காதலெல்லாம் இப்போது ஈசனிடத்தில்தான். தாங்கள் அக்காதலுக்கு உதவி செய்தீர்கள். எனக்கு வழிகாட்டினீர்கள், சுவாமி! அதற்காக அடியேன் உங்களுக்கு வணக்கம். நான் போய் வருகின்றேன். என்னை மன்னியுங்கள்.

சாந்தா! போகாதே, தயவுசெய்து கேள். நான் என்ன செய்யவேண்டு மென்று சொல். அப்படியே செய்து வைக்கின்றேன். நீ தெய்வப்பிறவியாகி விட்டாய், நான் அதை இழந்த பாவியானேன். என்ன செய்யலாம்.

சுவாமி! எல்லாம் மனிதனைப் பொறுத்த விஷயந்தான். எடுத்ததற் கெல்லாம் விதியையும் கடவுளையும் பழி சுமத்தலாகாது. தாங்கள் தங்களை விரும்பும் ஒரு ஏழையை மணந்து கொள்ளுங்கள். காதலென்று கூறி ஏழையின் வாழ்க்கைக்குப் பாழ் செய்யும் பணக்காரப் பித்துகளுக்குப் போதனை செய்யுங்கள். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளினை ஒக்கும் எனப் பகருங்கள் என்று கூறிக்கொண்டே நகர்ந்தாள் சாந்தா. அந்த நேரம் மாலை வேளை மாறிவிட்டது. வானத்தில் தாரகைகள் விசிறிக்கிடந்தன. வெண்மதி உதயமாகிக்கொண்டிருந்தான். சுந்தரராசன் வானத்தை நோக்கிய வாறே நின்ற நிலையில் மரமாகக் காட்சியளித்தான்.

# மன்னிப்பா! (போட்டிக்கதை)

*V.* சந்திரசேகரம்

நான் பிரின்ஸ்பல் அறையை விட்டு வெளிவந்ததைக் கண்ட சாலிஹூக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவனிலும் கூடிய மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டதென்பதை அவன் உணர்ந்தால்தானே!

"என்ன குமார்? காயா? பழமா?" என்றான். "குமார் கால்வைத்தால் குதிரைக்கொம்பாகவா போய்விடும்" என்றேன். இதிலிருந்தே அர்த்தத்தைப் புரிந்துகொண்ட சாலிஹ் விர்ரென்று பறந்து சென்றான். அவன் போன போக்கிலேயே சரணுக்குத் தந்தி கொடுத்துவிட்டு வரத்தான் போகிறான் என்று தெரிந்து கொண்டேன். நானும் என் அறைக்குச் சென்று புதியதோர் கட்டில் கொண்டுவந்து போட்டு ஆகவேண்டிய ஒழுங்குகளைக் கவனித்தேன்.

சரண் என்பது திருகோணமலையிலுள்ள ஒரு கம்பெனிக் குமாஸ்தா. எங்களுக்குச் சற்றுப் பரிச்சயமானவர்தான். அவர் எங்களுக்கு மாற்றலாகி யிருந்தமையினால் என்னையும், சாலிஹையும் ஒரு ஜாகை பார்த்துத் தரும்படி எழுதியிருந்தார். உண்ண உணவு கிடைத்தாலும், உறங்க வீடு கிடையாத இந்தக்காலத்தில், காலேஜ் மாணவர்களாகிய எங்களுக்கு வீடு தர யாரும் முன்வரவில்லை. எனவே இருவரும் செய்த யுக்திதான் காலேஜ் பிரின்ஸிபலின் உத்தரவு பெற்று எங்கள் அறையில் அவருக்கும் ஒரு இடம் கொடுப்பதெனத் தீர்மானித்தோம். இதற்காகத்தான் நான் முதலில் பிரின்ஸிபலின் உத்தரவு பெற்றுக்கொண்டு வந்தேன்.

இடையில் சாலிஹூம் போஸ்ட் ஆபீஸிலிருந்து வந்து சேர்ந்தான். இருவரும் அறையை ஒழுங்கு செய்து வைத்து விட்டு உலாவப் புறப் பட்டோம். சரணுக்கு நாங்கள் இடங்கொடுக்கச் சம்மதித்தது அவர் ஆபீஸ் குமாஸ்தா என்பதற்கல்ல. அவர் ஒரு சிறந்த எழுத்தாளனும்கூட. பிரபல இந்தியப் பத்திரிகைகளிலும் எழுதிப் பரிசுகள் பெற்ற ஒருவர். அவர் எங்களுடனிருப்பதால் எங்களுக்கே ஒரு தனிமதிப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாமல்லவா? அன்றியும் அவரது எழுத்து வன்மையும் கலையனு பவமும் எம்மைச் சார்ந்தும் நாமும் ஒரு சின்ன எழுத்தாளனாகவாவது வரமாட்டோமா? இதையெல்லாம் உத்தேசித்துத்தான் காரியத்திலிறங்கி னோம்.

அடுத்த நாள் காலை ரயிலில் சரண் வந்து சேர்ந்தார். எங்களுடன் இருக்கையும் எங்கள் ஹாஸ்டலுக்குப் பக்கத்திலுள்ள மணி ஹோட்டலிற் சாப்பாடுமாகக் காலந்தள்ளினார். அவர் சில சமயங்களில் எங்கள் கிளாஸுக்கு வருவார். ''பிறீ'' பீரியட்டாக இருந்தால் எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொள்வோம். ஏதாவது சில ருசிகர சம்பவங்களைச் சொல்வார். அதிலிருந்து அவருக்கு, பேச்சு வன்மையும் உண்டென்று உணர்ந்துகொண்டோம். எனவே, அவ்வாரம் எங்கள் காலேஜில் நடைபெற விருந்த மதுவிலக்கு இளைஞர் மகாநாட்டிற்கு அவரையும் அழைத்தோம். அவரும் அதற்கு இணங்கினார்.

''எதிர்கால உலகத்தின் அஸ்திவாரத் தூண்களாகிய இளைஞர்களே! மது என்னும் கொடிய அரக்கனை நம் நாட்டினின்றும் விரட்ட உம்போன்ற ஏறுகளாற்தான் முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் முன்வந்து மது விலக்குக்காகச் சத்தியாக்கிரகம் செய்தாலன்றி நம் நாடு சுபீட்சமடையாது. மதுவிலக்குக்காக நாம் தோளோடு தோள் கோர்த்துத் தொண்டாற்ற வேண்டியது மிக மிக முக்கியமானதொன்று, வீறுபெற்று விழிப்படைந்து மதுவரக்கனை நாட்டைவிட்டு ஓட்டுவோம்'' என்றெல்லாம் உணர்ச்சி ததும்பச் சொற்பொழிவாற்றினார்.

இதனால் எங்கள் ஆசிரியர்களுக்கெல்லாம் அவரைப்பற்றி ஒரு நல்லெண்ணம் ஏற்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டம் கலைந்ததும் எல்லோரும் ஹாஸ்டலுக்குப் போனோம் அங்கு சென்றதும் அவர் தனக்கு எங்கோ தேநீர் விருந்தொன்று இருப்பதாகக்கூறி வெளியே சென்றார்.

சாய்வு நாற்காலியில் இருந்தவாறே அவர் வைத்துச் சென்ற புத்தகத்தை எடுத்துப் புரட்டிக்கொண்டிருந்தேன். ''என்ன குமார்? சரண் எங்கே?'' என்று கேட்டவாறே உள்ளே நுழைந்தான் சாலிஹ். ஆளுக்கொரு புத்தகத்தைப் புரட்ட ஆரம்பித்தோம். ''குமார்? இது என்ன?'' என்று ஒரு கவரை நீட்டினான். கவரின் ஒரு மூலையில் ''இரகசியம்'' என்று ஆங்கிலத்திற் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அது சரணுடைய எழுத்தென்பது எனக்குப் புரிந்துவிட்டது. தபால்கூட சரணுக்குத்தான் வந்திருந்தது, ''சரி! என்னதான் இரகசியம் பார்ப்போமே'' என்று கையிலிருந்ததைப் பறித்தான் சாலிஹ்.

பிரிய சரண்!

இவ்வளவு ஆஷாடபூதித் தனமாக நீங்கள் இருப்பீர்களென்று எனக்கு இதுவரை தெரியாது. இருந்தும் தாங்கள் இவ்வளவிற்குப் பிறகு இனியும் பாராமுகமாயிருப்பது நியாயமற்றது என்று எனக்குப்படவே நண்பன் என்ற ஹோதாவில் என் கடமையைச் செய்து வைக்கின்றேன்.

நேய! கமலா ஒரு பாவமும் அறியாதவள். அறுபது வயதுக் கிழவன் பதினாறு வயது யுவதியை மணப்பது நியாயமற்றது என்ற உமது சீர்திருத்த மேடைப் பிரசங்கத்தை நம்பி, தன் உணர்ச்சிக்கு அடிமையாகித் தன் கணவனைக்கூட வெறுத்து உன்னையே சதமென்று வந்தது அவள் பிழையல்ல. இருந்தும் ஆறுமாதக் கர்ப்பிணியாகிய அவளை நடுத்தெருவில் ''விபச்சாரி'' என்று சந்தி சிரிக்க வைத்துவிட்டு விமலாவை மணம்செய்வதாக அவள் தந்தையிடம் கூறி இரகசியமாக விவாகப் பதிவுகூட வைத்துவிட்டு ஒரு பாவமும் அறியாதது போல நடிப்பது நியாயமல்ல.

நடுத்தெருவிற் பிரக்ஞையடைந்து கிடந்த கமலா அனாதையாக ஆஸ்பத்திரியிற் சேர்க்கப்பட்டிருக்கிறாள். போனது போக அவள் வயிற்றிற் பிறந்த உனது குழந்தை வரதனையாவது வந்து ஏற்றுக்கொள்ளுங்கள். இது உன் கடமையென்பதை நான் வற்புறுத்திக்காட்டவேண்டிய அவசியமில்லை. இந்தத் தபாலையும் நீர் ஏற்கமறுத்தால் இதுவே நமது நட்பின் இறுதி.

நண்பன்,
யோகம்

சாலிஹ்! என்றேன். ''ஏன் குமார்? மோசம் போனது நாம்தான். இதற்கு முடிபு ஒன்று விரைவிற் தேடியாக வேண்டும்''. என்றான் ஆத்திரத்துடன். எனக்கு உடம்பை என்னவோ செய்தது. சொல் ஒன்று செயல் ஒன்றாகும். இவர் பான்மையைக் கண்டு உள்ளம் கொதித்தது. இவ்விதம் ஹிம்சிக்கப்படும் சகோதரிகள் மீது எனக்கே ஓர் பச்சாதாபம் ஏற்பட்டது. இதுதான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று கொள்ளும் உத்தமரது பான்மையோ? மற்றோர்க்கு நல்வழி காட்டுகிறோமென்று இருட்டில் போய் முட்டிக்கொள்ளும் உவர்ந்த நோக்கமோ? ''தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்த பிறர் குறுகும் வெங்குறை தீர்க்கிப்பார் விழுமியோர்.'' என்ற விளக்கமோ? என்றெல்லாம் என் உள்ளம் பொருமியது.

இரவு மணி எட்டாயிற்று, எட்டரையுமாயிற்று சரண் வந்தபாடில்லை. ஹோட்டல் பையன்கூட ஒரு தரம் வந்து ''விசிற்'' பண்ணிவிட்டுப் போனான். அறைக் கதவைச் சாத்திவிட்டுப் படுத்துக்கொண்டேன். கதவு தடாரென்ற சப்தம் கேட்டுக் கண்விழித்தேன். சரண் அவரது கட்டிலிற்

கிடந்தார். என்ன என்றுமில்லாத மாதிரி வந்ததும் வராததுமாக உடுப்புக்கூட மாற்ற நேரமற்று படுத்துக்கொண்டீர்களே? என்றேன். பேசவேயில்லை. லைற் வெளிச்சத்தில் முகத்தை உற்றுநோக்கினேன், சந்தர்ப்பம் ஒன்றியதாய் ஏதோ ஒரு வாசனை என் முகத்திற் தட்டியது. நான் திணறிப் போனேன்.

பேசாது படுக்கையை அடைந்தேன். அவரது பட்டத்தையும், பதவியையும் நம்பி மோசம் போனோமே என்று என் மனம் எண்ணாததெல்லாம் எண்ணிற்று. ''யாவர் ஒருவர் ஒருவர் தம் உள்ளத்தை தேருடமையுடையவர்'' என்ற சமணரது வாக்கு ஞாபகத்திற்கு வந்தது. இவர் குடியர் என்ற விஷயம் ஒருகால் பிரின்ஸிபலுக்குத் தெரிந்தால் அப்புறம் என்கதி என்ன ஆகுமோ? காலேஜையே விட்டு நம்மையும் வெளியேற்றி விடுவாரோ? இந்த மயக்கத்திலே அவரை எங்கேயாவது கொண்டு போய் ஒரு நண்பரது வீட்டில் விட்டு வந்து விடுவோமா? சேச்சே! அப்படி யார் இருக்கிறார்கள்? என்றெல்லாம் எண்ணியவாறே கண்ணயர்ந்தேன்.

குமார்! என்ற அதட்டல் கேட்டு விழித்தேன். வைஸ் பிரின்ஸிபல் நின்ற நிலையில் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ''இது என்ன இந்தப் பிணம்? இவனைத் தானா நல்லவன் என்றாய் என்று அதட்டினார். ''மன்னியுங்கள் ஸார்! இப்படியாகுமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை'' என்றேன். இந்த ஆரவாரம் கேட்ட சாலிஹ் அங்கு வந்தான். அந்தக் கணத்திலேயே அவனுக்கு விசயம் புரிந்துவிட்டது. ''இதை நாங்கள் சுத்தம் செய்து விடுகிறோம் சார்! மன்னியுங்கள் என்றான் அவன், ''மன்னிப்பாம் மன்னிப்பு. ஊரளப்பையெல்லாம் முன்பின் அறியாமலேயே அள்ளிப்போட்டுக்கொள்கிறது. அப்புறம் மன்னிப்பாம் கத்தரிக்காயாம்'' என்று உறுமியவாறே ''கம்ஹியர் குமார்'' என்று கட்டளையிட்டு நகர்ந்தார். அதைக் கவனிக்கும்படி சாலிஹூக்கு சமிக்ஞை செய்து விட்டு அவரைப் பின்தொடர்ந்தேன்.

அவர் நேரே தனது ரூமுக்குப் போனார். ''இப்படி உட்கார்'' என்றார் சாந்தமாக. என்னை நிமிர்ந்து பார்த்து அவர் ''ஏன் அழுகிறாய்? இவைகளெல்லாம் மனித சமூகத்தில் நடைபெறாதவையல்ல. இது விஷயம் பிரின்ஸிபல் அறிந்தால் என்ன நடக்குமென்று உனக்குத் தெரியாதா?'' என்றார். ''ஸார்! அவர் குடிப்பவர் என்று எனக்குக் கனவிலும் தெரியாது. தெரிந்திருந்தால்''. ''அது சரி குமார்! அவனை எதுவிதத்திலும் வெளியிலே ஜாகை பார்த்துக்கொண்டு போகச் சொல். இது உனக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும். இது விஷயத்தை வெளியில் விடாதே. பிரின்ஸிபல் அறிந்து

விடுவார். அன்றியும் நமது காலேஜுக்கே அவமானமில்லையா? சரி! போ காலை வேளைக்குள் இடத்தைச் சுத்தஞ்செய்து விடுங்கள்'' என்றார். நேரே அறைக்குச் சென்றேன். அங்கே சாலிஹ் அவர் வாந்தியெடுத்ததைச் சுத்தம் செய்து கொண்டு நின்றான். பின் இருவரும் அவரைத் தூக்கிக் கட்டிலிற் கிடத்தினோம். ஒன்றுமறியாதவர்கள் போல் அவரவர் படுக்கைக்குச் சென்று படுத்துக்கொண்டோம்.

காலையில் நானும் சாலிஹும் நேரே வடிவேலிடம் சென்றோம். வடிவேல் என் உடன் மாணவன். ஊர் முழுவதும் அவருக்கு நன்கு பரிச்சயம். இதனால் அவரது உதவியோடு ஜாகை தேடிப் புறப்பட்டோம். எங்கெல்லாமோ அலைந்து கடைசியாக நூறு ரூபாய் லஞ்சம் கொடுத்து இருபத்தைந்து ரூபாய் வாடகையில் ஒன்றை அமர்த்திக் கொண்டோம். மணியும் பன்னிரண்டானதினால் வடிவேலின் வீட்டிலேயே மத்தியானம் எங்களுக்கு விருந்து நடந்தேறியது. இரண்டு மணி சுமாருக்குக் ஹாஸ்டலுக்கு வந்தோம்.

நேரே என் அறைக்குச் சென்றேன். அங்கு சாய்வு நாற்காலியிற் சரண் படுத்திருந்தார். கையில் முதல் நாளைய இரகசியக் கடிதம் காணப்பட்டது. நாங்கள் பார்த்துவிட்டதை அவர் அறிந்துவிட்டாரென்று அவர் முகமே சான்று பகன்றது. முகம் பேயறைந்தது போன்று காணப்பட்டது. குமார்! என்றார் தழதழத்த குரலில். எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. நன்றாக உதைத்து வெளியே துரத்தி விடுவோமா? என்று கூட எண்ணினேன். சே! இது என்ன மடமை என்று பேசாதிருந்தேன். ''அதிகம் பிரயாசையோ'' என்றார். ''தெய்வச் சோதனைக்கு நாம் ஆளாகாதிருக்க முடியுமா?'' என்றேன் நான். ''இல்லை குமார் சிறிதுதான் குடிப்பது வழக்கம். குடிக்காமல் என்னால் ஒரு எழுத்துக்கூட எழுத முடிவதில்லை. அன்று விருந்தல்லவா? அதனாற்தான் சற்றுக் கூடிவிட்டது. பிரயாசை உண்டாக்கியதற்கு மன்னியுங்கள்.'' ''அப்போ நீங்கள் அன்று சென்றது தேநீர் விருந்திற்கல்ல. மது விருந்திற்குத்தான் என்று சொல்லுங்கள்'' என்று கூறிக்கொண்டே வந்தான் சாலிஹ். ஸார்! மாதம் இருபத்தைந்து ரூபாயில் ஜாகை ஒன்று கிடைத்திருக்கிறது என்றான். ''அப்படியானால் உங்களைவிட்டு உண்மையாகவே பிரிகின்றேனா? உங்கள் வாழ்வில் பொறுக்கமுடியாத அபசாரமொன்று செய்து விட்டேனே'' என்றார் துக்கத்துடன்.

என்ன ஸார்! கண் மூக்குத் தெரியாமல் குடித்துவிட்டு அபசாரமாவது! சுண்டைக்காயாவது என்று முணுமுணுத்தான் சாலிஹ். ஏன் சாலிஹ்! ஒருவரது மனத்தைப் புண்ணாக்குகிறாய் என்றேன் நான் இரகசியமாக. இது அவரது காதுகளில் விழுந்ததோ என்னமோ? சட்டென்று எழுந்தார். என் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சிறு குழந்தை போல் விம்மி விம்மி அழத்தொடங்கினார். என்னை மன்னித்து விடு குமார்! என்றார். ஸார்! ஸார்!! இது என்ன திருவிளையாடல். விடுங்கள் என் காலை என்று மெதுவாக அவரைத் தூக்கி உட்கார வைத்தேன். விம்மிக் கொண்டேயிருந்தார். அவரது பரிதாப நிலையைக் கண்ட எனக்குக்கூட துக்கம் நெஞ்சையடைத்தது.

ஸார்! இனிக் குடிப்பதேயில்லை என்று சங்கற்பம் செய்து கொள்ளுங்கள். அதுவே எங்களது மன்னிப்பாக இருக்கட்டும், என்றான் சாலிஹ். பேச்சை ஆமோதிப்பது போல் எதிர்க்கோவில் மணி டாண்-டாண்- என்று ஒலித்தது. அவர் தமது இரு கரங்களையும் கூப்பியவாறே மணியோசை வந்த திக்கை நோக்கினார். மணி பின்னும் டாண்-டாண்- என்று அடித்து ஓய்ந்தது.

# இரு உள்ளங்கள் -(போட்டிக்கதை)

கிரிஜா

என் பரீட்சையும் நெருங்கிக் கொண்டு வந்தது. நானும் இரவும் பகலும் கண்ணும் கருத்துமாகப் படித்தேன்.

என் சொந்த ஊர் பவனம். என் அப்பாவும் ஒரு பெரிய உத்தியோ கத்திலுள்ளவர். அவரை இந்த மட்டக்களப்புக்கு மாற்றி விட்டார்கள். அப்பாவோடு நாங்களும் இங்கேயே வசிக்க வேண்டியதாயிற்று. இங்கே குடியிருக்க வந்து ஒரு கிழமையால் இங்கேயுள்ள பெரிய பாடசாலையில் நான் எஸ்.எஸ்.ஸீ வகுப்பில் சேர்ந்து படித்தேன். நான் முன் இரண்டு முறைகள் பரீட்சையெடுத்தேன். இரண்டு முறையும் தவறிவிட்டேன். எனக்குப் போதாத பாடம் தமிழ். தமிழிலேயே இரண்டு முறையும் சித்தியடையவில்லை, நான் மற்றப் பாடங்களைவிட தமிழையே ஊக்க மாகப் படிக்க ஆரம்பித்தேன். இப்பாடசாலையிற் சேர்ந்த முதல் நாளே நான் தமிழ் வகுப்புக்குப் போனேன். ஒரு ஆசிரியர் வந்தார். இளம் வயதானவர்தான். பாவைப்பிள்ளை போன்ற முகம். கோபம் என்பது அவர் முகத்தில் கடுகளவேனுங் கிடையாது. மலர்ந்த முகத்தோடுதான் பேசிக் கதைப்பார். எல்லோராலும் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய இலகுவான தமிழ்நடையில் சிக்கலான பெரிய விஷயங்களை எல்லாம் தெளிவாக விளக்கினார். என் மனம் இவரல்லவா ஆசிரியர், இப்படிப் பட்டவரிடம் பாடம் படித்திருந்தால் முதல் முறையே சித்தியடைந்திருப் பேனே என்று நினைத்தது. நானும் உற்சாகமாகத் தமிழ்ப்பாட வகுப்புக்குச் செல்லுவேன். பாடநேரத்தில் தெரியாத விஷயங்களைக் கேட்டால் அவரும் கோபியாமல் சந்தோஷத்தோடு பதிலிறுப்பார்.

ஒருநாள் பாடசாலை முடிந்து வீட்டிற்குப் போனதும் அப்பா என்னை அழைத்தார். போய் அவரிடம் அழைத்த காரணத்தைக் கேட்டேன். அவர் என்னைப் பார்த்து ''இனிமேற்பட்டு உனக்கு விளையாட நேரமில்லை, கெட்டித்தனமாகப் படித்துப் பரீட்சையெடுத்து எப்படியாகிலும் இம்முறை சித்தியடைய வேண்டும். இன்று நாலு மணிக்கு முன் உன் படிப்பறையைச் சுத்தம் செய்து பாடப் புத்தகங்களை எல்லாம் ஆயத்தப்படுத்தி வைத்துக் கொள். உனக்குப் பாடம் சொல்லித்தர ஒரு ஆசிரியரை நியமித்திருக்

கின்றேன். அவர் வந்து விடுவார். போய்ச் சீக்கிரம் ஆயத்தப்பட்டுக் கொண்டிரு'' என்றார்.

நானும் உடனே சென்று எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து வைத்துக் கொண்டு ஆசிரியர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஏனோ என் மனம் பலவாறு சிந்திக்கத் தொடங்கியது. வரும் ஆசிரியர் எப்படிப்பட்டவரோ? என்ன குணமானவரோ? கெட்டித்தனமானவரோ? அல்லது நான் சித்தியடையாத வருடங்களில் தமிழ்ப் படிப்பித்தவர்கள் போன்றவரோ? அல்லது என் பாட வகுப்பு ஆசிரியரோ? இவராயிருந்தால் நான் உண்மையில் பாக்கியசாலிதான் என்று மனம் பல சந்தேக வினாக் களை உற்பத்தியாக்கிக் கொண்டிருந்தது.

மணி நாலாகப் போகின்றது. ஆசிரியர் வந்துவிடுவார். டக்.. டக்.. கென்று கேட்டது சப்பாத்தின் ஓசை. என்மனமும் டக் டக்கென்று அடிக்கத் தொடங்கியது. அவரும் உள்ளே வந்தார். நான் வந்தவரைப் பார்க்காமல் தலையைக் குனிந்து பிடித்துக் கொண்டு ''குட் ஈவினிங் சேர்'' என்றேன். அவரும் ''குட் ஈவினிங்'' என்றார். சத்தத்தைக் கொண்டு அவர் என் வகுப்பு ஆசிரியர் சிவம் என்றறிந்து தலையை நிமிர்த்தினேன். அவர் என்னை உற்றுப் பார்த்துவிட்டு லீலா! நீதானா படிக்கும் ஆள், இதுதானா உங்கள் வீடு என்று சிரித்துக் கொண்டு கேட்டார். நானும் பதிலுக்குச் சிரித்துக் கொண்டு ''ஆம்'' என்றேன். என் படிப்பும் ஆரம்பமாகி ஆறு மாதங்களும் இன்பமாய்க் கடந்துவிட்டன.

எனக்கு அவர் குணத்தையும் அழகையும் கண்டு அவர்மேல் அளவு கடந்த அன்பு ஏற்பட்டுக் கொண்டு வந்தது. நான் என் உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டவில்லை. அவரும் அதற்குச் சந்தர்ப்பத்தைக் கொடுக்க வில்லை. ஒருநாள் படித்துக் கொண்டிருக்கும் போது வீம்பாகத் திருக் குறளிலே

*''கண்ணொடு கண்இணை நோக்கொக்கின்*
*வாய்ச் சொற்கள் என்ன பயனுமில''*

என்னும் குறளின் பொருளை விளங்கப்படுத்திவிடும்படி கேட்டேன். அவருக்கு விளங்கி விட்டது என்மன எண்ணம். ''லீலா'' என்றது அவர் வாய். அவர் அதைச் சொல்லும் போது எவ்வளவு இனிமையாகக் கேட்டது. அவருக்குப் பதில்பேச என் நா எழவில்லை. நாணம் என்னைத் தாவிப் பிடித்துவிட்டது. வெட்கத்தோடு அவரை நோக்கினேன். அவரும்

என்னை நோக்கினார். எங்கள் கண்கள்தான் சிறிது நேரம் பேசின. அவர் என் அருகில் எழுந்துவந்து மெய்தானா என்றார். ''ஆம்'' நான் உங்களையே என் மனதில் இருத்திவிட்டேன். என் மனதில் உங்களைத் தவிர வேறொருவருக்கும் இடமில்லை என்றேன்.

அப்படித்தான் லீலா, நீ மட்டும்தான் என் மனதில் சீவிக்கின்றாய். உன்னைக் கண்ட காலம் தொடக்கமாக என் மனம் உன்னிலேயே லயித்து விட்டது. அதை வெளிக்காட்ட நீ சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்றார்.

எங்கள் இருவர் அன்பும் மாசற்றது. மனிதர் அறியாதது. என் பரீட்சை யும் நெருங்கிக் கொண்டு வந்தது. எங்கள் காதல் நாடகமும் வளர்ந்து கொண்டு வந்தது. எத்தனை நாட்கள்தான் இந்த இரகசிய வாழ்க்கை. எப்படிப்பட்ட இரகசியமும் பரகசியமாதல் இயல்புதானே.

என் டயறியில் கெட்ட நாள் என்று எழுதப்பட்ட அந்த நாள். பாடம் முடிந்தது. ''நான் போய் வருகிறேன்'' என்றார். நானும் இல்லை என்று தலையசைத்து விட்டு பாடம் விளங்கவில்லை என்று சாட்டுச்சொல்லி இருட்டுமட்டும் வைத்திருந்து விட்டேன். அவர் போக எழுந்த போது ஆகாயம் எல்லாம் இருட்டிருந்தது. சீறிக்கொண்டு வந்த பெருங்காற்று மழையையும் கூடக் கொண்டுவந்தது. தலை வாயிலடி மட்டும் போன அவரை மழை தடுத்தபடியால் போக முடியாமல் திரும்பி ஓடிவந்தார். அப்பாவும் அவரைப் பார்த்து மழை விட்டபின் போகலாம் இந்தக் கதிரையில் இருங்கள் என்று ஒரு கதிரையைச் சுட்டிக்காட்டினார். நான் படிப்பறைக்குச் சென்று விளக்கை ஏற்றி வைத்துவிட்டு வந்து அவரைக் கூட்டிக்கொண்டு போய் எனக்கு விளங்காத சில விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

காற்றின் வேகம் வர வரக் கூடியது. தோட்டத்தில் நின்ற மரங்களின் கந்துகள் முறிந்து விழும் சப்தங்கள் என் காதில் கேட்டன. 'படார்' என்றது. என் அறை ஜன்னல் கதவு காற்றின் வேகத்தால் உடைத்தெறியப்பட்டது. என் மேசை மேல் இருந்த விளக்கும் அணைக்கப்பட்டுவிட்டது. உச்சியின் மேல் காது செவிடாகும்படியான இடி முழக்கம் கேட்டது. பயத்தால் ஓடிச்சென்று அவரைப் பிடித்துக் கொண்டேன். அவர் என்னைப் பயப்பட வேண்டாம் என்றார்.

''ஆம் பயப்படத் தேவையில்லை சிவம்'' என்று கண்களில் நெருப்புப் பொறி பறக்க என் அப்பா கையில் லாம்போடு அறைக்குள் நுழைந்தார். நாங்களிருவரும் விறைத்து விட்டோம். ''பளீர்'' என்ற அறைச் சத்தம்

கேட்டது. பார்த்தேன், அன்பர் கீழே விழுந்து எழுந்து நிற்கத் தெண்டிக்கிறார். ஓடிச் சென்று அவரைத் தூக்கினேன். நானும் ஓர் பக்கத்திலேயே சென்று விழுந்தேன். ''ஆம்'' அப்பாவின் அடங்காக் கோபந்தானிது. உருத்திரன் போலக் காட்சியளித்தார். சிவம் நிமிர்ந்து நின்று கொண்டிருந்தார். அவர் கண்களால் நீர் பெருக்கெடுத் தோடியது. அப்பாவின் கண்கள் மட்டுமா என் கண்களும் கோபத்தாலும் தாபத்தாலும் கொவ்வைப் பழம் போல் சிவந்து விட்டன. அப்பாவுக்கு என்ன செய்யலாம், அன்பருக்கு என்ன உதவி செய்யலாம். ''ஓ'' வென்று அழுதேன்.

"சீ.. வாயை மூடு சனியன்'' என்று என் வாயிலும் ஒரு அடி போட்டார். "நீ ஒரு ஆசிரியனா? ''நாயே'' ஆசிரியனுக்குரிய இலட்சணம் இதுதானா? இதற்காகத்தானா உங்களை ஆண்களும் பெண்களுமாக கலந்து வைத்து ஆசிரிய கலாசாலையில் பயிற்சியளித்தார்கள். உங்களைப் போன்ற காமுகன் அல்லவா இன்று ஆசிரிய பட்டத்திற்கு கெட்டபெயர் சூட்டி அழகு பார்க்கின்றார்கள். கூத்தும் குடியுமல்லவா இன்று உன்போன்ற ஆசிரியர்களிடம் நிறைந்திருக்கின்றது''.

''போக்கிலி நீ என்ன சிவவேடம் போட்டு நடித்தாயடா? உன் குணத்தைப் புதைத்து வைத்தல்லவா நடந்தாய். நீ நல்லவன் என்றல்லவா நினைத்து ஏமாந்தேன். உங்களைப் போன்ற காமிப் பிரமச்சாரிகளால் தான்டா இன்று இந்த உலகம் இன்னிலைக்கு வந்தது.''

''கடப்பளி என் கண் முன்னே நில்லாதே ஓடிப்போய் விடு'' என்று அந்தரத்தில் நின்றுகொண்டு சொல் தாண்டவம் புரிந்தார் என் அப்பா. அன்பர் அசையாமல் மௌனமாக நின்றார். அப்பா அவர்மேல் பாய்ந்து அவரை இழுத்துக் கொண்டு போய் வெளியே தள்ளி விட்டு விறுவிறென்று நடந்துவிட்டார். அன்பர் விழுந்த வேகத்தில் பூச்சட்டிகள் உடைந்துருண்டன. நான் ஓடிச்சென்று அவரைத் தூக்கப் போனேன். அவர் தானாகவே எழுந்து என் காலைப் பிடித்து நமஸ்கரித்து விட்டு ''இதுதான் கடைசியும் முதலுமாயிருக்கட்டும்'' என்று சொல்லி என்னை விறைத்துப் பார்த்தார். அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடியது. நான் அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து வாயில் வந்தவைகளை எல்லாம் சொல்லி மன்னிக்க மாட்டீர்களா என்று நிமிர்ந்தேன். அவரை அந்த இடத்தில் காணவில்லை. அப்பா எமன்போலே என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓர் அறையில் போட்டு பூட்டி வைத்தார்.

ஒரு மாத காலத்திற்கு என்னை வீட்டை விட்டு வெளியில் அனுப்ப வில்லை. எனக்குச் சுகமில்லை என்று பாடசாலைக்கு அறிவித்திருந்தார் அப்பா. ஒரு மாதத்தின் பின் நான் பாடசாலைக்குச் சென்றேன். அன்பரைக் காணவில்லை. அவர் வேறு பாடசாலைக்கு மாறுதல் எடுத்துக்கொண்டு போய்விட்டாராம் என்று மாணவர்கள் சொன்னார்கள். என் வாழ்க்கையே சோபை இழந்து விட்டது. S.S.C பரீட்சையும் சித்தியடைந்து விட்டேன். சித்தியடைந்துமென்ன சித்தியடையச் செய்தவரையல்லவா நான் இழந்து விட்டேன். என்னை உயர்தர படிப்புக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு சென்று ஒரு வருடமும் கழிந்து விட்டது.

விடுமுறையில் வந்த நான் கொழும்புக்குப் போக வேண்டி ஒருநாள் ரயில் பிரயாணத்திற்கு ஆயத்தப்பட்டேன். என் உடன் மாணவிகளும் வந்தார்கள். எல்லோருமாகச் சேர்ந்துகொண்டு ரயிலில் பிரயாணத்தைத் தொடங்கினோம். இடையில் குடிப்பதற்கு தேவையான தண்ணீரை போத்தல்களில் எடுத்து வைத்துக் கொண்டோம். ஒரு ஸ்தானத்தில் புகையிரதம் நின்றது. ஜனங்கள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தார்கள். போத்தலில் தண்ணீர் பிடித்துக் கொண்டு பெட்டியில் (ரயில் பெட்டி) ஏறப்போகும் ஒருவரை என் சினேகிதிகள் கூப்பிட்டு தங்கள் போத்தலிலும் கொஞ்சம் தண்ணீர் நிரப்பித் தரும்படி கேட்டார்கள். அந்த ஆள் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். நானும் உடனே என் போத்தலை எடுத்து குறை நினையாமல் தயவுசெய்து இதிலும் கொஞ்சம் தண்ணீர் பிடித்துத் தாருங்கள் என்று ஜன்னலால் எட்டிப் போத்தலை நீட்டினேன். ஓர் இடத்திலே என் கையில் இருந்த போத்தலும் இவர் கையிலிருந்த போத்தலும் விழுந்து சுக்குநூறாய் உடைந்து பறந்தன. என்னை அவர் மதித்து விட்டார். நானும் அவரை மதித்து விட்டேன். நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்தோம். எங்கள் போத்தல்கள் நழுவி விழுந்த விதம் எங்களுக்கே தெரியாது. அவர் கண்களில் நீர் சொரிந்தது. போய் அவர் பெட்டியில் ஏறி விட்டார். நானும் கண்ணீரைக் காட்டாமல் கைலேஞ்சால் கண்ணைக் கசக்கினேன். என் சினேகிதிகள் என்னைப் பார்த்து "லீலா! இதென்ன நீ குழந்தையா? போனால் போகிறது போத்தல்தானே கவலைப் படாதே" என்றார்கள். இவர்களுக்குத் தெரியுமா என் கண்ணீரின் அர்த்தம். ஜன்னலடியிலிருந்து அவர் ஏறிய பெட்டியையே பார்த்துக் கொண்டிருந் தேன். அவர் இடையில் ஒரு இடமும் இறங்கவில்லை.

மருதானைச் சந்தியில் வந்து புகையிரதம் நின்றது. என் அன்பர் இறங்கினார். உடனே நான் என் சிநேகிதிகளைப் பார்த்து எனக்கு இங்கே ஓர் அலுவல் இருக்கின்ற படியால் இறங்கி முடித்துக் கொண்டு வருகின்றேன் "நீங்கள் போங்கள்" என்றேன். "போய் விட்டுப் பின்னேர மாக எல்லோரும் வருவோம் நீ இறங்காதே" என்றார்கள். "அப்பா கண்டிப்பாகப் பார்த்து, விஷயம் வெற்றியா? தோல்வியா? என்று பன்னி ரண்டு மணிக்கு முன் தந்தி மூலம் அறிவிக்கச் சொல்லி இருக்கின்றார்" என்று பொய் ஒன்று சொல்லி விட்டு இறங்கிவிட்டேன்.

நான் அவரைப் பின்தொடர்ந்து அவர் கண்களில் படாமல் நடந்தேன். அவர் ஒரு ஹோட்டலின் வாசலில் தான் கொண்டு வந்த பெட்டியை வைத்தார். ஹோட்டல் வேலைக்காரன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே நடந்தான். அவரும் அவன் பின்னாலே போனார். நான் இதைப் பார்த்துக் கொண்டு போய் வை.யு.சீ.ஏ. கட்டிடத்தில் (யங் வுமன் கதலிக் சொசைட்டி) ஒரு அறை ஒழுங்கு செய்து அதில் தங்கினேன்.

பின்னேரம் நாலு மணிக்கு வெளிக்கிட்டு அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போய் மனேச்சரிடம் மிஸ்ரர் சிவம் இருக்கின்றாரா என்று கேட்டேன். அவர் 26ஆம் இலக்க அறையிலிருக்கின்றார் என்று பதில் கிடைத்தது. 26ஆம் இலக்க அறைக்குச் சென்றேன். அவர் எங்கோ போவதற்கு அவசர அவசரமாக உடை உடுத்துக் கொண்டு நின்றார். என்னைக் கண்டதும் அவர் முகம் மாறுபட்டது. கோபத்தோடு "பின் தொடராதே போய்விடு" என்றார். நான் அவர் பாதங்களிலே விழுந்து இன்னும் என்னை மன்னிக்க மாட்டீர்களா என்று கேட்டேன். பதில் வரவில்லை. "சுவாமி என்னை மன்னியுங்கள், என்னால் தங்கட்கேற்பட்ட அவமானத்தை மறந்துவிடுங்கள்" என்று அழுது கொண்டு கேட்டேன்.

அவர் என்னைப் பார்த்து "குற்றம் நம்முடையதல்ல எல்லாம் நம் விதியின்படிதான் நடந்தது. முன் நடந்த விஷயங்களைச் சிந்தியாதே. கெட்டித்தனமாகப் படித்து புகழோடு வாழ்ந்தால் மட்டும் போதும். நீ போய்விடு. திரும்பத் திரும்ப என் மனதில் சிந்தனைகளைத் தூண்டி விடாதே, என்னை மறந்துவிடு" என்று அவர் ஆண் உள்ளத்தைத் திறந்து சொன்னார். "என்னால் மறக்க முடியவில்லையே" என்றேன். "நீ உன் அப்பாவிடம் சொல்லி நல்ல இடத்திலே விவாகம் செய்துகொள். கொஞ்ச நாட்களால் என்னை மறந்துவிடுவாய். என் எதிரே நில்லாதே. போய்

சுகமாய்ச் சீவி'' என்று சொல்லிக் கொண்டு எனக்கு முன்பே சென்று விட்டார். நானும் ஏமாற்றத்தோடு திரும்பி விட்டேன்.

என் கலாசாலைப் படிப்பையெல்லாம் முடித்து விட்டு ஒரு பெண் பாடசாலையின் பொறுப்பையேற்று நடத்தி வந்தேன். என் தாய், தகப்பன் தெண்டித்தும் கல்யாணம் முடிப்பதில்லை என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டேன். அவர்களும் உன் விருப்பப்படியே நட என்று சொல்லி விட்டார் கள். என் பாடசாலையுள்ள ஊரிலேதான் மிஸ்ரர் சிவமும் இருந்தார். ''சூடுபட்ட பூனை அடுப்படியை நாடுமா'' நான் அவரிடம் மன்னிப்புக் கேட்கப் போகவில்லை. அவரே என்னிடம் மன்னிப்புக் கேட்க வரட்டும். இல்லாவிடில் இந்நிலையிலேயே இவரை மறந்து விடுவதுதான் என் இலட்சியம். என் மனதைவிட்டு அவரைப் பிரிக்க இயலாமல் போய் விட்டது. ஒருநாள் பாடசாலையை விட்டு பக்கத்திலுள்ள கடைக்குச் சென்று நூற்பந்துகள் வாங்கிக் கொண்டு திரும்பினேன். பாதையைக் கவனிக்க வில்லை. என்மேல் ஒரு ஆள் விழுந்தார். அவர் வந்த துவிச்சக்கர வண்டி இன்னுமொரு இடத்தில் விழுந்து உடைந்தது. விழுந்ததும் அந்த ஆள் என்னை ஏற இறங்கப் பார்த்தார். நானும் அவரைப் பார்த்தேன். அவர் யாருமில்லை அன்பர் சிவம்தான். கோபித்துக் கொண்டு போய் விடுவாரோ என்று நான் அவரிடம் மன்னிப்புக் கேட்கவில்லை. இருவரும் மௌனமாக எழுந்தோம். அவர் முழங்கையிலிருந்து இரத்தம் ஓடியது. அவரை என்னுடன் அழைத்து வந்து பாடசாலையிலுள்ள மருந்துப் பெட்டியை எடுத்து அவர் கையில் போட்டேன். அவர் என்னை நன்றியோடு பார்த்து ''லீலா'' இன்னும் நீ எனக்காகத்தானா காத்துக் கொண்டிருக்கின்றாய். உன் உள்ளம் களங்கமற்றது தான்'' என்று என்னைப் பற்றிப் பலவாறாகப் பேசினார். உங்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. எழுந்து போய் விடுங்கள் என்றேன். அவர் சிரித்துக்கொண்டே வந்து ''காற்றடிக்கிறது, மழை பொழிகிறது, இடி இடிக்கின்றது, பயமாயிருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டு என்னைக் கட்டிப்பிடித்தார்.

சரசம் போதும். வருகின்ற 2ஆம் திகதியோடு இப்பாடசாலைக்கு மாறுதல் எடுத்துக் கொண்டு வாருங்கள் என்றேன். சட்டைப்பையிலிருந்த கடிதம் ஒன்றை எடுத்து என்னிடம் தந்தார். கடிதத்தை விரித்தேன் என்ன ஆச்சரியம்!

கொழும்பு
27.12.48

திரு பண்டிதர் சிவம் M.A அவர்கட்கு,

தங்களை "லீலா பெண் பாடசாலைக்கு" 1.1.49 தொடக்கம் தமிழ்ப் பேராசிரியராக நியமித்திருக்கின்றோம். தாங்கள் சென்று கடமையைக் கையேற்று எங்களுக்கு அறிவிக்கவும்.

இங்ஙனம்,
A.B. சுந்தரராசன் M.S
முகாமைக்காரர்.

வாசித்து முடிந்ததும் நிமிர்ந்தேன். அவர் என் கரங்களைப் பிடித்தார். நானும் அவர் கரங்களைப் பிடித்தேன். எங்களிடம் மௌனம் நிலவியது. எங்கள் கண்கள் இணை நோக்கின. இனியாரும் அவற்றைப் பிரிக்க முடியாது.

சுபம்.

# நாகரிக பிச்சைக்காரன்

*மூர்த்தி*

அன்று நிரம்பவும் கூட்டமாதலால் இருப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. பதுளைக்குச் செல்லும் பஸ்ஸில், அண்ணார்ந்து பார்த்தேன். ஆதாரக் கம்பியும் ஆதாரமின்றி இருந்தது. இருப்பதற்கு ஒரு சிறு இடமாகுதல் கிடையாதா இன்று ஒவ்வொரு சீற்றாக நோக்கினேன். நாலாவது சீற்றிலிருந்த ஓர் நபர் தம்மிடத்திற்கு வரும்படி புன்முறுவலுடன் சைகை செய்தார்.

இடம் கிடைத்த குஷியில் அவருக்கு மரியாதைக்கு ஒரு புன்சிரிப்பு போட்டுவிட்டு அருகில் உட்கார்ந்தேன். ''கொய்த யன்னே'' என்றார். புரியாத சிங்களத்தில் என்னை நோக்கி. ''வதுல்ல'' என்றேன் சிங்களம் புரிந்தது போல். எனவே அவர் மேலும் ஏதோ சிங்களத்தில் அடுக்கிக் கொண்டே போய் ''செவன்ரி பைவ் சென்ஸ்'' என்ற ஆங்கிலத்தையும் கலந்து முடித்து விட்டு என்னை நோக்கினார். என் பதிலை எதிர்பார்த்துத்தான் என்னை நோக்கி இருக்க வேண்டும். ''75 சதம் தா'' என்பதுதான் அவரின் பேச்சிலிருந்து யான் அறிந்து கொண்டவை. எனினும், திடீரென்று நான் ஒன்றும் பதில் கூறவில்லை. இத்தனைக்கும் ஆசாமி 11ஆம் நம்பர் ஆள். அதாவது- நீண்ட காற்சட்டை தரித்தவர், ''கிளீன்ஷூட் எம்ரி பொக்கெட்'' என்னும் ஆங்கிலப் பழமொழிபோல் லாவண்யமான உடுப்புகள் அணிந்துள்ள ஆசாமிக்கு ஏன் இந்த பிச்சைக்காரப் பிழைப்பு என்று அறிவது அவசியம் போல் தோன்றிற்று எனக்கு. ''மட்ட சிங்கள தன்னனே'' என்று அரைகுறை சிங்களத்தில் கூறிவிட்டு ''முடியுமானால் தமிழிலோ, ஆங்கிலத்திலோ பேசவும்'' என்றேன் ஆங்கிலத்தில்.

எனவே அவர், தான் ஒரு காலத்தில் பெரிய வியாபாரியாக இருந்த தாகவும், துரதிஷ்டமாக வியாபாரத்தில் நட்டமடைந்து விட்டதாகவும், சமீபத்தில், ஒரு எஸ்ரேற் கிளாக் வேலைக்கான நேர்முகப் பரீட்சைக்குச் சென்று திரும்புவதாகவும், நாளை கொழும்புக்குப் போவதாகவும், கையில் பணமில்லையென்றும், தயவுசெய்து ஒரு ரூபா தந்தால் பெரிய உபகாரமாய் இருக்குமென்றும் அப்பழுக்கற்ற ஆங்கிலத்தில் பேசி முடித்தார்.

கதையோ ரொம்பவும் சோகமாய்த்தானிருக்கிறது. ஒரு காலத்தில் பெரிய செல்வந்தனாயிருந்தவன் இன்று இந்நிலையிலிருக்கிறான். இது தான் மனித வாழ்வு என்று எனக்குள்ளேயே எண்ணிக்கொண்டேன். இரக்கம் பிறந்துவிட்டது அந்த மனிதனிடத்தில்,

''தயவுசெய்து மன்னிக்கவும். என்னிடம் அதிக பணமில்லை. ஐம்பது சதந்தான் தர முடியும்'' என்றேன். தனக்குக் கண்டுதானே தானம் வழங்க வேண்டும்.

''ரொம்ப சரி, இப்போதே தாருங்கள்'' என்றார் பிடிவாதமாக. ''வதுளை யில் இறங்கியதும் எடுத்துக் கொள்ளலாமா'' என்றேன் நான்.

இல்லை, இல்லை தயவு செய்து இப்பொழுதே தாருங்கள், அவசர மாக வேண்டும். உங்கள் காலில் விழுந்து கும்பிடுகிறேன். இப்பொழுதே தந்துவிடுங்கள்'' என்றார் மீண்டும் பிடிவாதமாக.

''சரிதான்'' என்று ஐம்பது சதம் கொடுத்தேன். ''ரொம்பவும் தாங்ஸ்'' என்று கொண்டே அதை வாங்கிக் கொண்டார்.

இதுவரை பஸ்வண்டி மூன்று மைல்கள் சென்றுவிட்டது. இன்னும் மூன்று மைல் செல்ல வேண்டும் வதுளைக்கு. என்ன ஆச்சரியம்! கடந்த மூன்று மைல்களிலும் தன் நிலைமையையிட்டுப் பிரலாபித்து வந்த அந்த ஆசாமி பேசாமடந்தையாகி விட்டார். எனவே மீண்டும் பேச்சுக் கொடுத் தேன் நான். ''ஆமாம், இந்த ஐம்பது சதத்தில் நீர் எப்படி கொழும்புக்குப் போகப் போறீர்'' என்றேன்.

''ஓ.... வதுளையில் நமக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள். அவர் களிடம் பணம் பெற்றுக் கொள்வேன்'' என்றான் ஒருவகைப் பதட்டத்து டன். இதுதான் அவன் என்னுடன் பேசிய கடைசி வார்த்தை. அவன் முக பாவத்திலிருந்து முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைக்கிறானென எண்ணிக்கொண்டேன், பஸ்ஸிலிருந்து எல்லோரும் இறங்கினர். ஆசாமி எப்பக்கம் செல்கிறானென அவனைக் கவனித்துக் கொண்டிருந்தேன். பஸ்ஸிலிருந்து இறங்கிய சில பிரயாணிகளுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான். ''சில்லறை இல்லிங்களே, இருந்தால் தருவனே'' என்றது ஒரு குரல். ''ஓகோ, ஆசாமி மோசமில்லை, அங்கும் பணம் கேட்டிருக்கிறான்'' என்று ஊகித்துக் கொண்டேன்.

''என்ன மிஸ்டர் எங்கேயோ பார்த்துக் கொண்டு நிற்கிறீர்?'' என்று கொண்டே என் முதுகில் தட்டினார் எனது நண்பர்.

விஷயத்தை விபரமாகச் சொல்லி ஆசாமியையும் காட்டினேன் அவருக்கு.

''ஓகோ... இவனா!'' என்ற பீடிகையில் தொடங்கினார். ''இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன் ''இரிகேசன்'' டிப்பாட்மென்ரில் கிளாக்காக இருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டான் இவன். சதா கள்ளுக் குடிப்பது, இப்போது மட்டுமல்ல முன்புமிருந்த பழக்கந்தான். வரும்படி இல்லாததால் கொழும்புக்குப் போவதாகவோ, கண்டிக்குப் போவதாகவோ பொய் சொல்லிப் பணம் சம்பாதித்துக் கொள்கிறான் குடிப்பதற்கு'' என்று சொன்னார். ''ஆமாம், முன்னர் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் திரிந் தானே ஒரு பிச்சைக்காரன் (மூன்று பிள்ளைகளுந் தாயும் பட்டினியால் ......கோயிலடியில் கஸ்டப்படுகின்றன. ஏதோ நீங்கள் மனமிரங்கி நாலு பணம், அஞ்சு பணம் தந்தால் - என்று கெஞ்சுபவன்) அதே ரகத்தைச் சேர்ந்தவன்தான் இவனும்'' என்று பழைய சம்பவமொன்றையும் ஞாபகப் படுத்தினார்.

''ஆமாம். பொய் சொல்லி பணம் பறித்து ''அபினி'' உண்டு வந்தான் அந்தப் பிச்சைக்காரன். ஆனால் இவனோ காற்சட்டை மேற்சட்டை போட்ட பிச்சைக்காரனாயிருக்கிறான். - நாகரிகப் பிச்சைக்காரன்'' என்று எண்ணிக் கொண்டேன்.

# குட்டிக்கதைகள்

## வறுமையின் கொடுமை

செல்வி இ. தங்கம்மா

வேலையின்மையாலும் வறுமைப் பிணியினாலும் நெருங்குண்டு வேலை தேடி அலைந்து களைத்த இளைஞனொருவனும் கொழும்பு நகருக்குச் செல்லப் புகைவண்டியில் ஏறிக்கொண்டான். ஆனால் அவன் 3ஆம் வகுப்புப் பெட்டிக்குச் சீட்டுப் பெற்றுக்கொண்டு 1ஆம் வகுப்புப் பெட்டியில் விமலாவோடு சென்றான். விமலா பணம் படைத்த ஒரு செல்வன் மகள்.இவனது மனம் விமலாவின் விலையுயர்ந்த ஆபரணங்களை எவ்வாறு களவாடலாம் என்னும் ஒரே எண்ணத்தில்தான் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. புகையிரத நிலையத்தில் புகையிரதம் நிற்பதையும் பரிசோதகர் இடையிடை பிரயாணிகளைப் பார்வையிட வருவதையும் அறிந்து புத்தியாகத் தப்பிக்கொள்ளும் வழிவகைகளைக் கையாளுவதில் இவன் மனம் சிறிதும் செல்லவில்லை.

விமலாவோவெனில் பெண்களுக்குரிய நாணம், மடம், பயிர்ப்பு, அச்சம் என்னும் நான்கு குணங்களையும் அரசர்க்குரிய யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நான்கு படைகள் போலவும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களையும் நல்ல புத்தியுடைய மந்திரி போலவும் தன்னைச் சூழவைத்துக்கொண்டு ஓர் ஒப்பற்ற மதியுடை மன்னவன் போல் தனக்குப் பகையரசன் போல் காட்சி அளித்த அவ் விளைஞன் பக்கம் தனது கவனமாகிய தேரைச் செலுத்திக் கொண்டிருந்தாள். ''கொடிது கொடிது வறுமை கொடிது. அதிலும் கொடியது இளமையில் வறுமை'' என்றார் பெரியோரும். அந்தோ பாவம். ஏழை அவன் என்செய்வான். எண்ணமெல்லாம் மண்ணாய்ப் போனது.

'கடல் வற்றிக் கருவாடு தின்னக் காத்திருந்து குடல் வற்றிச் செத்த கொக்கைப் போல்' விமலாவின் தூக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த

அவனை சனியன் பதினைந்தின் பாதியானவன்தான் ஆட்டத்தொடங்கினானோ? அல்லது அவனது காலகஸ்டமோ? யார் அறிவார். இளைஞன் இவ்வாறு அன்றிரவு முழு வறுமை நோய் காரணமாய்த் தூக்கமின்றி மனப்பால் குடித்துக்கொண்டிருந்து காலையானதும் சற்று அயர்ந்து தூங்கலானான். புகையிரதமும் குறித்த நிலையத்தில் நின்றது. புகையிரதப் பரிசோதகர் ஒருவர் அங்கு விரைந்து வந்தார். அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த இளைஞனைத் தட்டி எழுப்பிச் சீட்டைக் காட்டும்படி கேட்டார்.

ஐயோ ஏழை இளைஞன் எழுந்தான்; திகைத்தான்; மெய்மறந்து பதைபதைத்தான். மிகுந்த நடுக்கத்தோடு பரிசோதகரிடஞ் சீட்டைக் கொடுத்தான். பரிசோதகர் பார்த்தார். 3ஆம் வகுப்புச் சீட்டு, 1ஆம் வகுப்புப் பெட்டியில் இருக்கிறான். ஆத்திரம் பொங்க உரத்த குரலில் கட்டடா மீதிப்பணத்தை, எங்களை நீ ஏமாற்றவா முற்பட்டாய்? எனச் சினந்து கூறினார். இளைஞன் அறிவற்ற மரம் போல் நின்றான். சில நாட்களின் முன்னும் அவன் இவ்வாறு பிடிபட்டதுண்டு. அச்செய்தி அக்கணமே பரிசோதகர் ஞாபகத்திற்கு வந்தது. அவர் அதிக கோபத்தோடு அவனைச் சிறைச்சாலை அனுப்பினார்.

# கொழுத்த கடன்

குட்டி

*சொற்ப வருமானமுள்ள ஒருவர் வரவுக்கேற்ற செலவு செய்ய அறியாத ஒரு பெண்ணையும், செலவாளியான ஒரு மகனையும் பெறுவதனால் இறுதியில் தற்கொலை செய்துகொள்ள நேரிடுகிறது என்பதனைக் கதாசிரியர் ஹாஸ்யமான முறையில் அமைத்திருக்கின்றார்.*

மடமையெனும் ஊரில் ''வருகை சிறிது'' என்ற ஒரு வாலிபர் வசித்துவந்தார். ''முப்பதுக்குள் மூன்றிலொன்றைத் தேர்'' என்னும் முது மொழியைப் பாழாக்கச் சித்தம் சிறிதுமில்லாது; ''செலவதிகம்'' எனும் மாதுசிரோன்மணியை அவ்வூருக்குள்ளேயே சிரமமில்லாது மணம் செய்து கொண்டார். மனம் பெயராமலே இனிமையை நுகர்ந்து வாழ்ந்தனர் இருவரும். இன்பமனுபவிப்ப தென்றால் வெறும் போலியா? பெறுபேறும் மாதக்கணக்காக எண்ணிக்கொண்டு வந்தது.

முடிந்தது மாதமும் பத்து. அழகிய ஓர் தனயன் பிறந்தான். அவன்தான் இன்றைய நம் நண்பன் ''கடன் பெரிது'' இவரது வாழ்க்கையைச் சொல்லவா வேண்டும். உல்லாசமே உல்லாசந்தான். கறுத்துக் கொழுத்துக் கஸ்ட உருவமேதான். நாட்செல, நாட்செல வண்டியும் வளரத் தொடங்கியது.

ஸ்ரீமான் ''வருகை சிறிது'' என்பவரோ நம்மகன் ''கடன் பெரிது'' இருக்கும் போது இதன்மேல் என்னடி வரப்போகுது; நெய்யில் பொரியடி மீனை என்பார். சௌபாக்கியவதி ''செலவதிகம்'' அம்மாளோ நீ உடை போத்தலை என்பா. அருமை மகன் ''கடன் பெரிது'' என்பவர் தான் சும்மா தூங்குவாரா? அவருக்கு வண்டி கொழுத்ததோடு குண்டியும் கொழுத்து விட்டது. இரண்டு பாகம் நடந்தாலோ தொடைகள் உரோஞ்சி கிரீச்சென்று பாயும் இரத்தம். இதைப் பார்த்த பெற்றோருக்கு மனம் சகிக்க முடியவில்லை. பரவாயில்லை என்று துணிந்து பெட்டியைத் திறந்து பத்தேக்கர் நீர்ப்பாய்ச்சல் குளிகை ஒன்றை நொத்தாரிஸ் மூலமாகக் கொடுத்தார். அப்பாடி கொஞ்சம் வண்டி குறைந்தது. அந்த ஆனந்தம் சும்மா விடுமா?

நல்ல படமாம் என்பார் நாதன் ''வருகை சிறிதார்'' அதுக்கென்ன எடுங்க ''கார்'' என்பா பத்தினி ''செலவதிகம்''. பிறகு ஏன் பாப்பான்,

''கடன் பெரிது'' கொஞ்சம் கொழுக்கத் தொடங்கினார். ஐயோ இது என்ன பாவம் என்று பயந்த தம்பதிகள் முப்பத்திரண்டு ஏக்கர் தென்னங் குளிகையை முன்போலவே கொடுத்தனர். சற்று சகல கொழுப்பும் குறைந்தது. விஷயங்களை உற்றுநோக்க, நோக்க போலும் ''கடன் பெரிசார்'' சற்று மெலியத் தொடங்கினார்.

வருகை சிறிதாருக்கு உலகமே கசந்து விட்டது போல. என்ன நம்ம குளிகையெல்லாம் இந்தக் ''கடன் பெரிது'' பிறந்த பிறகுதானே தொலைந்தது என்று ஒரே சள், புள். இவர்கள் இருவருக்கும் இடையில் அகப்பட்ட செலவதிகத்துக்குத்தான் பெரும் ஏக்கம். ஏன்? அன்பாக வளர்த்த மகன் ''கடன் பெரிது'' கஸ்டப்படுகிறானே என்றுதான். இந்த ஏக்கத்தால் போலும் சிறிது நாட்களாய் அருமருந்தன்ன தாயார் ''செலவதிகம்'' இம் மண்ணுலகை விட்டு நீத்தார். இந்த ஏக்கம் மகனைப் பீடித்தது போலும். கடன் பெரிது சிறிது நாளால் மாண்டொழிந்தான்.

வருகை சிறிதாருக்கோ ஒருவர் உதவியும் இல்லை, வீட்டுக் குளிகை மாத்திரம் கையில் இருந்தது. துணையொன்று வேண்டும்தானே என்று ஒரு பிள்ளையை வளர்த்தார். அவள் பெயர்தான் ''செலவில்லை''. இவளுக்கோ கொழுப்பும் இல்லை, மெலிவும் இல்லை. குளிகையும் தேவைப்படவில்லை. அப்போதுதான் மகன் கடன் பெரிதின் நிஷ்டூரத்தை மனமார அறிந்தார். அறிந்தும் கடன் பெரிதுதான் என்ன செய்வான். எல்லாம் செலவதிகத்தைத் தாலி கட்டினதாலல்லவா இந்தக் கஸ்ட மெல்லாம் வந்தது. தாலியைத்தான் கட்டினாலும் அவளை மனமார நேசித்து நடந்தேனே என்று தனக்குள்ளே நொந்து இம்மண்ணுலகே வேண்டாம் என்று சினந்து ஓர் நீண்ட கத்தியால் பாய்ச்சினார் வண்டியில். அன்றே இழந்தது அவர் உடலை மடமை.

# கவிதைகள்

## தூய அன்னை சாரதா!

பரம ஹம்ஸ தாஸன்

உன்னை நினைக்கையி லே - எந்தன்
    உள்ளத்தி லே தூய்மை வெள்ளம் பெருகுதே!
என்ன புதுமையம்மா!- கொடும்
    ஏழைக்கும் பேரன்பு பாலிக்கத் தோன்றிய
அன்னை தயாபரி யே! - உன்றன்
    அற்புதப் பேரருள் யாரறி வாரம்மா!
வன்னச் சுடர்க்கொடி யே ! - புது
    வாழ்வு தரும் ஜோதி மங்கல வாணியே! (உன்னை)

பாரதப் பெண்மையெல் லாம் - திரண்டொரு
    பைம் பொற் கதிராய் எழுந்த பரி சுத்த
சாரதா ரத்தின மே! -பன்மத
    சார மனைத்தும் பிழிந்தின்பக் கட்டியாய்ப்
பாருக் குவந்தளித் த - வள்ளல்
    பரம ஹம்ஸர் திரு அவ தாரத்தைப்
பூரண மாக்கிட வே - அருள்
    பொங்கிடும் திங்களாய்ப் பூத்த செழுந்திரு! (உன்னை)

வாய்மை, பொறை, யடக் கம், - அன்பு,
    மாதவத் தொண்டுடன் தியாகக் கனல் வீசிக்
காமனைச் சுட்டொழித் தே- தெய்வக்
    காதலன் இச்சைக் கே ஆன்மக் கலப்பெய்திப்
பூமிசை கோடிமக் கள் - ''ஞானப்
    பொன்னருட் தாய்!'' என்று போற்றிடப் பெற்றிட்ட
தூய்மை வடிவமு தே! - பரி
    சுத்தசக் தி! என்னும் சத்திய ரூபிணி! (உன்னை)

# இன்னும் உறங்குவதா?

பரமஹம்ச தாசன்

### பல்லவி

இன்னும் உறங்குவதா? - தமிழா நீ
இன்னும் உறங்குவதா?
என்ன மடமையடா கன்னித் தமிழா! நீ (இன்னும்)

### அனு பல்லவி

பொன்னின் இளங்காலை புலர்ந்துல கெங்குமே
பூரண சுதந்திர பேரிகை முழங்கையில் (இன்னும்)

### சரணம்

அன்னிய மோகத்தால் தன்மானம் துறந்தாயோ?
அடிமைப் பிணியால்உன் ஆற்றலை மறந்தாயோ?
பன்னெடு நாளிடர்ப் பட்டது போதாதோ?
பைந்தமிழ்ப் பணிக்(கு)உடன் பாய்ந்தோடி வாராமல்
(இன்னும்)

தித்திக்கும் தமிழினால் எத்திக்கும் உணர்வுத்தேன்
செழித்திடப் பாய்ச்சிய எழிற்கவி பாரதி
சக்திக் கனல் நம்முள் சந்ததம் உறைவதைத்
தமிழா! நீ மறந்ததேன்? தயக்கம்விட் டெழுந்திராய்!
(இன்னும்)

# வெற்றி முழக்கம்

பரம ஹம்ஸ தாசன்

வெற்றி முழங்கு தடா -ஜய
வீறு கிளம்பு தடா- நம்மைச்
சுற்றும் பகைக ளெல்லாம் - படீரெனச்
சுக்கு நூ றாகுதடா! 1

வீர கண்டா மணிகள் - ஜெகமெங்கும்
வீறிட் டொலிக்கு தடா! - பரி
பூரண ஜோதி வெள்ளம் - எங்கணும்
பொங்கிப் பொலியு தடா! 2

வல்லி ருட் கோட் டைகளைத் - தகர்த்தொளி
வாள் நகை வீச் சுடனே! -இதோ
துள்ளி எழுந்து விட்டாள் - சுதந்திர
ஜோதிச் சுடர்மணித் தாய்! 3

அச்சம் ஒழிந்த தடா!- அறி
யாமை தொலைந்த தடா - இனி
இச் சகத்தில் எவர்க்கும் - அடிமை
இல்லை யென்றே சொல்லடா! 4

ஏழை பணக் காரன் - என்ற
எண்ணம் தகர்ந்த தடா! - எங்கும்
கோழைத் தன மகன்றே - ஆண்மை
கொஞ்சிக் குலாவு தடா! 5

நாத்திகக் கும்ப லெலாம் - கலைந்துடன்
நைந்து சிதைந்த தடா! - எங்கும்
ஆத்மிகப் பேரொளித் தேன் - கடல் போல்
அலை யெழுப்பு தடா! 6

கூர்த்த மதித் திறமை,- அருள் மணம்
கொஞ்சும் கவிப் புலமை - எங்கும்
பூத்துக் குலுங்கு தடா! - கலையெழில்
பொங்கிப் பரவு தடா! 7

சுதந்திரத் தாய ணைப்பில் - மலை போல்
தோள்கள் பூரிக்கு தடா! - அவள்
பாதங்களைக் கண்ணி லொற்றி - உலகைப்
பாலித் திடுவோ மடா! 8

# மறைந்த கவிக்குயில்!

பரமஹம்ச தாசன்

பெண்ணடிமைத் துயரிருளைப் பிளந்தெறிந்து
பேருலகப் பெண்மை வானில்
திண்ணியநல் லொளிவளர்த்த தினகரி! நின்
கலையெழிலிற் செழித்த வையம்,
கண்ணிழந்து தவித்திடவின் கருணையொளிக்
காந்தியை முன் கரந்து வைத்துத்
தண்ணமைதிக் கடலின்மிசை மறைந்தனையே
சரோஜினியாம் சத்தித் தாயே! 1

காலமெனும் பாலைவனக் கடுமணலும்
தினையளவும் கருக்க வொண்ணாக்
கோலமிகு கவிமலர்கள் கொட்டிவிட்ட
பூங்கொடியே! கொல்லும் பாம்பும்
காலடியிற் சொக்கிநிற்கக் கானமழை
பொழிந்தகவிக் குயிலே! இன்றுன்
பாலொழுகும் தீங்குரலைப் புவிகாணா(து)
ஏங்கவெங்கோ பறந்திட் டாயே! 2

பெண்பாவை பேதையெனப் பேசியவர்
நாவடக்கிப், பெண்ணி னத்தால்
அம்புவியில் ஆற்றவொணாச் செயலெதுவும்
இலையெனக் கண் (டு) அதிசயிக்க,
அன்பொழுக வீட்டரசும், அருளொழுக
நாட்டரசும் ஆட்சி செய்து,
இன்பொழுகும் விண்ணரசை ஏற்கவெழுந்
திட்டனையோ? எழிற்பூம் கோதாய்! 3

சுதந்திரமாய்ப் பறந்துயர்ந்த விண்ணகமெல்
லாம்உலவிச் சுகிக்கும் வாழ்வை,
இதந்தெரிந்து தேசத்தின் திருப்பணிக்கே
அர்ப்பணித்த எந்தாயே! நின்

விதந்தெரிந்து போற்றவெனில் விண்ணவர்க்கும்
ஆற்றலுண்டோ? வீரத் தியாகப்
பதந்தொழுதுன் மொழியமுதைப் பருகிமகிழ்ந்
துய்வதன்றிப் பாலர்க் குண்டோ? 4

கற்பனையின் சிகரத்திற் கமழுமெழிற்
சுடர்க்கொழுந்தே! கவிதை வானில்
அற்புதநந் நடம்புரியும் ஆனந்தக்
கலைக்குயிலே! அவனி போற்றச்
சொற்பொழிவு மழை பொழிந்த ஜோதிமணி
முகிலே! நல் தூய தியாக
விற்பனர்கள் தொழும்புனித வித்தகியே
பாரதத்தின் வீர வாணீ! 5

இளமையிலே சமூகமெனும் இருட்சிறையைத்
தகர்த்தெறிந்து, இனிய காதற்
கலப்புமணம் புரிந்துலகு கண்டுவியப்
புறத்தெய்வக் காந்தி யெம்மான்
துலக்கியநல் லறப்போரில் பகையறவீ
ராங்கணையாய்த் துலங்கித் தேசத்
தலைப்பதவி யேற்றரசு புரிந்த கவி
யரசியென்றும் ஜகத்தில் வாழ்க! 6

# பாரதிச் சுடர்

பரமஹம்ச தாசன்

அச்சத்தைப் போக்கித் தூய
ஆண்மையுண் டாக்கிக் காம
இச்சையை நீக்கிக் காதல்
இன்பத்தைத் தேக்கி வாழ்வின்
நச்சிருட் கவலை யெல்லாம்
நலிந்திடக் கவிதை வானில்
பச்சொளி வீசிப் பூத்த
பாரதிச் சுடர்த்தாள் வாழ்க!

அன்னியர் ஆட்சி மோக
வலைக்குட்பட் டறிவ ழிந்து
தன்னிலை கெட்டு நின்ற
தமிழனைக் கனல் பறக்கும்
தன்னிக ரில்லா வீரத்
தமிழ்முர சார்த்துக் காத்த
உன்னத பாரதிக் கிவ்
வுலகினில் இணையு முண்டோ?

"உடலினை யிரும்பாய்ச் செய்து
உள்ளத்தை வலி யுறுத்தி
அடலறு கலியைக் கொன்று
அம்புவி யார்கண் முன்னே
திடமுடன் புது யுகத்தைத்
திகழ்விப்பேன்" என்ற மன்னன்
திடமொழி யுண்மை யீந்த
ஜெகத்தினில் கண்டோம் இன்றே!

அமிழ்தினை யுண்டு சாகா
நிலையினை யடைந்த வானத்
தமரரும் தமிழனாக
அருந்தவம் புரியும் வண்ணம்

அமிழ்தினும் இனிக்கும் தூய
அற்புதக் கவித்தேன் பெய்த
அமரபா ரதியால் இன்று
அமரருள் அமர ரானோம்.

மதப்பெய ராலே தூய
மக்களை மாக்க ளாக்கும்
விதவிதச் சூழ்ச்சி யெல்லாம்
வெயில்கண்ட பனிபோ லாக
மதம்பல கடந்த ஒன்றை
வணங்கியெல் லோரும் உய்யும்
சுதந்திர வழிதந் திட்ட
பாரதித் தூயோன் வாழ்க!

# ஐக்கியமே இன்பம்

வித்துவான் ஏ.பெரியதம்பிப்பிள்ளை

[நேரிசை வெண்பா]

அன்பிற் சமத்துவமுண் டாங்கதனால் ஐக்கியமாம்
பின்புமகா சக்தி பிறக்குங்காண் - மண்புவியில்
சத்தியத னாற்கரும சாத்தியமாம் இன்பநிலை
சித்தியுமா மென்றே தெளி.

[உண்மை யுள்ளம்]

உண்மை யுளத்தில் உதிக்க உரைதெளியும்
பின்னைப் புலமை பிறக்குமே - நன்மை
அகக்குருட ரெல்லாம் அறிவுவிழி பெற்று
மிகப்பெரிது மின்புறுவார் மேல்.

[ஆசையும் கோபமும்]

உன்னும் விடயத்தா லுண்டாமே பற்றுள்ளம்
பின்னை விருப்பம் பிறக்குங்காண் - துன்னும்
மனவிருப்பம் சித்திபெற வாய்த்திலதேல் அஃதால்
சினமுறுதல் மாந்தர் செயல்.

சின(ம்) மயக்கம் செய்யும் மயக்கத்தாற் சிந்தை
நினைவுத் தடுமாற்றம் நேரும் - நினைவுத்
தடுமாற்றத் தாற்புத்தி சாகு மதனாற்
கெடுமாற்ற முண்டாகுங் கேள்.

[நவீன சாதிப் பகுப்பு]

முன்னை வடக்கால் முளைத்தன நாற் சாதிபோய்ப்
பின்னை யிருசாதி பிறந்துளகாண் - அன்னியர்தம்
ஆங்கிலத்தால் மேல்சாதி யாயிற்றே தாய்மொழிகற்
றேங்கி நிற்கும் கீழ்சாதியே.

# ஏழையின் பொங்கல்

கவி ஜி.எம். செல்வராஜ்

*[எல்லோரும் தைப்பொங்கல் கொண்டாடி விட்டார்கள். இந்த ஏழையின் வீட்டிலுந்தான் அன்று பலவகைப் பொங்கல் பொங்கின. ஏர் பிடித்த அவன் கரங்கள் பொங்கின; இதயம் பொங்கிறது; விரலும், வயிறும் பொங்கின; கண்களில் கூட பீளை பொங்கிவிட்டதாம் - ஏழையின் தைப்பொங்கல் இத்தனை பொங்கல்களோடு கழிந்து விட்டது என்கிறார் கவிஞர் - அற்புதமான கற்பனை!]*

பொறிபறக்கும் வெய்யிலிலே வேலைசெய்து
பொழுதடைய வரமேனி அனலாய் பொங்க
சிறிதளவும் தங்காது எரிவுமாற்ற
சென்று குளித் திடச்சூடு சீறிப்பொங்க
ஒருமருந்தும் உண்ணாமல் உறங்கிவிட்டு
உடன் காலை எழுந்திடக்கண் பீளைபொங்க

உறியிருந்த பழஞ் சோற்றை உருட்டித் தின்று
உழைத்திடப்பின் னோடியதே என்தைப்பொங்கல்
ஏர் பிடித்த என்னிரண்டு கரங்கள் பொங்க
எருதுகளோ டிரைந்திட்ட இதயம் பொங்க
வேர் முள்ளுக் குத்திக்கால் விரலும் பொங்க
வெறு வயிறா யிருந்ததினால் பசியும் பொங்க

ஊரினிலே பட்டகடன் உளத்தில் பொங்க
உடுப்பில்லை என்றதுயர் உடலம் பொங்க
பேரெடுக்கும் தைப்பொங்கல் பொங்கியுண்ணும்
பெருமையெனக் கெதற்குத்தான் பேசுவீரே

# இதுவா பொங்கல்

கவி.ஜி.எம். செல்வராஜ்

*(நம் நாட்டில் எத்தனையோ போடிமார் தைப்பொங்கல் பொங்கி விடுகிறார்கள். அனேகமாய் எல்லாம் இந்த வகையான பொங்கல்தான்)*

ஏழைகளைக் கூப்பிட்டு ஏசிப்பேசி
ஏலாத வேலைகளைச் செய்துவிட்டு
''நாளை வா கூலி தர'' வென்று சொல்லி
நாட்டாண்மை காட்டியெந் நாளும்தங்கள்
பேழையிலே நிரப்பிட்ட பணத்தைக் கொண்டு
பெருமையுடன் ஊரறியப் பொங்கலிட்டு
வாழையிலை வெட்டியதில் புக்கைக்கட்டி
வறியவர்க்கு வழங்குவதும் பொங்கலாமோ.

கண்குருடு ஊமைசெவி டொருகால்நொண்டி
கால்கடுக்க வாசல்படி காத்திட்டாலும்
என்னவென்றுங் கேளாமல் இரங்கிடாமல்
''எசமானார் இல்லைபோ'' என்று சொல்லும்
புண்ணியர்கள் மாவிலையும் பூவும் போட்டு
புதுப்பானை அடுப்பேற்றிப் பொங்கலிட்டு
கன்னியிள வாழையிலை வெட்டிப்புக்கை
கணக்காகப் பங்கிடுதல் பொங்கலாமோ.

அடுத்திருக்கும் அயலாரின் வீட்டிலுள்ள
அருஞ்சிறுவர் அமுதோடு பாலுமின்றிப்
படுத்திருந்து பசியாலே நெடுங்கொட்டாவி
பலமுறையும் விடுவதையும் கேட்டிருந்தும்
எடுத்தொரு சட்டியில் சாதம் ஈய்ந்திடாமல்
என்னவென்றுங் கேளாமல் இருந்து விட்டு
உடுப்புடுத்தி உபசாரப் பொங்கலிட்டு
ஒரு புக்கை கொடுப்பதுவும் பொங்கல்தானோ

# கடமை செய்ய வாரீர்

"ஜோஸ்"

கடமையென்று தேசசேவை செய்ய வாரீர்
கண்ணன் சொன்ன கர்மயோக மெய்த வாரீர்
மடமை யச்சம், அடிமை நோய்கள் தீர வாரீர்
மனித வாழ்வில் அமைதியின்பம் தோய்க வாரீர்

மேடைமாலை சூடிடாத போதிலும் - அச்சு
விளம்பரங்கள் மெச்சிடாத போதிலும்
நாடறியப் போற்றிடாத போதிலும் - நாம்
நல்லதை அடக்கமாய் நடத்துவோம்.

பட்சபாதமான பத்திரிகைகள் - எம்
பணிகளை மறைத்துவைத்த போதிலும்
துச்சமான போட்டிகண்ட போதிலும் - நாம்
தூய வாழ்க்கை கொண்டு வெற்றி யீட்டுவோம்.

காலம் நம்மைப் பரிகசித்த போதிலும் - வெற்றி
கடவுளுண்டு தருமமுண்டு காணுவோம்
ஞாலம் நம்மை யறியு நாளும் வந்திடும் - நாம்
நல்ல சேவை செய்து நாட்டைக் காப்பமே.

இறைவனிடம் உயர்வு தாழ்வு இல்லையே - இந்தச்
சாதி மத நோயால் பெருந் தொல்லையே
கறை பிடித்த சமூகம் ஊட்டும் விஷத்தினால் - எங்கள்
காலம் கெட்டழிந் தொழிந்து போகுதே.

வீட்டில் பெண்டு பிள்ளை வெறும் பட்டினி - நாங்கள்
விதியை நொந்து பொழுதை ஓட்ட வேண்டுமோ
காட்டில் சென்று விறகு வெட்டி விற்றேனும் - நாம்
கால் வயிற்றுக் கஞ்சி தேட வேண்டாமோ?

நாட்டிற் பஞ்சம் தொலைந்து போக உழைக்கணும் - நம்மை
நசுக்கி வரும் மதுவை நாடு கடத்தணும்
சுற்றியுள்ள ஏழை மக்கள் குறைகளை - நாங்கள்
சுறு சுறுப்பாய்ச் சர்க்காருக்கு ஓதணும்.

# பவள மணி நாடு

அன்பு தாசன்

பாரத தேவியின் மாலைப் பதக்கம் எம்
பவள மணி நாடு - இந்தப்
பாரி லுள்ளோ ரெலாம் வந்து புகழ்கின்ற
பைம் பொன் வள நாடு

சூழக் கடல்கள் வளைந்து கெம்பீர மாய்த்
தோன்று மிலங்கை யிது- எங்கும்
வாழையும் ரப்பரும் தென்னையும் மோங்கி
வளர்ந் திடும் தீவுமிது

உலகம் புகழ்ந்திடத் தேயிலை தந்திடும்
உயர் வுடைய நாடு - இன்னும்
பலவகை ரத்தினக் கற்கள் விளைகின்ற
பாங்கும் உள்ள நாடு

எல்லா மதத்தவரும் புகழ்ந் தேத்திடும்
ஏக ஸ்ரீ மாமலை - பெரும்
கல்லுங் கரையப் பெருகும் மகாவலி
கங்கை போலெங்கு மிலை

புத்த கிறிஸ்துவ இந்து இஸ்லாமிய
புண்ணியக் கோயில்களும் - சுற்றி
எத்திசை நோக்கினும் பச்சை வளந்தரும்
ஈழ வள நாடு

இன்பங்கள் தந்தெமை என்றென்றுங் காத்திடும்
இன்னிசைத் தாய்நாட்டைப் - பெரும்
அன்புடன் போற்றி வணங்கிப் புகழ்ந்திங்கு
ஆனந்தமாய் வாழ்வோம்.

# அஹிம்சை ஒன்றே!

அன்புதாசன்

சுத்த சத்திய வழியாகும்
சுதந்திரம் நிலைத்திட இதுவேண்டும்
நித்திய நேர்மை அன்பு தோன்றும்
நீதி வழி அஹிம்சை ஒன்றே!

சண்டையால் மண்டை உடையாமல்
தனியாள் சுரண்டித் தின்னாமல்
அண்டை அயலார் யாருடனும்
அன்பு கொளும் வழி அஹிம்சை ஒன்றே!

கற்புத் தீயொளிர் மங்கையர்க்கும்
கடமையில் உயிர்த்திடும் தொண்டருக்கும்
நற்குண ஞான சீலர்கட்கும்
நலமருள் வழி அஹிம்சை ஒன்றே!

புத்தர் நபிகள் யேசு முதற்
புனிதர்கள் வாழ்க்கையிற் பூண்டதுவும்
சத்தை யுணர்த்தும் வழியின்று
சகலமும் தரும் அஹிம்சை ஒன்றே!

சாந்த மூர்த்தி சத்ய ஆத்மா
சற்குண சமரமுற்ற மகாத்மா
காந்தி முனியர் பூண்டவழி
கருணை நிறை அஹிம்சை ஒன்றே!

# வாழிய பாரதி நாமம்

ஏ.சீ. அன்புதாசன்

பாடுவோமே புகழ் சூடுவோமே
பாரதி திரு நாமம் வாழ்கவென்றே, நாம்
(பாடுவோமே)

அடிமையுற்ற மக்களுக் கா வேசம் மூட்டினான் - ஆண்ட
அன்னியரை எதிர்த்துநிற்கும் ஆற்றல் கூட்டினான்
மிடிமை தொலையப் பொது வுடமை நாட்டினான்-எங்கள்
வீரத்துக் கீடில்லையென வெற்றி கொட்டினான் என்றே
(பாடுவோமே)

சாதி பேதத் தீமையை வளர்ந்த சாத்திரம் - பொல்லாச்
சமயச் சண்டை வாதுகளைக் காத்த சாத்திரம் - எல்லாம்
வீதியிலெறிந்துவிடப் போதனை செய்தான் - நீதி
மேவு சுயராஜ்ய நெறி யாவர்க்கு மென்றான்- என்றே.
(பாடுவோமே)

நாட்டு மக்கள், நாட்டு நலன், நாட்டு கலைகள்- எல்லாம்
நவநவமாகக் காட்டி நம்மைக் கவர்ந்தான் - சொந்த
வீட்டுமொழி செந்தமிழைப் பூதலமெலாம் - கண்டு
வியந்து புகழப் பல வித்தைகள் செய்தான் - என்றே.
(பாடுவோமே)

பெண்மையை யிழிவு செய்தல் பேதமையென்றான்- வெறும்
பேச்சினிலேயல்ல முழுமூச்சிலே கொண்டான் - மேலாம்
திண்மை சொலிக்கும் திருவுருவம் அவன்- தெய்வச்
சுடராக நம்முடைய சிந்தை நிறைந்தான் - என்றே.
(பாடுவோமே)

# வாழ்க பாரதி

ராஜா ராம் - கொழும்பு

வரகவியின் திருநாமந் தாங்கி வந்து
வழிமுறைகள் அழகாக வகுத்துக் காட்டிப்
பட்சமொன்றே நல்லதென வழியே கூறும்
பாரதியைக் கண்ணுற்றேன் அகம் மகிழ்ந்தேன்
வாழ்கநீ என்றென்றும் நன்றே என்று
வாழ்த்திநின்றேன்; வாழ்க பாரதியே வாழ்க.

# பாரதி வாழ்த்து

M. சோமசுந்தரம்பிள்ளை

தெள்ளத் தெளிந்த நீர்போலத்
திகழும் பருதிச் சுடர்போல
வெள்ளம் பொழியும் முகில்போல
விண்ணின் றொளிரும் மதிபோல
உள்ளத்தூறி அருள் மயமாய்
ஓடுங் கவிதைக் கடல்போல
உள்ளும் மாந்தர் இடமெங்கும்
உயர்ந்து வாழ்க! பாரதி நீ

ஊரைக் காத்துப் பணிபுரிந்த
உண்மை அன்புத் தமிழ் வேந்தர்
பேரைக் காத்துப் பெருமை யெல்லாம்
பேசிப் பேசிப் பிறர்க்குதவு
வாரைப்போல நீ வந்தாய்!
வாழ்த்தி நின்றார் வானவரும்
வீரத் தமிழின் சேயே! நின்
வெற்றி முழக்கம் கேட்டதுவே

புதுமைக் கவியும் புதுவாழ்வும்
புவனித் தொண்டும் புகழ் ஓங்கும்
புதுமை அரசம் பொது மதமும்
போற்றும் ஞானப் புத்தமுதும்
முதுமைத் தமிழின் பண்பாடும்
முன்னேற்றத்தின் நாடெல்லாம்
கதுமென் றேகச் செல்வழியும்
காட்ட வந்தாய்! பாரதியே.

பெரியோர் வாழ்த்தும் பேச்சதிரப்
பேதை துயரம் பிரிந்தோட
உரிய உண்மை வாழ்வாலே
உலகம் உய்ய நீ வந்தாய்!
கருதியாரும் நின்வரவைக்
கண்டு கண்டு களிக்கின்றார்
சுருதிபோல நீ வாழ்ந்து
சொல்வை ! நீதி எங்கட்கே

# எனது தோழா!

'சுபமணி'

எழுது கோல் எனது தோழன்!
இப் புவி யாளும் ராஜன்!
பழுதிலா னெஞ்ச மின்றேல்
படு கொலைக் காரனாவான்!

நல்ல தோர் கொள்கை யேற்று
நாட்டினில் எழுச்சி யூட்டி
அல்ல லுற்றிடு வேர் தன்னை
அழைத்திடும் ஆற்றல் பெற்றோன்!

அறி வினை வளர்ப்ப தற்கும்
அறமது காப்ப தற்கும்
சிறு மதியாளர் செய்கை
சிதைந்திடச் செய்வ தற்கும்.

வெறியினால் மிருகம் போல
வெஞ் செய லாற்றும் மக்கள்
அறி வொளி யேற்று வாழ
அழைப்பவன் எனது தோழன்!

வீணையாம் இதயந் தன்னில்
வெளிப் படும் நாத மிங்கே
மோன மாய்க் குரல் எழுப்பி
முழக்கிடும் சின்ன மவன்!

கற்பனை ஊற்றின் வேகம்
கரை புரண் டோடி வந்து
அற்புதம் யாவும் செய்ய
அதற் கவன் உதவி வேண்டும்!

# தமிழ்

மூனாக்கானா

தமிழுக்கோ ரழகுண்டு தனிமை யாக
தரணியிலே முந்தியதால் பெருமையுண்டு
வளமிக்க சொல்லுண்டு பேச வாயால்
வாதாட வருவோர்க்குத் திரிசொல் லுண்டு
இளமைக்கு மொழிபேச மழலை யுண்டு
இனிப்புள்ள காதல்மொழி இருவர்க்குண்டு
பழமைக்கும் புதுமைக்கும் கவிக ளோடே
பகவான்முன் நீர்விடவும் பாட லுண்டு.

ஆதியிலே யாம்வாழ்ந்த வாழ்க்கை யுண்டு
அரசருக்கு மனுதர்ம மதிக முண்டு
நீதியிலே வழுவாத நெறிக ளுண்டு
நினைப்பதற்கு இனியில்லாக் குறளு முண்டு
மேதினியை அரசாளும் மார்க்கமுண்டு
விதம்விதமாய்க் கேட்பதற்குங் கதைக ளுண்டு
தாதியர்கள் தாலாட்டும் ராகத் தோடு
சவத்தினையுங் கட்டியழ ஓசை யுண்டு

மனிதருக்கு உரியபல கடமை யுண்டு
மாதர்களின் பெருமைகளும் கற்பு முண்டு
புனிதமொரு மனவாக்குக் காயத் தாலே
புரியுமறம் முப்பத்தி ரண்டு முண்டு
தனிமனித னாயிருக்கச் சக்தி யுண்டு
தணியாத நோய்களுக்கு மருந்து முண்டு
கனிவுடைய பலமொழிக ளீன்ற தாலே
களைப்புற்ற தமிழ்த்தாயைப் பேணு வோமே.

# நீடு வாழ்க கவிக்குயில் வாழ்கவே!

சுவாமி சுத்தானந்த பாரதியார்

புல்லடி மைப்பட்ட மாந்தர்க்குச்-சுய
புத்தி வரச்செய் தெழுப்பினான்
வெல்வலி யற்றுத் தளர்ந்தவர்க்-கொரு
வீரக் கனலினை மூட்டினான்

பல்சமயச் சாதி வேற்றுமை-யாலே
பாழ்பட்ட பாரத நாட்டிற்கே
செல்வலி வாற்சம தர்மத்தைத் -தூண்டிச்
சோகத் தவிர்த்தனன் பாரதி

பண்டிதர் கொண்ட தமிழினை-நாட்டில்
பாமர ரும்பெறச் செய்தனன்
பெண்டிர் அடிமையைத் தீர்த்தனன்-வெறும்
பேச்சினிற் காலத்தைப் போக்கிய

வண்டரை யெள்ளி நகைத்தனன்-நாட்டை
வன்பணி செய்திட வூக்கினான்
தொண்டிவன் செய்ததைச் சொல்லவோ-கவி
தோற்றினன் இங்குப் புதுயுகம்

தீரன் அறிவிற் சிறந்தவன்-புதுத்
தீர்க்க தரிசி வரகவி
வீரசு தந்தர சக்தியே-இவன்
வேடம் புனைந்திங்குப் பாடிற்று

பாரில் அதிசயம் பாரதி-அவன்
பண்களை வேதமென் றோதுவோம்
வாரிதி சூழுல கெங்கிலும்-நீடு
வாழ்க கவிக்குயில் வாழ்கவே

# சக்தி எங்கே?

எஸ். கே. ராஜூ

பங்கமுற்றுடைந்து வீழ்ந்து பகலவன் ஒளி பெறாது
எங்கணும் இருள் படர்ந்த எண்ணிலாக் கோயில் எல்லாம்
சங்குடன் பூவுங்கொண்டு சக்தியைத் தேடுகின்றீர்
எங்ஙனம் உங்கள் கண்ணில் எய்துவாள் அவள் தான் மாதோ

புயங்களால் வலிமை மிக்க பூமியைத் திருத்தியுண்ணும்
வியம்பெறும் உழவன் ஏரை விழித்துமே நோக்குங்காலை
ஜெயங்கொண்ட சக்தியன்னை சீற்றமற்ற வன்றன்னோடு
நயங்கொண்டு நகைபுரிந்து நன்னடன் ஆடக்காண்பீர்

சாறென்ன வெயர்வையோடச் சக்கையாய்த் தம்மையாக்கும்
ஆறென்ன நீரைப் பாய்ச்சும் அருந்தொழிலாளர் கையில்
ஏறுபோல் சீறிப்பாய்ந்து எதிரியைத் தாக்கும் வன்கை
வீறுடை வீரர்தோளில் விரிநடன் ஆடக்காண்பீர்

காரெலாம் படிந்து நிற்கும் கரியநீள் வரைதன் பிஞ்சில்
கூரிய உளிதான் கொண்டு கொஞ்சிடும்கலை ஞன்கையில்
சீரிய சக்தியன்னை செயலியாய் நின்றுகொண்டு
பூரணப் பொலிவுகொண்டு பொன்னடன் ஆடக் காண்பீர்

ஓங்கிய கையினாலே ஓம் எனும் ஓசை கொண்டு
பாங்குடன் சலவை பண்ணும் பாட்டாளிகையில் உள்ளாள்
பூங்கரம் தனிலுலக்கை பூண்டிடும் மங்கை கையில்
நாங்கள் காணாதவாறு நன்னடன் ஆடுகின்றாள்

தூரிகை கொண்டு தூய தூண்களிற் சித்தரிக்கும்
சீரியர் கரங்களிலே திருநடன் ஆடுகின்றாள்
காரிகை மழலைப் பேச்சில் கவின்பெற இருந்து நன்மை
கூரிய அம்பு போலக் கொடுமைகள் பலவும் செய்வாள்

கூற்றுவன் போலவந்து குறைகளை எழுதுகோலால்
ஆற்றின தோட்டம்போல அமுதமாம் தமிழின் சொல்லால்
போற்றிய பலபா வாக்கும் பொற்புடைக்க விஞன்பாவில்
தோற்றிய சுவையினோடு துரிநடன் ஆடக்காண்பீர்

# கற்பனைக் காதலிக்குக் கலைக் கடிதம் (வசன கவிதை)

எஸ்.கே.ராஜூ

அருமைக் காதலிக்கு!

தளிர்க்கரங்கொண்டு தங்கத்தாளில்
களிப்புடன் எழுதிய கடிதம் கிடைத்தது
விழிப்புடன் இருந்து மீண்டும் மீண்டும்
சலிப்படையாது படித்துப்பார்த்தேன்
படித்துப்பயன் என் பதில் எழுதவேண்டாமோ
கண்ணே! மணியே! கனியே என்றெழுத எனக்குத் தெரியாது.

அம்புலி கண்டு அல்லலுற்றேன் என்றாய்
எங்கள் ஊர்ச்சந்திரனுள் நீயே இருக்கின்றாய், நீயே இருக்கின்றாய்,
நின்னைக்காண நெருங்கிவந்தேன்
என்னைப்பார்க்க மனமில்லாது ஏன்முகிலுள் மறைந்தாய்.
(அதுபோகட்டும்)

தென்றல்காற்று தேன்மலர்த்தன்னில் தொட்டுவரி னும்பயமென்றாயே
எங்கள் ஊர்க்காற்றென இன்பம் பயப்பதோ
ஊழிக்காற்றும் இப்படித்தான் இருக்குமோ
அனல் போல்வீசி உடலை எரிக்குதே.

கடற்கரைக் காட்சியும் கானலைப் போன்று
கருத்தை கவராதிருக்குதே யென்னாய், (இங்கு என்ன)
முகில்கள் படியும் மலைகள் கூட
மனமதை ஏனோ கவர்வதாய் இல்லை.

சடுதியில் ''அம்மா'' வருவாவென்று
கடிதம் எழுதப்பயமென்றாயே
எண்ணமிருக்கு எழுதவும் கையிருக்கு
என் கண்கள் சொல்வதைக் கைகள் வரையுமோ
வெகு நாட்களில்லை விடுதலைக்கு.

# இளைஞர் பகுதி

## "அண்ணா"

*தேசத்துக்குத் தூண் போல உள்ளவர்கள் இளைஞர்கள். அவர்களுடைய தீர்க்க புத்தி, தைரியம் ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது, நாட்டின் எதிர்காலம். தேசீய வாழ்வின் புனருத்தாரணத்தில் இளைஞர் களின் பங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இளைஞரிடம் அபார பலமுண்டு. உற்சாகமுண்டு. நம் நாட்டுக்குத் தொண்டுபுரிய வேண்டு மென்ற ஆர்வமுண்டு. அத்துடன் வேண்டியளவு கல்வியறிவும் சேர்ந்துவிட்டால் அவர்களை அசைக்கவே முடியாது நேர்மையான பாதையினின்றும்.*

*எனவே இப்பகுதியை இளைஞருக்கெனவே ஒதுக்கியுள்ளோம். தாய்நாட்டுக்குச் சேவை புரிய வேண்டுமென்று அளவுகடந்த ஆர்வம் கொண்ட TV நண்பர்களனைவரதும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் யாவும் இப்பகுதியில் இடம்பெறும்.*

*ஆனால் இளைஞர்கள் விஷயங்களை அனுப்புமுன், அல்லது முதல் முறையாக விஷயங்களை அனுப்பும்போது அதன் கீழிருக்கும் கூப்பனை நிரப்பியனுப்பி அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளுங்கள். அங்கத்தவரின் விஷயங்களே விஷேச கவனம்பெறும்.*

## கட்டுரைகள்

### பாரதியார்

உலகத்தில் பெரிய மனிதர்களாக மதிக்கப்பட்டவர்களில் பலர், பல கஷ்டங்களை அனுபவித்தவர்களாகவே இருக்கிறார்கள். பாரதியாரும் அப்படியேதான். இளமை தொட்டே கஷ்டங்களின் மத்தியிலேதான் ஜீவித்து வந்தார். விவாகமான அடுத்த வருடத்திலேயே தந்தையைப் பறிகொடுத்துவிட்டார். அப்போ வயது பதினைந்து. தந்தையார் பணம் சேமிப்பதற்காகச் செய்த முஸ்தீபுகளில் அபஜெயம் அடைந்த காரணத்

தினாலேதான் மனம் நொந்து உயிர் துறந்தார் என்பது பாரதியாருக்குத் தெரியும். இந்த விஷயம் தகப்பன் இறந்த துயரத்தைவிட அதிகம் துயரைப் பாரதியாருக்கு உண்டாக்கியது. அன்று இதையிட்டுப் பாரதியார்,

> *''நாசக் காசினி லாசையை நாட்டினன்*
> *நல்லனெந்தை துயர்க்கடல் வீழ்ந்தனன்''*

என்று பாடியுள்ளார். பாரதியாருக்குப் பணத்தைப் பெருக்க வேண்டு மென்பது கட்டோடு பிடிப்பதில்லை. சூதாடியோ, களவெடுத்தோ, மதுவியாபாரம் செய்தோ பொருளீட்ட வேண்டுமென்பது சிலருடைய கட்சி. பாரதியார் இப்படிப்பட்டவர்களை மனிதன் என்று கூறுவதற்கும் வாய்கூசுவார். பாரதியாருக்கு மட்டுமென்ன? உங்களுக்கும், எனக்கும்கூட வாய் கூசத்தானே வேண்டும்.

> *''வேர்ப்ப வேர்ப்ப பொருள் செய்வ தொன்றையே*
> *மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்டனர்''*

என்று பாரதியார் கூறுகின்றார்.

தந்தை இறந்த பின் பாரதியாருக்கு வேறு வழியில்லை. தாயும் ஏற்கனவே இறந்துவிட்டாள். அதனால் அத்தை குப்பம்மாளின் வேண்டு கோட்கிணங்கி ''காசி''க்குப் புறப்பட்டுவிட்டார். தம்பி! இந்தக் காலத்துச் சில அத்தைமார் நேசமும், உரிமையுங் கொண்டாடுவது போல் பின்னோக் கங் கருதி குப்பம்மாளும் அழைத்திருப்பாள் என்று நாம் எண்ணுவதற்கு இடமில்லை. ஏனெனில் பாரதியார் முதலிலேயே விவாகமானவர். மற்றது குடிக்கக் கூழுக்கும் வழியில்லாத அநாதை.

அத்தையார் ஆதரவில் பாரதியார் பாடசாலை சேர்ந்து கவனமாகப் படித்தார் (இதன் தொடர்ச்சி கிடைக்கவில்லை).

# பாரதி ஆவோம்

சாவை த. யோகநாதன்

*இளைஞர்களே! நினைவு மலரைக் கையிலெடுத்ததும் எங்கள் பகுதி எங்கே? எப்படி இருக்கிறது என்ற ஆவலோடு புரட்டுவீர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதை அறிந்துதான் போலும் நண்பர் யோகநாதன் அவர்களும் உங்களைப் பாரதியாராக்கிவிடக் கங்கணம் பூண்டிருக்கிறார். ஆம் நீங்களும் நானும் கட்டாயம் அவர் வாக்குகளை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். பேச்சுக்கும் எழுத்துக்கும் சுவையூட்ட மாத்திரம் பாரதியார் வாக்குகள் உபயோகிக்கப்படுகின்றனவேயொழிய நடைமுறையில் பலரால் ஒதுக்கப்பட்டுவிடுவது கேவலமான விஷயம். ''சாதிகள் இல்லயடி பாப்பா'' என்ற பாட்டு பிரசங்க மேடையில் எக்காள மிடுகிறது. நாளைக்கு இந்துக் கோயில்களில் சாதி இல்லையேல் பூசையு மில்லாமல் போய்விடும்போல் தோன்றுகிறது. இந்த நிலையில் நாம் பாரதியாரை ஏளனம் செய்வதுதான் ஒத்துக்கொள்ளக் கூடியதாகவில்லை.*

*இளைஞர்களே! சற்று யோசியுங்கள். பாரதி காட்டிய பாதை நல்லதுதானா என்று. நல்லதென்று சபை முன்னர் கூறிவிட்டாற் போதாது. கைக்கொள்ளவுந் தயாரா என்று பாருங்கள், கட்டுரையைப் படித்த பின்னராவது கூறுங்கள்.*

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' என்று தமிழ் மணங் கொழிக்கச் செய்த நம் பாரதி, ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே - ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று'' வெற்றி முரசு கொட்டிய நம் பாரதி ''ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந் திருக்கலாகாது பாப்பா'' என்று குழந்தையின் உள்ளத்தைப் பண்படுத்திய நம் பாரதி,

''கரும்புத் தோட்டத்திலே - ஆஆஆ கரும்புத் தோட்டத்திலே அவர் கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்துகின்றாரே'' என்று பாட்டாளி மக்களின் நலனுக்காகப் பாடுபட்ட நம் பாரதி, ''விடுதலை விடுதலை'' என்று தீண்டாமையை ஒழிக்க உத்வேக உணர்ச்சியுடன் இடித்துரைத்த நம் பாரதி, ''வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்த -

அந்த விந்தை மனிதரும் மாண்டுவிட்டார்'' என்று பெண்களின் விடுதலைக்காக இதயவொலி எழுப்பிய நம் பாரதி இன்று இல்லை - ஆனால் அவர் ஆவி நம்மிதயத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. உண்மையான இலட்சிய வீரனாக ஆண்மையின் வழியே பாரத நாட்டை நம் சுப்பிரமணிய பாரதியாரின் ஞாபகார்த்த மணிமண்டபம் அவரின் பிறந்தகத்தில் அதாவது எட்டயபுரத்தில் நிறுவப்பெற்றுள்ளது. ஆம் சுதந்திர வீரர்களின் அன்பளிப்பு அது. பாரதியார் அன்று துன்பத்தில் இன்பம் கண்டார். அடிமையின் அந்தகாரத்தில் அமிழ்ந்திக் கிடந்த பாரத மக்களின் உள்ளத்தைத் தட்டி எழுப்பியே மனிதனின் பிறப்புரிமை சுதந்திரமென்ற சத்தியத்தைப் பாமர மக்களும் உணர உணர்ச்சி செய்தார். ''எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்'' என்று நாடு சுபீட்ச நிலையடைய வேறுபாடின்றி யாவரையும் எக்காளமிட்டழைத்தார். பாரதி பாடல்களுக்குத் தடை என்ற அடக்குமுறைக்கு அவர் அஞ்சவில்லை. அடிபணியவில்லை. உயிரையே திரணமாக மதியாது தியாகம் செய்யப் பிறந்த நான் என்ற ஒரே இலக்கு, எதுவரினும் தயங்காமை என்ற மனப்பான்மையில் அவர் கஷ்டத்தின் மத்தியிலும் கண்ணீரின் மத்தியிலும் ஓட்டிச் சென்றதன் ஒப்பற்ற பாதையை விட்டுத் திரும்பவில்லை. திரிகால ஞானியாகத் திரிந்தார். இந்து தர்மத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தினார். ''ஓம் சக்தி ஓம் பரா சக்தி'' என்று அன்பொழுக அன்னையிடம் கொண்ட பக்தி விநயம் எட்டுத் திக்கும் பரவியது. பாரதி நாமம் அழியாது நீடு பெறும் என்ற உள்ளக் கிளர்ச்சியுடன் ஈழநாடு பத்திரிகை நிலையம் பாரதி (பத்திரிகை) என்பவற்றில் ஆராத அன்பைத் தெரிவித்து நிற்கின்றது. பாரதியின் இலட்சியங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவரும் பாரதி இதழ் பாமரர் முதல் பண்டிதர் வரை பாலர் முதல் விரும்பியவர் வரை படித்து அரும்பெருஞ் சேவை செய்யுமென்பது எமதெண்ணம்.

# தமிழ்த் தாயின் சுயசரிதம்

பு.ஜோ. ஜெயராஜ்
*மத்திய பாடசாலை, வந்தாறுமூலை*

என் அருமை மக்களே! நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களிற் பலர் என்மேல் அன்பு குறைந்தவர்களாதலால், அவர்களுக்கு என்னைத் தெரியாதிருக்கலாம். என்னைத் தமிழ்த்தாய் என்பார்கள். எனக்குத் தமிழ் அன்னை, தமிழ்த் தெய்வம் என்றும் பெயர்களுண்டு. உலகத்தில் தாய்மார்கள் தங்கள் புதல்வர்கள் நெறிதவறி நடந்தால் அவர்களுக்கு புத்திமதி சொல்லி அவர்களைத் திருத்துவது வழக்கம். ஆதலினால், என் மக்களாகிய தமிழர்களே! உங்களிடம் சில குறைபாடுகளை நான் காண்கின்றேன். ஆதலால், உங்களுக்கு அவற்றை அகற்ற விரும்பிச் சில நன்மொழிகளைச் சொல்கிறேன். நான் சொல்லும் மொழிகளை நீங்கள் கேட்பதற்கு முன் என் வரலாற்றையும் சிறிது சொல்கிறேன் கேளுங்கள்.

முத்தொழிலுக்கும் முதல்வரான ஆதிசிவனார் என்னைப் பெற்றெடுத்தார். ஆனால் என்னை வளர்க்கும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளாமல், அகத்திய முனிவர் என்ற பெரியாரிடம் என்னை ஒப்படைத்தார். அவர் எழுத்து, சொல், பொருள் முதலிய நகைகளால் என்னை அலங்கரித்து, நான் அழகுடையவளாய் விளங்குமாறு செய்தார். எனது அழகைக் கண்ட சேர, சோழ, பாண்டிய அரசர்கள் என்னைப் பரிந்து வரவேற்று, நான் மேலோங்கி வளர்வதற்கு உதவி புரிந்தார்கள். இது கண்ட பல பெரும் புலவர் எனக்கு அடிமைப்பட்டு, இயற்கை, செயற்கை முதலிய இனிய காவியங்களை இயற்றி எனக்குத் தொண்டாற்றினர். அவற்றை யான் விரும்பிப் பெற்று என்னை அலங்கரித்துக்கொண்டேன். சிந்தாமணியையும், சூளாமணியையும் என் தலையில் சூடினேன். தேவாரத்தைக் கழுத்தில் அணிந்தேன். வளையாபதியைக் கைகளிலும், சிலப்பதிகாரத்தைத் தாள்களிலும் பூண்டேன். மணிமேகலையை இடையிற் பூட்டினேன். இவைகளுடன் நான் சிறப்புடனும், மகிழ்வுடனும் வாழ்ந்து வந்தேன்.

எனது கன்னிப் பருவமாகி அக்காலத்தில் என்னைப் போன்ற எத்தனையோ மொழிகள் எல்லாம் இருந்தன. அந்தோ! எனது நற்காலத்தினால் அவைகளில் பல மறைந்து விட்டன. ஆயினும் என் தந்தையாகிய

சிவபிரானின் அருளினால் எனக்கு அந்த நிலைமை நேரவில்லை. ஆனால், என் ஆருயிர் மக்களே! சில நாட்களாக ஒரு சொல் என் காதிற்பட்டு வருகிறது. ஆ! நான் இதை என்னென்று சொல்வேன். அது எனது உயிரைக் கொல்லும் தன்மையுடையது. ஆனாலும் என் மக்களாகிய உங்களுக்குச் சொல்லாவிட்டால் வேறு யாருக்குச் சொல்லுவது. இதோ சொல்லுகிறேன் கேளுங்கள். புதல்வர்களே! மேனாடுகளில் புத்தம் புதிய மேன்மைக் கலைகள் என்னிடம் இல்லையாம். அவற்றைச் சொல்லும் திறமையும் எனக்கு இல்லையாம். ஆதலினால், எனக்கு அழிவு காலம் நெருங்கி விட்டதாம், என்றெல்லாம் என்னைத் தூற்றி வரலாமா? எனக்கு இத்தனை கோடி மக்கள் இருந்தும் என்ன பயன்! உங்களின் அறியாமை யினாலல்லவோ உங்கள் அன்னையாகிய எனக்கு இவ்வசை வந்துள்ளது? என்மேல் உங்களுக்கு அன்பும், ஆவலும் இருந்தால், உங்களைப் பெற்ற எனக்கும், உங்களுக்கும் எவ்வளவு மேன்மை உள்ளது என்பதைச் சிறிது ஆலோசனை பண்ணிப் பாருங்கள். மைந்தர்களே! உண்மையில் உங்களுக்கு என்னிடம் அன்பு இருக்குமானால் இன்றே இப்பொழுதே எழுங்கள். என் மேன்மைக்கு உழைக்க ஆவல் கொள்ளுங்கள். உரிய கலைச் செல்வங்கள் யாவையும் என்னிடம் கொண்டு வந்து சேருங்கள்.

அப்பொழுதுதான் எனக்கு வந்துள்ள பெரும்பழி தீரும். நானும் நீங்களும் மேன்மையுற்று நன்கு மதிக்கப்பெறுவோம். வாழ்க தமிழ் மொழி!!!

# காப்பது விரதம்

செல்வி *S.* கமலாதேவி
*இரத்தினபுரி*

''காப்பது விரதம்'' என்ற தொடர் மிகச் சிறிய ஒன்றாயினும் அதன் ஆழ்ந்த கருத்தும் கனிவுற்ற பெரும் பொருளும் மிகமிகப் பெரியன என்றுதான் எண்ண வேண்டும்.

காப்பது விரதம் என்று கூறியதைக் கேட்கின்றவுடன் ''சுருங்கக் கூறி விளங்க வைத்தல்'' என்ற இலக்கண வழக்கினை நாம் நினைவுகூர்வது வேண்டப்படுவது. ஏனெனில் அங்ஙனங் கூறிய ஔவையார் எதைக் காப்பது என்றோ? எவ்வாறு காப்பது என்றோ? அவ்வாறு காவாது போயின் என்ன விளையும் என்றோ கூறிவிட்டாள் இல்லை. ஆனால் அறிவு நிரம்பிய மக்கள் தொகுதியினராய் நாம் அத்தொடரின் பொருளினை நன்முறையில் எண்ணி உண்மையினை அறிய வேண்டும். அதற்கு உரை எழுதுகின்ற பெரியோர் பிற உயிர்களைக் கொல்லாது அவைகளுடைய மன்னா உயிர் இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகை எண்ணுகின்ற விநாடிப்பொழுதில் அடைந்துவிடா வண்ணங் காத்துக் கொள்கின்ற வன்மையுடையவராய் ஒருத்தியோ அன்றி ஒருவனோ வாழ்ந்தால், அதுவே அவர்கள் செய்யும் விரதம் என்று கூறப்படும். இவ்வாறு நாம் பொருள் கொள்ளலாமாயினும், ஔவைப்பிராட்டியார் என்ன உள்ளக் கருத்தினை மேற்கொண்டு இவ்வாறு வரைந்தாள் என்று என் போன்ற சிறுமிகள் அறிகின்ற நிலையில் இல்லாது தயங்குகின்றனர்.

எனினும், நம்முன்னோர் கூறியாங்கு பொருள் கொள்வோமாயின், அதன் நயத்தினைச் சிறிதும் எண்ணி உள்ளங்கொளல் வேண்டுவதற்கும் பொதுவாக நம் நாட்டின் பெரும்பாலோர் விரதம் என்றும் நோன்பு என்றும் பலவாறு சொல்லி சில முறைகளை மேற்கொள்கின்றார்கள். ஒரு மாதத்திலோ அல்லது ஒரு ஆண்டிலோ பல நாட்கள் புண்ணிய நாட்களாகக் கருதப்படுகின்றன. வெள்ளிக்கிழமை என்றும் செவ்வாய்க்கிழமை என்றும் புரட்டாசி சனிக்கிழமை என்றும் நம் தமிழ் நாட்டார் கூறுவதைத் தமிழ் நாட்டுச் சிறுமியாகிய நான் கேட்பதுண்டு. இந்நாட்களிலே விரதங் கொண்டாடுகின்றவர் நன்முறையில் நீராடி, காய்கதிர்ச் செல்வன்

கீழ்த்திசையின் கண் எழு முன்னர் இறைவனை வணங்கி என்றும் இல்லாத சிறப்புடன் உண்டியும், உடையும் கொண்டு வாழ்கின்றனர். உடலுக்கு நன்மை, உணர்வுக்கு இன்பமுந் தேடுவதுதான் அவர்களின் விரதமாகும். இன்னும் சிலர் தாங்கள் உண்கின்ற நேரங்களைக் குறைத்து, ஆனால் அதிகப்படியானவைகளையும் உண்கின்றனர். இவ்வாறு அன்றைப் பொழுதினைப் போக்கி விடுகின்றனர். இவ்வாறு விரதத்தால் பொருளை நாம் நிறுத்திவிட்டால் உலகமே வேறு முறையாகச் சென்றுவிடலாம். ஆகவேதான் ஔவையார் ''காப்பது விரதம்'' என்று கூறியுள்ளார்.

காப்பது விரதம் என்பதும், நோன்பு என்பது கொன்று தின்னாமை என்பதும் ஒரு பொருள் என்றுதான் பெரியவர்கள் எண்ணுகின்றார்கள். ஒருத்தி பல உயிர்களைக் கொன்று அதன் பயனால் விரதங்கொள்கிறேன் என்னல் சிறப்பல்ல. பல உயிர்களைக் கொல்வதினால் எத்துணையான பாவத்திற்கு அவள் ஆளாகின்றாள்? உயிர்கள் எந்நிலையினையுடைய தாயினும், நம்மைப் போன்று உலகிலே வாழ்வதற்கல்லவா இறைவன் படைத்தான்? ஆதலின் அவைகளைக் கொன்று வீழ்த்தி விடாமல் வாழ்வு நடத்துகின்ற பெண்ணே உண்மையில் நோன்பிற்குரியாள் என்றும், விரதம் காக்கின்றவள் என்றும் நாம் கூறவேண்டும். எனவே மேற்கூறிய பொருளினை ஔவையார் மேற்கொண்டிருக்கலாம் என்று அறிவு நிரம்பாத சிறுமிகள் நினைத்தால் அது பிழையென இலங்காது.

இதற்குப் பல சான்றுகளை நாம் இலக்கியங்களிலே காண்கின்றோம்; கேட்கின்றோம்; தானாகவே உணருகின்றோம். ஔவைப்பிராட்டியின் பொன்மொழிகள் இன்மொழிகள் என்றே அப்பெருமாட்டியை வாழ்த்து கின்றோம்.

''வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாரதியார் கூறுவதை நாம் நினைவு கொள்வோம். அவ்வளவு சிறப்பியல்பினைத் தன்னகத்தே கொண்ட வள்ளுவன் எனும் ஒள்ளிய புலவன் தன் நூலிலே ஔவையாரின் உள்ளக்கருத்தினை வெளியிடுகின்றான். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறட்பாக்களையும் கற்றவர்கள் எத்துணையே இடங்கள் அவர் நூலிலே காணுதல் இயற்கை.

''அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று'' என்பது அப்பெருமகன் வாக்கு. நெய் முதலிய பொருட்களை விட்டு ஆயிரம் யாகங்களைச் செய்வதைப் பார்க்கிலும் ஒரு மகன் ஓர் உயிரினைக் கொன்று அதனை உண்ணாமல் இருப்பானே

யாயின் அதுவே மேன்மையுடையது என்று மெய்ம்மை பகருகின்றான் தெள்ளு தமிழ்ப் புலவன் வள்ளுவன்.

எனவே மேற்கூறியாங்கு பொருள் கொள்ளுமிடத்து விரதம் என்பது மற்றை உயிர்களைக் கொன்று அவற்றையுண்ணாமல் இருப்பதேயாகும். இதனைத்தான் ஔவையார் அழகிய முறையில் ''காப்பது விரதம்'' என மொழிந்தருளினார்.

ஆதலின் வருங்காலச் செல்விகளாக விளங்க இருக்கும் செல்வச் சிறுமிகளாகிய பெண்மக்கள் இவ்வுண்மையினைச் செவ்விதின் உணர்ந்து, பிறவோமாயின் நமது வருங்கால வாழ்க்கை?

''வாழையடி வாழை என வந்த திருக்கூட்டம்'' என வண்மையும், வன்மையும், தண்மையும், திண்மையும் இன்பமிகு அன்பும், எழில்மிகு வனப்பும் ஒருங்கே அமைய, புனித மலர்கள் மலருகின்றன. புண்ணியச் சோலையாகவும் பயன் அளிக்கும் என்று இன்று நான் வரையத் துணியேனாகில் இயற்கையன்னை மெச்சி இச்சையுடன் புன்முறுவல் பூத்துவிடுவாள்.

# பழமையின் பாசமா புதுமையைப் புறக்கணிப்பது?

மு. முத்தையா

ஓ! தமிழகமே! இளஞ்சோதரர்களே!! உங்கள் லட்சியத்தைவிட்டு ஒப்புயர் வற்ற உண்மையை உணராமல் உறங்குவதை இனியாகிலும் உணர மாட்டீர்களா? காலம் கடந்துவிட்டது. நாமும் சும்மா இருந்துவிட்டோம். பழமைக்குச் சாவுமணி அடித்தாய்விட்டது. புதுமை புத்துயிர் பெற்றது. ஆகையால் புதுமையைப் படிப்போம், செய்வோம். பயன் பெறுவோம்.

பாரத மாதாவின் வழித்தோன்றல்கள் அல்லவா? நாம் நம் அன்னை அல்லலில் பட்டுழன்றாள் அன்று. இன்று என்னாடும் அடிபணியக் கோலோச்சுவதைக் கவனிப்போம். சுயநலப் புலிகளின் சொகுசான வாழ்க்கையின் காலம் ஓடிவிட்டது. நாம் வாழ வழி பிறந்திருக்கிறது. நாட்டுச் சேவையே எங்கள் மோட்ச நகரம் என்பதை உணருங்கள். ''இருந்தமிழே உன்னால் இருந்தேன் தேவர் விருந்தமுதமாயினும் வேண்டேன்'' என்றான் ஒரு புலவன். இன்னொரு புலவன் ''மின்னெறி சடாமுடி விநாயகனடிதொழ'' என்று பாடினான். இவ்விதம் மொழியையும், மதத்தையும், கடவுளர்களையும் புகழ்ந்த காலம் மலையேறி விட்டது. உண்மைக்கு உயர்வளிக்கப்படும் காலம் அல்லவா? இது. ஆகையால் சகோதரர்களே சேவை செய்ய உடனே உந்துங்கள். உங்கள் இலக்ஷியம் உண்மையில் இதுதான். ஒருவரை ஒருவர் புறக்கணித்து நடக்கும் ஆஷாட பூதிகள், அரும்பெருந் தொண்டையறியாச் சண்டாளர்கள், இப்படியானவர் எங்கள் சமூகத்தின் முட்டுக்கட்டைகள்தான். வயிரத்தை வயிரமே வெட்டும். மேற்படி துரோகிகளை நாங்களே நன் நடத்தைக்குக் கொண்டு வருவோம். முதலில் எங்களைத் தட்டி மிதித்துத் தாண்டவமாடும் சாதிப் பிணக்கை அறவே ஒழிப்போம். வேதியராயினும் வேரவராயினும் மேதினியில் ஒரு சாதி என்றான் உண்மைக் கவிஞன். ஆம் உண்மைதான்.

மண்ணாபரணம் பூணும் மக்கள் வாழும் தரித்திர நாட்டில் கடவுளர் களுக்கும் கபடக் கர்மிகளுக்கும் பணி செய்தது போதும். நாமே தவறு செய்தோம். கை விரல் கண்ணில் குத்தினால் வெட்டியெறியலாமா? நம்

தவறை நாமே ஒப்புக் கொண்டு இரகசியமாய் வைத்துக்கொள்வோம். இப்போதான் உண்மையை அறிந்து கொண்டோமே. குழை மறைவாகவும், தெருத் தெருவாகவும் திரிந்ததை இனியாகிலும் உணர்வோம். நாட்டின் தொண்டில் எங்கள் பங்கை உணர்வோம்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே, நாகரிகம் அரும்பிப் பூக்கும் இக் காலத்திலே நாளுக்கு நாள், மணிக்கு மணி உலகத்தின் முற்போக்கு காற்று வேகம்தான். கால சக்கரம் விரைவாகச் சுழல்கின்றது. முற்போக்கின் ஆர்ப்பாட்டம் அதிலும் வேகம் என்று சொல்வதில் ஆச்சரியமில்லை.

சகோதரர்களே வீறு கொண்டு தாறுமாறாக நடந்ததுபோதும். எங்கள் புதிய வேலைகளைச் செய்து கெதியில் மனித சமூகத்தை எட்டிப் பிடிப்போம்.

# சேகரனின் சேவை

நா. குணரெத்தினம்
மண்டூர்

அந்த றோட்டின் அந்தத்திற்றான் கந்தப் போடியார் வீடு கம்பீரத்துடன் விளங்கியது. அந்தவூரில் யாரைக் கேட்டாலும் ''கந்தப் போடியாரைவிடப் பணக்காரர் இங்கு கிடையாதென்றே'' கூறுவர். கந்தப் போடியார் பெரிய செல்வந்தர். இவருக்கு அநேக நிலபுலன்களும் மாடு கன்றுகளுமுண்டு. அவரின் தகப்பனாரின் சொத்துக்களும்கூட இவருக்கு நிறைய இருந்தன. டாம்பீக நடையையுடையவர். ஏழைகளுக்கு இம்மியத்தனையும் ஈயாத கருமி. இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்தான் சேகரன். சேகரன் பணம் படைத்த செல்வர்களின் டாம்பீகத்தை அடக்க முற்பட்ட ஓர் வாலிபன். அவன் அநேக வழிகளைக் கையாண்டும் வெற்றி காணாது போகவே சில நண்பர்களுடன் கொள்ளைக் கூட்டமாக மாறினான். கொள்ளைக்குச் செல்லுமுன் உடனுக்குடன் அவர்கள் வீடுகளுக்குச் சென்று பிச்சைக்காரனாக நடித்துச் சோதனை செய்வான். அந்தி மயங்கும் வேளை போடியார் கதவைத் தாளிடச் சென்றார். ஐயோ! பசிக்கிறது ஏதாவது கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டே வந்தான் சேகரன். போடியாருக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது. கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டே "நீ யார்? உன் ஊரென்ன? பேரென்ன?'' என்று கேள்விகளை அடுக்கிவிட்டு தடாரென்று கதவை அடைத்து விட்டுச் சென்றுவிட்டார். சேகரன் மெல்ல நடந்து வீட்டை அடைந்தான். கந்தப்போடியாரின் வீட்டில் நடந்தவற்றையெல்லாம் தன் சினேகிதர்களிடம் கூறிவிட்டு கொள்ளைக்குச் செல்லும் தருணத்தை எதிர்பார்த்திருந்தான். கந்தப்போடியார் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டே பின்வருமாறு யோசிக்கலானார்.

ஆகா! என்னைவிடப் பணக்காரர் இவ்வூரிலுண்டோ? ஆனால் பணத்தை இப்படி அசட்டையாகப் பெட்டியில் வைத்திருந்தால் யாராவது

திருடிவிட்டாலும் விடுவர். தபாற்கந்தோரில் போட்டுவைத்து விட்டால் ஒரு பயமும் இருக்காது என்று. ஆனாற் தபாற்கந்தோர் அங்கு இல்லாத தால் ஐந்து மைலுக்கு அப்பாலுள்ள குறுங்குடி பட்டணத்துக்குத்தான் போகவேண்டும். கடைசியாகச் சென்று கட்டிவிட்டு வருவதென முடிவு செய்தார். சட்டென்று அதிகார தோரணையில் ''கந்தா இங்கே வா'' என்றார். அதே தருணம் சேகரனும் போடியார் வீட்டின் பக்கத்திற்கு வந்தான். போடியார் கூப்பிட்டதைக் கேட்டுக்கொண்டே ஏதாவது இரகசியமான காரியமாய் இருக்கலாம் என்று யோசித்து அவ்விடத்தில் உட்கார்ந்தான். கந்தன் வந்ததும் போடியார், ''கந்தா? நான் நாளை காலையில் பட்டணத்துக்குப் போகவேண்டும். நேரத்தோடு உணவை ஆயத்தம் செய்யும்படி அம்மாவிடம் கூறிவிடு, நான் காட்டுப்பாதை மூலமே செல்லவேண்டும்'' என்று கூறிமுடித்தார். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சேகரன் தக்க தருணம் கிடைத்ததென்று எண்ணிக்கொண்டே தன் சினேகிதர்களையும் அழைத்துக்கொண்டே போடியார் செல்லவுள்ள குறிப்பிட்ட பாதையில் ஓர் இடத்தில் மறைந்திருந்தான். பொழுது விடிய இன்னும் சில நிமிடங்களே இருந்தன. போடியார் இரண்டாயிரம் ரூபா பணத்துடன் கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்தார். இதை கவனித்த சேகரன் தன் சினேகிதருடன் குதிரையிலேறி போடியார் வந்த பாதையை நோக்கிச் சென்றான். போடியாருக்குச் சிறிது பயமாகவே இருந்தது. பண முடிப்புடன் பைய நழுவிவிடலாமா என்று யோசித்த போடியார் ஓர் பற்றையில் மறைந்தார். குதிரையில் வந்தோர் தடாரென்று கீழே குதித்தனர். போடியார் பணமுடிப்புடன் எடுத்தார் ஓட்டம். சிறிது தூரம் ஓடியதும் போடியார் இளைத்துப்போய் நின்றுவிட்டார். சேகரன் பணமுடிப்பைக் கையாடினான். மற்றையோர் போடியாரைப் பலமாகத் தாக்கிவிட்டு அவரவர் குதிரைகளில் ஏறிச் சென்றுவிட்டனர். போடியாருக்கு கொள்ளைக் கூட்டத்தின் தாக்குதல் பலமாய்த்தானிருந்தது. பைய எழுந்து வீட்டை யடைந்தார். போடியார் கெதியாய் வந்துவிட்டதையிட்டு எல்லோரும் விசாரித்தனர். போடியார் ஒன்றும் பேசாது மௌனமாய் இருந்தார். நாட்கள் வாரமாகி இரு வாரங்கள் பறந்தோடின. போடியார் பணம் பறிகொடுத்த செய்தி ஊரெங்கும் பரவிவிட்டது. போடியார் என் செய்வார்? வாய்மூடி மௌனியாய் இருந்துவிட்டார். போடியார் இப்போது முன் போலல்லாது தர்மவானாக மாறிவிட்டார். சேகரனின் சேவையல்லவா போடியாரைத் தருமவானாக்கியது.

# புத்தி வந்தது!

''சியாமளா''
யாழ்ப்பாணம்

உல்லாசமாகச் சிங்காசனத்தில் வீற்றிருந்தான் இலங்கை மன்னன் பராக்கிரமன். மந்திரிகள் சூழ்ந்திருந்தார்கள். வித்துவான்களும் சிறந்த புலவர்களும் அவன் சபையில் கூடியிருந்தார்கள். அன்று அவன் சமூகத்தை நாடி ஒரு புலவன் வந்திருந்தான். அவன் சிறந்த மேதாவி. கடவுள் பக்தனும்கூட என்று சொல்லலாம்.

அரசன் வரவேற்றான், புலவன் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தான். அரசனுக்கு நற்புத்தி புகட்டுவதுதானே புலவர்களுக்கு வேலை. நமது புலவரும் தம் இயற்கையான தொழிலை ஆரம்பித்தார்.

புலவன் முதலில், உலகத்தைப் பற்றியும், உலக நீதியைப் பற்றியும் அரசன் செங்கோல் செலுத்தும் முறையைப் பற்றியும் சொன்னான். அடுத்தபடியாகக் கடவுளின் தன்மையைப் பற்றி உயர்வாகச் சொல்லத் தொடங்கினான்.

புலவன் நல்ல சாமர்த்தியம் உள்ளவன். அவனுடைய போதனை சபையிலுள்ளவர்களை அப்படியே மயக்கி விட்டது. அரச சபையிலிருந்த ஏனைய வித்துவான்களும், புலவர்களும் சித்திரப் பதுமை போல் அடங்கியிருந்தார்கள், அரசன் கொஞ்சம் குறும்புக் குணமுடையவன், முற்கோபி, வாயாடி, எப்போதும் குறும்பாக விவாதம் செய்வான். அவன்கூட அன்றைக்குப் புலவன் பேச்சில் மயங்கியிருந்தானென்றால் கேட்கவும் வேண்டுமா?

புலவன் மென்மேலும் சொல்லிக்கொண்டே போனான்.. ''அவன் ஆக்கவும், அழிக்கவும் வல்லவன். அவனன்றியோரணுவும் அசையாது''.. என்று புலவன் சொல்லும் போது அரசன் குறுக்கிட்டான்.

''இல்லை, அப்படியிருக்கமுடியாது'' என்றான் அரசன்.

அரசன் நினைவை மாற்றப் புலவன் பல திருஷ்டாந்தங்களைச் சொன்னான்.

''என் இராச்சியத்தை ஆக்கவும் அழிக்கவும்கூட அந்தக் கடவுளால் முடியுமா, என்ன?'' என்றான் அரசன்.

''ஆம்'' என்றான் புலவன் பயப்படாமல். அப்போது அவன் முகத்தில் ஓர் வீரக்களை தென்பட்டது. அதைக் கண்டு அரசன் பயந்து போனான். வாய் திறக்கவில்லை.

அரசன் பேசாதிருந்ததைக் கண்டு சபையிலிருந்த வித்துவான்களும் புலவர்களும் விவாதிக்கத் தொடங்கினார்கள். நமது புலவர்களும் சளைக்கவில்லை. விவாதம் நடந்துகொண்டேயிருந்தது.

தூரத்திற் போர்முரசு கொட்டிற்று. யாரோ பகைவர்கள்தான்; யுத்தத் திற்கு வருகிறார்கள் போலும். அரசன் பராக்கிரமன், வீராவேசத்துடன் மந்திரிகளைப் பார்த்தான். அவர்கள் அப்படியே சேவகர்களைப் பார்த்தார்கள். குறிப்பறிந்த சேவகர்கள் காற்றாய்ப் பறந்தனர்.

''கலிங்க தேசத்தரசன் ராஜசிம்மன் யுத்தத்திற்கு வருகிறான்'' என்ற செய்தி எட்டிற்று. வீறிட்டெழுந்தான் பராக்கிரமன்! போருக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இருதிறப்படைகளும் ஒன்றோடொன்று மோதின, மலைந்தன. அகோர யுத்தம் ஒருநாள் முழுவதும் நடைபெற்றது. அந்தோ ஈற்றில் பராக்கிரமனின் படைவீரர் புறமுதுகு காட்டி ஓடினர். நேர்நின்று யுத்தம் புரிந்த பராக்கிரமன் ராஜசிம்மனாற் பிடிபட்டான்.

பராக்கிரமன் சிறையில் கிடந்து தத்தழித்தான். அவனிருந்த அறை முழுவதும் ''கும்'' மென்ற இருட்டாக இருந்தது. வெளியே சில வெளிச் சங்கள். எதிரே கொலுமண்டபத்தில் ராஜசிம்மன் கொலு வீற்றிருந்தான். வெளிச்ச ஜோதியில் அவனது கிரீடம் மின்னியது. ஒருபக்கத்தில் கேளிக்கை விளையாட்டுக்கள், மற்றொரு பக்கத்தில் அபாரமான விருந்து. பராக்கிர மனாற் பொறுக்கமுடியவில்லை. புழுங்கிய மனத்துடனிருந்தான்.

''படீர்'' என்று சிறைக்கதவு திறக்கப்பட்டது. எதிரே ஒரு சேவகன் பராக்கிரமனின் கையைப் பிடித்துக் 'கொர கொர'வென்று இழுத்துச் சென்று ராஜசிம்மன் முன்னிலையில் நிறுத்தினான். ராஜசிம்மன் பராக்கிரமனை வாயில் வந்தபடி தூற்றினான். கையிலிருந்த சவுக்கினால் 'சுளீர், சுளீரென்று' அடித்தான். மறுபடியும் சிறையிலடைக்கப்பட்டான் பராக்கிரமன்.

அந்த இருட்சிறை அறையின் நடுவில் ''டணார்'' என்று சப்தங் கேட்டது, திரும்பிப் பார்த்தான் பராக்கிரமன். கண்ணை மின்னும்படியான ஒரு ஜோதியுண்டாயிற்று. அந்த ஜோதியின் நடுவில் ஓர் அழகிய வதனம் தெரிந்தது. அவன் கரங்கள் தாமாகவே சிரசிற்கு வந்தன. அவனது வாய் பலவாறு துதித்தது. அவன் மெய்மறந்து போனான்.

அவ்வழகிய வதன ஜோதியின் சிவந்த அதரங்கள் அசைந்தன. ''பராக்கிரமா! உனக்கு இப்போது புத்தி வந்ததா?'' ''ஆம் வந்தது'' என்றான், ''சரி இதோ உன் அரசை மீண்டும் பெற்றுக்கொள்'' என்றது.

உடனே ''புத்தி வந்தது'' என்று குழறிவிட்டான். அப்போதுதான் சிந்தனை கலைந்து தான் சிங்காசனத்தில் வீற்றிருப்பதை உணர்ந்தான், எல்லோரும் ஆச்சரியத்துடன் அரசனைப் பார்த்தார்கள். ஆனால் விவாதம் நடந்துகொண்டிருந்தது. ''நிறுத்துங்கள்'' என்றான் பராக்கிரமன்! விவாதம் நின்றது.

''அவனன்றியோரணுவும் அசையாது'' என்றான் அவன்.

## கவிதை

# வெண்ணிலாவே!

ந. ஜெயமணி

வானக வீதிவரும் வெண்ணிலாவே - வெள்ளி
வாழ்க்கைத் துணை நலமோ வெண்ணிலாவே
ஆனகம் உய்யவழி வெண்ணிலாவே - நீ
அன்பி னுருவாகநிற்பாய் வெண்ணிலாவே.

நீலக் கடலுதரம் வெண்ணிலாவே - நீ
நெய்தல் நில நித்திலமோ வெண்ணிலாவே
கோலவடி வழகோ வெண்ணிலாவே - நீ
கோதையர் நன்னுதலோ வெண்ணிலாவே.

மாலைப் பொழுதினிலே வெண்ணிலாவே -நீ
மாட்சிபெறத் தோன்றுவதேன் வெண்ணிலாவே
சோலை மலர்களெல்லாம் வெண்ணிலாவே - கண்டு
தூவி வணங்கி நிற்கும் வெண்ணிலாவே.

மல்லிகை முல்லையெல்லாம் வெண்ணிலாவே - உன்னை
மலர்ந்து வரவேற்று நிற்கும் வெண்ணிலாவே
நல்லோரின் நட்பு நலம் வெண்ணிலாவே - நீ
நல்லுபதேசியானாய் வெண்ணிலாவே.

சிறியோர் சிநேகநிலை வெண்ணிலாவே - நீ
தேய்ந்துவழி காட்டி நிற்பாய் வெண்ணிலாவே
பருதிஒளி பெற்றுலவும் வெண்ணிலாவே - நீ
பாலித்தருள் புரிக வெண்ணிலாவே.

# மங்கையர் மன்றம்

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்'' -பாரதி

## கட்டுரைகள்

## கிராமப் பெண்களே விழித்தெழுங்கள்!

செல்வி தேவகி

**சகோதரிகளே!**

உங்களுக்கு இன்னுமேன் உறக்கம்? நம் நாட்டுப் பெண்மணிகள் அறிவு, அந்தஸ்து, வீரம் என்பனவற்றில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக முகில் வேகமென முன்னேறிக்கொண்டே வருகின்றனர். நீங்கள் மாத்திரம் இப்பொழுதும் வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கத்தான் செய்கிறீர்கள். படித்து முன்னேற்றத்திற்கு வரக்கூடிய நீங்கள் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற மூடகொள்கையைக் கைக்கொண்டு பாடசாலையினின்றும் நீங்கி விட்டு காவல் புரிகின்றீர்கள். சமூகத்துடன் சேர்ந்து கிராம சேவை செய்யாது வீட்டுக்குள்ளே தலை மறைவாக வாழ்வதுதான் நாகரிகம் என்றெண்ணுகிறீர்கள். அன்றேல் அயல்வீட்டுக்குத் தொங்கோட்டமும் சில்லறைப் பாய்ச்சலுமாக ஓடுகிறீர்கள். இதுவா உங்கள் மனப் பண்பு.

**செல்வப் பெண்மணிகளே!**

வருங்காலப் பெண்களை நல்ல முறையில் நடக்க வழிகாட்டியாகப் பிறந்தது நாம் என்பதை மறந்து விட்டீர்களா? பட்டின வாசிக்குப் பசிதீர்க்கும் பாவையர் நாம் என்று பறைசாற்றப் பயந்துவிட்டீர்களா? இன்றைக்கு

இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதியாக இருப்பவள் உங்களைப் போல் ஒரு பெண்ணல்லவா? ஊரக மக்களுக்காக அரும்பாடுபட்டு தேச சேவை செய்யும் உலகம் போற்றும் உத்தம பண்டிட் விஜயலெட்சுமி ஒரு பெண்ணல்லவா? இப்படி எத்தனை ஆயிரம் ஆயிரம் பெண்கள் படித்துப் பட்டம் பதவிகள் பெற்று தன்னலம் கருதாது நமது நாட்டு மக்களுக்காக அருந்தொண்டு செய்கிறார்களென்றால் நீங்கள் மாத்திரம் தலைமறைவாக கிராமப்புறத்தில் ஒழித்துக்கொண்டிருந்தால் நாட்டின் சேவையில் உங்கள் பங்கென்ன? தேச சேவையில் பங்குபற்றாது ஒழித்துக் கொண்டிருப்பது உங்களுக்கு அழகாகுமா? தேசசேவை செய்வதற்கு முதலில் கிராம சேவை செய்யுங்கள். பட்டினப் பெண்களிலும் கிராமப் பெண்கள் அறிவிலும், நாகரிகத்திலும் குறைந்தவர்களென்று சொல்லும் போது உங்களுக்கு வெட்கம் வரவில்லையா?

**செல்விகளே!**

போனதை எண்ணி வாடவேண்டாம். இனியாவது விழித்தெழுங்கள்! கிராமப் பெண்கள் மேன்மையடையப் பிரயாசைப்படுங்கள். வீட்டுக்குள்ளே யிருக்கும் பெண்களை வெளியேற்றுங்கள். வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைக் கற்றுத் தேறுங்கள். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற மூடக்கொள்கையைச் சுட்டெரியுங்கள். பழங்காலப் பெண்களின் சீர்கெட்ட முறையை எடுத்தெறியுங்கள். சமூகத்துடன் கூடி வெட்கமென்னும் பேயை விரட்டியோட்டுங்கள். சாதித்திமிர் படைத்த அபாயப் பேர்வழிகளின் சர்வாதிகார ஆட்சியைத் தொலையுங்கள். வருங்காலப் பெண்கள் அன்பு, அருள், வாய்மை, அடக்கம், தொண்டு முதலாய நற்குணங்களின் வழி வாழ வழிதிறவுங்கள். உங்களை நீங்கள் தியாகப் பண்புடன் வாழும் சமூகமாக மாற்றி அமையுங்கள். உண்மையான கரிசனையுடன் கிராம சேவை செய்ய அணி வகுத்து வாருங்கள்.

**கண்மணிகளே!**

கிராமத்தில் சேவை செய்வதற்கு 'பாரதி' என்னும் பத்திரிகை வெளிவருவது உங்களுக்கோர் ஊன்றுகோலாகும். இச்சந்தர்ப்பத்தை இழந்துவிடாது பிரயோசனப்படுத்திக்கொள்ளுங்கள். வருங்கால உலகு உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஓர் சங்கம் நிறுவி அதன் மூலம் கிராமத்தை முன்னேற்றுங்கள். இன்றே நித்திரையை விட்டு விழித்தெழுங்கள்!

# பெண் பிறவி

செல்வி நாகேஸ்பரி

"பெண்ணைப் பெற்றவன் பெரும் பாவவாழி", "ஐந்து பெண்ணைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்னும் நெஞ்சுரமற்ற பழமொழி களை ஆக்கிவைத்தது ஸ்ரீதனம் என்னும் சமூகக் கோட்பாடு. உரிமை களைக் கடை போகப் பறித்துத் தன்னம்பிக்கைகளை இழக்கும் வண்ணம் அவர்கள் அறிவுகளைக் குட்டிச்சுவராக்கி உயிரை உறிஞ்சி உல்லாசமாக வாழ்வதற்காக ஆண் சமூகத்தார் ஆக்கிக்கொண்ட பேடிச் சட்டந்தான் இது.

ஆயிரம் ஆயிரமாகச் ஸ்ரீதனத்தை அள்ளிக்கொட்டினால் மாத்திரம் போதாது, அழகான பெண்ணும் வேண்டும் என்று வயதின் எல்லையைக் கடத்திக்கொண்டே போகும், கயவர் கூட்டங்களிலிருந்து பெண் சமூகம் விடுதலை பெறவேண்டுமாகில் தீவிர நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

பெண் குலத்தின் மானத்தை வாங்கி அவர்களைப் பசாசுக்கும், கட்டைக்கும், பேய்க்கும், ஊத்தைக் குழிக்கும் உவமை காட்டி ஏளனம் செய்து நிற்கும் நூல்களையும் சமயக் கோட்பாடுகளையும் இருந்த இடமு மில்லாது அழித்தாக வேண்டும்.

*"ஆலகால விடத்தையும் நம்பலாம் ஆற்றையும்*
*பெருங் காற்றையும் நம்பலாம்*

*கோல மாமத யானையும் நம்பலாம் கொல்லும்*
*வேங்கைப் புலியையும் நம்பலாம்*

*காலனார் விடு தூதரை நம்பலாம் கள்வர்*
*வேடர் மறவரை நம்பலாம்*

*சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில்*
*நின்று தியங்கித் தவிப்பரே."*

என்ற கவியினை முன் பின் அறியாத ஒரு பெண் வாசித்துப் பார்ப்பாளே யாகில் அவள் மனதில் எவ்வளவு கொந்தளிப்பு உண்டாகும். பாவம் இந்தக் கவிக்கு மதிப்புக் கொடுத்துப் போற்றி வந்த ஆண் சமூகத்தவர்களின் அநியாயத்தையிட்டு என்ன கூறுவது?

உலக வாழ்க்கைக்கு உயிரைக்கொடுத்து உறுதுணையாக நிற்கும் பெண் சமூகத்தைப்படுத்தி வைத்திருக்கும் அநியாயத்திற்கும், அதற்கு அவர்கள் காட்டும் சமாதானத்திற்கும் எல்லையே கிடையாது.

''சமண சமயம்'' என்று ஒரு மதமுண்டு. அவர்களுக்குப் பெண் வாடையே அடிக்கக்கூடாதாம். அவர்களின் ஞான திருஷ்டிக்காகப் பெண் களைக் கிழியாதவாறு கிழித்துள்ளார்கள். அவர்கள் மோட்ச சாம்ராச்சி யத்தை அடைய வேண்டுமாம். அதற்காகப் பெண்கள் குலத்தைப் பேயே, பசாசே என்றெல்லாம் திட்டியாக வேண்டுமாம். உண்மைப் புலவராய திருவள்ளுவர் அவதரித்து ''இல்லற மல்லது நல்லற மன்று'' என்று இல்லறத்தை வலியுறுத்தாது விட்டாரேயாகில் துறவறம் மேலோங்கிப் பெண்களின் நிலையும் தவறியிருக்குமென்பதில் ஆட்சேபனை ஏதுமுண்டோ?

ஆண்களை விளை வயலாகவும் பெண்களை அதை அழிக்கப் பிறந்த பன்றிகளாகவும் கற்பனை செய்த காலம் அது. அந்தக் காலத்திற்கு சாட்டை கொடுத்துவிட்டார் வள்ளுவ நாயனார்.

"குதம்பைச் சித்தர் பாடல்" என்ற ஒன்றைப் பற்றிக் கேள்விப்பட்டிருப் பீர்கள். அதன் அர்த்தம் தெரியுமா? குதம் பேய் சித்தர் பாடல் குதம் என்றால் பெண். பெண்களைப் பேயாகப் பாவித்துப் பாடிய பாடலாம் அது. ஆண்கள் ஏதோ பெரிய அந்தஸ்தை அடைவதற்காக உலகில் ஜனனமெடுத்தவர்களாம். அந்த இலக்குக்கு முட்டுக்கட்டையாக உரு வெடுத்தவர்களாம் பெண்கள் - பெண்களென்ற பேய்கள். எனவே அவர் களை ஒதுக்கி, அவர்கள் மேல் பற்றுவையாது நடக்கவேண்டும் என்று புத்தி புகட்டுகின்றது சித்தர்பாடல்.

''பெண் எனும் மாயப் பேயை....'' என்ற பாவின் பொருளைச் சுவைத்துச் சுவைத்து ருசி கண்டனர் சித்தரும் தபோதனர்களும் அவர்கள் சிஷ்யர்களான ஆண் சமூகத்தவர்களும் மனம் வெதும்பித் தன் மானத்தைக் காற்றில் பறக்கவிட்டுக் கைகட்டி வாழ்ந்தனர் பெண்கள். கேட்பாரில்லை.

ஆண்களுக்கு புத்தி சொல்லுகிறார்களாம். பெண்களையே பெரிதென்று நம்பி ஏமாந்து போவதற்காக, சரி அப்பா சரி. அதே நேரத்தில் ஆண்களை நம்பி ஏமாந்து போகாதிருக்குமாறு பெண்களுக்கு ஏன் புத்தி சொல்லக் கூடாது. ஆண்களுக்குச் சொன்னால் பெண்களுக்கும் சேருந்தானே என்று கூறுவீர்களாக்கும். அது என்ன எல்லா நூல்களிலும் கவிகளிலும் ஆண் களுக்குத் தானா புத்தி சொல்லவேண்டும். இல்லை இல்லை அவர்கள்

எண்ணம் மோட்ச சாம்ராச்சியத்திற்குப் போவதற்காக அவர்கள் செய்யும் யாகத்தை அழிப்பதற்காகப் பிறந்த அசுரர்கள் பெண்கள் என்பது. இதிலிருந்தே அவர்கள் பெண் என்பது ஆண்களின் தேவைக்கென்று படைக்கப்பெற்ற ஒரு இயந்திரம் என்று கருதியிருந்தனர் என்பது அறியக்கிடக்கிறதல்லவா?

அவர்கள் கொள்கையின்படி பெண்களுக்கு அவர்கள் கருதும் மோட்சம் உரித்தானதில்லை போலும். ஆண்களுக்குப் பலவித தொண்டு களும் செய்து அருந்ததியாக வாழவேண்டியதுதான் அவர்கள் கடமை. அதற்கேற்றாற்போல் பல சூத்திரங்களும், பாக்களும் பாடிப் பத்திரப் படுத்திக்கொண்டனர். முற்றுந் துறந்த ஔவைப்பிராட்டியார்கூட.

''கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தலுமரிதே'' என்று பாடிப் பெண்களின் மானத்தை வாங்கி வைத்தார். பிராட்டியார் பெண்ணாய் பிறந்துவிட்டோமே என்று கவலைப்பட்டிருக்க வேண்டும். அன்றைய சுற்றாடலில் அம்மையாரால் வேறு எப்படித்தான் பாடியிருக்கமுடியும். பெண் படிக்க முடியாது, வீட்டைக் கடக்க முடியாது, மறுதாரம் செய்ய முடியாது, ஆண் பாலார் கீறிய கோட்டைக் கடக்க முடியாது என்றெல்லாம் பல, பல தினிசான கட்டளைச் சட்டங்களுக்குள் கிடந்து அல்லற்படுவதை விட அந்தப் பாழாய்ப்போன பெண் ஜென்மத்தை எடுக்காமல் விடுவதே நல்லதல்லவா? இதைத்தான் ஔவையாரும் கருதிப் பாடினார் போலும்.

எப்படித்தான் பெண் சமூகத்தை இழிவாகக் கூறியிருந்த போதிலும் பெண்களை நீக்கி உலகில் பிரமச்சாரியாக வாழ்ந்தோர்தான் எத்தனை பேர்; விரல் கணக்குத்தான். விதவை நோன்பு நோற்று நித்திய பிரமச்சாரி யாக வாழ்ந்த பெண்மக்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. இருந்தாலும் வாய் வீச்செல்லாம் பெண்கள் மேலேதான்.

சோதரிகளே வேண்டாம். பெண் குலத்தின் மானத்தைப் போக்கும் பாக்களும் வேண்டாம், நூல்களும் வேண்டாம். புத்துயிர் தந்த பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்வதே நமக்குத் தகுதி.

# கூறையும் தாலியும்

செல்வி. நாகேஸ்பரி

கலியாணத் தடபுடலில் ஒருவரை ஒருவர் முட்டிக்கொண்டும், மோதிக் கொண்டும் வேலைகள் செய்து கொண்டிருக்கின்றனர். ஏகப்பட்ட சனம். அத்தனை பேரையும் சந்திப்பதில் மாப்பிள்ளை பாடு பெரும் பாடாகப் போகிறது. ஆனால்! பாட்டோடு பாடாகத் தமது நண்பர்கட்கும் உற்றார் உறவினர்கட்கும் மணமகளுக்கென்று வாங்கியுள்ள- இல்லை தனது செல்வத்தின் மதிப்பை ஊருக்கு அம்பலப்படுத்த என்று வாங்கி வைத்த- கூறையையும் தாலியையும் காட்டிக் காட்டி மனம் மகிழ்ந்து கொள்கிறார். அந்தக் கூறையிலும் தாலியிலுமேதான் மணமக்கள் மதிப்புத் தங்கியுள்ளது என்பது சமூகத்தின் சம்பிரதாயம்.

எந்த ஏழையாக இருந்தாலும் சரி, கலியாணம் என்றவுடன் நூலில் ஒரு காயோ அல்லது ஒரு பித்தளைச் சங்கிலியோ தாலியாக வேண்டுமாம். பட்டுச் சேலையோ அல்லது ஒரு பகட்டுச் சேலையோ ஒன்று கூறையாக வேண்டுமாம். இதற்காக வேண்டி அந்த ஏழை எத்தனையோ நாள் சம்பளத்தை மிச்சம் பிடித்தாக வேண்டும். சீட்டுக்கள் போட்டோ, சேமிப்புச் சங்கங்களில் சேர்த்தோ தொகையாக எடுக்க வேண்டும். கூறையும் தாலியும் கொண்டு போகாத மாப்பிள்ளைக்கு மண வீட்டில் மரியாதை கிடைப்பது என்பது கொஞ்சம் முயற்கொம்புதான். இதற்காக வேண்டித்தான் போலும் இந்தக் கால வாலிபர்கள் கூறையும் தாலியும் வேண்டுமாகில் சரி கொண்டு வருகிறோம். முன்னாடியே நீங்கள் ஸ்ரீதனப் பணத்தைக் கொடுத்து விடுங்கள் என்கின்றார்கள்.

நானுங் கூடவேதான் அன்று அந்த மணவீட்டில் மாப்பிள்ளை ஆசையுடன் காட்டிய கூறையையும் தாலியையுங் கண் குளிரப் பார்த்து நின்றேன். என்ன அழகான சேலை. ஆயிரம் ரூபாயாக வாங்கப்பட்டதாம். அந்தத் தாலி 22 பவுணில் செய்யப்பட்டதாம். யுத்த காலத்தில் திரிகோண மலையில் சேவை செய்த காரணத்தினால் அந்த மாப்பிள்ளையிடம் ஏராளமான பணம் குவிந்திருந்தது. அந்தப் பணத்தைக் கொண்டுதான், இந்த ஆடம்பர நாடகங்களில் ஈடுபட்டிருந்தார். அந்தச் சேலையின்

பிரகாசத்தினாலும் தாலியின் மதிப்பினாலும் மணமகள் நிலை எவ்வளவோ உயர்ந்துவிடப் போகிறதே என்று எண்ணிக்கொண்டேன்.

விவாகமும் பெரிய ஆடம்பரமாக நடந்தேறியது. தம்பதிகள் கால் மாறிப் போகும் காட்சி காண்பதற்கே வெகு மாட்சியாக இருக்கும். மாப்பிள்ளை, மணமகளை அடிக்கடி நோக்கித் தனது கூறையின் மதிப்பை யிட்டு மகிழ்ந்துகொள்வார். ஏன் ஊரவர்கள்கூட அந்தக் கூறையையிட்டுப் பலவாறு பிரஸ்தாபித்துக்கொள்வர்.

ஒரு கிழமை, இரு கிழமை சென்றிருக்கும். ஆனால் உலகின் விசித்திரத்தை யாரால் முன் கூட்டியே சொல்ல முடியும். காலச்சக்கரம் சுழன்றது. பச்சைக் குழந்தைகளைப் பதைக்கப் பறிக்கும் காலனுக்கு தம்பதிகள் என்று வேறு நியாயங்காட்ட முடியுமா? தம்பதிகளைப் பிரித்து விட்டது காலம். கண்ணூறு, நாவூறு என்று கூறுகிறார்களே, ஒரு வேளை மெய் அதுதானோ என்னவோ தெரியாது. அந்த மணமகள் நோயால் படுத்தவள் மீண்டு எழவில்லை, இறந்து விட்டாள். யாரால் என்ன செய்யமுடியும்? மாப்பிள்ளை, தொண்டை கிழியக் கத்தித்தானென்ன? உற்றார் உறவினர்தான் அழுதென்ன? அல்லது ஊரவர்தான் கூடியிருந்து கூலிக்கு மாரடித்தென்ன? இறந்தவள் மீண்டிருக்க முடியுமா?

சமூகக் கோட்பாட்டின்படி அந்த ஆயிரம் ரூபா பெறுமதியான கூறைச் சேலை பிணத்துக்குக் கட்டப்பட்டது. கிரியைகள் பலவும் செய்யப்பட்டன. பின்னால் இரும்பு மனம் படைத்த ஒரு இராட்சசி கத்தரிக்கோலால் அந்தக் கூறைச்சேலையைக் 'கிறீச் கிறீச்' என்று வெட்டினாள். தாலியும் கழற்றப் பட்டது. பிணம் சுடலைக்கு அனுப்பப்பட்டது.

எனக்கு யாரும் இறந்த இடத்திற்குச் சென்றால் அழுகையே வருவ தில்லை. கூட இருக்கும் பெண்கள் அழுவதைக் கண்டு நானும் கண்களைக் கசக்கி அழத்தான் தெண்டிப்பேன். வருமா? ஆனால் வாய் அம்மா, அக்கா என்று ஏதோ பலவற்றைச் சொல்லி என் மானத்தைக் காப்பாற்றி விடும். ஆனால் அன்று மணமகள் இறந்த இடத்திற்குச் சென்றிருந்த எனக்கு ஏனோ தெரியாது, அழுகை 'குபீர் குபீர்' என்று வந்து கொண்டு தானிருந்தது. உண்மையில் இறந்ததனால் அப்படி ஒன்றும் அழுகை வரக் காரணமில்லை. அந்த அழகான ஆயிரம் ரூபாய்ச் சேலையின் கெதியை எண்ணித்தான் அழ வேண்டி ஏற்பட்டது. இறப்பது யாரும் சகசம். இறந்த கட்டையுடன், ஆயிரம் இரண்டாயிரம் ரூபாயை அநியாயமாகப் போட்டுப் புதைப்பது பகுத்தறிவு படைத்த எவருக்கும் நியாயமாகத் தோன்றாதே.

ஒரு சேலைக்காக இவ்வளவு பணத்தைக் கொட்டி இறைப்பது எவ்வளவு மதியீனம். அந்தச் சேலையைக் கொண்டு அவர்கள் அந்தஸ்தை மதிப்பிடுவது அதிலும் மதியீனம். வாழ்நாள் முழுதும் அப்படிப்பட்ட சேலையை உடுத்துவிட எவரால்தான் முடியப் போகிறது. இல்லை விலையைக் கூடுதலாகக் கொடுத்துவிட்டோமென்றால் இறந்த பின்னோ அல்லது இறப்பதற்கு முன்னோ வேறு எவராலும் அச்சேலை உபயோகப் படுத்தக்கூடியதாகச் சமூகம் விடவில்லையே.

எவ்வளவோ ஊதியத்தை அளிக்கக்கூடிய பெருத்த முதல் பெண்ணுடைய கழுத்திலும், உடலிலும் இருந்து வீணாகின்றது. நல்ல வேளையாகச் சமூகம் தாலியையும் புதைப்பதற்குச் சட்டத்தை ஆக்கி விடவில்லை. இல்லையேல் இடுகாடுகளெல்லாம் இவ்வளவு காலத்திற் குள்ளும், பெரிய பொன், தங்க சுரங்கங்களாக மாறியிருக்கவுங் கூடும்.

சகோதரிகளே! என்னைப் பொறுத்த வரையில் இந்தக் கூறை, தாலிக்காக அதிகப் பணத்தை அள்ளிக்கொட்டி, வீணான நஷ்டத்தை உண்டாக்குவதைப் பெரிதும் வெறுக்கிறேன். அந்த சேலைக்காகக் கொடுக்கும் பெருந்தொகைப் பணத்தைக் கொண்டு நல்லதான பல சேலைகளை வாங்கிக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் நாமும், பிறரும் உடுக்கக்கூடியதாக முடியுமென்பது எனது கட்சி. தாலி விஷயத்திலும் அப்படியேதான்.

## உரையாடல்

# தலைமுறை தலைமுறையாய்

"பாஞ்சாலி"

**தற்கால நிலைமையைப் பிரதிபலிக்கும் ஒரு கற்பனை உரையாடல்**

பாத்திரங்கள் : எண்பது வயதான பார்வதி பாட்டியும், இள நங்கை சுகுணாவும்

இடம் : ஒரு கிராமத்தில் பாட்டியின் வீட்டுத் திண்ணை.

கொழும்பு நகரில் குடித்தனம் நடத்தும் சுகுணா, இரண்டு வருஷங்கழித்து ஊருக்குத் திரும்பியவள், பார்வதிப் பாட்டியைப் பார்க்க வருகிறாள்.

சுகுணா : என்ன பாட்டி, அப்படிப் பார்க்கிறேள் என்னை?

பாட்டி : அடியே சுகுணமாடி! வா, வா. அடையாளமே தெரியவில்லையே எனக்கு. எப்படி மாறிப் போயிருக்கேடி இந்த ரெண்டு வருஷத்திலே.

சுகு : பின்னே என்ன பாட்டி, எப்போதும் ஒரேவிதமாக இருப்பார்களோ யாரும்? நாளுக்கு நாள் எல்லாம் நாகரிகமாக மாறிக் கொண்டிருக்கிறதே, பட்டணத்துக்கு வந்து பார்த்தால் தெரியும் உங்களுக்கு.

பாட் : ஆமாண்டியம்மா, அந்தக்காலம் மாதிரி இப்போ என்னதான் நடக்கிறது, எங்க காலத்திலே பெண்களுக்கிருந்த அடக்கமும் ஆசாரமும் இப்போ எங்கே இருக்கு? இந்த நாளையப் பெண்களுக்கு வயசுக்கு முந்தியே வாய் நீண்டுபோகிறது. பெரியவங்கள் என்கிற மரியாதை இல்லாமல் தத்துப்பித்தென்று தன் தன் எண்ணப்படி பேசுகிறதும்..

சுகு : ஏன் பாட்டி "பெண்ணென்றால் பேசுவது கூடக் குற்றமா? இப்பத்தான் பெண்களுக்குச் சமத்துவம் வேணுமென்கிறதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்களே, பட்டணத்திலே எத்தனை பெண்கள் ஆண்களைப் போல ஆபீஸ் காரிய மெல்லாம் பார்க்கிறார்கள் தெரியுமோ?

பாட் : என்னமோம்மா, பெண்ணாய்ப் பிறந்தவள் வீடா லட்சணமா குடும்பத்தை நடத்த வேணுமென்றுதான் முன்னுள்ளோர் வைச்சிருக்காங்கள். இது என்னடா என்றால், இந்த காலத்திலே எல்லாம் தலைகீழா நடக்கிறது.

சுகு : அடுப்புக் காரியத்தை மட்டும் பார்த்துக்கொண்டு வீட்டிலே அடைஞ்சுகிடக்க வேணுமென்கிறது என்ன நியாயம் பாட்டி? அதனாலேதான் பெண்களுக்கு அறிவு என்பதில்லாமல் எப்பொழுதும் இன்னொருவர் தயவை நாடி அடிமைகளாக இருக்க நேருகிறது.

பாட் : அதுக்காக மட்டு மரியாதை கெட்டு நடக்கிறதாடி? என்னமோ இந்த நாசமாய்ப் போன படிப்பும் நாகரிகமும் வந்துதான் எல்லாத்தையும் குட்டிச் சுவராக்கி இருக்கு.

சுகு : ஐயோ பாட்டி, அப்படி சொல்றேளே நமக்கு அறிவைத் தருகிறது?

பாட் : ஆமாண்டியம்மா ஆமாம், அவைக்குதவாத படிப்பை நீங்கதான் கண்டயள். எங்க காலத்திலே இரண்டோ மூணோ படிச்சவங்களெல்லாம் குடித்தனம் நடத்தல்லையோடி? ஏதோ நாலு கோண எழுத்தைக் கத்து புத்தியையும் கோணலாக்குகிற படிப்புத்தானேடி இப்போ? இதெல்லாம் வரக்கொண்டுதானே, கண்ட கண்டவங்களுக்குக் காயிதங்கள் எழுதுகிறதும், ஒழுங்கு முறை கெட்டு ஒருத்தரோடே ஓடிப்போய் விடுகிறதுமாய்ப் போச்சு இப்போ. எங்க நாளிலே இப்படியா? தாய் தகப்பனாகப் பார்த்துக் கலியாணத்தைப் பண்ணி வைச்சால் என்ன அடக்க ஒடுக்கமா எங்க குடும்பம் நடந்தது.

சுகு : ஒவ்வொருத்தரும் தங்களுக்குப் பிடித்தவர்களாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொள்வதிலே என்ன தப்பு பாட்டி? பழைய காலத்திலேகூட "சுயம்வரம்" என்று வைத்து பெண்கள்

தங்களுக்குப் பிரியமான புருஷனுக்கு மாலையிட்டார்களாமே? ஏன் பாட்டி, துரோபதைக்கும், சீதைக்கும் சுயம்வரம் நடந்த கதை தெரியுமே உங்களுக்கு. அந்த மாதிரித்தான் இதுவும் என்று வைத்துக்கொள்ளுங்களேன். அதோடு நீங்கதானே சொல்லுவேள் கல்யாணம் ஆயிரம் வருஷப் பயிரென்று. அப்பா அம்மாவுக்காக மனதுக்குப் பிடிக்காத ஒருவரை மணந்து வாழ் நாள் முழுவதும் ஏன் கஷ்டப்பட வேணும் சொல்லுங்கோ?

பாட் : சீதையும் துரோபதையும் போலத் தெய்வாமிசமாயிருந்தா அதெல்லாம் சரிப்படும். இந்தக் காலத்திலோ நாலு எழுத்துப் படிச்சதும் நான்தான் பெரிசு என்கிற எண்ணம் வந்துவிடுகிறது. இல்லையென்றால் பெத்தவங்களே நமக்குப் பிழையைச் செய்வாங்களோ என்று எங்கே தெரிகிறது?

சுகு : செய்யாமலென்ன? பெற்றோராகப் பேசிச் செய்து வைத்த எத்தனை கலியாணங்கள் அரக்குமாளிகை மாதிரி ஐந்து நாளில் சந்தி சிரித்துப் போகவில்லையா? நம் நாட்டுப்பக்கங்களிலே அடியும் உதையும் பட்டுக்கொண்டு ஆயுசு முழுக்கச் சுகப்படாத ஏழைப் பெண்களெல்லாம் அப்பா, அம்மா சொன்ன புருஷனைப் பண்ணிக்கொண்டவர்கள்தானே?

பாட் : உன்னைச் சொல்லி என்ன? உலகம் தெரியாதவள். கண்டவ னோடே ஓடிப்போகிறவள் மட்டும் கடைசிவரையிலே சந்தோஷமா இருக்கிறாளாடி? இளமை மோகத்திலே ஏமாந்து எவனோ ஒருத்தனை நம்பி நாலு நாளில் நடுத்தெருவில் நிற்கிறதுகளே. இந்தக் காலத்தில் ஆயிரம் அடிமைப்பட்டாலும் அதுகளுக்குள்ள ஆசையும் பாசமும் இந்தத் துக்கிரிகளுக்கு எப்படி இருக்கும்?

சுகு : இரண்டொரு தறிதலைகளைப் பார்த்து எல்லாரையும் அது மாதிரி சொல்லிவிட முடியுமா பாட்டி? அது தவிர, கட்டின புருஷனைக்கூட விட்டுப் பிரிந்து போகச் சட்டமே இடங் கொடுக்கிற போது இஷ்டப்பட்டவனுக்கு வாழ்க்கைப்படுவதிலும் இணக்கமில்லாத போது தள்ளிவிடுவதிலும் என்ன பிசகு?

பாட் : என்னடி இது? கலியாணம் என்ன கடைச் சரக்கா, நினைச்ச வேளையில் தூக்கி வீச?

சுகு : பின்னே என்ன? அமெரிக்கா தேசத்திலே எல்லாம் அது மாதிரித்தான் நடக்கிறது. அல்ப காரணங்களுக்குக்கூட அங்கே புருஷனும் மனைவியும் பிரிந்து போகிறார்களாம். கேள் பாட்டி கதையை. குறட்டை விடுகிற புருஷனோடு குடித்தனம் நடத்த முடியாதென்று ஒருத்தி கோட்டிலே பிரிந்து போக அனுமதி கேட்டாளாம். அங்கே அதுமட்டுமா? இன்றைக்கொருவர் நாளைக்கொருவரென்று ஏழெட்டுக் கல்யாணம் செய்தவர்கள் தானாம் அங்கே இப்போ.

பாட் : ஐயோ ஆண்டவனே, இதெல்லாம் என்ன நாகரிகமோ? கல்லோ புல்லோ கைப்பிடித்த ஒருவனையே கடவுளாகக் கும்பிடுகிற நம்ம ஒழுக்கமென்ன, இதென்ன?

சுகு : சரிதான் பாட்டி, இந்தக் காலத்திலே எந்த ஆண்பிள்ளையைக் கையெடுத்துக் கும்பிடலாம் சொல்லுங்கோ? பெண்ணென்றால் பேசவந்துவிடுகிறார்களே. ஆண்கள் மாத்திரம் ஒழுங்கு தவறி நடக்கலாமோ?

பாட் : யாருடி சொன்னா அப்படி? ஆம்பிள்ளைகள் ஒழுங்கா நடக்க வில்லை யென்கிறத்துக்காக நாங்களும் கெட்டுப்போயிட றோம் என்கிறதாடி? பார்க்கப்போனா ஆம்பிள்ளைகள் கெட்டுப் போயிடறத்துக்கு பெண்பிள்ளைகள்தான் காரணம். புருஷனாச்சே யென்கிற மதிப்பில்லாமல் தன்தன் பாட்டில் ''த'' ''பு'' என்று நடந்தா அவன் என்ன பண்ணுவான்? அசட்டுப் படிப்புப் படிச்சு அறிவைக் கெடுக்கிறது போதாமல் ஆம்பிள்ளைகளைப் போல நாங்களும் நடப்போமென்று கிளம்பினால் நம்ம தலைமுறை தலைமுறையான ஆண் பெண்ணென்கிற ஒழுங்கு கூட இல்லாமல் போயிடுமேடி? என்ன அனாச்சாரமிது?

சுகு : ரொம்ப நன்றாய்ப் பேசுகிறேளே பாட்டி. உங்களை எங்க கிளப்பிலே வந்து லெக்சர் பண்ணச் சொல்லிப் பார்க்க வேணும்.

பாட் : அதென்னடி கிளப்பு?

சுகு : பட்டணத்திலே எல்லாரும் படித்த பெண்கள் பாட்டி, பொழுது போக்குக்கென்று அவர்கள் பிரசங்கம், நாடகம், கச்சேரி இதுகள் நடத்துகிற சங்கத்தைக் ''கிளப்'' என்கிறது.

பாட் : அது வேறே கூத்தா? வீட்டிலே குழந்தையென்ன, குட்டி யென்ன? அதுகளைப் பார்த்து மேய்க்கிறதை விட்டு வம்பளக்க ஒரு சங்கமா? நல்லாருக்குடி இந்தக்காலத்துப் பெண்களுக்கு உருப்படியா ஒரு வேலை செய்யத் தெரியுதா? காலாகாலத்திலே காரியம் பார்க்கிறதுதான் உண்டா? இந்த லட்சணத்துக்குக் கூத்தும் பாட்டும்தான் குறைச்சல். என்னமோம்மா, நாலுந் தெரிஞ்சவங்கள் ஒன்றைச் சொன்னால் நாட்டுப் புறம், கட்டுப் பெட்டியென்று கேலி பண்ணுங்கள். இதெல்லாம் எதிலேபோய் முடியுமோ யாரு கண்டா?

சுகு : பயப்படாதிங்க பாட்டி, இப்பத்தான் நமக்குச் சுதந்திரங் கிடைச் சிருக்கு. இனிமேல் அன்னிய பாஷைக்கும் நாகரிகத்துக்கும் இருக்கிற மவுசு குறஞ்சு போய் விடும். அப்படியே நம்ம பழக்கவழக்கமெல்லாம் திரும்பி வந்துவிடும். இப்பவே கொஞ்ச கொஞ்சமாய்த் திருத்திக் கொண்டுதான் வர்றது.

பாட் : என்னவோ இந்த மயக்கமெல்லாம் ஒழிஞ்சால்தான் மனுஷன் உலகத்திலே வாழலாம் போலிருக்கு. இல்லையென்றால், வானம் பொய்யாமல் மழை எப்படிப் பெய்யும்? பயிர் எப்படி விளையும்?

சுகு : எல்லாம் விளையும் பாட்டி, பத்தினிப் பெண்கள் பலர் வாழ்ந்து வளர்த்த நமது பழந்தமிழ்ப் பண்பாட்டுக்கு அழிவேது? உங்க தலைமுறைக்கு மட்டுமல்ல உலகமுள்ளளவுந்தான் அது நிலைத்து நிற்கப்போகிறது. இடைக்காலத்திலே ஏற்படுகிற இந்த அரிட்மெல்லாம் உங்க போலுள்ளவர்களைக் கண்டு ஓடி ஒழியாதா என்ன?

பாட் : ஆமாண்டியம்மா, எங்க பேச்செல்லாம் யார் கேட்கிறா இப்போ? ''கெட்டது கிழம்'' என்று அதனதன் போக்கில்தானே போகிறது கள். இல்லையானால் இந்தமாதிரிக் கேடுகெட்ட காரிய மெல்லாம் நடக்குமா உலகத்திலே?

சுகு : அதை விட்டுத் தள்ளுங்கோ பாட்டி, அந்தந்த வயதுப் புத்தி. அப்புறம் தன்னாலே திருந்திப் போகும் என்றாலும் எல்லா வற்றையும் குறை சொல்லக்கூடாது பாட்டி. இந்த நாளைய நடைமுறைகளிலே எத்தனையோ நல்வைகளுண்டு. அடி

தொட்டு தலைமுறை தலைமுறையாய் வந்த எவ்வளவோ அருமையான பழக்கவழக்கங்களுமுண்டு. எதற்கும் காலத்தை அனுசரித்துத்தானே நடக்கவேணும்?

பாட் : இல்லையென்று யார் சொன்னா? இருந்தாலும் பெண்ணாய்ப் பிறந்தால் அதுக்குத் தகுந்த அடக்க ஆசாரமிருந்தால்தான் தெய்வத்துக்கு அடுக்கும். அதில்லாமல் நாலுபேரையும் போல் நானும் என்று கிளம்பினால் கழுதை கெட்டு குட்டிச்சுவரான கதைதான்.

சுகு : ஆமாம், ரொம்ப நேரமா பேசிக்கொண்டிருந்துவிட்டேனே! நான் போயிட்டுவர்றேன் பாட்டி.

பாட் : இதுக்குள்ளேயா? வந்தவள்கிட்டே என்னென்னவோ ஊர்க்கதையெல்லாம் பேசினதல்லாமல் ஒரு புதினமும் கேட்கல்லையே நான்.

சுகு : வீட்டிலே எல்லாரும் சௌக்கியம் பாட்டி. வேறே என்ன புதினம்? நான் போயிட்டு வர்றேன்.

பாட் : சரி போயிட்டுவாம்மா.

# பாலர் பகுதி

''தமிழ்த் திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா'' - பாரதி

*விகடனின் கதையை வாசித்துவிட்டுப் பாலர்களெல்லாம் இடி, இடி என்று சிரித்துவிட்டார்களாம். அது மாத்திரமில்லாமல் ''இன்னொரு கதை சொல் விகடா'' என்று எழுதி எழுதித் தொந்தரவும் கொடுக்கிறார்களாம். விகடனும் விகடமாகவே பேசாமல் இருந்துவிட்டான். என்ன செய்யலாம்?*

*இம்முறை ''ராணி'' என்ற உங்கள் சகோதரி நல்லதோர் கதை அனுப்பி யிருக்கிறார். பிரசுரித்திருக்கிறோம். விளங்காத சொற்கள், அண்ணாவிடமோ, ஆசிரியரிடமோ கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.*

## கதைகள்

### உப்புக் கஞ்சி

ந. குணரெத்தினம்

நான் அன்று காலை எழுந்ததும் தபாற் கந்தோரை நோக்கி நடக்கலானேன். ''உப்புக்கஞ்சி காய்ச்சி இருக்கிறாயா? அல்லது உப்பைத்தான் கஞ்சாக் காய்ச்சி இருக்கிறாயா?'' என்ற கோபமான குரல் கேட்டுத் திரும்பினேன். எங்கள் பக்கத்து வீட்டு வள்ளியின் கணவன் நாகனின் குரல்தானென்று அறிந்துகொண்டதும் திரும்பவும் நடையைக் கட்டினேன். தம்பி எங்கே போறே? என்றான் வள்ளியின் கணவன் நாகன். என்ன நாகண்ணே விசேடம் என்றேன் நான். இப்படி வா தம்பி என்று ஒரு பாயை எடுத்துப் போட்டான் அவன். நான் பாயில் உட்கார்ந்தேன். என்ன தம்பி எங்கே போகப் புறப்பட்டே என்றான் நாகன். சும்மாதான் என்றேன். பாடுபட்டுச் சோத்துக்கு வழி பண்ணினேன். அதுக்குப் போட்டுத் தின்ன ஒன்று மில்லாமே என்ன பண்ணறடா தம்பி. வெறுஞ் சோத்த ஆக்காமக் கஞ்சியாக்

காய்ச்சி எடுக்கச் சொன்னேன். உப்புக் கஞ்சியாம் என்று காய்ச்சி வைச்சிருந்திச்சு என் பொண்ணு. எடுத்து வாயிலே வச்சதும் வேண்டாண்டா இந்தக் கஞ்சி எண்டு தோணுது எனக்கு. உப்புலே கனக்கயாக் கொட்டி வைச்சிருக்கு அது. அறிவு இல்லாததோட நான் என்னத்தப் பேசற. அதுதான்டா உப்புக்கஞ்சி காய்ச்சினயா? இல்ல உப்பத்தான் கஞ்சாக் காய்ச்சினயா? எண்டு கேட்டன். அதுக்குக் கோவம் வந்துட்டுது என்று கூறினான். நான் போய்ட்டு வாரேன் அண்ணேயென்று கூறிவிட்டுப் புறப்பட்டேன். கொஞ்சம் இரி தம்பி என்ன அவசரம் உனக்கு என்றான் அவன். இதென்ன தொல்லைக்குள் வந்தோம் என்று யோசித்துக்கொண்டு திரும்பவும் உட்கார்ந்தேன். என் தோட்டம் பறிபோனபோது என்னத்தச் செய்யற, இல்லாட்டித் தேங்காயாகுதல் பறிச்சுத் தின்ன மாட்டேனா? இந்த அநியாயக்காறனோட என்னத்தைப் பேசற என்றான் அவன். என்னத்தச் சொல்லறே அண்ணே எனக்கு ஒன்றும் புரியல்லே என்றேன் நான். அதென்னத்தச் சொல்லுற. அது பெரிய கதை. இனிக் கேக்கிறே சொல்லுறன் என்று கதையை ஆரம்பித்தான் நாகன்.

நான் சிறுபிள்ளையாய் இருக்கும்போதே என் தந்தை இறந்துவிட்டார். தந்தையின் சொத்தான ஒரு தென்னந்தோப்பைவிட வேறொன்றும் எனக்கிருக்கவில்லை. அத்தோப்பில் கிட்டத்தட்ட இருநூறு தென்னை மரங்கள் மட்டில் நின்றன. சிறிய சிறிய மரங்களாய் செழித்து வளர்ந்து நன்றாய்க் காய்த்துக் கொண்டு நின்றன. இத்தோப்பால் வரும் பணமே என்னையும் என் தாயையும் பாதுகாத்து வந்தது. என் தாய்க்கு நான் ஒரேயொரு பிள்ளையாதலால் என்னை மிகவும் அருமையாகவே பாதுகாத்து வந்தாள். இப்படியாகப் பல வருடங்கள் உருண்டோடின. திடீரென ஓர் நாள் என் தாய்க்குக் கடுமையான சுரநோய் கண்டு மிகவும் கஷ்டப்பட்டாள். இரு நாட்கள் சென்றும் சுரம் தணிவதாயில்லை. நான் என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளித்தேன். கடைசியில் என் தென்னந்தோப்பை எங்களூர் கந்தப்ப உடையாரிடம் ஈடாக விட்டுப் பத்து ரூபாய் பணம் பெற்றேன். பணத்தைப் பெற்றதும் வைத்தியசாலையை அடைந்தேன். வைத்தியரிடம் சுரத்தையிட்டுக் கூறி அவரையும் அழைத்துக்கொண்டு வீடு சென்றேன். மருந்து கொடுத்துவிட்டுச் சென்றார் வைத்தியர். தினமும் மருந்து கொடுத்தும் என் தாயின் உடல் நிலை மிகவும் மோசமாகிக் கொண்டே வந்தது. இது என் மனதை மிகவும் வருத்தியது. தோப்பை விற்று விடுவதென முடிவு செய்தேன். முடிவில் விற்று வைத்தியம் செய்தேன்.

இரு வாரங்கள் பறந்தோடின. என் தாய் பூரண சுகமடைந்தாள். தென்னந் தோப்பை மீட்பதற்காக பணத்துடன் கந்தப்ப உடையாரின் வீட்டை யடைந்தேன். பணத்தை உடையாரிடம் நீட்டினேன். என்ன? நான் உன் வேலைக்காரனா? நீ நினைத்த நேரம் பணம் தரவும் வாங்கவும் என்று சீறிவிழுந்தார் அவர். அந்த அநியாயக்காரனோட என்னத்தைப் பேசுவேன். மனநோவுடன் வீடு சென்றேன். உயிருக்குயிரான தோப்பும் பறிபோனால் என்ன செய்வது. எனக்கும் வயது வந்து விட்டதால் என் தாயின் விருப்பப் படி மணம் புரிந்துகொண்டேன். இன்று கஞ்சை எடுத்ததும் தோப்பின் நினைவு வந்து என் மனதை வாட்டுகிறது என்று கதையை முடித்தான் நாகன். நான் போயிட்டு வாரேன் அண்ணே என்று கூறிவிட்டு வெளி யேறினேன்.

# காட்டில் பிரஜா உரிமை

*ராணி*

அன்று காட்டில் ஏக தடபுடல். பலரும் பலவாறு பேசிக்கொண்டே ''காடாளுமன்றம்'' கூடும் அந்தப் பெரிய மரத்தடியைச் சேர்ந்தனர். ''விசிட்டர்களின்'' ''கலரி''கள் யாவும் நிரம்பிப் பலருக்கு இடங்கிடை யாமலும் போய்விட்டது.

குறிக்கப்பட்ட நேரம் வந்ததும் சபாநாயகர் ஒட்டகமவர்களின் கீழ், காடாளுமன்றம் ஆரம்பமானது. விஷயம் முக்கியமானதால் சகல அங்கத் தவர்களும் சமூகம் கொடுத்திருந்தனர். பிரதம மந்திரி சிங்கம் அவர்கள் எழுந்து நின்று தனது பிடரி மயிரை ஒரு குலுக்கு குலுக்கி ''தொடர்ந் தேர்ச்சியாக இந்தக் காட்டில் ஐந்து வருடம் சீவித்து வந்தவர்களும், இந்தக் காட்டையே தங்கள் சொந்த வாசஸ்தலமாகக் கொள்ள விரும்புகிறவர் களுமே இக்காட்டில் பிரஜைகளாக மதிக்கப்படுவர் என்ற பிரேரணையைச் சபையில் பிரேரித்தார். சர்க்கார் தரப்பினர் பலத்த கரகோஷம் செய்து மந்திரியாரை ஊக்கப்படுத்தி வைத்தனர். இடதுசாரி வீரர்களான புலியாரும், கரடியாரும் தங்கள் மீசையை ஒருதரம் தடவிக் கொண்டார்கள்.

தொடர்ந்து மந்திரியார் பேசிய பொழுது, சொந்தக் காட்டைத் தாயக மாகக் கொள்ளாது, இங்கொரு காலும், நாட்டில் ஒருகாலுமாகத் திரியும் நாய், பூனை, மாடு என்பவர்களின் துரோகத்தையிட்டு வெளுத்து வாங்கினார். தேர்தல் காலத்தை முன்னிட்டு அவர்கள் கூட்டம் கூட்டமாக வருவதும், இங்குள்ள அவர்கள் சகாக்களுக்கு ஒத்தாசை புரிவதும், நமக்குரிய சிறப்பான இரகசியங்களை அம்பலப்படுத்துவதும் அவர்கள் செய்யும் அட்டூழியங்களாகும். நமக்கென்று காட்டிலுள்ள அழுகிய பண்டங்கள், தாவரங்கள், பிணங்கள் என்பவற்றை இரகசியமாக வந்து சாப்பிட்டு விடுகிறார்கள். இதனால் நமது பிரஜைகளின் கெதி அதோ கெதியாகிறது. ஆகையினால் எங்கள் அரசாங்கம் அப்படிப்பட்டவர் களுக்கு பிரஜா உரிமை கொடுக்கக் கண்டிப்பாக மறுக்கிறது என்று குறிப்பிட்டார். இடதுசாரிகள் பக்கத்திலிருந்து ''துரோகம்'' ''துரோகம்'' என்ற குரல்கள் எழுந்தன. சபாநாயகர் ஒட்டகம் அமைதியை நிலைநாட்டு

வதற்காக மேசையில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு இடதுசாரிகள் தலைவர் புலியாரைப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

கோபாக்கினி பற்றி எரிய, மீசை துடிக்க, விறுவிறுத்த பார்வையோடு புலியார் எழுந்து நின்று பின்வருமாறு பொழிந்து தள்ளினார். மிருகங்கள் வரிசையைச் சேர்ந்த நமது சகாக்கள் மாடு, நாய், பூனை என்பவர்களை நாம் காட்டிலிருந்து துரத்திவிடுவதோ, அல்லது பிரஜா உரிமை கொடுக்க மறுப்பதோ புத்தியாகாது. காட்டைத் தவிர வேறு எங்காவது அவர் களுக்குப் பிரஜா உரிமை கிடையாது.

காட்டு மக்களின் உரிமைக்கோ, நலத்துக்கோ அவர்கள் தீமை செய்வதாகப் பிரதமர் குற்றம் சாட்டுவது பாதகமான காரியம். அதையும் விட, அவர்கள் நாட்டை அண்டிப் பிழைப்பது நியாயமானதாகும். ஏனெனில் அவர்களுக்குத் தேவையான உணவு காட்டில் கிடைப்பதில்லை. வலிந்து பெறக்கூடிய திறமையுமில்லை. வலி கூடிய மற்றைய மிருகங் களின் பார்வையிலிருந்து தப்பியும் கொள்ளவேண்டும். எனவே பிரதமரின் குற்றச்சாட்டு அர்த்தமற்றதாகிறது. கட்டாயம் அவர்களுக்கும் ''பிரஜா'' உரிமை கொடுக்க வேண்டும் என்று கூறித் தன் பேச்சை முடித்துக் கொண்டார். இத்துடன் தேநீர் இடை வேளைக்காகக் கூட்டம் ஒத்திவைக்கப் பட்டது.

மீண்டும் சபாநாயகர் ஒட்டகமவர்களின் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. சர்க்கார் கட்சியைச் சேர்ந்த ஓநாய் அவர்கள் இடது சாரியைப் பலமாகத் தாக்கிப் பேசி அவர்களைத் ''தேசத் துரோகி'' என்றும் குறிப்பிட்டார். காட்டு விலங்குகளின் சமாதிகளில் அவர்கட்குச் சிரத்தையில்லையென்றும், ஏதோ கூலிக்கு மாரடிப்பதுதான் அவர்கள் தொழில் என்றும் சபைக்கு அடாத வார்த்தைகள் பேசி எச்சரிக்கத் தொடங் கினார். இவற்றைப் பொறுக்கமாட்டாத கரடியார் எழுந்து நேரத்திற்கொரு கோலம் போடும் ஓநாய் அவர்கட்கு நாங்கள் துரோகியாகத் தெரிவதில் விரோதம் எதுவுமில்லை. ஆனால், அவரைப்போல் அறிவீனமாகப் பேசி, எங்களுக்குப் பழக்கமில்லை. வால்பிடி மந்திரியாரே வாயை அடக்கும் என்று உறுமினார். உடனே சபாநாயகர் எழுந்து அமைதியை நிலைநாட்டி, இருவரையும் குற்றங்களை ''வாபஸ்'' வாங்குமாறு வேண்டிக்கொண்டார்.

பின்னர், உணவு மந்திரியும் சுயேச்சை வாதியுமான யானையார் எழுந்து நீண்ட சொற்பொழிவொன்று நிகழ்த்தினார். ஈற்றில் ''ஒருவருடம்

காட்டில் வசித்த அத்தனை பேருக்கும் பிரஜா உரிமை கொடுக்க வேண்டும்'' என்ற திருத்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார்.

சபையில் திருத்தப் பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டு படுதோல்வி யடைந்தது. பின் பிரதமரின் பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டு அதிகப் படியான வாக்குகளால் வெற்றியடைந்தது. விஷயமறிந்த வட்டங்களில் மந்திரி யானையார் அவர்கள் கட்சிச் சம்பிரதாயத்திற்கு மாறாக நடந்து கொண்டாரென்றும், வேலையை ராஜினாமாச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

# பிறந்தது எலி வேட்டை

சுமாலி

வெகுகாலத்துக்கு முன்னர் எலியும் பூனையும் மிகவும் சினேகமாக இருந்தன. பூனை தனது உழைப்பினாலும் சிக்கனமான வாழ்க்கையினாலும் சிறிது பணம் சம்பாதித்து வைத்திருந்தது. தந்திரத்தில் பெயர் வாங்கிய எலிக்கோ பூனையின் பணத்தின் மேல்தான் கண்ணாக இருந்தது. பூனையை ஏமாற்றி பணத்தை அபகரிக்க எப்போது சரியான சந்தர்ப்பம் கிடைக்கப்போகிறது என்று பார்த்துக்கொண்டே காலத்தைக் கடத்தியது.

ஒரு நாள் எலி ''நான் இன்றைக்குப் பட்டணம் போகிறேன். என் குழந்தைகளுக்கு உடுப்பு வாங்க வேண்டியிருக்கிறது'' என்றது. ''அப்படி யானால் நானும் வருகிறேன். அடுத்த வாரத்தில் எனது மூத்த மகளுக்குக் கலியாணம். அதற்கும் உடுப்புகள் வாங்க வேண்டும்'' என்றது. இரண்டும் புறப்பட்டன பட்டணத்தை நோக்கி. வெயில் கடுமையாக எரித்துக் கொண்டிருந்தது. அதனால் வேகமாக நடக்கமுடியவில்லை அவைகளுக்கு. சரிமதியம் ஆயிற்று. ஆனால் பாதி வழிதான் கடந்திருந்தது. இரண்டும் ஒரு மரத்தடியே உட்கார்ந்து கொண்டுவந்திருந்த பொட்டலத்தை அவிழ்த்தன. சாப்பாடும் ஆயிற்று. சற்றுநேரம் ஆறிப்போகலாம் என்று நினைத்தவாறு மரத்தடி மணலில் படுத்திருந்தன. சற்று நேரத்தில் ஒரு சிறிய காற்று வீசியது. மரம் செடிகளெல்லாம் அசைந்து கொடுத்தன அக்காற்றுக்கு. பூனை மரத்தை மேலே நோக்கிப் பார்த்ததும் மேலே கிளைகளுக்கிடையில் தொங்கிக்கொண்டிருந்த பழைய அணில் கூடொன்று பூனையின் முகத்தில் வந்து விழுந்ததும் சரியாக இருந்தது. பூனையின் கூக்குரல் அந்தக் காடு முழுவதையும் அதிரச் செய்தது. பூனை ஒரு கண்ணைக் கையினால் மூடியவாறு துடித்தது. அதன் ஒரு கண்ணுள் விழுந்த தூசு அதற்கு அவ்வளவு வருத்தத்தை உண்டாக்கியது. எலி எதிர்பார்த்திருந்தபடி ''பூனையை ஏமாற்ற இதுதான் சரியான தருணம்'' என்பதை உணர்ந்து சந்தோசப்பட்டது மனதிற்குள்ளே. எலி மிகவும் அனுதாபமான குரலில் ''பூனையாரே நீங்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும். இதோ என்னுடைய வாலின் நுனியினால் உங்கள் கண்ணில் விழுந்திருக்கும் தூசை நொடிப்பொழுதில் எடுத்து விடுகிறேனே'' என்றது.

ஒருவாறு சம்மதித்தது பூனை. எலி வெகு சமர்த்தாக தூசை எடுப்பது போல் பாசாங்கு பண்ணிக்கொண்டே சுறீர் என்று மற்றக் கண்ணுள் ஒரு குத்துவிட்டது. பூனை அலறித் துடித்தது வலி தாங்கமாட்டாமல் இரு கண்களையும் கைகளினால் மூடியவாறு. எலி சிறிதும் தாமதியாமல் பூனையின் பணப்பையைத் தூக்கிக்கொண்டு பிடித்தது ஓட்டம். பூனை எலியைக் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தது. பலமுறை பதில் கிடைக்க வில்லை. வலி பொறுக்கமுடியாதவாறு மரத்தடியிலேயே படுத்திருந்தபடி தூங்கிப்போய் விட்டது. மீண்டும் தூக்கம் கலைந்து எழுந்ததும் அதன் கண்கள் வலி குறைந்து திறக்கக்கூடியதாக இருந்தன.

பூனை மரத்தடியில் பணப்பையைத் தேடியது. அப்போதுதான் எலியின் சூழ்ச்சி பூனைக்குப் புலப்பட்டது. உடனே ஒரே ஓட்டமாகத் தன் வீட்டுக்கு ஓடியது. நடந்த செய்திகளையெல்லாம் பிள்ளைகளிடமும், மனைவியிடமும், இன பந்துக்களிடமும் தெரிவித்தது. அலறியடித்துக் கொண்டே எல்லாப் பூனைகளும் சீறியெழுந்தன எலியைத் தேடிப்பிடிப் பதற்குக் கூட்டம் கூட்டமாக. நாட்கள் இரண்டு கடந்தன. எலி அவற்றின் கண்களில் தென்படவேயில்லை. பூனைகளின் சினம் அதிகரித்தது. அன்றி லிருந்து எதிர்ப்பட்ட எலிகளையெல்லாம் கொன்று குவிக்கத்தொடங்கின. ஆனால் இன்றுவரை அந்தப் போக்கிரி எலியைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. எனவே பூனைகளின் எலி வேட்டையும் இன்னும் முடிந்த பாடில்லை.

# கவிதைகள்

## பாரதி வாழ்க நீ!

அன்பு தாசன்

''வந்தே மாதரம்'' என்று சொன்னால் - அந்த
வாய்க் கோர் சட்ட முண்டு;

''வாழிய செந்தமிழ்'' என்று சொன்னா லவர்
வாழ்வைக் குலைப்ப துண்டு

சொந்த முள்ளவர் சாகவும் - மற்றவர்
சுரண்டிக் கொழுத்த துண்டு,

துரைத்தனம் என்றிடில் குடித்தனம் விற்றிடும்
துஷ்டரும் அன்று உண்டு,

இந்த மாதிரி உள்ள நிலையிலோ
எங்கள் கவி பிறந்தாய்

என்ன வேதனைப் பட்டதோ உன் மனம்?
இடிபோல் கவி பொழிந்து

தந்து வீரத் தமிழகம் ஆக்கினை,
தங்க மொப்பப் புதிக்கினை; தாய்மொழி

சங்கை ஊதி, முரசினைக் கொட்டி நற்
தமிழர் போற்றிநம் பாரதி வாழ்க நீ!

# பாலர் விளையாட்டு

சிவாஜி, கல்லடி, உப்போடை

மலர் பிடுங்குவோம் - நல்ல மாலைகட்டுவோம்
மங்களமாய்ப் பாடிநின்று மண்ணில் விழுவோம்

பாவை யாடுவோம் - நல்ல பூவைச் சூடுவோம்
பக்குவமாய்க் கூடிநின்று பந்து மடிப்போம்

வீடு கட்டுவோம் - மணல் வேலிபோடுவோம்
விந்தையாக முற்றமதில் மேடை செய்குவோம்

மண்ணைத் தூவுவோம் - மழை மாரி காட்டுவோம்
கண்ணைப் பொத்தி ஓடிவந்து கதைகள் சொல்லுவோம்

கோயில் கட்டுவோம் - சின்னக் கோபுரம் செய்வோம்
கோர்வையாக நின்று பாடிக் கூவியாடுவோம்

சிந்தனை செய்வோம் - மலர் வந்தனை செய்வோம்
சின்னஞ் சிறு மங்களங்கற் சேர்ந்து பாடுவோம்

# ஆசிரியர் கருத்துக்கள், செய்திகள், கடிதங்கள்

## இதழ் 2

**வருக வருக 1949ஆம் ஆண்டே**

எங்கள் நாட்டின் தலைவர்களுக்கு நல்ல ஞானத்தையும், திறமையையும் கொடுத்து நல்ல காரியங்கள் செய்வதில் தூண்டிடுக. சாதி, சமயம் என்னும் கோரச் சங்கிலிகளால் மக்களைப் பிணைத்துப், பிரிவு ஏற்படுத்திக் கொண்டு திரியும் வைதீகக் குடுக்கைகட்கு நல்ல அறிவுரை கூறு. ஏழைகளின் வயிற்றுப் பசியைப் போக்கும் பொருளாதார சுபீட்சத்திற்காகவும் தூர்ந்து போன அறிவுக் களஞ்சியங்களின் மீட்சிக்காகவும் அவர்களின் ஆற்றலையும் தைரியத்தையும் செலவிடுமாறு தூண்டிடுக.

வறுமை, வகுப்புக் கலவரம் போன்ற காட்டுத் தீ பரவாது இருக்குமாறு எங்களைக் காப்பாற்று. அர்த்தமற்ற வீண் கலவரங்களினால் தங்கள் திறமையை நிரூபித்துக் காட்ட விரும்பும் புண்ணியவான்களுக்குப் புத்தி புகட்டு. முன்னிலும் மேலதிகமாக எங்கள் தாய்ப்பாஷை அரசாங்கத்தில் இடம்பெற அருள் கூர். தமிழ் கற்றவரின் மானங்களை காற்றில் பறக்க விடாது பலதிறப்பட்ட உத்தியோகங்கள் கிடைக்குமாறு வழிகாட்டு. எங்கள் நாடு ஒற்றுமையுடனும் சந்தோஷத்துடனும் வாழுமாறு கருணை செய். எங்கள் ''பாரதி'' சஞ்சிகை என்றும் இளமை குன்றாது புத்தெழிலும் புது நடையும் கொண்டு ஆயிரக்கணக்கான அன்பர்கள் மத்தியில் திகழ்ந்து, அறிவுரை பரப்புமாறு அருள் செய். உனது வரவை வாழ்த்துகிறோம்.

**வருக! வருக!! 1949 ஆம் ஆண்டே!**

எங்கள் நாட்டின் சுபீட்சம் கருதி உழைக்கும் தலைவர்கள், ''நீடு வாழ்க'' என்று வாழ்த்துகிறோம். நாட்டு மக்களின் நலன் கருதி நெற்றி வேர்வை, நிலத்தில் சொட்ட உழைக்கும், தொழிலாளர் அத்தனை பேரும் உடல் வலியும் உள வலியும் பெற்றுச் சந்ததம் வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

சர்க்காரின் திட்டங்கள் அத்தனையும் வெற்றி பெறுவதற்குக் காரணமான சிப்பந்திகள் யாபேரையும் வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

நாட்டு மக்கள் சகலரும் அன்பும் அமைதியும் கொண்டு ஒற்றுமையாக வாழவேண்டுமென்று வாழ்த்துகிறோம். ''பாரதி''யின் சந்தாதாரர்களையும் அன்பர்களையும் நல்ல ஞானமும் சுகமும் பெற்று வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

### அதிசயிக்கிறோம்

பாரதியைப் பட்டினி போட்டுக் கொன்ற தமிழன் பின்னால் அந்தப் பாரதிக்கு மணிமண்டபம் கட்டி மகிழவில்லையா? அது போல நமது ''பாரதி'' மலருக்கும் ஆரம்பத்தில் பெரிய பஞ்சம், பட்டினி ஏற்படும் என்றுதான் எண்ணியிருந்தோம். ஆனால் எண்ணியதற்கு மாறாகப் பல நண்பர்கள் வரவேற்றனர். கையேற்றனர். ஆம் மிக நல்ல காரியம் செய்யத் துணிந்திருக்கிறீர்கள். சந்தாதாரராகச் சேர்கிறோம். இயலுமேல் விஷய தானங்களும் செய்கிறோம் என்று பல அன்பர்கள் வாய்விட்டுக் கூறினர். வேண்டிய புத்திமதிகளையும் கூறினர். உற்சாகமுள்ள உண்மைத் தேசிய வாதிகள் எனக்கு ஐந்து கொடு, பத்துக் கொடு என்று வலிந்து பெற்றுச் சந்தாதாரர் சேர்க்க உதவினர். இவைகளைக் கண்டு நாம் கண்கலங்காமல் என்ன செய்வது. அவர்களனைவரையும் வாயார வாழ்த்துகிறோம்.

### ஆசிச் செய்திகள்

நமது பாரதியின் 1ஆம் இதழைக் கண்டதும் பல அன்பர்கள் மனம் பூரித்து வாயாரப் போற்றி ஆசிச் செய்திகளையும் அனுப்பியுள்ளனர். அனைவருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றி. எல்லாவற்றையும் இங்கு பிரசுரிப்பதாகில் இடம் போதாது விடுமென்றஞ்சி சிலவற்றை மாத்திரம் வெளியிடுகிறோம்.

ஒன்றல்ல ஆயிரம் சஞ்சிகைகள் மட்டக்களப்பில் உதயமாயினாலும் போதாதென்றே கவலைப்படுகிறேன். மண்டூர் போன்ற ஒரு பண்பு நிறைந்த கிராமத்திலிருந்து ஒரு சஞ்சிகையை வெளியிடவிருந்த அருந் தொண்டு போற்றற்குரியதே- எஸ்.டி. சிவநாயகம் (தினகரன் - உதவி ஆசிரியர்)

கிராமத்தின் நல்வாழ்வில் நாட்டங்கொண்டு ''பாரதி'' மூலம் பணியாற்ற வந்துள்ள உங்கள் நற்பணி தீங்கில்லாது திகழ்ந்து செந்தமிழ்

மணக்கும் வீதியெல்லாம் பரவ இயற்கை அன்னையை அருள் புரியும்படி இறைஞ்சுகின்றேன். - எம்.ஸி. தயாநிதி (தினகரன்-உதவி ஆசிரியர்)

உங்கள் தொண்டு பூரண விருத்தியடைவதற்கு என் மனப்பூர்வமான ஆசியை அளிக்கவும் என்னாலானவற்றையும் செய்யவும் முனைவேன். - மாசிலாமணி (ஆசிரியர் - திருகோணமலை)

''பாரதி'' என்னுமிச்சுடர் தீயாக வளர்ந்து அறியாமை என்னும் இருளை அகற்றி, மட்டக்களப்பு மக்களுக்கும் ஏனையவர்களுக்கும் அறிவென்னும் வழியை எடுத்துக்காட்டுவதற்கோர் பிரதான கருவியாக அமைய வேண்டும் என்பது எனது பிரார்த்தனை. - S.M. இராசமாணிக்கம் B.A

தங்கள் ''பாரதி'' ஈழக்கிழக்கில் இனிதே தோன்றி நாட்டுக்கு நல்லன செய்து அஞ்சிக் கிடக்கும் வாலிபக் கூட்டத்தை நெஞ்சுரங்கொடுத்து எழுப்பி வைப்பானென நினைக்கின்றேன். - சி. காசுபதி (ஆசிரியர்)

புதிய பத்திரிகை தொடங்குவது மிகச் சந்தோசமான காரியம். பத்திரிகையின் ஆயுளைப் பற்றிக் கவலையில்லை. பத்திரிகைத் தொண்டு உலகிலே பெரிய தொண்டு. - அ.செ. முருகானந்தன் (''எரிமலை'' - ஆசிரியர்)

**மது அரக்கனைத் துரத்தி அடிப்போம்**

குறை கூறுவதற்கு ஒரு தலைவனோ, முதலாளியோ தென்பட்டுவிட்டால், நம்மில் பலர் பெரிய தேசியவாதிகளாக மாறி விடுவது பட்டவர்த்தனமான செய்தி. இத்தனை நாளும் நாம் குறை கூறுவதற்கும், குய்யோ! முறையோ! என்று அழுவதற்கும் காரணமான அந்நிய ஆங்கிலேயரை ஓரளவு கப்பலேற்றி விட்டோம். இனிமேலும் நாம் குறை கூறுவதாயிருந்தால் அல்லது, தனிப்பட்ட ஒருவரின் தலையில் குற்றமனைத்தையும் சுமத்த வேண்டும் என்ற மனப்பான்மையுடையவராயிருந்தால் அச்செய்கை, காகம் கரிச்சட்டிக்கு வசை சொல்லுவதையே ஒத்திருக்கும் என்பதில் ஆட்சேபனை ஏதும் உண்டா?

ஆகையால் நாங்கள், சுதந்திர மனிதன் என்ற உணர்வோடு எங்களுக் குரிய கடமைகள் யாவை? என்பதையிட்டுச் சிந்திக்க வேண்டும். சிந்தித்த வற்றைச் செயலிலாற்ற வேண்டும். மாசு மறுவற்ற இன்பமான வாழ்க் கைக்கு முட்டுக்கட்டையான எத்தனையோ காரியங்கள் ''குருவிச்சை'' மாதிரி எங்களைப் பற்றிக்கொண்டிருப்பதை அறிந்தும், அறியாதவர்கள் போல் நடக்கின்றோம். மதுவருந்தல், தீண்டாமை, சாதி மத துவேசம்

முதலிய கெடுதிகளை நாட்டிலிருந்து வெருட்டவேண்டுமென்று, திட சித்தம் கொள்ளவேண்டும்.

அன்றாடம் மெய்வருத்திச் சம்பாதித்த சிறு தொகைப் பணத்தைக் கள்ளுக் கடைக்கும், சாராயக் கடைக்கும் கொள்ளை கொட்டித் தன் வாழ்க்கையைக் குட்டிச் சுவராக்கிக் கொள்ளும் ஏழைகளின் கெதி என்ன? குடிவெறியினால் மதிமயங்கி வீதிகளிலும், சந்திகளிலும் கண்டபடி கத்திச் சண்டையை உண்டாக்குவோர் தொகைதானென்ன? பாராளுமன்றத் தேர்தலோ, அல்லது வேறு எந்தத் தேர்தலோ என்றவுடன் சாராயம், கள்ளு என்ற மதுபான வலைகளால் மக்களை வீசி வயப்படுத்த எண்ணும் பணக்காரக் கும்பல்களின் மதிதானென்ன..?

மனிதன் குடியினால் நேர்மையை விற்கிறான். நல்லொழுக்கங்களைக் காற்றில் பறக்க விடுகின்றான் என்றெல்லாம் நாம் எழுதிக்கொண்டே போனால் வாசகர்களை மடையர் என்று நினைத்ததாகவே முடியும். ஏனெனில் பகிரங்கமாக யாவரும் ''குடியைத்'' தீமையானது என்று ஒத்துக்கொண்டு விட்டோம். அரசிறை வருமானத்தில் சிறிது நட்டம் ஏற்படலாமென்று சிலர் ஊகிக்கலாம். ஆனால் மதுவிலக்கால் மக்களுக்கு ஏற்படும் லாபம் இந்த நஷ்டத்தை விட அதிகப்படியானதாகும்.

சென்னை மாகாணம், அகில உலகம் முழுவதற்குமே ஒரு வழி காட்டியாக ''மதுவிலக்கு''ச் சட்டத்தை அமுல் நடத்தி வெற்றியீட்டியதை யார்தான் அறியாமலிருக்க முடியும். அப்படி அறிந்திருந்தும் உணர்ச்சியற்ற விலங்குகள் போல் நாம் வாழ்வதனால் ''தமிழன்'' என்ற சொல்லுக்கே இழுக்காக முடியுமல்லவா? இலங்கையிலும், தமிழ் மாகாணங்கள், மற்ற மாகாணங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக மதுவிலக்கு நடவடிக்கையில் தீவிர முயற்சி எடுத்தாலென்ன? ''அகில இலங்கை பௌத்தர் காங்கிரஸ்'' மகாநாடு பூரண மதுவிலக்குத் தீர்மானத்தை நிறைவேற்றி வெற்றி காண முனைகின்றது. நாமும் ஏன் வாய்மூடி மௌனியாக வாழவேண்டும். ஆமை வேகத்தில் சென்றுகொண்டிருக்கும் ''மதுவிலக்குச் சங்கங்களை''யும் வெறும் உப்புச் சப்பற்ற தீர்மானங்களையும் எதிர்பார்த்து எதிர்பார்த்து காலத்தை வீணே கடத்த முடியாது. ஒவ்வொரு நகர சங்கமும், பட்டண சங்கமும், கிராமச் சங்கமும் முழு மூச்சுடன் உழைக்க வேண்டும்.

கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள ''கிராம முன்னேற்றச் சங்கம்'', ''சன சமூக சங்கம்'' என்பவற்றின் மூலம் மதுவிலக்குத் தீர்மானங்களை நிறைவேற்றி மதுக்கடைகளை (தவறணைகளை) மூடுமாறு அரசாட்சி

யாரிடம் வலிந்து கேட்க வேண்டும். விடாப் பிடியாக நிற்க வேண்டும். மூலைக்கு மூலை பதுங்கி இருக்கும் ''குட்டித் தவறணை''களின் பொட்டு வித்தைகளை அம்பலப்படுத்த வேண்டும்.

''பொது சனங்கள் விரு ண்டால், மதுக் கடைகளை மூடுவதில் தயங்க மாட்டோம்'' என்று ட்சியார் சமீபத்தில் கூறியிருப்பதை மனதில் வைத்துக்கொண்டு, செயலாற்ற முற்பட வேண்டும்.

எழுதுவதினாலும் வாசிப்பதினாலும் மாத்திரம் நாட்டுக்கு விமோசனம் பிறந்து விடமாட்டாது. ஒவ்வொருவரும் கிரியாம்சத்தில் இறங்கிப் பயன்கருதாது உழைக்க வேண்டும்.

*''மது அரக்கனைத் துரத்தி அடிக்க வேண்டும்''*
*''குடிப்பதைத் தடுப்பதே கோடி கோடி புண்ணியம்''*

- நாமக்கல் கவிஞர்

வீழ்க மது அரக்கன்! வாழ்க நம் நாடு!

## இதழ் 3

**அட்டைப்பட விளக்கம்: காரைதீவில்**

மட்டக்களப்பு காரைதீவில் உதித்து இந்தியா, இலங்கை எங்கும் அறிவொளி பரப்பிய ஞானச் சுடரும் மதங்கசூடாமணி, நடராஜ வடிவம், யாழ்நூல் என்பவைகளை ஆக்கியோனும் ஸ்ரீ ராமக்கிருஷ்ண விஷயம், பிரபுத்த பாரதம் என்னும் பத்திரிகைகளின் ஆசிரியரும் அண்ணாமலை, இலங்கைச் சர்வகலாசாலைகளின் தமிழ் பேராசிரியராக இருந்து அருந் தொண்டாற்றிய வரும் இலங்கை ஸ்ரீ ராமக்கிருஷ்ண சங்க ஸ்தாபகரும் ஆத்மீகப் பெரியாரும் ஆகிய உயர்திரு சுவாமி விபுலாநந்த அடிகளார் இம்முறை நமது அட்டையை அலங்கரிக்கின்றார்.

உலக வழக்கிழந்து போன இசை முறைகளை ஆராய்ந்து யாழ்நூல் வகுத்த அடிகளாரின் கைங்கரியத்தைத் தமிழுலகம் என்றுதான் மறக்க முடியும்.

*''ஊழிக் காலத் துலகந் தளர்ந்து*
*ஆழி குளிப்ப அரிமருப் பெடுத்த*

*தன்மை யாமென்னத் தவப்பெரும் புலவநீ*
*உலக வழக்கிழந்த உயரிசை தனக்கோர்*
*யாப்பென வகுத்த யாழ்நூ லதனால்*
*ஆரணம் போற்றும் நாரணன் என்கோ''*

என்று சுவாமிகளை வாயாரப் போற்றுதல் நம் கடனாகும். இந்தியா, இலங்கை மக்களது அதிஷ்டக் குறைவே போலும் சுவாமிகள் என்றோ மண்ணுலகைப் பிரிந்து விடைபெற்றுக்கொண்டுவிட்டார். சாந்தி பெறுக அவர் ஆத்மா. அடிகளாரின் ஞாபகார்த்தமாக சிவாநந்தா வித்தியாலயத்தில் மண்டபம் ஒன்று கட்டப்படுகிறது. விரைவில் முடிவுற வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

## இந்த இதழ்

''பாரதி'' மலரின் வளர்ச்சிக்காக, எவ்வளவு தூரம் உழைக்க முடியுமோ? அவ்வளவும் உழைத்தே ஆகுவோம். விலையை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ அவ்வளவுக்குக் குறைத்தே தீருவோம், என்றெல்லாம் முன்பு நாம் குறிப்பிட்டதுண்டு. அதன்படி இந்த இதழ் விஷேட முறையில் புதிய ரூபத்துடன் வெளியாகி இருப்பதைக் கண்டு நேயர்கள் ஆனந்தமடையா மலிருக்க முடியாது.

''பாரதி'' தனது இளமைப்பருவத்திலேயே பல அறிஞர்களதும் ''ஈழகேசரி'', ''தினகரன்'' போன்ற பத்திரிகைகளதும் அன்புக்கும், ஆசிக்கும், உரித்தாகிவிட்டது. இடைமுறிவுபடாது மேலும் மேலும் சிறந்து விளங்கி, அறிவொளி பரப்ப அவர்கள் ஆசியும் இறைவன் அருளும் பாலிக்கட்டும்.

## ஆசிய மகாநாடு

''மழை விட்டும் தூவானம் விடவில்லை'' என்கிறார்களே, அது போலவே தான் இருக்கிறது இன்றைய இந்தோனிஷியாத் தகராறும். ஆசிய நாடுகளில் எதேச்சாதிகாரம் செய்து சுகபோக வாழ்க்கை நடாத்திக்கொண்டிருந்த ஐரோப்பியக் கனவான்களை அப்புறப்படுத்தியதென்பது சாதாரணமான விஷயமா? நாகரிகமற்ற உங்களை நல்வழிப்படுத்த வந்தவர்கள் நாங்கள் என்றார்கள். அரசாட்சி செய்வதற்கு நீங்கள் இன்னும் தயாராகவில்லை, அதற்கு உங்களை ஆயத்தப்படுத்துகிறோம் என்று வேதாந்தம் பேசினார்கள். நாங்களே அரசியலை உங்கள் கையில் தருவதில் ஆட்சேபனை இல்லை,

தந்தபின் சிறுபான்மையோர் கெதி என்னவாகுமோ? என்று நீலிக்கண்ணீர் வடித்தார்கள். இன்றே புறப்பட்டு விடுகிறோம், ஆனால் போனதன் பின் அரசியல் சின்னாபின்னமா[illegible]ந்த வெள்ளம் ஓடப்போகிறதே என்று சோதிடம் கூறினார்கள்.

இருந்துமென்ன விட்டுக் [illegible]டுத்தார்களா? பரவாயில்லை, போய் வாருங்கள் எங்கள் நாட்டை நாங்கள் ஆண்டுதான் பார்க்கப்போகிறோம், என்று சபதம் கூறினார்கள். பேச வழியில்லை, குண்டோதரன் அன்னதானம் செய்தது போன்று, தங்களுக்கென்றிருந்த ஆசியாவின் பெரிய நிலப் பரப்பைக் கைவிட்டு விட்டு மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறிவிட்டனர்.

மழையும் ஒழிந்து விட்டதென்று இறுமாந்து கொண்டிருந்தோம். ஆனால் போச்சா? தூவானமும் வீசித்தானே ஆகவேண்டும் என்பது போன்று டச்சுக்காரர்கள் இந்தோனிஷியாவில் அடக்குமுறையைக் கையாளத்தொடங்கியிருக்கிறார்கள். தங்கள் படைப்பலத்தினால் அவர்களை நசுக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

இவற்றைப் பார்த்துக்கொண்டு இன்னுமா ஆசிய நாடுகள் மௌனியாக வாழமுடியும்? இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு எழுந்தார். ஏ! ஆசிய நாடுகளே ஒன்றுசேருங்கள் ஏகாதிபத்திய ஆட்சியைத் தலைதூக்க விடக் கூடாது, என்று டில்லியிலே நின்று கர்ச்சித்தார். துருக்கி தவிர்ந்த ஏனைய பத்தொன்பது ஆசிய நாடுகளும் ஓடோடியும் வந்தன. தை மாதம் 20ஆம் திகதி ஆசிய மகாநாடொன்றைக் கூட்டினார்கள். ஆசிய நாடு என்று கூறுவதிலும் "பாதி உலக மகாநாடு" என்று கூறுவது மிகவும் பொருத்த மானது. ஏனெனில் அகில உலகின் ஜனத்தொகையின் ஏறக்குறைய அரைவாசி ஜனத்தொகையின் பிரதிநிதிகள் சமூகம் கொடுத்திருந்தார்கள்.

இந்தோனிஷியாப் பிரச்சினையைப் பற்றி ஆலோசிப்பது மாத்திர மென்ன? இனிமேல் ஆசியாவில் வரும் ஒவ்வொரு பிரச்சினையும் இம்மகாநாட்டினால் சமூகமாகத் தீர்க்கப்படும் என்பதற்கு ஒருவித சந்தேகமும் கிடையாது. மங்கிக்கிடந்த ஆசிய நாடுகளின் நாகரிக வெளிப்பாட்டிற்கு இம்மகாநாடு ஒரு தீர்க்கமான திறவுகோலாகும். இம்மகாநாட்டையும் இதன் மகத்தான வெற்றியையும் கண்டு வல்லரசுகளே நடுங்கிக்கொண்டன என்றால் மகாநாட்டையும், அதிற் சேர்ந்து கொண்ட நாடுகளையும், மகாநாட்டின் கர்த்தாவான பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களையும் எப்படித்தான் போற்றி மனம் நிறையலாம்? வாழ்க மகாநாடு.

**கலைக் களஞ்சியம்**

தமிழுக்கு ஒரு கலைக்களஞ்சியமா! என்று சந்தேகப்பட்டுக்கொண்டிருந்த மேதாவிகளின் மனக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்துவிட்டார், சென்னைக் கல்வி மந்திரி அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள். அவர்களுடைய அரிய முயற்சியால் 1947ஆம் ஆண்டு விஜயதசமி யன்று தமிழ்க் கலைக்களஞ்சியம் செய்யும் பணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அவ்வாக்க வேலையில் இரண்டாயிரம் அறிஞர்கள் ஈடுபட்டிருக்கிறார் களாம். 750 பக்கங்களைக் கொண்ட 12 புத்தகங்களாக வெளிவரும். 7 வருட காலத்துள் இவ்வாக்க வேலை முடிவுற வேண்டும் என்பது நிர்வாகக் கோஷ்டியாரின் நம்பிக்கை. சென்ற மார்கழி 12 கலைக்களஞ்சியத்தின் முதலாவது புத்தகம் வெளியாகியுள்ளதைப் பத்திரிகைகள் வாயிலாக நேயர்கள் அறிந்திருக்கக் கூடும். அளவிலா மகிழ்ச்சியுங் கொண்டிருக்கக் கூடும்.

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் அரிய முயற்சிகள் அத் தனையும் என்றும் பழுதுபோபவையல்ல. நாளொரு வண்ணமும் பொழு தொரு மேனியுமாக அவர்கள் நன்னோக்கங்கள் உயர்வு பெற்று வெற்றி பெறுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தினகரன் ஞாயிறு வெளியீட்டின் ஆசிரியர் குறிப்பிட்டது போல் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களிலுள்ள தமிழ் அறிஞர் களின் உதவியைக் கைநழுவ விட்டு விடுவது கலைக்களஞ்சியத்தின் மதிப்புக்குச் சற்றுக் குறைவாக இருக்குமாதலால் நிருவாகஸ்தர்கள் சிறிது கவனங்காட்டி, இக்குறையையும் நிவர்த்தி செய்வது சிறப்புடைத்தாகும்.

**மது விலக்கு**

சென்ற இதழில் மதுவிலக்கு சம்பந்தமாக எழுதியது வாசகர்கட்கு ஞாபக மிருக்கலாம். இந்த நன்னோக்கத்தோடு பல அறிஞர்களும் சங்கங்களும் நடவடிக்கை எடுத்திருப்பது இலங்கை மாதாவின் பிரமாண்டமான அதிர்ஷ்டமேயாகும்.

சுதந்திர தினமாகிய பிப்ரவரி 4ஆந் திகதி அகில இலங்கையிலுள்ள மதுபானக் கடைகளை அடைக்குமாறு ''பூரண மதுவிலக்கு மத்திய சங்கம்'' சர்க்காரைக் கேட்டுள்ளது. முடிபு எதுவாயினும் நமக்கென்ன?

அடைக்குமாறு கேட்பது போதாது. சுதந்திர நாளன்றே அழிக்குமாறு கேட்டிருக்க வேண்டும்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் மதுவிலக்குப் பிரச்சினை மீது இலங்கை பூராவும் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டிருக்கிறது. அது மாத்திரமன்றி ஆங்காங்கு மதுவிலக்குப் பிரசாரக் கூட்டங்களை நடாத்துவதற்கும் ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கிறது.

கம்பளை "எர்பன் சபை" வட்டாரத்துள் சாராயத் தவறணை ஒன்றைத் திறப்பது சம்பந்தமாகப் பொதுஜன விருப்பத்தை அறியச் சர்க்காரால் சென்ற மாதம் 20ஆந் திகதி ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. நிகழ்ந்ததென்ன? தவறணையே வேண்டாம் என்பது போன்று வாக்கெடுப்பில் 2511பேர் மாறாக வாக்குக் கொடுத்தனர். விஷயம் அபஜெயம் அடைந்தது.

இலங்கை மெதடிஸ்த தேவாலயத்தில் கடந்த 133வது வருடாந்த மகாநாட்டில் சங்கைக்குரிய ஜேம்ஸ் எஸ் மேதர் அவர்கள் மதுவிலக்குச் சட்டத்தின் அவசியத்தையிட்டு தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இலங்கையில் மதுவிலக்கு சட்டமாக வராவிட்டால் அரிதில் முயன்று செய்த இந்திய மாகாணத்தின் மதுவிலக்குச் சட்டத்தின், நற்பலனைக் காண்பதற்குத் தடையாகவும் இருக்கக்கூடும். கள்ள மார்க்கமாக இங்கிருந்து மது வகைகள் அங்கு இறக்குமதியாகவும் கூடுமல்லவா? எனவே, இலங்கை மதுவிலக்குச் சட்டத்தை ஏற்படுத்துவதால் இருவிதமான நன்மை ஏற்படுகின்றது. ஒன்று இலங்கை மக்கள் குடிப்பழக்கத்தை விட்டு நற்கெதியடைதல், இரண்டு சென்னை மாகாணம் ஏற்படுத்திய மதுவிலக்குச் சட்டத்திற்கு இடையூறு வராமல் காத்தல். தான் கெடினும் தக்கார் கேடு ஆகாதல்லவா?

இப்படிப் பல சங்கங்களதும் ஏகோபித்த ஆதரவுடனும் நடத்தவிருக்கும் மதுவிலக்கு நடவடிக்கையைப் பொது ஜனங்களாகிய நாங்கள் பார்த்துக்கொண்டு, வெறும் களிமண் உருவங்கள் போன்று வீற்றிருத்தல் கூடவே கூடாது. சங்கங்களிலும் பிரசாரங்களிலும் ஈடுபட வேண்டும். எத்தனையோ பாமர மக்கள்கூட சாராயத் தவறணைகளை நாசமாக்க வேண்டும் என்று பேசிக்கொள்வது காற்றில் தூசாய்ப் பறக்கின்றது. ஒரு சிறிய முயற்சியில் பெரிய பலன் கூடும் காரியமிது.

நம்பிக்கையும் நன் மதிப்புமற்ற பேடிகளாக வீற்றிருக்காமல் மது விலக்கைச் சட்டமாக்குவதற்காகத் திடசித்தம் கொண்டு உழைத்து நம்மையும், நமது தாய் நாட்டின் மகிமையையுங் காப்பாற்றுவோமாக!

*விசும்பிற் றுளிவீழி னல்லால் மற்றாங்கே*
*பசும்புற் றலைக்காண் பரிது.*

**பெப்ரவரி 4ஆம் திகதி**

அன்னியரின் அடிமைத்தளையில் சிக்குண்டு, கைகட்டி, வாய்புதைத்துக் கொண்டிருந்த காலம் போய் நாங்கள்தான் இந் நாட்டு மன்னர் என்ற நிலையை அடைந்து கொண்டுவருவது சந்தோசகரமான செய்தி. இந்த நிலையின் பெரும்பான்மையான தோற்றம் பெப்ரவரி 4ஆம் திகதி ஏற்பட்டதாகையால் பலரும் அந்த நாளை நன்னாளாகக் கொண்டாட முற்படுகின்றனர். மீண்டும் இலங்கா தீவு இழந்து போன தனது உரிமை அத்தனையையும் பெற்று புகழைப் பரப்ப வேண்டுமென்பதே அனைவரதும் அபிலாஷை.

பாடசாலை மாணவர்களும் பலரும் இலங்கை மாதாவுக்கு ஜே! என்று கோஷமிட்டுக் கொண்டாடினர். பிரிட்டிஷாரின் பூரணத் தொடர்பு இலங்கையை விட்டு நீங்கி, மக்களுக்கு வாழ்க்கைச் சுதந்திரம் ஏற்படும் வரையும் சுதந்திரம் என்று ஒன்றைக்கொண்டாட, வெட்கமில்லையா? என்று கோஷமிட்டனர் செஞ்சட்டை வீரர்கள்.

''பழைய குருடி கதவைத் திறடி'' என்றமாதிரி பட்டிக்காட்டு கந்தனும் பொன்னியும் பெட்டி, மண்வெட்டி சகிதமாய் வயலை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இப்படியான பலதிறப்பட்ட சுதந்திரக் கொண்டாட்டங்களுக்கு கொடிகளும் பல திறப்பட்டனவே. காலம் பல கடந்தும் யாவரும் சிரம் தாழ்ந்து வணங்கக்கூடிய ஒரு தேசியக் கொடியைக் காணவில்லை.

அதற்கென நியமிக்கப்பட்ட சபையாரின் முடிவும் தெரியவில்லை. சிலர் சிங்கக்கொடி என்கின்றார்கள். சிலர் அதற்குள் ஒன்று, இரண்டு கோடு என்கிறார்கள். கடைசியில் எந்த கற்பக விருட்சம் நடப்படுகிறதோ நாமறியோம். இந்த நிலையில் பிரதமர் அவர்கள் பிரிட்டிஷ் கொடியும் சிங்கக்கொடியும் கூட்டாகப் பறக்கட்டும் என்று தூபம் போட்டார். இந்தக் கூட்டுறவுக் கொடிகளின் மிதவாதப் போக்கான மர்மத்தை வியாக்கியானம்

செய்யத் தோன்றவில்லை. இலங்கை-இந்தியக் காங்கிரஸ்காரர்கள் சிங்கக் கொடியுடன் மூவர்ணக் (காங்கிரஸ்) கொடியைத் தூக்கிக் கொண்டாடினர்.

*''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா- அவன்*
*பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா- அதை*
*கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா - அந்தக்*
*கிறுக்கில் உளறுமொழி கேட்பாயடா''* தே.வி,

வாழிய லங்கா!

**மட்டு நகரில் திரு ஹரி அபயகுணவர்த்தனா**

*ஐ. பாக்கியராஜா*

''யாருக்குச் சுதந்திரம் கிடைத்திருக்கின்றது. யாருக்குச் சம உரிமை கிடைத்திருக்கின்றது, இலங்கையிலுள்ள இறப்பர் தோட்டங்களிலும், தேயிலைத் தோட்டங்களிலும் உண்டாகும் இறப்பர், தேயிலை முதலிய பொருட்களை தமது விருப்பத்துக்கு லாபம் தரும் வகையில் வியாபாரம் செய்ய முடியாதிருக்கின்றது. இவற்றை அமெரிக்காவிற்கோ, அல்லது பிரித்தானியாவிற்கோ, அதுவும் ஒரு குறிப்பிட்ட விலைக்கே விற்க முடிகின்றது. விற்கவும் வேண்டும்'' என்று இவ்வாறு மட்டுநகர் முற்ற வெளியில் 1949ஆம் வருடம் பெப்ருவரி மாதம் 3ஆம் நாள் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கம்யுனிஷ்க் கட்சியின் காரியதரிசி திரு ஹரி அபயகுணவர்த்தனா அவர்கள் இலங்கையும் சுதந்திரமும் என்ற விஷயம் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

அவர் மேலும் பேசியதாவது, கள்ள மார்க்கட்டில் கொள்ளை லாப மடித்துத் தங்களது சட்டைப் பைகளை நிரப்பிக் கொண்டிருக்கும் முதலாளி வர்க்கத்தினருக்கும், மனிதனை மாடாகப் பாவிக்கும் இரக்கமற்ற போலீஸ்ப் புலிகளுக்கும், இவர்களது துப்பாக்கியிலிருந்து வெளிவரும் இலக்கமற்ற ரவைகளுக்கும், இவர்களுக்குப் பந்தம் பிடிக்கும் (பந்தக்காறராய்) ஒருசில பிற்போக்கு வாதிகளுக்கும் நாம் விரைவில் கல்தா கொடுத்துச் சீட்டுக் கிழிக்க வேண்டும்.

மேலும் அவர் நாட்டில் மலிந்து மக்களைக் குட்டிச் சுவராக்கும் லஞ்ச ஊழல்களைப் பற்றியும், மது அரக்கனைப் பற்றியும், வேலையில்லாத் திண்டாட்டத்தையிட்டும், மக்களுக்கு மிக விளக்கமாகவும், விரிவாகவும், தெரியப்படுத்தினார். மேற்படி கூட்டத்திற்கு ஏறக்குறைய 500பேர்கள்

மட்டில் பிரசன்னமாயிருந்தனர். பின்னர் வேறும் சில அன்பர்கள் பேச்சுடன் கூட்டம் இனிது கலைந்தது.

**பத்திரிகை உலகில்**

"லங்கா முரசு" வெளியீட்டின் நான்காவது ஒலி வரப்பெற்றோம். முரசொலி என்னும் ஆசிரியரின் துடிப்பான தலையங்கத்தின் கீழமைந்த செய்திகளும், அட்டைப்படமும் முரசின் சிகரமாக விளங்குகின்றன. தாளையடி,-சபாரெத்தினம், கவி பரமஹம்ச தாசன் போன்றவர்களது கதை, கவிகள் இடம்பெற்றிருப்பது போற்றற்குரியது. சமரச நோக்குடன் மட்டுநகரில் உதயமாகும் இம்முரசு திக்கனைத்தும் ஒலிக்க வேண்டுமென்பதே நமது அபிலாஷை.

எதிர்த்துவரும் இன்னல்களுக்கு நசிந்து கொடுக்காது, உண்மைச் செய்திகளை உலகனைத்தும் முரசு ஒலிக்குமென்று நம்புகிறோம்.

ஆசிரியர்: கலாநிதி, லங்கா முரசு காரியாலயம், 22 மெயின் வீதி, மட்டக்களப்பு.

## இதழ் 4

**காலமான கவிக்குயில்**

இந்திய தேசத்தின் மத்திய மாகாணக் கவர்னர் கவிக்குயில் சரோஜினி அம்மையாரின் திடீர் மரணம் அகில உலகையும் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டது.

சென்ற 2-3-49 காலை 3.30 மணியளவில் பெண்மைக் குலத்தினதும், அடிமை இந்தியாவினதும் விடுதலைக்கென்று பாரத நாட்டில் உருவெடுத்த மாதர் திலகம் மாரடைப்பு நோயினால் மண்ணுலகை நீத்தனள். அன்னியரின் அடக்குமுறைகளால் நசுக்கப்பட்டு அடிமைகளின் சிறைக் கூடங்களில் அறிவிழந்து படாத பாடு அத்தனையும் பட்டுச் சுதந்திரக் கீதமிசைத்த கவிக்குயில் சரோஜினி நாயுடு அமரபதமடைந்தார்.

பாரத தேசத்தின் நாற்பது கோடி மக்களதும் அன்பும் சோகமுந் ததும்பும் கண்ணீர் வெள்ளத்தினால் அம்மையாரின் சேவை அத்தனையும் மீண்டும் துலக்கமடைந்தது. சாந்தி பெறுக! அவர் ஆத்மா.

**பாஷாவாரி**

தமிழ் பேசும் மக்களது சுபீட்சங்கருதி உழைக்கும் அத்தனை பெரியார் கட்கும் சிரந்தாழ்ந்து வணக்கம் செய்ய வேண்டியது நமது பெருங் கடமையே யாகும். ஆனால் அவர்களது கொள்கைகளையும் செயல்களையும் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்துக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிப்பதும், போற்ற வேண்டிய இடத்தில் போற்ற வேண்டியதும் நம்முடைய மற்றுமோர் பெருங்கடமையேயாகும்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் மந்திரி ஜி.ஜி. பொன்னம் பலம் அவர்களுடைய ஐம்பதுக் ஐம்பது கொள்கையை மிக மும்முரமாக எதிர்த்தவர்கள் தமிழர்கள். அரசியற் பிரமுகர்களின் கவலைக்கிடமான இத்தருணத்தில் தமிழர்களின் முற்போக்கான இந்த வேலை எவ்வளவு சகாயத்தை அவர்கட்கு அளித்திருக்குமென்பதில் ஆட்சேபனை ஏது முண்டா? அப்படி இருந்தும் பிரதம மந்திரியவர்கள் சிறுபான்மையோர் விஷயத்தில் அசிரத்தை காட்டுவது நன்றியுள்ள செய்கையாகாது.

யு.என்.பி கட்சியாருடைய போக்குகளிலும் செய்கைகளிலும் அருவருப்பும் சந்தேகமும் கொண்ட தமிழ்த் தலைவர்களான திரு. செல்வ நாயகம், திரு. வன்னியசிங்கம், டொக்டர் நாகநாதன் போன்றவர்கள் தமிழ் மக்களுக்குள் மற்றுமோர் பிரச்சினையை உண்டாக்கியுள்ளார்கள்.

இலங்கைப் பாஷாவாரிப்படி, இரு கூறாக்க வேண்டுமென்பது அவர்கள் கொள்கை. சிங்களம் பேசுவோர்கட்கு ஒரு தனி இராச்சியமும், தமிழ் பேசுவோர்க்கு மற்றுமோர் தனி இராச்சியமும் இருக்க வேண்டு மென்றும், இரண்டுக்கும் பொதுவான மத்திய (சமஷ்டி) அரசாங்கமொன்று கொழும்பில் அமைய வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அதற்காக வேண்டி ஒரு பொதுசன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய தவசியம் என்று இடத்திற்கிடம் உறுத்திக் கூறிவருகின்றார்கள்.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் வாய்மூடிச் சிந்தனையின்றி வாழ்தல் உசிதமாகாது. அவர்களது கொள்கைகளின் வெற்றியும் தோல்வி யும் பொதுமக்களாகிய எங்களுடைய கையிலேதான் தங்கியுள்ளது. ஆதலால், உங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துங்கள்.

அபிப்பிராய பேதம் ஏற்படுதல் எங்கும் எவர்க்கும் சகஜமாகையால் வாசகர்கள் அனைவரையும் தங்கள் அபிப்பிராயங்களை ''பாரதி''க்கு எழுதுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**வண்டறத்தீவில்**

*"கோமான் பராக்கிரமவாகு மன்னன்*
*குளக்கோட்டன் முதலோர் கட்டுக் குளங்கண்டு"*

என்ற வித்துவான் பிள்ளையவர்களின் வாக்குப்படி குளக்கோட்டு மன்னனால் கட்டப்பட்டதாக அனுமானிக்கப்படும் குளமொன்றைச் சர்க்கார் இப்பொழுது கட்ட முற்பட்டுள்ளார்கள். அழிந்து பாழாப் போன நிலையில் தென்படும் இக்குளத்தை 12 வருடங்கட்கு முன் இப்பகுதியில் உள்ள "சீயோத்து ராழு சுது வண்டா" என்பவன் கண்டு பட்டிருப்புப் பகுதியில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொன்னுச்சாமி வன்னிமை முதலியாருக்கு அறிவித்தான். முதலியாரும் போடியார்களின் வேண்டுகோளுக்கிணங்கி நேரில் சென்று பார்வையிட்டு அரசாட்சியாருக்கு அறியக்கொடுத்தார். அன்றிருந்து கால வரையறையில் மெல்ல மெல்ல நடந்து கொண்டிருந்த வேலை இப்பொழுது மும்முரமாக நடக்கத் தொடங்கியிருக்கிறது.

மட்டக்களப்பு கல்ஓயா (இக்னியாகெலை) வுக்கு இரண்டாவதாகப் பார்க்கக் கூடிய குளம் வண்டறத்தீவின் அருகாமையில் உள்ளது. வள கெலை என்னும் ஆற்றை மறித்துக் கட்டப்படுவதால் "வளகெலக் குளம்" என்றும் கூறுவார்கள். மட்டக்களப்பிலிருந்து 34 கட்டைக்கப்பாலுள்ளது. 5மைல் விஸ்தீரணமும், 2300அடி நீளமும் ஏறக்குறைய 60அடி அகலமும் கொண்ட கட்டையும் உடையது. போரதீவுப் பகுதி மக்களின் நல்ல திஷ்டத்திற்கு காரணமானது. தற்பொழுது இவ்வேலைகள் யாவும் C. விவேகானந்தன் S.D.O அவர்கள் அதிகாரத்தின் கீழ் நடைபெறுகிறன.

தீய நடவடிக்கைகட்கும், பேச்சுக்கும் இடமில்லாது, வேலைகள் யாவும் விரைவில் இனிது முடிந்து நாட்டுமக்களின் நல்லதிஷ்டத்திற்கு வழி திறக்கவேண்டுமென்று செயலாளரையும், தெய்வத்தையும் வேண்டிக் கொள்கின்றோம்.

**மானம் பறக்குதே**

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை உண்ட பாலனை அழைத்ததுமான அந்தக் கன்னித் தண்டமிழ் மொழி இருக்கிறதே அந்தச் செந்தமிழ் மொழியைக் கற்றுத் தேறிய மேதாவிகட்குக் கிடைக்கக் கூடிய ஒரே ஒரு உத்தியோகம் சட்டாம்பியார் வேலை. இல்லையென்றால் காலதேவதையால் என்றாவது ஓலை கிழிக்கப்பட்டுக் காலியாக வரும்

நொத்தாரிஸ் வேலை. அதுவுமில்லையென்றால் எங்காவது மனமிரங்கிய இலாகாக்களில் பியோன், காவற்காரன்.... அப்படி இப்படி ஏதும் அதிஷ்ட தேவதையின் கடாட்சத்தை பொறுத்துள்ள வேலைகள்.

இதுதான் இன்றைய தமிழாபிமானிகளின் கதி, ஐயோ! அந்த ஒரே ஒரு சட்டாம்பி வேலை என்கிறோமே அதுதான் இலகுவில் கிட்டிவிடுமா? பகீரதன் கொண்டு வந்த கங்கையைக் கொண்டு வந்து விடலாம். ஆனால் பாழாய்ப்போன அந்தச் சட்டம்பி பீடத்தில் ஏறுவதென்றால் அவனுடைய உடல், உளம் இரண்டின் சக்தி அத்தனையையும் செலவழித்தே ஆக வேண்டும்.

விழுந்தடித்து S.S.C. சித்தியடைய வேண்டும். ஆசிரிய பயிற்சிக் கல்லூரிப் போட்டிப் பரீட்சையில் கைவரிசை காட்டவேண்டும். எடை போட்டுப் பார்க்கும் எதிர்முகப் பரீட்சையில் பலரையும் தோற்கடிக்க வேண்டும். மூன்றோ, இரண்டோ ஒன்றரையோ, ஒன்றே காலோ ஆண்டு கள் அதிஷ்டத்தைப் பொறுத்துப் பயிற்சிக் கல்லூரியில் கழிக்க வேண்டும். இத்துடன் தமிழாபிமானியின் பாடசாலைப் படிப்பின் படலம் முடிவடை கின்றது. இனிமேல் வேலை தேடும் படலம் ஆரம்பமாகும். ஓடுவார், ஆடுவார், எழுதுவார், அழுவார் கிடையாது. அதிகாரிகள், மனேஜர்மார் எல்லாருடைய காரியாலயங்களையும் தரிசிப்பார். ஏமாற்றந்தான், காரியாலயங்களின் ஒவ்வொரு பொருளும் பார்த்து ஏளனம் செய்யும். என்ன செய்யலாம்? மேலதிகாரிகளின் விசித்திரமான முட்டாள் கேள்விகள் மூளை குழம்பிய இந்த நிலையில் உயிரை வாங்கிவிடும். இப்படியே ஆண்டுகளும் சில ஓடிவிடுகின்றன. பேர்வழிக்கு வேலை கேட்டு ஒரு கடிதம் போடவும் பைசாவுக்கு வழியில்லாத நிலைமை ஏற்பட்டுவிடும். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏமாந்து வாழ்க்கையே வேண்டாம் என்று வெறுத்துக் கொண்டிருக்கும் இத்தறுவாயில் ஒரு கட்டளை வரும். அதுவும் பதில் ஆசிரியராகக் கடமைபார்க்கும்படி. இந்தப் பாடசாலையில் மூன்றுமாதம், அந்தப் பாடசாலையில் ஆறுமாதம் இப்படி அப்படியாக ஒன்று இரண்டு வருடங்கள் ஓடிவிடும். காசி யாத்திரைக்கு, புறப்பட்டுக் கண்ட கண்ட கோயிலெல்லாம் கும்பிட்டுத் திரியும் யாத்திரிகளைப் போல இந்த அத்திவாரப் படலத்தில் அலைந்து அலைந்து அலுத்து உடல் நிலையும் குன்றிவிடுவார். விட்டால் வேறு கதி இல்லையே உழலவே வேண்டும். இத்தனைக்கும் அவரைக் கடன் தொல்லைகள் சூழ்ந்து கும்மாளம் போடத் தொடங்கிவிடும்.

இப்படி இருக்கும் வேளையில் ஏதோ மாதிரி ஒரு நியமனக் கட்டளை வந்து சேரும். இத்தோடு அவருக்கு ஆசிரியர் படலம் ஆரம்பமாகிறது.

ஆ! கடவுளே தமிழ் கற்றவரின் மானம் இப்படிக் காற்றில் பறப்பதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோமே. மந்திரியார் நுகவெலகூட இதை ஒத்துக்கொள்ளுகிறார். அட்டாளைச் சேனை கல்வைப்பு விழாவின் போது வேலையில்லா ஆசிரியர்களின் தொகை கூடிக்கொண்டு வருவதால், சில காலத்திற்கு ஆசிரிய கலாசாலைகளை மூடிவிடவும் வேண்டும். அக்காலத்தில் இந்தப் புதிய கட்டிடங்கள் எல்லாம், அரசினரின் பிற தேவைகட்கு உதவக் கூடும் என்று ஓர் அபூர்வமான புதிரைப் போட்டு தமிழ் கற்பவர்களைக் கலங்க வைத்துள்ளார்.

சுய பாஷை கற்பவர்களின் இந்த மானயீனமான கெதியை அரசினர் அறிந்தும் தீவிர நடவடிக்கைகள் எடுக்காதிருப்பது என்ன கருதியோ? எத்தனை விவேகமும், திறமையும் உள்ள தமிழ் கற்ற வாலிபர்கள் காலத்தை வீணாக ஓட்டிக் கவலைப்பட வேண்டியிருக்கிறது. காற்றிலே மானத்தை வீசவேண்டியிருக்கிறது.

சுதந்திரம் கிடைத்துவிட்டதாம். சுயபாஷைக்கெல்லாம் யோகம் பிறந்துவிட்டதாம். பத்து வருடத்திற்குள்ளாக எல்லா சர்க்கார் அலுவல்களும் சுய பாஷாமயமாகிவிடுமாம் என்றெல்லாம் ஏதோ ஆசை வார்த்தைகள் கூறினார்கள். ஆனால் தமிழ் கற்ற ஒரு குமாஸ்தாகூட இதுவரை எந்தக் காரியாலயத்திலும் நிரந்தரமாக இடம்பெற்றதை நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. அதற்குரிய எத்தனத்தைக்கூடக் காணவுமில்லை. இலவு காத்த கிளியின் நிலைமைதான் கடைசியில் கிட்டுமோ யார் அறிவார்?

உண்மையான சுதந்திர அரசியலென்றால் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் நேரடியான தொடர்பு இருந்தேயாக வேண்டும். அரசியல் ஒரு பாஷை நாடு மற்றோர் பாஷையில் நடமாடுவதனால் அரசியலுக்கும் நாட்டுக்கும் நேரடியான ஐக்கியம் தோன்றக் காரணமேது? தமிழ் கற்றவரின் மானம் என்று உயர்ந்ததோ அன்றுதான் தமிழ் மொழியோ - கலாசாரமோ உயர்ந்ததென்று மனம் ஆறிச் சந்தோஷப்படலாம்.

**விடுதலை**

பாரத நாட்டிற்கே விடுதலை கிடைத்தது. பாரத நாட்டின் ஒப்பற்ற தலைவர் கட்கும்கூட விடுதலை கிடைத்து விட்டது. ஆனால், பாரதியாரின் பாடல்

களுக்கு மாத்திரம் விடுதலை கிடைக்கமாட்டாதென்று பூட்டி வைத்துக் கொண்டிருந்தார், மெய்யப்பச் செட்டியாரவர்கள்.

சுதந்திரத் திமிருடன் நாட்டுக்கென்று ''பாரதி'' பாடி வைத்த பாடல் களை ஒருவரின் ஏகபோக உரிமையாகக் கொள்வதென்றால், எவராலும் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடிய காரியமா? முடியவே முடியாது.

செட்டியாரும் அவ்வளவு கல்நெஞ்சம் படைத்தவரல்ல. கனம் ஓமந்தூர் ரெட்டியார் (பிரதம மந்திரி- சென்னை மாகாணம்) அவர்களின் வேண்டுகோளுக்கிசைந்து பாரதி பாடலின் உரிமை அத்தனையையும் சர்க்காருக்கு ஈந்துவிட்டார்கள். அதாவது பொதுமக்களுடைய சொத்தாக்கி விட்டார்கள். பாரதியாரின் பாடலுக்கே விடுதலை கொடுத்து விட்டார். பாரதியாரின் ஆத்மா இச்செய்கையை அறிந்து அளவில்லா ஆனந்த மடையும் என்று கூறவும் வேண்டுமா?

**பத்திரிகை உலகில்**

''வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல்'' என்ற மணிமொழியின் சின்னமாக மிளிரும் ''விளம்பர கேசரி''யின் நான்காவது இதழ் சுதந்திர மலராக வரப் பெற்றோம். பல திறப்பட்ட விளம்பரங்களுடனும், அழகிய தோற்றத்துடனும், வெளியாகும் கேசரி, சிறப்பாக வியாபாரிகளிடமும் பொதுவாக மற்றையோரிடமும் இருத்தல் நன்மை பயப்பதாகும். புரட்சி கரமான கட்டுரை ஒன்று கேசரியின் வாசலாக இருந்து நேயர்களைத் திணற அடிக்கிறது. - ஆசிரியர்: S.S.நாதன், 54, கெசல் வீதி, கண்டி.

**நேயரிடமிருந்து**

**மதுவிலக்கு**

கனம் ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா,

மது விலக்கு சம்பந்தமாகப் ''பாரதி'' இதழில் எழுதியிருப்பதை மிக ஆவலுடன் வாசித்து மனம் மகிழ்ந்தேன். குருவிச்சை மாதிரி அங்கு மிங்கும் ஒட்டிக்கொண்டிருக்கும் குட்டித் தவறணைகளுக்குச் சாவுமணி அடிக்கும் நாள் மிகத் தூரத்திலிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அந்தத் தூரமும் உண்மையில் நீடிப்பதாக இருப்பின் அதை இந்திய அரசாங்கத்தாருக்கும், இடையிலுள்ள பேதா பேதத்தின் காரணத்தைக் கொண்டே மட்டிடலாம்.

இந்திய அரசியலில் இடம்பெற்றிருப்பவர்கள் பெரிய பிரமச்சாரி களும், ஒன்றிகளும், தொண்டர்களும் ஆவார்கள். அவர்கள் நல்ல காரியங்களைச் செய்வதற்காகப் பொது ஜனங்களிடமிருந்து ஏச்சும் வாங்குகிறார்கள். ஆனால் இலங்கை அரசியலில் அது மாறாக இருக்கிறது. நல்ல காரியங்களைச் செய்வதற்குப் பொதுஜனங்கள் அரசாங்கத்திடம் பிச்சை எடுக்க வேண்டியிருக்கிறது. சர்க்கார் மழுப்பு நியாயங்களைச் சொல்லிப் பொதுமக்களை ஏய்க்கப் பார்க்கிறார்கள். ஏனெனில் மதுவிலக்கு சட்டமாக ஏற்பட்டுவிட்டால் - பல ஆளும் வர்க்கத்தார் பாடே பெருந் திண்டாட்டமாகப் போய்விடுமல்லவா? கொண்டாட்ட காலங்களில் ''ஸ்பெஷல்'' குடிவகைகளைக் குடித்துக் கும்மாளமடிக்க முடியாதல்லவா?

அரசாங்கம் செய்யும் வேலையை, பொதுசனம் செய்ய முடியும். எழுத்தாளரும், புரட்சி வீரரும் கூடி நின்று கூக்குரலிட்டாலென்ன, எழுதிக் குவித்தாலென்ன? ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்காவிடில் முடியுமா?

சுதந்திரத்திற்காகப் படாத பாடுபட்டுச் சிறையிலேயிருந்து, ஆண் டாண்டு காலமாகச் சிந்தித்து சமூகத்தின் சீர்கேட்டுக்குக் காரணமான அழுக்குப் பழங்களினால் அருவருப்புப்பட்டு அவஸ்தையுற்றுப் பின்னர் அரசியலைக் கைப்பற்றிய ஒரு தேசீயத் தொண்டன் செய்யும் வேலைக்கும் எப்படியிருந்தாலும் நானோர் மந்திரியாகிவிட்டால் மாத்திரம் போதும் என்று கருதும் ஒரு சுயநலத் துரோகி செய்யும் வேலைக்கும் வித்தியாசம் இருக்கத்தானே வேண்டும்.

நல்ல நல்ல சட்டங்கள் நம் நாட்டில் அமுலுக்கு வரப் பயப்படுகின்றன. ஆதரவைப் பெறத்தானும் பயப்படுகின்றன. பரவாயில்லை. என்றோ விமோசனம் ஏற்பட்டேயாகும்.

உ.கோவிந்தசாமி
பாலமுனை, 20.03.49

**ஊருக்கு ஒரு துறை**

ஐயா,

முதலாவது மகாயுத்தம் நடந்த காலத்தில் ''எம்டன்'' என்ற கப்பலின் பெயரைக் கேட்டதும், அகில உலகமுமே ஒரு தரம் நடு நடுங்குமாம். அது போலவேதான் மண்டூர்-குறுமன்வெளிக்கிடையே உள்ள மண்டூர்த் துறையின் பெயரைக் கேட்ட உடனே பிரயாணிகள் அத்தனை பேருக்கும் ஒரு உடல் கலக்கம் ஏற்பட்டுவிடுகிறது.

அகன்று விரிந்து கிடக்கும் அந்த ஆழக்கடலின் தோற்றம் மனக்கண் முன் வரும்போதெல்லாம் மூச்சுத் திணறிவிடப் பார்க்கிறது. அத்தோடு வாயு பகவானும் தமது வழமையான சேட்டையைக் காட்டத் தொடங்கி விட்டாரென்றால் கேட்பானேன் கொந்தளிக்கும் கடலேதான்.

அவசரப் பிரயாணம் செய்வதற்காகச் சாப்பிட்ட பாதி, எடுத்த பாதி, எடாத பாதியாகக் கீழ் மூச்சு, மேல் மூச்சு வாங்கத் தொங்கோட்டத்தில் ஓடிவந்து துறையைப் பார்த்தால் தோணிக்குப் பதிலாக அங்கே ஒரு சனக் கூட்டத்தைத்தான் காணமுடியும். அந்தப் பெரிய சமுத்திரத்தைக் கடப்பதற்கென்று D.R.C. பகுதியாரால் அருளப்பட்ட ஒரே ஒரு தோணியும் மற்றக் கரையில் ஓய்வு எடுத்துக்கொண்டு உல்லாசமாகக் கரை தட்டிக் கிடக்கும். இங்கே பசியினால் வயிறொட்டி, மணிக்கணக்காகக் காத்துக் காத்து ஏமாந்து முகங் கருகி, அணிலை ஏறவிட்ட பூனைபோலக் குந்திக் கொண்டிருப்பர் பிரயாணிகள், இந்தத் துறையினால், செய்யும் பிரயாணம் இன்றோடு போதும் என்ற முடிவை பிரதிபலிக்கும் அவர்கள் முகங்கள்.

பிரயாணிகளின் பொழுதுபோக்குக்காகவோ, என்னவோ தெரியாது துறையின் இரு கரையிலும் இரு விளம்பரப் பலகைகள் நடப்பட்டுள்ளன. பேருக்கு மேலதிகமாக வள்ளத்தில் ஏறிப்போய் ஏதும் இடையூறுகள் வந்தால் அதற்கு, D.R.C. பகுதி ஜவாப்தாரியல்ல என்பது அவ் விளம்பரம்.

பிரயாணிகளின் உயிரில் உள்ள சிரத்தையை விளம்பரம் மூலம் அம்பலப்படுத்திய காருண்ய சர்க்கார், இன்று கொஞ்சம் மனம் வைத்து இரண்டு தோணிகளாவது போட்டிருந்தால் எவ்வளவு ஆறுதல் ஏற்பட்டிருக்கும்.

பாம்பு கடித்த ஒருவனையோ அல்லது கடுமையான வருத்தக்காரன் ஒருவனையோ மருந்து செய்வதற்கு அக்கரைக்குக் கொண்டு போகவென்று வந்து பார்க்கும் போது தோணியும் இல்லாமற் போனால் அவர்கள் கெதியென்ன? மரணம்தான். பிரயாண வசதிக் குறைவினால் இப்படி அகால மரணமடைந்த ஜீவன்களின் எண்ணிக்கைதான் எத்தனை?

குறுமண்வெளி, மகிழூர், எருவில் போன்ற கிராமத்தவர்களின் பொக்கிஷங்களான நெல் வயல்களெல்லாம் மண்டூரைச் சேர்ந்த பகுதி களிலேயே இருக்கின்றன. அவ்வயல்களில் வேலை செய்வதற்காக நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் நாளுக்கு நாள் இத்துறையைக் கடந்து போக வேண்டியிருக்கிறது. அவர்கள் இந்த ஒரு வள்ளத்தில் ஏறுவதற்காக அதிகாலையில் நடத்தும் கோர யுத்தம் பார்ப்பதற்கே பெரிய பயங்கரமாக

இருக்கும். ''ஈஸ்ரன் பஸ் கொம்பனி'' பஸ்களிலும் இடம் எடுத்து விடலாம். இந்த தோணியில் இடங்கிடைப்பதென்றால் நமது அதிஷ்டந்தான்.

மண்டூரின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாகத் தற்கால அரசியலின் பிம்பமாகத் திகழும் இந்தத்துறையை DRC பகுதியார் கண் கொண்டு கவனிக்கமாட்டார்களா? மண்டூரிலும் மக்கள் சீவிக்கின்றார்கள் என்பதை நிரூபிக்க மாட்டார்களா?

''பிரயாணி'', 20.03.49

## இதழ் 5

### போட்டியும் பரிசும்

நமது நாட்டின் இளம் எழுத்தாளர்களைத் தட்டி எழுப்பி, அவர்களது ஊக்கத்திற்கு உற்சாகமும், உறுதியும் ஊட்டும் நோக்கமாகவேதான், ''பாரதி'' வெளியீட்டின் முதலாவது போட்டியையே இலவசமாக ஆக்கிவைத்தோம். பல அன்பர்களும் பல தினிசான சிறுகதைகளை விருப்புடன் அனுப்பி வைத்தார்கள்.

அதில் ''வெண்ணிலா'' என்ற புனைபெயர் கொண்ட ஸ்ரீமான் இரகுநாதன் அவர்களுடைய 'நடைப்பிணம்' என்ற கதையே பரிசுக்குரிய தாகத் தெரியப்பட்டது. மேலும் பிரசுரத்திற்கேற்றதாக மூன்று கதைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. பரிசு பெற்ற நண்பரையும், ஏனைய கதையனுப்பிய ஆசிரியர்களையும் வாயார வாழ்த்தினோம். மேலும் மேலும் அழகிய கற்பனைக் கதைகளைப் புனைந்து, பெரிய எழுத்தாளராக அவர்கள் மிளிர வேண்டுமென்பதுதான் நமது மனப்பூர்வமான அவா. தாய் நாட்டையே என்றும் நம்பி அங்கிருந்துவரும் பத்திரிகைகளையே படித்து இன்புறுவதோடமையாது, நாமும் தமிழரேதான் என்ற உணர்வுடன் கதை, கட்டுரை, கவிகள் எழுதி நம் நாட்டுப் பத்திரிகைகளில் விளக்க வைத்து அவற்றை இரு கரங்களிலும் ஏந்தி வாசித்து மனம் நிறைய வேண்டாமா?

பூட்டப்பட்டுக் கிடக்கும் இதயங்களின் ஒப்பற்ற கருத்துக்கள் யாவும் ''பாரதி'' மூலம் வெளியாகி அட்டதிக்கும் ஒலித்து அஞ்ஞான இருளை அடியோடு அகற்றி, அருமையான எங்கள் தாய்மொழியினதும், தொழிலாளி மக்களதும் மேலான நிலையைக் கண்டு இறுமாப்புக் கொள்ள வேண்டாமா?

**தபால்: மட்டுநகரில் கருஞ்சட்டை வீரர்கள்**

சாட்டை

கடந்த 27.03.49 ஞாயிற்றுக் கிழமையன்று மட்டுநகர் முற்ற வீதியில் பகுத்தறிவுக் கழகத்தினரால் ஒலிபெருக்கி சகிதமாக நடத்தப்பட்ட ஒரு பகிரங்கக் கூட்டம் இங்கு ஒரு பலத்த பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது. மேற்படி கூட்டத்திற்கு ஏராளமான சனங்கள் சமுகமாயிருந்தனர். பகுத்தறிவுக் கழகத்தாரால்

*''எப்பொருள் யார்யார்வாய் கேட்பினு மப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு''*

என்ற தெய்வப் புலவரின் திருக்குறள் ஒன்று மின்சார பல்புகளால் பொறிக் கப்பட்டுச் செகசோதி மயமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இதுவரை நமது அரசியல் அடிமைத் தனத்தின் சின்னமாகிய ஜூனியன் ஜேக்கைத் தாங்கித் தாங்கி அலுத்து போயிருந்த முற்ற வீதி, திருவள்ளுவரின் பொய்யா மொழி ஒன்றினைத் தூக்கிய பந்தலைத் தாங்கியதால் விஷேட பெருமையுடன் விளங்கிற்று, பிற்பகல் சுமார் 5.30 மணியளவில் கூட்டமும் ஆரம்பமாயிற்று. கூட்டத்துக்குத் தலைமை வகித்த தினகரன் உதவி ஆசிரியர் திரு.எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் பேச்சாளரை வரவேற்றுப் பேசுகையில் இன்று நம் நாட்டில் மதத்தின் பெயரால் நம்மைப் பேயாட்ட மாட்டிவைக்கும் மூடப் பழக்கவழக்கங்களையும், கொள்கைகளையும் இனியும் ஏற்றுக் கொண்டிருக்க முடியாது. கொக்கட்டி மரம், வேம்பு மரம், கல், பாம்பு இவற்றை வணங்கும் அறிவற்ற மூட வைதீகப் பழக்க வழக்கங்களை விரைவில் நாடு கடத்த வேண்டும். அதற்குமேலே பேசவிருக்கும் அறிஞர்களின் அறிவுரைகள் நமக்கு உறுதுணையாகும். அவர்கள் பேசும் போது ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் கேட்டுத் தெளிந்து கொள்ளலாம் என்பதாகக் குறிப்பிட்டார். பின்னர் முறையே அருப்புக் கோட்டை திராவிடக் கழகத் துணைத் தலைவர் திரு.எம்.எஸ். ராமசாமி அவர்களும், தென்னிந்திய பிரபல மேடைப் பிரசங்கியும்,

எழுத்தாளரும், தோழன் ஆசிரியருமான திரு ''டோப்பிட்டோ'' ஏ.பி. ஜனார்த்தனம் அவர்களும் பேசினார்கள், அவர்கள் பேசியது இதுதான்:

''ஆதித் திராவிடர் இந்தியாவில் விந்திய மலைக்கும் கன்னியா குமரிக்கும் இடையேயுள்ள பரந்த சமவெளிகளில் வசித்தனர். வடக்கே யுள்ள கணவாய் மூலம் ஆரியர் வந்து திராவிடரிடையே கலந்தனர். எவ்வளவோ வலுவுற்றிருந்த திராவிட சமூகத்தை இலகுவில் அடிமைப் படுத்தித் தங்களுக்குக் குறைந்தவர்களாக்கி அடக்கியாளத் தலைப்பட்டனர். இன்று திராவிட சாகியத்தையே மண்ணோடு புழுதியாக மட்டந்தட்டி வைத்திருக்கும் சாதிப்பிரிவினையை ஆதியில் அவர்கள் உண்டாக்கினர். தங்கள் பெருமைக்கும், வெற்றிக்கும், வருவாய்க்கும் அத்திவாரமாகச் சாதிப்பிரிவினையை நிலைநாட்டினர். திராவிட மண்ணில், தேவ பாஷை என்று கூறி ஆரியத்தில் தங்களை உயர்த்தியும், திராவிடரைத் தாழ்த்தியும், தங்களுக்குச் சாதகமான கொள்கைகளையெல்லாம் திணித்துப் புராணங் களையும், இதிகாசங்களையும் ஆக்கிவைத்தனர். தாங்கள் பிரமாவின் முகத்திலிருந்து பிறந்தவர்கள். ஆதலால் மற்றவர்கள் குறைந்தவர்கள், தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கித்தள்ளினர். இதனால் இந்தியாவில் கிறிஸ்து, முகம்மது மதங்கள் தலைப்பட்டன. ஆரியர்களின் கொடுமைக் குட்பட விரும்பாதவர்கள் இம்மதங்களைத் தழுவினர். கணபதிப்பிள்ளை களெல்லாம் காதர் முகையதீன்களாகவும், இராமசாமிகளெல்லாம் இஸ்மாயில்களாகவும் மாறினர். இந்துமத ஊழல்களைச் சகிக்க மாட்டாமல் தான் புத்தர் புத்த மதத்தை ஆக்கிவைத்தார். கடைசியில் நான் முகம்மதியன், நான் கிறிஸ்துவன், நான் புத்தன், நான் இந்து என்று சண்டைகளும், சச்சரவுகளும் வெகுகாலந் தொடக்கம் நடந்து வருகின்றன. இந்த நிலைமை மாற வேண்டும். திராவிடன் எம்மதத்தவனாக இருந்தாலும், எத்தொழில் புரிபவனாக இருந்தாலும் திராவிடனேதான் என்பதை மறக்கலாகாது.

கல்விக் கடவுள் சரஸ்வதி என்று சொல்லி எத்தனையோ நூற்றாண்டு களாக வணங்கினோம். இன்று நம்மவரில் கையெழுத்தைக் கூடச் சரிவரப் போடத்தெரியாதவர்கள் தொகை கணக்கிலடங்காது. அந்தக் கல்விக் கடவுள் சரஸ்வதி அம்மையார் எங்கே போய்விட்டாள் இங்கிலாந்துக்கா? செல்வத்திற்கு கடவுள் இலட்சுமி என்று சொல்லி விழுந்து விழுந்து கும்பிட்டோம். இன்று நம் நாட்டில் நாள் முழுக்க நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தும் ஒரு வேளை உணவுக்கும் போதாமல் திண்டாடு பவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதானே போகிறது.

எங்கே போய்விட்டாள் அந்த அம்மாள்? அமெரிக்காவுக்கா? அந்த டாலர் நாட்டுக்கா? அவ்வித கஷ்டத்திலும், பிள்ளையாருக்கு சர்க்கரைப் பொங்கல் செய்து படைக்கிறான், அவன் குறை தீர்ந்தபாடில்லை. அவற்றை யெல்லாம் நைசாகத் தின்று வயிறு கொழுக்கிறான், சோம்பேறிப் பார்ப்பான்.

இன்று காவியங்களில் நம் மானத்தை வாங்கி நிற்பது ராமாயணம், கம்பன் சிறந்த கவிதான். ஆனால் ஆரியரின் சூழ்ச்சிகளுக்கடிபணிந்து அவர்களை உயர்த்தியும், திராவிடரைத் தாழ்த்தியும் ராமாயணத்தைத் தமிழில் பாடிவைத்தான். இன்று குட்டு வெளியாயிற்று, ராமர் அவதார புருஷர், வீரர், அரசர் நீதி தவறாதவர். என்றாலும் வாலியைப் பேடித் தனமாக மறைந்திருந்து கொன்றார். தன் சொந்த மனைவி சீதையைச் சந்தேகித்து அக்கினியிற் புடமிட்டெடுத்த பின்னரும் ஒரு சலவைத் தொழிலாளி ஏதோ சொன்னான் என்பதற்காகப் பிள்ளை வயிற்றுடன் காட்டுக்குத் துரத்திவிட்டார். இதுதானா ராஜதர்மம். இது சாதாரண மனித தர்மம்கூட இல்லையே. அனுமான் இருக்கிறானே அவன் முதல்தர அடிமைத்தனத்தின் சின்னம். விபுஷணன் இருக்கிறானே அவன் சுத்த சகோதரத் துரோகி. இவர்களை எல்லாம் மேலுக்கு வைக்கிறது ராமாயணம். இப்படி இன்னும் எவ்வளவோ எடுத்துக்காட்டிக்கொண்டே போகலாம்.

மக்களை மாக்களாக்கும் எவ்வளவோ மடக் கொள்கைகளையும் கற்பிக்கிறது அந்தக் காவியம். சிறிதும் குற்றமற்ற திராவிடனை மட்டந்தட்டி வைக்கிறது அந்தக் காவியம். முன்னுக்குப் பின் முரணாக உள்ளது அந்தக் காவியம். ஒரு சிறந்த ஓவியன் இருக்கிறான், அவன் உங்கள் மனையாட்டி யின் உருவத்தை அழகாக நிர்வாணமாக அலங்கரித்திருக்கிறான். ஓவியக் கலையின் சாற்றையே அள்ளிச் சொரிந்திருக்கிறான். அப்போது அந்த ஓவியத்தை விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போய்ச் சுவற்றில் அழகாக மாட்டிப் பெருமைப்படமாட்டீர்கள். அந்த ஓவியத்தை மட்டுமல்ல, அந்த ஓவியனையும்கூட முடித்துத் தீர்த்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பீர்கள். அறுசுவை உண்டிதானே என்று அருகில் மலத்தையும் வைத்துச் சாப்பிடமாட்டீர்கள். ஆகவே கம்பன் காவியம் உங்களுக்கும் எனக்கும் வேண்டாம்.

காவியம் இல்லையே என்று கைவிரிக்கும் பண்டிதர்கள் ஏன் வேறு காவியங்களை திறம்பட போற்ற முடியாது? நாள் முழுவதும் உழைத்து வேளைக்குணவின்றி வாடும் பாட்டாளி வர்க்கத்தைப் பற்றிப் பாடுங்கள். மழை, வெயிலென்று பாராமல் மலைநாட்டில் இயந்திரம் போல் உழைத்து

மானமாக வாழ வழியின்றித் திண்டாடும் தேயிலைத் தோட்டக் கூலியாளைப் பற்றிப் பாடுங்கள். ரபர் தோட்டக் கூலியாளைப் பற்றிப் பாடுங்கள். முடியாதென்றால் எங்கே உங்கள் கவித்துவம்.

என்று இவ்வாறு பேசிக்கொண்டு போகையில் குழப்பம் உண்டாயிற்று. கோயில்களின் பெயரால் வயிறு வளர்ப்பவர்கள் வயிறு பற்றி எரிந்தது. சீட்டுகள் பறந்தன மேடைக்கு. பேசிக்கொண்டிருந்த ஜனார்த்தனம் ஒரு சீட்டை வாங்கி வாசித்தார்.

''எல்லாக் கடவுளையும் கண்டிக்கிறீர்கள். அப்போ எந்தக் கடவுளை நாங்கள் வணங்குவது'' இதுதான் கேள்வி. ''நல்ல கேள்விதான். இதே கட்டத்திற்குத்தான் வந்திருக்கிறேன். நீங்கள் வணங்கவேண்டியது ஒரே கடவுளைத்தான். கடைப்பிடிக்க வேண்டியது திருக்குறள் மதம் ஒன்றைத் தான். அதனை மேற்கொண்டு விளக்குகிறேன்'' என்று மீண்டும் ஆரம்பிக் கையில் காலிப்பயல்கள் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அத்துடன் கூட்டம் அடக்கப்பட்டு கலைவுற்றது.

போலீசார் நிலையத்துக்கு வந்தனர். குழப்பக்காரர் இரண்டொருவராக நழுவினர். பகுத்தறிவு கழகத்தினர் சிறிதளவாவது தங்கள் கொள்கை யிலிருந்து வழுவியிருந்தால் அன்று மட்டக்களப்பு முற்ற வீதி சிகப்பு நிறமாக மாறியிருக்கும். ஆனால் அவர்கள் அவ்விதம் தவறிழைக்க வில்லை. மிகவும் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டார்கள். தன் மானங்காக்கப் பிறந்தவர்களல்லவா அவர்கள். மறுமலர்ச்சிப் பாதையை நோக்கிக் கொண்டேகும் வீரத்திராவிட மரபினர் அல்லவா அவர்கள். பேச்சாளர் இருவரும் தங்கள் விடுதியாகிய கிங்ஸ் ஹோட்டலுக்கு எவ்வித முகபேதமுமின்றிச் சேமமாகப் போய்ச் சேர்ந்தனர்.

மணி இரா ஒன்பது இருக்கும். நானும் எனது நண்பர்கள் மூவரும் பகுத்தறிவு கழகத்தினரின் தற்காலிக ஆய்வுக்கூடமாகிய சித்திரா ''ஸ்டுடி யோ''வை நோக்கி நடந்தோம். கதவு பூட்டப்பட்டிருந்தது. மெதுவாகத் தட்டினோம். ''யாரது'' என்றது ஒரு குரல். ''நாங்கள்தான் சொந்தக்காரர்'' என்றேன் நான். கதவு திறக்கப்பட்டது. ''வாருங்கள் வாருங்கள் உண்மையைக் கூற அடிக்கும், உதைக்கும், பயமுறுத்தலுக்கும் பின்னிற்காத நண்பர்கள்'' என்று கூறி எங்களை வரவேற்றார் ''லங்கா முரசு'' ஆசிரியர் ''கலாநிதி'' அவர்கள். நாங்கள் அறிந்திருந்த சிறு கூட்டத்துடனமர்ந்தோம். அப்போது பேசிக்கொண்டிருந்தவர் ''நாம் வெகு புத்தியாகவும், நிதான மாகவும் நடந்து கொண்டோம். இனியும் நம் கொள்கைகளுக்கு விட்டுக்

கொடுக்காது போராடி வெற்றி பெற வேண்டும். அதற்கு எல்லாரும் ஒற்றுமையுடனும், நிரம்பிய கட்டுப்பாட்டுடனும் இருக்கவேண்டும்'' என்று கூறி பேச்சை முடித்தார். கூட்டம் கலைந்தது, நாங்களும் வெளியேறி னோம்.

அடுத்த நாட்காலை பேச்சாளர்களான கருஞ் சட்டை வீரர்கள் இருவரும் திருகோணமலை பஸ்ஸில் புறப்பட்டார்களாம். பகுத்தறிவுக் கழகத்தைச் சேர்ந்த நண்பரொருவர் அவர்களிடம் ''ஐயா எங்கள் அழைப்புக் கிணங்கி வந்தும் உங்கள் பேச்சு இடையில் கலைக்கப்பட்டு விட்டது. இதையிட்டு ஏதாவது குறைகளிருந்தால் மன்னித்துக்கொள்ள வேண்டுகிறோம்'' என்றாராம். அதற்கு அவர்கள் தம்பி இதெல்லாம் மின்மினிச் சண்டையப்பா எங்களுக்கு. இதைப்பற்றி நாங்கள் எள்ளளவும் குறை எண்ணவில்லை. எங்கள் கழகமே இதையிட்டுக் குறைவாக எண்ணாது என்று கூறிப் பிரிந்தார்களாம்.

எப்படிச் சேதி, திராவிடன் வாழும் நாட்டில் திராவிடன் பேச்சை அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாதவாறு அஞ்ஞானத்திரை மூடி விட்டது. வருணாச்சிரம தர்மம் சிறிதும் பிறழக்கூடாது என்று வாதிப் பவர்கள் தொகை இங்கு அதிகம். ஆனால் அவற்றிலுள்ள ஊழல்களை ஆராய்ந்தறியக்கூடாமல் அவர்கள் அகக்கண்கள் அவிந்து போய்விட்டன. இது யார் குறை, இப்படியானவர்கள் கண்களையெல்லாம் திறந்து அவர்கள் அகவிருளை அகற்றி அறிவொளி பரப்ப பகுத்தறிவுக் கழகத்தினர் மேலும் தொண்டாற்றுவார்கள். தங்கள் அரிய சேவையின் மூலம் புராணச் சண்டியர்களதும், வெள்ளை உடைக்குள் மறைந்து திரிந்து மதத்தின் பெயரைக் கூறி மக்களை ஏமாற்றிச் சுரண்டிப் பிழைக்கும் போலி வேஷதாரிகளதும் ஊழல்களை அம்பலப்படுத்தி, வர்ணாச்சிரம தர்மத்தைத் தகர்த்தெறிந்து, சாதிப்பிரிவினையைத் துரத்தி இந்து சமுத்திரத்துள் மூழ்கடித்து வெற்றி காணுவார்கள். ஆயிரம் கோட்சேக்களும், பதினாயிரம் யூதாஸ்களும் நேராகவோ அன்றேல் மறைமுகமாகவோ எதிர்ப்பினும் சிறிதும் அஞ்சாது உண்மையை வெளியிடுவார்கள். இதற்கு மட்டக்களப்பு எட்டுத்திக்கிலுமுள்ள வாலிபர் சமூகம், அறிவாளர் சமூகம், படியாதவர்கள் சமூகம் எங்குமிருந்து போதிய உதவி கிடைக்கும். நம்மைத் தாழ்த்தும், பேடித்தனத்தை வளர்க்கும் மூடக்கொள்கைகளைப் பிரசித்தப்படுத்தும் புராணங்கள், இதிகாசங்கள் எல்லாம் மலை மலையாகக் குவிக்கப்பட்டு

அக்கினிக்கிரையாக்கப்படும். அதன் பின்னர் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற ஜீவ தத்துவத்தின் அடிப்படையில் நம் நாடு தழைத் தோங்கும் என்பது எனது கனவு. இக்கனவு நனவாகுங்காலம் அதிக தூரத்திலில்லை.

**வெள்ளி அரிவாள்**

அரிவாள் பொறித்த கொடியைக் கண்டாலே அடங்காச் சினத்துடன் சீறிப்பாயும் மேதாவிகள் அந்த அரிவாள் சின்னத்தை வெள்ளியினாலே செய்து, பஞ்சினை ஒத்த தங்கள் கையிலே ஏந்தி, பாட்டாளி மக்கள் செய்து வைத்த நெற்பயிரின் கதிர்களை மெல்ல மெல்ல வெட்டி அழகு பார்த்தார்களாம் என்ற அளவில் நமக்கு எவ்வளவு குதூகலம் உண்டாகச் செய்கிறது.

அந்த ஒரு நிமிஷ வெள்ளி அரிவாள் வேலையில் ஏற்பட்ட சிரமத் தைப் போக்க எத்தனை உற்சாகப் பானங்களை அருந்தியாக வேண்டும் என்பதை அந்த மேதாவி அன்று கண்டிருக்கமாட்டாரா?

அறுவடை காலம் வரைக்கும் அந்த வேளாண்மையை ஆக்கி வைத்த ஏழைத் தொழிலாளியின் நிலையான கஷ்டங்களைச் சிந்தித்திருக்க மாட்டாரா?

முதலாளியாரின் மன ஆசையைப் பூர்த்தி செய்ய, அவரின் ஆசை வார்த்தைகளிற் கட்டுண்டு, அடிபணிந்து நடக்கும் ஆயிரக்கணக்கான, தொழிலாளர்களின் எளிய வாழ்வு மறைவதற்கு எப்படி அரசியலை மாற்றியமைக்க வேண்டுமென்று எண்ணி இருக்கமாட்டாரா?

உச்சியைப் பிளக்கும் மத்தியான வேளையில், உருகிப்பாயும் வெயர்வை நீரைப் பொருட்படுத்தாது, உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்து கொண்டிருக்கும் வாடகைத் தொழிலாளி வயிறு வதங்க, குடை நிழலிலிருந்து, குஞ்சரத் தொந்தி வளர்த்து எழுந்து நடக்கவும் சக்தியற்றி ருக்கும் முதலாளியாரின் இரும்புப் பெட்டி நிறைவதை ஞாபகப்படுத்தி இருக்கமாட்டாரா?

பாவம் உணவுற்பத்தியைப் பெருக்கப் பாடுபடுபவர்களாம் முதலாளி கள், உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்பவர்களாம் முதலாளிகள். அரசியல் கட்டிடத்தின் ஒப்பற்ற தூண்களாம் முதலாளிகள்.

காலத்தின் போக்கு மனிதருக்கு விசித்திரமான பாடங்களைக் கற்பித்துக்கொண்டுதானிருக்கிறது. தொழிலாளியின் சொகுசு என்பதை மக்கள் உணர்ந்துகொண்டுதானிருக்கின்றனர்.

வாழ்க வெள்ளி அரிவாள்!

**எங்கே அரசியல்**

மட்டக்களப்பு மக்களைப் பொறுத்த அளவில் ஒரு நிலையான அரசியற் கட்சி கிடையாது. டாக்டர் N.M. பெரேராவின் வருகையைக் கண்டு தோப்புக் கரணம் போட்டவர்கள் மந்திரி பண்டாரநாயக்காவின் வருகையைக் கண்டு குட்டிக்கரணம் போடுகிறார்கள். திரு. பீற்றர் கெனமென் வருகையைக் கண்டு பிரதட்சணம் போடத்தொடங்கினார்கள். மந்திரி பொன்னம்பலத்தின் பிரசங்கத்தைக் கேட்டதும் தீப்பாயவே தொடங்கி விடுகிறார்கள். இது என்ன அழகு? ஸ்திரமற்ற இந்தப் போக்கினால் நாடு கடைத்தேற முடியுமா? அல்லது எந்தக் கட்சியிடமிருந்தும் விசுவாசத்தைப் பெற முடியுமா?

பிரதிநிதிகள் தெரிவு ஒன்று வந்துவிட்டதென்றால் ஏழைகளின் நண்பர்கள் வருவார்கள். எங்கள் தோழர்கள் வருவார்கள். தொழிலாளிகள் தொண்டர் வருவார்கள். அட கடவுளே! இன்றும் எத்தனை ஆயிரம் தினிசான பேர்வழிகளைக் காணலாம். சுலோகங்களின் உட்பொருள்களைப் பற்றிச் சற்றாவது சிந்தித்துவிட்டுப் போடுகிறார்களா? கிடைக்கவே கிடையாது. எல்லாம் எழுத்தளவிலேதான். ஆனால் ஒன்று எந்தவிதமான அரசியற் கட்சியையும் குறிப்பிட்டறியார்கள். அதற்குரிய முதுகெலும்பும் அவர்களிடம் கிடைக்கவே கிடையாது. அதற்கேற்றாற்போல் உதிரிப் பனங்காய் கட்சியொன்று இருக்கிறதே அதிலேதான் எல்லாரும் நிற்பார்கள். வெற்றி கிட்டிவிட்டதென்றால் எந்தக் கட்சியாரின் அரவணைப்பு சுகமாக இருக்கிறதென்று தேடித் திரிவார்கள். ஐக்கிய தேசீயக் கட்சியின் அரவணைப்பில் சுகம் கண்ட நமது பெரும்பாலான பிரதிநிதிகள் ஏற்கனவே அக்கட்சியைப் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தி அதில் சேர்ந்து கொண்டால் என்ன? ஆதரவு கிடையாதென்ற அபிப்பிராயமோ?

எதிராக வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் இந்த உதிரி நாடகங்கள் ஆடாது. நியாயமான கட்சிகளில் நின்று போட்டியிட்டு மட்டக்களப்பில் அரசியல் கொள்கையை அம்பலப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அவமானப் பேச்சு**

மும்முரமாக மதுவிலக்குப் பிரசாரம் நடந்து கொண்டும், மதுக்கடைகளை மூடிக்கொண்டுமிருக்கும் இத்தறுவாயில் நமது பிரதிநிதிகளிற் சிலர் தங்கள் வாய்வீச்சுக்களை அநாவசியமாக அள்ளிவீசி அவமானத்தை சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

கள்ளுச் சாராயத் தவறணைகளை மூடிவிட்டால் அதாவது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யச் சர்க்கார் முன்வரவில்லையென்றால் கள்ளச் சாராயம் வடிப்பவர்கள் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யத் தயாராய் இருக்கின்றார்கள். கள்ளச்சாராயம் வடிப்பவருக்கு வருமானம் கிடைப்பதை விட சர்க்காருக்கு வருமானம் கிடைப்பது நல்லதல்லவா என்று கேட்ட முதலியார் எம்.எஸ். காரியப்பர் கூறியிருப்பது எவ்வளவு ஆழமற்ற பேச்சென்பது யாருக்குத்தான் புலப்படாமற் போகிறது.

தவறணைகளை மூடிவிடுவது நியாயமானதும், அவசியமானதும் என்று உணர்ந்தவராக முதலியாரவர்களிருந்தால் பின்னர் ஏற்படுவதாகக் கற்பனை செய்யப்படும் கள்ளத் தவறணைகளைப் பற்றிக் கவலைகொள்ள வேண்டியதேன். அரசாட்சியாரின் பெலவீனங்களை மக்களுக்கு அறிவுறுத் துவதேன். மக்களைக் கள்ளச்சாராயம் வடிக்கத் தூண்டிவிடுவதேன், கள்ளச்சாராயம் இறக்குபவனுக்குப் பணம் போகப்போகிறதே என்று கவலைப்படுகிறாரேயொழிய ஒரு தீமையான காரியம் பகிரங்கமாக ஒதுக்கப்பட்டுவிடப் போகிறதே என்று கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்கி றாரில்லை. பணத்தைக் கொடுத்துப் பரத்தையிடம் சுகமனுபவித்துவரும் மகனைத் தாயானவள் தடுத்து விடுவதை விடுத்து, பணத்திற்காசைப் பட்டுத் தன்னிடமே அச்சுகத்தைக் காட்ட விரும்புவது போலல்லவா இருக்கிறது உதவி மந்திரியாரின் கருத்து.

கள்ளர்கள் கன்னமிட்டு வீடுகளில் திருடுவதனால், அவர்கட்குச் சேரும் பணத்தைக்கண்டு ஆசைகொண்ட நமது இலங்கை சர்க்கார் கள்ளத் தொழிலால் பணம் சம்பாதிப்பதற்கும் பின்வாங்கமாட்டார் போலல்லவா இருக்கிறது முதலியாரின் வியாக்கியானம்.

அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்ய வகையறியாது ஏழை மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கும் போது, அனாவசியமான இந்த மதுக்கடைகளை வைத்துக்கொண்டு அவர்களின் சொற்ப முதலையும் பறிமுதல் செய்ய வசதியளித்திருப்பதைத் தீர்க்கமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

குடியில் அபார மோகங்கொண்ட சில பேர்வழிகள் கள்ளத் தவறணை களைத் தேடிப்போய் குடித்துவிட்டாலும் மதுவிலக்கினால், புதிதாக உண்டாகிக் கொண்டிருக்கும் ஆயிரம் ஆயிரமான இளங்குடிகார வாலிபர் களைத் தடைசெய்துவிட முடியுமல்லவா? வேண்டாம். உதவி மந்திரியார் கருத்து வேண்டவே வேண்டாம். மதுக்கடைகளை அகற்றியே ஆக வேண்டும்.

## போற்றுகின்றோம் வேண்டுகின்றோம்

தலைசிறந்த நகர சங்கங்களுள் ஒன்றென மதிப்பிடத்தக்க மட்டக்களப்பு நகர சங்கத்தையும் அதன் தலைவரையும் அங்கத்தவர்களையும் வாயாரப் போற்றுகிறோம்.

அவர்களது ஒப்பற்ற தீர்மானங்களையும் புரட்சிகரமான ஆக்க நட வடிக்கைகளையும் அறிந்து இன்புறுகின்றோம். அரசியற் தலைவர்கள் சமூகப் பெரியார்களை வரவேற்று மட்டுநகரின் சார்பாக அவர்களைக் கண்ணியப்படுத்துவதைப் பெருமிதத்துடன் வரவேற்கிறோம்.

மேலும் மேலும் மற்ற நகர சங்கங்களுக்கோர் வழிகாட்டியாகவும், மட்டுநகரின் வரப்பிரசாதமாகவுமிருந்து பல பல முற்போக்கான கிரியை களில் ஈடுபடுவார்கள் என்பதிலும் நம்பிக்கை கொள்கிறோம். தொண்டு போற்றவும் செய்கிறோம். ஆனால் வேண்டுவது ஒன்றுண்டு. மட்டுநகரின் அநாகரிகச் சின்னமானதும், நகர் காவலாளரின் நாடக சாலையாக அமைந்துள்ளதுமான கள்ளுக்கடையையும் மற்றத் தவறணைகளையும் அடியோடு அப்புறப்படுத்தியாக வேண்டும்.

சுளித்த முகத்துடன் அந்தக் கடைகளைக் கடந்து செல்லும் ஒவ்வொரு வரும் எப்போது இந்தக் கள்ளுக் கடைகளுக்குச் சாவுமணி அடிக்கப் போகிறதோ என்று மனதிற்குள் சபித்துக்கொள்ளாமலில்லை. வேண்டும் போது, அந்த வழிபறிக்கும் மது அரக்கனைக் கூண்டோடு கைலாசம் அனுப்புவதற்கென்று தொண்டர்கள் திடசித்தம் கொள்ளாமலில்லை. சந்தர்ப்பந்தான் ஒன்று வேண்டும்.

ஆகையால் மதுக்கடைகளை வைத்துக்கொண்டு மேலும் மேலும் அழகு பார்ப்பதை மறந்து தமிழ்நாட்டின் வழியைப் பின்பற்ற வேண்டும். சர்வஜன வாக்கெடுப்பொன்று அதி விரைவில் நடத்தி மக்களின் மனப் பூர்வமான ஆதரவைப் பெற வேண்டும். குடியைக் கெடுக்கும் தவறணை

கள் எல்லாவற்றையும் வாசிகசாலையாகவோ, காரியாலயங்களாகவோ மாற்றி அமைக்க வேண்டும். வீழ்க மது அரக்கன், வாழ்க நகர சபை.

**நேயரிடமிருந்து: காலத்தின் போக்கு**

ஐயா,

சாதாரண ஓர் தொழிலாளி தேநீர் கடைக்குப் போனால், தேநீர் கேட்டால்தான் தேநீர் கொடுக்கிறார்கள். அதுவும் கிளாஸ் அல்லது கோளையில். மற்ற தின்பண்டங்களும் கேட்டால்தான் காலடியில்வரும். கால்ச்சட்டை, மேல்ச்சட்டை போட்டவர்களோ போனால், முதலில் மின்சார விசிறி போடப்படும். அடுத்தது பழம் முதல் கொண்டு பட்டர் வரை மேசையில் கண்காட்சிக்கு வைக்கப்படுவது போல் வைக்கப்பட்டிருக்கும். ஒரு சிப்பந்தி ''கோழிக்குஞ்சை'' பிடிக்க பருந்து வட்டமிடுவது போல், அவர்கள் எழுந்து போகும் வரை சதா வட்டமிட்டுக் கொண்டே இருப்பான். ''பாபர் சலூனுக்கு'' போனால் முதல் ஸ்தானம் அவர்களுக்கே, ''சினிமா'' பார்க்கப்போனால் அவர்களுக்கு உள் அறையில் பிரத்தியேகமாக ''டிக்கெற்'' கொடுக்கிறார்கள். பாமர மக்களை மாடாகப் பாவிக்கும் ''பொலிஸ்'' புலிகளும்கூட அவர்களைக் கண்டால் மழையில் நனைந்த கோழியைப் போல் நடுங்குகிறார்கள். அவர்கள் பிடவைக் கடைக்குப் போனால் முதலில் நாற்காலி போடப்படும். இரண்டாவது பனிக்கட்டி போட்ட சர்வத் அல்லது தேநீர் கோப்பை மேசையில் அவர்கள் முன் காட்சிக்கு வைக்கப்படும்.

மூன்றாவது அலமாரியிலுள்ள ஆண்டி முதல்கொண்டு அரசன் வரை அணியக்கூடிய ஆடைகள் யாவும் மேசையில் வைத்துக் காட்டப்படும். கூப்பன் மாற்ற கச்சேரிக்குப் போனாலும், ஓர் கதிரை இடமளிக்கும். ஓர் தொழிலாளி போனால், இன்றைக்கு கூப்பன் மாற்ற முடியாது, ''நாளைக்கு வா'', நின்றாலோ அவர்கள் பாஷையில் (Get out) ''வெளியே போ'' என்ற நாமத்தை உச்சரிக்கிறார்கள். வேலை தேடிக்கொடுக்கும் காரியால யத்துக்குப் போனால் தொழிலாளிக்கு இரண்டு வாங்குகள் போடப் பட்டிருக்கும். ஐயாமார்களுக்கோ நாற்காலி, இன்னும் சொல்லப் போனால் ஒரு புஸ்தகமே எழுதி விடலாம். இப்படிப்பட்ட பேதா பேதங்களினால் இன்னும், இன்றும் மக்கள் பாதிக்கப்படுதல் இலங்கை போன்ற சுதந்திர நாடுகட்கு ஒவ்வாததாகும். தொழிலாளி, முதலாளி என்ற பேதம் அறவே நீங்க எல்லோரும் ஒன்றுகூடி உழைக்க வேண்டும். இனபேதம் பார்ப்

பவர்களை நம் நாட்டை விட்டு ஓட்டவேண்டும். மேலே சொல்லப்பட்ட ஓர நீதிகளை, அறவே ஒழித்துக்கட்ட வேண்டும். நம் தொழிலாளிகள் ஒன்றுபட்டு முதலாளி வர்க்கத்தை வீழ்த்தி''எல்லோரும் ஓர் இனம்'', ''எல்லோரும் ஓர் குலம்'' என்ற நம் ''பாரதி''யாரின் மணிவாக்கு நிலைத் திருக்கச் செய்ய வேண்டும். - பி.எஸ்.ரெட்ணம், மட்டக்களப்பு, 09.04.1949

**கலைக் கடிதம்**

காலம் காற்றிலும் கடும் வேகமாய் சென்று விட்டது. காரணம் கற்பனை வறண்டுவிட்டது. நெடுநாளமைதி தங்களிடம் மன்னிப்புக் கோரி என் கடிதம் ஆரம்பமாகிறது. குற்றம் தெய்வாதீனமானது. மன்னிப்பும் தெய்வாதீனமானது. ஆனால் தண்டிப்பதுதான் அசுர குணம். இதை விளங்கி வேறு விமர்சனம் செய்யவேண்டுமா?

நான் சிந்திக்கிறேன். என் சிந்தனையின் எல்லைக்கோடு தங்களிடம் இருப்பதாக உணர்கின்றேன். நான் பார்க்கிறேன் மானசீகக் கண்களால் வேறு யாரைத் தங்களைத்தான். நான் நினைக்கின்றேன் தங்கள் அன்பை, நான் மறக்கிறேன் தங்களை என் மனத்தால் அல்ல மமதையினால். நான் எப்படி மறக்கமுடியும்.

நண்ப! வறண்ட என் வாழ்வை வதைப்பதற்காக இன்னல்கள் பின்னி என் மென்னியைப் பிடிக்கின்றன. நான் தன்னந்தனியனாய்த் தவிக் கிறேன். பின் என்செய்வது. மண்ணில் இருந்து விண்ணில் தாவுவதா? நான் என் வாழ்வை எண்ணிக் கண்ணீர் விடுகிறேன். கண்ணீர் என் வறண்ட வாழ்வின் தாகம் தீர்க்கும் உண்ணீராகுமா? வாழ்வை எண்ணித் தாழ்வு கொள்ளும் கோழையென்று நீங்கள் நினைக்கலாம். ஏழை கோழையாகி விடுவது உலக இயல்புதானே. நான் எழுதுகிறேன். என்னை மறந்து, உன்னை நினைந்து, என் கண்ணீரில் நனைந்து எதை எழுதுகிறேன். சென்றுபோன இருளடைந்த என் வறண்ட பாலைவனம் போன்ற வாழ்வைப் பற்றித்தான் எழுதுகிறேன். மனச்சுமையைக் குறைத்துக்கொள்ளத்தான் எழுதுகிறேன். மனச்சுமையைக் குறைத்துக்கொள்ளத்தான் நம்புவாயா? நம்பிக்கை தருவாயா?

என் உயிர் நண்ப! சென்ற நாட்களில் என் உணர்ச்சி உறைந்துவிட்டது. என் உள்ளம் வறண்டுவிட்டது. நான் தற்போது உணர்ச்சியற்ற மரக்கட்டை. அதற்கு உதாரணம் நீங்கள் என்னுடன் நின்ற நாட்களில் கண்டிருப்பீர்கள்.

நான் துன்மார்க்கன், துரோகி, வஞ்சகன் என்செய்வேன் அன்று நீங்களே கூறினீர்கள். உண்மை வைரம் தற்காலத்தில் கிட்டுவது துர்லபம். அதிலும் வைரத்தில் உரு அமைக்கலாம், அழியாது. ஆனால் பெண்ணின் மன வைரத்தில் அமைக்கும் உரு தக்கவுபாயத்தைக் கையாண்டால் அழிந்து விடுமென்று நான் கேட்டேனா? மண்ணை மரகதமென்று மதியிழந்து விட்டேன். வேம்பைக் கரும்பென்று வெறும் கோட்டை கட்டினேன். இருப்பினுங் கெட்டியான இதயத்தை இலவம் பஞ்சென்று இறுமாப்புக் கொண்டேன். என் தாய்க்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாத நானும் ஓர் மனிதனா? ஆம், இல்லை. நான் மனிதனில்லை. முன்கூறியபடி உணர்ச்சியற்ற மரக்கட்டைதான். நான் உங்களுக்கு மறைக் கலாம். ஏன் உலகத்தின் கண்களிலிருந்தே மறைமுகமாய் இருக்கலாம். ஆனால் மனச்சாட்சி என்று ஒன்று இருக்கின்றதல்லவா நண்ப! அன்று நான் பார்த்த ''கிருஷ்ண பக்தி'' என்ற படத்தில் மனச்சாட்சியையிட்டு நானறிந்தேன். ஆம் மனச்சாட்சி என்பது கொடிய நாக சர்ப்பத்தை விடக் கொடியதுதான். என் மனமே என்னைக் கொன்று வதைக்கும் நாக சர்ப்பமாக மாறி விட்டது. காலமெல்லாம் வாழ்வின் தாழ்வை நினைந்து கண்ணீர் விடுவதுதானா வாழ்வு. வாழ்வு வாழ்வதற்குத்தான் என்ற சொல் என் மனதில் ஆழமாய்ப் பதிந்துவிட்டது. இல்லாவிடில் அதோ வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழங்கும் கடலிலாவது அடைக்கலம் புகுந்து அமைதியைக் கொள்வேன்.

நண்ப! கலை கலை என்று கதறிய காலம் எங்கே இப்பொழுது போய்விட்டது. கலை கடவுளின் சொத்து. ஆனால் கலைஞன் அதைக் காதலித்தால் காலமெல்லாம் கதற வேண்டியதுதானா? அது போகட்டும் காதல் கரை கடந்தது. அதுவும் ஓர் கலையின் பிம்பமென்றுதானே கூறுகின் றார்கள். அது அழகென்னும் அர்த்தமற்ற போர்வையினுள் மறைக்கப் பட்டிருக்கும் மட்டுந்தானா? நானும் கலையைக் கண்கொண்டுதான் பார்த்தேன். ஆனால் அதற்கு ஓர் அர்த்தத்தையும் என்னால் கண்டுகொள்ள முடியாமல் போய்விட்டது. நான் தங்களுடன் சரிசமனாய் நின்று பேசக் கூட அருகதையற்றவன். தங்களை நான் நண்பனாகப் பெற்றது என் பாக்கியம் என்று சொல்வேன். ஆனால் நான் உங்களுக்கு நண்பனாய்க் கிட்டியது தங்களின் துர்பாக்கியம் என்றே கூறவேண்டும்.

நண்ப! என் இதயத்தில் ஈரமில்லை, சிதறிய என் வாழ்வை சீர்திருத்த முயற்சி செய்கிறேன். முயற்சி முற்றும் வெற்றி பெற்றால் முன்போல்

வாழலாம். ஒரு சமூகத்தில் ஒரு தரம் குற்றம் செய்தவன் மீண்டும் மீண்டும் குற்றம் செய்தே இருக்கமாட்டான். சேற்றில் அமிழ்ந்தால் குளித்துத்தானே ஆகவேண்டும். நான் எதற்கும் துக்கப்படத் தயாராயில்லை. ஆனால் மதியிழந்ததற்காக வெட்கப்படுகிறேன். பணத்தின் மீது நான் நிச்சயமாய்ச் சொல்கிறேன், என் இலட்சியம் பணத்தின் மீதல்ல. அதைத்தேட முயற்சிக் கிறேன் வெறும் வார்த்தையளவில்தான். ஆனால் ஏனோ தெரியாது அது என்னைத் தேடி வரவில்லை. இது என் குற்றமா? இன்று என் கண்கள் திறந்துவிட்டன. நான் உணர்ந்துவிட்டேன். நான் உணராவிட்டால் உதட்டிலே உறவு. உள்ளத்திலே பகை நம்முடனிருக்கும் வரை உறவு பின் உதாசீனமா? இதற்குப் பெயர் உறவா? காசில்லை கடன் தருகிறேன் என்பார்கள். ஆனால் கடைசியில் கழுத்திற்குக் கேட்பானேன் க.... தான். இவர்களுக்குத் தான் கௌரவமான பெயர். நண்ப! மண் விளக்கைப் பார்த்து வெண்கல விளக்கு சிரிக்கின்றதாம். இது இயற்கைதான். ஆனால் சந்திரன் உதயமானவுடன்தான் இருவருடைய கொட்டமும் தெரியும். உள்ளத்தில் உண்மை ஒளி ஊன்றியிருக்கும் வரை, மனம் மாசற்றிருக்கும் வரை ஒருவருக்கும் அஞ்சவேண்டியதில்லை. மழை விட்ட பின் தவளை ஓய்ந்துவிடும். ஊர்வாயை மூட உலை மூடி செய்து பழக முடியாதுதான். மழை விடுங்காலம் இதோ மாறிக்கொண்டிருக்கின்றது. வணக்கம் இனி மன்னிப்பீர்கள் தானே?

கணேஸ்

# இதழ் 6

**சந்தர்ப்பம்**

கிராமச் சங்கத்தின் தேர்தல் நாடகங்கள் பெரும்பாலும் முடிவடைந்து விட்டன. வழமைபோல் நாடகங்களிற் பல குடிச்சங்க நாடகமாகவே நடைபெற்றதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. தேர்தல் பேர் வழிகள், தங்கள் வெற்றி ஒன்றையே இலக்காக வைத்துக்கொண்டு கள்ளு, சாராயம் என்பவற்றை அள்ளி வீசினர். அவர்களின் பழைய ஆஸ்திபூஸ்தி களையெல்லாம் உருக்குலைத்தனர். அவர், அவர் அள்ளி வீசிய போத்தல் களின் விகிதாசாரப்படியே அவரவர் வாக்குத் தொகையுமிருந்தது என்று

கூறின் மிகையாகாது. சுருக்கிக் கூறப்போனால் தேர்தல் முடிபுகளைத் தேர்தல் நிலையத்தில் பார்ப்பதைவிட தவறணைகளில் இலகுவாக மட்டிடக்கூடியதாக இருந்தது.

அடுத்ததாக நடைபெற இருக்கும் அக்கிராசனர் நாடகமும் இதே ரீதியில் ஆரம்பித்து நடந்துகொண்டிருக்கின்றது. அங்கத்தவர்கள் தாம் தேர்தலில் செலவழித்த பணத்தை அக்கிராசனரிடம் பறிப்பதற்கு கங்கணம் பூண்டுகொள்கின்றனர். உத்தியோக மோகங்கொண்ட அக்கிராசனரும் எத்தொகை கொடுக்கினும் சம்மதமேயென்கின்றார். கடைசியில் அக்கிராசனர் எவருடைய மடியில் கையைத் திணிக்கப் போகிறாரோ நாமறியோம்.

யார்தான் என்ன செய்யலாம். ''தாம், தாம் செய்த வினை தாமே அனுபவிப்பார்'' என்ற படி, பொதுசனங்கள் செய்த பிழை மீண்டும் அவர்கள் தலையிலேயே சூழ்ந்துகொள்கின்றது. பொதுசனங்கள் புத்திசாலி களாகவும், உண்மையான குடியியல் மக்களாகவும் மாறும் வரை இந்தச் சீர்கேடு மாறப்போவதில்லை. பொதுசன ஊழியம், பண்டமாற்று ஊழியமாக மாறுவேசம் போட்டு நடனமாடுவதை யார்தான் அறியாமலிருக்க முடியும்?

தேர்தல் என்ற சத்தத்தைக் கேட்டதும், குடிகார நண்பர்கள் தமக்கோர் சந்தர்ப்பம் கிடைத்ததென்றெண்ணிக் கடைவாயை நாக்கினால் ருசிக் கின்றார்கள். முன்பின் குடியாத பேர்வழிகள் இந்த இலவச சாராயத்தைத் தமது குடிகார வாழ்க்கைக்கு ஒரு சந்தர்ப்பமாக ஆக்கிக்கொள்கின்றனர். இலவச சாராயம் இனசன விரோதமாக மாறி அவனது குடும்ப சீவியத்தை யும் குட்டிச் சுவராக்கி விடுகிறதென்பதைப் பண்டமாற்றுச் செய்யும் அங்கத்தவர் அறிவாரா?

கிராமச் சங்கத் தேர்தல் குடித்துப் பழகியவர்கட்கும் குடியைப் புதிதாய் பழகுபவர்கட்கும் ஒரு சந்தர்ப்பமாகவே அமைகின்றது.

**ஏ! கிராமச் சங்கங்களே!**

அடிமை இலங்கையின் கிராமச் சங்கங்களாக இருந்த காலத்தில், அங்கத்தவர்கள் தூங்கி, வழிந்து கொண்டிருந்தார்கள். உடைந்து போன பாதைகளைச் செப்பனிடுவதுதான் எங்கள் வேலை என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். நாங்களும் கைகட்டி வாளாவிருந்தோம். சில சமயம் கிராமச் சங்கம் என்ற ஒன்று இருக்கிறதே என்ற நினைப்புமற்றிருந்தோம். மூன்று வருடத்திற்கொருமுறை தேர்தல் நடக்கும் போது மாத்திரம் நல்ல

ஞாபகமாகத்தானிருக்கும். பின்னர் எல்லாக் கலகலப்பும்.... கப்பல் ஏறி யாத்திரையாகிவிடும். ஆனால்!..... அடிமைப் பிணிப்பிலிருந்து சுதந்திர வானில் கிளம்பி நாங்கள்தான் இந்நாட்டு மன்னர்; நாங்கள்தான் எங்கள் தலைவிதியை நிர்ணயிக்கும் பிரம்மாக்கள் என்ற நிலையிலுள்ள இந்தக் காலத்தில் தூங்கி வழிந்துகொண்டிருக்க நேரமேது? ஐநூறு அறுநூறு சனங்களின் பிரதிநிதியாகப் போய் மௌனியாக வாய்மூடியிருந்து வர முறையேது?

**அங்கத்தவர்களே!**

உங்களுக்குக் கிடைத்திருக்கும் பதவி மேலானது. அதை உங்கள் பணத்தின் பிரதிவிம்பமாகவோ அல்லது சாதி என்னும் வியாதியின் பிம்பமாகவோ கருதிவிடாதீர்கள். நூற்றுக்கணக்கான ஏழை மக்களின் பிம்பங்கள், கௌரவத்திற்கும், காலட்சேபத்திற்குமாகப் பதவி வகித்த காலம் மலையேறிவிட்டது. கிராமத்தின் நல்வாழ்வு உங்கள் கையிலிருக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோ கல்வி நிலை, சமூக நிலை இவைகளைத் திருத்துவதோ எல்லாம் உங்கள் கையிலேதான் இருக்கிறது.

அரசாங்கம் கடமை செய்யக் காத்துக்கொண்டிருக்கிறது. மந்திரிகள் சுறுசுறுப்பான சுற்றுப்பிரயாணங்கள் செய்துகொண்டிருக்கும் இத்தறுவாயில் அவர்களை வரவேற்று ஆவன செய்யும்படி கேட்பது உங்களுடைய கட்டாயமான சேவை. மற்றைய மக்கள் உங்களின் அத்தியந்த துணைகளாக இருந்து உதவி செய்வர். பொதுசனங்கள் கூட்டங்களைக் கூட்டி, தலைவராக அமரும்படி தம்மை அழைத்துப் போகும்வரை காத்திராது வேண்டிய வேண்டிய இடங்களில் கூட்டங்கள் கூடுமாறு மக்களைத் தூண்டிவிட வேண்டும். கிராமத்தின் மக்கள் சற்று அறிவு குறைந்தவர்கள் தான். ஆனால் பொது வேலைகளில் மிகவும் உற்சாகம் நிரம்பியவர்கள். தங்களுடைய கிராமத்திற்கு ஒரு வைத்தியசாலை வரப்போகிறதென்று அறிந்தால் தலை, கால் தெரியாத சந்தோஷத்தில் ஆழ்வார்கள். ஆனால் தூண்டிவிடத்தான் ஒரு தலைவர் வேண்டும்.

ஆகவே, கிராமங்களின் முக்கிய பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கும் கிராமச் சங்கமானது மேலும் பழைய நிலையை நோக்கிப் பின்னே ஓடாது சற்று ஊரூராக வேலையை ஆரம்பிக்க வேண்டும். வழிகாட்டியாக இருக்கும் சங்கங்களின் நடைமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்வதும்

ஏற்றதாகும். கிராமச் சங்கங்களே! உங்கள் வாழ்வு ஆக மூன்றே, மூன்று வருடந்தான்.

அந்த மூன்று வருடத்துள்ளும் நீங்கள் அளப்பரிய வேலைகளைச் செய்து முடித்து மக்களின் ஆனந்தமான நல்லாசியைப் பெற்றுத் திகழலாம். மீண்டுந் தொடர்ந்து கடமையும் பார்க்கலாம். எதற்கும் உங்கள் அஸ்தமனம் பதிலளிக்கும்.

**முதல் மணி மண்டபம்**

மட்டக்களப்பின் மங்காச் சோதியான உயர்திரு சுவாமி விபுலானந்தர் அவர்களுடைய தமிழ் கல்வித் தொண்டுகளைக் கௌரவித்து மணி மண்டபம் அமைப்பதற்குப் பல அன்பர்களும் முயன்றார்கள். அதில் அக்கரைப்பற்றில் எழுந்த மணிமண்டபம் எவரும் எதிர்பாராதவாறு சிறப்பாகவும், சீக்கிரமாகவும் முடிவுற்று இலங்கை மணி நாட்டின் பரிசையும் பெற்றது.

இத்தனைக்கும் காரண கர்த்தாவாக இருந்து செயலாற்றியவர் ஒரு தமிழாசிரியன் என்ற அளவில் நாம் என்றுமில்லாத களிபேருவகை கொள்ளவேண்டியே இருக்கின்றது. முதுகெலும்பற்றவர்கள் தமிழாசிரியர்கள் என்று அன்றொரு பரிசோதகர் கூறி மார்பு தட்டினார். அவரின் வாய் வீச்சுக்கு அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சவுக்கடிகளில் உறைப்பான சவுக்கடி இதுவுமொன்றாகும்.

அந்தத் தமிழாசிரியரது இடைவிடா ஊக்கத்தையும், அன்னாருக்கு உதவி அளித்துக்கொண்டிருக்கும் ஏனைய நண்பர்களையும் வாயார வாழ்த்துகின்றோம்.

**உங்கள் நன்மைக்கே**

''நான் சர்க்காருடன் சேர்த்து உழைக்கத் தொடங்கியது உங்களுடைய நன்மைக்காகவேதான். அப்படி நான் சேராவிடில் இப்போது செய்து கொண்டிருக்கும் இந்த வேலைகளையெல்லாம் நான் உங்களுக்குச் செய்ய முடியாமற்போய்விடுமல்லவா?'' என்று கௌரவ மந்திரி ஜி.ஜி. பொன்னம்பலமவர்கள் மட்டக்களப்பு விஷயத்தின்போது குறிப்பிட்டார்கள்.

இலங்கையின் சிறுபான்மைச் சமூகத்தின் நலம் கருதி உழைத்துக் கொண்டிருந்த மந்திரியாரவர்களுக்கு, இலங்கை நாடு முழுவதின் நலனும் கருதி உழைக்கச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பது ஒருவகையில் நன்மையே

தான். உண்மையிலேயே திறமைசாலியான ஜி.ஜி.அவர்களின் தலைமை யினால், இலங்கையின் கைத்தொழில், மீன்பிடி பகுதிகள் சிறப்படையப் போவதில் ஆட்சேபனை கிடையாது.

சாதாரண பிரதிநிதியாக வந்ததற்கும், மந்திரி வேஷம் பூண்டு வந்ததற்கும் தார தம்மியம் பல இருக்கத்தான் செய்தது. திறந்த வாய் மூடாமல் இரண்டு, மூன்று மணி நேரம் பேசிக்கொண்டிருக்கும் மந்திரியார், 5 நிமிஷந்தானும் தொடர்ந்து பேச முடியாமல் சிட்டாய் பறந்து திரிந்தார்.

**காங்கிரசிலும் ஓர் கண்**

வேலையோடு வேலையாக, ''தமிழ் காங்கிரஸ்'' கட்சியிலும் ஒரு கண்ணை வைத்துக் கொண்டவராகவே ஜி.ஜி விளங்கினார்.

''பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகத்தைத் தாராளமாக நடத்தும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு'' என்று சொற்பொழிவு செய்துகொண்டிருக்கும் போதே தமிழ் காங்கிரசில் சேராத பிரதிநிதிகளை சேருமாறு குறிப்பாகச் சுண்டிவிட்டார். என்ன இருந்தாலும் தமிழ்க் காங்கிரசின் தலைவர் அல்லவா? ஆனால் ஒன்று தமிழ்க் காங்கிரசில் சேரச் சொன்னாரேயொழிய தமிழ்க் காங்கிரசின் பச்சை இலைக் கட்சியில் சேரவா? பழுத்த இலைக் கட்சியில் சேரவா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடாமல் போய்விட்டார்.

## இதழ் 7

**அட்டைப்பட விளக்கம்**

இருபதாம் நூற்றாண்டிற்கு முன் மேனாட்டார் இந்தியாவை ஏமாளிகளும், எத்தர்களும் நிரம்பிய இருளடைந்த நாடென்று எண்ணி இறுமாந்திருந்தனர். இந்த இறுமாப்பில் நைந்து நலிந்த இந்திய உபகண்டத்தின் மக்கள் அடிக் கடி போர் முரசு கொட்டினர். அவைகள் வெள்ளை வர்க்கத்தை குலுக்கின. அதனால் வெள்ளையர் மீண்டும் பலாத்காரத்தைக் கைக்கொள்ளத் தொடங்கினர்.

பின்னர் அண்ணல் காந்திஜீயின் தலைமையிலே அஹிம்சைப் போர் ஆரம்பமான போது செல்வம், பட்டம், பதவி, சுகவாழ்வு அனைத்தையும் தேசீயம் என்னும் சுதந்திரத் தீயில் பலியிட்டவர்கள் லட்சோப லட்சம் மக்கள். அதில் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து கணிக்க வேண்டியவர் ஜவஹர்லால் நேரு.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேல் ஒடுக்கப்பட்டு வைத்த மக்கள் சுதந்திரத்தின் அருமையையடைந்து விட்டனர். இந்தப் போராட்டத்தில் நேரு செய்த தியாகம் சொற்பமானதல்ல, சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது.

சுதந்திரம் வேண்டுமென வேண்டினார், சுதந்திரம் கிடைத்துவிட்டது. எனினும் அத்துடன் ஓயவில்லை, ஒதுங்கி நிற்கவில்லை, களைப்படைய வில்லை, கனகமணிக் கட்டிலில் கண்ணயரவில்லை. கணமொன்றும் இந்தியாவின் சுபீட்ச வாழ்வில், ஆசிய மக்களின் ஏகோபித்த ஐக்கியத்தில் கண்ணும் கருத்துமாய் செலுத்தி வருகிறார். காஷ்மீர் இரத்தக் களரி, ஹைதராபாத் குமுறல், பாகிஸ்தான் மோதுதல், இடதுசாரிகளின் தூற்றுதல் அனைத்தையும் தாங்கிக்கொண்டு இந்தியாவின் நல்வாழ்வுக்கு பாடுபடும் வீரர் நேருவை,

*''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை*
*சான்றோனெனக் கேட்ட தாய்''*

போன்று இந்தியத் தாய் இறும்பூதெய்துகிறாள். அந்த சுயநலத் தன்மையற்ற இந்தியாவின் முடிசூடா மன்னன் நேருவை பாரதியின் அட்டையில் பொறிப்பதில் எங்கள் அகமெல்லாம் பூரிப்படைகின்றது. ஏன் ஆசிய மக்களை - இல்லை இல்லை உலகத்தின் சமாதானப் பிரியர்களும் நல்லறி வாளர்களும் அவ்வண்ணமே எண்ணுகிறார்கள். வாழ்க நேரு! ஓங்குக உலகில் சமாதானம்!!

**உரிமை**

ஏதோ சுதந்திரம் கிடைத்து விட்டது. இனிமேலாவது எங்கள் உரிமைகளை, உரியபடி பெற்றுக் கண்ணியமாக வாழலாம் என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தனர் மக்கள் - மானங்கெட்டவரின் உயிரையே மதியாத மன்னாதி மன்னர்களின் வழித்தோன்றல்கள். உண்ணத்தான் உணவின்றிச் சிறையிலே கிடந்து மடிவதாயினும் உரிமையைக் கேட்பதில் தலை குனியாத உத்தமர்களின் வீரத்தினால் விழிப்படைந்த வீரர்கள். ஆனால்.... சுதந்திர இலங்கையின் கொடி எது? என்று கொடிக் கமிட்டியார் தீர்மானம் செய்து முடித்துக்கொள்ள இயலாமல் திண்டாடுகின்றனர். Dr.N.M. பெரேரா, கமிட்டியின் அங்கத்தவராக இருந்தும் பல கூட்டங்களுக்குச் சமுகம் கொடுக்காது கம்பி நீட்டி வருகிறார். சிங்கக் கொடியோ காற்றில் அசைந்து கெம்பீரமாகப் பறந்து கொண்டுதானிருக்கிறது.

மாஜி மந்திரி சுந்தரலிங்கம் அவர்கள் இதையிட்டு எவ்வளவோ பிரலாபித்தும் பயன்படுவதாகத் தோன்றவில்லை.

தீக்குருவி போலத் தலையை மறைத்துக்கொண்டு எக்கேடு கெட்டாலும் எங்களுக்கென்ன, பிரதமரின் கடாட்சம் ஒன்றிருந்தால் மாத்திரம் போதும், என்று தலையை மறைத்துக்கொண்டு சரியும் (தீக்குருவிப்) பிரதிநிதிகள் தாங்கள் ஜனப்பிரதிநிதிகள் என்பதை மறந்துவிட்டார்கள் போலும்.

வேண்டாம், சிங்கக்கொடி வேண்டாம். எல்லாச் சாகியத்தாருக்கும் சொந்தமான ஒரு தேசீயக்கொடிதான் வேண்டும். அல்லது இலங்கைச் சர்க்காரின் அரசியற் கொள்கையை அம்பலப்படுத்தக்கூடிய ஒரு கொடி தான் வேண்டும்.

**பாஷை**

சுதந்திர நாட்டின் சின்னங்களான, தேசியக் கொடியும், தாய்ப்பாஷையாலான அரசாங்கமும் ஒரு தனிப்பட்ட சமூகத்திற்காக மாத்திரம் ஒதுக்கப்படுவதாகில் மற்றச் சமூகத்தவர்கள் மண்ணர்களும், மண்டியிடுபவர்களுமல்ல.

அன்னிய மொழியொன்றின் அடிமைப் பிணியிலிருந்து விடுதலை பெற்று வெளியேறுவதற்கு மக்கள் தவியாய்த் தவித்துக்கொண்டிருக்கும் தறுவாயில், ஆங்கில பாஷையை ராஜாங்க பாஷையாக நீட்டிக் கொண்டிருப்பதோ அல்லது மற்றுமோர் தனிப்பட்ட சாகியத்தாருக்குரிய பாஷையை ராசாங்க பாஷையாக்குவதோ புத்தியுள்ள செய்கையாகாது.

சிங்களப் பிரமுகர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று பிரதமரைப் பேட்டி கண்டு சிங்கள மொழியையே ராஜாங்க பாஷையாக்க வேண்டுமென்று இடித்துக் கூறுவதும், சமசமாஜிகளிற் சிலர் உட்படப் பிரதிநிதிகளிற் சிலர் பகிரங்க மேடைகளில் சிங்களமே அரசியற் பாஷையாக வேண்டும் என்று சொற்பொழிவுகள் செய்வதும் சிறுபான்மைச் சமூகத்தைத் திணற வைக்கின்றது.

கொடி விஷயத்தில் ஜாலவித்தை காட்டி மக்களை ஏய்த்துக்கொண்டிருக்கும் பிரதமர் பாஷை விஷயத்திலும், கண்ணை மூடிவிடுவாரோ என்ற பீதி மக்கள் மனதில் குடிகொண்டிருப்பதில் நூதனம் எதுவுமில்லை. இந்த நிலையில் நமது தமிழ் பேசும் பிரதிநிதிகளிற் சிலர் நமக்குச் செய்யும் ஹிதோபதேசங்களைப் பார்த்தால் அரசியல் மேதைகள் வரிசையில் அவர்களுக்கும் ஒரு ஞாபகக் கல்லை நாட்டிவிட்டு வாய்மூடி மௌனியாக மாத்திரம் இருந்தால் போதும் என்று கெஞ்சிக் கேட்கத் தோன்றுகின்றது.

அவர்கள் இன்று இருக்கும் நிலையில் வேறு என்னதான் சொல்ல முடியும். 66 லட்சம் மக்கள் உள்ள இலங்கையில் 6-லட்சம் தமிழருடைய பாஷையை பெரும்பான்மைச் சாகியத்தார் ஒருக்காலும் படிக்க விரும்பமாட்டார்கள். ஆகையால் தமிழர்தான் சிங்கள மொழியைக் கற்கவேண்டும் என்ற நுட்பமான கணக்கொன்றைக் காட்டுகின்றார் ஒரு பிரதிநிதி. தமிழருடைய பாஷையைப் பற்றி நமக்கு அக்கறையில்லை. இலங்கையில் பேசப்படும் தாய்ப்பாஷைகள் இரண்டே இரண்டு. ஒன்று சிங்களம் மற்றது தமிழ். எனவே பாஷை பேசுவோரைப் பற்றித்தான் குறிப்பிடவேண்டு கின்றோம். அதன்படி பார்த்தால் பிரதிநிதிகளின் கணக்கு விகிதாசாரத்தில் பெரிய மாற்றம் ஏற்படுவதைக் காணலாம்.

அதையும்விட நாங்கள் தமிழ் படிக்குமாறு எவரையும் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமுமில்லை, நாமும் சிங்களம் படிக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட தேவையுமில்லை. இருபாஷையாலான அரசாங்க மொன்று அமைய வேண்டுமென்றே கோருகின்றோம். உள்நாட்டு அரசாங்க அலுவல் எதுவும் ஆங்கிலத்தில் நடைபெறக் கூடாது. பொதுமக்கள் அரசாங்கத்துடன் நேரடியான தொடர்பு பெறவோ, ஒத்துழைக்கவோ தாய்பாஷை அரசாங்கம் வேண்டும்.

சுதந்திரம் கிடைத்துவிட்டது, பத்து வருடத்திற்குள்ளாக எல்லாம் தேசீயமயம். தாய்ப் பாஷைகள் அரசியற் பாஷைகளாகிவிடும். எந்த ஏழையும், கஷ்டமின்றிக் காரியங்களை முடிக்கலாம் என்றெல்லாம் எண்ணி எண்ணிக் காலத்தையும் கடத்தி விட்டோம். எங்கு என்ன ஆகியிருக்கிறது. தாய்ப்பாஷை குமாஸ்தாக்களாவது ஆபீஸ்களில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களா? இல்லை. இன்றும் இல்லை இன்னும் என்னவோ? அந்த ஆங்கிலம் இல்லாவிட்டால் அரசியல் நடவாது என்கிறது ஒரு கட்சி. திடீர் என்று செய்ய ஒண்ணாது. மெல்ல மெல்லத்தான் ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்று கூறுகிறது மற்றோர் கட்சி. முடிவு கூறும் மூன்றாவது கட்சி காலத்தைத் தட்டிக்கழித்து வருகிறது. அரசாங்க சபையிலிருக்கும் அங்கத்தவர்கள் அடிபிடிபட்டு 5,10 நிமிஷம் தாய் மொழியில் பேசி விட்டால் மாத்திரம் மக்களின் குறை நீங்கி விடப்போவ தில்லை. எல்லாப் பிரதிநிதிகள் நெஞ்சிலும் ஊறிப்பாய்வதற்காக அவர்கள் எந்தப் பாஷையிலும் - ஆங்கிலத்தில் பேசினால்கூட பரவாயில்லை. அரசாங்கத்தைத் தாய்ப்பாஷையில் தீவிரமாக மாற்றி அமைத்தாக வேண்டும்.

அரசாங்கத்தில் இடம்பெற்றிருப்பவருக்கும் மெல்ல, மெல்லத்தான் ஆங்கிலம் அகற்றப்பட வேண்டும் என்று கேட்பவர்களுக்கும், இந்த நிலையில் அதாவது ஆங்கிலம் அரசியற் பாஷையாக இருக்கும் நிலையில் கஷ்டம் ஒன்றும் இல்லைதா[illegible] பர்களும் அவர்களைச் சுற்றியுள்ளவர் களும் அசல் கறுத்த வெள்ளை[illegible]காரர்கள் நாளைக்குத் தாய்ப்பாஷை அரசியற் பாஷையாகி விட்டால் கந்தனும் கறுப்பனும் அரசியல் மொழியில் சரசமாடி ஐயாவுடன் கைபோடத் தொடங்கிவிடுவார்கள். இதை நினைக்கும் பொழுது இன்னும் 200 வருஷத்திற்கு இங்கிலீஷ் அரசாங்க பாஷையாக இருந்தாலும் நல்லாகத் தோன்றச் செய்கிறது அந்த அரசாங்கச் சிற்பிகட்கு.

ஆனால், பொது மக்கள் சுபீட்சமாக வாழவேண்டுமானால், அவர்கள் அறிந்த பாஷையிற்தான் அரசாங்கம் நடக்க வேண்டும். அதைத் தட்டிக் கழிக்க முடியாது. தமிழ் பாஷை பேசுவோர்களே! உரிமையைப் புறக்கணி யாதீர்கள், ஒன்றுபட்டுப் போராடுங்கள்.

**நல்ல காலம்**

மதுவிலக்குப் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு உழைத்து வந்த, நமது பிரதமர் டி.எஸ். சேனனாயகா அவர்கள், மௌனமாக நழுவிக்கொள்ள முற்பட்டார்கள். ''மதுச்சாலைகள் வேண்டாம்'' என்ற மக்களின் எக்காளம், செவிடுபட்ட சர்க்காரின் செவிகளைத் திறந்து வைத்தது. பேரிரைச்சலினால் திடுக்கிட்டார் பிரதமர். மக்களின் பூரண ஆதரவு இருக்குமாகில் மது விலக்குச் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவரத் தயங்க மாட்டோம்'' என்று திருவாய் மலர்ந்தார். வந்துவிட்டது நல்லகாலம். பொதுசன ஊழியர்களே காட்டுவோம் கைவரிசையை.

பணம் படைத்த மிராசுதாரர்களின் மாயச் சங்கிலி அறுகிறது - மக்களை மாக்களாக்கி மானத்தை வாங்கும் மயக்க மருந்து ஆவியாகிறது. மதுவரக்கன் என்னும் தங்கள் நண்பன் உதவி கொண்டு எண்ணங்கள் அத்தனையையும் ஈடேற்றி விடலாம் என்று எண்ணிய மண்ணர்களது மனக்கோட்டைகள் தவிடு பொடியாகிறது. பாட்டாளி மக்கள் கையிலே காசும், களஞ்சும் மிஞ்சிக் களிக்கப்போகிறார்கள், வருகிறது நல்ல காலம். மதுவே - மலையேறும் காலம் வந்துவிட்டது.

**வெள்ளையறிக்கை**

அதிக நாளாய் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நடிகர் ஒருவர் நாடக அரங்கில் கால் மிதித்த உடனேயே உள்ளே போ, உள்ளே போ என்ற கேலி வார்த்தைகளுக்கு ஆளாகி விட்டாரென்றால் நடிகரின் சாமர்த்தியத்தையிட்டு வேறும் விவரித்துக் கூறவேண்டுமா? அதே போலவேதான் கல்வி மந்திரியின் பார்லிமேந்துக் காரியதரிசியினால் வெளியாக்கப்பட்ட கல்வி பற்றிய வெள்ளையறிக்கை பொதுமக்களினதும் அறிவாளிகளதும் வசை மொழிக்கு இலகுவில் பாத்தியதை ஆகிவிட்டது.

தனிப்பட்ட சாகியத்தாரது நன்மைக்காக அன்றி இலங்கை மக்கள் அனைவரதும் நன்மையை உத்தேசித்து விரிந்த நோக்கத்துடன் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

**கல்லாறும் கள்ளுக்கடையும்**

கற்றறிந்த மக்கள் நிறைந்தது கல்லாறு - கல்வியாறு என்று கூறினும் பொருந்தக் கூடிய மாண்பு கொண்டது கல்லாறு, ஆஸ்திகக் கொள்கையில் மிகமிக வலுப்புக்கொண்டது கல்லாறு. கள் குடித்தல் உள்ளிட்ட பஞ்சமா பாதகங்களைக் கடியுமாறு கூறும் சைவ மதத்திற்கோர் மகாசபை அமைத்துப் பணிபுரிந்து வருவது கல்லாறு. மதுபானம் குடியாதிருப்பாயாக என்ற மணிவாக்கின் கர்த்தரான ஏசுநாதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழும் கிறிஸ்தவர்கள் வாழுவது கல்லாறு.

பணம் படைத்த குபேரர்கள் வாழுவது கல்லாறு. மற்ற நாடுகளுக்கும் முன்மாதிரியாகத் திகழ வேண்டியது கல்லாறு. ஆனால் புத்திசுவாதீனத்தை மயக்கி, மானமுள்ள மனிதனை வனத்து விலங்காக மாற்றி, அறிவுள்ள மனிதனை அறிவீனனாகக் கெடுத்து, ஆபாச கிரியைகளைச் செய்யுமாறு தூண்டி நாட்டுக்கே குந்தகம் விளைவிக்கும் அந்தப் பாழாய்ப்போன கள்ளுக் கடையை கட்டியழுது கொண்டிருப்பது அழகாகுமா?

தொழிலாளியின் இரத்தத்தை உறிஞ்சிப் பெருக்குகிறான் கள்ளுக்கடை முதலாளி, பகல் முழுவதும் பாடுபட்டு உழைத்த கூலியைப் பறிகொடுக்கிறான் பாட்டாளி. படித்தறிந்த பக்தர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதுதானா நேர்மை.கற்றறிந்த கல்லாற்றின் கவலை தரும் சின்னமல்லவா அந்தக் கள்ளுக்கடை.

அறிவுள்ள மக்களுக்கு அவமானத்தைத் தேடிக்கொடுக்கும் அழியாச் சின்னமல்லவா அந்தக் கள்ளுக்கடை. நேர்மைக்கும், நியாயத்திற்கும்

சாவுமணியடிக்கும் அநீதி மன்னனின் கோயிலல்லவா அந்தக் கள்ளுக் கடை. கவலைக்கும், கத்திக் குத்துச் சண்டைக்கும் காரணனல்லவா அந்த மதுக்கடை மன்னன்.

வேண்டாம், தோழர்கே [illegible] ண்டாம். மதுக்கடையை அகற்றுங்கள். உங்கள் நாட்டின் சுபீட்சத்திற்கு வழிகோலுங்கள், மற்ற இடங்களுக்கும் ஓர் முன்மாதிரியாக வீரப் போர் புரியுங்கள். வெற்றி நிச்சயம்.

வீழ்க கள்ளுக்கடை, கல்லாறு வாழ்க!

## இதழ் 8

**நினைவு மலர்**

''பாரதி'' நினைவு மலர் வெற்றியுடனும், சோபையுடனும் அன்பர்கள் கையில் பரிமளிக்க வேண்டுமென்பது எங்களது அளவிலா அபிலாஷை. தமிழ்க் குலத்தின் தன்மானத்தைக் காத்து, இழந்துபோன தமிழன்னையின் மணிமுடியை, மீண்டும் சூட்டி மங்கிவந்த புகழை நானிலமெங்கும் பரப்பிய எங்கள் மகாகவி பாரதியாருக்கு எத்தனை நினைவு மலர்கள், மடாலயங்கள் ஆக்கிவைக்க வேண்டிய கடமை எங்களுக்குண்டு. கட்டாயம் செய்துதான் ஆகவேண்டும்.

வாழ்க்கையில் நாம் நினைத்தபடி எதுதான் நடந்துபோகிறது. நினைத்ததற்கு மாறாகப் பதின் மடங்கு மகோன்னதமாகவும் வந்து விடுகிறது. பதின் மடங்கு கீழாகவும் வந்துதான் விடுகிறது. என்ன செய்யலாம்? அதற்கும் உறுதியும், நம்பிக்கையும், ஆதரவும் இருந்து விட்டதென்றால் வெற்றி கட்டாயம் கிட்டியே விடும்.

இந்த நிலையில் நினைவு மலரைப்பற்றி எதுவும் வானளாவப் புகழவோ, இகழவோ முற்படவில்லை. நேயர்கள் ஊகத்திற்கு இது, விடுவிக்க முடியாத ஒரு புதிரல்ல.

**வணக்கம்**

அமரகவி பாரதியே! இதோ அர்ப்பணிக்கிறோம் எங்கள் சிறிய காணிக் கையை. எங்கள் அன்பளிப்பு இலங்கை மணி நாட்டின் சார்பாக கிடைக்கும் மணியாரம் என்று நினையுங்கள்.

என்ன? மணியாரமா? எனது தாய்நாட்டின் ஏழை மக்களை- உங்கள் சொந்தச் சகோதரர்களை- இலங்கா தீவின் செல்வச் செழிப்பிற் கென்று நெற்றி வியர்வை சிந்திய இந்தியச் சகோதரர்களை - உங்கள் நாட்டிலிருந்தே துரத்தக் கங்கணம் பூண்டுகொண்டு உரிமைகளைப் பறித்து ஊதாரிகளாக்கிவிட்டு, எனது முகத்தில் கரியையும் பூசிவிட்டு, மணியாரம் கட்டவா வருகிறீர்கள். உங்கள் ஈரமில்லா நெஞ்சகத்தின் வஞ்சகத்தன மெல்லாம் எனக்குத் தெரிந்துவிட்டது. வேண்டாம் உங்கள் முகஸ்துதி. வேண்டாம் உங்கள் வீண் ஆர்ப்பாட்டங்கள் என்று கூற முற்படுகிறீர்களோ?

அபசாரம், அபசாரம்! அப்படியெல்லாம் எண்ணி எங்களுக்கு ஏமாற்றத்தை அளித்துவிடாதீர்கள். இலங்கை மக்களின் தீரமனதில் குமுறிக் கொந்தளித்து எரிமலையாகப் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது அந்த சேனநாயக்கா கும்பலின் செய்கை. பட்டம் போகிலும், பதவி போகிலும், இந்தியச் சோதரர்களுக்குச் செய்த அநீதத்தை அரைக்கணமும் பெறோம் என்று வீரப் போரிட்டார்கள் தோழர்கள். காட்டிக்கொடுக்கும் ஏகேல பொலைகளும், தனது சாகியத்தை மாற்றாருக்கு அடகு வைப்பதில் கைதேர்ந்த ஒத்துழைப்பு வாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் பித்தலாட்டங்களை நாங்கள் செவிமடுக்கப் போவதில்லை. அவர்கள் தான் எங்கள் பிரதிநிதிகள் என்று அவசரமாக முடிவு கட்டிவிடாதீர்கள். இப்போதைக்கு இந்தியரின் பிரஜா உரிமையைப் பறித்து ஜெயக்கொடி நாட்டிவிடலாம். ஆனால் எங்கள் மனதில் அந்த அநியாயம் ஒருக்காலும் இடம்பெறவே மாட்டாது.

பிரஜா உரிமையைப் பறிக்கலாம். நாட்டைவிட்டுத் துரத்தலாம். எனினும் இந்திய மக்களுக்கும், எங்களுக்குமிடையிலுள்ள பரஸ்பர உரிமையைப் பிரித்துவிட முடியுமா? முடியவே முடியாது. ஆகவே உங்கள் பாதாரவிந்தத்தில் இடமுண்டு. சமர்ப்பிக்கின்றோம். இதோ ஆசியும் கிடைக்கின்றது. வாழ்க! பாரதி.

**மட்டக்களப்பு மைதானங்கள்**

மட்டக்களப்புக்கென்று விசேடமாக அமைந்துள்ள மட்டக்களப்பு, கல்முனை மைதானங்கள், அரசியல் சம்பந்தமான தமது கடமைகளை இப்பொழுதுதான் சரிவர நிறைவேற்றத் தொடங்கியுள்ளன. மட்டக்களப்பு மக்களின் சிந்தனையைத் தூண்டிப் பரந்த அரசியல் ஞானம் அடைய, உதவி புரிகின்றன அந்த மைதானங்கள்.

## பாட்டாளி தோழர்

போல்ஷிவிக் சமசமாஜிக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் R.D. சில்வா அவர்கள் மட்டக்களப்பு, கல்முனை, கல்லோயா எங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து பிரசங்கங்களும் செய்தார்கள்.

சர்க்கார் கட்சியாரின் நிர்வாக ஊழல்கள் எப்படிப்பட்டதென்றும், அவற்றிலிருந்து விடுதலைபெற 90 சதவிகிதமான தொழிலாளரும் எவ்வாறு ஒற்றுமை பூண்டு போர் புரிய வேண்டும் என்றும் விரிவாக எடுத்து ஓதினார்கள். ஏப்பமிட்டுக் கொழுத்துக் கொண்டிருக்கும் முதலாளிகட்கும், பதவி நாட்டம் கொண்ட தலைவர்கட்கும் இப்பிரசாரங்கள் வேப்பங்காயாய்த் தோன்றியதில் வியப்பென்ன இருக்கிறது.

## சமஷ்டி வாதிகள்

பிரித்தானியரிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்து விட்டது. இனிப் பெரும்பான்மைச் சிங்களவரிடமிருந்து சிறுபான்மையோர், சிறப்பாகத் தமிழ் பேசுவோர் விடுதலையடைய வேண்டுமென்பது இவர்கள் விடுக்கும் வேண்டுகோள்.

சர்க்கார் கட்சியார், தமிழ்ச் சாகியத்தாரின் விடாப்பிடியான வேண்டுகோட்கியைந்து கிள்ளி வைக்கும் எச்சில் உணவை நம்பி ஏமாந்து போகக்கூடாது. இந்தியச் சகோதரர் இன்று மண்டையில் அடி வாங்கிக் கொண்டிருக்கின்றனர். நாளைக்கு அந்த அடி நமது மண்டையிலுந்தான். எனவே, நாம் கைகட்டிக் கொண்டிருக்க இது சமயமில்லை. போரிடுவோம் வாருங்கள் என்று அறை கூவுகின்றனர், தோழர்கள் செல்வநாயகம் M.P., வன்னியசிங்கம் M.P., டாக்டர் நாகநாதர்- செனட்டர், அமிர்தலிங்கம் B.A.

## வழி யாது?

இவர்கள் காட்டும் வழி சமஷ்டி அரசியல். கனடா, அயர்லாந்து என்பன இவர்கள் எடுத்துக்காட்டு. சர்க்காரே வட, கீழ் மாகாணங்களை வேறாகப் பிரித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கும் பொழுது அதாவது அவர்களே வகுப்பு வேறுபாட்டை அமுல் நடத்திக்கொண்டிருக்கும் பொழுது எங்களை வகுப்பு வாதிகள் என்று கூறுவது முற்றிலும் அடாத காரியமாகும். அவர்கள் கூறுபாடு செய்யும் எங்கள் மாகாணங்களை நாங்களே ஆண்டுகொண்டால் என்ன? என்றுதான் கேட்கிறோம் என்பது அவர்கள் வியாக்கியானம். சிங்கள சமூகத்தவர் தமிழ்ச் சாகியத்தாரை

(தமிழ் பேசுவோரை) பல வழிகளில் நெருக்க முற்பட்டிருக்கின்றனர். அதற்கு முதலாவது கல்லோயாவில் ஆரம்பமாகிறது என்பது அவர்கள் எச்சரிக்கை.

**ஆனால்..**

ஐக்கிய தேசியக் கட்சியாரின் பிற்போக்கான கொள்கைகளையும், அநியாயமான இந்தியப் பிரஜா உரிமையையும், நாணயப் பரிவர்த்தனைச் சட்டங்களையுங் கண்டு மனம் துடிக்கிறோம். தேசீயம் என்ற அவர்களின் கண்ணாடிப் போர்வையுள் வகுப்புவாதம் நடைபெறுவதையும், ஓர நீதி நர்த்தனம் புரிவதையும் கண்டுகொள்ளாதுவிட்ட நாம் காமாலைக் கண்ணர் அல்லர். ஆனால் இப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க இந்த சமஷ்டித் திட்டத்தைவிட வேறு வழியில்லையா என்பதுதான் பொது சனங்களின் அவாவாகத் தோன்றுகின்றது. மற்றது ''சமஷ்டி ஏற்பாடானதும் எத்தகைய அரசியல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்'' என்று ஐயமுறுகின்றார்கள் செஞ்சட்டைத் தோழர்கள். முடிவு பொது மக்கள் கையில்.

**உண்ணாவிரதம்**

மதுக் கடையை மூடுங்கள், இன்றேல் சாகும்வரை உண்ணாவிரதம் இருப் போம் என்று சங்கல்ப்பம் செய்கின்றனர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிராம முன்னேற்றச் சங்க வாலிபர்கள். அவர்கள் விரதம் கட்டாயம் வெற்றியடையும். வெற்றியடையச் செய்ய வேண்டியது அந்த நாட்டு மக்கள் கடமை. வாழ்க அந்த வாலிபர்கள்!

**கல்முனைக்குத் தலைவாசல் கள்ளுக்கடையே**

கல்முனைப் பட்டணத்தில் தலைவாசல், கள்ளுக்கடை ஒன்றுதான் என்பதை மிக விசனத்துடன் அழாக்குறையாகத் தெரிவிக்கிறோம்.

மனிதன் பிறந்த அன்றே சாத்தானும் கூடப் பிறந்துவிட்டதாகக் கூறுவார்களே அதைவிடக் கேலியான விஷயம் என்னவென்றால் கூடப் பிறந்த சாத்தான் நல்ல நல்ல கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்வதுதான். கள்ளுக் கடைக்குத் தலை வணங்காது கல்முனைப் பட்டணத்துள் நுழையவே கூடாது. இது என்ன? அவலட்சணம். சமயம் சமயம் என்று கட்டிக்கொண்டு அழுகிறோமே. அந்தச் சமயங்களால் வெறுக்கப்பட்ட மதுக் கடைகளை மடிமேல் வைத்துக்கொண்டு அழகு

பார்ப்பது என்ன விந்தை. அறிவைப் பறித்து அவமானத்தை விலைக்கு வாங்கித் தரும் அந்தக் கள்ளுக் கடையைப் பிரதட்சணம் பண்ணிக் கொண்டிருக்கும் மக்களே! உங்கள் ஞானம், தீரம் எல்லாம் எங்கே பறிபோய்விட்டது.

மக்களை அடகுவைக்கும் அரசியல் வாதிகளின் விலைமாதாகி அந்தக் கள்ளுக் கடையின் இலட்சணத்தின் சுவை தட்டுகிறீர்களோ?

பட்டின சங்கத் தேர்தலில் பாட்டாளியின் உரிமையைப் பறிக்கும் மயக்க மருந்து அது என்பதை உணரவில்லையா? ஒரு போத்தல் கள்ளினால் உரிமையைப் பறித்து 'மன்னராகிவிட நினைக்கும் மன்னர் களுக்கும், எக்கேடு கெட்டாலும் எனக்கென்ன என்று எண்ணும் சுயநலவாதி கட்கும் தமது எழுத்துக்கள் கண்ணை உறுத்தத்தான் செய்யும். ஆனால் உண்மையை உணரும் சுபாவமுள்ள- ஏழைகளின் அரிய வாழ்வைக் கண்டு, இரங்கும் சுபாவமுள்ள எவருக்கும் நமது எழுத்து உவகையையே ஊட்டும் என்பதில் ஆட்சேபம் எதுவும் இல்லை.வீழ்க மடமை - வாழ்க கல்முனை.

**வாலிபர் சங்கம்**

மறந்துவிட்டோம். கள்ளுக்கடை ஒழிப்புக்காக முதலாளி வர்க்கத்துடனும், அகங்காரம் பிடித்த மடையர்களுடனும் போராடிப் போராடி நொந்து கொண்டிருக்கும் கல்முனைத் தீவு வாலிபர்களை மறந்து விட்டோம். அவர்களின் உண்மையான தேசீயத் தொண்டுக்கு ஏற்படும் முட்டுக் கட்டைகளையும் அப்புறப்படுத்துவதில் ஏற்படும் சிரமங்களையும் கேட்டு மனம் கொதிக்கிறோம்.

தனிப்பட்ட மனக் கசப்புகட்காக அவர்கள் பொதுத் தொண்டுகளில் ''துரட்டி'' மாட்டிக் கொண்டிருக்கும் வீணர்களது வீரங்களை கேட்டு வியக்கிறோம்.

சமயங் கிடைப்பின் இந்தத் தேசீயவாதிகளின் மானத்தைப் பறிக்கும் கட்டுக் கதைகளைக் கட்டியாவது ஏளனம் செய்வோம் என்று அங்கலாய்க்கும் அறிவீனர்களது பொட்டு வித்தைகளையும் அறிவோம்.

தோழர்களே! அஞ்சாதீர்கள். உங்கள் தொண்டுகள் ஊதாரிகள் வசைவு மொழிகளால் பாழ்போகவே மாட்டாது. மதுக்கடையை மூடியே தீருவோம் என்று உறுதி கூறுங்கள். உயிரைத் திரணமாக மதியாது போராடுங்கள். வீழ்க மதுக் கடை- வாழ்க வாலிபர் சங்கம்.

**சைவ பரிபாலன சீர்திருத்தச் சட்டம்**

கடவுள் பெயரால் சைவக் கோயில்களில் உயிர்களைச் சித்திரவதை செய்வதும், சாதி வேறுபாடுகளைச் சிருட்டித்து மக்களை ஒதுக்கி வாழ்வதும், கோயில்கட்கென்றுள்ள பொதுச் சொத்தை ஒரு சில நிர்வாகஸ்தர் தங்களின் ஏகபோக உரிமையாகக் கொண்டாடுவதும் ஒழியவேண்டும் என்றும் அதற்கான சட்டங்களை அரசாங்கம் ஆக்கியாக வேண்டும் என்றும் சில பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதற் கிணங்க அரசாங்கம் ஒரு விசாரணைச் சபையை அமைத்துள்ளது.

முன்னேற்றப் பாதையை நோக்கிக் கொண்டிருக்கும் இந்த 20ஆம் நூற்றாண்டில் சட்டங்களை ஆட்சேபித்துக் கொண்டிருக்கும் அறிஞர்களும் உண்டென்றால், நாமதிகமாக என்ன கூறவேண்டி இருக்கிறது, கோயில்கள் அவசியந்தானா என்று சிந்திக்கத்தான் தூண்டுகிறது.

## இதழ் ൯

**தமிழ்த் தொண்டு**

தமிழ், தமிழ் என்று வெட்டி வீழ்த்துகிறீர்களே! தமிழிலே "வொட்னிக்" இருக்கிறதா? "சிவிக்ஸ்" இருக்கிறதா?... சொல்லுங்கள் பார்ப்போம் என்று கேலிக்கு வந்தார் ஒரு அத்தியந்த நண்பர். சந்தேகமென்ன? அவையொன்றும் நல்ல நிலையில் தமிழில் இதுவரை இல்லைதான். 400, 500 வருட காலம் அடிமை மொழியாகத் தத்தளித்துக்கொண்டிருந்த தமிழில் இவைகள் இருக்கக் காரணமேது? நாலு பணம் சம்பாதித்துச் சுகமாக வாழ்வதற்கு விழுந்தடித்து ஆங்கிலத்தைப் படிப்பதெங்கே? தாய் மொழியைக் கவனிப்பதெங்கே? ஆங்கிலத்தில் தமிழைப் படித்துப் பட்டம் பெற்ற காலமல்லவா? அது.

இந்த நிலையில் தமிழில், "வொட்னிக்கும்" "சிவிக்சும்" இருக்கிறதா என்று கேட்டு விடுவது ஒரு விவேகமான கேள்வியல்ல.

**அப்போ நாம் செய்வதென்ன?**

1. பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.

2. இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்ற வேண்டும்.

என்று எக்காளமிட்டார் அமரகவி. அவரின் மணிமொழிகள்தான் நமக்கு இன்று ஈடு செய்யத்தக்கதாகும். தமிழிலே சாஸ்திரங்களும், கலைகளும் எண்ணிறந்தவை இருந்ததாக அறிஞர்கள் கூறுகிறார்கள்தான். அவை களைத் தேடிப் புதைபொருள் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதிலேயே நமது காலம் முழுவதையும் போக்கிக் கொண்டிருப்பதற்கு இது சமயம் அல்ல. ஆங்கிலம், பிரஞ்சு போன்ற மொழிகளிலுள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். அவற்றை ஆதாரமாகக் கொண்டு புதுப்புது நூல்களைத் தமிழில் இயற்ற வேண்டும்.

## செய்வது யார்?

எப்படி, எப்படியெல்லாம் சொல்லிவிடலாம், எழுதிவிடலாம், ஆனால் செய்வது....? பிற பாஷைகளில் உள்ளவற்றைத் தமிழில் கொண்டுவரத் தமிழ் மட்டும் கற்றவரால் எப்படி முடியும். பிற பாஷை மட்டும் கற்றவரால் தான் முடியுமா? முடியவே முடியாது. தமிழும், பிற பாஷைகளும் கற்ற அறிஞர்களால்தான் முடியக்கூடிய காரியம் அது.

ஆம், இன்றைக்குத் தமிழுக்குச் செய்யவேண்டிய, அவசியமான தொண்டு தமிழும், ஆங்கிலமும் கற்ற அறிஞர்களுடைய கையிலேதான் தங்கியிருக்கிறது. அவர்கள் தொண்டைத்தான் தமிழன்னையும் ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றாள். அவர்களைத் தூண்டிச் சன்மானிக்க வேண்டியது தமிழ் மக்களுடையதும், அரசாங்கத்தினதும் கடமையாகும். அரசாங்க ஒவ்வொரு இலாகாவிலும், மொழி பெயர்ப்புப் பகுதி ஒவ்வொன்றையமைத்துத் தீவிரமான வேலை செய்யவேண்டும். அந்த அந்த சாஸ்திரத்தில் வல்லுநரான அறிஞர்களை அமர்த்தி மொழிபெயர்ப்பு வேலையைத் திறம்பட நடத்தித் தாய்மொழியைச் சதுரப்பாடுடையதாக்க வேண்டும். சொல் இல்லை; எழுத்தில்லை என்று சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டிருந்தால் தமிழ் வாளாவெட்டியாக வேண்டியே ஏற்படும். சென்னை அரசாங்கம் அமைத்துக் கொண்டிருக்கும் கலைக் களஞ்சியம் இத்தொண்டுக்கு ஏற்ற துணை செய்யுமல்லவா? அறிஞர்களே முன் வாருங்கள்! தமிழன்னை பீடம் ஏறட்டும்.

**அரசாங்கத்தில்**

இப்படி நாம் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது அரசாங்கத்தில் நடக்கும் தகிடுதத்தங்களையும் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. கல்வி இலாகாவில் மொழிபெயர்ப்புப் பகுதியொன்றிருந்து ஏதோ நத்தை வேகத்தில் சில வேலைகளைச் செய்து கொண்டிருந்தது. அது யார் குறையோ.... நாமதை ஆராயப்புகவில்லை. ஆனால் சில காலத்தில் திடீர் என்று அந்த மொழிபெயர்ப்புப் பகுதி மாயமாய் மறைந்துவிட்டது. விசாரித்ததில் மொழிபெயர்ப்புப் பகுதி நல்ல வேலை செய்யவில்லை என்று அறியக்கிடந்தது. அடடா! நல்ல பரிகாரம் என்று மனம் நொந்து வாடியிருந்தோம்.

பின்னர் மீண்டும் அந்தப் பகுதி வேலையை ஆரம்பித்து நடத்தப் போவதென்ற சுபசெய்தி காதுக்கெட்டியது. மனம் குளிர்ந்தோம். வாழ்க! மொழி பெயர்ப்புப் பகுதி.

**சிறந்த அங்கத்தவர்**

மட்டக்களப்பு, சாதாரணமாக மற்றவர் கண்களுக்கு அவ்வளவு பிரதான மான ஒரு இடமாகத் தோற்றப்படுவதில்லை. அரசாங்கத்திற்குக்கூட அப்படித்தான். இலங்கை முழுவதற்கும் பொதுவான ஏதும் சொத்துக் களைப் பகிரும்போதுகூட மட்டக்களப்பு அதன் கண்களுக்குத் தென்படு வதில்லை. ஆஸ்திரிய வைத்திய நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுப் பல இடங்கட்கும் பகிர்ந்து கொடுத்தார்களே, கிழக்கிலங்கையை நினைத்துப் பார்த்தார்களா? ஆமாம், கல்லோயாகுளம் ஒன்று 5½ கோடி ரூபாயில் கட்டப்படுகிறதே அது போதாதோ? என்று கேட்பார்களாக்கும். ஏன் போதாது தாராளமாகப் போதும். வருத்தம் வந்தால்கூட ஒரு ''கப்'' கல்லோயாக் குளத்து நீரைக் குடித்துவிட்டால் அமர சொர்க்கம் கிட்டி விடுந்தானே? என்ன கேவலம்.

கேட்பதற்கு ஆளில்லை என்று எண்ணுவீர்கள் போலும். அபசாரம் மட்டக்களப்பு நகர சங்கத்தில் அங்கம் வகிக்கும் திரு எம்.சிவநேசா அவர்கள் ''வீயன்னா டாக்டர்களில் ஒருவரை மட்டக்களப்புக்குத் தருமாறு அரசாங்கத்திடம் கேட்க வேண்டும்'' என்று ஒரு தீவிரப் பிரேரணையை கொண்டுபோனார். பிரேரணையும் வெற்றிபெற்று அரசாங்கத்திற்கும் அனுப்பப்பட்டாயிற்று. முடிவைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. மட்டக் களப்பின் மகிமைக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் அந்த அங்கத்த

வரைச் ''சிறந்த அங்கத்தவர்'' என்று கூறிப் பெருமைப்படப் பின்வாங்க மாட்டோம்.

**தொழிலாளி கெதி என்ன?**

நூற்றுக்கணக்கான ஏழைத் தொழிலாளிகள் வேலை செய்து கொண்டிருந்த எத்தனையோ அரசாங்க வேலைத்தலங்களிலெல்லாம், மழை காரண மாகவோ என்னவோ தெரியாது, திடீர் என்று வேலைகளை நிறுத்தி விட்டார்கள். நிறுத்திவிட்டால் அந்தத் தொழிலையே சதமென்றெண்ணி வேலைக்குச் சென்றிருந்த தொழிலாளரின் கெதியென்ன? அரசாங்கமும் கண்ணை மூடிவிடவில்லை. உத்தியோகத் தொழிலாளரின் வேதனங்கள் அரையாகவோ, மொத்தமாகவோ கிடைக்கும் வண்ணம் ஒழுங்குகள் செய்து அவர்கள் வாயையும் கட்டி விட்டது. ஆனால் கூலித் தொழிலாளி களின் பாட்டையிட்டுக் கவனிக்க அல்லது அவர்களையும் இலங்கை மக்கள் என்று நினைக்கத்தான் அறிவில்லாது போய்விட்டது. அவர்கள் பாடு இரண்டுங்கெட்டான் நிலையில் கிடந்து அலை மோதுவதை அய்யாமார் அறிவார்களா? தொழிலாளி உண்டு, பருத்து, உறுதியுடன் இருந்தால்தானே நாளைக்கு நாட்டுக்காக நெற்றி வெயர்வை சிந்த முடியும் என்று எண்ணுவார்களா? வெருட்டப்படுகின்றான் தொழிலாளி செக்கு மாடுகளைப்போல்; இவற்றையிட்டுச் சொல்லப்போனால் அரசாங்கம் சுத்தியலையும், தாட்கத்தியையும் நினைத்துப் பெருமூச்சுவிடப் பார்க்கிறது.

**எழுத்தாளர் தோஷம்**

எழுத்தாளன் உலகுக்குச் செய்யும் தொண்டு அளவிடற்கரியது. அதே நேரத்தில் சில ஊதாரி எழுத்தாளர்கள் நாட்டுக்குச் செய்யும் தீமைகளையும் எண்ணிப் பார்க்காதிருக்க முடியாது. அவர்களை எழுத்தாளன் என்று குறிப்பிடுவதைவிட வேஷதாரி எழுத்தாளன் என்று குறிப்பிடுவது மேலாகும். பக்கத்து வீட்டாருக்கும், தன் வீட்டு அம்மாவுக்கும் இடையில் ஏதும் மனத்தாபம் ஏற்பட்டுவிட்டதென்றால் நாளைக்குப் பொய்யும், புகழும் சேர்த்துத் தட்டுத்தடுமாறி, ஏதோ சொல்லுருவங்கட்கு மத்தியில் அடுத்த வீட்டார் பெயர்களையும் புதைத்து ஒரு கதையைச் சிருட்டித்து விடுகிறார் அந்த வேஷதாரி எழுத்தாளன். கபடமறியாத பத்திராசிரியரும் பிரசுரித்துவிடுகிறார் அந்தக் கதையை. வீணான புரளி ஒன்று உருவாகிறது. வஞ்சத்தைத் தீர்க்க வழியறியாத சில பேடிகள் எழுத்தாளர் உருவம் பூண்டு

உண்மையான எழுத்தாளர்கட்குத் தோஷத்தை உண்டுபண்ணுகின்றனர். இப்படிப்பட்ட நபர்கள் உயரப்பறந்து தங்கள் மானத்தைக் காற்றில் தூற்றி விடுவதைப் பார்க்கிலும் ஏதும் அரபிக் கதைகளை வாசித்துக் கொண்டிருத்தல் நல்லதென நினைக்கின்றோம்.

## இதழ் 10

**கட்சி அபாயம்**

பெரும்பான்மை மக்களின் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் அரசாங்கமே சனநாயக அரசாங்கம். அதாவது பாராளுமன்றத்தில் எந்தக் கட்சி கூடுதலாக இருக்கிறதோ அந்தக் கட்சியின் கொள்கைப்படிதான் அரசாங்கம் நடைபெறும். அப்படியேதான் யாருக்கு ''வாக்குகள்'' கூடுதலாக இருக் கிறதோ அவரிடம்தான் பிரிதிநிதித்துவம் ஒப்படைக்கப்படும்.

அப்போது மக்களிற் பெரும்பான்மையோர் அரசாங்கத்தை நிர்வகிக்கச் சிறுபான்மையோர் (இதர கட்சிக்காரர்) அதற்குள் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருக்கிறது. பெரும்பான்மைக் கட்சித் தலைவர் தமக்கேற்ப ஒரு மந்திரி சபையை அமைத்து அரசாங்கத்தை நடத்துவார். தெரிந்து எடுக்கும் மந்திரிமார் திறமையற்றவர்களாகவோ, நேர்மையற்றவர்களாகவோ இருந்துவிட்டால் அந்த மந்திரி சபைக்கு மட்டுமல்ல, அந்தக் கட்சிக்கும் கூட அவமானமேதான். ஏனெனில் அந்த மந்திரியைத் தெரிந்த பொறுப்பு கட்சியைச் சார்ந்ததாகும். மக்களைச் சார்ந்ததல்ல. சிலவேளை அந்த மந்திரி தனது பிரிவை விட்டு வேறொரு பிரிவில் போட்டியிட்டு மண் கவ்வ வேண்டியும் ஏற்படலாம். காலிப் பிரிவில் திரு. திசாநாயகாவுடன் போட்டியிட்டு மண் கவ்விய அமரசூரியா பின் மற்றுமோர் பிரிவினால் தெரியப்பட்டு மந்திரியாக வந்து விட்டதும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. காலிப் பிரிவு பிரதிநிதியாவதற்கும் தகுதியில்லை என்றவரை UNP கட்சி மந்திரியாக்கி வைத்தது. எனவே மந்திரிமார்கள் விடும் பிழைகட்கு அரசாங்கக் கட்சிதான் காரணமாகும். ஒரு மந்திரியார் விடும் பிழைகட்கு மற்ற மந்திரிமார்கள் அனைவரும் ஜவாப்தாரியாவார்கள்; அரசாங்கத்தை நடத்தும் கட்சிகள் அத்தனையும் பொறுப்புடையவையாகும்.

எனவே, இதை மறந்து ஒவ்வொரு மந்திரிமாரும் தாம் தாம் விரும்பியபடி நடந்து கொண்டிருந்தால் கட்சி பெரிய அபாயத்திற்குள் சிக்கிவிடும் என்பதில் ஆட்சேபனை ஏதும் கிடையாது.

### மந்திரிமார் அபாயம்

மந்திரிமார்கட்கு அப்பதவி கிடைத்த பின்பும் அவர்கள் குறிப்பிட்ட பகுதி ஒன்றின் பிரதிநிதிதானே நாம், என்று நினைத்து விடுவதனால் பெரிய அபாயம் ஏற்பட்டு விடுகில் [illegible]ில மந்திரிமார்கள், தம்மைப் பிரநிதி யாக்குவதற்கு உதவி செய்த [illegible] வின் கோரிக்கைகளை நிறைவேற்று வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கப் பார்க்கின்றனர். அதனால் அக்குழுவின் கொள்கைதான் இலங்கை முழுவதானதும் கொள்கையாக வேண்டியேற்பட்டு விடுகின்றது. ஏன்? மந்திரியாவதற்கு இலங்கை முழுவதும் வாக்குப்பண்ண வேண்டிய அவசியம் இல்லையே. பிரதி நிதியாவதற்கு மாத்திரம் ஒரு சிறிய குழுவின் ஒத்தாசை வேண்டும். பின்னர் மந்திரிதான். பிரதிநிதியில்லாவிட்டால் மந்திரியாகவும் முடியாது. ஆகையால் மந்திரிமார்கள் தம்மைப் பிரதிநிதியாக்கியவர்களையே மந்திரி யாக்கியவர்களாக மதிக்கப் பார்க்கின்றனர். இதனால் நாடு முழுவதும் குறுகிய கொள்கைகளுக்குள் கிடந்து இடர்ப்படவேண்டி ஏற்படுகிறது. இந்த நிலை நமது கல்வி மந்திரியார் அவர்களில் ஏற்பட்டுக்கொண்டிருப் பதாகப் பலர் கூறிக் கொள்கின்றனர்.

அரிய போராட்டத்தின் பின்னர் மலையேற்றத்தின் மொத்த மான்ய முறையை மந்திரியார் மீட்க விரும்பியதற்குக் காரணம் என்ன? ஒரு சில மிஷனரிப் பூதங்கள் மாத்திரம் எதிர்த்த இலவசக் கல்வித் திட்டத்தின் உருவை ஏன் நிலைகுலைக்க வேண்டும்? மதம்பிடிக்கும் பாடசாலைகள் தொடங்கியது போதும், இனித் தொடங்கவேண்டாம் என்ற சட்டத்தை நிர்மூலம் செய்ததேன்? மாஜிக்கல்வி மந்திரியவர்களை மண் கவ்வ வைத்த குழுவின் எண்ணங்கள் அத்தனையும் ஈடேறுகின்றன போலும். அடுத்த பாராளுமன்றத்தில் வேறொரு கல்வி மந்திரியார் வந்தால் இவைகளின் கெதி என்ன ஆகிறதோ?

### பிரதிநிதிகள் அபாயம்

ஒரு பாராளுமன்றப் பிரிவிலே பிரதிநிதிகள் போட்டியிடும்போது சனங் கள் விரும்பிய ஒருவருக்கு வாக்குப்பண்ணுவதும், ஈற்றில் ஒருவர் ஜெயிப்பதும் இயற்கையாகும். ஜெயித்தவர் அன்றுதொட்டே அந்தப் பிரிவின் பிரதிநிதியாகி விடுகிறார். தனக்கு வாக்குப் பண்ணிய ஊர்கட்கு மாத்திரமல்ல அப்பகுதியின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவரே காரணராவர். இதையறியாத பிரதிநிதிகள் தமக்கு மாத்திரமல்ல தமது கட்சிக்கும்

அபாயம் விளைவிப்பதுடன் பொதுமக்களின் ஆத்திரத்திற்கும் காரணமாகி விடுகிறார்கள்.

தம்மையாதரித்த சில மண்டுகங்களின் பின்னால் நின்றுகொண்டு, தம்மையாதரியாத கிராமங்கட்குத் தீங்கு செய்வதும், அழைப்புகட்குச் சமுகம் கொடாது கம்பி நீட்டி விடுவதும் சர்வசகஜமாக இருந்து வருகிறது. மந்திரிமார்கள் விஜயம் செய்யும் பொழுதுகூடத் தம்மை யாதரியாத கிராமங்கட்கு அவர்களை அழைத்துச் செல்லாமல் விடுவதும் அக்கிராமத் தவர்களின் வேண்டுகோட்களை ரத்துச் செய்து விடுதலும் அந்தப் பிரதி நிதிகளின் பேடித்தனத்திற்கு அறிகுறியாகின்றது.

இப்படிப்பட்ட குறுகிய மனப்பான்மையுள்ள பிரதிநிதிகளின் தாளத் திற் கேற்ப நடனம் செய்கின்ற மந்திரிமார்களைப்பற்றி என்ன சொல்ல, அவர்கள் இருந்து அரசாங்கம் செய்யும் UNP கட்சியைப் பற்றித்தான் என்ன கூற, வஞ்சகந் தீர்க்க வகையறியாது தத்தளிக்கிறார்கள். இப்படியான செய்கைகளினால்தான் கட்சியைப் பெருக்க முடியுமோ? அல்லது இந்தப் பிரதிநிதிகள் போட்டியிடும் பொழுது UNP அபேட்சகராக நின்றுதான் போட்டியிட்டு வெற்றி பெற்றாரோ என்பதை இந்த வகுப்பு வாத UNP மந்திரிமார்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லைபோலும். UNP என்றால் என்ன என்று தெரியாத ஏழை மக்களின் மேல் வன்மம் சாதிக்கும் வீரமா இது?

**தீரமா நகர்**

தவறணை ஒழிப்பு வாக்கெடுப்பை மற்று இடங்கட்கும் முன்மாதிரியாக அமுல்நடத்தி வெற்றியீட்டக்கூடிய இடங்களாக மட்டுநகரையும், கல்லாற் றையும், கல்முனையையும் சுட்டிக்காட்டி அறைகூவியிருந்தோம். அதற்கு ஏதோ புறுபுறுப்பும் கறகறப்புந்தான் பிரதி உபகாரமாகக் கிடைத்ததாக வதந்தி. உண்மையுந்தான். கிழக்கு மாகாணத்திலே மதுவிலக்கு வேலையில் ஈடுபட்டு வெற்றியீட்டக்கூடிய இடம் அக்கரைப்பற்று என்பதனை உணர நாம் அறிவற்றவர்களாகிவிட்டோம். வெளி வேஷத்தில் மயங்கியதால் இந்த இமாலயத் தவறு ஏற்பட்டு விட்டது. சரி போகட்டும். மக்களை மாக்களாக்கும் அந்த மயக்க மருந்தை ஒழிப்பதற்குக் கங்கணம் பூண்டு வெற்றி கொண்ட அக்கரைப்பற்று மக்களை வாயார வாழ்த்துகின்றோம். மட்டக்களப்புப் பகுதியிலே முதன் முதலில் இப்புனித கைங்கரியத்தைச் செய்த அக்கரைப்பற்று நகரைத் ''தீர மா நகர்'' என்று போற்றிப் புகழ் கின்றோம். அக்கரைப்பற்றுக்கு ஜே!

**மகா சபைகள்**

போட்டித் திருவிழாக்கள் நடத்தவும், மதப்போர் செய்யவும், மேளச்சமர் நடத்தவும், மதமாற்றம் செய்யவும் எங்கட்கு மகா சபைகள் வேண்டாம். உண்மையான மதத்திற்குரிய மகா சபைகள் சமயக் கொள்கைளை நிறை வேற்றுவதில் போராட வேண்டும். இன்றைய நிலையில் மதுவிலக்குக் காகப் போராடாத மகா சபைகள் எல்லாம் வெறும் மண் விக்கிரகங்களின் கூட்டமேதான். மூலைக்கு மூலை, தெருவுக்குத் தெரு மதப்பரீட்சை நடத்திக் கொண்டு திரியும் சிஷ்யன், சிஷ்யைகளையும் மதுவிலக்குப் பிரசாரத்தில் ஈடுபடுமாறு வேண்டுகின்றோம். அது முடியாதாகில் பொருளாதார மந்தத்தில் கிடந்து திண்டாடும் இந்தக் காலத்தில் ஏதும் கிருஷிகப் பிரசாரமாவது செய்தால் உபயோகமாக இருக்கலாம். போட்டி மதம் வளர்த்த காலங்களை மறந்து விடுங்கள். மதக் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவரத் தெண்டியுங்கள்.

**மகா நாடுகள்**

இந்தக் காலத்தில் நடக்கும் கூட்டங்களெல்லாம் ஒரு தினிசானவை. ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் சலுகை வேண்டுமானால் ஒரு கூட்டம். அதிலே அவர் ஒரு பேச்சு. உத்தியோகமொன்றில் உயர்வு பெற வேண்டுமானால் அல்லது வேறேதும் சலுகைகள் பெற வேண்டுமானால் ஒரு மகாநாடு. நாட்டுக்கு ஏதும் செய்ய வேண்டுமென்று கருதினால் பிரதிநிதியாருக்கோ அல்லது மந்திரியாருக்கோ ஒரு வரவேற்புக் கூட்டம். இப்படி பலமுறை யான கூட்டங்கள், மகாநாடுகளை நாம் காணலாம். இவைகளுக்குள் பல இந்திர ஜாலங்கள் பொதிந்திருக்கும்.

கட்டுகஸ்தோட்டையில் நடந்த விவசாயப் பொருட்காட்சியில் நோயால் பீடிக்கப்பட்டிருந்த தோடைச் செடிகளும், காட்சிக்கு வைக்கப்பட்டிருந் ததைப் பிரதமர் கண்டுவிட்டார். பாவம் இவ்வளவு கூர் குறிப்பாக நோக்குவார் பிரதமரென்று அதிகாரிகள் நினைக்கவில்லை. அவர்கள் நோக்கம் ஏதோ ஒன்று அது ஈடேறத்தான் இந்தக்காட்சி, அது வினையாய் முடிந்து விட்டது. இல்லையேல் நோயுள்ள தோடைச்செடிகளைக் காட்சிக்கு வைக்கக் காரணம் என்ன? ஒருவேளை மேலதிகாரிகளுக்கு தோடைச்செடிநோய் கொண்டிருக்கிறது என்பதுதான் தெரியுமோ? யார் கண்டார்.

இப்படியே காலாகாலங்களில் கூட்டுறவு மகாநாடுகளும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மகாநாடுகளைச் சேர்ந்த எத்தனையோ கிளைச் சங்கங்கள் பெரும்பாலும் கிராமப் புறங்களில் நோய்வாய்ப் பட்டிருப்பதாக வதந்தி. எந்தவிதமான கூட்டங்களுமின்றி ஒரு சிலரின் ஏகபோக உரிமையாகத் திரை மறைவில் சங்கங்கள் இயங்குவதாகவும் மேலுத்தியோகத்தரின் மேற்பார்வையின்றியிருப்பதாகவும் பல புகார்கள் கூறப்படுகின்றன. இதற்கேற்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமென்று எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரிய சங்கம்**

மட்டக்களப்பில் நிலையான வைரித்த ஆசிரிய சங்கங்கள் இல்லாத காரணத்தினால் பல இடுக்கண்கள் ஏற்படுகின்றன. நாடு சுதந்திரமடைந்து புதிய வாழ்வுள் பிரவேசித்துக் கொண்டிருக்கும் தறுவாயில் ஆசிரியர்கள் தங்கள் குறைகளை எடுத்துக் கூறாமலும் உரிமைகளை கேட்டு வாதாடா மலும் விட்டிருந்தால் பெரிய கஷ்டத்திற்குள்ளாக வேண்டியே வரும். இந்தநேரத்தில் வட இலங்கை ஆசிரிய சங்கத்தின் திறமையையிட்டு நாம் போற்றாமலிருக்க முடியாது. அந்தச் சங்கத்தின் நீண்ட உழைப்பினால் அதிக பலன்கள் ஏற்பட்டுள்ளன என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் மட்டக்களப்பில் கூடும் சங்கங்கள் நிலையாக நின்று செயல் புரியும் சக்தியற்றவையாய் பின்வாங்கி விடுகின்றன. இது மட்டக்களப்பின் தோஷமோ, அன்று யார் மேலும் உள்ள ''கிலி'' யோ நாமறியோம். பெரும்பாலும் அண்ணன்-தம்பி சங்கங்களாகவே நடந்து முடிந்து போய் விடுகின்றன.

**நல்ல கேலி**

இலங்காதேவியின் தேசியக் கொடிக்காக அமர்க்களத்தே உயிரைப் பலிகொடுத்த தேசபக்தனை ஈன்றது கிழக்கு மாகாணம். அன்றுதொட்டோ யாவரும் வணங்கும் ஒரு தேசியக்கொடி வேண்டும் என்று கூச்சலிட்டுக் கொண்டிருப்பது கிழக்கு மாகாணம். பொதுவான ஒரு கொடி வருமளவும் சுதந்திரக் கொண்டாட்டத்தைச் சிறப்பாகக் கொண்டாட முடியாது என்று எக்காளமிட்டுக் கொண்டிருப்பது கிழக்கு மாகாணம். அப்படியெல்லா மிருக்க அந்த மாகாணத்து மக்களால் தெரிந்தனுப்பப்பட்ட பிரதிநிதிகள் கொடி சம்பந்தமாக ஏதும் ஆறுதல் கூறினார்களா? அல்லது சிங்கக்

கொடிதான் நமது கொடி என்றாவது ஏதும் பொய் - புழுகாவது கூறினார்களா? அதுவும் கிடையாது. ஆனால் மந்திரி ஜீ.ஜீ. அவர்களோடு வடமாகாண மக்களுக்குக் கொடி உபதேசம் செய்யப் படையெடுத்துப் போயிருக்கிறார்கள். அங்கே தமிழ்க் காங்கிரஸ் கோட்டையுள் நின்று சாட்சி கூறிப் பெருமையடித்துக் கொண்டார்கள். எப்படியிருக்கிறது. கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளின் கேலி, கொடி விஷயம் மட்டக்களப்பு மக்களுக்குத் தெரியாதென்று எண்ணினார்களோ? அல்லது மட்டக்களப்பில் அவர்கள் 'பொடிகள்' பத்தாது என்று எண்ணினார்களோ தெரியாது.

**பாஷா வாரி**

செல்வநாயகம் பாஷாவாரியைக் குறிப்பிடவில்லை. ஜெயவர்த்தனா பாஷாவாரியைக் குறிப்பிடுகின்றோம். கொடிக்குக் கோடு போடும்போது 10 க்கு 1ஆக இருந்து, 7க்கு 1ஆக மாறி 5க்கு 1ஆக தீர்மானம் கட்டுவதற்கு விகிதப் பொருத்தம் பார்த்த அரசாங்கம் பாஷையில்தான் விட்டுவிடுமா? 7 பங்கு எனக்கு, 2 பங்கு உனக்கு என்கிறார் ஜெயவர்த்தனா. இவர் பிரிவின்படி பல இடைஞ்சல்கள் தமிழருக்கு ஏற்படும் என்பது வெள்ளிடைமலை. மத்திய மாகாணத்தில் 6,05944 சிங்களவர் போக மிகுதியாக 5,02225 பேர் இருக்கின்றனர். இவர்களுடைய கெதி என்ன? ஊவா மாகாணத்தில் 1,60,226 தமிழர் சிங்கள மொழியைக் கட்டி அழவேண்டிய நிலைமை உண்டாகிறது. ஆகையினால் நிதிமந்திரியார் மதியை ஒப்புக்கொள்ள முடியாதிருக்கிறது. எனவே,

1. எல்லா மாகாணங்களிலும் இரு பாஷைகள் மூலம் அலுவல் நடைபெற வேண்டும்.
2. இல்லையேல் 2/3 பங்கு ஒரு சாகியத்தார் உள்ள மாகாணங்கள் தவிர்ந்த மற்ற மாகாணங்களில் இருபாஷா அரசாங்கம் நடைபெற வேண்டும்.

இல்லாமல் 7:2 என்ற பிரிவில் நின்று UNP போர் பிடித்தால் சிறுபான்மையோர் நசுக்கப்பட வேண்டியே ஏற்படும்.

**தபால் தந்தி இலாகாவின் தீவிரம்**

சுயபாஷைகள் மூலம் நடவடிக்கை நடத்துவதில் தபால் தந்தி இலாகா மற்ற இலாகாக்களைவிட முந்திக்கொண்டிருப்பது வெகுவாகப் பாராட்டத்தக்கதாகும்.

**சந்தாதாரர்கட்கோர் நல்வார்த்தை**

பெருங்காயத்தை எடுத்த பின்பும் சாடியுள் அதன் மணம் வீசுவதுபோல, அடிமையாட்சியிலிருந்து விடுதலையடைந்து விட்ட பின்பு, நம்மை அடிமைப் (எளிமை) புத்திகள் விட்டகலாமல் இருப்பது வெட்கத்திற்குரிய விஷயமாகும்.

கிழக்கிலங்கைக்காகப் பத்திரிகையில்லையே என்ற துயரைத் துடைத்து தோன்றித் தோன்றி மறைந்துவிட்ட பத்திரிகைகளின் இலட்சியங் களைப் பூர்த்தி செய்து, சந்தாதாரர்களின் பல பரீட்சைகளையெல்லாம் கண்சாடையாக விட்டு, மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் சரமாரியான கேள்விகட்கெல்லாம் பதிலளித்து ''பாரதி'' ஆண்டு ஒன்றையும் கடந்து விட்டதென்றால் உங்கட்கு வினோதமாகத்தான் இருக்கும். காரணத்தை, உங்கள் மனமே உங்கட்குச் சொல்லும்.

சந்தாதாரர்களே! நமது பொறுமையைச் சோதித்தது போதும். ''பாரதி'' சிறப்பாகத் தொடர்ந்து வருவதற்கு நாங்கள் பொறுப்புதாரர் அல்லர். நீங்கள்தான் பொறுப்புதாரர். நாங்கள் பணமூட்டை கட்டிப் பட்டம் பெறுவதற்காகப் ''பாரதி''யைத் தொடங்கவில்லை. நம் அனைவரதும் உயர்வுக்காகத் தொடங்கினோம். நிலையை உணர்ந்து கடமையைச் செய்து எங்களை ஆதரிப்பது உங்கள் பெருந் தொண்டாகும்.

## பின்னிணைப்பு

பாரதி சஞ்சிகையின் அட்டைப்பக்கங்கள்



# பாரதி



## மகாத்மா காந்திக்கு அஞ்சலி

சாந்தியென்றும் பேரொளியே! கருணைபொழி வான்முகிலே!
சரித்திரத்தின் பாத்திரமே! சன்மார்க்க சாத்திரமே!
மார்க்கருக்குள் மாமணியே! மாதவத்தின் அற்புதமே!
எக்குலமும் போதனையே! என்சொல்லி அஞ்சலிப்போம்.

திசைமுனைக்கும் வானொளியே! இருள்கிழிக்கும் மின்விளக்கே
பதம்சிந்த பேச்சாளா! பயன்சிந்த எழுத்தாளா!
மதவெறியின் பலியுகந்த மாயப் பெரும்புகழே
அறிஞர்கள் சொல்லறியோம் அணைபுரிவாய் அஞ்சலித்தோம்

அன்பெடுத்த திருவுருவே! அருள்தரும் ஆலயமே!
அன்புருகிற்ற அணைக்கரமே! அடர்க்கும் ஆதவனே!
இன்பமெல்லாம் பிறக்குதவி இன்னலெல்லாம் தாங்கிநிற்கும்
தெம்பிருக்கும் தேனகமே! திருவடிக்கே அஞ்சலித்தோம்.

சேமக்கல் கவிஞர்.

சதம் 30.

மலர் 1 1949 இதழ் 4

# பாரதி

## அட்டைப் படம்.

இந்தியாவின் ஒப்பற்ற தலைவரும் வீரசேநாபதியும், ஜே! ஹிந்த்! என்ற மந்திரத்தினால் பாரத நாட்டு மக்களின் நெஞ்சங்களுக்கு உரத்தைக் கொடுத்த [illegible] நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் [illegible] அட்டையில் [illegible] காட்சி தருகின்றார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் [illegible] பெரிய பட்டாளத்தை, மின் வெட்டு வேகத்துடன் [illegible] [illegible]

வாழ்க சுபாஸ் ஜே. ஹிந்த்.



## 'பாரதி'

இலவச சிறுகதைப் போட்டி முடிவு

"கடைப் பிணம்"
என்ற கதை பரிசுக்குரியதாகத் தெரியப்பட்டுள்ளது

கதை ஆசிரியர்:—
"[illegible]"

சதம் 30.

மலர் 1 1949 இதழ் 5

# பாரதி



நமது 'பாரதி' 3-ம் இதழின் அட்டையிலே; ஈழத்தின் தலைப் புதல்வரும், இலங்கைப் பல்கலைக் கழக முதற் தமிழ்ப் பேராசிரியருமான ஸ்ரீமத் சுவாமி விபுலானந்த அடிகளாருடைய உருவப் படத்தைப் பொறித்ததன்மூலம் பெருமை அடைந்தோம். இந்த இதழில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் இன்றைய தமிழ்ப் பேராசிரியரும், தமிழ் மொழிக்குப் பெருந் தொண்டாற்றுபவருமான கலாநிதி-கணபதிப்பிள்ளை அவர்களின் உருவப் படத்தைப் பொறிப்பதன்மூலம் பெருமை அடைகிறோம். ப—ர்.

சதம் 30.

மலர் 1. 1949 இதழ் 6.

# பாரதி



## சுதந்தரக் கப்பலின் 'மாலுமி'

அசையாத சத்தியத்தின் கம்பம் நாட்டி
அஹிம்சையெனும் அழகான பாய்கள் பூட்டி
திசைகாட்டும் அன்பான "கும்பாஸ்" மாட்டி
திடமெனும் சுக்கானை இடமாயேற்றி
இசைவாக ராஜாஜி இலக்குச் சொல்ல
எழிலான நேருஜி சுக்கான் கொள்ள
விசையாக சுதந்திரத்தின் வீரக்கப்பல்
விடுதலையாய்த் திரைகடலில் ஓடுதுவே.

விலை சதம் 30.

# பாரதி

தேசிய மாத வெளியீடு.

## பாரதி நினைவு மலர்

விலை சதம் 30.





### பாரதி உள்ளம்

சாதி ஒழித்திடல் ஒன்று-நல்ல
தமிழ் வளர்த்தல் மற் றொன்று
பாதியை நாடு மறந்தால்-மற்றப்
பாதி துலங்குவ தில்லை.
சாதி களைந்திட்ட ஏரி-நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்.
சாதிப் பிணிப்பற்ற தோளே-நல்ல
தண்டமிழ் வாளினைத் தாக்கும் !

புரட்சிக் கவிஞர்
"பாரதிதாசன்"

## மண்டூர் 'பாரதி' சஞ்சிகையின்
## ஆசிரியர் குழுவினர்



**திரு. ந. செபரெத்தினம்** *(11.10.1925.)*

நிர்வாக ஆசிரியர்

ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்றில் பயின்றார். பின்னர் பட்டிருப்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தனது கல்வியைத் தொடர்ந்தார். அட்டாளைச்சேனை மற்றும் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஆசிரிய பயிற்சியை முடித்த அவர், பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றினார். தம்பலவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 1 அதிபராகச் சேவையாற்றி ஓய்வு பெற்றார்.



**அமரர் கு. தட்சணாமூர்த்தி,** *(23.11.1925 –10.06.2006)*

பிரசுர கர்த்தா

ஆரம்பக் கல்வியை மண்டூரில் பெற்ற அவர் பின் சிவாநந்தா வித்தியாலயத்தில் பயின்றார். கொட்டகலை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியை முடித்த அவர், பயிற்றப்பட்ட ஆசிரியராக மண்டூர், வந்தாறுமூலை, ஏறாவூர் முதலிய இடங்களிலே கல்விப்பணி புரிந்தார். இறுதியில் மாவடிவேம்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.



**அமரர் பண்டிதர் ம.நாகலிங்கம்** *(06.01.1923–07.12.1995)*

பதிப்பாசிரியர்

ஆரம்பக் கல்வியை மண்டூர் இராமகிருஷ்ண பாடசாலையிலும் உயர் கல்வியை மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் பெற்றார். பாலபண்டிதம், பண்டிதம், கலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்ற அவர் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றினார். நிந்தவூர், அக்கரைப்பற்று, கல்முனை, பாண்டிருப்பு, பழுகாமம் முதலிய பல இடங்களிலே ஆசிரியப் பணியை ஆற்றினார்.

ISBN 978-955-7202-00-6

9 789557 202006

விலை ரூபா 800.00